பெரியார் பல்கலைக்கழகம்

NAAC 'A++' Grade with CGPA 3.61 (Cycle - 3)

State University - NIRF Rank 56 - State Public University Rank 25

Salem - 636011, Tamilnadu, India.

தொலைநிலை மற்றும் இணையவழிக் கல்வி மையம்

(CDOE)

முதுகலைத் தமிழ்

இரண்டாம் பருவம்

உரையாசிரியரும் உரைமரபும்

E04

2025-2026 ஆம் கல்வியாண்டு முதல் பயிலும் மாணவர்களுக்குரிய பாடநூல்

PERIYAR UNIVERSITY

CENTRE FOR DISTANCE AND ONLINE EDUCATION (CDOE)

M.A தமிழ் 2025 admission onwards

ELECTIVE - IV

உரை ஆசிரியரும் உரை மருபும்

Prepared by:

முனைவர்.இரா.தேவனன்
உதவி பேராசிரியர்
தமிழ்த் துறை
பெரியார் பல்கலைக்கழகம்
சேலம்-11

Scrutinized & Verified by:

BOS Members,
Centre for Distance and Online Education (CDOE)
Periyar University
Salem - 636011

பாடத்திட்டம்

உரையாசிரியரும் உரைமரபும்

E04

அலகு	பாடதிட்டம் விளக்கம்	பக்கம்
அலகு - 1	**உரை வரலாறும் உரை நெறிகளும்** உரை வரலாறு உரை வகைகள் தொல்காப்பியம் கண்டிகைஉரை, உரை (விருத்தி) -இறையனார் களவியலுரை கூறும் உரை வகைகள் நம்பியகப்பொருள் கூறும் உரை வகைகள் கருத்துரை, பதவுரை (கண்ணழித்துரைத்தல்). பொழிப்புரை அகலவுரை நாலடியார் கூறும் உரை வகைகள் பொழிப்பு, அகலம், எச்சம், நுட்பம் நன்னூல் கூறும் உரை வகைகள் (மயிலைநாதர் கூறும் 14 உரை வகை) காண்டிகை, விருத்தி, பிறவகை குறிப்புரை வீரசோழியம் உரை கூறும் வகைகள் அரும்பத உரை இறையனார் களவியல் உரைக்கு முந்திய காலம் அகநானூற்றுப் பழையவுரை யாப்பருங்கல விருத்திச்சான்று இளம்பூரணருக்கு முந்திய உரை தொல்காப்பிய உரைகள் தொல்காப்பியத்துக்கு முந்திய உரைமரபு உரைக்கு உரை செய்யுள் வடின உரை நூலாசிரியரே உரையாசிரியர் உரை செய்யும் உதவி.	06-58
அலகு - 2	**இலக்கண உரைகள் (சுருக்கமான அடிப்படை அறிமுகம்)** தொல்காப்பியம் இளம்பூரணர், சேனாவரையர், பேராசிரியர், தெய்வச்சிலையார், கல்லாடர், யாப்பருங்கல விருத்தி உரை,யாப்பருங்கலக்காரிகை உரை. வீரசோழியம் பெருந்தேவனார் உரை, தண்டியலங்காரஉரை, புறப்பொருள் வெண்பாமாலை சாமுண்டிதேவ நாயகர் உரை. நம்பியகப்பொருள் நாற்கவிராசநம்பிஉரை, இறையனார் களவியற்காரிகைஉரை, நேமிநாத உரை, பழைய உரை, பாட்டியல் உரைகள் வெண்பாப்பாட்டியல், நவநீதப்பாட்டியல். சிதம்பரப்பாட்டியல், இலக்கண விளக்கப் பாட்டியல் உரைகள், பிரயோக விவேகம் சுப்பிரமணியதீட்சிதர் உரை, உவமானசங்கிரக உரை, நன்னூல் சங்கரநமச்சிவாயர். ஆண்டிப் புலவர், கூழங்கைத் தம்பிரான், இராமாநுசக்கவிராயர், விசாகப்பெருமாள் ஐயர், ஆறுமுக நாவலர், சடகோப ராமாநுசாச்சாரியார்.	59-174

அலகு - 3	**இலக்கிய உரைகள் சுருக்கமான அடிப்படை அறிமுகம்** எட்டுத்தொகை உரைகள் பத்துப்பாட்டு உரைகள் பதினெண்கீழ்க்கணக்கு உரைகள் நாலடியார் உரைகள் பதுமனார், தருமா உரைகள், திருக்குறள் உரைகள் பரிதியார் காலிங்கர், மணக்குடவர், பரிப்பெருமாள், பரிமேலழகர் காப்பிய உரைகள் சிலப்பதிகாரம் அரும்பத உரை நீலகேசி சமய திவாகரவாமன முனிவர், கம்பராமாயண உரைகள் ஆழ்வார்க்குறிச்சி வெ.சுப்பிரமணிய முதலியார் இன்கவித்திரட்டு உரை, அண்ணாமலைப் பல்கலைக்கழக உரைப்பதிப்பு, வை.மு.கோபாலகிருட்டிணமாச்சாரியார் உரை. **சமயநூல் உரைகள்** நாலாயிர திவ்வியபிரபந்த வியாக்கியானம் நாதமுனிகள் வழித்தோன்றல் 6000,9000,12000,24000,36000 முதலான படிகள், ஈடு, மணவாளமாமுவி, திருமுறை உரைகள் திருவாசக வியாக்கியானம், திருக்கோவையார் பழைய உரை பேராசிரியா உரை. சிகாழித் தாண்டவராயர், பிறர் உரைகள், திருமந்திர உரைகள், பெரியபுராண உரைகள் சைவசித்தாந்த உரைமரபு சிவஞானபோதம், சிவஞான முனிவர் சிற்றுரை பேருரை (பாடியம்). பாண்டிப்பெருமாள் உரை, மெய்கண்டதேவர் (வார்த்திகப் பொழிப்பும்) சிவஞானசித்தியார் ஞானவாரணம் (செய்யுள் வடிவ உரை), பரபக்க சுபக்க உரைகள்	175-331
அலகு - 4	**உரை நெறிகளும் உரைத் திறன்களும்** இயல் முன்னுரை தருதல், அதிகாரம் இயல் நூற்பா வைப்புமுறை கூறும், அவற்றின் இமைபு கூறல், தமிழ்மரபு பேணல், வடமொழிப்புலமை, ஆசிரியா கருத்தைப் போற்றல். மேற்கோள் தருதல், விளாவிடை முறை, பிறர் கருத்தை மறுத்தல், பல்துறைப் புலமை. இலக்கிய வரலாற்றுச் செய்தி தரல் தருக்கமுறைப் போக்கு. பாடவேறுபாடு தருதல், நூற்பா இயல் மாற்றம் செய்தல், அவாய் நிலை, விதப்புக்கிளவி.	332-398
அலகு - 5	**உரையாசிரியர் - அடியார்க்கு நல்லார்** அடியார்க்கு நல்லார் - வரலாறு உரையின் இயல்பு மறைந்த பகுதி -காலம் கடந்த குரல் -திறனாய்வுக்கலைஞர் கதைநிகழ்ச்சியும் கட்டுக்கோப்பும் நிகழ்ச்சியை இணைத்தல் நிகழ்ச்சியும் காலமும் நிகழ்ச்சியும் இடமும் காப்பிய உறுப்பினர் பண்பு பிறர் உரைச்சுட்டல் உரைநடைச் சிறப்பு - பருந்தும் நிழலும் நயமும் விளக்கமும் பலபொருள் கூறுதல் சொல்லும்	399-424

	பொருளும் மாறுபட்டக் கருத்து - வெண்பாக்களும் உரையும் மேற்கோள் நூல்கள் பல்கலை புலமை	
	முடிவுரை	425
	பார்வை நூல்கள்	426 - 430

அலகு - I

உரைவரலாறும் உரைவகைளும்

பாட நோக்கம்

பண்டைய மரபிலக்கண இலக்கியங்களுக்கு உரைகள் தோன்றியதின் தேவைகளையும் வரலாற்றையும் உரை போக்குகளையும் மாணாக்கர்கள் அறியச் செய்தல்.

பாட அறிமுகம்

உரைகளின் தோற்றமும் வளர்ச்சியும் மரபு இலக்கண இலக்கியங்களுக்கு எழுதப்பட்டுள்ள உரைவகைகளும் இன்றியமையாமையும் உரைத்திறன்களும் எடுத்துரைக்கப்படுகின்றது.

உரை வரலாறும் உரை நெறிகளும்

உரை வரலாறு உரை வகைகள் தொல்காப்பியம் கண்டிகைஉரை, உரை (விருத்தி) -இறையனார் களவியலுரை கூறும் உரை வகைகள் நம்பியகப்பொருள் கூறும் உரை வகைகள் கருத்துரை, பதவுரை (கண்ணழித்துரைத்தல்). பொழிப்புரை அகலவுரை நாலடியார் கூறும் உரை வகைகள் பொழிப்பு, அகலம், எச்சம், நுட்பம் நன்னூல் கூறும் உரை வகைகள் (மயிலைநாதர் கூறும் 14 உரை வகை) காண்டிகை, விருத்தி, பிறவகை குறிப்புரை வீரசோழியம் உரை கூறும் வகைகள் அரும்பத உரை இறையனார் களவியல் உரைக்கு முந்திய காலம் அகநானூற்றுப் பழையவுரை யாப்பருங்கல விருத்திச்சான்று இளம்பூரணருக்கு முந்திய உரை தொல்காப்பிய உரைகள் தொல்காப்பியத்துக்கு முந்திய உரைமரபு உரைக்கு உரை செய்யுள் வடின உரை நூலாசிரியரே உரையாசிரியர் உரை செய்யும் உதவி.

1. அறிமுகம்

1. உரையின் தோற்றமும் வளர்ச்சியும்

தமிழ் மொழி இலக்கிய வளம் மிகுந்தது இலக்கண வரம் புடன் வளர்ந்து வரும் இயல்புடையது. சங்கம் வைத்து மொழி வளர்த்த வேந்தர்களும், காலவெள்ளத்தை எதிர்த்து நீந்தி என்றும் வாழும் இலக்கியச் செல்வங்களைப் படைத்து வழங்கிய புலவர் களும் காலந்தோறும் தோன்றி, தமிழ் மொழியைக் காத்து வளர்த்தனர். இத்தகைய சிறப்பியல்புகளை உடைய தமிழ் மொழியை,

பொருப்பிலே பிறந்து, தென்னன்
புகழிலே வளர்ந்து, சங்கத்(து)
இருப்பிலே இருந்து வையை
ஏட்டிலே தவழ்ந்த பேதை
நெருப்பிலே நின்று, கற்றோர்

நினைவிலே நடந்து) ஓர் ஏன
மருப்பிலே பயின்ற பாவை
மருங்கிலே வளரு கின்றாள்" (1.வில்லி பாரதம் - சிறப்புப்பாயிரம்)

என்று புலவர் பெருமக்கள் வாயாரப் போற்றிப் புகழ்ந்தனர் இலக்கண வரம்புடன் வளர்ந்துவரும் தமிழ் மொழியின் செம்மையை,

கண்ணு தற்பெருங் கடவுளும்
கழகமோ(டு) அமர்ந்து,
பண்ணு றத்தெரிந்(து) ஆய்ந்தஇப்
பசுந்தமிழ் ஏனை
மண்ணி டைச்சில இலக்கண
வரம்பிலா மொழிபோல்
எண்ணி டப்படக் கிடந்ததா
எண்ணவும் படுமோ [2]

(2. திருவிளையாடற் புராணம் (பரஞ்சோதியார்) நாட்டுச் சிறப்பு -57.)

என்று போற்றினர்.

நூல் அரங்கேற்றம்

தமிழகத்தில் தோன்றிய சான்றோர்கள் உலகத்தை வாழ வைக்கும் உயர்ந்த நோக்கத்துடன், மக்களினம் இன்புற்று வாழ வழிகாட்டும் கொள்கையுடன் இலக்கியம் படைத்தனர் இலக்கணம் வகுத்தனர் சமய நூல்கள் இயற்றினர். தம் படைப்பினை நாடறிந்த பேரவையின் முன்வைத்து, நன்மை தீமைகளை குற்றம் குறைகளை அங்குள்ள சான்றோர்கள் ஆய்ந்து நல்ல நூல் என்று ஏற்ற பின்னரே மக்களிடம் அதனைப் பரப்பினர் . அதன்பின்னரே அந் நூலை ஆசிரியர்கள் மாணவர்களுக்குக் கற்பித்தனர் கற்றோரும் மற்றோரும் பயின்றனர். இவ்வாறு உயர்ந்த நெறியில் சீரிய நோக்குடன், தமிழ் இலக்கிய இலக்கண சமய நூல்கள் நாட்டில் உலவி அறிவொள் பரப்பின.

உரை இல்லாத காலம்

நூல்கள் தோன்றிய காலத்தில் அவை எல்லோருக்கும் விளங்கும் நிலையில் இருந்தன. உரையும் விளக்கமும் இல்லாத மூல நூல்களே அனைவரும் கற்று மகிழும் இயல்பினவாய் இருத்தன. பேராசிரியர் தொல்காப்பிய உரையில், "உரையின்றி, சூத்திரத்தானே பொருள் நிகழ்ந்த காலமும் உண்டு" (மரபியல்-98 என்றும், "உதாரணங்காட்டல் வேண்டாமையை உணர்ந்து உரைநடந்த காலமும் உடையவாகும் முற்காலத்து நூல்கள் (மரபியல்-101) என்றும் கூறியுள்ள கருத்துக்கள் சிந்திக்கத்தக்கன

கற்றலின் கேட்டலே நன்று"என்பது அக் காலத்தவர் கொள்கை கேள்வி என்று தனியாக ஓர் அதிகாரம் வகுத்துக் கொண்டு "சுற்றிலன் ஆயினும் கேட்க" என்று திருவள்ளுவா அறிவுரை கூறுகின்றார். "செந்தமிழும் நாப்பழக்கம்" என்று ஔவையார்

பாடியுள்ளார். இவை எல்லாம் உரை எழுதி நூல்களைப் படிப்பதைவிட, ஒருவர் சொல்லக் கேட்டுக் கல்வி பயின்ற வழக்கம் மிகுதியாய் இருந்ததை உணர்த்தும் சான்றுகள்

அக் காலத்து எழுது கருவிகளும், எழுதும்கலை விரைவில் வளரத் தடையாய் இருந்தன. பனையோலைகளில் எழுத்தாணி கொண்டு ஒரு நூலைப் பல நாட்கள் எழுதிச் சேர்த்து சுவடியாக்கிப் போற்றிக்காக்க வேண்டிய நிலை இருந்து வந்தது ஒரே சுவடியைப் பலர் கூடிக் கற்றனர். ஒருவர் படிக்க மற்றவர்கள் காதால் கேட்டு அறிந்தனர். மிகுதியாக எழுதி விளக் வேண்டியவற்றை எழுதாமல், வாயால் கூறியே விளக்கி வந்தனர் "விரிப்பின் பெருகும். விரிவஞ்சி விடுத்தாம். வல்லார் வாய்க் கேட்டுணர்க. வந்தவழிக் காண்க" என்று உரையாசிரியர்கள் இடையிடையே எழுதிச் செல்லும் வழக்கம், அவர்கள் காலத்தில் எழுதுவதில் இருந்த இடர்ப்பாடுகளை உணர்த்தும். நூல்களுக்கு உரை எழுதாமல், வாயால் விளக்கிச் செவியால் அறிந்து கல்வி சுற்றுப் புலமை பெறும் வழக்கம் அக் காலத்தில் நாடெங்கும் பரவியிருந்தது.

நாலடியாரில் (அவையறிதல் என்ற அதிகாரத்தில்) சில பாடல்களில் உள்ள,

நாப்பாடம் சொல்லி நயம் உணர்வார் -312
பாடமே ஓதிப் பயன் தெரிதல் தேற்றாத
மூடர் -316
கற்றதூஉம் இன்றிக் கணக்காயர் பாடத்தால்
பெற்றதாம் பேதை ஓர் சூத்திரம் - 34

என்ற வரிகளும், பழமொழி நானூற்றுப் பாடலில் உள்ள,

பல்காலும்

நாடுக தான் கண்ட நுட்பத்தை -195

என்ற வரியும் பழங் காலத்து மக்கள் கல்வி பயின்ற முறையை நமக்கு அறிவிக்கின்றன.

நன்னூற்பாயிரம், பாடம் சொல்லும் முறையைப் பின்வருமாறு கூறுகின்றது:

ஈதல் இயல்பே இயம்பும் காலை,
காலமும் இடமும் வாலிதின் நோக்கி,
சிறந்துழி இருந்து, தன் தெய்வம் வாழ்த்தி,
உரைக்கப் படும்பொருள் உள்ளத்து அமைத்து,
ரும்பி முகமலர்ந்து, விரையான் வெகுளான் விரும்பி முக
கொள்வோன் கொள்வகை அறிந்து,அவன் உளங்கொளக்,
கோட்டமில் மனத்தின்நூல் கொடுத்தல் என்ப

பாடம் கேட்டும் முறை பின்வருமாறு உரைக்கப்படுகின்றது.

நூல்பயில் இயல்பே நுவலின் வழக்குஅறிதல்,
பாடம் போற்றல், கேட்டவை நினைத்தல்,
ஆசாற் சார்ந்து அவை அமைவரக் கேட்டல்,

அம்மாண் புடையோர் தம்மொடு பயிறல்,
வினாதல் வினாயவை விடுத்தல் என்றுஇவை
கடனாக் கொளினே மடம்நனி இருக்கும்.

இவை, கேள்விச் செல்வத்திற்கு இருந்த முதன்மையை உணர்த்துகின்றன.

செவிச் செல்வம்

பழைய நூலைக் கற்றறிந்தவர் வழி வழியாகப் பிறருக்கு அந் நூலின் நுட்பங்களை எடுத்துக் கூறி வந்தனர். ஆசிரியர் தம் மாணவர்களுக்கு வாய்மொழியாகப் பழைய நூலுக்கு உரையும் விளக்கமும் கூறிவந்தார். இவ்வாறு ஒருநூல், பல தலைமுறை களைக் கடந்து வரும்போது, ஒவ்வொரு பரம்பரைக்கும் உரிய கருத்துகளையும் விளக்கத்தையும் சேர்த்துக் கொண்டு வளர்ந்து வந்தது. வழிவழியாகப் பாடம் சொல்லச் சொல்ல நூல்களுக்குர்பு விளக்கம் பெருகியது. பின்வந்தோர், முன்னோர் கருத்துட்டடி சிலவற்றைக் கூட்டினர் பொருந்தாதவற்றை மறுத்தனட ஆசிரியர்கள், பாடங் கூறியபோது தம்மாணவர்கள் எழுப்பி ஐயங்களைப் போக்கினர் மாணவர்கள் கேட்ட வினாக்களுக தக்க விடை கூறினர்.

இந்த நிலையில், ஆசிரியர்- மாணவர் என்ற சார்பும் தந்தை-மகன் என்ற பிணைப்பும் பெற்று, சுற்ற பரம்ப யிடையே செல்வாக்கு அடைந்து உரைகள் வளர்ந்து வந்தன ஆசிரியர் தம் மாணவர்களுக்கும், தந்தை தம் மக்களுக்கும் தா வழிவழியாகக் கேட்டுவந்த உரைகளை மரபு பிறழாமல் எடுத்து. கூறி விளக்கினர். மாணவன், ஆசிரியர் ஆனான். மகன், தந்தை ஆனான். ஆனபோது முன்னோர் மொழிந்தவற்றைப் பின்னோர்க்கு அவர்கள் எடுத்துரைத்தனர். இவ்வாறு வாழைய வாழையாக உரைகள் பரவிவந்தன. கேட்போர் நெஞ்சத்தில் நில பெற்று, வாய்மொழியாகப் பரவிவந்த உரைகள் பல உண்டு புலவர்களின் நினைவாற்றலை நம்பி, செவியும் வாயும் செய்த துணையால் வாழ்ந்துவந்த உரைகள் காலப்போக்கில் ஓலைகளி களவியலுரை இவ்வாறு ப எழுதப்பட்டன. இறையனார் கள தலைமுறைகள் வாய்மொழியாக வழங்கிவந்தது என்பதை அ வுரையே கூறுகின்றது. பின்வரும் உரைப்பகுதி, அவ்வுரை வந்த வரலாற்றை அறிவிக்கின்றது:

”மதுரை ஆலவாயிற் பெருமானடிகளால் செய்யப்பட்ட நூற்கு நக்கீரனாரால் உரைகண்டு, குமார சுவாமியால் கேட்க பட்டது என்க.

”இனி உரை நடந்து வந்தவாறு சொல்லுதும்:

”மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் தம் மகனா கீரங் கொற்றனார்க்கு உரைத்தார் அவர் தேனூர் கிழார்க் உரைத்தார் அவர் படியங் கொற்றனார்க்கு உரைத்தார் அவ மணலூர் ஆசிரியர் புளியங்காய்ப் பெருஞ் சேந்தனார்க் உரைத்தார் அவர் செல்லூர் ஆசிரியர் ஆண்டைப் பெரு குமாரனார்க்கு உரைத்தார் அவர் திருக்குன்றத்து ஆசிரியர்க்கு உரைத்தார் அவர் மாதவனார் இள நாகனார்க்கு உரைத்தார் அவர் முசிறி ஆசிரியர் நீலகண்டனார்க்கு உரைத்தார்.

”இங்ஙனம் வருகின்றது உரை”. இப்பகுதி, உரை வளர்ந் வரலாற்றை விளக்கும் சிறந்த சான்றாக உள்ளது.

நாலாயிர திவ்வியப் பிரபந்தங்களுக்குத் தோன்றிய வியாக்கியானங்கள். வைணவப் பெரியோர்கள் பொது மக்களிடம், பக்திப் பாடல்களை விளக்கிக்கூறி நிகழ்த்திய சொற்பொழிவுகளே ஆகும் ஆசிரியர்-மாணாக்கர் முறையில் கூறி வந்த விரிவுரைகளே ஆகும். அவற்றைப் பின்னர் எழுதி வைத்துப் போற்றலாயினர்.

கம்பராமாயணத்திற்கு விளக்கவுரை, பல நூறு ஆண்டு களாக வாய்மொழியாகவே வழங்கி வந்தது என்பதை விநோதரச மஞ்சரி பின்வருமாறு கூறுகின்றது:

”கம்பரையும் அவருடைய மாணக்கரையும் அடுத்துப் பல பெயர்கள் இராமாயணத்திற்குச் சம்பிரதாயமாகவும் சாதுரியமாகவும் உரை கேட்டார்கள். அப்புறம் அப் பல பெயரையும் அடுத்துப் பற்பலர் பாடங்கேட்டார்கள். இந்தப் படி, அதன் பின்பும் காலக்கிரமத்தில் அனேகர் கர்ண பரம்பரையாக இராமாயணத் திற்கு, உரைகேட்டு வந்தார்கள்.

”கொஞ்ச காலத்திற்கு முன்பு அவ்வாறு கர்ண பரம் பரையாகப் பாடங்கேட்டுக் கிரமமாய்ப் போதிக்கத் தக்க வல்லமை பெற்றிருப்பவர்கள் ஆர்ஆர் என்னில், தென் தேசத்தில் வசித்திருந்த பெத்த பெருமாள் பிள்ளை என்பவரும், சீகாழி அருணாசலக் கவிராயரும், மயிலை சீனிவாசப் பிள்ளையும், சேதுபதியின் வக்கிலாகிய சோமசுந்தரப் பிள்ளையும், தஞ்சாவூர் ஸம்ஸ்தான வித்துவான் இராமசாமி கவிராயரும், தொல்காப்பிய வரதப்ப முதலியாரும், காலேஜ் திருவேங்கடாசல முதலியாரும், திருத்தணிகைச் சரவணப் பெருமாள் கவிராயரும், புதுவைக்குறள் வேங்கடாசல உபாத்தியாயரும், காஞ்சீபுரம் அருணாசல தேசிகரின் பிதாவாகிய சண்முக கவிராயரும், திருநீர்மலைக் காளிங்கராய பிள்ளையும் மற்றும் சிற்சிலருமே.

““இக் காலத்திலும், அப்படிப்பட்ட சாமர்த்தியமுடைய சிலர் சென்னை ராஜதானி முதலான ஸ்தானங்களில் இருக்கிறார்கள்”. **.(விநோதரச மஞ்சரி (1966) பக். 245. வித்துவான் அ்டாவதானம் வீராசாமி செட்டியார்.)**

வாய்மொழியின் செல்வாக்கு

வாய்மொழி வாயிலாக வளர்ந்து வந்த உரை, ஏட்டில் எழுதப்பட்ட பின்னரும் உரையாடுவது போன்ற நிலையிலேயே அமைந்தது. ஆசிரியர் பாடம் கூற, அதைக் கேட்கும் மாணவன் ஐயங்களை எழுப்ப அவற்றிற்கு விடை கூறி ஆசிரியர் விளக்கும் முறையிலேயே உரைகள் அமைந்தன. நேரே ஏட்டில் உ‍ை எழுதியவர்களும் பழைய மரபைத் தம்மை அறியாம மேற்கொண்டனர். வாய்மொழி தன் செல்வாக்கை எழுத்திலும் நிலை நாட்டியது.

இறையனார் அகப்பொருள் உரையும், சேனாவரையா தொல்காப்பியம் சொல்லதிகாரத்திற்கு எழுதிய உரையும் பேராசிரியர் திருக்கோவையாருக்கு எழுதிய உரையும், காலிங்கம் திருக்குறளுக்கு எழுதிய உரையும் ஆசிரியர் மாணவர்களுக்கு, பாடம் கூறும் வகையில் வினா விடையாக உள்ளன. மற்ற உரையாசிரியர்களின் உரையிலும் ஆங்காங்கே பல இடங்கள் இவ்வாறு அமைந்துள்ளன. பேராசிரியர், திருக்கோவையாருக்கு (285) எழுதிய உரையிலிருந்து ஓர் எடுத்துக்காட்டுக் காண்போம்.

”கட்டுவித்தியை வினவ, அவள் அறியாதாள் போல இக்கருமம் முடித்தற் பொருட்டு

இவ்வகை சொன்னாள். என்னை? வரை பொருட்குத் தலைமகன் போக அவன் வரவு நீட்டித்தலான், இவளது ஆற்றாமையான் உண்டாகிய நோயை முருகனால் வந்தது என்று இவள் கூறலாமோ? இ.ஃது அங்ஙனம் ஆயின், குறி என்பது அனைத்தும் பொய்யேயாம் என்பது சுடா அதற்கு விடை: குறியும் பொய்யன்று இவளும் பொய் கூறினான். அல்லள் அ.ஃது எங்ஙனம் எனின், குறிபார்க்கச் சென்றிருக்கும் பொழுதே தெய்வ முன்னிலையாகக் கொண்டு இருத்தலான், அந் தெய்வத்தின் வெளிப்பாட்டானே தலைமகனுடன் புணர்ச்சி உண்மையை அறிந்தாள். இங்ஙனம் அறிந்தாள் என்பதனை நாம் அறிந்தவாறு யாதினால் எனின், இக் களவொழுக்கம் தெய்வம் இடை நிற்ப, பான்மை வழியோடி நடக்கும் ஒழுக்கம் ஆதலானும், சிற்றம்பலத்தான் இயல்பு தெரிந்திராதே என்று இவள் சொல்லுதலானும் அறிந்தாம்."

இப் பகுதி, வினாவிடை முறையில் ஆசிரியர் தம் மாணவர்களுக்குப் பாடங்கூறும் வகையில் அமைந்துள்ளது. ரையாடல் வகையில் இதனை அமைப்போம்:

ஆசிரியர்: கட்டுவித்தியை வினவ, அவள் அறியாதாள் போல இக்கருமம் முடித்தற் பொருட்டு இவ்வகை சொன்னாள்.

மாணவர்: என்னை? வரை பொருட்குத் தலைமகன் போக அவள் வரவு நீட்டித்தலான் இவளது ஆற்றாமையான் உண்டாகிய நோயை முருகனால் வந்தது என்று இவள் கூறலாமோ ? இ.ஃது அங்ஙனம் ஆயின், குறி என்பது அனைத்தும் பொய்யேயாம்.

ஆசிரியர்: குறியும் பொய்யன்று இவளும் பொய் கூறினாள் அல்லள்.

மாணவர்: அ.ஃது எங்ஙனம்?

ஆசிரியர்: குறிபார்க்கச் சென்றிருக்கும் பொழுதே, தெய்வ முன்னிலையாகக் கொண்டு இருத்தலான், அத் தெய்வத் தின் வெளிப்பாட்டானே தலைமகனுடன் புணர்ச்சி உண்மையை அறிந்தாள்.

மாணவர்: இங்ஙனம் அறிந்தாள் என்பதனை நாம் அறிந்தவாறு யாதினால்?அழன

ஆசிரியர்: இக் களவொழுக்கம், தெய்வம் இடை நிற்பப் பான்மை வழியோடி நடக்கும் ஒழுக்கம் ஆதலானும், சிற்றம்பலத்தான் இயல்பு தெரிந்திராதே என்று இவள் சொல்லுதலானும் அறிந்தாம்.

இவ்வாறு, உரையாடலாய் அமையத்தகுந்த பல பகுதிகள் னார் களவியல் உரையிலும், மற்ற உரைகளிலும் உள்ளன. இறையனார்

உரை, கட்டுரை ஆகிய சொற்களே அவை முதலில் வாய் மொழியாக வழங்கி வந்தவை என்பதை நினைவூட்டுகின்றன. உரையாசிரியர்கள், "இச் சூத்திரம் என்நுதலிற்றோ எனின், முன்னர்க் கூறினாம், பின்னர்க் கூறுதும், எனின் அற்றன்று, நன்று சொன்னாய், அறியாது கடாயினாய்,கூறுதும், என்று கூறுவாரும் உளர், வல்லார்வாய்க் கேட்டுணர்க" என்று இடையிடையே தம் உரையில் எழுதிச் செல்லுகின்றனர். என்பது,என்க, என்றவாறு, எனப்படுவது, அறிக, கொள்க, கருதுக, கூறுக போன்ற சொற்களும் அவர்களால் ஆளப்படுகின்றன. இன்று கட்டுரை எழுதுவோரும் ஏன் என்றால், எப்படி எனில்,ஏன் என்று

கேட்டால், விளக்கமாகக் கூறினால் என்று எழுதிப் பழைய மரபின் செல்வாக்கை நினைவூட்டி வருகின்றனர்.

உரையின் வளர்ச்சி

வழிவழியாக நூல்களுக்கு உரைகேட்டுப் பழகியவர்களும் தொடக்கத்தில் விரிவான உரையோ விளக்கமோ எழுதவில்லை. முதன்முதலில் அருஞ்சொற்களுக்குப் பொருளும், சொற்களைக் கொண்டுகூட்டி முடிக்கும் வகையும், சில வரலாற்றுக் குறிப்பும் மிகச் சுருக்கமாய் எழுதி வைத்தனர். சிலப்பதிகாரத்திற்கு முதலில் அரும்பதவுரை தோன்றியது. ஐங்குறு நூறு, பதிற்றுப் பத்துப் போன்ற பழந்தமிழ் நூல்களுக்கு முற்காலத்தில் தோன்றிய பழைய உரைகள் மிகச் சுருக்கமாக-குறிப்புரையாக உள்ளன. புறநானூற் றின் பழையவுரை பொழிப்புரையாக உள்ளது. பரிபாடலுக்குப் பரிமேலழகர் எழுதிய உரை, சுருக்கமாகவே உள்ளது. அ நானூற்றிற்குப் பழைய வுரை (90 பாடல்களுக்கு உரையாகவே உள்ளது. மட்டும்) குறிப்பு

குறிப்புரை எழுதியவர்களின் ஊர் பேர் தெரியவில்லை. அவர்களைப் பற்றிய வரலாறு எதுவும் தெரியவில்லை. குறிப் புரைக்குத் தந்த முதன்மையை அவற்றை இயற்றியவர் பெயருக்கும் வரலாற்றுக்கும் தரவில்லை. புகழை விரும்பா பெயரையும் துறந்த பெரியவர்கள் அவர்கள்!

காலம் செல்லச் செல்லக் கருத்துகள் வளர்ந்தன குறிப்புரையுடன் முன்னோர் சொல்லிவந்த விளக்கம், மேற் கோள் ஆகியவை விரிவடைந்தன. அவற்றையும் ஏட்டில் எழுதும் நோக்கம் ஏற்பட்டது. விரிவுரையும் விளக்க வுரையும் தோன்றி எடுத்துக்காட்டும் மேற்கோள் விளக்கமும் பெருகின. இவற்றைத் திறம்படக் கூறுவோர் இரண்டொருவரே இருந்தனர். அவர்களே அவற்றை ஏட்டில் எழுதிவைத்தனர். மயிலைநாதர், உரையின் பல்வேறு வகைகளை விளக்கியுள்ளார்.

”நூலுரை, உரைவிரி எனும் இவை, ஆறு தொடர்ச்சிப் பொருள் மயங்கிய ஒரு தொடர்த் தொகை மொழி. இவை,

நூலை ஒக்கும் உரை
நூற்கு உரை
நூலது உரை
நூற்கண் உரை
நூலன்ன உரை
நூலும் உரையும்

என்றும்,

உரையை விரி
உரைக்கு விரி
உரையது விரி
உரைக்கண் விரி

உரைக்கும் விரி
உரை விரியுடையது

என்றும் வரும்" (நன் -372) என்னும் பகுதி உரைகளை விளக்குகின்றது.

வலியவை வாழ்வுபெறல்

முன்னோர் எழுதிய குறிப்பை மேற்கொண்டு புதிய கருத்துகளை அவற்றுடன் சேர்த்துப் பின் வந்தோர் தர, வாய்ப்பு ஏற்படுவது இயற்கையே. பின் தோன்றியவர்களுக்குப் பல வேறு உரைகளைக் காணும் வாய்ப்பு ஏற்படவே, பலரிடம் இருந்த நல்ல கருத்தைத் தொகுத்துக் காணும் ஆற்றலைப் பெற்றனர். எல்லா உரைகளிலிருந்தும் நல்லனவற்றை மேற்கொண்டு மாறுபட்ட வற்றையும் தேவையில்லாதவற்றையும் விலக்கித் தாமும் பல நல்ல கருத்தை எழுதும் வாய்ப்பு, பின் வந்தவாக்கே கிடைத்தது. இதனால் அவர்கள் எழுதிய விளக்கவுரைகள் செல்வாக்கு எய்தின் காலங்கடந்து நின்றன் நிலைத்த வாழ்வு பெற்றன. இக் காரணங்களால் இளம்பூரணருக்குப்பின் தோன்றிய தொல் காப்பிய உரைகள் வாழ்வு பெற்றன் திருவாய்மொழிக்கு 6000 படி, 9000 படி, 24000 படி ஆகிய வியாக்கியானங்களுக்குப் பின் தோன்றிய 36000 படி ஈடு என்ற சிறப்புப் பெற்றது.

ஒன்பது உரைகளுக்குப்பின் தோன்றிய பரிமேலழகர் உரை நிலைபெற்றது. மயிலை நாதருக்கும், சங்கர நமசிவாயருக்கும் பின் தோன்றிய சிவஞான முனிவரின் நன்னூல் உரை செல்வாக்குப் பெற்றது. பல உரைகள் சிவஞான போதத்திற்குத் தோன்றியபின் எழுந்த சிவஞான பாடியம் சிறப்புப் பெற்றது.

உரைக்கு உரை

உரையாசிரியர்கள் எழுதிய உரைவிளக்கங்கள் காலப் போக்கில் விளங்காத நிலையை அடைந்தன. அதனால் உரைக்கு உரை எழுதவேண்டிய தேவை ஏற்பட்டது. அதன் விளைவாய் உரைக்கு உரை பல தோன்றின.

நாலாயிர திவ்வியப் பிரபந்த வியாக்கியானங்களுக்குப் பல அரும்பதவுரைகள் தோன்றியுள்ளன.

பரிமேலழகர் உரையை விளக்கப் பிற்காலத்தில் பல உரைவிளக்கங்கள் தோன்றின. பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருமேனி இரத்தின கவிராயர், பரிமேலழகர் உரைக்கு விளக்கமாக "நுண்பொருள் மாலை" என்ற பெயருடன் ஒரு நூலை இயற்றினார். 1869-ஆம் ஆண்டில் பரிமேலழகர் உரையை, பல விளக்கங்கள் எழுதிச் சரவணப் பெருமாள் ஐயர் பதிப்பித்தார். 1885-இல் முருகேச முதலியார் பரிமேலழகர் உரைக்கு விளக்கம் எழுதி வெளியிட்டார். பின்னர், இராமாநுசக் கவிராயர், வை. மு. சடகோப ராமாநுசாச்சாரியார், கோ. வடிவேல் செட்டியார் (1919), அரசஞ் சண்முகனார், வை. மு. கோபால கிரு"ணமாச்சாரியார் ஆகியோர் பரிமேலழகர் உரைக்கு விரிவுரை எழுதியுள்ளனர்.

தொல்காப்பிய உரைகளுக்கும் இத்தகைய உரை விளக்கங்கள் தோன்றியுள்ளன. தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் ஆகிய மூன்று பகுதிகளையும் பழைய

உரைகளுடன் வெளியிட்ட ஈழத்து அறிஞர் கணேச ஐயர், பலவகை விளக்கங்களை அடிக்குறிப்பிலும் பிறசேர்க்கையிலும் தந்துள்ளார். தேவநேய பாவாணர், கு. சுந்தர மூர்த்தி, பூவராகம் பிள்ளை ஆகியோர் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் வெளியிட்டுள்ள தொல்காப்பிய உரைகளுக்கு விளக்கவுரைகளை எழுதியுள்ளனர். மயிலம் சிவலிங்கனார், அடிகள் ஆசிரியா ஆகியோர் இளம்பூரணம் எழுத்ததிகாரத்திற்கு விளக்கவுரை எழுதியுள்ளனர்.

செய்யுள் வடிவ உரைகள்

உரைநடையில் மட்டுமன்றி, செய்யுள் வடிவிலும் சில உரைநூல்கள் தோன்றின. எல்லாவற்றையும் உரைநடையில் எழுதிக் கற்றுவரும் நமக்கு இது வியப்பூட்டும் செய்தியாக இருக்கலாம். ஆனால், எல்லாவற்றையும் மனப்பாடமாகக் கொண்டு கல்வி கற்றுத் தெளிந்த பழங்காலத்தவர்க்கு, செய்யுள் வடிவில் தோன்றிய உரைநூல் வியப்பினைத் தந்திராது

டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர், செய்யுள் வடிவில் தோன்றிய உரைகளைப் பற்றிப் பின்வருமாறு கூறுகின்றார்:

”ஒரு செய்யுள் நூலுக்கு வசனத்தில் உரை இயற்றுவதோடு செய்யுள் உருவத்திலேயே உரை இயற்றுவதும் உண்டு. இது வட மொழியில் பெருவழக்கு. தமிழ் நூல்களிலும் சிவஞான போதத்துக்குரிய உதாரண வெண்பாக்களும், சித்தியார் முதலியனவும் உரைநிலையிலேயே உள்ளன. தேவாரப் பதிகங்களில் பாசுரம் முதலிய சிலவற்றிற்குப் பெரிய புராணத்தில் சேக்கிழார் உரை விரித்துச் சொல்கின்றார். இவற்றைப் போலவே திருக்குறளுக்கும் செய்யுள் உருவத்தில் உரையுண்டு. தனியே குறளுரை என்னும் பெயர் பெறாவிட்டாலும், அவை உரைகளின் தன்மையை உடையனவே” **திருவள்ளுவரும் திருக்குறளும் பக்கம் 7,8.**

அகநானூற்றுக்குப் பழங்காலத்தில், அகவற்பாக்களால் ஆன உரை ஒன்று இருந்தது. இச்செய்தியினை உரைச் சிறப்புப்பாயிரம், ”இத்தொகைக்குக் கருத்து அகவலாற் பாடினான், இடையள நாட்டு மணக்குடியான் பால்வண்ண தேவனான வில்லவ தரையன்” என்று கூறுவதால் உணரலாம்.

திருக்குறளுக்குப் பல உரைகள், செய்யுள் உருவில் தோன்றின. குறட்பா ஒன்றைக்கூறி, அதன் கருத்தை விளக்க, ஏதேனும் ஒரு கதையோ வரலாறோ உதாரணம் காட்டி, பாடல் இயற்றும் வழக்கம் இலக்கிய உலகில் தோன்றியது. இத்தகைய

நூல்களை ‘உரை நூல்கள்“ என்றே கருதவேண்டும் என்பது டாக்டர் உவே. சா. கொள்கையாகும்.

இரங்கேச வெண்பா, சிவசிவ வெண்பா, தினகர வெண்பா, வடமலை வெண்பா, சோமேசர் முதுமொழி வெண்பா முதலியன திருக்குறளுக்கு உதாரணம் கூறும் நூல்கள். உரை வகைகளிலே உதாரணம் கூறுதலும் ஒன்று ஆதலின், முற்கூறிய நூல்கள் திருக்குறளின் உரை நூல்கள் என்றே கூறல் தகும்” என்று அவர் கூறுகின்றார்.

1. திருவள்ளுவரும் திருக்குறளும் (பக்கம் 8)

மேலும் சினேந்திர வெண்பா, திருமலை வெண்பா, முது மொழி மேல்வைப்பு, திருப்புல்லாணி மாலை, திருத்தொண்டர் மாலை, வள்ளுவர் நேரிசை, முருகேசர் முதுநெறி வெண்பா, திருக்குறட் குமரேச வெண்பா ஆகிய நூல்கள் திருக்குறளுக்கு உதாரணம் கூறும் வகையில் எழுந்துள்ளன. குமர குருபரரின் நீதி நெறி விளக்கமும் திருக்குறள் கருத்தைச் சுருங்கிய வடிவில் தரும் நூல் ஆகும்.

இவையேயன்றி, பழைய விருத்த நூல் ஒன்றும் உள்ளது. அண்மைக் காலத்தில், திருக்குறள் அகவல் குட்டிக்குறன் திருக்குறள் இசைமாலை ஆகியவையும் செய்யுள் உருவில் திருக்குறளுக்கு உரை நூல்களாகத் தோன்றியுள்ளன.

15-ஆம் நூற்றாண்டின் இறுதியில், ஆண்டிப் புலவர் நன்னூலுக்கு விருத்தப்பாவில் ஓர் உரை இயற்றினார். இவர் "ஆசிரிய நிகண்டு" இயற்றியவர். இதனை, "இயம்பிய நிகண்டின் உரையறி நன்னூலினொடு இரண்டுமே செய்து வைத்தான்" என்று ஆசிரிய நிகண்டின் பாயிரம் குறிப்பிடுகின்றது. "உரையறி நன்னூல் என்பது உரையைக் குறிக்கும். அது ஆசிரிய விருத்தத்தால் ஆனது. **2. தமிழ்ப் புலவர் வரலாறு (13-நூல்) 1956.பக்கம் 15-16.**

சிவஞான சித்தியாருக்கு, குருஞான சம்பந்தர் செய்யுள் வடிவில் "ஞானாவரண விளக்கம்" என்ற பெயரில் சூத்திரக் கருத்துகளை ளை விளக்கி எழுதினார்.

பாவேந்தர் பாரதிதாசன், குறுந்தொகைப் பாடல்கள் சிலவற்றை, இக்காலத்தவர் எளிதில் பொருள் உணர்ந்து கற்கும் வகையில் அகவற்பாக்களில் தந்துள்ளார். அவற்றைப் பாரதிதாசன் கவிதைகள் இரண்டாம் தொகுதியில் காணலாம்.

கவிஞர் கண்ணதாசன் முத்தொள்ளாயிரப் பாடல்கள் சிலவற்றிற்குச் செய்யுள் வடிவில் விளக்கம் தந்துள்ளார்.

முரா. பெருமாள் முதலியார் நற்றிணை குறுந்தொகை அகநானூறு ஆகியவற்றிற்கு அகவற்பாவில் உரை எழுதியுள்ளார்

இவையாவும் பழஞ்செய்யுட்களுக்கு இக்காலத்தவர் செய்யுள் வடிவில் எழுதிய உரைகள் ஆகும்.

நூலாசிரியரே எழுதிய உரைகள்

ஒருவர் எழுதிய நூலுக்குப் பிறர் உரை எழுதிய மரபு போய். நூலாசிரியரே உரை எழுதும் வழக்கமும் ஏற்பட்டது. பல உரைகள் தோன்றியும், ஒரு நூல் நன்கு விளங்காமல் இருந்த நிலையைக் கண்ட நூலாசிரியர்கள் சிலர் தம் நூலுக்குத் தாமே உரை எழுதி இருக்கலாம். நூலாசிரியர் காலத்திலேயே அவர் நூல், பிறழ் உணரப்பட்டதைக் கண்டு நூலாசிரியரே உரையையும் எழுதி யிருக்கலாம்.

நூலாசிரியரே உரை எழுதும் வழக்கம் வடமொழியாள ரிடம் உண்டு, இதனை, "வடநூலார் தாமே பதிகமும் உரையும். செய்வார்" என்று பிரயோக விவேகம் கூறுகின்றது (காரக படலம் 3).

தமிழ் மொழியில், நூலாசிரியரே உரை எழுதும் வழக்கத் திற்குக் கால்கோள்

செய்தவர் புறப்பொருள் வெண்பாமாலை இயற்றிய ஐய்னாரிதனார் என்னலாம். அவர், புறப்பொருள் இலக்கணத்தைக் கூறும் சூத்திரங்கள் எழுதி, அவற்றின் கீழே துறைகளை விளக்கும் கொளுக்களை அமைத்து, ஒவ்வொரு துறையினையும் விளக்கும் வெண்பா ஒன்றையும் (மருட்பாவும் ண்டு) இயற்றியுள்ளார் தாம் வகுத்த புறப்பொருள் இலக்கணத்திற்குத் தாமே இலக்கிய மேற்கோளையும் அமைத்துள்ளார். இவ்வாறே கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் தோன்றிய தண்டியலங்கார ஆசிரியர், அணியிலக்கணத்திற்கு ஏற்ற உதாரணச் செய்யுள்களை இயற்றித் தம் நூலில் சேர்ந்துள்ளார். இதனை, "தண்டியாசிரியர் மூலோதாரணம் காட்டினாற்போல, யாமும் உரை எழுதியது அல்லது மூலோதாரணமும் காட்டினாம்" என்று பிரயோக விவேகம் கூறுகின்றது (பிரயோக-காரக படலம் 3).

கி.பி. 13-ஆம் நூற்றாண்டின் இறுதியில் நாற்கவிராசநம்பி "அகப்பொருள் விளக்கம்" என்னும் இலக்கண நூலை இயற்றித் தாமே உரையும் எழுதினார். இச்செய்தியை அந்நூலின் சிறப்புப் பாயிரம்,

அகப்பொருள் விளக்கம்என்று அதற்கொரு நாமம்
புலப்படுத்து இருளறப் பொருள்விரித்து எழுதினன்

என்று கூறுவதால் அறியலாம்.

17-ஆம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்த சுப்பிரமணிய தீட்சிதா, பிரயோக விவேகம் என்னும் இலக்கண நூலை இயற்றி தாமே அதற்கு உரையும் எழுதினார். அவர், "வடநூலார் தாமே பதிகமும் உரையும் செய்வார். இந்நூலும் வட நூலைத் தற்பவமாகச் செய்தலான், யாமும் பதிகமும் உரையும் செய்து உதாரணமும் காட்டினாம்" என்று கூறுகின்றார் (பிரயோக, காரக 3

இவ்வாறே, இலக்கண விளக்கம் இயற்றிய வைத்திய நாத தேசிகரும், இலக்கணக் கொத்து இயற்றிய சாமிநாத தேசிகரும் தம் நூல்களுக்குத் தாமே உரை எழுதியுள்ளனர்.

இலக்கணக் கொத்தின் ஆசிரியரான சாமிநாத தேசிகர்,

நூல்செய் தவன் அந் நூற்குஉரை எழுதுதல்
முறையோ எனிலே அறையக் கேள் நீ

என்று வினாவும் விடையுமாகத் தொடங்கித் தம் கருத்துக்களை விரித்துரைக்கின்றார்:

முன்பின் பலரே ! என்கண் காணத்
திருவா ரூரில் திருக்கூட் டத்தில்
தமிழுக்கு இலக்கு ஆகிய வயித்திய நாதன்
இலக்கண விளக்கம் வகுத்துஉரை எழுதினன்
அன்றியும் தென்திசை ஆழ்வார் திருநகர்
அப்பதி வாழும் சுப்பிர மணிய
வேதியன் தமிழ்ப்பிர யோக விவேகம்
உய்த்துஉரை எழுதினன் ஒன்றே பலவே! இலக் - 7)

என்று நூலாசிரியரே உரை எழுதியுள்ளதைக் கூறித் தாமும் அவ்வாறே செய்ததாகக் கூறுகின்றார்.

தமிழறிஞர் ரா. இராகவ ஐயங்கார், பாரி காதை என்னும் இனிய இலக்கியத்தை வெண்பாக்களால் படைத்து, அதற்குச் சிறந்ததொரு உரையும் இயற்றியுள்ளார். பாவேந்தர் பாரதிதாசன், புதிய ஆத்திசூடி ஒன்றை எழுதி அவரே அதற்கு உரையும் விளக்கமும் எழுதியுள்ளார். செகவீரபாண்டியனார் "குமரேச வெண்பா" என்னும் நூல் இயற்றி, அதற்குத் தாமே உரையும் செய்துள்ளார்.

நூலாசிரியரே உரையையும் எழுதிவிடுவதால் உண்டாகும் நன்மை தீமைகளைச் சற்றுக் கருதுவோம்:

நூலாசிரியரே தம் கருத்தைத் தாமே இது என்று திட்ட வட்டமாக விளக்கி விடுகின்றார். பின் வருவோர் தம் கருத்தை மாறுபடக்கொள்வாரோ. தாம் கூறியுள்ள அரிய கருந்து விளங்காமல் போய்விடுமோ என்று நூலாசிரியர் அஞ்சிய தாலேயே இவ்வாறு உரை எழுதினார். ஆதலின், அவரது நோக்கம் நிறைவேறியது என்னலாம். இவற்றை நன்மைகள் என்று குறிப்பிடலாம்.

நூலாசிரியரே உரை எழுதிவிட்டால், கட்டி முடித்த கட்டடம்போல், உரை வளர்ச்சி நின்றுவிடும். மற்றோர் உளர தோன்ற வாய்ப்பு இல்லை. நூலைப் படிப்பவர்களுக்கு வேறு வகையான விளக்கமோ, கருத்தோ தோன்றினாலும் அவற்றைக்கொள்ளத் தடையாக இருக்கும். காலந்தோறும் தோன்றும் புதிய கருத்திற்கு அந்நூலில் இடமில்லை என்ற எண்ணம் தோன்றும், நூலின் சிறப்பு, பாடலின் நயம், கருத்தழகு ஆகியவற்றை நூலாசிரியரே பியந்து, தம் உரையில் பாராட்டிக் கொள்வது சிறப்பாக இருக்காது. தம் புலமை மாண்பைத் தாமே பாராட்டிக்கூறும் ஆசிரியரை உலகம் எள்ளி நகைக்கும், மேலும் நூல் எழுதும் ஆசிரியர், நயங்களையும், சிறப்புகளையும் கருதிப் பாடல் இயற்றுவதில்லை

இவற்றை எல்லாம் நோக்கும்போது, நூலாசிரியரே உரை எழுதுவதால் பயன் மிகுதியாக இல்லை என்னலாம்.

மறுப்புரை

உரையாசிரியர்கள், தமக்கு முன் உரை எழுதியவர் கூறியுள்ள வேறுபட்ட கருத்திற்கு மறுப்புரை கூறி, தம்கருத்தை நிலைநாட்டுவது வழக்கம். ஆனால், ஒரு நூலை எதிர்த்து - அதன் கொள்கையை மறுத்து - அந்நூல் இயற்றிய ஆசிரியர் கருத்தைத் தாக்கி, தமிழில் ஓர் மறுப்புரை நூல் தோன்றியது.

திருவாரூர் வைத்தியநாத தேசிகர் எழுதிய "இலக்கண விளக்கம்" என்னும் நூலை மறுத்து, சிவஞான முனிவர் (18ஆம் நூற் இறுதி) "இலக்கண விளக்கச் சூறாவளி" என்னும் பெயருடன் மறுப்புரை எழுதினார். விளக்கம் என்பதற்கு, விளக்கு (விளக்கு அம்) என்பது பொருள்.சூறாவளி என்பது சுழன்று வீசும் கடுங்காற்று. வைத்தியநாத தேசிகர் ஏற்றிவைத்த இலக்கண விளக்கை அணைக்க, சிவஞான முனிவர் சூறைக்காற்றை -குறாவளியைக் கிளப்பினார். இந்த மறுப்புரை நூலை, தமிழறிஞர் சி. வை. தாமோதரம் பிள்ளை "அநியாய கண்டனம் என்று கூறியுள்ளார். தமிழில்,ஒரு நூலை எதிர்த்து எழுதிய மறுப்புரை நூல் இ.ந்து ஒன்றேயாகும்.

வசனம்

இராமாயணம் பாரதம் சுந்தபுராணம் முதலிய புராண இதிகாசக் கதைகளைப் பொது மக்களிடையே பரப்பும் முயற்சியில் ஈடுபட்டவர்கள், பழங்கதை கூறும் வசனநூல்களை இயற்றினர். சிறிதளவு பழஞ்செய்யுள்களைக் கற்று இன்புற இயலாதவர்களும் பயனடையும் பொருட்டு, காப்பியங்களில் உள்ள செய்யுள்களின் கருத்தைத் தொகுத்து வழங்கினர் சிலர். இத்தகைய முயற்சி 19 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே தொடங்கி இன்றும் பயனளித்து வருகின்றது.

இந்த நன்முயற்சியின் பயனாய், சிறந்த காப்பியக் கதைகள், கவிஞர்களின் செய்யுள்நலங்களோடு உரைநடையில் கிடைத்தன. பாடல்களின் கருத்தை மாற்றாமல் - கூட்டாமல் - குறைக்காமல் கதைப் போக்கைத் தழுவிப் பொழிப்புரை ஏற்பட்டதால், பெரும்பயன் விளைந்தது. காப்பியமும் புராண இதிகாசங்களும் மக்களிடையே நன்கு பரவின. ஆர்வமிகுதியால் மூல நூல்களை பழம் பாடல்களைக் கற்றுப் புலமை பெற்றனர். பொழிப்புரை களாசிய வசன நூல்கள், காப்பிய மாளிகைகளின் மேலே ஏறிப் பார்த்து மகிழ உதவுகின்ற ஏணிகள் ஆயின. க

சங்க நூல்களாகிய எட்டுத் தொகையும் பத்துப் பாட்டும் ஒவ்வொன்றாக வெளியானபோது, யாழ்ப்பாணத்துத் தமிழறிஞர் ந. சி. கந்தையா பிள்ளை அந்நூல்களுக்கு வசனம் எழுதி, தமிழ் கற்கும் மாணவர்களுக்கு உதவி செய்தார்.

உரை எழுதாக் கொள்கை

பக்தி நூல்களுக்கு உரை எழுதுதல் கூடாது என்ற கொள்கை தமிழகத்தில் பல ஆண்டுகளாக இருந்து வந்தது. ஆழ்வார்கள் அருளிய பக்திப் பாடல்களுக்கு உரை எழுதும் முயற்சி தோன்றியபோது, அக்காலத்தில் இருந்த வைணவப் பெரியோர்கள் அம்முயற்சியைக் கண்டித்தனர் தடுத்தனர். இருப்பினும், மக்களிடைய வைணவச் சான்றோர்கள் பக்திப் பாடல்களுக்குக் கூறி வந்த விளக்கங்களைத் தாம் கேட்டவாறே “கால் கொம்பு சுழி ஏறாமல்“ எழுதி வைத்தனர். இவ்வாறு வைணவ நூல்களுக்கு உரையும் விளக்கமும் வாய்த்து விட்டன.

சைவ சமய நூல்களுக்கு இத்தகைய முயற்சி பழங்காலத்தில் மேற்கொள்ளப்படவில்லை. கற்றறிந்த சைவப் பெரியோர்களும், ”அருட்பாடல்களுக்கு நாமா உரை எழுதுவது?” என்று தயங்கி ஒதுங்கி விட்டனர். இதனால், சைவ சமயப் பக்திப் பாடல்கள் உரையின்றியே ஓதப்பட்டு வந்தன. இருபதாம் நூற்றாண்டில், எல்லோரும் அருட்பாடல்களைப் படித்துப் பயன்பெற வேண்டு என்று அறிஞர் சிலர் முயன்று உரை கண்டுள்ளனர்.

தொகுத்துக் காணுதல்

ஒரு நூலுக்கு வழங்கிய பலவேறு உரைகளையும் தொகுத்து காண வேண்டும் என்ற ஆர்வம் இக் காலத்தில் ஏற்பட்டுள்ளது. பலருடைய கருத்துக்களையும் ஒரே இடத்தில் காணும் வேட்கை பிறந்துள்ளது. உரை வேற்றுமைகளைக் கண்டு நல்லனவற்றையும் அல்லனவற்றையும் சீர் தூக்கும் நோக்கம் வளர்ந்து வருகிறது செல்வாக்கு உடையவர்களின்

சொல்லை அப்படியே ஏற்கும் நிலை மாறி நல்லது எது சிறந்தது எது, பொருத்தமானது எது என்று ஆராயும் திறன் பெருகி வருகின்றது. புகழ்பெற்ற உரை யாசிரியர்களின் பொருந்தாத கருத்துக்களை மறுக்கும் துணிவு தலைதூக்கியுள்ளது. யார் சொல்லுகிறார்கள் என்று பார்க்கும் நிலைமை மாறி, என்ன சொல்லுகிறார்கள் என்று நுணும் நோக்கும் நிலை ஏற்பட்டு வருகிறது.

திறக்குறளுக்கு உள்ள பழைய உரைகளைத் தொகுத்து. உரைவளம், உரைக்கொத்து, உரை வேற்றுமை ஆகிய பயனுள்ள நூல்கள் வெளிவந்துள்ளன. நாலடியார் உரை வளம் ஒன்றும் வெளிவந்துள்ளது. தொல்காப்பிய உரைவளம் வெளிவந்துள்ளது. இவ்வாறே நன்னூல், சிவஞான போதம், சித்தியார் போன்ற நூல்களுக்கும் உரைவளம் வெளிவரவேண்டும். இப்பணியினைப் பல்கலைக் கழகங்களும் தமிழ் வளர்க்கும் நிலையங்களும் மேற்கொள்ள வேண்டும்.

புதிய முயற்சிகள்

இக்காலத்தில் பழம்பெரும் நூல்களுக்கு மிக எளிய உரைகள் எழுதி அவற்றை மக்களிடம் பரப்பும் முயற்சி நடைபெறுகிறது. இம் முயற்சி செயலாக மலர்ந்து பெரிதும் வெற்றி பெற்றுவிட்டது.

பழைய உரைகளைத் திருத்தமாக வெளியிடுதல், உரையில் வழுவுள்ள இடங்களை ஆராய்ந்து உண்மை உரைகாணுதல், சிறந்த பாடம் கண்டு போற்றுதல், உரைக்கு விளக்கம் தரல், கடினமான உரைப் பகுதிக்கு எளிய நடையில் விளக்கம் எழுதுதல் போன்ற நல்ல முயற்சிகள் நடைபெறுகின்றன. மாணவர்க்கு ஏற்ற வகையில் அடிக்குறிப்பும், வினாவிடைகளும் அமைத்துத் தரல் உரையில் வந்துள்ள நயமான பகுதி, உவமைகள், மேற்கோள், பழமொழி ஆகியவற்றைத் திரட்டித் தருதல் போன்ற பயனுள்ள பணிகளும் நடைபெற்று வருகின்றன.

எதையும் எளிதாக விரைவில்பெற நினைக்கும் மக்களின் மனநிலை, பரபரப்பான வாழ்க்கை முறை, ஆழ்ந்து சிந்தித்துத் தெளிய வாய்ப்பில்லாத சுற்றுச் சூழல், பலவேறு செய்திகளையும் அறிந்திருக் வேண்டிய நெருக்கடி ஆகியவற்றை நோக்கும்போது. இக் காலத்துப் புதிய முயற்சிகள் பெரிதும் பயனுள்ளவை என்பது விளங்கும்.

உரை வரலாறும் வளர்ச்சியும்

தமிழ்மொழியில் இலக்கண நூல்களும்' இலக்கிய நூல்களும்: சமய நூல்களும் நிரம்பத் தோன்றியுள்ளன. அவ்வாறே அவற்றை விளக்கம் செய்யும் உரை நூல்களும் நிரம்பத் தோன்றியுள்ளன. தமிழ் இலக்கிய வரலாற்றில் உரைகளுக்கு மிகச் சிறந்த இடம் உண்டு. தமிழ்ப் புலவர் இடைக்காலத்தில் செய்த இலக்கிய ஆராய்ச்சியின் விளை வாகவே பண்டைத் தமிழ் இலக்கண இலக்கிய நூல்களுக்கு உரைகள் தோன்றின, தமிழ் இலக்கண, இலக்கியங்களை ஆராய்வது எவ்வளவு பெரிய முயற்சியோ, அதைப் போன்றதே அவற்றின் உரைகளை ஆராய்வதும். தமிழ்மொழிப் பயிற்சிக்கும் இலக்கிய வளர்ச்சிக்கும் பேருதவி செய்கின்ற வகையில் உரைகள் அமைந்துள்ளன. அத்தகைய உரைகளின் வரலாறு குறித்தும். அவற்றின் வளர்ச்சி குறித்தும் இவ்வியலின்கண் விளக்கப்படுகின்றது.

இவ்வியல் இரண்டு பகுதிகளாக அமைந்துள்ளது. "உரை வரலாறு குறித்து முதல் பகுதியும். 'உரை வகை குறித்து மற்றொரு பகுதியும் ஆராய முற்படுகின்றன.

1. உரை வரலாறு

1. உரை விளக்கம்
2. உரை இல்லாத காலம்
3 வாய்வழி வளர்ந்த உரை
4. உரை அரங்கேற்றம்
5. குறிப்புரை
6. விளக்கவுரை
7. விளக்கவுரைகளின் செல்வாக்கு
8. உரைக்கு உரை
9. செய்யுள் வடிவ உரை
10. நூலாசிரியர் எழுதிய உரை
11.மறுப்புரை
12. வசன நடை
13. உரை எழுதாத காலம்
14. உரைத் தொகுப்பு
15. தெளிவுரைகள்
16. உரைகள் பற்றிய ஆய்வு

உரை விளக்கம்

மூல நூலின் பொருளை விளக்கி உரைப்பது உரை என்று கூறலாம்.

உரை என்பது இருவகைப் பொருளில் ஆளப்படுகிறது. ஒன்று பாட்டுக்குக் கூறப்படும் கருத்து,மற்றொன்று அடிவரை யறைக்கு உட்படாது தொடர்ந்து நடப்பது. ஆயின் காலப் போக்கில் உரை என்பது ஒரு பொருளையும் (உழஅஅநவெயசல) உரைநடை என்பது மற்றொரு பொருளையும் (Prose) குறிக்கத் தொடங்கின"" என்ற கருத்தும் ஈண்டுக் குறிப்பிடற்குரியது. "உரைக்கப் பெறுவதனால் உரையாயிற்று என்கிறார் அ.மு. பரமசிவானந்தம் "குன்றம் குமுறிய உரை எனும் பரிபாடல் பாடலில் "உரை என்பது முழக்கம் என்ற பொருளில் வருகின்றது. "உரைத்தான்" என்ற வினை முற்றிலுள்ள "உரை" என்ற பகுதி "கூறு" என்ற பொருளில் வருகின்றது. உரை என்ற வேர்ச்சொல் ஒலித்தல்.கூறுதல் பேசுதல் என்ற பொருளில் வருகின்றது.எனவே. மூலநூலை விளக்க வந்தவற்றைப் புலப் படுத்தும் நெறியே உரை என்று கூறலாம். மேலும், இலக்கண இலக் கியக் கல்வியில் ஈடுபடும் அறிஞர்களின் எண்ண ஆராய்ச்சியே உரை ஆகும்.

உரை இல்லாத காலம்

முற்காலத்தில் மூல நூல்களே கற்று மகிழும் வண்ணம் இருந்தன. ஆதலால் நூல்களுக்கு உரைகள் தேவைப்படவில்லை.

எழுது கருவிகள் இல்லாமையும் உரை எழுதாமைக்குக் காரணமாக இருக்கலாம். ”உரையின்றிச் சூத்திரத்தானே பொருள் நிகழ்ந்த காலமும் உண்டென்பதாம்” என்றும், ”உதாரணங் காட்டல் வேண்டாமையை உணர்ந்து உரை நடந்த காலமும் உடையவாகும் முற்காலத்து நூல்களென்பது கருத்து” என்றும் தொல்காப்பியப் பொருளதிகார உரையுள் பேராசிரியர் கூறியுள்ளார்.

வாய்வழி வளர்ந்த உரை

கற்றலின் கேட்டலே நன்று என்பது அக்காலத்தவர் கொள் கையாக இருந்தது. நூல்களுக்கு உரை எழுதாமல் அதை வாயினால் விளக்கிச் சொல்ல செவியினால் கேட்கும் வழக்கம் அக்காலத்தில் நிலவி வந்துள்ளது. “இறையனார் களவியல் உரை நக்கீரனார் காலம் தொடங்கி நீலகண்டனார் காலம் வரையில் கர்ண பரம்பரையாக வழங்கிவந்தது. இவ்வாறு ஒன்பது தலைமுறைகள் வாய்மொழியாக வழங்கி வந்த இவ்வுரையானது கி.பி. எட்டாம் நூற்றாண்டளவில் ஏட்டு வடிவில் அமையலாயிற்று. வாய்மொழி வாயிலாக வளர்ந்து வந்த உரை. ஏட்டில் எழுதப்பட்ட பின்னரும் உரையாடுவது போன்ற நிலையிலேயே அமைந்தது. இதனால் வாய்மொழி தன் செல்வாக்கை எழுத்திலும் நிலைநாட்டியது. ஆசிரியர் மாணாக்கர்களுக்குப் பாடம் கூறும் வகையில் வினாவிடை முறையைச் சேனாவரையர் முதலி யோருடைய உரைகளில் காணமுடிகின்றது.

உரை அரங்கேற்றம

இக்காலத்தில் நூல் வெளியீட்டு விழா நடைபெறுவது போன்று அக்காலத்தில் உரை அரங்கேற்றம் நிகழ்ந்திருக்கின்றது. நூலின் அரங்கேற்றத்தால் நூல்களை நுணுகி ஆராயும் முறையும். நூலின் முழுத் தகுதியினைக் காணும் நல்ல ஆராய்ச்சி நெறிமுறையும் அக்காலத்தில் இருந்துள்ளன.

தொல்காப்பியம், திருக்குறள், சிலப்பதிகாரம். மணிமேகலை. சீவகசிந்தாமணி, கம்பராமாயணம் முதலான நூல்களின் அரங்கேற்றம் பற்றிய குறிப்புகள் கிடைத்துள்ளன. சீவகசிந்தாமணிக்கு நச்சினார்க்கினியர் எழுதிய முதல் உரை சமணப் பெரியோர்களால் ஒப்புக் கொள்ளப்படவில்லை என்றும், சமண மரபுகளையும் மெய்ம்மை களையும் நன்கு கற்றபின் அவர் எழுதிய இரண்டாவது உரையே ஏற்றுக்கொள்ளப்பட்டது என்றும் குறிப்பிட்டிருக்கின்றனர். இதன் மூலம் நூல் அரங்கேற்றம்போல் உரை அரங்கேற்றமும் இருந் துள்ளமை குறிப்பிடற்குரியது.

குறிப்புரையும் விளக்கவுரையும்

அக்காலத்தில் எழுதுவதில் இருந்த சிக்கலின் காரணமாக முதலில் உரைகள் குறிப்புரைகளாகவே அமைந்திருந்தன. பின்னரே அவை விளக்கவுரைகளாக விளங்கின. ”விரிவும் விளக்கமும் அமைந்த உரையாக அமையவில்லை. அருஞ்சொற்களுக்குப் பொரு ளும், சொற்களைக் கொண்டு கூட்டி முடிக்கும் முறையும் நினைவிற் காகச் சில வரலாற்றுக் குறிப்புகளையுமே கொண்டு அமைந்தன”“ என்ற இ. சுந்தரமூர்த்தியின் கருத்தும் ஈண்டு ஒப்புநோக்குதற்குரியது.

சிலப்பதிகார அரும்பதவுரை குறிப்புரையாகவே அமைந் துள்ளது. மேலும் ஐங்குறுநூறு. பதிற்றுப்பத்து. பரிபாடல் முதலிய தொகைநூல்களுக்குக் குறிப்புரைகளே முதலில் எழுதப்பட்டுள்ளன. அகநானூற்றின் பழைய உரையும் பொழிப்புரையாக அமைந்து பின்னரே விளக்கவுரையாக அமைந்தது.

கருத்துகளின் வளர்ச்சிக்கேற்ப உரைகளிலும் வளர்ச்சி ஏற்பட்டது. சிலப்பதிகாரத்திற்கு அரும்பதவுரையைத் தொடர்ந்து அடியார்க்கு நல்லாரின் உரை எழுந்தது. இக்கருத்து மேற்கூறப்பட்ட கருத்தை விளக்குவதாய் அமைகின்றது.

”உரையின் வளர்ச்சி மூலபடாம்,சொல்லல், கருத்துரைத்தல் சொல் வருவித்தல், சொற்பொருள் உரைத்தல். பொழிப்பு ரைத்தல், உதாரணங்காட்டல், வினாத்தோற்றல். விடை கொடுத்தல். விசேடங் காட்டல், விரிவு காட்டல். அதிகார வடிவு காட்டல், துணிவு கூறல், பயனொடு படுத்தல் ஆசிரிய வசனம் காட்டல், என்ற பதினான்கு வகைகளாக விரிந்தது என்பதை மயிலைநாதர் உரையால் அறிய முடிகிறது“““

தொல்காப்பியர் காலத்துக்கு முன் இருந்து பின் தோன்றாது நின்ற உரைநடை, சிலப்பதிகார காலத்தில் மறைவாகத் தோன்றி மறுபடியும் சில நூற்றாண்டுகள் கழித்தே வளர்ச்சியுற்றது என்ற அ.மு. பரமசிவானந்தத்தின் கருத்தும் இங்குக் கருதற்குரியது.

விளக்க உரைகளின் செல்வாக்கு

குறிப்பு உரைகளில் காணக்கிடக்கும் கருத்துகளைத் தொகுத்துக் காணும் முயற்சியில் பின்னர் வந்த உரையாசிரியர்கள் ஈடுபட்டனர். இதனால் நல்ல கருத்துக்களை எடுத்துக்கொண்டு தேவை யில்லாத கருத்துகளை விலக்கினர். மேலும் பல கருத்துக்களைச் சேர்த்து உரை எழுத முற்பட்டனர். இத்தகு முறையினால் தோன்றி அவர்கள் எழுதிய விளக்கவுரைகள் செல்வாக்குப் பெற்றன. முன்னே தோன்றிய உரைகள் படிப்பாரற்றுப் போயின' புறக்கணிக்கப்பட்டன. வலிமையுள்ளது காலத்தை வென்று வாழும் என்ற உண்மையை உரைகளின் வரலாறு உணர்த்துகின்றது.

தொல்காப்பியத்திற்கு இளம்பூரணர் எழுதிய உரைக்குப் பின்னர்த்தோன்றிய சேனாவரையர், பேராசிரியர். நச்சினார்க்கினியர் முதலியோரது உரைகள் சிறப்பிடம் பெற்றன. திருவாய்மொழிக்கு 6000 படி. 9000 படி, 24000 படி ஆகியவைகளுக்குப் பின் தோன்றிய 36000 படி, ஈடு என்ற சிறப்புப் பெற்றது. திருக்குறளுக்கு ஒன்பது உரை களுக்குப் பின்னர்த் தோன்றிய பரிமேலழகர் உரை நிலைபெற்றது. மயிலைநாதர், சங்கர நமசிவாயர் ஆகிய இருவர்க்கும் பின் தோன்றிய சிவஞான முனிவர் இயற்றிய நன்னூல் விருத்தியுரை செல்வாக்குப் பெற்றது. சிவஞானபோதத்திற்குப் பல உரைகள் தோன்றிய பின்னர் எழுந்த “சிவஞான பாடியம் சிறப்புப் பெற்றது. இதுபோல் வலிமையுள்ள உரைகள் நிலைத்து வாழ்வு பெறும் என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன.

உரைக்கு உரை

உரைகளின் வரலாற்றை உற்று நோக்குகின்றபோது ஓர் உண்மை புலனாகின்றது. உரையாசிரியர்கள் எழுதிய உரைகள் காலச் சூழலில் பொருள் விளங்காத நிலையை

அடைந்தன. அதனால் மூல நூலுக்கு உரை எழுதியதைப் போன்றே உரைக்கும் உரை எழுத வேண்டிய கட்டாயம் உண்டாயிற்று.

தொல்காப்பிய உரைகளுக்கும். திருக்குறள் பரிமேலழகர் உரைக்கும் நாலாயிரத் திவ்வியப் பிரபந்த வியாக்கியானங்களுக்கும் உரை விளக்கங்கள் தோன்றியுள்ளன.

பரிமேலழகர் உரைக்கு விளக்கம் தரும் வகையில் திருமேனி காரி இரத்தின கவிராயர் "நுண்பொருள்மாலை" என்ற ஒன்றை எழுதி யுள்ளார். மேலும் அவரே "தொல்காப்பிய நுண்பொருள்மாலை என்ற நூலையும் எழுதியுள்ளார் என்பர். அந்நூல் இன்று கிடைக்கப் பெறவில்லை.

"பரிமேலழகர் விளக்கிய சொற்பொருள்களுக்கு மேலும் கருத்து விளக்கம் தந்து, அவர்தம் உள்ளக் கிடக்கையை வெளிப்படுத்தும் வகையில் அமைந்த தம் உரைக் குறிப்பிற்குக் கவிராயர் "நுண்பொருள்மாலை" எனப் பெயர் சூட்டியது மிகப் பொருத்தமாகும்" என்ற மு.சண்முகம்பிள்ளையின் கருத்தும் இங்குக் குறிப்பிடத்தக்கது.

காரி இரத்தின கவிராயர் போன்றே சரவணப்பெருமாள் ஐயர், முருகேச முதலியார். இராமாநுசாசாரியார். குப்புசாமி முதலியார் முதலியோர் பழிமேலழகர் உரைக்கு விளக்கவுரை எழுதியுள்ளனர். தொல்காப்பிய உரைகளுக்கும் இத்தகைய உரை விளக்கங்கள் தோன்றியுள்ளன.மயிலம் சிவலிங்கனார். அடிகள் ஆசிரியர் ஆகியோர் இளம்பூரணர் எழுத்ததிகார உரைக்கு விளக்கவுரை எழுதியுள்ளனர்.

செய்யுள் வடிவ உரை

உரைநடை வடிவத்தில் மட்டுமின்றி, செய்யுள் வடிவத்தில் சில உரைநூல்கள் தோன்றியுள்ளன. எந்த ஒரு மொழியும் முதன் முதலில் எழுத்து வடிவம் பெற்றபோது செய்யுள் வடிவத்திலேயே இருந்தது என்பர் மொழியியல் அறிஞர்கள். உரைநடையைக் காட்டி லும் செய்யுள் வடிவத்திற்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு.

"ஒரு செய்யுள் நூலுக்கு வசனத்தில் உரை இயற்றுவதோடு செய்யுள் உருவத்திலேயே உரை இயற்றுவதும் உண்டு. இது வடமொழியில் பெருவழக்கு. தமிழ் நூல்களிலும் சிவஞான போதத்துக்குரிய உதாரண வெண்பாக்களும், சித்தியார் முதலியனவும் உரைநிலையிலேயே உள்ளன. தேவாராப் பதிகங்களில் பாசுரம் முதலிய சிலவற்றிற்குப் பெரிய புராணத்தில் சேக்கிழார் உரை விரித்துச் சொல்கின்றார். இவற்றைப் போலவே திருக்குறளுக்கும் செய்யுள் உருவத் தில் உரையுண்டு. தனியே குறளுரை என்னும் பெயர் பெறா விட்டாலும் அவை உரைகளின் தன்மையை உடையனவே"" என்ற உ.வே.சாமிநாத ஐயரின் கருத்து, செய்யுள் வடிவ உரைகளைப் பற்றி அறிந்துகொள்ளத் துணை நிற்கின்றது.

அகநானூற்று உரைச்சிறப்புப் பாயிரத்தின் மூலம் அந் நூலுக்குப் பழங்காலத்தில் அகவற்பாக்களால் ஆன உரை இருந்த மையை அறிய முடிகின்றது. இரங்கேச வெண்பா, சிவசிவ வெண்பா. தினகர வெண்பா, வடமலை வெண்பா, சோமேசர் முதுமொழி வெண்பா முதலியன திருக்குறளுக்கு எடுத்துக்காட்டுக் கூறும் நூல்கள். மேலும், சினேந்திர வெண்பா, திருமலை வெண்பா, முதுமொழி மேல் வைப்பு. திருப்புல்லாணி மாலை, திருத்தொண்டர்

மாலை, வள்ளுவர் நேரிசை முருகேசர் முதுநெறி வெண்பா, திருக்குறட் குமரேச வெண்பா ஆகிய நூல்கள் திருக்குறளுக்கு எடுத்துக்காட்டுக் கூறும் வகையில் எழுந்துள்ளன. குமரகுருபரரின் "நீதிநெறி விளக்கமும் திருக்குறள் கருத்தைச் சுருங்கிய வடிவில் தரும் நூலாகும். முற்கூறிய நூல்கள் யாவும் திருக்குறளின் உரைநூல்கள் என்று குறிப்பிடத்தக்கன. அண்மைக்காலத்தில், திருக்குறள் அகவல், குட்டிக் குறள் திருக்குறள் இசைமாலை ஆகியனவும் செய்யுள் வடிவில் திருக்குறளுக்கு உரைநூல்களாகத் தோன்றியுள்ளன.

திருக்கோவையாரில் உள்ள நூறு பாடல்களின் பொருளை அகவற்பாவில் அமைத்துக் கல்லாடர் "கல்லாடம் என்ற நூலை இயற்றியுள்ளார். ஆண்டிப் புலவர் நன்னூலுக்கு விருத்தப்பாவில் உரை எழுதியுள்ளார். குருஞான சம்பந்தர் "ஞானாவரண விளக்கம் என்னும் தலைப்பில் சிவஞான சித்தியாரின் சூத்திரக் கருத்துகளைச் செய்யுளில் விளக்கியுள்ளார்.

செய்யுள் வடிவில் உரை எழுதும் வழக்கம் இருபதாம் நூற் றாண்டிலும் இருந்து வருகின்றது. குறுந்தொகைப் பாடல்கள் சில வற்றிற்குப் பாரதிதாசன் அகவற்பாக்களில் விளக்கம் தந்துள்ளார். முத்தொள்ளாயிர வெண்பாக்கள் சிலவற்றிற்குக் கண்ணதாசன் அகவலில் விளக்கவுரை செய்துள்ளார்.

நூலாசிரியர் எழுதிய உரை

ஒரு நூலுக்கு. நூலாசிரியருக்குப் பின் வந்தவர்கள் உரை எழுதினர். இதற்கு மாறாக, நூல் எழுதிய நூலாசிரியரே உரை எழுதும் வழக்கம் ஏற்பட்டது. இவ்வழக்கம் வடமொழியாளரைப் பின்பற்றித் தோன்றியதாகும். இதனைப் "பிரயோக விவேகம். "வடநூலார் தாமே பதிகமும் உரையும் செய்வர் என்று கூறுகின்றது.

தமிழ்மொழியில் முதன்முதலில் நூலாசிரியரே உரை எழுதும் வழக்கத்திற்கு அடிகோலியவர் 'புறப்பொருள் வெண்பா மாலை இயற்றிய ஐயனாரிதனார் ஆவார். அவர் புறப்பொருள் இலக்கணத்தைக் கூறும் சூத்திரங்கள் இயற்றி, அவற்றின் கீழே துறைகளை விளக்கும் கொளுக்களை அமைத்து, ஒவ்வொரு துறையினையும் விளக்கும் வெண்பா ஒன்றினையும் புனைந்துள்ளார். அவர்தாம் வகுத்த புறப்பொருள் இலக்கணத்திற்குத் தாமே மேற்கோள்களையும் இயற்றினார்.

அவ்வாறே, தண்டியாசிரியர் பல அணிகளுக்கு ஏற்ற எடுத்துக்காட்டுச் செய்யுட்கள் எழுதியமையும். மெய்கண்ட தேவர் தம்முடைய சிவஞான போதத்திற்குப் பொழிப்புரை எழுதியமையும். அகப்பெருள் விளக்கத்தின் ஆசிரியரான நாற்கவிராச நம்பி தாமே அதற்கு உரை எழுதியமையும் இங்குக் குறிப்பிடற்குரியது.

சுப்பிரமணிய தேசிகர், வைத்தியநாத தேசிகர். சாமிநாத தேசிகர், வீரமாமுனிவர் ஆகிய நால்வரும் முறையே தத்தம் நூல் களான பிரயோக விவேகம், இலக்கண விளக்கம், இலக்கணக்கொத்து. தொன்னூல் விளக்கம் ஆகிய வற்றிற்குத் தாமே உரை எழுதியுள்ளனர். இருபதாம் நூற்றாண்டிலும், "பாரிகாதை" இயற்றிய "இராகவையங்கார். "குமரேச வெண்பா இயற்றிய "செகவீர பாண்டியனார்". "புதிய ஆத்திசூடி" இயற்றிய "பாரதிதாசன் ஆகியோர் தத்தம் நூல்களுக்குத் தாமே உரைகளையும் எழுதியுள்ளனர்.

““நூலாசிரியர் தம் நூலுக்குத் தாமே உரை எழுதியதற்குச் சில காரணங்கள் உள்ளன. ஒரு நூலுக்குப் பல உரைகள் தோன்றி யும் அந்நூலின் கருத்து நன்கு விளங்காமல் இருந்த நிலை யைக் கண்ட புலவர்கள், தம் நூலுக்குத் தாமே உரை இயற்றி னர். நூலாசிரியர்கள் தம் காலத்திலேயே தாம் இயற்றிய நூல்கள் தவறாக உரைப்பட்டதைக் கண்டு நூலாசிரியர்களே தம் நூலுக்கு உரையையும் இயற்றினார்““ என்பார் மு.வை.அரவிந்தன்.

““தமிழ் மரபுப்படி நூல் எழுதுபவரே உரை எழுதும் வழக்கம் இல்லை. “உரைகாரர் என்றே தனியாக வேறு ஒருவர் இருப்பதைக் காண்கிறோம். தொல்காப்பியம் முதலிய பேரி லக்கண நூல்களுக்கும், பத்துப்பாட்டு போன்ற பேரிலக்கிய நூல்களுக்கும் அவற்றின் ஆசிரியர்களே உரை எழுதிவிட்டி ருப்பார்களாயின், பின்னால் இத்தனை உரைநூல்கள் தோன்றி யிரா. அத்துடன் புதுப் புதுக் கருத்துக்கள் காலத்துக்கு ஏற்ப மாற்றமும் ஏற்றமும் பெற்றுக் காட்டக் கூடிய நிலையில் அமையா““

என்ற அ.மு. பரமசிவானந்தத்தின் கருத்து ஈண்டு நினைவுகூரத் தக்கது.

மறுப்புரை

மறுப்புகள் வருகின்றபோதுதான் கருத்துக்கள் சிறக்கும். இக் கருத்திற்கேற்பத் தமிழ் உரையாசிரியர்கள் ஒருவருடைய கருத்தை மற்றொருவர் மறுத்து உரை எழுதியுள்ளமையைக் காணமுடிகின்றது. சில இடங்களில் சில கருத்துகளை மறுப்பதுண்டு. ஆனால் ஒரு நூலையே மறுத்து ஓர் உரை தோன்றியுள்ளது.

திருவாரூர் வைத்தியநாத தேசிகர் எழுதிய “இலக்கண விளக்கம் என்னும் நூலை மறுத்து, சிவஞான முனிவர். “இலக்கண விளக்கச் சூறாவளி என்னும் பெயரில் ஒரு நூலை இயற்றியுள்ளார்.

வசன நடை

சிறிதளவு கல்வியுடையவரும்’ எழுதப் படிக்கத் தெரிந்த வரும்: பழஞ்செய்யுட்களைக் கற்று இன்புற இயலாதவர்களும் பயன டையும் வகையில் 19ஆம் நூற்றாண்டில் வசனநடை தோன்றிற்று. இராமாயணம், பாரதம், பெரியபுராணம், கந்த புராணம் முதலிய புராண இதிகாசங்களைப் பொது மக்களிடையே பரப்பும் முயற்சியில் ஈடுபட்டவர்கள் வசன நூல்களை இயற்றினர்.

யாழ்ப்பாணத்துத் தமிழறிஞர் ந.சி. கந்தையா பிள்ளை எட்டுத் தொகை, பத்துப்பாட்டுக்கு வசனம் எழுதிப் படிப்போர் எண்ணிக் கையை உயர்த்தினார்.

உரை எழுதாத காலம்

பக்தி இலக்கியங்களுக்கு உரை எழுதக் கூடாது என்ற கொள்கை தமிழகத்தில் நிலவியிருந்த காலமும் உண்டு.

”ஆழ்வார்கள் அருளிய பக்திப் பாடல்களுக்கு உரை எழு தும் முயற்சி தோன்றியபோது. அக்காலத்தில் இருந்த வைண வப் பெரியோர்கள் அம்முயற்சியைக் கண்டித்தனர்’ தடுத்த னர். இருப்பினும், மக்களிடையே வைணவச் சான்றோர்கள் பக்திப்

பாடல்களுக்குக் கூறிவந்த விளக்கங்களைத் தாம் கேட்டவாறே கால் கொம்பு சுழி ஏறாமல்“ எழுதி வைத்தனர். இவ்வாறு வைணவ நூல்களுக்கு உரையும் விளக்கமும் வாய்த்து விட்டன”

அடியவர்கள் பாடியருளிய பக்திப் பாடல்களுக்கு உரை எழுதக்கூடாது என்ற நிலை சைவ சமய இலக்கியங்கட்கும் இருந்து வந்தது. இருபதாம் நூற்றாண்டில் பக்திப் பாடல்களைப் பொருள் அறிந்து அனைவரும் படித்துப் பயன்பெற வேண்டும் என்ற நல்லுணர்வில் திருமுறைகள் பலவற்றிற்கு உரைகள் தோன்றின.

உரைத் தொகுப்பு

ஒரு நூலுக்கே பலர் எழுதிய உரைகளையும் தொகுத்துக் காணும் முயற்சி பிற்காலத்தில் உண்டாகியது.இதனால் திருக்குறள் உரைக்கொத்து, திருக்குறள் உரைவளம், திருக்குறள் உரை வேற்றுமை என்னும் சிறந்த நூல்கள் வெளிவந்துள்ளன. “நாலடியார் உரைவளம் என்ற நூலைத் தஞ்சை சரசுவதி மஹால் நூலகம் வெளியிட்டுள்ளது. தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் ஆகிய மூன்று பகுதிகளுக்கும் தனித்தனியே உரைத்தொகுப்பு நூல்கள் வெளி வந்துள்ளன. மேலும், “தொல்காப்பியப் பொருளதிகார உரைவளம் என்ற நூலை மதுரை காமராசர் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ளது.

தெளிவுரைகள்

எளிய முறையில் தெளிவுரை எழுதி எளிய மக்கட்குப் புரியும் படி முனைந்தவர் மு. வரதராசன். தெளிவுரை எழுதும் முயற்சிக்கு வித்திட்டவரும் அவரே. எனவே,அவரைத் “தெளிவுரையின் முன்னோடி“ என்று குறிப்பிடலாம். மு.வ. வின் திருக்குறள் தெளிவுரை எழுபது பதிப்புகளுக்குமேல் வந்துள்ளது. அண்மையில் சுப்புரெட்டியார். எம்.ஆர். அடைக்கலசாமி ஆகியோர் திருக்குறளுக்குத் தெளிவுரை எழுதியுள்ளனர். கு. மோகனராசு திருக்குறளுக்குத் தெளி வுரை எழுதி மலிவுப் பதிப்பாக வெளியிட்டுள்ளமையும் ஈண்டுக் குறிப்பிடத் தக்கது. புலியூர்க்கேசிகன், அருள்சாமி போன்றோர் தெளிவுரை எழுதும் பணியில் ஈடுபட்டுப் பழந்தமிழ் இலக்கியங்களின் மாண்பினை மக்களிடையே சிறப்புறச் செய்தனர்.

உரைகள் பற்றிய ஆய்வு

தமிழில் இலக்கண, இலக்கியங்களை ஆராய்வது எவ்வளவு பெரிய முயற்சியோ அதைப் போன்றதே அவற்றின் உரைகளை ஆராய்வதும். உரைகளைப் பற்றிய ஆராய்ச்சியும், உரையாசிரியர் களைப் பற்றிய ஆராய்ச்சியும் பல்வேறு கோணங்களில் நிகழ்த்தியும் நிகழ்த்தப்பட்டும் வருகின்றன.

உரைகளைப் பற்றிய ஆய்வு முயற்சிக்குக் கால்கோள் இட்ட பெருமை மு.வை. அரவிந்தனையே சாரும். அவரைத் தொடர்ந்து “நச்சினார்க்கினியர் குறித்து மு. அண்ணாமலையும், “அடியார்க்கு நல்லார் உரைத்திறன் குறித்து ச.வே. சுப்பிரமணியனும், இளம்பூரணா குறித்து மு. அருணாசலமும். தெய்வச்சிலையார் உரைத்திறன் குறித்து சோ.ந. கந்தசாமியும், திருக்குறள் உரைகளில் பரிமேலழகரின் உரைத்திறன் குறித்து இ. சுந்தரமூர்த்தியும். சிவஞான முனிவரின் உரைத்திறன் குறித்து விநாயகமும் நிகழ்த்தியுள்ள ஆய்வுகள் குறிப்பிடத்தக்கவையாகும்.

உ.வே. சாமிநாத ஐயர், பண்டிதமணி மு. கதிரேசனார் பேராசிரியர் அ.மு. பரமசிவானந்தம், எஸ். வையாபுரிப்பிள்ளை, வ.சுப மாணிக்கம் முதலானோர் தம்முடைய நூல்களில் உரையாசிரியர் களைப் பற்றிய செய்திகளை எழுதியுள்ளனர்.

எதிர்காலத்தில் உரைகளைப் பற்றியும், உரையாசிரியர்களைப் பற்றியும் புதிய அணுகுமுறையில் ஆய்வுகள் நிகழ்த்தித் தமிழாய் வினைச் சிறப்படையச் செய்வர்.

2. உரையாசிரியர்கள்

காலந்தோறும் மிகப்பலர், இலக்கிய இலக்கண நூல்களைக் சுற்பதில் மிகுந்த ஆர்வமுடையோராய் இருந்திருக்கின்றனர்: புலமை விருந்து நாடிப் புதுப்புது நூல்களைத் தேடி நுகர்ந்திருக்கின்றனர் அறிதோறும் அறியாமை கண்டும் நவில் தொறும் நூல் நயத்தில் திளைத்தும் தம்மை மறந்திருக்கின்றனர் கருத்துகளைச் சமன் செய்து சீர்தூக்கி ஆராய்ந்திருக்கின்றனர். ஆனால் அவர்களில் பலர், தம் அனுபவங்களை வைக்கவில்லை இலக்கியச் ளை எழுதி வெளிப்படுத்தி சுவையை நூலியற்றவில்லை ஆராய்ச்சிக்கு வடிவம் தரவில்லை. சிலர் மட்டுமே புலமை உலகில் தமக்கு ஏற்பட்ட இன்ப அனுபவங்களை எழுதி வைத்தனர் இலக்கியச் சுவையை வெளிப்படுத்தி நூலியற்றினர் தம் ஆராய்ச்சிக்கு வடிவம் தந்தனர். இரண்டாம் வகையினரே உரையாசிரியர்கள்.

”இவ்வுலகில் முழுமை அடைந்தவர்கள் இரு வகையினர் ஆவர். உண்மையை அறிந்து பின் பிறரைப் பற்றிய சிந்தனை யில்லாமல் தாம் மட்டும் அவ்வுண்மையை நுகர்ந்து கொண்டு வாளா இருப்பவர் ஒரு சாரார். அறியப் பெற்ற உண்மையைத் தாம் மட்டும் நுகர்வதில் மகிழ்வடையாமல், “எம்மோடு உண்மையை அனுபவிக்க வாருங்கள்“ என்று மற்றவரையும் கூவி அழைக்கும் இயல்புடையோர் இன்னொரு சாரார்” என்று இராமகிரு‘ண பரமஹம்சர் கூறியுள்ள கருத்து இங்கே நினைவுக்கு வருகின்றது.. **வாழ்க்கை விளக்கு - பக்.67,68. டாக்டர் கு. தாமோதரன்.**

உரையாசிரியர்கள், “யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்“ என்று உலக மக்களை அறைகூவி அழைத்துப் புலமை விருந்தளித்த நல்லவர்கள் அறிவுச் செல்வத்தை அள்ளிச் சொரிந்த வள்ளல்கள் கல்விக் கோயிலின் பெருவாயிலைத் திறந்துவிட்ட மேலோர்கள்.

பொலியக் கோத்த புலமை

இளங்கோவடிகள் (அரங்கேற்று காதையில் யாழாசிரியனை,

பொலியக் கோத்த புலமையோன் என்று குறிப்பிடுகின்றார் “பொலியக் கோத்த புலமை“ என்னும் அழகிய தொடர் சிந்தனைக்கு விருந்தாய் அமைகின்றது.

உரையாசிரியர்கள் அனைவரும் பொலியக்கோத் புலமையாளர்கள், அவர்கள் தம் நூல்கள் பலவற்றைத் தேடிக்கற்பதிலும் அவற்றின் பொருளைத் தம் வாழ்நாளின் முற்பகுதியை நல்லு புலமை பின், தம் வாழ்நாளின் பிற்பகுதியில், சிறந்த நூல் ஒன்றைத் தேர்த் தெடுத்துக் கொண்டு அதற்கு ஒப்பற்ற உரை காண்பதில் ஈடுபட்டுத் தொண்டு புரிந்து தம் வாழ்நாளைப் பயனுள்ள முறையில் கழித்தனர்.

”ஒரு நூலின் கருத்தையோ பாட்டின் பொருளையோ காண்பதற்குப் பல அறிவுக்கூறுகள் வேண்டும். இது இன்ன காலத்துத் தோன்றிய நூல் என்ற கால அறிவும், இக்காலத்து இச் சொல்லுக்கு இப் பொருள் என்ற சொல்லறிவும், இன்ன காலத்து இருந்த பழக்க வழக்கங்கள் இவை என்ற சமுதாய அறிவும் இத்தொடர் ஒடிக்கிடக்கும் முறை இது என்ற நடையறிவும், இன்ன பிறவும் இருந்தால்தான் பொருளை முரணின்றிக் காண முடியும்.”, **டாக்டர் வ.சுப. மாணிக்கம் சிந்தனைக் களங்கள் (1975) பக். 313**

இத்தகைய பல துறை அறிவுக்கூறுகள், எல்லா உரை யாசிரியர்களிடமும் உள்ளன. அவர்களின் பல்கலைப் புலமை, அகராதிக் கலையாக-இலக்கண ஆராய்ச்சியாக-இலக்கியச் சுவையாக- திருத்தமான பாடங்காணும் திறனாய்வாக- சமயக் கருத்தாக-வாய்மொழி இலக்கிய ஊற்றாக-நாகரிகம் பண்பாடு பழக்க வழக்கம் ஆகியவற்றை வெளிப்படுத்தும் காலத்தின் குரலாக- போலி உரைக்கு எதிர்ப்புக் குரலாக-நாட்டு வரலாறாக வெளிப்படுகின்றது.

வானவில்

பலவகையான வண்ணங்கள் வானவில்லில் அமைந்து, காணும்தோறும் களிப்பூட்டுவதுபோல், உரையாசிரியர்களிடம் உள்ள பலவகையான புலமைத் திறன்கள் நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றன. உரையாசிரியர்களில் சிலர் நூலாசிரியராய் இருந்தனர் கற்பிக்கும் நல்லாசிரியராய் விளங்கினர் அறிவுக் கொடை வழங்கிய ஞான ஆசிரியராய்த் திகழ்ந்தனர் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை சேக்கிழாரை,

நாடிய விரிநூல் சொற்றிடு திறனால்

நன் நூலா சிரியன்
நகுபாசுர முதல் உரை செய்தலினால்
நவில் உரை யாசிரியன்
நீடிய பரசம யக்குழி வீழ்ந்தவர்
நீப்பப் போதனைசெய்
நிலையாற் போத காசிரியன் இவை
நிகழ்தொறும் நிகழ்தொறும்
ஆடிய ஞானத் திறன் உறலான்
ஞானா சிரியனும் நீ!. (சேக்கிழார் பிள்ளைத் தமிழ் சப்பாணிப் பருவம், 9.)

என்று போற்றுகின்றார். சிவஞான முனிவரும் இத்தகைய பாராட்டுதலுக்கு உரியவர்.

இருபதாம் நூற்றாண்டு உரையாசிரியர்களில் பலர் பதிப்பாசிரியராய் கற்பிக்கும் நல்லாசிரியராய் திறனாய் வாளராய் விளங்கினர். பட்டை தீட்டிய வைரம் போல், அவர்கள் பல வேறு திறன்களை வெளிப்படுத்தி ஒளிவீசுகின்றனர் ஐந்து உலோகத்தால் ஆன கலைத்திறன் வாய்ந்த சிலைகளைப் போல் அவர்கள் பளிச்சிடுகின்றனர். ஒவ்வோர் உரையாசிரியரும்,

தமிழே, நீ ஓர்
பூக்காடு ! நான் ஓர் தும்பி !

என்று வியந்து பாடிக் கொண்டே, தமிழ்ச் சோலைக்குள் புகுந்து இலக்கியத்தேன் நுகர்ந்து, தேனைத் திரட்டித் தந்துள்ளார்.

பரஞ்சோதியார், தென்றலுக்கு அறிஞரை உவமைகூறுகின்றார்:

பொங்கரின் நுழைந்து, வாவி
புகுந்து, பங்கயம் துழாவி,
பைங்கடி மயிலை முல்லை
மல்லிகைப் பந்தர் தாவி,
கொங்கலர் மணம்கூட் டுண்டு,
குளிர்ந்து மெல்லென்று தென்றல்
அங்கங்கே கலைகள் தேரும்
அறிவன்போல் இயங்கும் அன்றே.

எங்கெங்கே சென்றாலும், அங்கங்கே கலைகளை ஆராய்கின்ற அறிஞரைப்போல் தென்றல்,சோலைக்குள் புகுந்து தாமரைத் தடாகத்தில் படிந்து பூப்பந்தர்தோறும் நுழைந்து தேனும் மணமும் நுகர்ந்து குளிர்ந்து மெல்லென்று வீசுவதாய்ப் பரஞ்சோதியார் பாடுகின்றார். ஒவ்வோர் உரையாசிரியரும் அங்கங்கே கலைகள் தேரும் அறிவனாய் விளங்குகின்றார்.

தமிழ்மீட்சி இயக்கம்

உரையாசிரியர்கள் தோன்றிய இடைக்காலத்தின் நிலைமையைத் தமிழறிஞர் பின்வருமாறு கூறுகின்றார்: எஸ். வையாபுரிப் பிள்ளை

”சங்க காலத் தமிழ் வழக்கு நின்றுபோய் வெகுகாலமாகி தெளிவு நேர்மை முதலிய பண்புகள் யாவும் பெரும்பான்மை இலக்கியங் களின்றும் நீங்கிப் பல நூற்றாண்டுகள் கழிந்து விட்டன. இடைக் காலத் தமிழ் பிறந்து வடமொழிச் சொற்களும் வடமொழிக் காவிய மரபுகளும் தமிழிற் குடிபுகுந்தன. பலவேறு நல்லியல்பு களும் தமிழில் வந்து அமைந்தன. ஆனால் அவற்றோடு சில தீய தன்மைகளும் புகுந்துவிட்டன. சுருக்கம் நேர்மை என்ற இயல்புகள் இரண்டும் ஒழிந்து போயின் அலங்காரங்களும் ஆடம்பரங்களும் தலையோங்கிவிட்டன. வடசொற்கள் பெரும்பான்மை விரவித் தமிழ்ச் சொற்கள் சிறுகி வரத்தொடங்கின. இதனால் தமிழுக்கு இயற்கையாய் அமைந் திருந்த ஆற்றல் சிறுகலாயிற்று. நூற்பொருள் பெரும்பாலும் வடமொழிக்கு உரியனவாய் முடிந்தன. இதனால் தமிழ்க் கவிஞர்களின் புதுவது இயற்றும் ஆற்றல் தடைபட்டுப்போயிற்று.” (**தமிழ்ச் சுடர்மணிகள் (1968) பக். 197, 198.)**

இத்தகைய நெருக்கடியான நிலையை - தெளிவில்லாத காலத்தை உரையாசிரியர்கள் மாற்றிப் பழந்தமிழை மீட்டனர் என்பதைப் பிள்ளையவர்கள் கீழே உள்ளவாறு விளக்கு கின்றார்கள்:

”அக்காலத்துக் கல்வியாளர் சிலர், இந் நிலைமைக்கு வருந்தினர். தமிழின் பண்டை நிலையை உன்னியுன்னி அந்நிலையைத் திரும்ப எய்துதல் கூடுமா என்று கருதலாயினர். சங்கத் தமிழின்மீதும், அதன் நன்முறையைக் கைப்பற்றிய பெருநூல்களின்மீதும் பொதுமக்கள்

பற்றுக்கொண்டு கற்கும் படி செய்யவேண்டுமென்று எண்ணினர். அவற்றின் நல்லியல்புகள் தமிழில் மீண்டும் தழைக்க வேண்டுமென்று கருதினர். இந் நோக்கங்களைக்கொண்டு கல்வியில் தலைசிறந்தோர் சிலர் உழைத்து வந்தனர். சங்கத் தமிழுக்கு மீட்சியியக்கம் நிகழ்வதாயிற்று இம் மீட்சி யியக்கத்திற்கு ஓர் அறிகுறியாகச் சங்க இலக்கியங்களுக்கும் அவற்றோடொத்த பெருமையுடைய குறள் போன்ற பெருநூல்களுக்கும் செவ்விய உரைகள் எழுதப்பட்டன." **(தமிழ்ச்சுடர் மணிகள் - (1968) பக். 197,198.)**

இவ்வாறு உரையாசிரியர்கள் தோற்றுவித்த பழந்தமிழ் மீட்சியியக்கம் "தமிழ்ப் பண்பாட்டுக் காப்பகம்" ஆயிற்று தமிழ்ச் சிந்தனையின் பிறப்பிடம் ஆயிற்று புது இலக்கியம் தோற்றுவிக்கும் மறுமலர்ச்சி இயக்கம் ஆயிற்று உறங்கிக் கிடந்த தமிழினத்தைத் தட்டி எழுப்பும் வீர முழக்கமாயிற்று.

கி.பி. 9-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதிக்கும் 12-ஆம் நூற்றாண்டின் முற்பகுதிக்கும் இடைப்பட்ட காலமே உரை யாசிரியர்கள் காலம். இந்த முந்நூறு ஆண்டுக் காலத்தில், குறிப்பிடத்தக்க புதிய இலக்கண நூலோ அரிய அரி இலக்கியப் படைப்போ எதுவும் தோன்றவில்லை. இக் காலத்தில் தோன்றியவை எல்லாம் உரைகளே தொல்காப்பியம் சங்க இலக்கியம் திருக்குறள் சிலப்பதிகாரம் திருவாய்மொழி ஆகியவற்றிற்குக் குறிப்புரை எழுதினர் சிலர் பொழிப்புரை எழுதினர் சிலர் விளக்கவுரை எழுதினர் சிலர் பேருரை கண்டனர் சிலர். இதனால் பழமை புதுமை பெற்றது மறைந்த பழந்தமிழ் மீட்சி பெற்றது.

தொண்டர் திருக்கூட்டம்

உரையாசிரியர்கள், தமிழ்மொழிக்குச் செய்துள்ள தொண்டு மலையினும் மாணப் பெரிது. தமிழகம், வேற்று இனத்தவர் படை யெடுப்பால் தாக்குண்டு அதிர்ந்து, நிலைகுலைந்து, தமிழ்மக்கள் தம் பண்பாட்டை மறந்த போதெல்லாம் பழம்பெரும் இலக்கியச் செல்வங்களை எடுத்துக்காட்டி விளக்கி, தமிழ்மரபை வாழச் செய்த பெருமை உரையாசிரியர்களுக்கு உண்டு. வேற்றுமொழியும் நாகரிகமும் தமிழ்மண்ணில் புகுந்து, கால் கொண்டு தமிழ்ப்பண்பை மறக்கச் செய்த போதெல்லாம் உரை யாசிரியர்கள், தமிழ்ப்பண்பை நினைவூட்டி, தமிழ் மக்களைத் தடுத்து ஆட்கொண்டனர். தமிழ்மொழியின் காலங் கடந்த வாழ்விற்கும் வெற்றிக்கும் காரணமாய் இருப்பவர்கள் உரையாசிரியர்களே. இலக்கணக் கொள்கைகளை விளக்கி மொழியை வரம்புகட்டிக் காத்தும், இலக்கியக் கருத்துக்களை விளக்கிக் காலந்தோறும் பண்பாட்டை வளர்த்தும் தமிழினத் திற்குத் தொண்டு செய்த பெருமை உரையாசிரியர்களையே சாரும்.

டாக்டர் வ. சுப. மாணிக்கம், "உரைவகை ஒரு முயற்சி சார்பிலக்கண நூல்வகை ஒருமுயற்சி, இலக்கிய வகை ஒரு முயற்சி இம் மூவகை முயற்சியாலும் தொன்னூல்கள் இடை காலத்துப்பரவின் படிக்கப்பெற்றன" என்று உரையாசிரியர்களின் தமிழ்த் தொண்டை நினைவுபடுத்தியுள்ளார். (**எந்தச் சிலம்பு, பக்கம் 77 (1964)**

எழுத்தறியத் தீரும் இழிதகைமை தீர்ந்தான்
மொழித்திறத்தின் முட்டறுப்பான் ஆகும் மொழித்திறத்தில்

முட்டறுத்த நல்லோன் முதல்நூற் பொருள்உணர்ந்து
சுட்டறுத்து வீடு பெறும்

என்று மக்களுக்கு அறிவுரை கூறி உரையாசிரியர்கள் இடை விடாது பழந்தமிழ் நூல்களைப் பரப்பி வந்தனர்.

குமரகுருபரர், பாட்டும் பாட்டின் பொருளும், பொருளால் பெறும் பயனும் தமக்கு நல்கும்படி கலைமகளை வேண்டு கின்றார்:

பாட்டும் பொருளும் பொருளால்
பொருந்தும் பயனும்என்பால்
கூட்டும் படிநின் கடைக்கண்நல்
காய்,உளம் கொண்டுதொண்டர்
தீட்டும் கலைத்தமிழ்த் தீம்பால்
அமுதம் தெளிக்கும்வண்ணம்
காட்டும்வெள் ளோதிமப் பேடே!
சகல கலாவல்லியே (சகலகலாவல்லி மாலை -7

என்ற பாட்டில், பாட்டிற்குரிய பெருமையை அதன் பொருள் உணர்ச்சிக்கும், பொருளால்பெறும் பயனுக்கும் அவர் அளித்துள்ளார். ஆதலின், ஒருவர் பாட்டை அறிவதோடு நில்லாமல், அதன்பொருளை அறிந்து மகிழவேண்டும் பொருளின் பயனைப்பெற வேண்டும் என்பது விளங்குகின்றது.

இருட்டறையில் உள்ள எழில்மிக்க ஓவியத்தைக் காணக் கண்கள் மட்டும் இருந்தால் பயனில்லை. இருளைப் போக்கும் ஒளி வேண்டும். பழம் பொருட்காட்சிச் சாலையில் உள்ள பலவகையான கலைச் செல்வங்களைக் கண்டுகளிக்க அவற்றைப் பற்றிய விளக்கவுரை வேண்டும். இனிய பலாப் பழத்தைச் சுவைத்து மகிழ, அதனை முறையாக அறுத்துச் சுளை எடுத்துத் தருபவரின் உதவி வேண்டும். இவ்வாறே பழம்பெரும் இலக்கண இலக்கியச் செல்வங்களைக் கற்று மகிழ்வதற்குத் தக்க உரையாசிரியர்கள் வேண்டும். காட்டுவித்தால் அன்றி அவற்றைக் காண இயலாது.

காட்டுவித்தால் ஆர் ஒருவர் காணாதாரே“ என்று அப்பர் கூறி இருப்பதுபோல, அரிய பொருள்களைக் காட்டுவிப்போர் துணையின்றிக் காண முடியாது.

உரையாசிரியர் செய்யும் உதவியை,
கண்ணைக் கெடுப்பர் கவிராயர் அக்கண்ணை
எண்ணி உரைகாரர் ஈவாரே-மண்ணுலகில்
ஆக்கு பவரோ, அழிப்பவரோ மேலாவார்?
நோக்கிநீ உண்மை நுவல்

என்ற வெண்பாவில் நயம்படக் கவிமணி உரைக்கின்றார்.

கவிஞர்கள் தம் பாடலில், “கண்“ முதலிய வேற்றுமை உருபுகளை விரிக்காமல் இருப்பர். அதனால் கற்போர் பொருள் விளங்காமல் இடர்ப்படுவர் உரையாசிரியர்கள் அவற்றை விளக்குவர். இதுவே கவிமணி பாடலின் கருத்தாகும். திருக் குறளில்,

காலத்தினாற் செய்த நன்றி

என்பதற்குப் பரிமேலழகர், "ஒருவனுக்கு இறுதி வந்த எல்லைக் கண் ஒருவன் செய்த உபகாரம்" என்றும் காலிங்கர், "தாம் இடருறும் காலத்தின் கண் தமக்கு ஒருவர் செய்த நன்மை" என்றும் பொருள் கூறியிருப்பது இங்கே நினைவுக்கு வருகின்றது. குறளில் இல்லாத "கண்" உருபு, உரையில் இடம்பெற்றுப் பொருள் விளக்கம் தருகின்றது.

பழம்பெரும் நூல்கள், உரையாசிரியர்களின் உதவி இன்றேல் நமக்கு விளங்காமல் போய்இருக்கும் இலக்கியச் சுவை வெளிப்படாமல் போய் இருக்கும் ஆழ்ந்த விழுமிய பொருள் தோன்றாமல் போய்இருக்கும். இவ்வுண்மையை நன்கு அறிந்த பண்டிதமணி மு. கதிரேசன்செட்டியார் "நூலாசிரியரின் அரிய கருத்துக்களை எல்லாம் உரையாளர் உதவியாலேயே உலகம் உணர்ந்து இன்புறுகின்றது. பேருபகாரிகளாகிய உரையாசிரியர் களின் உதவி இல்லையாயின் பண்டை உயர் நூல்களாம் கருவூலங்களில் தொகுத்து வைத்த விலை வரம்பில்லாப் பொருள் மணிக் குவியல்களை யாம் எங்ஙனம் பெறுதல் கூடும்?" என்று வினவுகின்றார். (**உரைநடைக் கோவை-பக்கம். 25.)**

புலமைச் செல்வர்

உரையாசிரியர்களை,

மதிநுட்பம் நூலோடு உடையவர் என்றும்,
பல்கேள்வித் துறைபோகிய
தொல்லாணை நல்லாசிரியர் (பட்டின-169, 70)

என்றும் பாராட்டுதல் தகும். அவர்கள் நுண்மாண் நுழை புலம் உடையவர்கள்: ஆழ்ந்திருக்கும் சுவியுளம் காண வல்லவர்கள் அவர்களின் பண்பட்ட உள்ளம், அறிவுத் திறன், கல்வி மாண்பு, விருப்புவெறுப்பு அற்ற தன்மை ஆகியவற்றை நோக்கும்போது,

…….. . இகலோடு
செற்றம் நீக்கிய மனத்தினர் யாவதும்
கற்றோர் அறியா அறிவினர் கற்றோர்க்குத்
தாம்வரம்பு ஆகிய தலைமையர் காமமொடு
கடுஞ்சினம் கடிந்த காட்சியர் (131-35)

என்று அவர்களைப் போற்றத் தோன்றுகிறது.

நூலாசிரியரை ஒத்த புலமை, உரையாசிரியர்களுக்கும் உண்டு.

புலம்மிக் கவரைப் புலமை தெரிதல்,
புலம்மிக் கவர்க்கே புலனாம்! (பழமொழி 8)

என்ற மணிமொழி, உரையாசிரியர்களின் இயல்பை அறிந்து மதிப்பவர் நினைவுக்கு வரும்.

நூலாசிரியர்களின் ஆற்றலை நன்கு உணர்ந்தவர்கள் உரையாசிரியர்களே. "மிக விரைவாக ஓடிச் செல்லும் ஒரு பேரியாற்றை எதிர்த்து நீந்தி, அந் நீரோட்டத்தின் வன்மையை இற்றென உணர முற்படுவோர் போல, தாம் உரை எழுத மேற்கொண்ட சான்றோர்

செய்யுட்களில் உள்ள சொற்களின் செலவை எதிர்த்து ஆராய்ந்து உண்மைப் பொருள்கண்டு உலகிற்கு உதவியவர் (உரையாசிரியர்களே) ஆவர்"" (**1.உரைநடைக் கோவை, பக்கம்-13, பண்டிதமணி.)**

உரையாசிரியர்கள், பல நூல்களைக் கற்றுத் தெளிந்த பின்னர், ஏதேனும் ஒரு நூலைத் தமக்கு உரியதாகத் தேர்ந்து எடுத்துக் கொண்டு, அந்நூலில் மூழ்கினர் வாழ்நாள் முழுதும் அதில் தோய்ந்து தம் புலமைத் திறன் முழுதும் காட்டி அந்நூலுக்கு உரை கண்டனர் ஒன்றே செய்து, அதனையும் நன்றே செய்து இறவாப் புகழ் பெற்றனர் மொழி உள்ளளவும் பெயரை நிலை நாட்டிச்சென்றனர்.

நூலாசிரியரின் உள்ளக் கருத்தினை நுணுகி ஆராய்ந்து, தெளிவு பெற எடுத்து எழுதும் உரையாசிரியர்கள் விளங்கினர் யார் வன்மையாளராய் யார் எவ்வெத் துறைநூல்களில் மிகுதியான பயிற்சி பெற்றிருந்தனரோ அவரவர் அவ்வத் துறை நூல்களுக்கு உரை எழுதினர். கல்லாத மேற்கொண்டு ஒழுகாமல், கசடற வல்லதையே உலகிற்கு உணர்த்தி நின்றனர். திருக்கோவையார்,

உள்ளப் படுவன உள்ளி
உரைத்தக்க வாக்குஉரைத்து
மெல்லப் படிறு துணி (-87)

என்று கூறுவது போல, உரையாசிரியர்கள் நன்கு சிந்தித்து, பிறர்க்கு உரைத்து, தவறுகளை ஆராய்ந்து நீக்கி உரை எழுதினர். நூலாசிரியரின் உள்ளக் கருத்தை நன்கு அறிந்துகொள்ளப் பல நூல்களைப் பல நாட்கள் இடைவிடாது கற்றுத் தெளிந்து உரை கண்டனர் நூலறிவோடு உலகறிவும் பெற்றனர் நூல் வழக்கோடு பேச்சு வழக்கையும் அறிந்தனர் பல வேறு சமயங்களையும் கலைகளையும் கற்றுத் தெளிந்தனர்.

இடைக்காலத்தில் தோன்றிப் பேயாட்டம் ஆடிய சமயப் பூசல்களுக்கும், வேற்றுமொழி மரபுக்கும் இடந்தராமல் நடுநிலைமையோடு உரையாசிரியர்கள் உரை கண்டனர் நூலாசிரியர் சமயம், தம் சமயத்திற்கு மாறானது எனினும் சமயக் காழ்ப்பு இன்றி, நூலாசிரியரின் சமயக் கருத்துக்களை நன்கு விளக்கினர் பிற சமயக் கருத்துக்கள் தம் கொள்கைக்கு முரணாக இருந்தபோதும், அச்சமயக் கருத்துகளைக் கூறும் நூல்களைச் சலிப்பின்றி முயன்று அறிந்து உரை எழுதினர். உரையாசிரியர் களிடம் காணப்படும் இத்தகைய நடுநிலைமையை எண்ணும் போது,

அறுவர்தம் நூலும் அறிந்துணர்வு பற்றி
மறுவரவு மாறாய நீக்கி - மறுவரவின்
மாசா ரியனா மறுதலைச்சொல் மாற்றுதலே
ஆசா ரியன தமைவு (ஏலாதி-75)

என்ற ஏலாதிச் செய்யுள் நினைவுக்கு வருகின்றது.

தமிழ்க்காவலர்

உரையாசிரியர்களின் பணி, பழைய நூல்களுக்கு உரை கண்டதோடு நின்றுவிடவில்லை. பழைய நூல்களில் காலத்தவர் எழுதிச் சேர்த்த இடைச் செருகல்களை

ஆராய்ந்து அவர்கள் நீக்கினர். எழுதியவரால் நேர்ந்த பிழைக களைந்தனர். படித்தவர் திருத்திய ஒவ்வாப் பாடங்களை ஆராய்ந்து போக்கினர்.

நூலிலுள்ள செய்யுட்களைப் பிழையின்றி மனப்பாட செய்வது முற்காலத்தவர் வழக்கம். **(படிறில் கல்வி விரும்பினோன் பாடம் போற்றும் அதுபோல (பிரபுலிங்க, மாயை உற் 49.)**

மூலத்தைக்கற்றுத் தேர்ந்தவர், பிறகு உரைகேட்டுப் பொரு அறிவர். மூலம் பிழையின்றி அமையவும், ஒரு பாடலுக்கு வேறுபட்ட பாடங்கள் தோன்றாமல் இருக்கவும், பலவோ பாடங்களில் சரியான பாடம் அறியவும் மூலம்போற்றும் பயி துணை செய்தது. உரையாசிரியர்கள், தாம் உரை எழுதும் நூ மூலச் செய்யுட்கள் பிழையின்றி அமையப் பெரிதும் முயன்று காத்து வந்தனர். இதனை டாக்டர் வ. பின்வருமாறு கூறுகின்றார். சுப. மாணிக்கம்

”பாடங்கள் மேலும் பெருகாமல், காலந்தோறும் புகாம உரையாசிரியர்கள் தடுத்துவிட்டனர். ஒரு பாடத்தை மூலத்தில் தழுவிக்கொண்டு உரை வரைவர். மாறுபாடங்கள் இருக்குமேல் உரையிடைக் காட்டுவர். நல்ல பாடங்களுக்கும் இது உரையென வரைவர். அல்ல பாடங்களாயின் இப்பாடம் சரியன்று என மறுத்து ஒதுக்குவர். இங்ஙனம் பாடம் ஓதுவாரும் உளர் என்று சிற்சில இடங்களில் சுட்டிச் செல்வர். உரையாசிரியர்கள் பண்டைத் தமிழ் நூல்களுக்குச் செய்த ஒரு பெருந்தொண்டு மூலக் செம்மையாகும்” (கம்பர்-பக்-15)

உரையாசிரியர்கள் அரிய நூல்கள் அழிந்து போகாமல் காத்து வந்தனர். பொருந்தாத உரைகள் தோன்றிப் பழைய நூலின் கருத்துக்களைப் பிழையாக விளக்கியபோது உண்மையான பொருளை விளக்கினர். ஒரு நூலுக்குப் போலி உரைகள் ப தோன்றித் தடுமாற்றத்தை உண்டாக்கிய போது பொருத்தமான உரை கூறினர்.

பரிபாடலுக்கு உரை எழுதிய பரிமேலழகர், அந்நூலில் இடைக்காலத்தில் வந்து சேர்ந்த பலவகை மாசுகளைப் போக்கி உரை கண்டதாய், உரைச் சிறப்புப்பாயிரம் கூறுகின்றது:

மிகைபடு பொருளை நகைபடு புன்சொலின்
தந்திடை மடுத்த கந்திதன் பிழைப்பும்,
எழுதினர் பிழைப்பும், எழுத்துரு ஒக்கும்
பகுதியின் வந்த பாடகர் பிழைப்பும்
ஒருங்குடன் கிடந்த ஒவ்வாப் பாடம்
திருந்திய காட்சியோர் செவிமுதல் வெதுப்பலின்,

பரிமேலழகர் அவற்றைப் போக்கி நல்லதோர் உரை இயற்றிய தாய்க் கூறுகின்றது உரை சிறப்புப் பாயிரம்.

திருக்குறளுக்குப் பரிமேழகர்,

ஓர்உரை இன்றி ஒன்பது சென்றும்
ஐயுற வாக நையுறு காலை

உரை இயற்றியதாய்க் கூறப்பட்டுள்ளது.

பரிப்பெருமாள்,

அரியவும் பெரியவும் அறிந்தோர் போல
வசையில் வள்ளுவன் வாய்மொழிப் பொருளை
இசைபட நுவல்வோர் இறந்த பின்னர்

திருக்குறளுக்கு உரை இயற்றியதாய் உரைச் சிறப்புப் பாயிரம் மொழிகின்றது.

நச்சினார்க்கினியர்,

பண்டைப் பனுவல்பல இறவாது நிலவ
உரை எழுதி ஈந்தோன்

என்று பாராட்டப் பெற்றுள்ளார்.

இவற்றை எல்லாம் நோக்கும்போது பண்டை உரை யாசிரியர்களைத் "தமிழ்நூற் காவலர்கள்" என்று போற்றத் தோன்றுகிறது.

ஒத்தமதிப்பு

நூலாசிரியர்களுக்கு உரிய சிறப்புக்கள் யாவும் உரை யாசிரியர்களுக்கும் உரியவையாகும். மூலநூலைப் போலவே உரையும் சிறந்தது. உரைநூலின் சிறப்பைத் தமிழ்ப்புலவர்கள் அடிக்கடி நினைவூட்டி, மூலநூலைப் போலவே மதிக்குமாறு அறிவுரை கூறியுள்ளனர்.

இலக்கணக் கொத்தின் ஆசிரியரான சாமிநாத தேசிகர்,

இவ்வுரை பெருகிற்று சுருங்கிற்று
உரையால் அறிவித்தான்
இவ்வுரையது பெருமைக்கு ஒப்பில்லை (பாரி-66)

என்றும்,

உரையை எழுதினான் (இலக் - 80)

என்றும் உதாரணங்கள் கூறி, உரையின் பெருமையை நினைவூட்டியுள்ளார்.

உமாபதி சிவாசாரியார்

வள்ளுவர்சீர் அன்பர்மொழி வாசகம்தொல் காப்பியமே
தெள்ளுபரி மேலழகர் செய்தவுரை - ஒல்லியசீர்த்
தொண்டர் புராணம் தொகுசித்தி ஓராறும்
தண்டமிழின் மேலாம் தரம்

என்று மூலநூல்களோடு ஒத்த வரிசையில் பரிமேலழகர் உரையையும் வைத்துப் போற்றுகின்றார்.

சிவப்பிரகாசர் வெங்கைக் கோவையுள் (107).

சிந்தா மணியும் திருக்கோ வையும்எழு திக்கொளினும்
நந்தா வுரையை எழுதல்எவ் வாறு நவின்றருளே

என்று உரைகளைப் போற்றுகின்றார்.

டாக்டர். உ வே. சாமிநாத ஐயர், "நூலாசிரியர்களைக் காட்டிலும் உரையாசிரியர்கள் பாடியில் மிக்க பயிற்சியுள்ள வர்கள் என்பதும் மிக்க உபகாரிகள் என்பதும் ஒரு சாரார் கொள்கை" என்று கூறுகின்றார்." (**1. சங்கத் தமிழும் பிற்காலத்தமிழும் (பக். 154)**

உரைகள் மூலநூல்கள்

தமிழிலக்கிய வரலாற்றில், இடைக்காலத்தை உரையாசிரி யர்களின் காலம் என்று கூறுவதுண்டு. டாக்டர் வ. சுப. மாணிக்கம் இக் காலத்தின் சிறப்பை, "இடைக்காலம் என்பது உரைக்காலம் அன்று தொன்னூல்களை உரை என்னும் கயிற்றால் பிணித்த உயிர்க்காலம்" என்று குறிப்பிடுகின்றார். (**2சிந்தனைக் களங்கள், பக். 6.)**

உரையாசிரியர்கள் பழைய நூல்களின் கருத்தோடு, தம் காலத்து ஆராய்ச்சி இலக்கிய வழக்கு கொள்கை மரபு ஆகிய வற்றையும் இணைத்துத் தந்தனர். புதிய இலக்கண இலக்கிய நூல்கள் தோன்றாக்குறையை உரையாசிரியர்களின் பணி நிறைவு செய்தது. உரைகள், பின்தோன்றிய நூலாசிரியர்களுக்குக் கருத்தும் வடிவமும் தந்த மூல நூல்கள் ஆயின.

உரையாசிரியர்களைப் போற்றி உரைநயங்களில் திளைத்த புலவர்கள், உரையாசிரியர்களின் கருத்துகளைத் தாம் இயற்றிய னில் எடுத்தாண்டனர். மூலநூல்களைப் போலவே உரை நூல்களில் தூல்களையும் மேற்கோளாகக் கொண்டனர். தொல்காப்பிய உரையாசிரியராகிய இளம்பூரணர் கூறிய பல கருத்துகளை தேமிநாதம், நன்னூல், நம்பியகப் பொருள் ஆகிய நூல்களின் ஆசிரியர்கள் தம் நூல்களில் எடுத்தாண்டுள்ளனர். பரிமேலழகர் கருத்துக்கள் சிலவற்றைச் சிவப்பிரகாசர் தம் நூல்களில் மேற் கொண்டுள்ளார்.

நூல்களை அரங்கேற்றிக் குற்றம் குறைகளை ஆராய்ந்து மதிப்பிட்டது போலவே, உரைகளையும் அரங்கேற்றிக் குற்றம் களை ஆராய்ந்து மதிப்பிடும் வழக்கம் முற்காலத்தில் குறைகளை இருந்தது. நச்சினார்க்கினியர் சீவகசிந்தாமணிக்கு முதன் முறை உரை எழுதிச் சமணச் சான்றோர்களிடம் காட்டியபோது அதில் குறை பல கூறி மறுத்தனர். இரண்டாம் முறையாக அவர் சமண சமய நூல்களை மிக நன்றாகப் பயின்ற பின் புதிய உரை எழுதி அச் சான்றோர்களிடம் காட்டி அவர்களின் போற்றுதலைப் பெற்றார் என்ற வரலாறு இங்கே நினைக்கத்தக்கதாகும்.

நிலையான பெயர்

ஆக்கியோர் பெயரை நூல்கள் பெற்றது போலவே, உரையாசிரியர்களின் பெயரால் உரைநூல்கள் பெயர்பெற்று வழங்குகின்றன. இளம்பூரணர் உரையை இளம்பூரணம் என்றும், நச்சினார்க்கினியர் உரையை நச்சினார்க்கினியம் என்றும், சேனா வரையர் உரையைச் சேனாவரையம் என்றும், பேராசிரியர் உரையைப் பேராசிரியம் என்றும் வழங்கும் வழக்கம் பல ஆண்டு களுக்கு முன்னரே ஏற்பட்டுள்ளது. இலக்கணக் கொத்தின் பாயிரம்,

உளங்கூர் உரையாம் இளம்பூ ரணமும்
ஆனா இயல்பின் சேனா வரையமும்
உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க் கினியமும்

என்று உரைகளை உரையாசிரியர்களின் பெயராலேயே குறிப் பிடுகின்றது.

நீலகேசி என்னும் சைன நூலுக்கு உரை எழுதியவர் சமய திவாகர வாமன முனிவர் என்பவர்.நீலகேசி உரை, உரையாசிரியரின் பெயரோடு, "நீலகேசி விருத்தி சமய திவாகரம்" என்று வழங்குகின்றது.

நூலாசிரியருக்கு உள்ள சிறப்புகள் யாவும் உரையாசிரி யருக்கும் உண்டு என்பதற்கு இவை தக்க சான்றுகளாகும்.

நக்கீரர் கபிலர் புகழேந்தி முதலிய புலவர்களின் பெயரைத் தமிழ்ப் பற்றுடையோர், தம் மக்களுக்கு இட்டு வழங்கிய போலவே, உரையாசிரியர்களின் பெயரை மக்களுக்கு மகிழ்ந்தவர் உண்டு. திருமணம் செல்வத் கேசவராய முதலிய (1864-1921) தம் மக்கள் மூவர்க்கும் முறையே பரிமேலழகன் னியன் சேனாவரையன் என்று உரையாசிரியர் நச்சினார்க்கினியன் பெயரை இட்டார். இன்றும் பலர். இவ்வழக்கத்தை மேற் கொண்டுள்ளனர்.

வான்புகழ்

சேக்கிழார் தம் நூலை, "உலகெலாம்" என்று தொட "உலகெலாம்" என்று முடித்தவர். நூலின் இறுதிப் பாடலில் "கற்பவர்க்கு என்றும் இன்பம் பெருகவும், கற்பவர் உள்ளம் ஒரு பொருளையே காதலித்து ஓங்கிடவும் சிவனடியார்களின் புகழ் (மிக்க வரலாறு), உலகெலாம் பரவி எங்கும் நிலை பெற்றது" என்று பாடியுள்ளார்:

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித்து உள்ளமும் ஓங்கிட
மன்று ளார்அடி யாரவர் வான்புகழ்
நின்றது எங்கும் நிலவி உலகெலாம்.

இலக்கிய உலகில் மிகச் சிறந்து விளங்குகின்ற இப் பாடலின் கருத்து, உரையாசிரியர்களுக்கும் பொருந்தும், இதில் உள்ள,

மன்று ளார்அடி யாரவர் வான்புகழ்

என்ற அடிக்கு ஈடாக,

இன்த மிழ்உரை யாசிரி யர்புகழ்

என்று, ஓர் அடியை இயற்றிச் சேர்த்துப் பாடலை அமைத்தால் அது உரையாசிரியர்கள் புகழை விளக்குகின்ற இனிய பாடலாக இருக்கும்.

3. உரையின் வகைகள்

இலக்கியம் பல தோன்றியபின், அவற்றின் இயல்புகள ஆராய்ந்து கூறும் இலக்கணம் தோன்றுகிறது.

எள்ளினுள் எண்ணெய் எடுப்பது போல
இலக்கியத் தினின்றும் எடுபடும் இலக்கணம்

என்பது ஆராய்ந்து கூறிய உண்மையாகும்.

அடி மரத்திலிருந்து கிளையும், கிளையிலிருந்து கவையும், கவையிலிருந்து கொம்பும் பிரிந்து வளர்ந்து நிற்பதுபோல தூலுக்குத் தோன்றிய உரை, விளக்கம், விரிவு ஆகியவை ஒன்றிலிருந்து ஒன்று பிரிந்து காலப் போக்கில் பெருகி வளர்ந்து வத்தன. உரைகளின் பல்வேறு வகைகளையும் அவற்றின் இயல்புகளையும் ஆராய்ந்து அறிந்த புலவர்கள், அவற்றிற்கு இலக்கணம் வகுத்தனர். உரையின் இலக்கணத்தை உரை யாசிரியர்களே கூறினர். உரைத்திறம் உணர்த்துதலும் உரையின் இயல்புகளுள் ஒன்றானது.

வயிர ஊசியும், மயன்வினை இரும்பும்
செயிற்று பொன்னைச் செம்மைசெய் ஆணியும்
தமக்கமை கருவியும் தாம்ஆம் அவைபோல்
உரைத்திறம் உணர்த்தலும் உரையது தொழிலே

என்ற பாடல் இங்கே நினைக்கத்தக்கதாகும்.

பாயிரம்

நூலுக்கு உரை எழுதத் தொடங்குமுன், உரையாசிரியர்கள் நூலைப்பற்றிய பொதுவான செய்திகளைத் தொகுத்துக் கூறினர். நூல் உரைக்கும் ஆசிரியன் இயல்பு, நூல்கேட்கும் மாணாக்கன் தகுதி, பாடம் சொல்லும் முறை,பாடம் கேட்கும் முறை ஆகிய வற்றையும், நூலின் வரலாறு, ஆசிரியர் வரலாறு ஆகியவற்றையும் விளக்கமாகக் கூறியபின் நூலுக்கு உரை எழுதத் தொடங்கினர். இவற்றோடு உரையின் வகைகளையும் அவற்றின் இயல்புகளையும் விளக்கினர். தம் கருத்துகளைச் சூத்திரங்களாக இயற்றி உரையின் இடையில் தாமே சேர்த்து வழங்கினர். உரையாசிரியர்கள் இயற்றியவை உரைச் சூத்திரங்கள் எனப்பட்டன. நூலுக்கு உரை எழுதத் தொடங்குமுன், உரையாசிரியர்கள் எழுதிய பொது விளக்கம் பாயிரம் என்று பெயர் பெற்றது. பின்னர்ப் பாயிரம் பலவகையாய் விரிவடைந்தது. இறையனார் களவியல் உரையே, பாயிரம் எவ்வாறு அமைய வேண்டும் என்று பிற்காலத்தவர்க்கு வழி காட்டியது.

பாயிர வகை

பாயிரம் பொது, சிறப்பு என இரண்டாய்த் தொடக்கத்தில் இருந்தது. பின் சிறப்புப் பாயிரம், தற்சிறப்புப் பாயிரம் நூற் சிறப்புப் பாயிரம் என இரண்டாயிற்று. உரையாசிரியர்கள் நூலுக்குமுன், எழுதிய முகவுரை உரைப் பாயிரம் என்றும், உரையாசிரியர்களையும் உரைகளையும் சிறப்பிக்கும் பாயிரம் உரைச் சிறப்புப் பாயிரம் என்றும் வழங்கின. நூல் கூறும் பொருளைத் திரட்டிக் கூறுவது, நூற்பாயிரம் அல்லது பதிகம் என்றும் வழங்கலாயிற்று.“

(1. Journal of the Annamalai University Vol. XII. U khzpf;fk;. 140-144 ه ى

இவற்றின் விளக்கத்தை இறையனார் களவியல் உரை தொல்காப்பிய இளம்பூரணர் உரை, யாப்பருங்கல விருத்தியுரை ஆகியவற்றின் பாயிரப் பகுதிகளில் கண்டு மகிழலாம்.

உரையாசிரியர்கள், பாயிரத்தில் இயற்றிச் சேர்த்த உரைச் சூத்திரங்கள் பலவாகும். அவை நாளடைவில் இயற்றியவர் பெயர் அறியாத வகையில் ஒன்று தொகுக்கப்பட்டு

நன்னூலில் பொதுப் யாயிரமாக உகுவெடுத்தன. நன்னூல் பொதுப்பாயிர செய்யுள்களில் பல. பிற உரையாசிரியர்கள் இயற்றியவை மேற்கோளாக எடுத்தானப் பட்டவை நன்னூலின் பொதுப் பாயிரம் பவணந்தி முனிவர் இயற்றியது அன்று என்பதற்குத் தக் சான்றுகள் கூறி அறிஞர்கள் தெளிவுபடுத்தியுள்ளனர். (**2. தொல்காப்பியம் க.வெள்ளைவாரணன், பக். 306.)**

பிற்கால உரையாசிரியர்கள், தாம் இயற்றிய பொதுப் பாயிரத்தில் கூறிய செய்திகள், தொல்காப்பிய மரபியலில் கூற பட்டுள்ளன. மரபியல் தொல்காப்பியத்தின் இறுதியியல். இதனும் தொல்காப்பியர், சொற்கள் தொன்று தொட்டு வழங்கிவரும் மரபினைக் கூறுகின்றார். இளமைப் பெயர், ஆண்பாற் பெயர் பெண்பாற் பெயர் இவற்றிற்குரிய மரபுகளைக் கூறிய பின், மரம் புல் ஆகியவற்றின் உறுப்புகளுக்குரிய பெயர்களின் மரபைக் கூற் விளக்குகின்றார். மரபியல் என்பதற்குப் பொருத்தமாக இவற்றின் மரபுகளைக் கூறுகின்றார் எனலாம். ஆனால் நூலின் வகைகள் உரையின் வகைகள் ஆகியவற்றைக் கூறும் சூத்திரங்கள் மரபியலின் இறுதியில் இடம் பெறுவது பொருந்தாது என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். அவை, பிற்காலத்தில் எழுது இடைச் செருகல்களோ என்று ஐயுறுகின்றனர். அவர்கள் அவ்வாறு எண்ணுதற்குரிய காரணங்களைக் கூறியுள்ளனர்.

1. ”செய்யுளியலுள் நூலைப்பற்றியும் அதன் பகுதிகளாகிய சூத்திரம், ஒத்து, படலம் என்பவற்றைப் பற்றியும் உரைவர் நடையைப் பற்றியும் விளக்கிய ஆசிரியர், மீண்டும் அவற்றின் இயல்பினை ஈண்டுக் கூறுதல்”, கூறியது கூறலாம்.

2. இப்பொருள்பற்றிச் செய்யுளியலில் அமைத் சூத்திரங்களையும் இவ்வியலில் உள்ள சூத்திரங்களையும் ஒப்பவைத்து நோக்குங்கால், இவ்விருவகைச் சூத்திரங்களு சொல் நடையாலும் பொருள்அமைப்பாலும் தம்முள் வேறுபாடு உடையவாதல் நன்கு புலனாகும்.

3. நூன்மரபு பற்றிய இச்சூத்திரங்கள், தொல்காப்பியனார் காலத்திற்குப் பின்பு இயற்றப் பெற்று வழங்கியவை, பிற்காலத் தவரால் எல்லா நூற்கும் உரிய பொதுப்பாயிர மரபாக இந்நூலின் இறுதியில் சேர்க்கப்பட்டிருத்தல் வேண்டும்.

4. பின்வந்த உரையாசிரியர்கள் இச்சூத்திரங்களையும் தொல்காப்பியனார் வாய்மொழி எனவே கொண்டு எழுத தேர்ந்ததையும் எண்ணுதற்கு இடமுளது.”“ (**1. தொல்காப்பியம் க. வெள்ளைவாரணன், பக்.305.)**

உரை வகை

தொல்காப்பியர் செய்யுளியலில்,

நூல்எனப் படுவது நுவலும் காலை
முதலும் முடிவும் மாறுகோள் இன்றித்
தொகையினும் வகையினும் பொருண்மை காட்டி
உள்நின்று அகன்ற உரையொடு புணர்ந்து
நுண்ணிதின் விளக்கல் அதுவதன் பண்பே, (ய˚. 159)

என்று கூறுகின்றார். ”உள் நின்று அகன்ற உரை” என்று கூறி இருப்பது உற்று நோக்கத் தக்கது. செய்யுளியலில் “அகன்ற உரை“ என்று கூறினரே அன்றி உரையின் வகைகளைக் கூறவில்லை. ஆனால் மரபியலில் உள்ள சூத்திரங்கள் உரையினைக் காண்டிகை, உரை என இரண்டாகக் கூறி விளக்குகின்றன. உரை என்ற சொல், விருத்தி என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளது.

பழிப்பில் சூத்திரம் பட்ட பண்பிற்
கரப்பின்றி முடிவது காண்டிகை யாகும் (102)
விட்டகல் வின்றி விரிவொடு பொருந்திச்
சுட்டின சூத்திரம் முடித்தற் பொருட்டா
ஏது நடையினும் எடுத்துக் காட்டினும்
மேவாங்கு அமைந்த மெய்ந்நெறித் ததுவே (104)

என்ற சூத்திரங்கள் இரண்டும் காண்டிகை உரையின் இயல்பினைக் கூறுகின்றன.

சூத்திரத்து உட்பொருள் அன்றியும் யாப்புற
இன்றி யமையாது இயைபவை எல்லாம்
ஒன்ற உரைப்பது உரைஎனப் படுமே. (10 105)
மறுதலைக் கடாஅ மாற்றமும் உடைத்தாய்த்
தன்னூ லானும் முடிந்தநூ லானும்
ஐயமும் மருட்கையும் செவ்விதின் ன் நீக்கித்
தெற்றென ஒருபொருள் ஒற்றுமை கொளீஇத்
துணிவோடு நிற்றல் என்மனார் புலவர். (54.106)

இவை (விருத்தி) உரை பற்றியவை.

இச்சூத்திரங்கள் நான்கிற்கும் பேராசிரியர் எழுதியுள்ள விளக்கம் படித்து இன்புறத் தக்கதாகும்.

இறையனார் களவியலுரை, உரை நான்கு வகைப்படும் என்று கூறுகின்றது:

““சூத்திரம் உரைக்கின் அது நான்கு வகையான் உரைக்கப்படும்: கருத்துரைத்து, கண்ணழித்து, பொழிப்புத் திரட்டி அகலம் கூறல் என”.

நம்பியகப்பொருள் உரை நான்கு வகை உரைகளின் தன்மையையும் பின்வருமாறு விளக்குகின்றது:

”பொருளுரை நான்கு வகைப்படும்: கருத்து உரைத்தலும், கண்ணழித்து உரைத்தலும், பொழிப்புத் திரட்டலும், அகலங் கூறலும் என.

”அவற்றுள் கருத்து உரைத்தலாவது, சூத்திரத்தின் உட்கோள் உரைத்தல்.

”கண்ணழித்தலாவது, சூத்திரத்துள் சொற்றோறும் பொருள் உரைத்தல்.

”பொழிப்புத் திரட்டலாவது, சூத்திரப் பொருளை எல்லாம் தொகுத்து உரைத்தல்.

”அகலங் கூறலாவது, சூத்திரப் பொருளைத் தூய்மை செய்தற்குக் கடாவும் விடையும்

உள்ளுறுத்து விரித்து உரைத்தல்

நாலடியார். ஒரு நூலுக்குச் சிறந்தவுரை எவ்வாறு அமைந்திருக்கவேண்டும் என்பதை,

பொழிப்பு அகலம் நுட்பம்நூல் எச்சம்என்று ஆற்றக்
கொழித்துஅகலம் காட்டாதார் சொற்கள் பழிப்பில்
நிரைஆமா சேக்கும் நெடுங்குன்ற நாட!
உரைஆமோ நூலிற்கு நன்று (நாலடி. 319)

என்று கூறுகின்றது. இச் செய்யுளுக்குப் பழைய வுரையா சிரியராகிய பதுமனார். "திரண்ட பொருளைச் சொல்லலும் விரித்து உரைத்தலும், கடாவும் விடையுமாகச் சொல்லுதலும், இலேசானே பொருளை உரைத்தலும், எச்சவும்மைகளால் எஞ்சிய பொருளை உரைத்தலும் ஆகிய இந் நான்கு வகையானும் ஆராய்ந்து, விரிவான பொருளைக் காட்ட மாட்டாதார் சொற்கள், காட்டுப் பசுக்கள் நிரை நிரையாகத் தங்கும் உயர்ந்த மலை நாடனே! நூலிற்குப் பழிப்பில்லாத நல்ல உரையாமோ என்றவாறு" என்று பொருள் கூறுகின்றார்.

நீதி நூலாகிய நாலடியார்.ஒரு நூலிற்கு அமைய வேண்டிய உரையின் சிறப்பியல்புகளைக் கூறுவது வியப்பாக உள்ளது. உரையின் பல்வேறு இயல்புகளைப் பொதுவாக எல்லோரும் அறிந்திருந்தனர் சிந்தித்து வந்தனர் என்று கருத நாலடியார் இடந்தருகின்றது.

நன்னூலின் பொதுப்பாயிரம் உரையின் பொது இலக்கணத்தைப் பின் வருமாறு கூறுகின்றது:

பாடம் கருத்தே சொல்வகை சொற்பொருள்
தொகுத்துரை உதாரணம் வினாவிடை விசேடம்
விரிவு அதிகாரம் துணிவு பயனோடு
ஆசிரிய வசனம்என்று ஈரேழ் உரையே . (பொதுப்-20)

இச் சூத்திரத்திற்கு மயிலைநாதர் பின்வருமாறு பொருள் கூறுகின்றார்: "பாடம் சொல்லலும், கருத்துரைத்தலும், சொல் வகுத்தலும், சொற்பொருள் உரைத்தலும், பொழிப்புரைத்தலும், உதாரணம் காட்டலும், வினாத் தோற்றலும், விடை கொடுத்தலும், விசேடம் காட்டலும், விரிவு காட்டலும், அதிகார வரவு காட்டலும், துணிவு கூறலும், பயனொடு படுத்தலும், ஆசிரிய வசனம் காட்டலும் என்னும் இப்பதினான்கு பகுதியானும் உரைக்கப்படும் சூத்திரப் பொருள்"

இவற்றுள் சிலவற்றைச் சங்கர நமசிவாயர் விளக்குகின்றார். அவர் விளக்கம் பின்வருமாறு:

"இவற்றுள், விசேடமாவது - சூத்திரத்து உட்பொருளன்றி ஆண்டைக்கு வேண்டுவன தந்து உரைத்தல்.

விரிவாவது-வேற்றுமை முதலிய தொக்கு நிற்பனவற்றை விரிக்க வேண்டுழி விரித்து உரைத்தல்.

அதிகாரமாவது-எடுத்துக்கொண்ட அதிகாரம் இது வாதலின், இச் சூத்திரத்து அதிகரித்த பொருள் இது என அவ்வதிகாரத்தோடு பொருந்த உரைக்க வேண்டுழி உரைத்தல்.

துணிவானது-ஐயுறக் கிடந்துழி இதற்கு இதுவே பொருள் என உரைத்தல்.

ஏனை, பொருள் விளங்கிக் கிடந்தன"

மேலே காட்டிய "பாடம் கருத்தே" என்ற சூத்திரவுரையின் கீழ் **மயிலைநாதர் உரையின்** வேறு வகைகளைத் தொகுத்துக் கூறுகின்றார். அவர் உரை பின்வருமாறு:

1. "தொகுத்துக் கண்ணழித்தல், விரித்துக் கொணர்ந்து உரைத்தல் என்னும் இரு கூறும்

2. பொழிப்பு, அகலம், நுட்பம் என்னும் மூவகையும்

3. எடுத்துக் கோடல், பதங் காட்டல், பதம் விரித்தல், பதப்பொருள் உரைத்தல், வினாதல், விடுத்தல் என்னும் அறுகூறும்

4. பொழிப்பு, அகலம்,நுட்பம்,நூல்எச்சம், பதப் பொருள் உரைத்தல், ஏற்புழிக் கோடல், எண்ணல் என்னும் ஏழும்

5. சொல்லே, சொல்வகை, சொற் பொருள், சோதனை, மறை நிலை, இலேசு, எச்சம், நோக்கே, துணிவே, கருத்தே செலுத்தல் என்று ஈரைந்து கிளவியும் நெறிப்பட வருவது பனுவல் உரையே என்னும் இப்பத்தும்

6. சூத்திரம் தோற்றல், சொல் வகுத்தல், சொற் பொருள் உரைத்தல், வினாதல், விடுத்தல், விசேடங் காட்டல், உதாரணங் காட்டல், ஆசிரிய வசனங் காட்டல், அதிகார வரவு காட்டல், தொகுத்து முடித்தல், விரித்துக் காட்டல், துணிவு கூறல், பயனோடு புணர்த்தல் என்னும் இப் பதின் முப்பகுதியுமான இம்மத விகற்பம் எல்லாம் இப் பதினான்கினுள்ளே (பாடம் கருத்தே" என்னும் சூத்திரத்தில் கூறப்பட்டவை) அடங்கும் எனக் கொள்க."

மயிலைநாதர் மேலே ஆறாவதாகக் கூறிய சூத்திரம் தோற்றல், சொல் வகுத்தல் முதலிய பதின்மூன்றினோடு கருத் துரைத்தல் என்ற ஒன்றைக்கூட்டி உரை பதினான்கு வகைப்படும் என்று **வீரசோழியம்** கூறுகின்றது (வீர -178)

யாப்பருங்கல விருத்தியுரை உரையின் வகைகளை,

முத்திறத் தானும், மூவிரு விகற்பினும்,
பத்து விதத்தானும், பதின்மூன்று திறத்தானும்,
எழுவகை யானும், இரண்டு கூற்றானும்,
வழுவுநனி நீங்க, மாண்பொடும், மதத்தொடும்
யாப்புறுத்து உரைப்பது சூத்திர வுரையே

என்று உரைக்கின்றது. பின்னர், முத்திறம் மூவிரு விகற்பம் முதலியவற்றை மயிலைநாதர் விளக்கியது போல. விளக்கிச் செல்லுகின்றது. வழு என்பது குன்றக் கூறல் முதலியபத்துக் குற்றம் என்றும், மாண்பு என்பது சுருங்கச் சொல்லல் முதலிய பத்து அழகு என்றும், மதம் என்பது உடன்படல் மறுத்தல் முதலிய ஏழுவகை என்றும் யாப்பருங்கல விருத்தியுரை விளக்குகின்றது.

நன்னூலின் பாயிரத்தில் உள்ள இரு சூத்திரங்கள். காண்டிகையுரை விருத்தியுரை என்பனவற்றை விளக்குகின்றன.

கருத்துப் பதப்பொருள் காட்டு மூன்றினும்
அவற்றொடு வினாவிடை ஆக்க லானும்
சூத்திரத்து உட்பொருள் தோற்றுவ காண்டிகை (பொதுப்பாயிரம் -21)

என்பது காண்டிகை யுரையை விளக்கும் சூத்திரம்.

சூத்திரத்து உட்பொருள் அன்றியும் ஆண்டைக்கு
இன்றி யமையா யாவையும் விளங்கத்
தன்னுரை யானும் பிறநூ லானும்
ஐயம் அகலஐங் காண்டிகை உறுப்பொடு
மெய்யினை எஞ்சாது இசைப்பது விருத்தி (பொதுப்பாயிரம்-22)

என்பது விருத்தியுரையின் இலக்கணம் கூறும் சூத்திரம்.

பலவேறு நூலாசிரியர்களும் உரையாசிரியர்களும் உரையின் வகைகளைப் பற்றிக் கூறியுள்ள விளக்கங்கள் நமக்கு மலைப்பைத் தரலாம் மிகுதியானவை என்று எண்ணத் தூண்டலாம். ஆனால், உரை செய்யும் முயற்சியில் மிகுதியாக ஈடுபட்டுப் பெரிதும் உழைத்தவர்கள், நுணுகி நுணுகிச் செய்த ஒப்பற்ற கலைக் கருவூலமே உரை நூல்கள் என்ற எண்ணத்தையும் அவை உண்டாக்காமல் இல்லை.

2. உரை வகைகள்

உரை வகைகள் என்ற மற்றொரு பகுதியில் தொல்காப்பியம் சுட்டும் உரைவகை, இறையனார் அகப்பொருள் கூறும் உரைவகை, நாலடியார் கூறும் உரைவகை, நம்பியகப்பொருள் கூறும் உரைவகை. நன்னூலார் கூறும் உரைவகை யாப்பருங்கல விருத்தியுரை. வீர சோழிய உரை என்று பல்வேறு நூல்கள் குறிப்பிடும் உரை வகைகள் எடுத்துரைக்கப்படுகின்றன.

இலக்கண நூலாசிரியர்களும். இலக்கிய நூலாசிரியர்களும். உரையாசிரியர்களும் உரையின் வகைகளைக் குறிப்பிட்டுள்ளனர். அவற்றைத் தொகுத்துக் காணலாம்.

தொல்காப்பியம் சுட்டும் உரைவகை

தொல்காப்பியத்தில் "உரை என்ற சொல், விருத்தி என்ற பொருளில் கையாளப்பட்டுள்ளது.

""சூத்திரத்து உட்பொருள் அன்றியும் யாப்புற
இன்றிமையாது இயைபவை எல்லாம்
ஒன்ற உரைப்பது உரையெனப் படுமே ""
""மறுதலைக் கடாஅ மாற்றமும் உடைத்தாய்த்
தன்னூ லானும் முடிந்த நூலானும்
ஐயமும் மருட்கையும் செவ்விதின் நீக்கித்

தெற்றென ஒருபொருள் ஒற்றுமை கொளீஇத்
துணிவொடு நிற்றல் என்மனார் புலவர்”12

என்ற இரண்டு தொல்காப்பியப் பொருளதிகார நூற்பாக்களும் உரையின், விருத்தியின் இயல்புகளை விளக்குகின்றன.

“காண்டிகை உரை என்ற உரை வகையினைக் குறிப்பிட்டு அதற்கு இலக்கணமும் தொல்காப்பியர் கூறியுள்ளமையைப் பின் வரும் நூற்பாக்கள்

”பழிப்பில் சூத்திரம் பட்ட பண்பிற்
கரப்பின்றி முடிவது காண்டிகை யாகும் ”13
”விட்டகல் வின்றி விரிவொடு பொருந்திச்
சுட்டிய சூத்திர முடித்தற் பொருட்டா
ஏது நடையினும் எடுத்துக் காட்டினும்
மேலாங்கு அமைந்த மெய்ந்நெறித் ததுவே””

எனக் காட்டுகின்றன.

இறையனார் அகப்பொருள் கூறும் உரைவகை

உரையின் நான்கு வகைகளை இறையனார் அகப்பொருள் உரை ““சூத்திரம் உரைக்கின். அது நான்கு வகையான் உரைக்கட் படும்’ கருத்துரைத்து. கண்ணழித்து. பொழிப்புத் திரட்டி அகலம் கூறல்” எனச் சுட்டுகின்றது.

கருத்துரைத்தல் - நூற்பா நுவலும் பொருளை எடுத்துக் கூறுதல். இதில்
1. நூற்பா நுவலும் பொருளை அறிமுகப்படுத்தல்
2 நூற்பா இயைபு கூறல்
3. நூற்பா தொடர்ச்சி கூறல்
4. நூற்பா வகை கூறல்
என்ற நான்கு கூறுகள் உள்ளன.

கண்ணழித்தல் கண்ணழித்தல் என்பது செய்யுளைப் பிரிப்பதைக் குறிக்கும். ஆயின் களவியலுரைகாரர் கண்ணழித்தல் என்பது “பதப்பொருள் சொல்லுதல்“ என விளக்குகிறார். இப்பகுதியில்.

1 நூற்பாவைப் பிரித்தல்
2 பிரித்த தொடருக்குப் பொருள் உரைத்தல்
3. நூற்பாவை மொழி மாற்றி உரைத்தல்
4. விளக்கமான உரை தரல்
5. ஒரே தொடருக்கு மூன்று பொருள் தருதல்
6. தனிச் சொற்களுக்குப் பொருள் தரல்
என்னும் செய்திகள் அமைந்துள்ளன.

அகலம் கூறல் - “சூத்திரத்துப் பொருளைத் தூய்மை செய்த தற்குக் கடா விடை உள்ளுறுத்து உரைக்கும் உரையெல்லாம் அகல வுரை எனக் கொள்க“ என்று இதனை

விளக்குகிறார் களவியலுரை யாசிரியர். இவருடைய அகலவுரையில்.

1. விளக்கம் கூறல்
2. தடைவிடை கூறல்
3. இலக்கியச் சான்று கூறல்
4. இலக்கணக் குறிப்பு கூறல்
5. இலக்கண உத்திகளைப் பயன்படுத்துதல்
6. பல உரை கூறல்
7. பிறர் உரை கூறலும் மறுத்தலும்
8. இலக்கிய மரபுகளை நிலைநாட்டுதல்

ஆகிய மரபுகள் அமைந்துள்ளன.

இந்நிலையில் உரைவகையின் நான்கு நிலைகளும், அவற்றைப் பற்றிய தெளிவான விளக்கங்களும் இறையனார் அகப்பொருள் உரையில் உள்ளன.

நம்பியகப்பொருள் கூறும் உரைவகை

நாற்கவிராச நம்பியின் அகப்பொருள் விளக்கம் கூறும் நான்கு வகையான உரைகளின் இயல்புகளை,

"பொருளுரை நான்கு வகைப்படும். கருத்துரைத்தலும், கண் ணழித்துரைத்தலும், பொழிப்புத் திரட்டலும், அகலங்கூறலும் என. அவற்றுள் கருத்துரைத்தலாவது. சூத்திரத்து உட்கோள் உரைத்தல்' கண்ணழித்தலாவது, சூத்திரத்துச் சொற்றோறும் சொற்றோறும் பொரு ளுரைத்தல். பொழிப்புத் திரட்டலாவது. சூத்திரத்துப் பொருளை யெல்லாம் தொகுத்துரைத்தல். அகலங் கூறலாவது, சூத்திரப் பொருளைத் தூய்மை செய்தற்குக் கடாவும் விடையும் உள்ளுறுத்து விரித்துரைத்தல்""

என "உரை மரபுகள்" என்ற நூலில் கூறப்பட்டுள்ளது.

நன்னூலார் கூறும் உரைவகை

1. பாடம் சொல்லுதல்
2. கருத்துரைத்தல்
3. சொல் வகுத்தல்
4. சொற்பொருள் உரைத்தல்
5. பொழிப்புரைத்தல்
6. உதாரணம் காட்டல்
7. வினாத் தோற்றல்
8. விடைகொடுத்தல்
9. விசேடம் காட்டல்
10. விரிவு காட்டல்
11. அதிகார வரவு காட்டல்
12. துணிவு கூறல்

13. பயனொடு படுத்தல்

14. ஆசிரிய வசனம் கூறல்

என்ற பதினான்கு வகையான உரைவகையினை

"பாடம் கருத்தே சொல்வகை சொற்பொருள்
தொகுத்துரை உதாரணம் வினாவிடை விசேடம்
விரிவு அதிகாரம் துணிவு பயனோடு
ஆசிரிய வசனம் என்று ஈரேழ் உரையே 18

எனவரும் பொதுப்பாயிர நூற்பாவில் சுட்டியுள்ளார்.

"கருத்துப் பதப்பொருள் காட்டு மூன்றினும்
அவற்றொடு வினாவிடை ஆக்க லானும்
சூத்திரத்து உட்பொருள் தோற்றுவ காண்டிகை "
"சூத்திரத்து உட்பொருள் அன்றியும் ஆண்டைக்கு
இன்றியமையா யாவையும் விளங்கத்
தன்னுரை யானும் பிறநூ லானும்
ஐயம் அகலஐங் காண்டிகை உறுப்போடு
மெய்யினை எஞ்சாது இசைப்பது விருத்தி 20

என்ற இரண்டு நூற்பாக்களும் காண்டிகை உரை குறித்தும், விருத்தி யுரை குறித்தும் விளக்குவனவாய் அமைந்துள்ளன.

யாப்பருங்கல விருத்தியுரை கூறும் உரைவகை

"முத்திறத் தானும், மூவிரு விகற்பினும்,
பத்துவிதத் தானும்' பதின்மூன்று திறத்தானும்,
எழுவகை யானும், இரண்டு கூற்றானும்,
வழுவுநனி நீங்க, மாண்பொடும், மதத்தொடும்.
யாப்புறுத்து உரைப்பது சூத்திர வுரையே"

என யாப்பருங்கல விருத்தியுரை (பாயிர உரை) உரையின் வகைகளை விரித்துக் கூறுகின்றது. முத்திறம், மூவிரு விகற்பம் முதலானவற்றை மயிலை நாதர் விளக்கியது போல் விளக்கிச் செல்லும் யாப்பருங்கல விருத்தியுரை, வழு என்பது குன்றக் கூறல் முதலான பத்துக் குற்றம் என்றும். மாண்பு என்பது சுருங்கச் சொல்லல் முதலான பத்து அழகு என்றும், மதம் என்பது உடன்படல், மறுத்தல் முதலான ஏழுவகை என்றும் குறிப்பாக உணர்த்துகின்றது. இதனால் நூல் மட்டுமின்றி நூலின் உரையின் குற்றம் நீங்கி, அழகு மிளிர, உத்திகள் பலவற்றையும் கையாண்டு, ஆசிரியரை இனங்காட்டி நிலைநிறுத்தும் வகையில் எழுதப்படுதல் வேண்டும் என்பது புலனாகின்றது"

வீரசோழிய உரை கூறும் உரைவகை

"மயிலை நாதர் கூறும் சூத்திரம் தோற்றம் சொல் வகுத்தல் முதலிய பதின்மூன்றினோடு, கருத்துரைத்தல் என்ற ஒன்றைக் கூட்டி உரை பதினான்கு வகைப்படும் என்பர் வீரசோழிய உரைகாரர் 2

நாலடியார் கூறும் உரைவகை

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றாகவும். நீதிக்கருத்துகளை எடுத்தியம்புவதாகவும் அமைந்துள்ள நாலடியார். உரையியல்பைப் பற்றிக் கூறுவது குறிப்பிடத்தக்கது.

"பொழிப்பு அகலம் நுட்பம்நூல் எச்சம் என்று ஆற்றக்
கொழித்து அகலம் காட்டாதார் சொற்கள் -பழிப்பில்
நிரைஆமோ சேக்கும் நெடுங்குன்ற நாட!
உரைஆமோ நூலிற்கு நன்று"23

என்ற நாலடியார் பாடல்,

1. திரண்ட பொருளைச் சொல்லுதல், விரித்து உரைத்தல்
2. கடாவும் விடையுமாகச் சொல்லுதல்
3. இலேசானே பொருளை உரைத்தல்
4. எச்சவும்மைகளால் எஞ்சிய பொருளை உரைத்தல்

என்ற நான்கு வகையாலும் ஆய்ந்து விரிவான பொருளைக் காட்ட மாட்டாதார் சொற்கள் நல்ல உரையாமோ என்று நுவல்கின்றது.

மேற்கூறப்பட்ட சான்றுகளின் மூலம் "உரைவகை குறித்துத் தெற்றென அறிய முடிகின்றது. "செய்யுள் நூல்களுக்குத் துணை நூல்களாகவும் சார்பு நூல்களாகவும் தமிழில் உரைநூல்கள் தோற்றம் பெற்றன எனலாம். இசூ.்.து தமிழ்மொழியில் மட்டுமின்றி, உலகிலுள்ள பெரும்பாலான மொழிகளில் செய்யுளுக்குப் பொருளும் விளக்கமும் கூற உரைநடை பயன்படுத்தப்பட்டது என அறிகிறோம். தமிழில் உரை என்பதற்குச் சொற்பொருள் எனும் விளக்கமும் காணப் பெறுவது இங்குக் குறிப்பிடத்தக்கது. மேலும், கருத்துரை, பதவுரை . பொழிப்புரை. காண்டிகையுரை, விருத்தியுரை என்பதெல்லாம் செய்யுளுக்கு உரைக்கப்பெறும் உரையாகும்"" என்ற கருத்து இங்குப் பொருத்தமாக அமையும்.

4. உரை செய்யும் உதவி

இலக்கிய வரலாற்றில் உரைகளுக்கு மிக உயர்ந்த இடமுண்டு. தமிழ்மொழி வளர்ச்சிக்கும், இலக்கணஇலக்கியம் பயிற்சிக்கும் உரைகள் பேருதவி புரிந்திருக்கின்றன. உரைகள் தோன்றியது நமது நற்பேறேயாகும். அவை தோன்றி இராவிடில், பழம்பெரும் இலக்கண இலக்கியச்செல்வங்கள் அழியாமல் இருந்திருப்பினும் விளங்காமல் இருந்திருக்கும் இருளடர்ந்து உள்ளே நுழையாதபடி வாயில்கள் இறுக மூடி மண்மேடிட்டு முட்செடி கொடிகள் முளைத்துக் கொடிய நச்சுயிர்கள் வாழ்கின்ற பழங்கோட்டைக்குள் அகப்பட்டுக்கொண்ட பொற்குவியல்போல் பயனற்றுப் போயிருக்கும்.

ஆங்கிலப் புலமைச் செல்வியும் ஆய்வாளரும் ஆகிய ரிஸ் டேவிட்ஸ் (ஆசள சுாலள னுயஎனைள) என்னும் அம்மையார், "இந்திய நாட்டில் உள்ள பௌத்த சமய நூல்கள், இக் காலத்தவர் படித்து இன்புறுதற்கு ஏற்ற உரை விளக்கங்கள் இல்லாத காரணத்தால் விளங்காமல் இருக்கின்றனவே!" என்ற ஏக்கத்தால் பின் வருமாறு துன்பக்குரல் எழுப்புகின்றார்:

”அந்நியர் செல்ல முடியாத இருளடர்ந்த குகைமடம் போன்றுள்ளன இந் நூல்கள். இவைபற்றிய பரம்பரை வரலாறு. எங்கும் சுவர்வைத்து மூடப்பட்டுள்ளன. பண்டைக்காலம் தன்னளவில் நில்லாது, நிகழ் காலத்தையும் எதிர் காலத்தையும் அடக்கி ஆட்சி புரிகின்றது. இவற்றை எல்லாம் நோக்கும்போது நன்றாகத் திருவலகிட்டுச் சுத்தம் பண்ணி, அலங்கரித்துள்ள ஓர் அறை, பலகணிகள் எல்லாம் நன்றாக அடைக்கப்பட்டுத் திரையிட்டு உதய திசை சிறிதும் புலப்படக்கூடாத வண்ணம் அமைந்துள்ளது போல் தோன்றுகிறது” **இலக்கிய உதயம் 11 (1963) பக். 235 எஸ். வையாபுரிப் பிள்ளை.**

இத்தகைய ஏக்கமும் துன்பமும் நமக்குச் சித்தர் பாடல் களைக் கற்கும்போது ஏற்படுகின்றன் மருத்துவ நூல்களைக் காணும்போது எழுகின்றன் உரையில்லா நூல்களை நோக்கும் போதெல்லாம் உண்டாகின்றன.

பலவகைப் பயன்கள்

தமிழ் மொழியும் இலக்கியமும் உரையாசிரியர்கள் இயற்றி உரைகளால் செழித்து வளர்ந்து வந்துள்ளன. இன்றும் புதுப்புது வகையாய்ச் சிந்திக்கும் ஆராய்ச்சியாளர்களுக்கு உரைகள் பெரிதும் துணைசெய்து வருகின்றன. மொழியியல் ஆராய்சிக்கும், இலக்கியத் திறனாய்வுக்கும் உரைகள் செய்துவரும் உதவியைப் பின்வருமாறு வகைப்படுத்திக் கூறலாம்:

1 உரையாசிரியர்கள், தாம் கற்றுத் தேர்ந்து பெற்ற புலமைச் செல்வத்தை எல்லாம் தம் உரைகளில் கொட்டி நிரப்புரவதால் நாம் அறிவுக் களஞ்சியத்தினுள் எளிதில் புகுந்து இன்புற முடிகிறது .

2. சில பாடல்களுக்கு உரையாசிரியர்கள் மிகவிரிவான உரையும் நயமிக்க விளக்கமும் எழுதியிருப்பதால் அவை இலக்கியப் பயிற்சிக்கு வழிகாட்டியாய் அமைகின்றன. விளங்காமல் இருந்த-ஐயத்திற்கு இடமாக இருந்த எத்தனையோ செய்திகள் வெளிப்படுகின்றன.

3. காலந்தோறும் வளர்ந்து வந்துள்ள தமிழ் உரைநடையின் இயல்பு, தனித்தன்மை ஆகியவற்றை உரை கொண்டே நாம் அறிய முடிகின்றது.

4. தமிழ் மொழியின் அமைப்பு, காலந்தோறும் எவ்வாறு மாறுதல் அடைந்து வந்துள்ளது என்பதையும், தமிழ் மக்களின் வாழ்க்கைநிலை, அரசியல்மாறுதல், பழக்கவழக்கம் ஆகியவற்றை யும் உரைகள் உணர்த்துகின்றன.

5. கிடைத்தற்கரிய இலக்கியச் சுவை மிகுந்த தனிப் பாடல்களைத் திரட்டி உரைகளே நமக்கு உதவுகின்றன.

6. ஏடுகளில் இருந்த பழைய நூல்களைப் பதிப்பித்தவர் களுக்கு, மூலத்தை அறிய உரைகளே துணைபுரிந்து வந்தன. ”உரையைக் கொண்டு மூலத்தையும், மூலத்தைக் கொண்டு உரையையும் பல சமயங்களில் அறிந்துகொண்டதுண்டு” (**சங்கத் தமிழும் பிற்காலத் தமிழும் (1953) பக்கம் 174, டாக்டர் உ.வே.சா.)**

7. உரையாசிரியர்கள் மேற்கோளாகத் தரும் பாடல்கள், மூல நூல்களில் ஏற்படும் ஐயத்தைப் போக்கவும் நல்ல பாட வேறுபாடு அறிந்து பாடல்களின் பொருளைத்துணியவும் பயன்படுகின்றன.

8. சில பழைய நூல்களில் மறைந்தும் குறைந்தும் உள்ள பகுதிகளுக்கு உரிய பாடல்களை உரைகளே நமக்குத் தந்துள்ளன. தொல்காப்பியம், குறுந்தொகை, திருக்குறள், சிந்தாமணி, நன்னூல் ஆகிய நூல்களின் பழைய அமைப்பு, அளவு, உட்பிரிவு ஆகியவை பற்றி உரைகள் நமக்கு அறிவிக்கின்றன.

9. மறைந்துபோன தமிழ் நூல்களின் பெயர், அவற்றை இயற்றிய புலவர்களின் பெயர், அந்நூல்களின் சிலபகுதிகள் ஆகியவற்றைப் பேணிக்காத்து வருபவை உரைகளேயாகும்.

இத்தகைய உதவிகள் பல செய்யும் உரைகளைத் தந்த உரையாசிரியர்களைப் பெருந் தொண்டர்கள் என்று போற்ற வேண்டும்.

இனி, அடுத்து வரும் பகுதிணில் உரை செய்யும் உதவிகள் சிலவற்றை விரிவாகக் காண்போம்.

தொல்காப்பிய எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் ஆகிய இரண்டிற்கும் அமைந்துள்ள உரை விளக்கங்கள் மொழியியல் தொல்காப்பிய ஆராய்ச்சிக்குத் துணைபுரிகின்றன. இவ்வாறே பிற்கால இலக்கண உரைகளும் அவ்வக்காலத்துத் தமிழ் மொழி அமைப்பை அறிவிக்கின்றன. தொல்காப்பியப் பொருளதிகார உரைகள் இலக்கியத் திறனாராய்ச்சிக்குப் பெரிதும் பய்படுகின்றன. யாப்பு, அணி பாட்டியல் பற்றிய உரை விளக்கங்கள் செய்யுளின் வடிவம் பற்றி அறிய உதவுகின்றன.

உரைகள் -இலக்கியங்கள்

மூல நூல்களைப் போலவே உரை நூல்களும் இலக்கியம் போய் இன்பம் ஊட்டுகின்றன. மூல நூல்களில் உள்ள எல்லாச் சிறப்புக் கூறுகளும் உரை நூல்களில் உள்ளன. உரைகளில், கற்பனைச்சிறப்பு வாய்ந்த உவமைகள் உள்ளன் எண்ண எண்ண இனிக்கின்ற இலக்கியச சுவை மிகுந்த பகுதிகள் உள்ளன. சிந்தனையாளர்களை வியப்பில் ஆழ்த்துகின்ற பல வகையான ஆராய்ச்சிகள் உள்ளன. எதுகை மோனைகள் அமைந்த ஓசையின்பம் தருகின்ற வகை வகையான அழகிய உரை நடை நூல் முழுதும் கொஞ்சி விளையாடுகின்றது.

இறையனார் களவியல் உரையைப் படித்துக் கொண்டு வரும் போது, நூலாசிரியர் செய்த 60 சூத்திரங்களும் நம்நினைவிலிருந்து நீங்கி, உரையே நெஞ்சில் நிரம்பிவிடுகின்றது. நூலாசிரியர் குரலைவிட உரையாசிரியர் குரலே உரக்கக் கேட்கின்றது. உரையே தனி இலக்கியமாய்ப் பொலிகின்றது. மற்ற உரைகளும் இத்தகைய சிறப்பியல்பைப் பெற்று விளங்குகின்றன. தமிழறிஞர் அ. மு. பரமசிவானந்தம் உரைகளில் ஈடுபட்டு அவற்றைப் பின்வருமாறு போற்றுகின்றார்:

”உரைகள் மூலங்களுக்கு உரைகளே என்னும் நினைவை மறப்பித்து, தாமே பேரிலக்கியங்களோ என்னும் நினைவையும் சிற்சில இடங்களில் உண்டாக்குகின்றன என்பதைப் பயின்றோர் நன்கு உணர்வர். ஒரு சில இடங்களை நோக்கின், “நூலாசிரியா இத்தகைய நுண்ணுணர்வுடன் பாடினாரா? அன்றி உரை யாசிரியர் உள வண்ணமும் உரை வண்ணமும் இத்தகைய ஏற்றத்தைத் தருகின்றனவா?” என்று வியக்கத் தோன்றும். (**19-ஆம்**

நூற்றாண்டின் தமிழ் உரைநடை வளர்ச்சி - 1966) பக். 30.)

சுருங்கக் கூறின், நூலியற்றிய ஆசிரியர் கருத்து, காலந் தோறும் அந்த நூலைப் பயின்றவர் போற்றி உரைத்த நயம், காலவேறுபாட்டால் தோன்றிய கருத்துப் புதுமை, மாறுபட்ட கருத்தினர் தோற்றுவித்த சிந்தனைவளம் ஆகிய அனைத்தும், ஓரிடத்தில் திரண்டு நிற்கும் புலமைக் களஞ்சியமே உரை நூல்கள்.

புலமைக் களஞ்சியம்

ஒரு நூலில் உள்ள ஏதேனும் ஒரு பாடலோ பகுதியோ உரையாசிரியர்களால் நன்கு விளக்கப்பட்டிருத்தலும் உண்டு. பேராசிரியர் உவம் இயலுள், "வேறுபட வந்த உவமத் தோற்றம்" (உவம-32) என்னும் சூத்திரத்தின் கீழ், "வையங்காவலர்" என்று தொடங்கும் புறநானூற்றுப் பாடலுக்கு (புறம்.8) மிக விரிவாகப் பொருள் எழுதியுள்ளார். மேலும் அவர், செய்யுளியலில், "நோக்கு" என்ற செய்யுள் உறுப்பை விளக்கும்போது (செய். 104) "முல்லை வைந்நுனை" என்ற அகப்பாட்டை (அக. 4) எடுத்துக் கொண்டு அரும்பெரும் விளக்கம் ஒன்றை எழுதியுள்ளார். இவ்விரு விளக்கங்களும் புலமைக்கும் விருந்தாய் அமைந்து, இலக்கியச் சுவை நல்கிக் கற்போரை இன்பக் கடலுள் ஆழ்த்துகின்றன.

திருக்குறளுக்கு உரை எழுதாத - வேறு நூல்களுக்கு உரை கண்ட உரையாசிரியர்கள் சிலர், திருக்குறள் சிலவற்றிற்குச் சிறந்த விளக்கம் தந்துள்ளனர். அவை புதிய கருத்துடையனவாய்-சிறந்தவையாய் உள்ளன. நச்சினார்க்கினியர், "அகர முதல என்னும் முதற் குறளுக்கு எழுத்ததிகாரத்தில் சிறந்த விளக்கம் தருகின்றார். மேலும் அவர் சீவக சிந்தாமணியில், "சங்கு உடைந்தனைய" (சீவக - 547) என்னும் செய்யுள் உரையில், "சங்கு சுட்டாலும் நிறம் கெடாததுபோலக் கெட்டாலும் தன் தன்மை கெடாத குடியும் ஆம் நத்தம் போற்கேடும் (குறள் - 235) என்ப" என்று எழுதுகின்றார். "நத்தம் போற் கேடும்" என்ற குறளுக்கு நச்சினார்க்கினியர், பரிமேழலகர் உரைக்கு மாறுபட்டதொரு கருத்தினைக் கொண்டுள்ளார். மயிலைநாதர், நன்னூல் உரையில், "பெயர் வினை" என்னும் சூத்திரத்தின் (நன் -359)கீழ் பல குறட்பாக்களுக்குப் பொருள் கூறுகின்றார். அவற்றைத் திருக்குறள் உரையாசிரியர்களின் கருத்தொடு ஒப்பிடும் போது சில அரிய விளக்கங்கள் மயிலைநாதர் உரையில் வெளிப்படுவதைக் காணலாம். சங்கர நமசிவாயர் நன்னூல் உரையில் (நன் - 360) "இணர் எரி தோய்வன்ன" என்ற குறட்பாவுக்கு எழுதியுள்ள விளக்கம் பலமுறை சுற்று மகிழத் தக்க வகயில் நுண்பொருள் பொதிந்துள்ளது.

இருளில் ஒளி

சில சொற்றொடர்களின் அரிய பொருளும் உரையாசி யர்கள் உரையால் வெளிப்படுகின்றது. திருமுருகாற்றுப் படையில் பழைய உரையாசிரியர், "தலைக்கை தருதல்" என்பதனை நன்கு விளக்கியுள்ளார். அப்பாடலில் குறிக்கப்படும் ஏரகம் என்னும் இடம், தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள சுவாமிமலை என்பது அருணகிரிநாதர் கருத்தாகும். ஆனால் சிலப்பதிகார அரும்ப உரையாசிரியர், அவ்வாறு கருதவில்லை. ஏரகமும் சுவாமி மலையும் வேறு வேறு என்பது அவர் கருத்து (குன்றக் குரவை. தெய்வம் பராஅயது).

நச்சினார்க்கினியரும் ஏரகம், மலைநாட்டில் உள்ள இடம் என்றே கூறியுள்ளார் (முருகு. 189). தொல்காப்பியத் சொல்லதிகாரத்திற்கு, இயற்றியவர் பெயர் அறியப்படாத பழைய உரை ஒன்று உண்டு. அவ்வுரையின் வாயிலாக, வெண்களமர், கருங்களமர் என்ற சொற்களின் பொருள் விளங்குகின்றது.

உரையாசிரியர்கள், பிற நூலில் உள்ள செய்யுட்களை மேற் கோளாகக் காட்டி எழுதிய இலக்கணக் குறிப்பும், விளக்கமும், ஆராய்ச்சி உலகில் நிலவி வந்த பல குழப்பங்களையும், முரண் பாடுகளையும் நீக்கி, புதிய ஒளி தந்துள்ளன.

நற்றிணையில்,

கொக்கினுக்கு ஒழிந்த தீம்பழம், (கொக்கின்
கூம்புநிலை யன்ன முகைய ஆம்பல்)
தூங்குநீர்க் குட்டத்துத் துடும்என வீழும் -(.நற் 280)

என்று வரும் பாட்டிற்கு, உரையாசிரியர் (பின்னத்தூர் அ நாராயணசாமி ஐயர்), "கொக்கு வந்து இருந்ததனால் கிளை அசைதலின் உதிர்ந்த இனிய மாங்கனியானது... ஆழமான நீரிலே துடுமென வீழா நிற்கும்" என்று பொருள் எழுதுகின்றார். கொக்கு வந்து உட்கார்ந்ததால் மாங்கனி வீழ்ந்தது என்று கூறுவது பொருத்தமாகத் தெரியவில்லை. கொக்கு என்ற சொல்லுக்கு மாமரம் என்ற பொருள் உண்டு. இதை நினைவில் கொண்டு நச்சினார்க்கினியர் தொல்காப்பியச் சொல்லதிகாரத்தில் இந்த அடிக்குக் கூறியுள்ள இலக்கணக் குறிப்பையும் நோக்கினால் பாடலின் பொருள் நன்கு விளங்குகின்றது. நச்சினார்க்கினியர்,

யாதன் உருபிற் கூறிற் றாயினும்
பொருள்செல் மருங்கின் வேற்றுமை சாரும் (-சொல்107)

என்ற சூத்திரத்தின் கீழ்,

"கொக்கினுக்கு ஒழிந்த தீம்பழம்" என்புழியும் கொக்கினின்றும் என ஐந்தாவதன் பொருளாயிற்று என்று உதாரணம் காட்டி விளக்கியுள்ளார். பொருளாயிற்று" என்று **(கொக்கினுக் கொழிந்த தீம்பழம் நாகுவேயொடு நகுபு வீங்குதோள் இவற்றுள் நான்கும் மூன்றும் ஐந்தாவதன் பொருட்டாயும் இரண்டாவதன் பொருட்டாயும் நின்றன. (பிரயோக விவேகம் காரகபடலம், உருபுமயக்கம்.**

எனவே, "கொக்கினுக்கு ஒழிந்த தீம்பழம்" என்ற அடிக்கு, "மாமரத்திலிருந்து உதிர்ந்த இனிய பழம்" என்று பொருள் கொள்வதே பொருத்தமாக உள்ளது. இத்தகைய சிறந்த பொருள் விளக்கத்திற்கு நச்சினார்க்கினியர் உரை பேருதவி புரிகின்றது.

குறுந்தொகையில், "அரிற்பவர்ப் பிரம்பின்" (குறுந்-9)
என்ற பாட்டில்,

நெடுந்தேர் அஞ்சி
கொன்முனை இரவூர் போலச்
சிலவா குகநீ துஞ்சும் நாளே

என்ற அடிகளுக்கு டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் பின்வருமாறு பொருள் எழுதுகின்றார்: "அதியமான் அஞ்சி என்னும் உபகாரியினது, அச்சத்தைச் செய்யும் போர்க்களத்தில் உள்ள இரவையுடைய ஊரில் உள்ளார் போல நீ துயிலும் நாட்கள் சிலவே ஆகுக."

"இரவூர்" என்பதற்கு அவர் கொண்ட பொருள் இரவை யுடைய ஊர்" என்பதாகும். ஆனால், இரவூர் என்பது ஓர் ஊரின் பெயர் என்றும், அவ்வூர் அதியமான் நெடுமானஞ்சிக்கும் பெருஞ் சேரல் இரும்பொறை என்னும் சேர மன்னனுக்கும் போர் நடந்த இடத்திற்கு அருகே இருந்தது என்றும், போரின் முடிவில் அவ்வூர் பாழ்பட்டது என்றும் தகடூர் யாத்திரையிலிருந்து உரையாசிரியர்கள் காட்டும் மேற்கோள் பாடல்கள் அறிவிக் கின்றன.

இரவூர் எறிந்து நிரையொடு பெயர்ந்த

வெட்சி மறவர் (புறத்-3 உரை)

என்பது நச்சினார்க்கினியர் மேற்கோளாகக் காட்டும் பாடலின் பகுதியாகும். இங்கே இரவூர் என்பது ஐயத்திற்கு இடமின்றி ஓர் ஊரின் பெயராகவே உள்ளது.

சீவக சிந்தாமணியில் "காவில் வாழ்பவர்" என்ற பாடல் உரையின் கீழ், நச்சினார்க்கினியர், "ஏவல் முரணும் என்றாற் போல" என்று எழுதுகின்றார். மேற்கூறிய பாட்டில் "ஏவல்" என்ற சொல் இடம் பெற்றுள்ளது. அதற்குப் பொருள் "ஏவன் முரணும் என்ற இடத்துப் பொருள் உரைப்பது போல உரைக்க வேண்டும் என்ற கருத்தில், நச்சினார்க்கினியர் "ஏவன் முரணும் என்றாடு போல" என்று சுருக்கமாக எழுதியுள்ளார். "எவன் முர என்பதனை விளங்கா மேற்கோளாக டாக்டர். உ.வே.சா. குறித்துள்ளார்.

யாப்பருங்கலக் காரிகையில், "உதாரண இலக்கிய முதல் நினைப்புக் காரிகை" ஒன்றில் (காரிகை-18) "ஏவின் முரணும் இருள் பரந்து" என்று அடி உள்ளது. இதில் உள்ள "ஏவின் முரணும்! என்பது ஏவன் முரணும் என்றும், நச்சினார்க்கினிய இவ்விடத்தையே தம் உரையில் எடுத்துக் காட்டினார் என்றும் பெரியோர்கள் கருதுகின்றனர். இவ்வாறு கருதுவது பொருத்த மாகவே உள்ளது.

பரிமேலழகர் "எந்நன்றி கொன்றார்க்கும்" (குறள் 110) என்ற குறள் உரையின் கீழ் "பெரிய அறங்களைச் சிதைத்த லாவது எல அறுத்தலும், மகளிர் கருவினைச் சிதைத்தலும், ஆன்முலை குரவர்த் தபுதலும் முதலிய பாதகங்களைச் செய்தல்" **(ஆறுமுக நாவலர் பதிப்பு)**

என்று விளக்குகின்றார்.மூ "ஆன்முலை அறுத்த" என்ற புறநானூற்றுப் பாடலை (புறம்: 34), கருத்திற் கொண்டு இவ்வாறு எழுதுகின்றார். அப்பாடலில்,

பார்ப்பார்த் தப்பிய கொடுமை யோர்க்கும்

என்ற அடியை,

குரவர்த் தப்பிய கொடுமை யோர்க்கும்

என்ற பாடத்துடன் பரிமேலழகர் குறிப்பிடுகின்றார். பரிமேலழகர் கொண்ட பாடம் எல்லோராலும் போற்றி மேற்கொள்ளப்படுகின்றது.

காப்புப் பெட்டகம்

பல நூறு ஆண்டுகள் கடந்து, பலப்பல தலைமுறையினரின் கையில் தவழ்ந்து, கால வெள்ளத்தை நீந்தி நம்மிடம் வந்து சேர்ந்துள்ள பழம்பெரும் நூல்கள், தோன்றிய காலத்தில் இருந்த அமைப்புடன் இன்று இல்லை. நூலின் பெயர் மாறியிருக்கிறது நூலில் உள்ள பகுதிகளில் மாற்றம் ஏற்பட்டுள்ளது நூலில் இடம் பெற்றுள்ள பாடல்களின் எண்ணிக்கை கூடி இருக்கிறது குறைந் திருக்கிறது. நூலின் பகுதிகள் சில- முன்னும் பின்னும் நடுவும்- மறைந்திருக்கின்றன. பல நூல்கள் மறைந்து போய்விட்டன.

இத்தகைய அரிய செய்திகள் பலவற்றை உரைவாயிலாகவே நாம் அறிய முடிகின்றது.

திருக்குறளுக்கு "முப்பால்" என்ற பெயரே அது தோன்றிய காலம் முதல் பரிமேலழகர் காலம் வரை வழங்கி இருக்கிறது.

பொய்யற்ற முப்பாற் பொருள்உரைத்தான் தென்செழுவைத்
தெய்வப் பரிப்பெருமாள் தேர்ந்து

என்றும்,

முப்பாலுக்கு, விழுப்பொருள் தோன்ற விரித்தினிது
உரைத்தனன், பரிமேலழகன்

என்றும் உரைச் சிறப்புப்பாயிரங்களில் திருக்குறள் முப்பால் என்றே வழங்கப்படுகிறது.

திருக்குறளில் பாலின் உட்பிரிவாகிய இயல்கள் பலப்பல மாறுதல்களை அடைந்திருக்கின்றன. அம்மாறுதல்களைத் திருக் குறள் உரைகளில் காணலாம்.

இன்று, பொருளதிகாரத்தில் ஒன்பதாவது இயலாக உள்ள மரபியல், செய்யுள் இயலுக்கு முன் அமைந்து, செய்யுள் இயல் இறுதி இயலாக வழங்கி வந்தது என்பதற்குப் பேராசிரியர் உரை சான்றாக உள்ளது.

மேலும் தொல்காப்பியத்தின் உட்பிரிவாகிய அதிகாரம். படலம் என்றும் வழங்கி இருக்கிறது என்றும், அதிகாரத்தின் உட் பிரிவாகிய இயலுக்கு ஒத்து என்ற பெயரும் வழங்கியுள்ளது என்றும் பேராசிரியர் உரை நமக்கு அறிவிக்கின்றது.

உரையாசிரியர்களால் சுட்டப் பெறும் குறுந்தொகைப் பாடல்கள் சில, இன்று வெளிவந்துள்ள குறுந்தொகையில் இடம் பெறவில்லை.

நச்சினார்க்கினியர் குறிஞ்சிக்கலியின் இரண்டாவது பாட்டு உரையில் "நன்றே என்னும் குறுந்தொகையும் அது" என்று கூறுகின்றார். "நன்றே" என்று தொடங்கும் குறுந்தொகைப் பாடல் இன்று கிடைக்கவில்லை.

தக்கயாகப் பரணி உரையாசிரியர்,

"சிலம்பிபொதி செங்காய் இது குறுந்தொகை" (தக்க - 54)

என்று கூறுகின்றார். இப்பாடல் மறைந்துவிட்டது.

அ. குமார சுவாமிப்பிள்ளை பதிப்பித்த நம்பியகப் பொருள் விளக்கவுரை, பாங்கி தலைமகளைத் தலைமகற்குக் கையடை கொடுத்ததற்கு உதாரணச் செய்யுளாக,

இவளே நின்னல திலளே யாயும்
குவளை உண்கண் இவளல திலளே
யானும் ஆயிடை யேனே
மாமலை நாட மறவா தீமே

என்பதைக் காட்டி "இது குறுந்தொகைச் செய்யுள்" என்று கூறுகின்றது. இதுவும் குறுந்தொகையில் இடம் பெறவில்லை.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று, இன்னிலையா, கைந்நிலையா என்ற குழப்பம் வந்தபோது, இளம் பூர உரையே "கைந்நிலை" என்பது அகப்பொருள் நூல் என்றும் பழைய நூல் என்றும் அறிவித்து நான்கு செய்யுட்களை மே கோளாகக் காட்டி உண்மையை அறிவித்தது.

சீவகசிந்தாமணியில் 3145 பாடல்கள் உள்ளன. ஆனா "முந்நீர் வலம்புரி" என்னும் பாடல் (3143) உரைக் கீழ் நச்சினார்க் கினியர், "தேவர் அருளிச் செய்த செய்யுள் இரண்டாயிரத்து எழுநூறு என்றே கொள்க" என்று கூறுகின்றார். ஏளையு பாடல்கள் (445) சுந்தியார் என்னும் பெண் புலவரா இடையிடையே பாடிச் சேர்க்கப்பட்டன என்று சிலர் கூறுகின்றனர். அச் செய்யுட்கள் இன்னவை என்று புலப்பட வில்லை.

எழுத்திலக்கணமும் சொல்லிலக்கணமும் கூறும் நன்னூல் "ஐந்திலக்கணமும் (பொருள், யாப்பு, அணி) கூறும் பெரு நூலாக இருந்தது என்பதை மயிலை நாதர் உரை அறிவிக்கின்றது.

பழந்தமிழ் நூல்களில் பரிபாடலும் பதிற்றுப்பத்தும் குறைந்தும் சிதைந்தும் கிடைத்துள்ளன. அவற்றிற்குரிய-மறைந்ததாய்க் கருதப்படும் பகுதிக்குரிய பல செய்யுள்களை உதாரணங்களாக எடுத்துக்காட்டி உரையாசிரியர்கள் பேணிக் காத்துள்ளனர்.

"பரிபாடலின் முதற்பாடல் இளம்பூரணர் உரையினாலும் பதிற்றுப் பத்துப் பாடல்கள் சில, நச்சினார்க்கினியா உரையினாலும் பழமொழியின் முதற்பாடல் மயிலை நாதர் உரையினாலும் கிடைத்துள்ளமை. மேற்கோள் ஆட்சியின் பயன் அல்லவா? களவியலில் காணப்பட்ட பாடல்கள் பாண்டிக கோவையைச் சார்ந்தவை என்பதும் சிற்றடக்கம் எனவும் சிற்றடகம் எனவும் பிழைபட வழங்கப்பட்டுவந்த நூற்பெயர் சிற்றெட்டகம் எனத் திருத்தமுற்றதும் களவியற் காரிகையின் மேற்கோள் ஆட்சியினால் அல்லவா? தரவு கொச்சகம் முதலி உறுப்புக்களின் பாகுபாடு அறிய இயலாதவாறு சிதைந்த் நிலையில் கிடைத்துள்ள பரிபாடலில் இரு பாடல்களுக்காவது உறுப்பமைப்புக் கிடைத்தது இளம்பூரணரின் மேற்கோள் ஆட்சியினால் அன்றோ? "ஒண்டொடி அரிவை" என்னும் ஐங்குறு நூற்றுப் பாடலின் (172) "உரவுக் கடல் ஒலித் திரை போல" என்ற திருந்திய பாடத்திற்கு இளம்பூரணரின் மேற்கோள் ஆட்சி அல்லவா காரணம்? இவற்றை எல்லாம் மேற்கோள் ஆராய்ச்சியின் பயன்கள் என்னாமல் வேறு எங்ஙனம் குறிப் பிடுவது" **ழ திருக்குறள் மேற்கோள் விளக்கம் (1970). பக். 64,65 - டாக்டர் அ. தாமோதரன்.**

இவையே யன்றி. தகடூர் டூர் யாத்திரை குண்டலகேசி வளையாபதி முதலிய இலக்கியங்களிலும், அவிநயம் இந்திர காவியம் அமுத சாரம் காக்கை பாடினியம் ஆகிய இலக் கணங்களிலும் குறைப்பகுதிகளாவது வெளிவந்திருப்பது மேற் கோள் பாடல்களால் விளைந்த நற்பயன் அல்லவா?

கடல்கோளுக்கும், நெருப்புக்கும், நீருக்கும், கறையா னுக்கும், கல்லாத மக்களின் பொல்லாத அறியாமைக்கும் இரையாகி, கணக்கற்ற தமிழ் நூல்கள் மறைந்துவிட்டன. அந்நூல்களின் சில பகுதிகளையும், பெயர்களையும் உரையா சிரியர்களே நமக்கு வழங்கிப் பேருதவி புரிந்துள்ளனர். இலக்கணம், இலக்கியம், இசை, நாடகம் ஆகிய பல வேறு துறை களுக்கு உரிய மறைந்த நூல்கள், உரைகளிலிருந்து திரட்டப் பெற்று "மறைந்துபோன தமிழ் நூல்கள்" என்ற பெயரில் பயனுள்ள அரிய நூலொன்று வெளியாகியுள்ளது.

சேம நிதி

ஏட்டில் எழுதாத இலக்கியச் செல்வங்களைக் காத்த பெருமையும் உரையாசிரியர்களுக்கு உண்டு. அவர்கள் தம் காலத்துப் பேச்சுமொழி, வட்டார வழக்கு, மரபுத் தொடர், பழமொழி ஆகியவற்றை அறிந்து, ஏட்டில் எழுதிவைத்து அழியா வாழ்வு நல்கினர்.

வாய்மொழியாக வந்த சிறந்த தனிப் பாடல்களை- பெரும் புலவர்கள் பாடிய தனியன்களை- திரட்டித் தந்த பெருமை உரையாசிரியர்களுக்கு உண்டு. நாட்டிலே வழங்கி வந்த கதைகள் சிலவற்றை உரைகளில் தந்தனர். தமிழகப் பழங் கதைகளில் தமிழர் நாகரிகம், நெஞ்சப் பாங்கு, குறிக்கோள் யாவும் அடங்கியுள்ளன.

இவற்றிற்கு மேலாக உரையாசிரியர்கள் செய்த பணி யொன்று உண்டு. நாட்டுப் பாடல்கள் சிலவற்றை எழுதி வைத்துள்ளனர் விடுகதைப் பாடல்களைத் தந்துள்ளனர். இவை மிகுதியாக இல்லை என்றாலும், ஆற்றங்கரையில் ஒதுங்கிக் கிடக்கும் பொன் மணல் போலப் பளிச்சிடுகின்றன. வாய்மொழி இலக்கியத்திற்கு வாழ்வு தந்து போற்றிவந்த உரையாசிரியர்கள் என்றும் போற்றத்தக்கவர்கள்.

உரையாசிரியர்கள் தம் காலத்து மக்கள் நிலை, வாழ்க்கை முறை, நாகரிகம், பழக்கவழக்கம், பண்பாடு, அரசியல் போக்கு ஆகியவற்றை ஆங்காங்கே சுட்டிச் செல்கின்றனர். தமிழ் நாட வரலாறு எழுதுவோர், பழைய உரைகளின் வாயிலாகக் காலத்தின் குரலைக் கேட்கலாம் வரலாற்று நிகழ்ச்சிகளைக் கண்டு மகிழலாம். வரலாற்று ஆசிரியர்கள் பழைய உரைகளைச் சிறந்த வரலாற்று மூலங்களாகக் கருதி அவற்றைக் கற்றுத் தெளிந்து, தமிழக வரலாற்றை உருவாக்க வேண்டும்.

பழைய உரைகள் ஆராய்ச்சி உலகத்தின் திறவுகோல்: இலக்கியம், இலக்கணம் கற்க முயன்று தளர் நடை போடும் மாணாக்கனின் கைகளைப் பற்றி நடத்திச் செல்லும் தந்தை அறிவு செழிக்குமாறு ஊட்டி வளர்க்கும் தாய் காலத்தையும் இடத்தையும் கடந்து வந்து, விரும்பிய போதெல்லாம் அறிவு புகட்டும் பேராசான்.

உரையாசிரியர்கள் வாழ்ந்த காலம் பழமையானது. ஆனால், அவர்களிடம் புதிய

சிந்தனைகள் தோன்றியுள்ளன. காலத்தின் பிடிப்புக்குள் சிக்கிக் கொள்ளாமல் சுதந்திரமாய்ச் சிந்தித் துள்ளனர். அவர்கள் வாழ்ந்த இடம், புறவளர்ச்சிக்குரிய அறிவியல் கருவிகளும் முன்னேற்றத்திற்கு உதவும் புதிய வசதிகளும் இன்றிப் பிற்போக்கில் இருந்தது. ஆனால், அவர்கள் எண்ணமும் எழுத்தும், செயலும் சிந்தனையும் முற்போக்கானவை. இலக்கிய மரபுக்கும் இலக்கண நெறிக்கும் சமயக் கொள்கைக்கும் உட்பட்டு அவர்கள் உரை எழுதினர். ஆனால் சுதந்திரத்தை இழந்துவிடவில்லை. அவர்கள் மொழிக் கலையின் முழுமையைக் கண்டு உயர்ந்து சென்றும், கருத்துக் கடலில் மூழ்கியும் திளைத்தவர்கள். ஆனால், சிறிதளவு கற்றவரும் அவர்களிடம் சென்று நெருங்கிப் பழகி உரைகளைப் பயின்று பயன் பெற முடிகின்றது. அவர்கள் பழைய நூல்களுக்கு உரை எழுதி, பழைய மரபை வளர்க்கவும் முன்னோர் கருத்துக்களை வெளிப் படுத்தவும் முயன்று வெற்றி பெற்றனர். ஆனால், தம் காலத்து எண்ணத்தையும் எழுத்தையும் புறக்கணிக்கவில்லை. பலவேறு துறைகளில் அவர்கள் ஆற்றியுள்ள பணிகள், மிக உயர்ந்து விளங்கு கின்றன. ஆனால், அவை கருத்துலகிற்குச் சென்று கண்டு மகிழ உதவுகின்ற எளிய படிகளாய் உள்ளன. அவர்கள் உரைநடை கடுமையும் செறிவும் உடையது. ஆனால் அதுதான் தமிழ் மொழியின் உயர்வுக்கும் சிறப்புக்கும் காரணமாய் உள்ளது.

கல்லாதேன் ஆனாலும்
கற்றுணர்ந்த மெய்யடியார்
சொல்லாலே நின்னைத்
தொடர்ந்தேன் பராபரமே! தாயுமானவர் (பராபரக். 383)

வினாக்கள்

அலகு 1

உரைவரலாறும் உரைவகைகளும்

ஒரு மதிப்பெண் வினாக்கள்

1.இலக்கணக்கொத்து எனும் நூலின் ஆசிரியர் யார் ?

அ).சாமிநாத தேசிகர்

ஆ).வைத்தியநாத தேசிகர்

இ).சிவஞான முனிவர்

ஈ).செகவீரபாண்டியனார்

2.இறையனார் களவியலுரை கூறும் உரை வகைகளின் எண்ணிக்கை

அ).8 ஆ).6 **இ).4** ஈ).2

3. கம்பராமயணத்திற்கு விளக்கவுரை, பல நூறு ஆண்டுகளாக வாய்மொழியாகவே வழங்கி வந்தது என்பதைக் கூறும் நூல் ?

அ).இலக்கணக்கொத்து

ஆ).இலக்கண விளக்கம்

இ).விநோதரச மஞ்சரி

ஈ).வீரசோழியம்

4.சிவஞானப் போதத்திற்கு உரை எழுதியவர் யார் ?

அ).நச்சினார்க்கினியர்

ஆ).பரிமேலழகர்

இ).சிவஞான முனிவர்

ஈ).உ.வே.சா

5.முத்தொள்ளாயிரப் பாடல்கள் சிலவற்றிக்குச் செய்யுள் வடிவில் விளக்கம் கொடுத்தவர் யார்

அ).கலைஞர் கருணாநிதி

ஆ).கண்ணதாசன்

இ).வைரமுத்து

ஈ).பாரதிதாசன்

6."வடநூலார் தாமே பதிகமும் உரையும் செய்வார் "என்று கூறும் நூல்

அ).இலக்கணக்கொத்து

ஆ).பன்னிரு பாட்டியல்

இ).பிரயோக விவேகம்

ஈ).இலக்கண விளக்கப்பாட்டியல்

7.சங்க நூல்களுக்கு வசனம் எழுதியவர்

அ).ந.மு.வேங்கடசாமி நாட்டார்

ஆ).உ.வே.சா.

இ).ந.சி.கந்தையாப்பிள்ளை

ஈ).பரிதிமாற்கலைஞர்

8.தமிழில் வந்த முதல் மறுப்பு நூல்

அ).இலக்கண விளக்கம்

ஆ).இலக்கணக்கொத்து

இ).இலக்கண விளக்க சூறாவளி

ஈ).விநோதரச மஞ்சரி

9.நம்பியகப்பொருள் கூறும் உரை வகைகளின் எண்ணிக்கை

அ).4

ஆ).5

இ).6

ஈ).7

10.திருக்கோவையாருக்கு உரை எழுதியவர்

அ).இளம்பூரணர்

ஆ).நச்சினார்க்கினியர்

இ).பேராசிரியர்

ஈ).தெய்வச்சிலையார்

ஐந்து மதிப்பெண் வினாக்கள்

1.உரைக்கு உரை எழுந்த முறையைக் கூறுக
2.செய்யுள் வடிவ உரைகள் என்றால் என்ன ? விளக்குக.
3.நூலாசிரியரே உரையாசிரியராக இருக்க காரணம் யாது ?
4.இறையனார் களவியலுரை கூறும் உரை வகைகளை விளக்குக.
5.நம்பியகப்பொருள் கூறும் உரை வகைகளை விரித்து எழுதுக.
6.உரைகள் "காப்புப்பெட்டகம்" என அழைக்கப்படுவது ஏன் ? விளக்குக.
7.பாயிர வகைகள் யாவை ?
8.வலியவை வாழ்வுபெறல் எவ்வாறு உரைகளுக்குப் பொருந்தும் ? ஆராய்க.

எட்டு மதிப்பெண் வினாக்கள்

1.உரை வரலாறு பற்றி கட்டுரை வரைக.
2.உரை வகைகளை விளக்கி கட்டுரைக.
3.நன்னூல் கூறும் உரை வகைகளை விளக்குக.
4.உரை செய்யும் உதவி பற்றி கட்டுரை வரைக.

இயல் 2

இலக்கண உரையாசிரியர்கள்

1. இறையனார் அகப்பொருளுரை

பாட நோக்கம்

இலக்கண ஆய்வுகளுக்கு உதவிய உரையாசிரியர்களின் கருத்துக்களை மாணவர்களுக்கு அறிவித்தல்.

பாட அறிமுகம்

இலக்கண உரையாசிரியர்கள் பாட்டியல் உரையாசிரியர்கள் தற்கால உரையாசிரியர்கள் ஆகியோர்களின் ஆய்வுப் பங்களிப்புகளை மாணாக்கர்களுக்கு அறிமுகப்படுத்துதல்.

இலக்கண உரைகள் (சுருக்கமான அடிப்படை அறிமுகம்)

தொல்காப்பியம் இளம்பூரணர், சேனாவரையர், பேராசிரியர், தெய்வச்சிலையார், கல்லாடர், யாப்பருங்கல விருத்தி உரை,யாப்பருங்கலக்காரிகை உரை. வீரசோழியம் பெருந்தேவனார் உரை, தண்டியலங்காரஉரை, புறப்பொருள் வெண்பாமாலை சாமுண்டிதேவ நாயகர் உரை. நம்பியகப்பொருள் நாற்கவிராசநம்பிஉரை, இறையனார் களவியற்காரிகைஉரை, நேமிநாத உரை, பழைய உரை, பாட்டியல் உரைகள் வெண்பாப்பாட்டியல், நவநீதப்பாட்டியல். சிதம்பரப்பாட்டியல், இலக்கண விளக்கப் பாட்டியல் உரைகள், பிரயோக விவேகம் சுப்பிரமணியதீட்சிதர் உரை, உவமானசங்கிரக உரை, நன்னூல் சங்கரநமச்சிவாயர். ஆண்டிப் புலவர், கூழங்கைத் தம்பிரான், இராமாநுசக்கவிராயர், விசாகப்பெருமாள் ஐயர், ஆறுமுக நாவலர், சடகோப ராமாநுசாச்சாரியார்.

உரைகளில் காலத்தால் முற்பட்டது "இறையனார் அகப் பொருளுரை" யாகும். இதுவே தமிழில் தோன்றிய முதல் உரைநூல், பின்னர்த் தோன்றிய மற்ற எல்லா உரைகளுக்கும் இது வழிகாட்டியாய் விளங்குகின்றது. இந்த உரையிலிருந்து, உரைகளைப் பற்றிய பல பொதுவான செய்திகளை அறிந்து கொள்ளலாம். இது மிகச் சிறந்த இலக்கியமாய் அமைந்து, கற்போர்க்குப் பேரின்பம் தருகின்றது.

இறையனார் அகப்பொருள்" சிறந்த அகப் பொருள் இலக்கண நூல். இதனை இறையனார் களவியல் என்றும் வழங்குவதுண்டு. களவியல் என்பது சிறப்பினாற் பெற்ற பெயர் என்றும், "களவு கற்பு என்னும் கைகோள் இரண்டனுள் களவினைச் சிறப்புடைத்தென்று வேண்டும் இவ்வாசிரியன்" என்றும் இந்நூலின் உரையாசிரியர் கூறுகின்றார். இந்நூல் களவு கற்பு என்ற இரு பிரிவுகளை உடையது. களவினுள் 33 நூற்பாக் களும், கற்பினுள் 27 நூற்பாக்களுமாக 60 நூற்பாக்கள் உள்ளன. ஓட்டக்கூத்தர், இதனை "அமுத சூத்திரம் அறுபதாய்ச் சமை நூல்" என்று போற்றியுள்ளார்.(**குலோத்துங்க சோழன் பிள்ளைத் தமிழ் - காப்புச் செய்யுள்.)**

இந் நூலை இயற்றியவர் இறையனார். இறையனாரை இந் நூலின் உரை, மதுரை ஆலவாய்ச் சோமசுந்தரக் கடவுள் என்று குறிப்பிடுகின்றது. நூல் தோன்றிய வரலாற்றை, "அக்காலத்துப் பாண்டியனும் சங்கத்தாரும் பொருளிலக்கணம் பெறாது, இடர்ப்படுவாரைக் கண்டு ஆலவாயிற்பெருமான் அடிகளால் வெளிப்படுத்தப்பட்டது" என்று சுருக்கமாகக் கூறுகின்றது.

இந்நூலினை இறையனார் என்னும் பெயருடைய புலவர் இயற்றி இருக்கக்கூடும். இறையனார் என்ற பெயர், நூல் தோன்றிய கதை பிறப்பதற்குக் காரணமாய் இருந்தது குறுந்தொகையுள் (பாடல் 2) இறையனார் என்னும் புலவர் இயற்றிய "கொங்குதேர் வாழ்க்கை" என்ற அகப்பாட்டு நக்கீரரையும் விரிசடைக் கடவுளரையும் பாண்டியனையும் இணைத்துக் கதை புனைய இடந்தந்தது. அவ்வாறே இந் நூலாசிரியர் பெயரும் கதை தோன்ற இடந்தந்தது. இக்கதை தெய்வத்தோடு தொடர்புபடுத்தி நூலின் பெருமையை மிகுதிப் படுத்த எண்ணிய காலத்தில் உருவாகி இருக்கலாம்.. நூல் தோன்றிய கதையை விரிவாகப் பின்வருமாறு உரை கூறுகின்றது. στεαυπίς

"அக்காலத்துப் பாண்டியனாடு பன்னீரியாண்டு வற்கடஞ் சென்றது. செல்லவே பசிகடுகுதலும், அரசன் சிட்டரையெல்லாங் கூவி, "வம்மின், யான் உங்களைப் புறந்தரகில்லேன் என் தேயம் பெரிதும் வருந்துகின்றது. நீயிர் நுமக்கு அறிந்தவாறு புக்கு, நாடு நாடாயின ஞான்று என்னை யுள்ளி வம்மின்" என்றான். என, அரசனை விடுத்து எல்லாரும் போயின பின்றைக் கணக்கின்றிப் பன்னீரியாண்டு கழிந்தது. கழிந்த பின்னர், நாடு மலிய மழை பெய்தது. பெய்தபின்னர் அரசன், "இனி நாடு நாடாயிற்றாகவின், நூல் வல்லாரைக் கொணர்க" என்று எல்லாப்பக்கமும் ஆட்போக்க, எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும் யாப்பதி காரமும் வல்லாரைத் தலைப்பட்டுக் கொணர்ந்து, பொருளதி காரம் வல்லாரை எங்கும் தலைப்பட்டிலேம்" என்று வந்தார். வர அரசனும் புடைபடக்கவன்று, "என்னை, எழுத்தும் சொல்லும் யாப்பும் ஆராய்வது பொருளதிகாரத்தின் பொருட்டன்றே பொருளதிகாரம் பெறேமேயெனின், இவை பெற்றும் பெற்றிலேம்" எனச் சொல்லா நிற்ப, மதுரை ஆலவாயில் அழல்நிறக் கடவுள் சிந்திப்பான்: "என்னை பாவம்! அரசர்க்குக் கவற்சி பெரிதாயிற்று அது தானும் ஞானத்திடைய தாகலான், யாம் அதனைத் தீர்க்கற் பாலம்" என்று இவ்வறுபது சூத்திரத்தையும் செய்து மூன்று செப்பிதழகத்து எழுதிப் பீடத்தின் கீழிட்டான்."

இவ்வாறு சோமசுந்தரக் கடவுள் அருளியதாகக் கூறி இந் நூலை, "முதல்நூல்" என்றே உரை குறிப்பிடுகின்றது. ஆனால், இவ் அகப்பொருள் இலக்கணம், தொல்காப்பியத்தைப் பின்பற்றி அமைந்துள்ளது. தொல்காப்பியம் கூறும் அகப்பொருள் இலக்கணத்தைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் எளிமையாகவும் இந்நூல் கூறுகின்றது. எனவே, இதனைத் தொல்காப்பியத்தின் வழி நூல் என்பது பொருந்தும்.

உரையின் இயல்புகள்

இறையனார் அகப்பொருளுரை சிறப்பியல்புகள் பல வாய்ந்ததாகும். இவ்வுரையை நக்கீர தோன்றிய வரலாறு குறிப்பிடுகின்றது. இயற்றியதாக உரை

இவ்வுரையைப் படிக்கும் போது, இலக்கண உரையைப் படிக்கின்றோம் என்ற நினைவே எழுவதில்லை. இனிய இலக்கியம் போல், தொட்ட இடமெங்கும் இவ்வுரையில் இலக்கியச்சுவை தேங்கிக் கிடக்கின்றது. எண்ணுந்தோறும் இனிக்கின்ற உவமை, எளிதில் பொருளுணர்ந்து மகிழ்த்தக்க வகையில் அமைந்த தெளிவான போக்கு, அறிவிற்கு விருந்தாய் உள்ள சிறந்த மேற்கோள், வாகை கூடி வெற்றிப் பெருமிதத்துடன் நடந்து செல்லும் வீரனின் பீடு நடை ஆகியவை யாவும் இவ்வுரையில் உண்டு. பிற உரையாசிரியர்களின் கருத்தைக் கூறி மறுக்கும் க்'னமான மறுப்பு, தடை விடை பல எழுப்பி ஆராய்ந்து வலியுறுத்தும் கருத்து, முன்னும் பின்னும் உள்ள கருத்துக்களை நினைவில் கொண்டு பலமுறை ஆழ்ந்து கற்றுத் தெளியும் பகுதி அதியவை இவ்வுரையில் இல்லை.

தென்றல் தவழும் இனிய மலர்ச்சோலையுள் புகுந்து வண்ண வண்ண மலர்களையும் செடி கொடிகளையும் கண்டு மதிழும்போது ஏற்படும் இன்ப உணர்வே, இவ்வுரையைக் கற்கும்போது ஏற்படுகின்றது. இந்நூலைப் படித்துவிட்டு மூடும் போது நம் நெஞ்சத்தில் செந்தமிழ் தந்த இன்பம் மண்டிக் கிடக் கின்றது. நூல் முழுவதும் நூலாசிரியரின் குரலைவிட, உரையாசிரியரின் குரலே மேலோங்கி நிற்கின்றது உரையாசிரியர் கூறும் கருத்தும் விளக்கமுமே கற்போர் நெஞ்சத்தில் ஆழப் பதிகின்றன. உரையாசிரியர் நம் எதிரே நின்று உரையாடுவது போன்ற மன நிலையை உரையின் வாயிலாக உண்டாக்கிவிடு கின்றார்.

இவ்வுரையின் நடையழகும், இலக்கியச் சுவையும் காலந்தோறும் புலவர் உள்ளத்தைக் கவர்ந்திருக்கின்றன. செந்தமிழ் உரைநடை எழுதுவதில் வல்லவராய்-பிறர்க்கு வழி காட்டியாய் விளங்கிய மறைமலையடிகள் இவ்வுரையைப் பின் வருமாறு போற்றிப் புகழ்கின்றார்:

"பளபளப்பான பல நிறச் சலவைக் கற்கள் அழுத்திப் பான் மினுக்குப் பூசிப் பல பல அடுக்கு மாடங்கள் உடைத்தாய் வான்முகடு அளாய், காண்பார் கண்ணுங் கருத்தும் கவரும் ர்மைத்தாய் உயர்ந்தோங்கி நிற்கும் எழுநிலை மாடம்போல், ஆசிரியர் நக்கீரனாரது உரை நிவந்து நிற்றலும், அம்மாடத்தின் அருகே புல் வேய்ந்த குடிலும், ஓடு மூடியதொரு சிற்றிலும் ஏழைமைத் தோற்றமும் உடையவாய்த் தாழ்ந்து நிற்றல்போல், இளம்பூரணர் பேராசிரியர் உரைகள் பீடு குறைந்து நிற்றலும், பிரிந்து இனிது விளங்கா நிற்கும். (**1. மணிவாசகர் வரலாறும் காலமும் - பக்.628.)**

க. வெள்ளை வாரணனார், இவ்வுரையைச் சிறந்த உரை நடை இலக்கியம் என்று பாராட்டுகின்றார்.? (**2. இலக்கணச் சிந்தனைகள் (1973) பக். 142, 145.)**

"நூலின் பொருளை வினாவிடைகளால் விளக்கும் தருக்க நூல் மரபும், இயற்கைக் காட்சிகளையும் ஆடவர் மகளிராகிய பாடல்களின் இருபாலாரின் உள்ளத் துணர்வுகளையும் சொல்லோவியமாகப் புனைந்துரைக்கும் கற்பனைத் திறமும், பொருள்களை நயம்பெற விளக்கும் இலக்கியச்சுவை நலமும், உலக வாழ்க்கையின் நுட்பங்களைச் சிறந்த உவமைகளாலும் பழ மொழிகளாலும் புலப்படுத்தும் நுட்பமும், தமிழ்மொழியின் இலக்க கணங்களைத் தெளிய விளக்கும் திட்பமும் ஒருங்கே பெற்றுத் திகழும் சீரிய உரைநடை இலக்கியம் இறையனார் களவியலுரை யாகும்.

வழிகாட்டி

இவ்வுரையாசிரியர், பின்வந்த உரையாசிரியர்களுக்குச் சிறந்த வழிகாட்டியாக விளங்குகின்றார். பெரும்பாலும் எல்லா உரையாசிரியர்களும் பாயிர்ம் பற்றி இவர் கூறிய கருத்துக் களையே, இவர் கூறிய முறையிலேயே கூறுகின்றனர். இளம்பூரணர், நச்சினார்க்கினியர், அடியார்க்கு நல்லார், மயிலை நாதர் ஆகியோர், தாம் எழுதிய உரையின் தொடக்கத்தில் எழுதும், பொதுப் பாயிர விளக்கங்களில் இவ்வுரையாசிரியர் குரலின் எதிரொலியே கேட்கின்றது. இவர் கூறிய பல உவமைகளும் சொற்பொருள் விளக்கமும் பிற்கால உரைகளில் சென்று பரவிச் செல்வாக்குடன் பொலிகின்றன. இவ்வுரையாசிரியரின் உரை நடையைப் பின்பற்றி எழுத முயன்றவர் பலர். ஆனால், அம்முயற்சியில் அவர்கள் வெற்றிபெற முடியவில்லை. பல ஆண்டுகளுக்குப் பின்னரும், இறையனார் அகப் பொருளுரை தலைமையும் பெருமையும் பெற்று, ஈடு இணையற்று விளங்குகின்றது.

“என்மனார்“ என்னும் சொல்லுக்கு இவர் கூறிய இலக்கணக் குறிப்பை, இளம்பூரணர் அப்படியே மேற் கொள்ளுகின்றார்.

முதன் முதலில் அகப்பொருளைக் கற்பனை வளம் செறிந்த ஆக்கி மகிழ்ந்தவர் இவ்வுரையாசிரியரே. தோவை நூல்களுக்கு வித்திட்டவர் இவரே. காலமும் இடமும் இன்ப நாடகமாக அமைத்து நாடக உறுப்பினரைப்படைத்து ஒன்றன் பின் ஒன்றாகப் பல நிகழ்ச்சிகளைக் கதைப் போக்கில் உருவாக்கி இவ்வுரை பாசிரியர் காட்டும் திறன் மகிழ்தற்குரியது.

நம்பி அகப்பொருளும், அதற்குப்பின் தோன்றிய பல அகப் பொருள் இலக்கணங்களும் இவ்வுரையின் ஒளியால் விளக்கம் அடைந்தன.

உரை தோன்றிய கதை

நூல் தோன்றியதற்குக் கதை உள்ளதுபோலவே உரை தோன்றியதற்கும் கதை உள்ளது.

சோமசுந்தரக் கடவுள் வழங்கிய அகப்பொருள் இலக் கணத்தைப் பாண்டிய மன்னன் பெற்றபின், சங்கப் புலவர்களை அழைத்து, அதற்குச் சிறந்த உரை ஒன்று எழுதுமாறு வேண்டினான். சங்கத்தில் இருந்த புலவர்கள் எல்லாரும் உரை எழுதி, தாம் உரைத்த உரையே நல்லதென்று கூறினர். அதனால் நல்ல உரையினைத் தேர்ந்தெடுக்கக் காரணிகன் ஒருவனைத் தரவேண்டும் என்று புலவர்கள் பாண்டிய மன்னனை வேண்டினர். மன்னன், அப்புலவர்களுக்கு நிகராவார் யாரும் இல்லை என்று கூறிக் காரணிகளை நியமிக்க இயலாமல் வருந்தினான். பின்னர் அப் புலவர்கள், எவ்வாறு சிறந்த உரையைத் தேர்ந்தெடுத்தனர் என்பதைப் பின்வருமாறு களவியலுரை கூறுகின்றது:

”அரசனும் இது சொல்லினான் யாம் காரணிகனைப் பெறுமாறு என்னை கொல்? என்று சிந்திப்புழி, சூத்திரஞ் செய்தான் ஆலவாயில் அவிர்சடைக் கடவுளன்றே, அவனையே காரணிகனையும் தரல் வேண்டும் எனச் சென்று வரங்கிடத்தும் என்று வரங்கிடப்ப, இடை யாமத்து, “இவ்வூர் உப்பூரி குடிகிழார் மகனாவான் உருத்திரசன்மன் என்பான் பைங்கண்ணன்,

புன்மயிரன், ஐயாட்டைப் பிராயத்தான், ஒரு மூங்கைப் பிள்ளை உளன் அவனை அன்னன் என்று இகழாது கொண்டு போந்து, ஆசனத்தின் மேல் இரீஇக் கீழிருந்து சூத்திரப் பொருள் உரைத்தாற் கண்ணீர் வார்ந்து மெய்ம்மயிர் சிலிர்க்கும், மெய்யாயின உரை கேட்டவிடத்து மெய்யல்லா உரை கேட்டவிடத்து வாளா இருக்கும். அவன் குமார தெய்வம் அங்கோர் சாபத்தினால் தோன்றினான் என முக்கால் இசைத்த குரல் எல்லார்க்கும் உடன் பாடாயிற்று. ஆக எழுந்திருந்து, தேவர் குலத்தை வலங்கொண்டு

போந்து, உப்பூரி குடி கிழாருழைச் சங்கமெல்லாம் சென்று. இவ்வார்த்தை எல்லாம் சொல்லி, "ஐயனாவான் உருத்திர சன்மனைத் தரல் வேண்டும்" என்று வேண்டிக் கொடு போந்து, வெளியது உடீஇ, வெண்பூச் சூட்டி, வெண்சாந்து அணிந்து கல்மாப்பலகை யேற்றிக் கீழிழுந்து சூத்திரப் பொருள் உரைப்ப எல்லாரும் முறையே பொருளுரைப்பக் கேட்டு வாளா இருந்து, மதுரை மருதனிளநாகனார் உரைத்தவிடத்து ஒரோவிடத்துக் கண்ணீர் வார்ந்து, மெய்ம்மயிர் நிறுத்தி, பின்னர்க் கணக்காயனார் மகனார் நக்கீரனார் உரைத்தவிடத்துப் பதந்தொறுங் கண்ணீர் வார்ந்து, மெய்ம்மயிர் சிலிர்ப்ப இருந்தான்.ழு இருப்ப. ஆர்ப்பெடுத்து, "மெய்யுரை பெற்றாம் இந்நூற்கு!" என்றார்."

இவ்வாறு உரையும் தெய்வத்தோடு தொடர்புபடுத்திச் சிறப்பிக்கப்படுகின்றது.

முச்சங்க வரலாறு

இவ்வுரைதான் முதன்முதலில் பாண்டிய மன்னர்கள் தமிழ் வளர்க்க நிறுவிய மூன்று சங்கங்களைப் பற்றி விரிவாகக் கூறுகின்றது. ஒவ்வொரு சங்கத்திலும் இருந்த புலவர் பெருமக்கள், அவர்கள் இயற்றிய நூல்கள், சங்கத்தை நிறுவி நடத்திய பாண்டிய மன்னர்கள், சங்கம் இருந்த இடம் போன்ற செய்திகளை விரிவாகக் காணலாம். அப்பகுதி படித்து இன்புறத் தக்கதாகும்.

முச்சங்கங்களின் வரலாற்றினைக் கூறி, இறையனார் அகப் பொருளும் அதன் உரையும், கடைச் சங்க காலத்தை அடுத்துத் தோன்றியவை என்று கூறுகின்றது இவ்வுரை.

அடியார்க்கு நல்லார்,இவ்வுரை கூறும் முச்சங்க வரலாற்றினை மேற்கொண்டு மேலும் சில செய்திகளைச் சேர்த்துக் கூறுகின்றார்.

சில ஐயங்கள்

புலவர் உலகம், இறையனார் அகப்பொருளுரை பற்றிக் காலந்தோறும் பல ஐயங்களை எழுப்பி, ஆராய்ச்சியில் ஈடுபட்டு வந்துள்ளது உரை கூறும் பல செய்திகளை மறுக்கும் வகையில் வினாக்களை எழுப்பியுள்ளது.

1. இறையனார் அகப்பொருள் நூலை, முதல் நூல் என்று அதன் உரை கூறுகின்றது. ஆனால் தொல்காப்பியம் கூறும் அகப் பொருள் கருத்துகள், பலஇடங்களில் இடம் பெற்றுள்ளன.

ஊமைக்குக் காது கேட்காது. காது கேட்காத ஊமைச் சிறுவன், சிறந்த அகப்பொருளுரையைக் கேட்டு மதிப்பிட்டான் என்பது விந்தையாக உள்ளது.

எனவே, இதனை வழிநூல் என்று கொள்ளாமல் முதல் நூல் என்று மறுவது எங்ஙனம் பொருந்தும்?

2. இந்நூல், என்மனார் புலவர் (1,54), என்ப (6,12,25,30,52), மொழிப (18) என்று பல சூத்திரங்களில் முன்னோர் கருத்தையும் மரபையும் (3) சுட்டுகின்றது. இவற்றால், இந்நூலுக்குமுன் வேறு சில அகப்பொருள் நூல்கள் இருந்திருக்கக் கூடும் என்று கருத இடமுண்டு. மேலும் இவ்வுரை, பல தொல்காப்பிய நூற்பாக்களை எடுத்து மேற்கோளாகக் காட்டுகின்றது. அதனால் தொல் காப்பியப் பொருளதிகாரம் இவ்வுரை தோன்றிய காலத்தில் வழங்கி வந்தது என்று உறுதியாகக் கூறலாம். ஆனால், பாண்டிய மன்னன் பொருளதிகாரம் வல்லாரை எங்கும் தேடிக் காணாது வருந்தினான் என்று உரை கூறுகிறது. இவ்வுரை தோன்றிய காலத்திலும் அதற்குப் பல நூற்றாண்டுகள் கழிந்து நமக்கு இக்காலத்திலும் கிடைக்கின்ற தொல்காப்பியப் பொருளதிகாரம் இந்நூல் தோன்றிய காலத்தில் மட்டும் மறைந்து விட்டிருக்குமா?

3. பொருளதிகாரம் வல்ல புலவர் ஒருவரும் இல்லாத போது, இறைனார் அகப்பொருளுக்குச் சங்கப் புலவர் எல்லாரும் சிறந்த உரை எழுதுதலும், தம்தம் உரையே சிறந்தது என்று பாராட்டிக்கொள்ளுதலும் எங்ஙனம் இயலும்? மேலும் அகப் பொருளுக்குச் சிறந்ததொரு உரையினைக் கூறி, தக்க மேற்கோளும் விளக்கமும் காட்டி, விழுமிய பொருளை இனிது விளக்கிய நக்கீரரைப் பொருளதிகாரம் வல்லவர் அல்லர் என்று கூற முடியுமா?

4. இவ்வுரை தோன்றிய காலத்தில், தமிழ் இலக்கணம் நான்காகப் பிரிந்துவிட்டது. தொல்காப்பியர் காலத்தில் இருந்த எழுத்து,சொல், பொருள் என்ற மூன்றுடன் “யாப்பு“ என்ற ஓர் இலக்கணமும் தோன்றி நான்கு பகுதியாகிவிட்டது. ”தமிழ் நான்கு வகைப்படும்: எழுத்தும் சொல்லும் பொருளும் யாப்பும் என” என்றும், ”எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும் யாப்பதிகாரமும் வல்லாரைத் தலைப்பட்டுக் கொணர்ந்து ” என்றும் வரும் உரைப்பகுதிகள், “யாப்பு“ என்ற நான்காவது பகுதி தோன்றியதை உணர்த்தும். அகப்பொருளை மட்டுமே பொருளதிகாரம் என்று இவ்வுரை குறிப்பிடுகின்றது. ஏனைய புறப் பொருளும் அணியும், மெய்ப்பாடும், மரபும் என்ன ஆயின ? அகப்பொருள் ஒன்றைமட்டும் பொருளதிகாரம் என்பது பொருந்துமா?

5. இவ்வுரை பிற ஆசிரியர்களின் கருத்துக்களைப் பல இடங் களில் சுட்டுகின்றது. இனி ஒரு சாரார் என்ப, இனி ஒருவன் சொல்வது, ஒரு சாரார் உரைக்குமாறு, ஒரு திறத்தார் என்ப

ஒருசார் ஆசிரியர் என்ப-என்று பல இடங்களில் இவ்வுரை குறிப்பிடுகின்றது. ஆதலின் இவ்வுரை தோன்றிய காலத்தில், வேறு பல புலவர்கள் இருந்தனர் என்று கருதலாம். அவர்களுடைய கருத்தும் எழுத்தும் நூல் வாயிலாகவோ உரை வழியாகவோ நாட்டில் பரவிச் செல்வாக்குப் பெற்றிருந்தன என்று கருதுவது பொருந்தாதா?

6. இவ்வுரை செய்தவர் கணக்காயனார் மகனார் நக்கீரர் என்று உரை கூறுகின்றது.

”உப்பூரி குடிகிழார் மகனாவான் உருத்திரசன்மனாவான் ளர்” என்று வேறோர் செய்தது இந்நூற்கு ற்கு உரை என்பாரும் உளர்” இடத்தில் குறிக்கப்பட்டுள்ளது. நக்கீரனார் உரை

எழுதி, அவர் எழுதியபடியே உரை வழங்கி வந்திருப்பின் இத்தகைய முரண் பட்ட கருத்து எழுந்திருக்குமா?

காலத்தைப்பற்றி எழும் வினாக்கள்

இறையனார் அகப் பொருளும் அதன் உரையும், கடைச் சங்க காலத்தை அடுத்துத் தோன்றியதாக உரை குறிப்பிடுகின்றது. அக் கருத்தை ஏற்கத் தடைகள் பல உள்ளன.

1. இந் நூலின் உரையில், வார்த்தை, சிட்டர், பிராமணன், சுவர்க்கம், சனம், குமாரசுவாமி, வாசகம், காரணிகன் போன்ற வடசொற்கள் மிகுதியாக இடம் பெற்றுள்ளன. இவை சங்க இலக்கியங்களில் காணமுடியாதவை.

நுண்ணறி வுடையோர் நூலொடு பழகினும்
பெண்ணறி வென்பது பெரும்பே தைமைத்தே

என்றும், களவொழுக்கக்தினை, "இல்லது இனியது நல்லது என்று புலவரால் நாட்டப்பட்டதோர் ஒழுக்கம்" என்றும் களவியலுரை கூறும் கருத்துகள் பழந்தமிழ் இலக்கியங்களில் இல்லாதவை.

3. பரத்தையர் பற்றியும் பரத்தையிற் பிரிவு பற்றியும் இவ்வுரை கூறும் கருத்து விந்தையானது. பரத்தையர், தலை மகனின் பெற்றோரால் தலைமகனுக் கென்று வளர்த்து வைக்கப் பட்ட உரிமை என்றும், தக்க பருவம் வந்ததும் தலைமகனை அப் பரத்தையர் குழலும் யாழும் முழவும் கொண்டு இசை யெழுப்பி அழைப்பர் என்றும், தலைமகன் குரவரது பணி மாறுகொள்ள லாகாது" என்று பரத்தையரைக் காணச் செல்வான் என்று கூறு கின்றது. இக்கருத்துகளையும் சங்க நூல்களில் காண இயலாது.

4. இவ்வுரை, பாண்டிக் கோவையிலிருந்து 325 பாடல்களை மேற்கோளாகத் தருகின்றது.

அக் கோவையின் தலைவனான பாண்டிய மன்னன். நெல்வேலி, வல்லம், விழிஞம், சேவூர், கடையம் முதலான இடங் தனில் தன் பகைவரை வென்ற நெடுமாறன் என்றும் சிறப்பிக்கப்படுகின்றான். (அரிகேசரி பராங்குச் வர்மன்) இவன் செங்கோலோச்சிய காலம் (710-765) எட்டாம் நூற்றாண்டு என்பர். அப் பாண்டிய மன்னன்மீது படுகின்றான். பாடப்பட்ட கோவை தோன்றியது கி.பி. எட்டாம் நூற்றாண்டு ஆயின், அந்நூலிலிருந்து பாடல்களை மேற்கோள் காட்டும் உரையின் காலம் அதற்குப் பிற்பட்டது என்பது விளங்கும்.

நக்கீரர் உடை கண்டபின், ஒன்பது தலைமுறைவரை வாய் மொழியாகவே உரை வழங்கி வந்ததால், காலந்தோறும் பல கருத்துகள் உரையில் சேர்ந்திருக்கும் என்றும், வட சொற்கள் கலந்திருக்கும் என்றும், உரையை ஏட்டில் எழுதிய காலத்தில் பாண்டிக் கோவையிலிருந்து பல பாடல்களை மேற்கோளாகச் சேர்ந்திருக்கக்கூடும் என்று சிலர் கூறுகின்றனர்.

ஆராய்ச்சியாளர் கருத்து

இறையனார் அகப்பொருள் உரையாசிரியரைப் பற்றி ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ள கருத்துகள் நம்மைமேலும் சிந்திக்கத் தூண்டுகின்றன. அவற்றைக் காண்போம்."

டாக்டர் உ.வே.சாமிநாத ஐயர்: ”இறையனார் அகப் பொருளுக்கு இப்பொழுதுள்ள உரை நக்கீரரால் இயற்றப் பட்டதன்று. சிலப்பதிகாரப் பாடல்கள் அதில் மேற்கோள்களாக வந்துள்ளன. ஆகையால், நக்கீரர் அதை இயற்றியிருக்க மாட்டாரென்று நினைக்கிறேன். அவர் மாணாக்கர் பரம்பரையில் உரை மட்டும் வந்ததென்று தோற்றுகின்றது. மேற்கோள்கள் பிற்காலத்து ஒருவரால் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும்”! (1. சங்கத் தமிழும் பிற்காலத் தமிழும், பக்கம் 159.)

தஞ்சை சீனிவாசப் பிள்ளை: ”ஊர் பெயர் தெரியாத ஒருவரால் களவியலுரை பிற்காலத்து எழுதப்பட்டது என்றும், நக்கீரர் எழுதியது அன்று என்றும் புலப்படும்”2 (**2. தமிழ் வரலாறு 1. பக்கம் - 27.**

டாக்டர் மு.வரதராசனர்: ”இறையனார் அறுபது சூத்திரங் களில் களவியல் என்ற அகப்பொருள் இலக்கணம் எழுதினார். நக்கீரர் என்னும் பெயர் பூண்ட பிற்காலப் புலவர் ஒருவர் இதற்கு விரிவான உரை எழுதியுள்ளார்.” **(3. கலைக் களஞ்சியம் 5, பக்கம் 484.)**

வாக்கியப் பிணைப்பு

பிற உரைகளுக்கு இல்லாத சிறப்புகள் பல, இவ்வுரைக்கு உண்டு, அதனால்தான் இது. மற்ற உரைகளைவிடக் சுற்றோர் நெஞ்சத்தில் சிறந்த இடத்தைப் பெற்றுள்ளது.

ஒரு வாக்கியத்தை முடித்து மற்றொரு வாக்கியத்தைத் தொடங்கும்போது, முடித்த வாக்கியத்தின் இறுதியில் உள்ள வினைமுற்றுச் சொல்லை, வினையெச்சமாக்கி அதனைத் தொடங்கும் வாக்கியத்தின் முதலில் வைத்துச் செல்வதை இவ் வுரை முழுவதும் காணலாம்.

”ஒரு ஞான்று நீயும் ஆயமும் என்னிற் சிறிது நீங்கினாயாக, ஈங்கு நின்றேன் ஒரு மணிச்சுனை கண்டேன்: கண்டு வேட்கையான் ஆடுவான் இழிந்தேன் இழுச்சிக் குட்டம் புக்கேன் புக்குத் ”தோழியோ!” என நீ கேளாயாயினாய் ஆக, ஒரு தோன்றல் வந்து தோன்றி எனது துயர் நீக்குதற்காகத் தன்கை நீட்டினான் நீட்ட யானும் மலக்கத்தான் நின்கையெனப் பற்றினேன் பற்ற வாங்கிக் கரை மேல் நிறீஇ நீங்கினான்.”

இப்பகுதியில் வினைமுற்றும் வினையெச்சமும் தொடர் புடன் அமைந்திருப்பதைக் காணலாம்.

தெளிவு

நுட்பமான பொருளையும் அரிய கருத்தையும் இவ்வுரை மிகவும் தெளிவாக விளக்குகின்றது. ஒருமுறை கற்றவுடன் கருத்து விளங்கிவிடுகின்றது.

களவொழுக்கம் நன்மை பயக்கும் இயல்பினது என்பதைப் பின்வருமாறு விளக்குகின்றது:

”களவு என்னும் சொற் கேட்டு, காமம் தீதென்பதூஉம் அன்று மற்றும் அவை நல்ல ஆமாறும் உண்டு என்னை,ஒரு பெண்டாட்டி தமரொடு கலாய்த்து நஞ்சுண்டு சாவல் என்னும் உள்ளத்தளாய் நஞ்சு கூட்டி வைத்து, விலக்குவாரை இல்லாத போழ்து உண்பல் என்றவிடத்து. அருளுடையான் ஒருவன் அதனைக் கண்டு, “இவள் இதனை உண்டு சாவாமற் கொண்டு போய் உகுப்பல்“ என்று அவளைக் காணாமே கொண்டுபோய் உகுத்திட்டான்

அவளும் சன நீக்கத்துக்கண் நஞ்சுண்டு சாவான் சென்றாள் அது காணாளாய்ச் சாக்காடு நீங்கினாள். அவன் அக் களவினான் அவளை உய்யக் கொண்டமையின் நல்லூழிற் செல்லும் என்பது.மற்றும் இதுபோல்வன களவாகா, நன்மை பயக்கும் என்பது."

செய்யுள் நடை

எதுகை மோனைகள் அமைந்து, இனிய ஓசையுடைய செஞ் சொற்களால் ஆன செய்யுள் நடை பல இடங்களில் உள்ளன.

கூழைப் பருவத்து மாழை கலந்த ஏழ்மை நீர்மை

என்றும்,

அந்தி வானகட்டுச் செங்கோட்டு
மதர்வைக் குழவித் திங்களைக் கண்டு

என்று வருகின்ற இடங்கள் உள்ளத்தைக் கவர்கின்றன.

வஞ்சிப்பாவும் அகவற்பாவும் பல அடிகளாகத் தொடர்ந்து வருகின்றன:

கருவமைந்த மாநகரிற்கு
உருவமைந்த வாயில்மாடம் போலவும்,
அளப்பரிய ஆகாயத்திற்கு
விளக்கமாகிய திங்களும் ஞாயிறும் போலவும்
வகைமாண்ட நெடுஞ்சுவர்க்குத்

தகைமாண்ட பாவை போலவும்

என்றும்,

புதையிருள் இரியல் போக,
பொன்தாழ் அருவி மணிநெடுங்கோட்டு
உதயம் என்னும் மணிவரை யுச்சி
உலகு துயில் பெயர்த்துத் தோன்றிய
வளர்ஒளி இள ஞாயிற்றின்
வனப்பொழித்த திருவொளி மழுங்கியது

என்றும்,

பொரிப்புன்கும் புன்னாகமும்
முருக்கொடு முகைசிறந்து
வண்டறைந்து தேனார்ந்து
வரிக்குயில்கள் இசைபாட,
தண்தென்றல் இடைவிராய்த்
தனியவரை முனிவுசெய்யும்
பொழிலது நடுவண்

என்றும் வருகின்ற இடங்களில் வஞ்சிப்பா நடை உள்ளது.. அகவற்பா நடை காணப்படும் இடங்கள் உள்ளன. அவற்றுள் சில:

கோங்கும் வேங்கையும் குரவமும் விரிந்து
நாகமும் திலகமும் நறவும் நந்தியும்

என்றும்,

விசும்பு துடைத்துப் பசும்பொன் பூத்து
வண்டு துவைப்பத் தண்டேன் துளிப்பதோர்
வெறியுறு நறுமலர் வேங்கை கண்டாள்

என்றும்.

கருங்குழற் கற்றை மருங்கு திருத்தி
அளகமும் நுதலும் தகைபெற நீவி
ஆகமும் அணிபெறத் தைவந்து
குளிர்ப்பக் கூறித் தளிர்ப்ப முயங்கி

என்றும் வருகின்ற இப் பகுதிகளில், விழுமிய ஓசை, வளமான சொற்கள், நயமான கற்பனை, கற்கும் தோறும் இன்பம் பயக்கும் இலக்கியச் சுவை ஆகிய யாவும் உள்ளன.

பொருளும் விளக்கமும்

சில சொற்களின் பொருளைத் தெளிவாக இவ்வுரை விளக்குகின்றது. "அன்பு" என்பதற்குப் பின்வருமாறு விளக்கம் தருகின்றது.

"குடத்துள் விளக்கும், தடற்றுள் வாளும் போல இதுகாண் அன்பு என்று போதத் திறந்து காட்டலாகாது. அன்புடையரான குணங்கண்ட விடத்து இவை உண்மையான் ஈங்கு அன்பு உண்டென்று அனுமித்துக் கொள்ளற்பாற்று. அன்புடையரான குணம் யாவையோ எனின் - சாவிற் சாதல்,நோவின் நோதல் ஒண்பொருள் கொடுத்தல், நன்கினிது மொழிதல், புணர்வு நனி வேட்டல், பிரிவு நனியிரங்கள் என இவை".

இவ்வாறே இவ்வுரை தலைமகனுக்குரிய அறிவு நிறை ஓர்ப்பு கடைப்பிடி என்ற நான்கு குணங்களையும், தலைமகளுக்குரிய நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்ற நான்கு குணங்களையும் விளக்கிக் கூறுகின்றது (சூத்-2).

தமிழ் என்பதற்கு, இவ்வுரை அகப்பொருள் என்று பொருள் கூறுகின்றது."இந்நூல் என்நுதலிற்றோ எனின், தமிழ் நுதலிற்று" என்று கூறுவதால் இக்கருத்தை அறியலாம்.

இலக்கணக் குறிப்புகள்

இவ்வுரையில் பல இலக்கணக் குறிப்புகள் உள்ளன. பல இலக்கணத் தொடர்களுக்கு நல்ல விளக்கம் கூறப்பட்டுள்ளன.

பொதுப்பாயிரம், சிறப்புப்பாயிரம் ஆகியவற்றை இனிது விளக்கி அவற்றின் உட் பிரிவுகளையும் உரை கூறுகின்றது. ஐந்திணைக்கும் உரிய முதல், கரு, உரிப் பொருள்களும், எண்வகை மணமும் விரிவாக விளக்கப்படுகின்றன.

ஆற்றொழுக்கு முதலிய நான்கு வகையான சூத்திரக் இடக்கையும் பொருள் கோளும் தக்க எடுத்துக்காட்டுகளுடன் விரித்துரைக்கப்படுகின்றன, விற்பூட்டு, விதலை யாப்பு, பாசி

நீக்கு, கொண்டு கூட்டு, ஒருசிறைநிலை என ஐந்து வகையாகப் பொருள்கோள் கூறப்பட்டுள்ளன. இவற்றை ஏனைய உரை யாசிரியர் கூறும் கருத்துக்களுடன் ஒப்பிட்டுக் காணலாம். கருத்தன், ஏதுக் கருத்தன், கருமக் கருத்தன் ஆகியவற்றிற்கு நல்ல விளக்கம் இவ்வுரையில் கூறப்பட்டுள்ளது.

உவமைக் களஞ்சியம்

இவ்வுரை முழுவதும் சிறந்த உவமைகள் பல உள்ளன. வேறு எவ்வுரையிலும் இத்தனை உவமைகள் இல்லை என்னலாம். உவமைகளின் சிறப்பே, உரையாசிரியரின் புலமை மாண்பை வெளிப்படுத்தும் சிறந்த கருவியாய் உள்ளது. இவ்வுரையில் உள்ள பல உவமைகளை, பிற்கால உரையாசிரியர்கள் எடுத்தாண் டுள்ளனர்.

“கொழுச் சென்றவழித் துன்னூசி இனிது செல்லுமாறு போல˙ கருவமைந்த மாநகர்க்கு உருவமைந்த வாயில் மாடம் போலவும் அளப்பரிய ஆகாயத்திற்கு விளக்கமாகிய திங்களும் ஞாயிறும் போலவும் தகைமாண்ட நெடுஞ்சுவர்க்கு வகைமாண்ட பாவை போலவும் - என்று பாயிரத்தின் சிறப்பை விளக்க இவ் வுரையாசிரியர் கூறிய உவமைகளை நச்சினார்க்கினியர் தொல் காப்பியப் பாயிர உரையில் எடுத்தாளுகின்றார் ஏனைய உரை யாசிரியர்களும் மேற்கொள்ளுகின்றனர்.

கடுத்தின்னாதானை, கட்டிபூசிக் கடுத்தீற்றியவாறு போல் என்ற உவமையால் அக்கால மருத்துவ முறையினை அறியலாம்.

”இருட்டகத்து விளக்குக் கொண்டு புக்கால், விளக்கு வாராத முன்னரும் இருள் நீங்காது விளக்குவந்த பின்னரும் இருள் நீங்காது விளக்கு வருதலும் இருள் நீக்கமும் உடனே நிகழும். அதுபோலக் காட்சியும் ஞானமும் ஒழுக்கக் குணங்களது தன்மையழிவும் உடனே நிகழும். விளக்கினைக் காட்சியாகக் கொண்டு, ஞானவொழுக்கங்களை இருளாகக் கொள்க” என்று, உவமை, பொருள் ஆகிய இரண்டையும் இனிது விளக்குகின்றார் உரையாசிரியர்.

தலைவனும் தலைவியும் ஒன்று சேர்தல், “வடகடலிட்ட ஒரு நுகம் ஒரு துளை, தென்கடலிட்ட ஒரு கழி சென்று கோத்தாற் போலவும், வெங்கதிர்க் கனலியும் தண்கதிர் மதியமும் தம் கதி வழுவித் தலைப் பெய்தாற் போலவும்” அரிதின் நிகழும் என்று கூறப்பட்டுள்ளது (சூத்.2). ”வேட்கை எல்லா உணர்வினையும் நீக்கித் தானேயாய் நாண்வழிக் காசு போலவும், நீர்வழி மிதவை போலவும் பான்மை வழியோடி இருவரையும் புணர்விக்கும்” என்று தக்க உவமைகளால் விளக்கப்படுகின்றது. தலைமகளைப் பிரிந்து வருந்தும் தலைமகள்நிலை பல உவமைகளுடன் புனையப் படுகின்றது.

”கார் மருங்கின் மின்னுப் போலவும், நீர் மருங்கிற கொடிபோலவும், தளிரும் முறியும் ததைந்து, குளிரும் நளிரும் கவினி எழா நின்றதோர் கவின்பெறு கொடிப் போலும் காரிகை, கண்ணாடி மண்டிலத்து ஊது அவி போலக் காண ஒளி மழுங்கி கனல் முன் இட்ட மெழுகுப்பாவை போல மனம் உருகிப் பசந்து காட்டினாள்.”

தலைவியைக் காணாது வருந்தும் தலைவனைப் பாங்கன் இடித்துரைக்கும் பகுதி, பல இனிய உவமைகளுடன் பொலி ஒன்றது: "குன்றம் உருண்டால் குன்றி வழியடை யாகாதவாறு மூடுங்கலம் போலவும், எம்பெருமான் நின் உள்ளம் அறிவு நிறை ஓர்ப்புக் கடைப்பிடியின் வரைத்தன்றிக் கைம்மிக்கு ஓடுமேயெனின் நின்னைத் தெருட்டற் பால நீர்மையார் உளரோ?"" (சூத்.3)

"மூடியிருந்து வேவதோர் கொள்கலம் மூடியது திறந்த விடத்து, ஆவி எழுந்து முன் நின்ற வெப்பம் நீங்கினாற் போல" என்ற சிறந்த உவமை இருமுறை இடம் பெறுகின்றது (சூத். 18,30)

"வேலேறுபடத் தேளேறு மாய்ந்தாற் போல" (சூத்.2) பள்ளத்து வழி வெள்ளம் போல" (சூத்.3), "கோடையால் தெறப்பட்டு வாடி நின்ற சந்தன மரம் மழை பெற்றுத் தளிர்த்தாற் போல" (சூத்.3), "கெடுத்துத் தேடும் நன்கலம் எடுத்துக் கொண்டாற் போன்று" (சூத்.3) ஆகிய உவமைகள் மிகச் சிறப்பாய்ப் பொருளை விளக்குகின்றன.

மேற்கோள் செய்யுட்கள்

இவ்வுரை, அகநானூறு நற்றிணை குறுந்தொகை ஆகிய தொகை நூல்களிலிருந்து பல செய்யுள்களை ஆங்காங்கே மேற்கோள் காட்டியுள்ளது.

இடம்விளங்கா மேற்கோள் பாடல்கள் சில உள்ளன. அவை இலக்கியச்சுவை மிகுந்தவை கற்கும் தோறும் இன்பமூட்ட வல்லவை. "பையுள் மாலை" (சூத்.7), "ஏனல் காவல்" (சூத்7). "வெள்ளாங் குருகின்" (சூத்.9), "நெருநலு முன்னாள்" (சூத்.12 என்னும் தொடக்கத்தையுடைய அகப் பாடல்கள் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. அவை, தொகை நூலில் இடம் பெறாத பழைய அகப்பாடல்கள். தொகுத்தவை போக எஞ்சிய பாடல்களாக இவை இருந்திருக்கக்கூடும். பிற உரையாசிரியர் களும் பல பழம் பாடல்களை எடுத்துக் காட்டுகின்றனர்.

காலத்தின் அடிச்சுவடு

இவ்வுரை, பலவிடங்களில் தான் தோன்றிய காலத்து மக்களின் வாழ்க்கை, நாகரிகம், அரசியல், பழக்கவழக்கம் ஆகிய வற்றைக் குறிக்கின்றது.

கணவனை இழந்த பெண்டிர்க்கு அக்கால மக்களிடம் மதிப்பும் செல்வாக்கும் இல்லை என்பதையும், கைம்பெண்டிர் புறக்கணிக்கப்பட்டனர் என்பதையும் பின்வரும் உரைப்பகுதி உணர்த்தும்:

"கண்டீரன்றே, குடுமிக்கூந்தலில் நறுநெய் பெய்து, கொண்டானிற் பின்னையும் இருந்து, சோறு தின்று வாழ்கின்றாள் ஓ கொடியளே காண்" என்று நித்தல் பழிதூற்றப்பட்டிருந்து பின்னுமே ஒருநாட் சாவல் அதனான் இன்றே சாவல்" எனச் சாவவும் பெறும்" (சூத்.!)

அக்காலத்தில் இருந்த தண்டனைகளைக் கீழேவரும் பகுதி உணர்த்துகின்றது:

"மற்று உலகத்துக் களவாயின எல்லாம்,கைகுறைப்பவும் கண் சூலவும் கழுவேற்றவும் பட்டுப் பழியும் பாவமும் ஆக்கி நரகத் தொடக்கத்துத் தீக்கதிகளில் உய்க்கும்"

திருச்சிராப்பள்ளியின் ஒரு பகுதியான உறையூர் முற்காலத்தில் சிறப்புடன் விளங்கிற்று என்பதை, "ஊர் எனப் படுவது உறையூர் என்ற விடத்துப் பிறவும் ஊருண்மை சொல்லி, அவற்றுள் எல்லாம் உறையூர் சிறப்புடைமை சொல்லுப" என்ற பகுதியால் உணரலாம்.

அக்கால அரசியலை உணரச் சில பகுதிகள் துணை புரிகின்றன. மன்னன், அரசியல் தலைவர்களில் தகுதி வாய்ந் தவர்க்கு "ஏனாதி" என்ற பட்டம் அளித்து, மோதிரம் அணி வித்தான் என்பதை, "ஏனாதி மோதிரம் செறித்தல் திருவுடையான் ஒருவன், ஏனாதி மோதிரம் செறிக்கும் அத்திரு அவன் செறிகின்ற பொழுதே உண்டாயிற்று அன்று முற்கொண்டு அமைந்து கிடந்தது" (சூத் -2) என்ற பகுதியால் உணரலாம். ஊர்காக்கும் காவலாளர் இரவில் கை விளக்கினோடு திரிந்தனர் என்பதை, "ஊர்காத்தல் இடம் காத்தல் என இவற்றைக் கடிது காத்தும் என்று, காவலாளர் ஏமஞ் சூழ்ந்து கைவிளக்கினோடு திரிவார்" என்ற பகுதி உணர்த்தும் (சூத்-16)

அக்காலப் பெருநகரங்களில் நடந்த திருவிழாக்களை "மதுரை ஆவணி அவிட்டமே, உறையூர்ப் பங்குளி உத்தர கருவூர் உள்ளி விழாவே என இவை போல்வன" என்ற பகுதி குறிப்பிடுகின்றது.

இவ்வாறு இவ் உரையாசிரியர் வாழ்ந்த காலத்தின் அடிச்சுவடு இவர் இயற்றிய உரைநூலில் நன்கு பதிந்துள்ளது.

உலக அறிவு

இவ்வுரையாசிரியர் உலக அறிவு மிக்கவர் என்பதற்குச் சான்றுகள் பல தரலாம்.

பரத்தையிற் பிரிந்த கிழவோன் மனைவி
பூப்பின் புறப்பாடு ஈராறு நாளும்
நீத்தகன்று உரைதல் அறத்தாறு அன்றே

என்ற சூத்திரத்திற்குப் பின் வருமாறு விளக்கம் எழுதித் தம் உலக அறிவைப் புலப்படுத்துகின்றார்:

"பூப்புப் புறப்பட்ட முந்நாளும் உள்ளிட்ட பன்னிரு நாளும் கூடி உறைய, படுங்குற்றம் என்னோ எனின்- பூப்புப் புறப்பட்ட ஞான்றுநின்ற கரு, வயிற்றிலே அழியும் இரண்டாம் நாளின் நின்ற கரு, வயிற்றிலே சாம் மூன்றாம் நாள் நிற்கும்கரு, குறுவாழ்க்கைத் தாம் வாழினும் திரு இன்றாம் அதனால் கூடப்படாது என்ப"

செல்வர் வாழ்ந்த பெரிய இல்லங்களின் பகுதிகளைப் பின்வருமாறு இவர் விளக்குகின்றார்:

"அட்டில் (சமையல் அறை), கொட்ட காரம் (நெல் முதலிய பண்டம் வைக்கும் அறை), பண்டகசாலை (அணிகலன் முதலியவை வைக்கும் மனையகத்து உறுப்பு), கூட காரம் மேன்மாடம்), பள்ளியம்பலம் (உறங்கும் இடம்), உரிமையிடம் (அந்தப் புரம்), கூத்தப் பள்ளி (நாடக அரங்கு) எனும் மனையகங் களும் செய் குன்றும் இளமரக்காவும் பூம்பந்தரும் விளையாடும் இடமும் எனும் இல்வரையகங்களும்" (சூத். 21)

வாய்மொழிக் கல்வி

பாடம் சொல்லுகின்ற முறையில்,மாணவர் எழுப்பும் வினாவும், அதற்கு ஆசிரியர் விடுக்கும் விடையுமாய்ப் பல பகுதிகள் உள்ளன. அவற்றுள் சில:

”பாயிரம் என்ற சொற்குப் பொருள்யாதோ எனின் புறவுரை என்றவாறு. ஆயின் நூல் கேட்பான் புகுந்தோன் நூல் புறவுரை கேட்டு என்பயன் எனின், நூற்குப் புறனாக வைத்தும் நூற்கு இன்றியமையாதது, ஆதலின் என்க என் போலவோ எனின், கருவமைந்த மாநகர்க்கு உருவமைந்த வாயில் மாடம் போலவும், அளப்பரிய ஆகாயத்திற்கு விளக்கமாகிய திங்களும் ஞாயிறும் போலவும். தகை மாண்ட நெடுஞ்சுவர்க்கு வகைமாண்ட பாவை போலவும் என்பது. ஆதலின் பாயிரங் கேட்டே நூல் கேட்கப்படும்.”

”புணராத முன்னும் புணர்ந்த பின்னும் ஒத்த அன்பினனாய் தின்ற தலைமகன் பிரியும் என்றுமோ பிரியான் என்றுமோ எனின், பிரியும் என்றுமே எனின், அன்பிலன் ஆயினானாம் என்னை, பிரிவு அன்பிற்கு மறுதலையாகலான். இனிப் பிரியானே எனினும், அன்பிலன் ஆயினானாம். என்னை? பிரியாதிருப்ப இவ்வொழு கலாறு பிறர்க்குப் புலனாம் ஆகவே அவள் இறந்து படும் அவள் இறந்து பாட்டிற்குப் பரியான் ஆயினானாம். ஆகவே மூன்றாவது செய்யப்படுவது இல்லையாலோ எனின் பிரியும் என்பது. ஆயின், அன்பின்மை தங்காதோ எனின், தங்காது. பிரிவும் அன்பினானே நிகழுமாறு சொல்லுதும்.”

இப் பகுதிகளை வினா விடை வடிவில் ஒன்றன் கீழ் ஒன்றாக எழுதினால், பாடம் சொன்ன பண்டைய முறையின் அமைப்பு வெளிப்படும்.

தூண்டுகோல்

களவியலுரைப் பகுதிகளில் சில, ஆராய்ச்சிக்குத் தூண்டு கோலாய் அமைகின்றன.

கடைச்சங்கப் புலவர்கள் இயற்றிய நூல்களைப் பின் வருமாறு உரை கூறுகின்றது:

”அவர்களாற் பாடப்பட்டன நெடுந்தொகை நானூறும் குறுந்தொகை நானூறும் நற்றிணை நானூறும் புறநானூறும் ஐங்குறு நூறும் பதிற்றுப் பத்தும் நூற்றைம்பது கலியும் எழுபது பரிபாடலும் கூத்தும் வரியும் சிற்றிசையும் என்று இத் தொடக்கத்தன.”

இங்கே “பத்துப்பாட்டு“ இடம் பெறவில்லை! இவ்வுரை தோன்றிய காலத்தில் பத்துப்பாட்டு, தொகுக்கப் பெறவில்லை என்பதா?

களவியலுரை, குறிஞ்சிப் பாட்டைப் பெருங் குறிஞ்சி என்ற பெயருடன் மேற்கோள் காட்டுகின்றது. ஆதலின், பத்துப்பாடல் களும் தனித்தனிப் பெயருடன் வழங்கி இருக்க வேண்டும். இவ்வுரை தோன்றிய காலத்திற்குப் பின்னர், பத்துப் பாடல்களும் தொகுக்கப் பெற்று, “பத்துப்பாட்டு“ என்று பெயர் இடப்பட்டிருக் வேண்டும்.

களவியலுரை காலத்தில் “யாப்பிலக்கணம்“ பொருள் இலக்கணத்திலிருந்து பிரிந்து, தனி இலக்கணம் ஆயிற்று, தொ காப்பியர் காலத்தில் மூன்று பகுதியாக இருந்த இலக்கணம், நான்காயிற்று. இதனை எழுத்து சொல் பொருள் யாப்பு என

எழுத்ததி காரமும் சொல்லதி காரமும்
யாப்பதிகாரமும் வல்லாரைத் தலைப்பட்டுக் கொணர்ந்து
"பொருளதிகாரம் வல்லாரை எங்கும் தலைப்பட்டிலேம்
என்று வந்தார்.

என்ற பகுதியால் உணரலாம்.

தோன்றிப் பூவை (மருதோன்றி-மருதாணி), பிற்காலத்து உரையாசிரியர்கள் "காந்தள் மலர்" என்று தவறாகக் கருதிப் பொருள் எழுதி விட்டனர். ஆனால் களவியலுரை, காந்தளைக் குறிஞ்சி நிலத்துக்குரிய பூவாகவும், தோன்றியை முல்லை நிலத்துக்குரிய பூவாகவும், (கருப் பொருள்களை விளக்கும் இடத்தில்) குறிப்பிடுகின்றது.

இத்தகைய இடங்கள் ஆராய்ச்சியாளர் சிந்தனையைத் தூண்டுகின்றன.

புகழ்பூத்த புலமை

இறையனார் அகப் பொருளுரையை வழங்கிய உரையா சிரியரை மறைமலையடிகள் பின்வருமாறு புகழ்கின்றார்:

இறைவன் கண்ட பொருள்வரம்பு அறிந்து
சொல்நெறி மாட்சியும் பொருள் நெறிமாட்சியும்
அளவையின் விளைவும் தெளிவுற விரித்து
சுவைபெற உரைத்த நவையில் புலமையும்
மறைப்பொருள் குறிப்பு நெறிப்பட ஆய்ந்து,
சிவனையே முதல்எனச் சிவணிய காட்சியும்
சீரிதின் இயைந்த கீரன் (திருவொற்றியூர் மும்மணிக்கோவை -19 (55-61)

இத்தகைய புகழ்மொழி பல கூறிப் புலவர் உலகம் காலந் தோறும் இவரைப் போற்றும் புகழ் பூத்த புலமையாளராய் -உரை யாசிரியர்களுக்குத் தலைவராய் இவர் விளங்குவார்.

2. தொல்காப்பிய உரையாசிரியர்கள்

தொல்காப்பியம் என்னும் பழம்பெரும் இலக்கண நூல் தமிழ் மொழியின் தொன்மைக்கும் சிறப்பிற்கும் சான்றாய் விளங்குகின்றது. வளமாக வாழ்ந்த தமிழினத்தின் உயர்ந்த உணர்த்தும் கொள்கைகளையும் எண்ணங்களையும் உலகிற்கு உ விழுமிய நூலாய் இது ஒளிர்கின்றது. இதனை இயற்றிய தொல்காப்பியரின் குரல், காலத்தையும் இடத்தையும் கடந்து வந்து தெளிவாக ஒலிக்கின்றது. தொல்காப்பியம் தனக்குப் பின் தோன்றிய பல இலக்கண இலக்கியங்களுக்கு எல்லாம் தலைமை தாங்கி வழி காட்டி நடத்திச் செல்லுகின்றது.

தொல்காப்பியத்தின் கருத்தை உணரவும் உணர்த்தவும் புலவர் பெருமக்கள் காலந்தோறும் முயன்று வந்தனர். அம் முயற்சியின் விளைவாய் உரைகள் பல பெருகின. உரைவளம் கொண்ட பெருநூலாய்த் தொல்காப்பியம் திகழ்கின்றது.

தொல்காப்பியம் தோன்றிய காலத்தைப்பற்றி அறிஞர் பெரு மக்களிடையே கருத்து வேறுபாடு மிகுதியாக உண்டு. இந்நூல் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பது பெரும் பான்மையோர் ஒப்புக்கொண்ட முடிவாகும். தொல்காப்பியர் பா பொருளதிகாரத்தில், தமிழகத்தை ஆண்ட மூவேந்தர்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றார். கி.பி. 250-க்குப் பிறகு மூவேந்தர்கள் ஆட்சி மறைந்துவிட்டதை வரலாறு கூறுகின்றது. எனவே, தொல் காப்பியர் மூவேந்தரும் செங்கோலாச்சிய காலத்தில் தொல் காப்பியத்தை இயற்றினார் என்னலாம்.

தொல்காப்பியத்திற்கு இளம்பூரணரே முதன்முதலில் உரை கண்டார். இவரது காலம் பதினோராம் நூற்றாண்டு என்பர். இளம்பூரணர் காலம் வரை - தொல்காப்பியம் தோன்றிப் பலநூறு ஆண்டுகள் வரை, உரை இல்லாமலே கற்கப்பட்டு வந்ததா என்ற வினா எழக்கூடியதே. ஆனால் இந்நாள் வரை, இளம்பூரணரே தொல்காப்பியத்தின் முதல் உரையாசிரியர் என்ற கருத்து நிலவி வருகின்றது. இளம்பூரணர் தம் உரைகளில் பிற உரைகளாகச் சில கருத்துக்களைத் தெரிவிக்கின்றார். உரை இயற்றியவர் பெயரைக் குறிப்பிடவில்லை.

இளம்பூரணர் தொடங்கி வைத்த உரைப்பணி, பல வகையாக வளர்ச்சி பெற்றது. இவரது கருத்துகளை ஏற்று, புதிய இலக்கண நூல்களைச் சிலர் செய்தனர். எழுத்ததிகாரம். சொல்லதிகாரம் ஆகிய இரண்டிலும் இவர் கூறிய கருத்துகளைக் கொண்டு, நேமிநாதமும் நன்னூலும் தோன்றின. பின்னால் தோன்றிய அகம், புறம், யாப்பு, அணி பற்றிய நூல்களும், ஆங்காங்கே இவரது கருத்துகளை மேற்கொண்டுள்ளன.

தொல்காப்பியம் முழுமைக்கும் முதன் முதலாக உரை இயற்றியதால் இளம்பூரணர்க்கு “உரையாசிரியர்“ என்ற பெயர் ஏற்பட்டது. இவருக்குப் பின் வந்த தொல்காப்பிய உரையா சிரியர்கள் அனைவரும் இவர் உரையைக் கற்றுத் தெளிந்த பின்னரே தம் கருத்தை விளக்கிப் புதிய உரை கண்டனர்.

இளம்பூரணர்க்குப் பின்னர்த் தோன்றிய சேனாவரையர் சொல்லதிகாரத்திற்கு மட்டும் சிறந்ததோர் உரை இயற்றினார்.

பேராசிரியர், பொருளதிகாரத்திற்கு விரிவாக உரை இயற்றினார். நச்சினார்க்கினியர், தொல்காப்பியம் முழுமைக்கும் விரிவான உரை கண்டார். இவருக்குப் பின், தெய்வச் சிலையார், கல்லாடர் ஆகிய இருவரும் சொல்லதிகாரத்திற்கு மட்டும் உரை இயற்றினர். பழைய உரை ஒன்றும் சொல்லதிகாரத்திற்கு உள்ளது. பழங்காலத்தில் தோன்றிய உரைகள் இவைகளே ஆகும்.

பழைய உரை ஒவ்வொன்றிற்கும் ஒவ்வோர் இயல்பு உள்ளது. இளம்பூரணர் உரை தமிழ் மரபை உணர்த்தும் உரை என்னலாம். சேனாவரையர் உரை வடமொழி இலக்கணக் கொள்கையைத் தமிழின்மீது திணிக்கும் உரை என்பது பொருந்தும். பேராசிரியர் உரை இலக்கண இலக்கிய ஆராய்ச்சி நிரம்பிய உரையாக உள்ளது. நச்சினார்க்கினியர் உரை இலக்கியச் சுவை நுகர்ச்சிக்கு உறுதுணை புரிகின்றது. தெய்வச்சிலையார் உரையில் சில இடங்களில் புதுமை ஒளி காணப்படுகின்றது. கல்லாடர் உரை முன்னைய உரைகளைத் தழுவி எழுதப்பட்ட சார்பு உரையாக உள்ளது.

பதினேழாம் நூற்றாண்டில் மீண்டும் தொல்காப்பிய ஆராய்ச்சி தொடங்கியது. இதனைத் தொடங்கி வைத்தவர் சிவஞான முனிவர். தொல்காப்பியப் பாயிரம், முதற் சூத்திரம் ஆகிய இரண்டிற்கும் விருத்தியுரை எழுதினார் இவர். இவ்விருத்தியுரை இலக்கண ஆராய்ச்சிக் கருவூலமாய்த் திகழ்கின்றது. இவரை அடுத்துச் சோழவந்தான் அரசன் சண்முகனார் தொல்காப்பியப் பாயிரத்திற்கும் முதற் சூத்திரத் திற்கும் விருத்தியுரை எழுதினார். அரசன் சண்முகனார் எழுத்ததி காரத்தில் நுன் மரபு, மொழி மரபு என்ற இரு பகுதிகளுக்கும் உரை எழுதினார் என்றும், அவ்வுரைப் பகுதிகள் கிடைக்கவில்லை என்றும் கூறுவர்.**(1. தொல்காப்பியச் செல்வம் (1965) பக்கம் 113.)**

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரி பராக இருந்து, தமிழ்த்தொண்டு ஆற்றிய டாக்டர் ச. சோமசுந்தர பாரசியார் பொருளதிகாரத்தில் அகத்திணையியல், புறத்திணை பியல், மெய்ப்பாட்டியல் ஆகிய மூன்றிற்கும் ஆராய்ச்சி உரை இயற்றியுள்ளார்.

பின்னங்குடி ச. சுப்பிரமணிய சாஸ்திரியார் சொல்லதி காரத்திற்கு உரை இயற்றியுள்ளார். இவ்வுரையில் வடமொழி இலக்கணக் கொள்கையை வலிந்து புகுத்திய இடங்களும், தமிழ் மொழி மரபுடன் பொருந்தாத முடிபுகளும் உள்ளன.

தொல்காப்பியத்தையும், உரைகளையும் பதிப்பித்த போது அடிக் குறிப்பாகப் பல அரிய ஆராய்ச்சிக் குறிப்புரைகளைப் பலர் எழுதியுள்ளனர். இளவழகனார், சி. கணேசையர் இருவரும் தொல்காப்பியம் முழுமைக்கும் குறிப்புரை எழுதியுள்ளனர். எழுத்ததிகாரத்திற்கு ஞா. தேவநேயப் பாவாணரும், சொல்லதி காரத்திற்கு ஆ பூவராகம் பிள்ளையும், கு. சுந்தரமூர்த்தியும் குறிப்புரையும் விளக்கமும் எழுதியுள்ளனர்.

இக்காலத்தில் தொல்காப்பிய ஆராய்ச்சி நூல்களிலும் பல உரைவிளக்கங்கள் இடம் பெற்றுள்ளன. மு. இராகவ ஐயங்கார் இயற்றிய பொருளதிகார ஆராய்ச்சி, கா. சுப்பிரமணிய பிள்ளை இயற்றிய பழந்தமிழர் நாகரிகம் (பொருளதிகார ஆராய்ச்சி), கி. வா. ஜகந்நாதன் எழுதிய பயப்படாதீர்கள் (எழுத்ததிகார விளக்கம்),வாழும் தமிழ் (சொல்லதிகார ஆராய்ச்சி). வெங்கடராஜுலு ரெட்டியார் எழுதிய எழுத்ததிகார ஆராய்ச்சி, க. வெள்ளைவாரணனார் எழுதிய தொல்காப்பியம்,லெ.ப.கரு இராமநாதன் செட்டியார் இயற்றிய தொல்காப்பியச் செல்வம், சி. இலக்குவனார் இயற்றிய தொல்காப்பிய ஆராய்ச்சி ஆகிய நூல்கள் குறிப்பிடத் தகுந்தவை. தமிழறிஞர் சுப்பு ரெட்டியாரும் புலவர் குழந்தையும் பொருளதிகாரத்திற்குச் சிறந்த முறையில் ஆய்வுரை எழுதியுள்ளனர்.

3. இளம்பூரணர்

பழம்பெரும் இலக்கண நூலாகிய தொல்காப்பியம் முழுமைக்கும் முதன்முதலில் உரைகண்டு அதனைத் தமிழ் கூறும் நல்லுலகத்திற்கு நன்கு அறிமுகப்படுத்திய பெருமை இளம் பூரணரையே சாரும். ”பிறர் உட்புகுந்து காண முடியா வண்ணம், இருண்டு கிடந்த தொல்காப்பியம் என்னும் சரக்கறையுள், தம் அறிவென்னும் அவியா விளக்கைக் கொண்டு துருவி, ஆங்கே குவிந்துகிடந்த அரதனக் குவியல்களை உலகிற்கு முதலில் விளக்கிக்

காட்டிய பெருந்தகையார் அறிதற்கரிதாகிய தொல்காப் பியக் கடலைத் தம் மதிவலி கொண்டு கடைந்து, முதன் முதலில் இலக்கண அமுதம் அளித்த பெரியார்" என்று புலவர் போற்றும் புகழுக்கு உரிய சான்றோர் இவர். (**ஆராய்ச்சித் தொகுதி. (1948) பக். 398, 399.)**

இவருடைய உரை, சேனாவரையரும் பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் மிக நயமாகத் தொல்காப்பியத்தி போன்ற உரை எழுத உறுதுணையாய் அமைந்தது. தொல்காப்பியம் பழம்பெரும் இலக்கண நூல்களுக்கு, அவை தோன்றிப் பல நூறு ஆண்டுகள் கழிந்த பின்னர் முதன் முதலில் உரை காண்பது எளிய செயல் அன்று. தகுதி வாய்ந்த ஒருவர் உரை கண்டபின், அவரைப் பின்பற்றி வேறு உரை கண்டு விளக்கம் எழுதுதல் அரிய செயல் அன்று. இளம்பூரணர்க்குப் பின் தொல்காப்பியத்திற்கு உரை கண்ட சேனாவரையர் நச்சினார்க்கினியர் முதலியோர் இவர் உரையினைப் போற்றி, பல முறை பயின்று தெளிவு பெற்று, இவருடைய புலமைச் சிறப்பை நன்கு உணர்ந்துள்ளனர் இவரிடம் பெருமதிப்புக் கொண்டவராய் இருக்கின்றனர். தொல் காப்பியம், மாபெரும் நூலாக இன்று இத்துணைச் சீரும் சிறப்பும் எய்தித் திகழ இவரது உரை துணை செய்தது என்று கூறுவது வெறும் புகழ்ச்சியன்று.

இளம்பூரணர் ஒருவரே "உரையாசிரியர்" என்ற சிறப்புப் பெயரால் தமிழிலக்கிய உலகத்திற்கு அறிமுகமானவர். இவரது பெயரைக் கூறாமல், உரையாசிரியர் என்றே சேனாவரையர் நச்சினார்க்கினியர் முதலியோர் குறிப்பிடுகின்றனர். அடியார்க்கு நல்லார் சிலப்பதிகாரத்தில் வேனிற்காதையின் தொடக்கத்தில் "உரையாசிரியரான இளம்பூரண அடிகள்" என்று குறிப்பிடு வதால், இளம்பூரணரே உரையாசிரியர் என்று உணரலாம்.

சமயம்

மயிலைநாதர் இளம்பூரணரைத் துறவி என்று குறிப்பிடு கின்றார். நன்னூலின் பத்துவகை எச்சங்களையும் குறிக்கும் "பெயர்வினை" என்னும் (359) சூத்திரத்திற்கு உரையும் விளக்கமும் எழுதிய பின், "இ.ீது ஒல்காப் புலமைத் தொல்காப்பியத்துள் உளங்கூர் கேள்வி இளம்பூரணர் எனும் ஏதமில் மாதவர் ஓதிய உரை என்று உணர்க" என்று குறிப்பிடுகின்றார்.

தொல்காப்பியரைப் பனம்பாரனார் பாயிரம் "படிமை யோன்" என்று குறிப்பிடுகின்றது. படிமையோன் என்பதற்குத் "தவ ஒழுக்கத்தையுடையான்" என்று இளம்பூரணர் பொருள் எழுது மார் எழுத்ததிகாரத்தின் முதற் சூத்திர விளக்கத்தில், ஊகாரம் வீடு பேற்றிற்குரிய ஆண்பாலை (மகன் என்ற சொல்லை) ஒன்றார். உணர்த்துதற் சிறப்பான் பின் வைக்கப்பட்டது" என்று தறுகின்றார். படிமை என்பது சமண சமயத் துறவிகளின் தவ ஒழுக்கத்தைக் குறிக்கும் சொல் என்பர். (**1. சமணத் தமிழ் இலக்கிய வரலாறு பக். 12-15.)** திகம்பர சமண சமயக் கொள்கையின்படி பெண்கள் நேரே வீடுபேறு அடைய இயலாது. தவம் செய்து, பெண் பிறவி நீங்கி அடுத்த பிறவியில் ஆணாய்ப் பிறந்த பின்னரே வீடுபேறு எய்தமுடியும் என்ற கொள்கை உண்டு. இக்கொள்கைகளை இளம்பூரணர் உரைத்திருப்பதால் இவரைச் சமண முனிவர் என்று கருதலாம். இளம்பூரணர் பெயருடன் அடிகள் என்ற சொல் சேர்ந்து வழங்குவதும் இக்கருத்தினை வலியுறுத்திகின்றது.

அகத்திணையியலின் முதற்சூத்திர உரையின் இறுதியில் "இந்நூலுடையார் காமத்துப் பயனின்மை உய்த்துணர வைத்தவாறு அறிந்துகொள்க" என்று உரைக்கின்றார். இங்கே இவரது துறவுள்ளம் வெளிப்படுகின்றது.

காலம்

இளம்பூரணர் தம் உரையில் புறப்பொருள் வெண்பா மாலை, யாப்பருங்கல விருத்தி ஆகியவற்றிலிருந்து மேற்கோள் தந்து விளக்குவதால் அந்நூல்களுக்குப்பின் வாழ்ந்தவர் எனலாம். இவரது கருத்தை நன்னூலார் மேற்கொண்டிருப்பதால் இவர் காலம் பதினோராம் நூற்றாண்டாக இருக்கலாம்.

உரையின் இயல்பு

இளம்பூரணர் உரை, ஆழமான தெளிந்த நீரோடை போன்றது பற்றற்ற துறவி தூய்மையான வாழ்வு நடத்தி மூத்து முதிர்ந்து காவி உடையுடன் அருள் பழுத்த நெஞ்சத்துடன், முகம்மலர்ந்து நம்மிடம் இன்சொல் பேசுவது போன்ற இன்ப உணர்வை இவர் உரை உண்டாக்குகிறது. ஆரவாரமும் பகட்டும் இவர் உரையில் எங்கும் காண்பது அரிது. மிக மிகச் சுருக்கமாகவே தெளிந்த கருத்தைக் கூறி விளங்க வைக்கின்றார். தாம் கருதியதே சிறந்தது என்று எண்ணும் வகையில் இவர் எவ்விடத்திலும் எழுதவில்லை. பிறர் கருத்தை மதித்தலும், புலமை முதிர்ச்சியும், நடுநிலைமையும் உரை முழுவதும் வெளிப்படுகின்றன.

இளம்பூரணர் பிற மொழிப்பயிற்சி மிகுதியாக இல்லாதவர் தமிழ்க் கடலுள் பல கால் மூழ்கித் திளைத்தவர் தமிழ் மரபு நன்கு அறிந்த சான்றோர். இவரது தமிழ்நெஞ்சம் பல இடங்களி வெளிப்படுகின்றது. இவரைச் சிவஞான முனிவர், "தமிழ் நூ ஒன்றே வல்ல உரையாசிரியர்" என்று தொல்காப்பியச் சூத்திர விருத்தியில் குறிப்பிடுகின்றார்.

இளம்பூரணர் தம் காலத்தில் வழங்கிய புதிய இலக்க கொள்கைகளை ஆங்காங்கே கூறிச் செல்லுகின்றார் தொல் காப்பியத்திற்குப் பழைய நூல்களில் இருந்து மட்டுமின்றித் தம் காலத்திற்குச் சிறிது முன்னர்த் தோன்றிய நூல்களிலிருந்து மேற் கோள் காட்டவும் தயங்கவில்லை. புறத்திணையியலில், புறப்பொருள் வெண்பா மாலையிலிருந்து பல வெண்பாக்கம் உதாரணமாய்க் காட்டப்படுகின்றன. உவமையியலில் பிற்கால யாப்பருங்கலம் போன்ற பிற்கால யாப்புநூல்யுளியலில் அணிநூல் கருத்துகள் இடம்பெறுகின்றன. காட்டப்படுகின்றன. பொருளியலை இவர், அகம் புறம் என்ற இரண்டிற்கும் புறனடை என்று கூறுகின்றார். எடுத்துக்

தயக்கமும் ஐயமும்

தொல்காப்பியர் கருத்தையும் இலக்கணக் கொள்கையையும் தெளிவாகப் புரிந்துகொள்வதற்கு இவர் பெரிதும் முயன்றுள்ளார். காலயிடையீடும், புதிய இலக்கணக் கொள்கைகளும் பழைய இலக்கணம் பற்றிய பல வேறு கருத்தும் இவருக்குத் தயக்கமும் மலைப்பும் உண்டாக்கின என்னலாம். அதனால் நடுநிலைமை பிறழாத உள்ளம் கொண்ட இவர், தாம் உரைத்த கருத்துகளையும், பொருளையும் முற்ற முடிந்த முடிபுகளாகக் கருதவில்லை. பல நூற்றாண்டுகள் கழித்து, அந்நூலின் கருத்தை உள்ளவாறு அறிய

முயன்று, முதன்முதலில் உரை எழுதிய இவர்க்கு இத்தகைய தயக்கமும் ஐயமும் ஏற்பட்டதில் வியப்பு ஒன்றுமில்லை.

சொல்லதிகாரத்தில், "நிலப்பெயர் குடிப்பெயர்" என்று தொடங்கும் சூத்திரத்தில் (சொல்-162 இளம்), "இன்றிவர் என்னும் எண்ணியற் பெயர்" என்ற அடிக்கு "ஒருவர், இருவர்,மூவர், என்பன" என்று விளக்கம் எழுதியபின், "இன்றிவர் என்பது இத்துணைவர் என்னும் பொருட்டுப் போலும்" என்று ஐயத்தோடு கூறுகின்றார். மேலும்,

கல்வியினாகிய காரணம் வந்தவழிக்கண்டு கொள்க.
அதுபாடமறிந்து திருத்திக் கொள்க.
வழக்குப் பெற்றுழிக் கொள்க.
முதல் சினையாவது வந்தவழிக்கண்டு கொள்க.
ஓகார ஈறும் ஏகாரி ஈறுமாய் வருவன
விரவுப் பெயர் உளவேற் கண்டு கொள்க.
செய்ம்மன என்பது இப்போது வழக்கரிது.

என்று எழுதும் இடங்கள் உள்ளன.

"பெயர் நிலைக் கிளவியின்" (சொல்-443) என்ற குத்திரத்திற்குப் பொருளும் விளக்கமும் கூறியபின், "இச் சூத்திரத்திற்குப் பிறிதுமோர் பொருள் உரைப்பாரும் உளர். இதுவும் மெய்யுரை போலும்" என்று தயக்கத்துடன் எழுதுகின்றார்.

பொருளதிகாரம் அகத்திணையியலில் (45), "தலைமகள் கூற்று உணர்த்திய சூத்திரம். காலப் பழமையால் பெயர்த்து எழுதுவார், விழ எழுதினார் போலும்" என்று பெரியதோர் ஐயத்தைக் கிளப்பிவிடுகின்றார்.

கற்பியலில்,

மேலோர் மூவர்க்கும் புணர்ந்த கரணம்
கீழோர்க்கு ஆகிய காலமும் உண்டே (-3)

என்ற சூத்திரத்தின்கீழ், "இதனால் சொல்லியது, முற்காலத்துக் கரணம் பொதுப்பட நிகழ்தலின் எல்லார்க்கும் ஆம் என்பதும், பிற்காலத்து வேளாண் மாந்தர்க்குத் தவிர்ந்தது எனவும் கூறிய வாறு போலும்" என்று கூறுகின்றார்.

செய்யுளியலில் (106), பரிபாடலுக்குரிய "எருத்து என்பது இவ்வாசிரியர் கருத்தினால் தரவு என்பது போலும்" என்று உரைக் கின்றார்.

இவை யாவும், இளம்பூரணருக்கு ஏற்பட்ட தயக்கத்தையும் ஐயத்தையும் விளக்கும் சான்றுகளாகும்.

உரைத்திறன்

தொல்காப்பிய மூலத்தைக் கொண்டே தொல்காப்பியர் கருத்தை அறிந்துகொள்ளவேண்டும் என்று கருதுபவர், இளம்பூரணர் செய்த உரை இல்லாதிருந்தால், பல சூத்திரங் களுக்குப் பொருள் தெரியாமல் மயங்குவர். இளம்பூரணர்க்குப் பின்வந்த

உரையாசிரியர்களும், இளம்பூரணரையே பின்பற்றி, இவரது பொருள் விளக்கம், மேற்கோள், எடுத்துக்காட்டு ஆகியவற்றைப் போற்றி மேற்கொண்டு உரை எழுதுகின்றனர்.

எழுத்ததிகாரத்தில்,

அளவிற்கும் நிறையிற்கும் மொழிமுத லாகி
உளஎனப் பட்ட ஒன்பதிற்று எழுத்தே
அவை தாம்
கசதப என்றா நமவ என்றா
அகர உகரமோடு அவைஎன மொழிப (கூ-170)

என்ற சூத்திரம் இளம்பூரணர் உரை இன்றேல் விளங்காது அளவுப் பெயர்க்கும் நிறைப் பெயர்க்கும் முதலில் வரும் எழுத்துகள் ஒன்பது. அவை: கசதப நமவ அஉ என்பன. இல் எழுத்துகளை முதலில் கொண்ட அளவுப் பெயர்களாகப் பின் வருவனவற்றை இளம்பூரணர் காட்டுகின்றார்:

கலம், சாடி, தூதை, பானை, நாழி, மண்டை, வட்டி, அகல், உழக்கு.

நிறைப் பெயர்கள்:

கழஞ்சு, சீரகம், தொடி, பலம், நிறை, மா, வரை, அந்தை:
(உகரத்தை முதலெழுத்தாகக் கொண்ட பெயர் இளம்பூரணர் வழக்கிழந்து நச்சினார்க்கினியாரும் இதற்கு உதாரணம் காட்டவில்லை.)

எழுத்ததிகாரத்தில்,

ஐஅம் பல்என வருஉம் இறுதி
அல்பெயர் எண்ணும் ஆயியல் திரியாது (4.394)

என்ற சூத்திரத்திற்கு இளம்பூரணரின் உதவியின்றேல் பொருள் விளங்கி இராது. "பொருட் பெயர் அல்லாத எண்ணுப் பெயராகிய தாமரை, வெள்ளம், ஆம்பல் என்பன" என்று இளம் பூரணர் தரும் விளக்கத்தால் சூத்திரத்தின் பொருள் தெளிவாகின்றது.

மருவின் தொகுதி மயங்கியல் மொழியும்
உரியவை உளவே புணர்நிலைச் சுட்டே (4.112)

என்ற சூத்திரத்திற்கு நச்சினார்க்கினியர் உரையைவிட இளம்பூரணர் உரையே பொருத்தமாக உள்ளது. "மரூஉத் திரளாகிய தலை தடுமாறாக மயங்கின இயல்யையுடைய இலக் கணத்தொடு பொருத்தின மரூஉ வழக்கும், உரியன உள புணரும் நிலைமைக் கண்" என்பது இளம்பூரணர் உரை.

மகன்வினை கிளப்பின் முதனிலை யியற்றே" என்னும் நூற்பாவில் "மகன் வினை" என்பதற்கு, "மகற்குத் தாயார் பயன்படும் நிலைமையன்றி அவளொடு பகைத்த நிலையை'என்று எழுதி, "மகன் - தாய்க்கலாம்" என்று உதாரணம் காட்டுகின்றார். இந்த விளக்கமும் உதாரணமும் மிகவும் அரியவை. இளம்பூரணர் உரை இன்றேல், இவை வெளிப்பட்டிரா. சொல்லதிகாரத்தில்,

குறித்தோன் கூற்றம் தெரித்துமொழி கிளவி (சொல், 56)

என்ற சூத்திரத்திற்கும்,

”மிக்கதன் மருங்கின்” (சொல்-237) என்ற சூத்திரத்திற்கும் இளம்பூரணர் உரை இன்றேல் பொருள் அறிதல் அரிது

“கடி“ என்னும் உரிச்சொல் முன் தேற்றுப் பொருளில் வந்தமைக்கு அகநானூற்றுப் பாட்டு ஒன்றினை (110) எடுத்துக் கொண்டு, அதில் “கடுஞ்சூள் தருகுவன்“ என்று வருவதை மேற்கோளாகக் காட்டியுள்ளார். தமிழிலக்கியத்தில், வே வேறு எங்கும் இச்சொல் இப்பொருளில் வந்துள்ளதாகத் தெரியவில்லை. இளம் வரிய மேற்கோளையே பின்வந்த உரையா பூரணர் காட்டிய இவ்வரிய பே சிரியர்கள் அனைவரும் தம் உரைகளில் காட்டுகின்றனர்.

இளம்பூரணர் தந்த மேற்கோளையும் கூறிய விளக்கத் தையும் பின்வந்தோர் அப்படியே மேற்கொண்டமைக்குப் பல சான்றுகள் காட்டலாம். உரையாசிரியர் முயன்று அமைத்த பாதையினைப் பின் வந்தோர் அகலப்படுத்தினர் என்று கூறும் அளவிற்கு இளம்பூரணரின் உரைத்திறன் அமைந்துள்ளது.

பொருளதிகாரத்தின் தொடக்கத்தில் (அகத்திணை இயலுக்கு முன்னுரையாக) எழுதும் உரை விளக்கம்,அறிவுக்கு விருந்தாய் அமைந்துள்ளது:

”நிலம் எனவே, நிலத்திற்குக் காரணமாகிய நீரும்,நீர்க்குக் காரணமாகிய தீயும், தீக்குக் காரணமாகிய காற்றும், காற்றிற்குக் காரணமமாகிய ஆகாயமும் பெறுதும்.”

”காலமாவது மாத்திரை முதலாக நாழிகை, யாமம், பொழுது, நாள், பக்கம், திங்கள், இருது, அயநம், ஆண்டு, உகம் எனப் பலவகைப்படும்.”

”கருப்பொருளாவது இடத்தினும் காலத்தினும் தோற்றும் பொருள்”

”உரிப்பொருளாவது மக்களுக்கு உரியபொருள்”.

பரத்தையர் யார் என்பதற்குக் கூறும் விளக்கமும், ஐம் பூதங்களின் சேர்க்கை பற்றிக் கூறும் விளக்கமும் சிறப்பானவை. அவற்றைக் கீழே காண்போம்:

”பரத்தையர் ஆவார் யார் எனின், அவர் ஆடலும் பாடலும் வல்லராசி, அழகும் இளமையும் காட்டி இன்பமும் பொருளும் வெ.்.கி, ஒருவர் மாட்டும் தங்காதார்.” (கற்பியல்-10)

”உலகம் என்றது உலகினையும் உலகினுட் பொருளையும். உலகமாவது முத்தும் மணியும் கலந்தாற்போல நிலம் நீர் தீ வளி ஆகாயம் என விரவி நிற்கும். உலகினுட் பொருள் பொன்னும் வெள்ளியும் செம்பும் உருக்கி ஒன்றானாற் வேற்றுமைபடாது நிற்கும் அவ்விரண்டனையும் உலகம் உடைத்தாகலின் கலந்த மயக்கம் என்றார்.” (மரபியல் - 91) போல

சொல்லும் பொருளும்

உரையாசிரியர் சில சொற்களின் பொருளை நன்கு விளக்கிச் செல்லுகின்றார். அத்தகைய விளக்கம் ஆராய்ச்சி உலகிற்குப் புதிய ஒளி தரவல்லவை. அவற்றுள் சிலவற்றைக் காண்போம்:

அம்பல் என்பது முகிழ்த்தல். அ.்.து ஒருவர் முகக் குறிப்பினால் தோற்றுவித்தல். அலராவது சொல்லுதல். (களவியல்-49)

புலவி அண்மைக் காலத்தது ஊடல் அதனின் மிக்கது. (கற்பியல்-15)

மடம் என்பதற்கும் பேதமை என்பதற்கும் வேறுபாடு என்னை எனின், மடம் என்பது பொருண்மை அறியாது திரியக் கோடல் பேதமை என்பது கேட்டதனை உய்த்துணராது மெய்யாகக் கோடல். (மெய்ப்பாட்-4)

மாணாமை என்ற சொல்லிற்கு மிகாமை என்ற பொருள் உரைப்பது இவரது புலமைச் சிறப்பைக் காட்டுவதாகும்.

மாண மறந்து உள்ளா நாணிலி (கலித்-89)

என்றாற் போல மாணாமை என்பது மிகாமை என உரைப்பினும் அமையும்." (மெய்ப்-24)

"ஒப்பும் உருவும்" என்று தொடங்கும் சூத்திரத்தின்கீழ் (பொருளியல்-42) ஒப்பு, உரு, வெறுப்பு, கற்பு, ஏர், எழில் முதலிய சொற்களுக்குக் கூறும் பொருள் கற்று மகிழத்தக்கவை.

படிமையோன் என்பதற்குத் "தவ ஒழுக்கத்தை உடையான் என்று பாயிரப் பகுதியில் பொருள் கூறிய இவரே, "படிமை என்பது ப்ரதிமா என்னும் வடமொழித் திரிபு" என்று உரைக் கின்றார். (அகத் -30).

யவனர் என்ற சொல்லை ஆரியச் சிதைவு என்று கூறுகின்றார். (எழுத்-65) ("யவனர் என்பார் கிரேக்கர். அப்பெயர் அவர்கள் பாை்யில் (ஐயோனீஸ்) ஐயோனியர் என வழங்கும். பழைய வட நூல்களிலும் இவர்கள் யவனர் என்றே வழங்கப் பெறுவர். பழைய தமிழ் இலக்கியங்களில் கிரேக்கரையும் ரோமரையும் பொதுவாக யவனர் என வழங்குவர்." 5 (1906) -84. செல்வக்கேசவராய முதலியார்,தமிழ் (1906) பக்-84)

உயர்வு என்ற சொல்லைப் பின்வருமாறு விளக்குகின்றார்.

"உயர்வுதாம் பல: குலத்தால் உயர்தலும், தவத்தால் உயர்தலும், நிலையால் உயர்தலும், உபகாரத்தால் உயர்தலும் என. (சொல்-87)

"உயர்ந்தோர் என்ற வழிக் குலத்தினான் உயர்ந்தாரையும் காட்டும், கல்வியான் உயர்ந்தாரையும் காட்டும், செல்வத்தான் உயர்ந்தாரையும் காட்டும்" (அகத்-3)

"பிறப்பே குடிமை" என்னும் சூத்திரத்தின் கீழும் "நிம்பிரி கொடுமை" என்னும் சூத்திரத்தின் கீழும் (மெய்ப்-25,6) இவர் பல சொற்களை இனிது விளக்கியுள்ளார்.

சூத்திர அமைப்பும் உரைப்போக்கும்

இளம்பூரணர் இரண்டு சூத்திரங்களாக அமைத்தவற்றைப் பின்வந்தோர் ஒன்றாகவே எழுதி உரைகண்டனர் ஒன்றாகக் கொண்டதைப் பிரித்து இரண்டாக்கியதும் உண்டு.

எழுத்ததிகாரம் பிறப்பியலுள் (19.20),

"எல்லா எழுத்தும்," என்றும் "அ.ஃதிவண் நுவலாது" என்றும் தனித்தனியே இளம்பூரணர் பிரித்து உரை கண்டவற்றை நச்சினார்க்கினியர் ஒரே சூத்திரமாக்கி, உரை எழுதுகின்றார்.

இத்தகைய எடுத்துக்காட்டுகள் பலவற்றைத் தரலாம்.

பல சூத்திரங்களை அடுத்து அடுத்து எழுதிக்கொண்டு "இவை, உரை இயைபு நோக்கி ஒன்றாய் எழுதப்பட்டன" என்று இளம்பூரணர் எழுதிச் செல்வதும் உண்டு.(சொல்: 173-176223, 224 337, 338.)

மரபியலில் (35),

"மக்கள் தாமே ஆறறி வுயிரே" என்ற நூற்பாவிற்குப் பின், "ஒருசார் விலங்கும் உளஎன மொழிப" என்ற நூற்பா இளம் பூரணர் உரையில் மட்டுமே உள்ளது.

உவமைகள்

இளம்பூரணர் தம் உரையில் மிகச் சில உவமைகளையே எடுத்தாண்டுள்ளார். அவ்வுவமைகள், கூறக்கருதிய பொருளை இனிது விளக்குகின்றன.

எழுத்ததிகாரத்தில் (2), "சந்தனக்கோல் குறுகின விடத்தும் பிரப்பங்கோல் ஆகாது. அதுபோல, இகர உகரங்கள் குறுகின விடத்தும் அவை உயிர் ஆகற் பாலன" என்று தக்க உவமை கூறி விளக்குகின்றார்.

செய்யுளியலில் (79), "துள்ளலோசை கலிப்பாவிற்காம் என்றவாறு. துள்ளுதலாவது ஒழுகு நடைத்தன்றி இடையிடை உயர்ந்து வருதல்: சுன்று துள்ளிற்று என்றாற்போலக் கொள்க" என்ற பகுதியில் இனிய உவமை இடம் பெற்றுள்ளது.

மரபியலில் (19) கலத்தல், மயக்கம் என்ற சொற்களை "கலத்தலாவது முத்தும் பவளமும் நீலமும் மாணிக்கமும் விரவினாற் போறல், மயக்கமாவது பொன்னும் வெள்ளியும் செப்பும் உருக்கி ஒன்றாதல் போறல்" என்று ஏற்ற உவமைகளைக் கூறி விளக்குகின்றார்.

பாட வேறுபாடும் கருத்து வேறுபாடும்

இளம்பூரணர் தொல்காப்பியத்தின் முதல் உரையாசிரியர் ஆதலின், இவர் கொண்ட சில பாடங்கள், மிகப்பழமையானவை அப்பாடங்களே சிறந்தவை.

சில சொற்களில் இரண்டொரு எழுத்துகள் மாறிவிடுவதால், சூத்திரங்களின் பொருளே பெரிதும் வேறுபட்டுவிடுகின்றது. எனவே, பாட வேறுபாடுகளில் கருத்துச் செலுத்தி உண்மையான பாடத்தைத் துணியும் கடமை நமக்கு ஏற்பட்டுள்ளது. பாட வேறு பாடுகள், பொருளதிகாரத்தில் மிகுதியாகப் பொருளை வேறு படுத்திவிடுகின்றன ஆதலின் சில பாட

வேறுபாடுகளையும் அவற்றால் சூத்திரத்தின் பொருள் வேறுபடுவதையும் கீழே காண்போம்:

புறத்திணை இயலுள் (4),

மறங்கடைக் கூட்டிய குடிநிலை சிறந்த
கொற்றவை நிலையும் அத்திணைப் புறனே

என்பது இளம்பூரணர் கொண்ட பாடம். இதற்கு நச்சினார்க் கினியர்,

மறங்கடைக் கூட்டிய துடிநிலை

என்று வேறு பாடம் கொள்ளுகின்றார். குடிநிலை என்ற பழைய, டமே சிறந்தது என்பதற்குச் சிலப்பதிகாரத்தில் வேட்டுவ வரி சான்றாக உள்ளது. அதில், வெட்சித் திணையில் மறக்குடியினது நிலைமையும், கொற்றவையின் நிலைமையும் கூறுவதைக் காணலாம். **(மூ”கொற்றவை நிலையைக் கூறும் “மறங்கடைக் கூட்டிய“ என்னும் நூற்பாவில், மற்றதைக்குடிநிலை என இளம்பூரணரும் துடிநிலை என நச்சினார்க்கினியரும் பாடங் கொண்டுள்ளனர். குடிநிலையாதெனத் தொல்காப்பியர் கூறாததாலும் அது போர் துவங்குவதற்கு இன்றியமையாத நிகழ்ச்சி அன்றாதலாலும் அது நேரான பாடாமாகாதெனக்கண்ட நச்சினார்க்கினியர் அதைத் துடிநிலை என மாற்றிக் கூறினார் போலும்! துடிநிலை மற்றக் கொற்றவை நிலை கொடிநிலை போல் போர் துவங்குவதற்கு முதல் நிகழ்ச்சியாகாததோடு தொல்காப்பியரும் பிற தொன்னூல்களும் அதனை அத்தகைய வெட்சியின் சிறப்பு வகையாகச் கட்டாததால் அதுவும் நச்சினார்க்கினியர் கொண்டதன்றித் தொல்காப்பியர் கருத்தாகத் தோன்றவில்லை.” ரயி, 85, 86. சூசோ.பாரதியார். பழந்தமிழ்நாடு (1958)**

பொருளியலுள் நச்சினார்க்கினியர்,

இறைச்சி தானே பொருட்புறத் ததுவே

என்று பாடம் கொண்டுள்ளார். இதுவே இன்று பெருவழக்காய் உள்ளது. இளம்பூரணர், “உரிப்புறத்ததுவே“ என்று பாடங் கொண்டுள்ளார்.

உள்ளுறை உவமம், இறைச்சி முதலிய ஐந்தும் பெரும்பாலும் அகத்திணைப் பாடலுக்கே உரியவையாகும் (பொருள்:45). அகத்திணைப் பாடல்களில் முதல் கரு உரி என்ற மூன்று பொருளும் இடம் பெறும் (அகத்:3). உள்ளுறை உவமம், தெய்வம் ஒழிந்த கருப்பொருளை இடமாகக் கொண்டு பிறக்கும் (அகத்:50) இறைச்சி உரிப்பொருளுக்குப் புறம்பாய் வரும் (பொருள்:43) என்ற தொல்காப்பியர் கருத்துக்களை நினைவில் கொண்டு பார்த்தால் “உரிப்புறத்தது“ என்ற பாடம் பொருத்தமாய் இருக்கும்.

களவியலுள்,

இருவகைக் குறிபிழைப் பாகிய இடத்தும்
.....தொகைஇக்
கிழவோன் மேன என்மனார் புலவர் (5-17)

என்ற சூத்திரம் தலைவனுக்குரிய கூற்றுகளை உணர்த்துவதாய் இளம்பூரணர் கொண்டு, அதற்கு ஏற்ப விரிவுரை எழுதுகின்றார். ஆனால் நச்சினார்க்கினியர், அச்சூத்திரத்தின் இறுதி வரியில் உள்ள "கிழவோன்" என்ற சொல்லுக்குக் "கிழவோள்" என்று வேறு பாடம் கொண்டு தலைவிக்குரிய கூற்றுக்களை உணர்த்துவதாய் உரை எழுதுகின்றார்.

இளம்பூரணர் கொண்ட பாடமே பொருத்தமாய் உள்ளது. "காமத் திணையில்" என்று தொடங்கும் சூத்திரம் முதலாக, "மறைந்தவற் காண்டல்" என்ற சூத்திரம் ஈறாக (களவியல்-18-2 உள்ள நான்கு சூத்திரங்களும் தலைமகளுக்கு உரியவை. நாணமும் மடமையும் கொண்ட தலைவி, களவொழுக்கத்தில் உரையாடல் நிகழ்த்துமிடத்தை மிக மிகநுட்பமாய் அமைத்துக் காட்டுகின்றார் தொல்காப்பியர். "காமத் திணையில்" (18), "காமஞ்செல்லா" (19), சொல்லெதிர் மொழிதல்" (20) என்ற மூன்று சூத்திரங்களும் தலைவி உரையாடுவதற்கு உரிய அருமைப்பாட்டினைப் பலவாறு விளக்கிக் காட்டிய பின்னர் "மறைந்து அவற்காண்டல்" (21) என்னும் நீண்ட சூத்திரத்தில் அவள் உரையாடல் நிகழ்த்தும் இடங்களைச் சுட்டுகின்றார். இவையாவும் பெண் உள்ளத்தின் இயல்பறிந்து அமைக்கப்பட்டவையாகும். "இருவகைக் குறிபிழைப் பாகிய இடத்தும்" என்று தொடங்கும் சூத்திரம் தலைமகனுக்கு உரியது என்று இளம்பூரணர் கொண்டது பொருத்தமே.

இச்சூத்திரத்தை நச்சினார்க்கினியர் கொண்டதுபோல, தலைவிக்குரியதாகக் கொண்டால், தலைவி களொழுக்கத் தின்கண் நாணமும் மடமும் அச்சமும் இன்றி, உரை நிகழ்த்திய நாகரிகக் குறைபாட்டிற்கு ஆளாவாள். களவொழுக்கத்தில் தலைவன் உரை நிகழ்த்தும் இடத்தை உணர்த்தும் சூத்திரம் தொல்காப்பியர் செய்யவில்லை என்ற குறைபாடும் ஏற்படும். எனவே "கிழவோன்" என்று இளம்பூரணர் கொண்ட பாடமே சிறந்ததாகும்.

மேலும், "சுடர்த்தொடீஇ கேளாய்", என்னும் கலிப் பாடல் (கலி-51) உரை விளக்கத்தின் இறுதியில் நச்சினார்க்கினியர் எழுதும் விளக்கம், அவர்க்குக் "கிழவோன்மேன" என்ற பாடம் பொருத்தமானது புலப்படுத்துகின்றது. என்று கருத்து இருப்பதைப்

களவியலில், (12)

பாங்கர் நிமித்தம் பன்னிரண் டென்ப

என்பது இளம்பூரணர் கொண்ட பாடம். நச்சினார்க்கினியர்.

பாங்கன் நிமித்தம் பன்னிரண் டென்ப

என்று பாடங்கொண்டார். குழப்பத்திற்கும் முரண்பாடான கருத்திற்கும் இடங்கொடுக்கும் சூத்திரங்களில் இதுவும் ஒன்று. இளம்பூரணர் பழைய உரையாசிரியர் அவர் கொண்ட பாடம்பழைய பாடம் என்று கொண்டு இச்சூத்திரத்தின் பொருளை அறிய முயலுதல் பயன் தரும்.

தொல்காப்பியர் வரலாற்றுக்குப் புதிய ஒளி

இளம்பூரணர், தொல்காப்பியரைப் பற்றிக் கூறும் கருத்துகள் வரலாற்றுக்குப் புதிய ஒளி தரவல்லவை.

அகத்தியர் சூத்திரங்கள் என்று சிலவற்றை இளம்பூரணர் சிலவிடங்களில் காட்டி இருப்பினும் அகத்தியரையும் தொல்காப்பியரையும் இணைத்து எந்தக் கதையையும் புனைந்துரைக்கவில்லை. "தொல்காப்பியர் அகத்தியரின் பன்னிரு மாணாக்கருள் ஒருவர் பன்னிரு மாணாக்கரும் ஒவ்வொருவரும் ஒவ்வொரு இயலாக இயற்றித் தொகுத்த நூல், பன்னிரு படலம் என்னும் புறப்பொருள் இலக்கண நூல் அத்தொகுப்பு நூலுள் முதல் படலமாகிய வெட்சிப் படலத்தை இயற்றியவர் தொல்காப்பியர்" என்பவை போன்ற கதைகளை இளம்பூரணர் நம்பவில்லை. இவர் காலத்தில் அத்தகைய கதைகள் நாடெங்கும் பரவி இருந்திருக்க வேண்டும். இளம்பூரணர் புறத்திணை இயலின் தொடக்கத்தில் பன்னிரு படலம் மாறுபட்டது என்பதை விளக்கப் தொல்காப்பியத்திற்கு பல காரணங்களைக் கூறுகின்றார்.மேலும் தொல்காப்பியர் இயற்றியதாகக் கூறப்படும் வெட்சிப் படலம், தொல்காப்பியர் புறத்திணை இயலோடு முரண் படுவதையும் காட்டி, "பன்னிரு படலத்துள் வெட்சிப் படலம் தொல்காப்பியர் கூறினார் என்றல் பொருந்தாது" (புறத் -2) என்று தெளிவுபடுத்துகின்றார்.

இளம்பூரணருக்குப் பின்வந்த உரையாசிரியர்கள் அனை வரும் தொல்காப்பியரையும் அகத்தியரையும் இணைத்துக் கதை களைப் புனைந்து கூறிவிட்டனர்.

கருத்துக் கொடை

இளம்பூரணர் உரையில் கூறியுள்ள கருத்துகள் பலவற்றை அவருக்குப்பின் தோன்றிய இலக்கண ஆசிரியர்கள் மேற்கொண்டு நூற்பாக்களை அமைத்துள்ளனர். உரையாசிரியரின் கருத்துக் கொடை நூலாசிரியர்களை உருவாக்க முடியும் என்பதற்கு இளம் பூரணரே சிறந்த சான்றாவார்.

இளம்பூரணர் கருத்துகளை நேமிநாதம், நன்னூல், நம்பியகப் பொருள் ஆகிய நூல்கள் ஏற்றுக்கொண்டுள்ளன. இரண்டொரு உதாரணங்கள் மட்டும் காண்போம்:

தொல்காப்பியர் கற்பியலில்,

பூப்பின் புறப்பாடு ஈராறு நாளும்
நீத்தகன் றுறையார் என்மனார் புலவர்
பரத்தையிற் பிரிந்த காலை யான (-45)

என்று கூறுகின்றார். இதற்கு உரை எழுதிய இளம்பூரணர், "இதனாற் பயன் என்னை எனின் அது கருத்தோன்றும் காலம் என்க" என்ற கருத்தை எழுதுகின்றார். இளம்பூரணர் சொன்ன கருத்தை மேற்கொண்டு நம்பியகப் பொருள் ஆசிரியர்,

பூத்த காலைப் புனையிழை மனைவியை
நீரா டியபின் ஈராறு நாளும்
கருவயிற்று உறூஉம் காலம் ஆதலின்
பிரியப் பெறாஅன் பரத்தையிற் பிரிவோன் (9-91)

என்று கூறியுள்ளார்.

தொல்காப்பியர் உடம்படுமெய் பற்றி,

எல்லா மொழிக்கும் உயிர்வரு வழியே
உடம்படு மெய்யின் உருபுகொளல் வரையார் (4-141)

என்று கூறினார். இளம்பூரணர் இச் சூத்திரத்திற்கு உரை எழுதியபின், ""உரையிற் கோடல் என்பதனால், உடம்படு மெய்யாவன யகரமும் வகரமும் எனக் கொள்க. இகர ஈறும் ஈகார ஈறும் ஐகார ஈறும் யகர உடம்படுமெய் கொள்வன் அல்லன எல்லாம் வகரமெய் கொள்வன" என்று உரைத்துள்ளார். நன்னூலார் இளம்பூரணர் கருத்தைத் தழுவி,

இஈ ஐவழி யவ்வும் ஏனை
உயிர்வழி வவ்வும் ஏமுன்இவ் விருமையும்
உயிர்வரின் உடம்படு மெய்யென் றாகும் (-162)

என்று சூத்திரம் அமைத்துள்ளார்.

தொல்காப்பியர் சொல்லதிகாரத்தில்,

எப்பொரு ளாயினும் அல்லது இல்எனின்
அப்பொருள் அல்லாப் பிறிதுபொருள் கூறல் (-35)

என்று கூறிய சூத்திரத்திற்கு இளம்பூரணர் பின்வருமாறு உரையும் விளக்கமும் கூறுகின்றார்:

"எவ்வகைப்பட்ட பொருளாயினும், தன்னுழை உள்ளது அல்லதனை இல்லை எனலுறுமே எனின், அவன் கூறிய பொருளல்லாத பிறிது பொருள் கூறி இல்லை என்க."

தன்னுழை உள்ளதன் உண்மை கூறி, இல்லை என்க என்பது இதன் கருத்து அவன் வினாவப்பட்ட பொருட்கு இனமாய கருத்து. இத பிறிது பொருளே கூறுக என்பது."

(புல்லியோர் பண்டம் கொள்வார்
வினவிய பொருள்தம் பக்கல்
இல்லெனில் இனமாய் உள்ள –
பொருள் உரைத்து எதிர்மறுத்தும்
அல்லதுஅப் பொருள்உண்டு என்னின்
விலைசுட்டி அறுத்து நேர்ந்தும்
சொல்லிலும் லாபம் கொள்வார்
தொன்மர பிருக்கை சொல்வோம்
-திருவிளையாடற் புராணம்.

என்ற பாடலில் பரஞ்சோதியார் இளம்பூரணர் கருத்தை மேற்கொண்டுள்ளார்.

பின்வரும் நன்னூல் சூத்திரத்தில் இளம்பூரணர் கருத்து இடம் பெற்றிருப்பதை அறியலாம்.

தம்பால் இல்லது இல்லெனின் இனனாய்
உள்ளது கூறி மாற்றியும்,
உள்ளது சுட்டியும் உரைப்பர் சொற்சுருங் குதற்கே. (-406)

இளம்பூரணருக்கு முன்

தொல்காப்பியத்திற்கு முதன் முதலில் உரை கண்டவர் இளம்பூரணர் என்று போற்றப்படுகின்றார். ஆனால், அவர் தமக்கு முன் வேறு சில உரைகள் தொல்காப்பியத்திற்கு இருந்ததைப் பலப் பல இடங்களில் சுட்டிக் காட்டுகின்றார். பிறர் கருத்தை மறுக்காமல், உள்ளதை உள்ளவாறே சுட்டி மேலே செல்லு கின்றார். ஏனைய அதிகாரங்களைவிட, சொல்லதிகாரத்தில் பல இடங்களில், இவர் பிறர் குறிப்பிடுகின்றார். உரைகளை மிகுதியாகக்

என்ப ஒரு சாரர் ஆசிரியர் (44, 57), ஒருவன் சொல்லுவது (4, 18, 25, 38, 44), ஒரு திறந்தார் கூறுப (1,56,58), என்பாரும் உளர் (30, 33), என்பது ஒரு கருத்து (66, 447), ஒரு திறத்தார் ஆசிரியர் உரைப்பர் (122, 420, ஒரு சாரர் கூறுவர் (408, 455, 456) என்று இளம்பூரணர் பிறர் கருத்துகளைக் குறிப்பிடுகின்றார்.

ஒருகால், இளம்பூரணர் காலத்தில், தொல்காப்பியத்திற்குப் பல்வேறு உரைகள் வாய்மொழியாக வழங்கி வந்திருக்கலாம் அவற்றைக் கேட்டுஅறிந்த உரையாசிரியர், தாம் எழுதிய உரையில் அவற்றைவிடாது போற்றிக் குறித்திருக்கலாம்.

இளம்பூரணருக்குப் பின்

தொல்காப்பியம் பயில்வோர், எழுத்ததிகாரத்திற்கு நச் சினார்க்கினியர் சேனாவரையர் உரையையும், உரையையும், சொல்லதிகாரத்திற்குச் பொருளதிகாரத்திற்கு நச்சினார்க்கினியர் (முன் ஐந்து இயல்கள்), பேராசிரியர் (பின் நான்கு இயல்கள்) ஆகியோர் உரைகளையும் விரும்பிக் கற்பது வழக்கம். இவ்வழக்கம் பல நூற்றாண்டுகளாக இருந்து வருகின்றது. இவ்வுரைகள் மிகுதியாகப் பயிலப்பட்டு வருவதால், தொல்காப்பியம் முழுவதற்கும் உரை கண்ட இளம்பூரணர் உரை வழக்கிழந்தது பல ஆண்டுகள் இருக்குமிடம் தியொமல் இருந்து வந்தது.

இளம்பூரணர் உரை செல்வாக்கு இழந்து, தொல்காப்பியம் கற்பவர் பார்வையிலிருந்து விலகிப் பின்தங்கிவிட்டதற்குக் காரணம் சில உண்டு.

1. இளம்பூரணருக்குப் பின் உரைகண்டோர் அவரது கருத்துகள் யாவற்றையும் எடுத்துத் தம் உரைகளுள் பெய்து கொண்டு தம்தம் காலத்திற்கு ஏற்ற புது விளக்கங்கள் பலவற்றைத் தந்து உரையை விரிவுபடுத்தினர். இதனால் இளம்பூரணர் உரை பின்தங்கிவிட்டது.

2.எளிய நடையே நல்லநடை என்ற கொள்கை இளம்பூரணருக்குப்பின் மெல்ல மெல்ல மறைந்துவிட்டது. அதனால், எளிய நடையில் எழுதப்பட்ட இளம்பூரணர் உரை ஒதுங்கியது. பலமுறை கற்று உணரும் நுட்பம் வாய்ந்து, எதுகை மோனைகள் அமைந்து, பல்வேறு வகையான இனிய உவமைகள் விரவி இன்னோசை பொருந்திய பிற்கால உரைகள் செல்வாக்குப் பெற்றுப் பரவின.

3. வடமொழிக்கும் வடமொழிக் கருத்திற்கும் இளம் பூரணருக்குப்பின் சிறந்த வரவேற்பு ஏற்பட்டது. தமிழ் ஒன்றே பயின்று, தமிழ்மரபு பிறழாமல் இளம்பூரணர் எழுதிய உரை. இருமொழிப் புலமை பெற்றவர் இயற்றிய உரைகளுடன் போட்டியிட்டு வெற்றிபெற இயலவில்லை.

4. இளம்பூரணர் சமண சமயத்துறவி ஆதலின், பிற சமயத்தவர் இவர் உரையைப் புறக்கணித்து, புது உரை கண்டு தம் உரையைப் பரப்பினர்.

இளம்பூரணர் உரை, இன்று மீண்டும் கற்றவர் போற்றும் சிறப்பைப் பெற்று வருகிறது. தொல்காப்பியத்தின் முதல் உரையாசிரியர் என்ன கூறினார் என்று அறியும் விருப்பம் பலருக்கும் ஏற்பட்டுள்ளது. தொல்காப்பியத்தின் பல்வேறு உரைகளை ஒப்பிட்டு நோக்கி ஆராய்பவரும், உண்மை உரை கண்டு தெளியும் ஆர்வம் உடையவரும், தமிழ்மொழிக்குத் தமிழ் மரபு அறிந்து எழுதிய உரையே சிறந்தது என்று எண்ணுபவரும் இளம்பூரணர் உரையைப் போற்றிக் கற்று வருகின்றனர்.

நாகரிகமும் பண்பாடும்

இளம்பூரணர் உரையிலிருந்து அக்காலத்துத் தமிழ் நாட்டு நாகரிகமும் பண்பாடும் அறிய முடிகின்றது. அவற்றைக் கீழே காண்போம்:

எட்டி, காவிதி போன்ற பட்டம் பெற்றவர்களுக்குப் பூ அளித்தலும், புரவு (நிலம்) அளித்தலும் அக்காலத்தில் வழக்கமாய் இருந்தன. அவற்றை இளம்பூரணர், "எட்டிப்பூ எட்டிப்புரவு, காவிதிப்பூ காவிதிப் புரவு" (எழுத்ததிகாரம்155) என்று குறிப்பிடு கின்றார்.

அரசியல் அலுவலர்களையும், தொழிலாளிகளையும் இளம்பூரணர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

"எல்லாக் கொல்லரும் சேவகரும் தச்சரும் புலவரும் எனவும் எல்லா நாயகரும் மணியகாரரும், வணிகரும் அரசரும் எனவும் வரும்" (எழுத்.-325).

அக்காலத்தில் அம்புகளை வைக்கக் கொட்டிலும், போர்க் காலத்தில் கோட்டையிலிருந்து பகைவர்மீது எய்ய அம்புப்புழை, துளை முதலியனவும் இருந்தன. அவற்றை இளம்பூரணர், "ஏஎக் கொட்டில், சாலைதுளை புழை" என்று குறிப்பிடுகின்றார் (எழுத்.-277). வில்லும் அம்பும் சிறந்த போர்க்கருவிகளாகப் பயன் பட்டன.குதிரையை மத்திகைக் கோல் (சாட்டை) கொண்டு அடித்து ஓட்டினர் என்ற செய்தியைப் பின்வரும் உரைப் பகுதி யால் உணரலாம்:

"வில் பற்றி நின்று கோல் தா என்றால், கணைக்கோலின் மேல்நிற்கும், அதற்குச் சார்பு அதுவாகலான். குதிரை மேலிருந்து, "கோல் தா" என்றால், மத்திகைக் கோலாம் ஆகலானும் சுள்ளற் கோலாம் ஆகலானும் செல்லும், அதற்குச் சார்பு அதுவாகலான்" (-53).

"பாட்டு ஆராய்ந்தான்" என்று இவர் காட்டும் தொடர் மொழி (எழுத்-195) நம்மைச் சிந்திக்கவைக்கின்றது.

கொங்கத்து உழவு, வங்கத்து, வாணிகம் என்ற தொடர்கள் அக்கால உழவுத்தொழிலையும், வாணிகத்தையும் நினைவூட்டு கின்றன.

வட்டம், சதுரம், கோணம் முதலிய வடிவங்கள் அமைக் கவும், கோணத்துள் கோணமும் கோணத்துள் - வட்டமும் அமைக்கவும் அக்காலத்தவர் அறிந்திருந்தனர் என்பது நமக்கு வியப்பு அளிக்கிறது. இச் செய்தியினை, "வடிவாவது வட்டம் சதுரம் கோணம்

முதலாயின" (உவமையியல் 1) என்றும், "கோணா கோணம் கோணா வட்டம்" (எழுத். - 312) என்றும் இளம்பூரணர் குறிப்பிடுவதால் உணரலாம்.

இளம்பூரணர் காலத்தில், ஆசீவகப் பள்ளியும் குமரக் கோட்டமும் இருந்தன (எழுத்.154). பெண்கள் தைந்நீராடினர். மக்கள் அறச்செயலுக்காகத் தம்மிடம் உள்ள பசுக்களின் பாலைக் கறந்து தந்தனர். மாடுகள், தினவுபோகத் தேய்த்துக்கொள்ள மரமோ கல்லோ பொது இடங்களில் நடப்பட்டது (சொல்-50).

அக்காலத் தலைமகன், தனது நாட்டகத்து வழங்காது, பிற நாட்டகத்து வழங்கும் நூலைக் கற்றுவரவும், வாரியுள் யானை காணவும், நாடுகாணவும், புனலாடவும், கடவுளரை வழிபடவும் தலைவியைப் பிரிந்து செல்லுதல் வழக்கமாக இருந்தது (அகத்:27, 47). கணிவன் "பகலும் இரவும் இடைவிடாமல் ஆகாயத்தைப் பார்த்து ஆண்டு நிகழும் வில்லும் மின்னும் ஊர்கோளும் தூமமும் மீன்வீழ்வும் கோள் நிலையும் மழைநிலையும் பார்த்துப் பயன்" கூறினான் (புறத்-16).

சிற்றூர்களில் கோழிகளை வளர்த்து அவற்றைப் போரிடச் செய்து அவற்றின் வெற்றி தோல்விகளைக் கண்டு மக்கள் மகிழ்ந்தனர் என்பதை, "மேலைச்சேரிக் கோழி அலைத்தது என, கீழைச்சேரிக் கோழி அலைப்புண்டமை சொல்லாமையே முடிந்ததாம்" என்ற உரைப்பகுதியால் அறியலாம் (சொல்-61).

"அண்ணாத்து ஏரி" என்று ஓர் ஏரியை இளம்பூரணர் சுட்டு கின்றார் (எழுத்-134). இது, திருவண்ணாமலையில் இருந்த பெரிய ஏரியைக் குறிக்கலாம் என்பர் மே.வீ. வேணுகோபால பிள்ளை.

உறையூரிற் பெரியது கருவூர்" என்ற தொடர், கருவூரின் பழஞ்சிறப்பை நினைவூட்டுகின்றது.(சொல்-106).

செப்பும் வினாவும் வழுவாது வருவதற்கு, "நும் நாடு யாது என்றால், தமிழ் நாடு என்றல்" என்பதை உதாரணங் காட்டுகின்றார் (சொல்-13). தமிழர் வாழும் நாட்டைத் தமிழ்நாடு என்று வழங்கிய வழக்கம் அக்காலத்தில் இருந்தது என்பதை அறியும்போது எல்லையற்ற மகிழ்ச்சி பிறக்கிறது

வினாவிற்கு விடையாக உறுவது கூறுதலும் வழுவாகாது என்பதற்கு, "சாத்தா, உறையூர்க்குச் செல்லாயோ எனின், தடமுடையார் வளைப்பர் பகைவர் எறிவர் என்பது" என்று உதாரணம் காட்டுகின்றார் (சொல்-15). .

எழுத்ததிகாரத்தில்,

வெண்ணுக்கரை (வெண்ணாற்றங்கரை)
எண்ணுப்பாறு (எள் ஏற்றிய தோணி)
எண்ணநோலை (எள் உருண்டை)
ஈமக்குடம் (பிணத்தை இடும் மிடா)

ஆகியவற்றை உதாரணம் காட்டுகின்றார். இவை, இவர் அறிந் தீருந்த இடம், மக்கள் உணவு, பழக்க வழக்கம் ஆகியவற்றை நமக்கு அறிவிக்கின்றன.

கூழுக்குக் குற்றவேல் செய்யும் (சொல்-74), பசித்தேன் பழஞ்சோறு தாஎன நின்றாள் (435) என்ற உதாரணங்கள், அக் காலத்தில் வாழ்ந்த உணர்த்துகின்றன. ஏழைமக்களின் நிலையினை

தம் காலத்தில் வழங்கி வந்த விடுகதை (பிசி) ஒன்றை உரையாசிரியர் குறிப்பிடுகின்றார்:

அச்சுப் போலப் பூ பூக்கும்! அமலே என்னக் காய் காய்க்கும்

(பூசுணைக் கொடி)

போலிப் பாயிரம்

இளம்பூரணரைப் பற்றி, சிறப்புப் பாயிரச் செய்யுள் ஒன்று, செந்தமிழ் என்னும் இதழில் வெளிவந்துள்ளது: **(செந்தமிழ் 20. பக்கம் 503.)**

தண்கடல் அசைவளி உறுப்பத் திரைபிதிர்ந்
தூங்கலின் பொருட்குவைப் புணரியில் ஐயுற
அலைவமன் மயரினை அகற்றல் எழுத்தால்
திணைதுறை உட்கோள் இயற்றினன், அறியாக்
கவர்பொருள் மாக்கள் மயக்கினுக்கு இரங்கிப்
பாயிருங் காப்பியச் சுவைபல உணர்ந்தகம்
தோய மடுத்தோர் தொல்காப்பியன் உரை
முத்திற ஒத்தினுக்கு ஒத்தசீர்க் காண்டிகை
சொல்நிலை மேற்கோள் தொகுபொருள் துணிவுடன்
இயல்நூற் பாமுடிபு இணைத்து அடிகாட்டி,
தலைகடை கூட்டித் தந்தனன் பண்டே
கொங்குவேள் மாக்கதை குறிப்புரை கண்டோன்
தன்னறிவு அளவையில் நல்லுரை தேவர்
பன்மணிக் குறட்பால் மதிப்பிடப் பொறித்தோன்:
குணகடல் செல்லூர் லூர் மணக்குடி மண புரியான்
தண்முலை முகைஎன வெண்ணூல் சூடி
அந்தணன் அறவோன் அருமறை உணர்ந்த
இளம்போதி பயந்த புனிதன்
இளம்பூரணன் உரை இனிது வாழ்க ஈங்கென்

இப் பாயிரத்திலிருந்து இளம்பூரணர் வரலாற்றினைப் பின் வருமாறு தொகுத்துக் கூறலாம்: இளம்பூரணர் தமிழகத்தின் கிழக்குக் கடற்கரை யோரமாய் உள்ள செல்லூரில் பிறந்தவர் மணக்குடி புரியான் என்பது அவரது குடிப்பெயர் அவர் தந்தையார் அந்தணர், அறவோர், அருமறை உணர்ந்தவர், இளம் போதி என்பவர். இளம் பூரணர் தொல்காப்பியம்,

கொங்குவேள் மாக்கதை, திருக்குறள் ஆகிய மூன்று நூல்களுக்கும் உரை இயற்றியவர்.

மேலே காட்டப்பட்ட செய்யுள், பிற்காலத்தில் ஒருவர் (சொர்ணம் பிள்ளை)(**இவர் இன்னிலை என்று பெயரால் ஒரு போலி நூலையும் செங்கோன் தரைச்செவு என்ற பொய்ந்நூலையும் இயற்றி ஆராய்ச்சி உலகில் குழப்பம் உண்டாக்கியவர்.)** எழுதிவிட்ட போலிச் செய்யுள் என்பதைத் தமிழறிஞர் மு.அருணாசலம் (12-ஆம் நூற். இலக்கிய வரலாறு) தெளிவுபடுத்தியுள்ளார்.

இந்தச் செய்யுள் கூறும் செய்திகள் பொய்யானவை என்பதைப் பின்வரும் சான்றுகளால் உணரலாம்:

1. தொல்காப்பியம் இளம்பூரணர் உரையைத் தேடிப் பதிப்பித்தவர் எவருக்கும் இந்தச் செய்யுள் கிடைக்கவில்லை. வேறு ஏட்டுச் சுவடிகளிலும் இது இடம் பெறவில்லை.

2. திருக்குறள் உரையாசிரியர்களைக் கூறும் பழைய வெண்பா இளம்பூரணரைக் குறிப்பிடவில்லை.

3. பெருங்கதையைப் பதிப்பித்த டாக்டர் உவே.சா. அதற்குக் குறிப்புரை இருந்தமை பற்றிக் குறிப்பிடவில்லை.

இந்தப் போலிச் செய்யுள், ஆராய்ச்சி அறிஞர் டி.வி. சதா சிவப் பண்டாரத்தாரையும் மயக்கி விட்டது. அவர் இளம் பூரணரை மணக்குடவர் என்று முடிவு செய்ய முயன்று ஒரு கட்டுரை எழுதியுள்ளார்.“(**1.இலக்கிய ஆராய்ச்சிகளும் கல்வெட்டுகளும் (1961) பக்.58-61.)**

போலிப் புலவரின் பொய்ம்மை எவ்வளவு குழப்பத்தை உண்டாக்கிவிட்டது!

இறையனார் அகப்பொருள் உரையாசிரியரா ?

இறையனார் அகப்பொருள் உரையாசிரியர் இளம் பூரணரே என்ற ஒரு கருத்தைத் தமிழ்ப் பெரியார் மு. இராகவ ஐயங்கார் (ஆராய்ச்சித் தொகுதிக்கண் வெளியிட்டுள்ளார். களவியல் உரை முதற்சூத்திர விளக்கத்தில், “என்மனார்“ என்ற சொல்லுக்குக் கூறப்பட்டுள்ள இலக்கணக் குறிப்பு, தொல்காப்பியம் சொல்லதிகாரத்தில் முதற் சூத்திர உரையில் இளம்பூரணர் கருத்துடன் ஒத்துள்ளது. களவியல் உரை ஏழாம் சூத்திரத்தில் “செலவினும்“ என்ற தொல்காப்பியச் சூத்திரத்திற்குத் தரும் விளக்கம் இளம் பூரணர் கூறுவது போலவே உள்ளது. ஆதலின் இருநூலின் உரை யாசிரியர்களும் ஒருவரே என்பர். இரண்டொரு இடங்கள் ஒத்துள்ளன என்ற ஒரு சான்று இக்கருத்தை வலிமையுள்ள தாக்கவில்லை. ஆதலின் இக்கருத்து மற்றவர்களால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

இல்லாத உரைப் பகுதி

இளம்பூரணருக்குப் பின் வந்த உரையாசிரியர்கள் சிலர், அவரது உரைகளைக் குறிப்பிடும் இடங்களில் சில இன்றுள்ள இளம்பூரணர் உரையில் காணப்படவில்லை. மதுரைக் காஞ்சியுரையில் (40...42) நச்சினார்க்கினியர், ”(தென் திசையை) இராவணன் ஆளுதல் பாயிரச் சூத்திரத்து உரையாசிரியர் கூறிய உரையானும் உணர்க” என்று கூறுகின்றார். இங்கே நச்சினார்க்கினியர், உரையாசிரியர் என்று குறிப்பிடுவது இளம்பூரணரை எனின், பாயிரச் சூத்திர

உரை என்பது தொல்காப்பியப் பாயிரத்தைக் குறிக்க வேண்டும். ஆனால் இன்றுள்ள இளம்பூரணர் பாயிரச் சூத்திர உரையில் தென் திசையை இராவணன் ஆண்ட செய்தி கூறப்படவில்லை.

அடியார்க்கு நல்லார், சிலப்பதிகாரத்தில் வேனிற் காதையின் தொடக்கத்தில், குமரிக் கண்டத்தைக் கடல் கொண்ட வரலாற்றையும் அதனை அறிதற்கு உறுதுணையாய் இருந்த சான்றுகளையும் குறிப்பிடுகின்றார். பன்மலை நாடும் காடும் நதியும் பதியும் தடநீர்க் குமரி வடபெருங்கோட்டின் காறும் கடல் கொண்டு ஒழிதலாற் குமரியாகிய பௌவம் என்றார் என்க. இ.ீ.து என்னை பெறுமாறு எனின்,

வடிவேல் எறிந்த வான்பகை பொறாது
ப.ீ.றுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள

என்பதனாலும், கணக்காயனார் மகனார் நக்கீரனார் உரைத்த இறையனார் பொருளுரையானும், உரையாசிரியராகிய இளம் பூரண அடிகள் முகவுரையானும் பிறவாற்றானும் பெறுதும்" என்று கூறுகின்றார். இளம்பூரணர் எந்த நூலின் முகவுரையில் கூறினார் என்று அடியார்க்கு நல்லார் குறிப்பிடவில்லை. தொல்காப்பிய உரையின் முகவுரையில் குமரிக் கண்டம் கடல்கொண்ட செய்தி இளம்பூரணரால் கூறப்படவில்லை.

நச்சினார்க்கினியர்,நூன்மரபில் "மெய்யோடியையினும்" என்ற சூத்திர உரையில் உரையாசிரியர் கருத்தாகக் குறிப்பிடும் பகுதி இன்றுள்ள இளம்பூரணர் உரையில் இல்லை. இவ்வாறே சேனாவரையர், உரையாசிரியர் கூறியவையாகக் காட்டும் பகுதி (68,114 சொல்.சேனா. உரை) இளம்பூரணர் உரையில் இல்லை.

இத்தகைய இடங்கள் எல்லாம் இளம்பூரணரைப் பற்றி ஆராய இன்னும் இடம் உண்டு என்பதனை நமக்கு அறிவிக் கின்றன.

4.சேனாவரையர்

தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்கு உரைகண்ட புலவர் பெருமக்கள் ஐவர். **(இயற்றியவர் பெயர் அறியப்படாத உரை ஒன்று உள்ளது.)** இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார், கல்லாடர் ஆகிய ஐவரும் ஒருவர்பின் ஒருவராகக் காலந்தோறும் சொல்லதிகாரத்திற்கு விரிவான உரைஎழுதி, தமிழ்மொழிக்குத் தொண்டு புரிந்தனர். ஐவரில் சேனாவரையர் உரையே இன்றுவரை, புலவர் உலகம் போற்றும் பெருமையுடன் விளங்குகின்றது. சேனாவரையர் உரை தோன்றியபின், அதற்குமுன் வழங்கி வந்த இளம்பூரணர் உரை,செல்வாக்கு இழந்தது. பயில்வார் இன்றிப் போயிற்று. ஆனால், சேனாவரையர் உரைக்குப்பின் தோன்றிய உரைகள் யாவும் அவ்வுரை முன் நிற்கும் ஆற்றலின்றிப் பீடு குறைந்தன் சேனாவரையர்உரை பெற்ற பெருமையும், போற்றுதலும் பெறாமல் நின்றன.

சேனாவரையர் சொல்லதிகாரத்திற்கு மட்டுமே உரை எழுதியுள்ளார். இவர் வேறு நூலோ, உரையோ எழுதியிருப்பதாகத் தெரியவில்லை. சிவஞான முனிவர், ழுசேனாவரையர்

எழுத்ததிகாரத்திற்கு உரைசெய்தார் ஆயின், இன்னோரன்ன பொருளனைத்தும் தோன்ற, ஆசிரியர் கருத்துணர்ந்து உரைப்பர். அவர், சொல்லதிகாரம் போலப் பெரும்பயன்படாமை கருதி எழுத்ததிகாரத்திற்கு உரை செய்யாது ஒழிந்தமையின் பின்னுள்ளோரும் மயங்குவராயினர்" என்று கூறுகின்றார். மேலும் சேனாவரையர், தம் உரையில், எழுத்ததிகாரத்தை எழுத்தோத்து (சொல். 143, 420) என்றும், பொருளதிகாரம் (250) என்றும், உவமஇயலை அணியியல் (சொல்.440) என்றும் குறிப்பிடுகின்றார். எழுத்ததி காரத்திலிருந்தும் பல சூத்திரங்களை எடுத்து விளக்கிச் செல்லுகின்றார். அவ்விடங்களில், ஏனைய பகுதிக்குத் தாம் உரை எழுதியமை பற்றிக் குறிப்பிடவில்லை.

பெயர்

சேனாவரையர் என்ற சொல்லுக்குப் படைத்தலைவர் என்பது பொருள். சேனை + அரையர் எனப்பிரித்துப் படைத் தலைவர் என்று பொருள் கொள்வர் நன்னூலின் உரையாசிரியராகிய மயிலைநாதர். சிறப்பால்பெறும் பெயருக்கு "ஆசிரியன், படைத்தலைவன், சேனாவரையன்" என்பனவற்றை உதாரணமாகக் காட்டியுள்ளார் (நன். பெய. -19). ஆதலின், பண்டைத் தமிழ்மன்னர்கள், தம் படைத்தலைவர்களுக்குச் "சேனாவரையர்" என்ற சிறப்புப் பெயரை இட்டுவழங்கினர் என்று அறியலாம். சேனாவரையர் என்பது இயற் பெயராகவும் கல்வெட்டுகளில் வழங்கியுள்ளது. உரையாசிரியராகிய சேனா வரையரைப் படைத்தலைவர் என்று கொள்வதற்குச் சான்று எதுவும் இல்லை. ஆதலின், அதனை இயற்பெயராகவே கருத வேண்டியுள்ளது. இவரது முன்னோர்கள், படைத்தலைவர்களாக இருந்திருக்கக்கூடும். அக்காரணம் பற்றி, இவருக்குச் சேனா வரையர் என்ற பெயர் வழங்கி இருக்கலாம்.

வாழ்ந்த இடம்

இவர், தென்பாண்டி நாட்டில் வாழ்ந்தவர் என்பதற்கு இவர் உரையில் சான்றுகள் சில உள்ளன. திசைச் சொற்களை விளக்கிக் கூறுமிடத்தில், "தென்பாண்டி நாட்டார் ஆ எருமை என்பவற்றைப் பெற்றம் என்றும், தம்மாம் என்பதனைத் தந்துவை என்றும் வழங்குப்" என்று உதாரணம் காட்டுகின்றார் (சொல்.400). ஏனைய நாட்டு வழக்கிற்கு எடுத்துக் காட்டு எதுவும் தரவில்லை.

"பெண்மை யடுத்த மகனென் கிளவி" (164) என்பதற்குப் "பெண்மகன்" என்று உரை கூறியபின், "புறத்துப்போய் விளையாடும் பேதைப் பருவத்துப் பெண் மகளை மாறோக்கத்தார். இக்காலத்தும் பெண்மகன் என்று வழங்குப்" என, அச் சொல் வழங்குமிடத்தைப் பலகாலும் கேட்டு அறிந்தவர் போலத் தெளிவாகக் குறிப்பிடுகின்றார். சொல்லதிகாரத்திற்கு உரை வகுத்த ஏனைய உரையாசிரியர்கள், இவ்வாறு இடஞ்சுட்டி விளக்கவில்லை. சேனாவரையர் குறிப்பிடும் மாறோக்கம் என்பது, தென்பாண்டிநாட்டில், கொற்கையைச் சூழ்ந்த பகுதிக்கு முற்காலத்தில் வழங்கிய பெயராகும். **(1. ஆறுமுக நாவலர் குறிப்பு,)**

கல்வெட்டின் உதவி:

மாறோக்கத்தில் எவ்வூரில் சேனாவரையர் வாழ்ந்தார் என்பதை அறிந்துகொள்ளக் கல்வெட்டு, பெரிதும் துணைசெய்கின்றது. திருநெல்வேலி மாவட்டத்தில், கொற்கைக்கு அருகில் தாமிரவருணியாற்றின் கரையில், ஆற்றூர் என்னும் ஊர் உள்ளது.

அவ்வூர்க்கோயிலில், வரையப்பட்டுள்ள கல்வெட்டுகளில் ஒன்று, ஆற்றூர்ச் சேனாவரையர் என்பவர், ஆசிரியமாணாக்கர் முறையில் தம் முன்னோரிடமிருந்து, தமக்குக் கிடைத்த நிலம் மனை ஆகியவற்றைத் தம் ஊரில் உள்ள சோமநாதக் கடவுளுக்கு வழங்கிய செய்தியைக் கூறுகின்றது. (2. MER 465 of (1929-30). இக் கல்வெட்டில் கூறப்படும் சேனாவரையர், தொல்காப்பிய உரை யாசிரியராகிய சேனாவரையாக இருக்கக்கூடும் என்று அறிஞர் உலகம் கருதுகின்றது.

அக்கோயிலில் உள்ள வேறு இரண்டு கல்வெட்டுகளால், பின்வரும் செய்திகள் தெரிகின்றன. சேனாவரையரின் முன்னோர் ஆற்றூரில், படைத்தலைவர்களின் வழித்தோன்றல்களாகவும், இடம் பொருள் ஏவல் உடைய பெருஞ் செல்வராகவும் இருந்தனர் அவர்கள் பரம்பரை பரம்பரையாகப் புலமை வாய்ந்த குடியினர். ஆசிரியர் மாணாக்கர் வழிமுறையாகத் தம் முன் னோரிடமிருந்து புலமைத்திறம் பற்றித் தமக்குக் கிடைத்த நிலம் மனை ஆகியவற்றையே சேனாவரையர், சிவன்கோயிலுக்கு வழங்கினார்.

காலம்

இவ்வாறு ஆற்றூர்ச் சேனாவரையர் தம் சொத்துகளைச் சிவன் கோயிலுக்கு வழங்கிய காலம், மாறவர்மன் குலசேகர பாண்டியனது ஏழாம் ஆட்சியாண்டாகிய கி.பி.1275 ஆகும். இப் பாண்டியனை எம்மண்டிலமும் கொண்டருளிய மாறவர்மன் குலசேகரன் (கி.பி.1268-1311 என்று வரலாற்று ஆசிரியர்கள் குறிப் பீடுகின்றனர். எனவே, சேனாவரையர், அப் பாண்டிய மன்னன் காலத்தில் 13-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர் என்னலாம். (**1. சாசனத் தமிழ்க் கவிசரிதம் (1987) பக்.108-144. மு. இராகவ ஐயங்கார்.)**

சமயம்

இவரது உரையைக் கொண்டு, இரது சமயத்தை அறிய இயலவில்லை. 'அரையர்" என்ற பெயர், திருவரங்கத்தில், பள்ளிை கொண்ட பெருமாள் கோயிலின்கண், திருவாய்மொழியை அபிநயம் பிடித்துப் பாடுவோருக்கு வழங்குவதால், ஒருகால் சேனாவரையர் திருமாலின் அடியவராய் இருத்தல் கூடுமோ என்று கருதுபவர் உண்டு.

இவரது உரைநூலின் தொடக்கத்தில், வாழ்த்துப் பாடல்கள் நான்கு காணப்படுகின்றன. அவை முறையே விநாயகரையும், மாதொருபாகனையும், கலைமகளையும் அகத்தியரையும் வாழ்த்தி வணங்குகின்றன. அவற்றுள் முதற் பாடலாகிய,

தன்தோள் நான்கின் ஒன்றுகைம் மிகூஉம்
களிறுவளர் பெருங்கா டாயினும்
ஒளிபெரிது சிறந்தன்று அளியஎன் நெஞ்சே

என்ற விநாயகர் வாழ்த்தை, இளம்பூரணர் மேற்கோளாகக் காட்டு கின்றார் (தொல். பொருள். செய். 50). இளம்பூரணர் சேனாவரையர்க்கு முந்தியவர் ஆதலின், இச் செய்யுளை இளம்பூரணர் உரையிலிருந்து சேனாவரையர் பெற்றுள்ளார். ஏனைய பாடல்களை இயற்றியவர் சேனாவரையரே என்பதில் கருத்து வேற்றுமை இல்லை. பல ஆண்டுகளாக அப் பாடல்கள்,

சேனாவரையர் உரையோடு சேர்ந்தே வழங்கி வருகின்றன. வேறு ஒருவர் அவற்றை இயற்றியதாக இன்றுவரை யாரும் கருதவில்லை. அவை, இடைச்செருகல் என்பதற்குச் சான்று எதுவும் இல்லை.

ஆதலின் அவற்றைச் சேனாவரையர் இயற்றியதாகவே கருத் வேண்டும். சேனாவரையர் சிவநெறிச் செல்வர் என்பதற்கு அப் பாடல்களே தக்க சான்றுகள் ஆகின்றன. முன்னர்க் குறிப்பிட்ட -ஆற்றூர்க் கல்வெட்டுச் செய்தியும் அவர் சைவர் என்பதை உறுதிப் படுத்துகின்றது.

ஆசிரியப்பணி

சேனாவரையர் ஆசிரியப் பணி பூண்டு வாழ்ந்தவர் என் பதைக் கல்வெட்டால் மட்டுமின்றி, அவர் உரையாலும் அறியலாம்.

”மாணாக்கர்க்கு உணர்வு பெருகல் வேண்டி வெளிப்படக் கூறாது உய்ந்துணர வைத்தல் அவர்க்கு (உரையாசிரியர்க்கு இயல்பு” என்று முதற் சூத்திர உரை விளக்கத்திலேயே மாணாக்கரை நினைவுபடுத்துகின்றார். தம் உரையை, ஆசிரியர் தம் மாணாக்கர் பலர்க்குப் பாடம் சொல்லும்போது மாணவர் எழுப்பும் வினாவும் ஆசிரியர் கூறும் விடையும் அமையு மாறு எழுதிச் சொல்கின்றார். ஓர்

என் சொல்லியவாறோ எனின் (43), யாதோ மக்கட்சுட்டு உடையவாறெனின், கொள்ளாமோ எனின்-நன்று சொன்னாய் (92). இச் சூத்திரம் வேண்டா எனின் அ.ஃதொக்கும் (124), உணர்த்தும்வழிச் சிறிய சொல்லுதும் (201), கூறிய கருத்து என்னை எனின்-நன்று சொன்னாய் (204), இச் சூத்திரம் வேண்டா எனின்- இதற்கு விடை ஆண்டே கூறினாம் (432) என்று சேனா வராயர் எழுதிச் செல்கின்றார். பலகாலும் மாணாக்கர்க்குப் பாடம் சொல்லிப் பழகிய பழக்கத்தால் இவ்வாறு எழுதுகின்றார்.

பொருட்குத் திரிபில்லை உணர்த்த வல்லின்“ (392) என்னும் சூத்திரத்திற்கு, நல்லாசிரியர் ஒருவர் தம் மாணாக்கர்க்குக் கற்பிக்கும் முறையில் உரை எழுதுகின்றார்.

”உறுகால் என்புழி உறு என்னும் சொற்குப் பொருளாகிய மிகுதி என்பதன் பொருளும் அறியாத மடவோனாயின், அவ்வாறு ஒருபொருட்கிளவி கொணர்ந்து உணர்த்தல் உறாது. “கடுங்காலது வலி கண்டாய்“ ஈண்டு “உறு“ என்பதற்குப் பொருள் என்று தொடர் மொழி கூறியாயினும், கடுங்காலுள்ள வழிக் காட்டி யானும், அம் மாணாக்கன் உணரும் வாயில் அறிந்து உணர்த்தல் வல்லனாயின், அப்பொருள் திரிபுபடாமல் அவன் உணரும் என்றவாறு.”

இவ்வுரைப் பகுதியிலிருந்து, சேனாவரையர் தம் மாணாக் கர்க்குப் பாடம் சொன்ன முறையையும், அப்போது தமக்கு ஏற்பட்ட அறியலாம் அனுபவத்தையும் இவ்வாறு குறிப்பிடுகின்றார் என்று அறியலாம்.

உரையில் இடம்பெற்றுள்ள வேறு சில உதாரணங்களும் சேனாவரையர், ஆசிரியர் என்பதைத் தெளிவாக உணர்த்துகின்றன.

நூல்: கற்கும் நூல் (234), சாத்தனது புத்தகம் (413), நூலின் நூற்கன மங்கலம் என்றும் (82) என்பவை போன்ற குறிப்புகள் நூலைப் பற்றியவை.

பொருள் மயக்கமாகிய பிசிச் செய்யுட்கண் (விடுகதைப் பாடலில்) திணை முதலாயின திரிந்து வருவதற்கு,

எழுதுவரிக் கோலத்தார் ஈவார்க் குரியார்
தொழுதிமைக் கண்ணணைந்த தோட்டார்- முழுதகலா
நாணிற் செறிந்தார் நலங்கிள்ளி நாடோறும்
பேணற் கமைந்தர் பெரிது

என்ற வெண்பாவைக் காட்டி, "புத்தகம் என்னும் பொருள் மேல் திணைதிரிந்து வந்தவாறு கண்டு கொள்க" என்று கூறுகின்றார். சேனாவரையர் காலத்தில் பனையோலைகளில் வரிவரியாக எழுதி, மை பூசிக் கயிற்றால் கட்டிய ஏட்டுச் சுவடி இருந்தது. அதனை மேற்கூறிய விடுகதைப் பாடல் குறிப்பிடுகின்றது.

கற்கும் முறை: கற்பார்க்குச் சிறந்தது செவி (75), உரைத்தென உணர்ந்தான் (228), சாத்தனது கற்றறிவு (80), கற்று வல்லன் ஆயினான் (230), நூலது குற்றங் கூறினான் (ஐஐஐ) என்ற எடுத்துக் காட்டுகள் கற்குமுறையை உணர்த்துகின்றன.

ஆசிரியரும் மாணாக்கரும: திருவீர ஆசிரியன் ஆசிரியன் பேரூர் கிழான் செயிற்றியன் இளங்கண்ணன் சாத்தன் வந்தான் (41), மாணாக்கர்க்கு நூற்பொருள் உரைத்தான், மாணாக்கர்க்கு அறிவு கொடுத்தான் (75), ஆசிரியனோடு மாணாக்கர் வந்தார் (91) என்பவை ஆசிரியரையும் மாணாக்கரையும் பற்றியவை.

தந்தையும் மகனும்: "சாத்தன் கைஎழுதுமாறு வல்லன் அதனால் தந்தை உவக்கும் (38),ஓதல் வேண்டுமென்ற வழி, வேண்டும் என்பது ஓதற்கு வினை முதலாயிற்றாம். அவன் ஓதலை விரும்பும் தந்தைக்கும் ஏற்றவாறு கண்டுகொள்க" என்ற உதாரணங்கள், சேனவரையர் காலத்தில் தம் மக்களின் கல்வித்திறன் கண்டு, பெற்றோர் உவந்தனர் என்பதைக் காட்டு கின்றன.

உரையின் இயல்பு

சேனாவரையர் உரை, திட்பமும் நுட்பமும் வாய்ந்தது உள்ளன. கற்கண் சேனாவரையரின் புலமைப் பெருமிதமும் ஆராய்ச்சி வன்மையும் கருத்துத் தெளிவும் உரை முழுவதிலும் வாயிலிட்டு மெல்ல மெல்லச் சுவைத்து இன்புறுவதுபோல், இவர் உரையை நாள்தோறும் பயின்று மெல்ல மெல்ல உணர்ந்து மகிழ வேண்டும். பலமுறை ஆழ்ந்து பயின்றாலும் இவ்வுரையை முற்றும் பயின்று விட்டோம் என்ற மனநிறைவு ஏற்படுவதில்லை, செங்குத் தான மலைமீது ஏற, கல்லும் முள்ளும், மேடும் பள்ளமும் நிறைந்த குறுகிய வழியில் வெயிலில் நடப்பது போன்ற உணர்ச்சியை, இவ்வுரையைக் கற்கத் தொடங்கும் மாணவர் முதலில் அடைவர் முடிவில், மலையுச்சிக்குப் போய், மர நிழலில் நின்று. தண்ணென்ற காற்று வீச மெய் குளிர்ந்து, அங்கிருந்தபடியே மண்ணும் விண்ணும் வழங்கும் இன்பக் காட்சியைக் கண்டு மகிழும்போது பெறும் இன்ப உணர்வைப் பெறுவர்.

இவ்வுரை செறிவும், சுருங்கச் சொல்லி உய்த்துணர வைக்கும் இயல்பும் உடையது ஆற்றல் வாய்ந்த சொற்களை ஆராய்ந்து எடுத்து, ஆழமான பொருளைத் திணித்து, ஆழ்ந்து பலமுறை கற்கும்வகையில் அமைக்கப்பட்டுள்ளது தருக்கநூல் முறை வழுவாமல் தடை விடைகள் பல எழுப்பி, பிற உரையினை மறுத்தும் கருத்தை நிலைநாட்டுகின்றது. இவ்வுரையைக் கற்கும் போது, சிங்க நோக்காக நூலின் முன்னும் பின்னும் நோக்கி, அவற்றை நன்கு நினைவில் கொண்டு கற்க வேண்டிய பகுதிகள் பல இருப்பதை உணரலாம். தூய தமிழ்நடை, பீடு குன்றாமலும் பொருள் தெளிவுடனும் இனிய கருத்தோட்டத்துடனும் நூல் முழு வதும் அமைந்துள்ளது.

இத்தனை சிறப்புகளும் வாய்ந்த சேனாவரையர் உரை, காலந்தோறும் புலவர் பெருமக்களின் போற்றுதலைப் பெற்று, காலவெள்ளத்தைக் கடந்து வருவதில் வியப்பில்லை. இவ்வுரை யினை நன்கு பயிலாதவரை, தமிழ்ப் புலவர்கள், இலக்கணப் புலமை நிரம்பியவராகக் கருதுவதில்லை.

முழுநோக்கு

சேனாவரையர் சொல்லதிகாரம் ஒன்றிற்கே உரை கண்டிருப்பினும், தொல்காப்பியம் பற்றி முழுநோக்கு உடையவர். எழுத்தையும் பொருளையும் அவர் சிங்க நோக்காகக் கண்டு விளக்கம் எழுதுகிறார். சொல்லதிகார அமைப்பையும் முழுமையாக நோக்கி, இயல் அடைவிலும், சூத்திரங்களின் அமைப்பு, பாடவேறுபாடு, ஓசை ஆகியவற்றிலும் ஈடுபடுகின்றார்.

கிளவியாக்கத்திற்குப்பின் வேற்றுமையியலையும் அதன் பின் வேற்றுமை மயங்கியலையும், பின் மற்ற இயல்களையும் வைத்தமை பற்றிச் சேனாவரையர், ஒவ்வோர் இயலின் தொடக் சுத்திலும் எழுதும் விளக்கம் படித்து மகிழத்தக்கதாகும்.

சூத்திரங்களின் அமைப்பு

”இச் சூத்திரத்திற்குக் கருத்தாயின்,... என்னும் சூத்திரத்தின் பின் வைக்க எனின்” என்று சேனாவரையர் தாமே வினா எழுப்பிக்கொண்டு விடை கூறுவதும் உண்டு (67).

”அவைதாம், தத்தம் பொருள்வயின்” (115) என்னும் சூத்திரத்தின் இறுதியடியாகிய

வேற்றுமை மருங்கின் போற்றல் வேண்டும்

என்பதைப் பிரித்து, ஒரு சூத்திரமாக உரையாசிரியர் உரைத்ததை எடுத்துக் கூறி, அவ்வாறு பிரித்தது சிறந்தது அன்று என்று விளக்குகின்றார்.

அடிமறிச் செய்தி அடிநிலை திரிந்து

சீர்நிலை திரியாது தடுமா றும்மே (ந. 407)

என்னும் சூத்திரத்தையும், அதற்கடுத்த சூத்திரத்தின் குறளடியாகிய (408)

பொருள்தெரி மருங்கின் என்பதையும் சேர்த்து,

அடி மறிச் செய்தி

அடிநிலை திரிந்து சீர்நிலை திரியாது

தடுமா றும்மே பொருள்தெரி மருங்கின்

என்று சூத்திரம் அறுப்பாரும் உளர் என்று சேனாவரையர் சுட்டு கின்றார்.

வேற்றுமைப் பொருளை (83) என்னும் சூத்திரத்தின் முதல் இரண்டடியை ஒரு சூத்திரமாகவும், பின் இரண்டடிகளை மற்றொரு சூத்திரமாக உரைப்பாரும் உளர் என உரையாசிரியர் கூறியதாகச் சேனாவரையர் உரைக்கின்றார்.

பெயரியலில்,**அவற்றுள், நான்கே இயற்பெயர் (175)**

என்னும் சூத்திர உரையின் கீழ், "கூறப்பட்ட பெயரது பாகு பாடாகிய ஒரு பொருள் நுதலுதல் பற்றிய ஒரு சூத்திரமாயிற்று. நான்காய் விரிதலும் இரண்டாய் விரிதலும் தாமே யாதலுமாகிய பொருள் வேற்றுமையான் மூன்று சூத்திரம் எனினும் அமையும்" என்று எழுதுகின்றார்.

"இச் சூத்திரம் வேண்டா எனின்" என்று சேனாவரை வினா எழுப்பிக்கொண்டு, விடைகூறும் இடங்களும் உள்ளன 92, 462)

சூத்திரங்களுக்குரிய ஓசை நயத்திலும் சேனாவரை ஈடுபட்டுள்ளார். பலமுறை ஓதிஓதிப் பண்பட்ட அவரது செ நுட்பம் நம்மை வியக்கச் செய்கின்றது.

"தாமே என்பது கட்டுரைச் சுவைபட நின்றது ஜ63. செய்யுள் இன்பம் நோக்கி அளபெழுந்து நின்றது (210), செய்யுள்) இன்பம் நோக்கி என்றார் (295) என்று சேனாவரையர் கூறு இடங்கள் குறிப்பிடத் தக்கவையாகும்.

உரைத்திறன்

தொல்காப்பியர் வகுத்துள்ள இலக்கண விதிகளையும் சூத்திரங்களையும் சேனாவரையர் தம் நுண்மாண் நுழைபுலம் கொண்டு நுணுகி நோக்கி, நூலாசிரியர் ஒவ்வொரு சொல்லையும் பொருளாழத்துடன் அளந்து அமைத்திருக்கின்றார் என்ற கருத்தைப் பல இடங்களில் வற்புறுத்திக் கூறுகின்றார்.

வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது

நினையுங் காலைக் காலமொடு தோன்றும் (198)

என்ற சூத்திரத்திற்குச் சேனாவரையர் எழுதியுள்ள விளக்கம் பலமுறை கற்று மகிழும் வகையில் உள்ளது:

"வேற்றுமை கொள்ளாது என்னாது காலமொடு தோன்றும் எனின், தொழில் நிலையொட்டும் தொழிற் பெயரும் வினைச் சொல்லாவான் செல்லும் ஆகலானும் காலமொடு தோன்றும் என்னாது வேற்றுமை கொள்ளாது எனின், இடைச் சொல்லும் உரிச்சொல்லும், வினைச்சொல்லெனப்படும் ஆகலானும் அவ்விரு திறமும் நீக்குதற்கு "வேற்றுமை கொள்ளாது, காலமொடு தோன்றும்" என்றார். வினைச் சொல்லுள், வெளிப்படக் காலம் விளங்காதனவும்

உள் அவையாவும் ஆராயுங்கால் காலம் உடைய என்றற்கு "நினையுங்காலை" என்றார்" என்று சேனாவரையா எழுதியுள்ள விளக்கம் புலமைக்கு விருந்தளிக்கின்றது.

இவ்வாறே "பெண்மை சுட்டிய" (4) என்னும் சூத்திரத்திற்கு இவர், சொல்லுக்குச் சொல் நுண்பொருள் கண்டு உரை எழுதும் திறன் வியந்து போற்றுதற்கு உரியதாகும்.

ஆராய்ச்சித் திறன்

சேனாவரையர் தொல்காப்பியரிடம் பெருமதிப்புக் கொண்டவர். தொல்காப்பியர் நூலில், தாம் ஏற்றுக்கொள்ளு இயலாத சில இலக்கணக் கருத்துகள் இருப்பதைச் சேனாவரையர்

சில இடங்களில் உணர்கின்றார். இருப்பினும், தொல்காப்பியரைக் மல, நம் கருத்தை எழுதித் தம் ஆராய்ச்சித் திறனைக்

"எல்லே இலக்கம்" என்பது, இடையியலில் உள்ள சூத்திரம் (சொல்.269). "எல்" என்பதை உரிச் சொல்லாகக் கொள்ளவேண்டும் என்பது சேனாவரையர் கருத்து. ஆனால் தொல்காப்பியரே அதனை இடைச்சொல் என்று கூறுவதால், சேனாவரையர் தம் கருத்தையும் எழுதி நூலாசிரியரையும் மதிக்கின்றார். "எல் என்பது உரிச்சொல் நீர்மைத்து ஆயினும் ஆசிரியர் இடைச்சொல்லாக ஓதினமையின், இடைச்சொல் என்று கோடும்" என்று மிகச் சுருக்கமாக எழுதித் தம் சொல்லாராய்ச்சித் திறனை வெளிப்படுத்துகின்றார்.

மூன்றாம் வேற்றுமையின் உருபுகளாகிய "ஒடுவும் ஆனும் வினா எழுப்பிக்கொண்டு ஆராயும் பகுதி, அவருடைய மொழியாராய்ச்சித் திறனை விளக்கும் சிறந்த சான்றாகும்.

"நும்மின் திரிபெயர் நீயிர்" என்று தொல்காப்பியர் கூறு கின்றார் (எழுத்.326 சொல் 143). ஆனால் சேனாவரையர் "நீயிர் என்பதன் திரிபு நும்" என்னும் கருத்துடையவர். இருப்பினும் தம் இலக்கண ஆராய்ச்சித் திறனை வெளிப்படுத்தி, நூலாசிரியரைப் போற்றியே உரை எழுதியுள்ளார் (சொல்.98,143).

இலக்கணக் கொள்கையும் ஆராய்ச்சியும்

சேனாவரையர், இலக்கணத்தில் பயின்றுவரும் சொற் றொடர்களையும் கொள்கைகளையும் நுணுகி ஆராய்ந்து விளக்கு கின்றார்.சில சொற்றொடர்களின் வரலாறு, வழக்கு, வடிவம், பொருள் ஆகியவற்றை நன்கு சிந்தித்து நல்ல முடிவுகளை வெளியிடுகின்றார்.

"என்மனார்" என்னும் சொல்லுக்கும் (ஐ), "மார்" ஈற்று வினைச்சொல்லுக்கும் (7) இவர் கூறும் இலக்கண விளக்கம் படித்து மகிழத்தக்கது.

"எவன்" என்னும் வினாச்சொல் பற்றி விளக்கம் எழுதிய பின், "எவன் என்பதோர் பெயரும் உண்டு அ.ஃ.து இக்காலத்து என் என்றும், என்னை என்றும் நிற்கும். ஈண்டுக் கூறப்பட்டது வினைக்குறிப்பு முற்று என்க" (219) என்று ஆராய்ந்து கூறுகின்றார்.

"எய்யாமை" என்னும் சொல்லைப்பற்றி "அறிதற் பொருட்டால் எய்தல் என்றானும், எய்த்தல் என்றானும் சான்றோர் செய்யுட்கண் வாராமையின், எய்யாமை எதிர் மறையன்மை அறிக" (342) என்று எழுதுகின்றார்.

“இலம்பாடு“ என்னும் சொல்லைப் பற்றிப் பின்வருமாறு எழுதுகின்றார்: “இலம் என்னும் உரிச்சொல், பெரும்பான்மையும் பாடு என்னும் தொழில் பற்றியல்லது வாராமையின் இலம்பாடு என்றார்” (360).

”கறுப்பும் சிவப்பும் வெகுளிப் பொருள” (372) என்னும் சூத்திரத்தின்கீழ், ”கறுமை, செம்மை என்னாது கறுப்பு சிவப்பு என்றதனான் தொழிற்பட்டுழியல்லது அவை உணர்த்தாமை கொள்க” என்று விளக்குகின்றார். வெகுளி

“கடிசொல் இல்லைக் காலத்துப் படினே“ (452) என்பதன் கீழ், சம்பு, சள்ளை, சட்டி, சமழ்ப்பு என்பவை பிற்காலத்தே தோன்றிய சொற்கள் என்று குறிப்பிடுகின்றார்.

இலக்கண விளக்கம்

இலக்கணத் தொடர்களையும், கொள்கைகளையும் சேனா வரையர் திறம்பட விளக்குகின்றார்:

கிளவியாக்கம்: ”வழுக்களைந்து சொற்களை ஆக்கிக் கொண்டமையான், இவ்வோத்து கிளவியாக்கம் ஆயிற்று. ஆக்கம் - அமைத்துக் கோடல்.” (ஐ)

இரட்டைக் கிளவி: ”ஈண்டு இரட்டைக் கிளவி என்றது, மக்கள் இரட்டை, விலங்கு இரட்டை போல, வேற்றுமை உடையனவற்றை அன்றி, இலையிரட்டையும் பூவிரட்டையும் போல ஒற்றுமையும் வேற்றுமையும் உடையனவற்றை என்று 25” (48).

முக்காலம்: இறப்பாவது, தொழிலது கழிவு. நிகழ்வாவது,

தொழில் தொடங்கப்பட்டு முற்றுப்பெறாத நிலைமை. எதிர் வாவது தொழில் பிறவாமை. தொழிலாவது, பொருளினது புடைபெயர்ச்சியாகலின், அ.ஃது ஒரு கணம் நிற்பதல்லது இரண்டு கணம் நில்லாமையின், நிகழ்ச்சி என்பது ஒன்று அதற்கு இல்லை யாயினும், உண்டல்,தின்றல் எனப் பல்தொழில் தொகுதியை ஒரு தொழிலாகக் கோடலின், உண்ணாநின்றான், வாராநின்றான், என நிகழ்ச்சியும் உடைத்தாயிற்று என்பது” (200).

இடைச்சொல்: சார்ந்துவருதல் உரிச்சொற்கும் ஒத்தலின், தமக்கெனப் பொருளின்மை இடைச்சொற்குச் சிறப்பிலக் கணமாம்” (249).

சொல்லும் பொருளும்

சில சொற்களுக்குச் சேனாவரையர் கூறும் பொருள் சிறப்பாக உள்ளது.

“காலம்“ என்பது காலக் கடவுளை.

“உலகம்“ என்றது ஈண்டு மக்கள் தொகுதியை.

“பால்வரை தெய்வம்“

என்பது எல்லார்க்கும் இன்ப துன்பத்திற்குக் காரணமாகிய இருவினையும் வகுப்பது.

“வினை“ என்பது அறத்தெய்வம்.

“சொல்“ என்பது நாமகளாகிய தெய்வம் (57).

வடமொழிப் புலமையும் பற்றும்

சேனாவரையர் தமிழ் இலக்கணத்தில் தேர்ச்சி பெற்றிருப் பதைப் போலவே,வடமொழி இலக்கணத்திலும் வல்லவராக விளங்குகின்றார். இருமொழியிலும் வல்லவரான சிவஞான முனிவர், இவரை "வடநூற்கடலை நிலைகண்டு உணர்ந்த சேனா வரையர்" என்று வாயாரப் புகழ்ந்து போற்றுகின்றார். வடமொழி பயின்றவர் என்றோ, கற்றவர் என்றோ புலமை பெற்றவர் என்றோ கூறாமல், வடநூற்கடலை நிலைகண்டு உணர்ந்தவர் என்று கூறியுள்ளதால், சேனாவரையருக்கு அம்மொழியில் அளப்பரிய பேராற்றல் இருந்தது என்பது விளங்கும்.

அங்ஙனம் புகழ்வதற்கு ஏற்பச் சேனாவரையர், வடமொழி இலக்கணக் கொள்கைகளைத் தெளிவாக விளக்குகின்றார் வடமொழி இலக்கண விதிகளை மேற்கோள் காட்டுகின்றார்.

அதிகாரம் (ஐ), ஞாபகம், அநுவாதம் (10), யோக விபாகம் (ஐஐ), உத்தரம் (13), நேயம் (55), காரகம் (112), கரும கருத்தன் (246), தாது (246) ஆகிய வடமொழிச் சொற்களை, தக்கஇடங்களில் எடுத் தாண்டு விளக்கியுள்ளார்.

பிரயோக விவேக நூலாசிரியர், "வாக்கிய பதியம், அரிபீடிகை, ஏலாராசியம் முதலாயின வழங்குங் காலத்து அவ் வுரை நோக்கிச் சேனாவரையர் முதலாயினார் தொல்காப்பியத் திற்கு உரை எழுதினார் என்க" என்று கூறுகின்றார் (திங்மூ-16)

பின்னங்குடி ச. சுப்பிரமணிய சாஸ்திரியார் சேனாவரையர் உரையில் உள்ள வடநூற் கருத்துகளை எடுத்துக்காட்டியுள்ளார்." **(1. தொல்காப்பியம் சொல்லதிகார உரை முன்னுரை.)**

வேதாந்தம்

"முயற்சியும் தெய்வமும் ஆகிய காரணங்களுள், தெய்வம் சிறந்தமையான்" (சொல்- 242).

தருக்கம்

"பண்போடு இவற்றிடை இன்மை பொருட்கு மறுதலையாகலின், பொருளின்கண் கிடக்கும் பண்பு எனப்படாது: அன்மையும் உண்மையும் பண்பிற்கும் ஒத்தலின் பண்பு எனப்படர் என்னை? குணத்திற்குக் குணம் இன்மையின்" (சொல்-214).

பூர்வ மீமாம்சை (வாக்கிய பேதம், நியமவிதி)

"இவ்வாறு ஒரு பொருள் நுதலிற்றாக உரையாக்கால் சூத்திரம் என்றாமாறு இல்லை" (சொல-1) "இரு தொடர்ப்படச் சூத்திரத்து" (சொல்-67) "இரண்டு வேற்றுமையும் எய்துவதனை நியமித்தவாறு" (87) "ஏனையிடத்து வாராது என்று நியமித்தற்கு என்பது" (260).

வியாகரணம்

வடநூலாரும் பிரியாத் தொகையும் பிறசொல்லான் விரிக்கப்படும் என்றார் (416) இவற்றை வடநூலார் தாது என்பர் (415) இயற்பெயராவன் சாத்தன் கொற்றன் என வழங்குதற் பயத்தவாய் நிமித்தம் இன்றிப் பொருளே பற்றி வரும் (174) இயை பின்மை நீக்கலும், பிறிதின் இயைபு நீக்கலும் என விசேடித்தல் இருவகைத்து (182).**ஸ**

வடமொழிப் புலமையும் பற்றும் மிகுதியாகச் சேனாவரை யருக்கு இருந்த காரணத்தால் தமிழ் மொழியின் இயல்புக்கும் இலக்கணத்திற்கும் ஒவ்வாத கருத்துகள் சிலவற்றையும் கூறியுள்ளார். அவற்றை மனத்தில் கொண்டு ஆராய்ச்சி அறிஞர் டி.வி. சதாசிவப் பண்டாரத்தார் சேனாவரையரைப்பற்றி, "வட மொழியும் தமிழும் நன்கு பயின்றவர். இவ்விரு பெரிய மொழிகளும் இருவேறு தனிமொழிகள் என்பதை மறந்து வடநூல் முடிபுகளையும் கொள்கைகளையும் தமிழுக்குரிய இலக்கணங் களில் புகுத்தி அவற்றிற்கு அமைதி கூறுவர்" என்று கூறுகின்றார். (**1.தமிழ் இலக்கிய வரலாறு, பக்கம்-36.**)

சேனாவரையர்,தொல்காப்பியரைப் பற்றிக் கூறும்போது வட நூலொடு மாறுகொள்ளாமல், நூல் இயற்றியவர் (74,114) என்று கூறுகின்றார். மேலும் ""தமிழ்ச்சொல் வடபாடைக்கண் செல்லாமையானும், வடசொல் எல்லாத் தேயத்திற்கும் பொதுவாகலானும்" (401) என்றும், "நீர்" என்பது ஆரியச் சிதைவு" 395) என்றும் கூறுகின்றார். இத்தகைய கருத்துகளை இன்வைய ஆராய்ச்சி உலகம் ஏற்றுக்கொள்வதில்லை.

மறுப்பு

சேனாவரையர், இளம்பூரணர் கொள்கைகளை ஐம்பதிற்கு மேற்பட்ட இடங்களில் மறுத்து, வேறு உரை கூறுகின்றார். இளம்பூரணரை உரையாசிரியர் என்றே எங்கும் குறிப்பிடுகின்றார். அவரிடம் பெருமதிப்பும் அச்சமும் கொண்டவராய் நயமாகத் தம் கருத்தை உரைக்கின்றார். இளம்பூரணர் உரைப் போக்கினை நன்கு உணர்ந்துள்ளார். அவரது கருத்தையும் கொள்கையையும் கசடறத் தெளிந்துள்ளார். இளம்பூரணர் கருத்தை அடியொற்றி, உரையா சிரியரும் இங்ஙனே கூறினார் என்று சேனாவரையர் போற்றும் இடங்களும் உண்டு.

உரையாசிரியர் கருத்தை மறுக்கும்போது, போலி உரை என்றும், பிறர் மதம் மேற்கொண்டு கூறினார் என்றும், அவர்க்கு அது கருத்து அன்று என்றும், நூலாசிரியர்க்குக் கருத்து அன்மையின் உரையாசிரியர்க்கும் அது கருத்து அன்று என்றும் கூறி மறுத்துச் சேனாவரையர் தம் கருத்தை நிறுவுகின்றார்.

இவற்றை உற்று நோக்கும்போது, சேனாவரையர் காலத்தில் இளம்பூரணர் உரைக்குப் போலியாக வேறு உரை ஒன்று இருந்ததோ என்ற ஐயம் எழாமல் இல்லை. இன்றுள்ள இளம்பூரணர் உரையில், இரண்டு இடங்கள் (66 114) சேனாவரையர், உரையாசிரியர் உரையாகக் குறிப்பிடும் பகுதிகள் இல்லை. சில இடங்களில் (242, 285,403) என்பாரும் உளர் என்று, பெயர் கூறாமல் சுட்டப்படும் பகுதி இளம்பூரணர் உரையில் காணப்படுகின்றன.

சேனாவரையர் காலத்தில் (இளம்பூரணர் உரை தவிர) வேறு சில உரைகளும் வழங்கிவந்தன என்பதற்குச் சான்றுகள் பல உண்டு. சேனாவரையர் அவ்வுரைகளை இயற்றியவர் ஊர் பேர் எதுவும் கூறாமல் என்பாரும் உளர் (37, 59, 74, 163, 182, 249, 250 255, 316 397, 407, 416, 420, 422 440, 441, 450, 451, 452, 455) குறிப்பிடுகின்றார்.

நூல்களும் புலவர்களும்

சேனாவரையர் பல தமிழ் நூல்களையும் புலவர் பெயர்களையும் குறிப்பிடுகின்றார்.

ஆதியில் தமிழ்நூல் அகத்தியர்க் குணர்த்திய

மாதொரு பாகனை வழுத்துதும் என்றும்,

சந்தனப் பொதியத் தடவரைச் செந்தமிழ்ப்

பரமா சாரியன் பதங்கள்

சிரமேற் கொள்ளுதும்

என்றும் அகத்தியரைப் போற்றுகின்றார். மேலும், முனிவன் அகத்தியன் (41), அகத்தியனால் தமிழ் உரைக்கப்பட்டது (73), யா பன்னிரு மாணாக்கர் உளர் அகத்தியனார்க்கு (279), அகத்தியம் முதலாயின எல்லா இலக்கணமும் கூறலின் (463) என வரும் இடங்கள் சேனாவரையர் அகத்தியரைப் பற்றிக் கொண்ட கொள்கையினை விளக்கும்.

திருக்குறளைப் பல இடங்களில் மேற்கோளாகக் காட்டி, சேனாவரையர் இனிது விளக்குகின்றார். திருவள்ளுவரைத் "தெய்வப் புலவன்" (41) என்று அழைக்கின்றார். "இகழ்ச்சியிற் கெட்டான் மகிழ்ச்சியின் மைந்துற்றான்" என்று திருக்குறளை நினைவில் கொண்டு உதாரணம் காட்டுகின்றார். (78). தொல் காப்பியச் சூத்திரங்களை மேற்கோள் காட்டும் இடம் பல உண்டு. பத்துப்பாட்டு, மலைபடுகடாத்திலிருந்து மிகுதியான மேற்கோள் தருகின்றார். இவர் காலத்தில் அணியிலக்கணம் செல்வாக்குப் பெற்றுப் பரவி இருந்தது என்பதற்குச் சான்றுகள் உண்டு.

கபிலரால் செய்யப்பட்ட நூலைக் "கபிலம்" என்றும். "பரணரது பாட்டியல்" என்றும், இவர் குறிப்பிடும் நூல்கள் (114) மறைந்து போயின.

நன்னூலாரும் சேனாவரையரும்

சேனாவரையர் நன்னூலார் கருத்துக்களைத் தம் உரைகளில் ஆங்காங்கே சுட்டிச் செல்லுகின்றார்.

"புதியன தோன்றினாற் போலப் பழையன கெடுவனவும் உள எனக் கொள்க" (452) என்று சேனாவரையர் கூறுவது,

பழையன கழிதலும் புதியன புகுதலும்

வழுவல கால வகையி னானே (-462)

என்ற நன்னூல் சூத்திரத்தை நினைவூட்டுகின்றது.

202 ஆம் சூத்திர உரையில், உண்கின்றனம், உண்கின்றாம் என்பனவற்றை உதாரணங் காட்டுகின்றார். மற்றோர் சூத்திர உரையில் (229), உண்பாக்கு, வேபாக்கு ஆகிய சொற்களைச் சுட்டு கின்றார். 215 ஆம் சூத்திர உரையில், "அளபெடை தன்னியல்பு மாத்திரையில் மிக்கு, நான்கும் ஐந்தும் மாத்திரை பெற்று நிற்கும்" என்று கூறுகின்றார். இவையாவும் நன்னூலார் கருத்துக்களாகும்.'

பேச்சு வழக்கும் உலகியலும்

சேனாவரையர், தம் காலத்து மக்கள் பேசிய முறையை உலகியலோடு பல இடங்களில் குறிப்பிடுகின்றார். அவை இவர் மக்களுடன் நெருங்கிப் பழகியவர் என்பதையும், உலகத்தோடு ஒட்ட ஒழுகியவர் என்பதையும் அறிவிக்கும்.

கிளவியாக்கத்துள், "ஆக்கம்-அமைத்துக்கோடல் நொய்யும் துணுங்கும் களைந்து அரிசி அமைத்தாரை அரிசியாக்கினார் என்ப ஆகலின்" என்று எழுதுகின்றார் (சொல்.1).

"மற்றையது" என்னும் சொல், இனம்குறிக்கும் என்பதற்கு, "ஆடை கொணர்ந்தவழி, அவ்வாடை வேண்டாதான் மற்றையது கொணா என்னும்" என்று பேச்சு வழக்கினைக் குறிப்பிடுகின்றார் (264)

இறந்த காலத்துக் குறிப்பொடு கிளத்தல்

விரைந்த பொருள என்மனார் புலவர்-241

என்ற சூத்திரத்திற்கு, "சோறு பாணித்தவழி உண்ணா திருந்தானைப் போகல் வேண்டும் குறியுடையான் ஒருவன், "இன்னும் உண்டிலையோ?" என்றவழி, "உண்டேன், போந்தேன்!" என்னும்" என்று மக்கள் பேச்சினை எடுத்துக்காட்டுகின்றார்.

வினாவாக வரும் வினைச்சொல், எதிர்மறைப் பொருளில் வரும் என்பதற்கு, "கதத்தானாக-களியானாக ஒருவன் தெருளாது வைதான் அவன் தெருண்டக்கால், வையப்பட்டான் "நீ என்னை வைதாய்!" என்றவழி, தான் வைத்தை உணராமையான் "வைதேனே?" என்னும்" என்று உதாரணம் காட்டுகின்றார். (244).

காலம் மயங்கி வருவதற்கு,"நாளை அவன் வாளோடு வெகுண்டு வந்தான் பின் நீ என் செய்குவை எனவரும்" என்பதைக் காட்டுகின்றார் (247)

குறிப்பால் உணர்த்தும் பொருளுக்கு "அவல் அவல் என் கின்றன நெல் மழை மழை என்கின்றன பைங்கூழ்" என்று எடுத்துக்காட்டுகள் தருகின்றார்.

அவர் காலத்தில் வாய்மொழி வாயிலாக வழங்கிவந்த நாட்டுக்கதை ஒன்றினைக் கூறுகின்றார். "தொன்னெறி மொழிவயின் ஆஅகுநவும்" (449) என்பதற்கு, "முது சொல்லாகிய செய்யுள் வேறுபாட்டின்கண் இயைபில்லன இயைந்தனவாய் வருவனவும்" என்று பொருள் எழுதிக் கீழே உள்ள கதையைச் ஈட்டுகின்றார்:

ஆற்றோரம் இருந்த ஓர் ஊரில், வாழ்ந்துவந்த எருமை ஒன்று, ஆற்று வெள்ளத்தில் மூழ்கி இறந்து நாற்றம் மிகுதியாக எழுந்தது.அதனால் அந்த எருமையை எடுத்து அடக்கம் செய்பவர் யார் என்ற வினா எழுந்தது. அவ்வூர்க் கணக்க' தீ தனக்குப் பகையாய் இருந்த குயவரைப் பழிவாங்க எண்ணி, "ஊர்க் குயவர், பசுமட்கலங்களைச் சுடும் பொருட்டு அமைத்த சுள்ளையில் எழுந்த புகையாகிய மேகத்தால் மழை மிகுதியாகப் 5 பெய்து, வெள்ளம் வந்தது. அவ் வெள்ளத்தில் மூழ்கி எருமை செத்தது. எனவே ஆற்றுள் செத்த எருமையை எடுத்து அடக்கம் செய்தல், ஊர்க்குயவர்களின் கடமையாகும். இவ்வாறு செய்ய வேண்டும் என்பதற்கு என்னிடம் உள்ள பழைய சுவடி சான்றாய் உள்ளது" என்றான், வேடிக்கையான

இக் கதையினைச் சேனாவரையர் மிகச் சுருக்கமாக, 'ஆற்றுள் செத்த எருமை ஈர்த்தல், ஊர்க்குயவர்க்குக் கடன் என்பது முதலாயின" என்று குறிப்பிடுகின்றார்.. **(விநோதரசமஞ்சரியில் இக் கதை சிறிது வேறுபாட்டுடன் கூறப்பட்டுள்ளது. பார்க்க பிற்சேர்க்கை-1.)**

இவையாவும் சேனாவரையர் இலக்கணப் புலமையுடன், மக்கள் பேசும் பேச்சினையும் நுணுகி அறிந்தவர் என்பதை விளக்கும்.

காலத்தின் அடிச்சுவடு

சேனாவரையர் காலத்து மக்களின் வாழ்க்கை, நாகரிகம், பண்பாடு ஆகியவை அவர் உரையில் இடம் பெற்றுள்ளன. கால வெள்ளம், கரையில் ஒதுக்கிய பொன்மணல்களாய் மின்னி அவை, காண்பவர் கண்ணையும் கருத்தையும் கவர்கின்றன.

சேனாவரையர் காலத்தில், பாம்புக் கடியினால் உடம்பில் ஏறிய நஞ்சினைப் போக்க ஒருவகையான கருங்கல்லும் பயறும் பயன்பட்டன. அவ்விரு பொருள்களும் ஒரு சேர அக்காலக் கடைகளில் விற்கப்பட்டன. இச் செய்தியினைச் சேனாவரையர், "பாம்புணிக் கருங்கல்லும் பயறும் விற்பான் ஒருவனுழைச் சென்று" என்று குறிப்பிடுகின்றார் (35).

இக் காலத்தைப் போலவே அக் காலத்திலும் வீட்டின் தரையைக் கல்லும் செங்கல்லும் கலந்து போட்டு இடித்து வலிமை யாக்கினர் என்பதை, "கல்லும் இட்டிகையும் பெய்து குற்றுச் செய்யப்பட்ட நிலத்தை வலிதாயிற்று எனின் அது செயற்கைப் பொருளேயாம்" என்று அவர் கூறுவதால் அறியலாம் (19).

நிலத்தை விற்கும்போதும் வாங்கும்போதும் பதிவேடுகளில் அக் காலத்தில் குறித்து வைக்கப்பட்டன என்பதை "நிலத்தது ஒற்றிக்கலம் .சாத்தனது விலைத்திட்டு" என்ற எடுத்துக்காட்டுனால் அறியலாம் (80)

நாட்டுப்புறவாழ்ந்த அக் காலச் சிறுவர்கள், பல விளையாட்டுகளை விளையாடும்போது, குழுக்களாகப் பிரிந்து அக்குழு ஒவ்வொன்றிற்கும் பெயர் வைத்து மகிழ்ந்தனர். இல் வழக்கத்தினைச் சேனாவரையர், "கூடிவரு வழக்கின் ஆடியற் பெயர்-பட்டி புத்திரர், சங்கைமாத்திரர் என்பன. இவை ஆடல் குறிந்து இளையார் பகுதிபடக் கூடிய வழியல்லது வழங்கப் டாமையிற் குழுவின் பெயரின் வேறாயின" என்று குறிப்பிடுகின்றார். (165).

நெஞ்சில் பதிந்த நிகழ்ச்சி

காட்டு வழியில், கள்வர்கள் பதுங்கி இருந்து அவ்வழியில் சென்றவரை அடித்துத் துன்புறுத்தி அவர்களிடமிருந்த பொருளையும், ஆடைகளையும் பறித்துக் கொண்ட நிகழ்ச்சி ஒன்று சேனாவரையர் உள்ளத்தில் ஆழப்பதிந்திருக்கின்றது. அந் நிகழ்ச்சியினை அவர் பல இடங்களில் (101, 245, 395) குறிப்பிடுகிறார். மேலும், அவர் காலத்தில் திகம்பரஜைனர் கடவுளர்) காட்டு வழியிற் செல்வது உண்டு என்றும், அவர் கனிடம் ஆடை இன்மையாலும், அவர்களிடம் கள்வருக்கு அச்சம் இருந்தமையாலும் அத்துறவிகளைக் கள்வர்கள் ஒன்றும் செய்யாமல் விட்டுவிடுவர் என்றும் தெரிகின்றது.

”வழி போயினார் எல்லாம் கூறை கோட்பட்டார் என்ற வழி, கூறை கோட்படுதல் கடவுளரை (திகம்பரர்களை) ஒழித்து ஏனையோர்க்கே ஆயினவாறு போல” (101).

”ஒரு காட்டின்கண் போவார் கூறை கோட்படுதல் ஒரு தலையாகக் கண்டு இ.ந்து இயற்கை என்று துணிந்தான், கூறை கோட்படா முன்னும் இக் காட்டுள் போகில் கூறை கோட்பட்டான், கூறை கோட்படும் என்னும்” (245).

”கூறைகோட்படுதல் கடவுளர்க்கு எய்தாதவாறு போல” (395)

சேனாவரையர் தம் நெஞ்சில் பதிந்த நிகழ்ச்சியை இவ்வாறு பலமுறை கூறுகின்றார்.

ஊர்கள்

சேனாவரையர் கருவூரைக் குறிப்பிடும் இடங்கள் பல உண்டு. கருவூர்க்குச் செல்லாயோ சாத்தா (13,68), கருவூரின் கிழக்கு 77, 110, 398) என்பவை அவர் காட்டும் உதாரணங்கள். சேனாவரையர் காலத்தில், உறையூரும் சிராப்பள்ளிக் குன்றும் சிறப்புடன் விளங்கின என்பதை ”உறையூர்க்கு அயல் நின்ற சிராப் பள்ளிக் குன்றை உறையூர்க்கண் குன்று என்றும்” என அவர் கூறுவதால் உணரலாம் (82). மங்கலம் என்ற சிற்றூரை “மங்கலம் என்பதோர் ஊருண்டு போலும்“ (278) என்று குறிப்பிடுகின்றார்.

அறநெறிகள்

சேனாவரையர், தம் காலத்தில் ஊர்தோறும் கோய் இருந்தது என்பதை, “ஊரானோர் தேவகுலம் (427) என்ற உதாரணத்தால் நினைவூட்டுகின்றார். கன்னியா குமரித் தீர்த்தமாடி வந்த துறவிகள் ”குமரியாடிப் போந்தேன் சோறு தம்மின்” என்று கூறி, இல்லந்தோறும் அன்னம் ஏற்று உண்டனர் (13). “அறம் செய்து துறக்கம் புக்கான்“ (57), “மழை பெய்தற்குக் கடவுளை வாழ்த்தும் (232), நாகர்க்கு நேர்ந்த பலி (99) என்ற உதாரணங்கள் நினைக்கத் தக்கவையாகும்.

மகளிர்

”அறிவு முதலாயினவற்றான் ஆண்மகன் சிறந்தமையின் ஆடூஉ அறிசொல் முற் கூறப்பட்டது” (2) என்று சேனாவரையர் கூறுவது, அக்காலச் சமுதாயத்தின் குரல் ஒலியோ என்று எண்ண இடம் தருகின்றது. அக்கால மகளிர் கடுக்கலந்த கைபிழி எண்ணெய் பூசித் தம் கூந்தலை நன்கு வளர்த்தனர் (21) தாம் வளர்த்த கிளிக்கு நங்கை என்றும், எருதுக்கு நம்பி என்றும் செல்லப் பெயரிட்டு அழைத்தனர் (449). அவர்கள் சமையற் கலையில் தேர்ந்து விளங்கினர் என்பதை, “சுவையாறும் உடைத்து இவ்வடிசில்“ (33), சாத்தி சாந்தரைக்குமாறு வல்லள் அதனா கொண்டான் உவக்கும் (40) என்ற எடுத்துக்காட்டுகள் நன்கு உணர்த்துகின்றன.

சாதிகள்

அந்தணரைப்பற்றிப் பல உதாரணங்களைச் சேனாவரையர் காட்டுகின்றார்:

பார்ப்பனச்சேரி (49), நான்மறை முதல்வர் (33), அந்தணர்க்கு ஆவைக் கொடுத்தான்

(75), அரசன் ஆ கொடுக்கும் பார்ப்பான் (234), ஓதும் பார்ப்பான் (234) ஓதாப் பார்ப்பான் (236), பார்ப்பான் கள்ளுண்ணான் (161)-இவை அக்காலச் சமுதாய நிலையை நமக்கு உணர்த்துகின்றன.

போர்ச்செய்திகள்

முற்காலப் போர்முறையை உணர்த்தும் உதாரணங்களைச் சேனாவரையர் காட்டுகின்றார். அவர், படைத்தலைவர் குடியில் பிறந்தவர் என்பதை அவை நமக்கு அறிவிக்கின்றன.

சாத்தன் வந்தான் அ.ஃது அரசர்க்குத் துப்பாயிற்று (40), அரசனோடு இளையர் (வீரர்) வந்தார் (91), யானை தேர் குதிரை காலான் எறிந்தான் (45,291), யானும் என் எ.ஃகமும் சாறும் (சால் தும் போதும்) (43, 209), கவசம் புக்கு மாக்கொணா என்ற வழி, குதிரை என்பது சார்பினால் விளங்கிற்று (53), இவர் யார் என்ற வழி, படைத்தலைவன் எனவும் செப்பிய வழி (68), வென்ற வேல் (234), சதி யாறும் உடைத்து இக்குதிரை (33) என்பவை அக் காலப்போர் முறையை உணர்த்துகின்றன.

யானை

யானையைப் பற்றிக் கணக்கற்ற உதாரணங்களைச் சேனா வரையத்தில் காணலாம்.

“பன்மை சுட்டிய“ (82) என்ற சூத்திரத்திற்குக் காட்டும் பல உதாரணங்கள் யானையைப் பற்றியவை. யானை பற்றி வரும் குறிப்புகளில் சில பின்வருமாறு:

”யானைநூல் வல்லான் ஒருவன் காட்டுள் போவுழி ஓர் யானை அடிச்சுவடு கண்டு, “இ.ஃது அரசு உவா ஆதற்கு ஏற்ற இலக்கணம் உடைத்து“ என்ற வழி” (37), “நம் அரசன் ஆயிரம் யானை உடையன்” (50), கோடு கூரிது களிறு (61), யானைக்கோடு கிடந்தது (67),யானையது கோட்டைக் குறைத்தான் (87), புலி கொல் யானைக்கோடு வந்தன (96).

கலைகள்

சேனாவரையர் காலத்தில், தமிழகத்தில் இசையும் கூத்தும் சிறப்புற்று விளங்கின. யாழ் (117,173,399), குழல் (117) முதலிய இசைக் கருவிகள் இருந்தன. “பாணியும் தாளமும் ஒரு பொருள் ஆயினும், இசை நூலார் தாளத்துடன் ஒரு சாரனவற்றிற்குப் பாணி என்னும் பெயர் கொடுத்தாற்போல்“-என்று சேனாவரையர் கூறும் உவமை அவர் காலத்து இசைக் கலையின் சிறப்பை உணர்த்துகின்றது.

ஆடரங்கு (415), ஆடிய கூத்தன் (234) என்ற சொற்றொடர்கள் அக்காலத்தில், நாடகக்கலை சிறப்புடன் இருந்ததைப் புலப் படுத்துகின்றன.

உழவும் தொழிலும்

பின்வரும் உதாரணங்கள் உழவுத் தொழில் பற்றியவை:

”எருப்பெய்து இளங்களை கட்டு, நீர்கால் யாத்தமையால் பைங்கூழ் நல்லவாயின (21) நம் எருது ஐந்தனுள் கெட்ட எருது

யாது? (32), எருது இரண்டும் மூரி (33), நம்பி நூறு எருமை யுடையவன் (50) ஏர்ப்பின் சென்றான் (82) கருப்பு வேலி (104).

சேனாவரையர் காலத்தில், "குழிப்பாடி" என்னும் இடத்தில் நெய்த ஆடை சிறந்து விளங்கிற்று (114, 115, அழுக்குப்படிந்த மை செய்து கூலி பெறும் வழக்கம் அக் ஆடையைத் தூய்மை காலத்திலும் இருந்தது (234). இதனை ஆடையொலிக்கும் கூலி என்று சேனாவரையர் குறிக்கின்றார்.

பொருள்களை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குக் கொண்டு செல்லக் கழுதை பயன்பட்டது. "சூலொடு கழுதை பாரம் சுமந்தது" (74) என்பது சேனாவரையர் காட்டும் உதாரணம்.

நாணயத்தைப் பரிசோதிப்பவர் (வண்ணக்கர்), குழுஉக் "குறியாகப் பொற்காசை (காணத்தை) நீலம் என்று வழங்கினர் (16).

"இரும்பு பொன்னாயிற்று" (142) என்ற உதாரணம் இரசவாதக் கலையை நமக்கு நினைவூட்டுகின்றது.

அக் காலத்தில் பொற்கொல்லர், பொன்னைக்கொண்டு அரைஞாண் கயிறு (கடிசூத்திரம்) செய்தனர் (76).

பொது

உணவு, அணிகலன், இசைக்கருவி, படை ஆகியவற்றில் அக் காலத் தமிழ்மக்கள் பெரிதும் தேர்ச்சி பெற்று விளங்கினர் என்பதைப் பின்வரும் உரைப்பகுதி விளக்கும்:

"அடிசில் என்பது, உண்பன தின்பன பருகுவன நக்குவன என்னும் நால்வகைக்கும்

அணி என்பது, கவிப்பன கட்டுவன செறிப்பன பூண்பன என்னும் தொடக்கத்தனவற்றிற்கும்

இயம் என்பது, கொட்டுவன ஊதுவன எழுப்புவன என்னும் தொடக்கத்தினவற்றிற்கும் பொதுவாகலின், அடிசில் அயின்றார் மிசைந்தார் எனவும், அணி அணிந்தார் மெய்ப் படுத்தினார் எனவும், இயம் இயம்பினார் படுத்தார் எனவும், வழங்கினார் தொட்டார் எனவும் பொது வினையால் சொல்லுக (46)."

5. பேராசிரியர்

பேராசிரியர் என்ற பெயருடன் தமிழிலக்கிய உலகில் பலர் உள்ளனர். தொல்காப்பியம் பொருளதிகாரத்திற்கு உரை வகுத்த பேராசிரியர், பல ஆண்டுகளாக நன்கு அறிமுகமானவர். பொருளம்ம் பின்னான்கு இயல்களுக்குப் பேராசிரியர் உரை னது. ஆதலின் தொல்காப்பிய உரையாசிரியர்களுள் ஒருவராக-கற்றவர் நெஞ்சத்தில் நிலையான இடத்தைப் பெற்றவராக இவர் விளங்குகின்றார்.

போராசிரியர் என்ற பெயருடன் உள்ள வேறு பல ஆசிரியர்களை இனிக் காண்போம்.

1. திருக்கோவையார் உரை எழுதிய பேராசிரியர்

திருக்கோவையாருக்கு உரை எழுதியவர் பேராசிரியர் என்னும் பெயரால் அழைக்கப்படுகின்றார். திருக்கோவையார் உரையில் பல இடங்களில் இலக்கண மேற்கோளாக, தொல்காப்பியச் சூத்திரங்களைக் காட்டுகின்றார். அவ்விடங் களில் தொல்காப்பியத்திற்கு உரைசெய்ததாய் எவ்விதக் குறிப்பும் காட்டவில்லை. மேலும், பொருளதிகார உரையாசிரியராகிய பேராசிரியர் செய்யுளியலில் (155) "இனி, கோவையாக்கி எழுத்து எண்ணி அளவியற்படுத்துச் செப்பினும் அவையேயாம்" என்று குறிப்பிட்டு, "காண்பான் அவாவினால்" என்று தொடங்கும் கோவைச் செய்யுள் ஒன்றைக் காட்டுகின்றார். எவ்விடத்திலும் திருக்கோவையார் செய்யுள் ஒன்றையும் மேற்கோள் காட்டவில்லை. ஆதலின் திருக்கோவையார் உரையாசிரியராகிய பேராசிரியர் வேறு ஒருவர் என்று கருத வேண்டியுள்ளது.

2. பொதுப்பாயிரம் செய்த பேராசிரியர்

தொல்காப்பியப் பொருளதிகாரத்திற்கு உரை எழுதிய பேராசிரியர்,

"வடவேங்கடம் தென்குமரி

என்னும் சிறப்புப் பாயிரம் செய்தார் பனம்பாரனார் எனவும்,

வலம்புரி முத்திற் குலம்புரி பிறப்பும்

என்னும் பொதுப்பாயிரம் செய்தான் ஆத்திரையன் பேராசிரியன் எனவும் பாயிரம் செய்தான் பெயர் கூறியவாறு" என்று மரபியலில் (98)கூறுகின்றார். தம் பெயரையே ஆத்திரையன் பேராசிரியன் என்று படர்க்கையாக வைத்துக் கூறார் ஆதலின், ஆத்திரையன் பேராசிரியன் என்பவர் வேறு ஒருவர் என்று உணரலாம். அவர் செய்த பொதுப்பாயிரம் தொல்காப்பிய எழுத்ததிகாரத்திற்கு உரை வகுத்த பழைய உரையாசிரியர்களாகிய இளம் பூரணரோ, நச்சினார்க்கினியரோ

வலம்புரி முத்திற் குலம்புரி பிறப்பும்

என்னும் பொதுப்பாயிரத்தைக் கூறித் தம் உரையைத் தொடங்க வில்லை. பிற்காலத்தில் தொல்காப்பியச் சூத்திர விருத்தி இயற்றிய சிவஞான முனிவர் அப் பொதுப்பாயிரம் முழுவதையும் தந்து தம் உரையைத் தொடங்குகின்றார். 33 அடிகளால் அமைந்த அப்பாயிரம் அகவற்பாவால் அமைந்து, ஆசிரியர், மாணவர் ஆகியவர்களின் தகுதிகளைக் குறிப்பிடுகின்றது. **(உரையுடன் சதாசிவப் பண்டாரத்தார் பதிப்பு)**

3.மயேச்சுரர் என்னும் பேராசிரியர்

யாப்பருங்கல விருத்தியுரையில், யாப்பு நூல் ஒன்று இயற்றிய மயேச்சுரர், பேராசிரியர் என்று குறிப்பிடப்படுகின்றார்.

"பிறை முடிக் சுறை மிடற்றனார் பெயர் மகிழ்ந்த பேராசிரியர், திரிபுரம் எரித்தவர் பெயர் மகிழ்ந்த பேராசிரியர், பெண்ணொரு பாகன் பெயர் மகிழ்ந்த பேராசிரியர், காமனைக் காய்ந்தவர் பெயர் மகிழ்ந்த பேராசிரியர் என்று பலவாறு "மயேச்சுரர்" என்ற பெயர் வழங்கப்பட்டுள்ளது.

தொல்காப்பியம் செய்யுளியல் உரையால் தெரியக் கிடக்கும் பேராசிரியர் கொள்கையில் சிலவற்றோடு, இவ்விருத்தியுரையிற் கண்ட பேராசிரியர் மயேச்சுரர் சூத்திரங்கள் மாறுபடுகின்றன. அது கொண்டு ஈண்டு சுட்டப்பட்டவர். தொல்காப்பியத்திற்கு உரை இயற்றிய பேராசிரியர் அல்லர் என்று துணியப்படும்.

4. குறுந்தொகை உரை எழுதிய பேராசிரியர்

குறுந்தொகைக்கு உரை எழுதிய பேராசிரியர் ஒருவர் உண்டு. நச்சினார்க்கினியரின் உரைச் சிறப்புப் பாயிரம்,

நல்லறி வுடைய தொல்பே ராசான்

கல்வியும் காட்சியும் காசினி அறிய

பொருள்தெரி குறுந்தொகை

என்று கூறுகின்றது. குறுந்தொகைக்குப் பேராசிரியர் எழுதிய உரை மறைந்து விட்டது.

பொருளதிகாரத்திற்கு உரை இயற்றிய பேராசிரியரே குறுந் தொகைக்கும் உரை இயற்றினார் என்பதற்குத் தக்க சான்றுகள் இல்லை

நச்சினார்க்கினியர் அகத்திணை இயலில் (46), "யானே ஈண்டையேனே" என்னும் (குறுந்தொகை 54) பாட்டில் "மீன் எறி தூண்டில்" என்றதனை ஏனையுவமம் என்றார்" என்று குறிப் பிடுகின்றார். இவ்வாறு அவர் குறிப்பிடுவது, பேராசிரியர் பொருளதிகாரத்திற்கு எழுதிய உரையையாகும். **(1. 1928. குறுந்தொகைச் சொற்பொழிவுகள் (1940) பக்.14, 15)**

5. பேராசிரியர் நேமிநாதர்

"தமிழ் நாவலர் சரிதை"யில் ஒட்டக்கூத்தர் உலாப் பாடிய போது, பேராசிரியர் நேமிநாதர் பட்டோலை பிடிக்கப் பாடியது என்ற தலைப்புடன் ஒரு செய்யுள் காணப்படுகிறது. நேமிநாதர் என்பவருக்கும் பேராசிரியர் என்ற பெயர் வழங்கியது என்பதை 4 இதனால் அறியலாம்.

6. தொல்காப்பிய உரையாசிரியர்-பேராசிரியர்

தொல்காப்பிய உரையாசிரியரான பேராசிரியர், கடல் போல் பரந்த புலமையுடையவர். இவரது புலமைத் திறனைத் தொல்காப்பியம் பொருளதிகார உரையில் கண்டு வியக்கலாம். இப் பேராசிரியர் தம் உரைகளில் நன்னூல், தண்டியலங்காரம், யாப்பருங்கலம் ஆகிய நூலாசிரியர்களின் கருத்துகளை எடுத்துக் கூறி மறுக்கின்றார் .எனவே, இவர் பன்னிரண்டாம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டவர் என்னலாம். மேலும், இவர் செய்யுளியல் உரையில் (செய். 149),

கொன்றை வேய்ந்த செல்வன் அடியிணை

என்றும் ஏத்தித் தொழுவோம் யாமே

என்னும் கொன்றைவேந்தன் செய்யுளை மேற்கோள் காட்டுகின்றார். மூதுரை என்னும் நீதிநூலிலிருந்து, "அட்டாலும் பால் சுவை" என்ற பாடலையும் மேற்கோள் காட்டுகின்றார்.'

இவை பேராசிரியரின் காலத்தை அறிவிக்கும் தக்க சான்றுகளாய் உள்ளன.

பேராசிரியர் அடிச்சுவட்டில்

பேராசிரியர் என்பது கல்வி ஒழுக்கம் ஆகியவற்றால் சிறந்து விளங்கியவரைக் குறிக்க எழுந்த பெயர். இவரது இயற்பெயர் இன்னதென்று அறிய முடியவில்லை. நச்சினார்க்கினியர் தம் உரைகளில் பேராசிரியர் என்ற பெயரையே வழங்குகின்றார். பேராசிரியரைப் பின்பற்றி நச்சினார்க்கினியர் உரை எழுதும் இடங்கள் பல உண்டு. இருவர் உரைகளையும் ஒப்பிட்டுக் காணச் செய்யுளியல் ஒன்றே துணை புரிகின்றது. அவ்வியலுக்கு அமைந் துள்ள இருபெரும் உரையாசிரியர்களின் உரையை ஒப்பிட்டு நோக்கினால், பேராசிரியர் பெருமை புலனாகும் பேராசிரியரின் அடிச்சுவட்டினையே நச்சினார்க்கினியர் பெரிதும் பின்பற்றி நடக் கின்றார் என்பது விளங்கும். உரை எழுதும் முறை, சொல்லும் வகை, சொற்பொருள் உரைக்கும் திறன், மேற்கோள் ஆட்சி,உரை நடைப் போக்கு ஆகிய எல்லாவற்றிலும் நச்சினார்க்கினியர் பேராசிரியரையே பின்பற்றுகின்றார்.

சமயம்

பேராசிரியர் வேதம் கூறும் வைதிக நெறியைப் பின்பற்று பவர். செய்யுளியலில் (109) "வாழ்த்தப்படும் பொருளாவன-கடவுளும் முனிவரும் பசுவும் பார்ப்பாரும் அரசரும் மழையும் நாடும் என்பன" என்று கூறுகின்றார். இங்கே வைதிகச் சமயச் சாயலைக் காணலாம்.

செய்யுளியலில் பாடல், கலிப்பா ஆகியவற்றின் வகை களுக்கு உதாரணமாக இவர், எட்டுத் தொகை நூல்களுள் ஒன்றாகிய பரிபாடலிலிருந்தும், கலித்தொகை கடவுள் வாழ்த் தையும் மேற்கோள் காட்டுகின்றார். அப்பாடல்கள் திருமால், முருகன், சிவன் ஆகிய தெய்வங்களைப் பரவும் பாடல்களாகும். இவையேயன்றி இவர் காட்டும் வேறு சில தனிப்பாடல்களும் (பரிபாடலின் வகைகள்) பற்றியவையேயாகும். மேற்கூறிய தெய்வங்களைப்

மரபியலில் (94),

வினையின் நீங்கி விளங்கிய அறிவின்

முனைவன் கண்டது முதல்நூல் ஆகும்

என்ற சூத்திரத்திற்கு எழுதிய விளக்கத்தில், "பிற்காலத்துப் பெருமான் அடிகள் களவியல் செய்தாங்குச் செய்யினும்" என்று கூறுகின்றார்.

இவையாவும் இவர் வைதிக நெறியைப் பின்பற்றுபவர் என்பதை உணர்த்துவனவாகும்.

மறந்துபோன உரைப்பகுதிகள்

பேராசிரியர், பொருளதிகாரம் முழுமைக்கும் உரை இயற்றினார் என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன. இன்று மெய்ப் பாட்டியல், உவம இயல், செய்யுள் இயல், மரபியல் ஆகிய நான்கிற்கு மட்டுமே அவரது உரை கிடைக்கின்றது.

"அவை வெட்சியுள்ளும் ஒழிந்த திணையுள்ளும் காட்டப் பட்டன" (செய்-189)

"காரணம் களவியலுள் கூறினாம்" (மெய் -18)

”அகத்திணை இயலுள் கூறினாம்” (மெய் -19)

”முன்னர் அகத்திணை இயலுள் கூறி வந்தோம்“ (செய்-1)

“முன்னர் அகத்திணை இயலுள் கூறினாம்“ (செய்-80)

என்று பேராசிரியரே கூறுவதால் பொருளதிகாரம் முழுமைக்கும் உரை செய்தார் என்று அறியலாம். மேலும் நச்சினார்க்கினியர் அகத்திணை இயலுள் (46), “பேராசிரியரும் இப்பாட்டில் மீன்எறி தூண்டில் என்றதனை ஏனை உவமம் என்றார்“ என்று குறிப்பிடு கின்றார்.

அதிகார அமைப்பும் பெயரும்

பேராசிரியர் தம் உரையில், தொல்காப்பிய அதிகாரங்களின் அமைப்பைப்பற்றியும், அவற்றின் பெயர்களைப் பற்றியும் குறிப் பிடுகின்றார்.

இவர் காலத்தில், பொருளதிகாரத்தில் எட்டாம் இயலாக உள்ள செய்யுளியலை ஒன்பதாம் இயலாகவும், மரபியலை எட்டாம் இயலாகவும் மாற்றி அமைத்தவர் இருந்தனர் என்பதைக் குறிப்பிடுகின்றார். “இக் கருத்து அறியாதார் செய்யுளியலினை ஒன்பதாம் ஒத்து என்ப“ என்று குறிப்பிடுகின்றார் (மரபியல்-93). அவ்வாறு மாற்றி அமைப்பது கூடாது என்பதற்குக் காரணமும் கூறுகின்றார்.

இன்றும் அவ்விரு இயல்களை முன்பின்னாக மாற்றி மரபியலை எட்டாவதாகவும், செய்யுள் இயலை ஒன்பதாவதாக வும்) அமைத்து, ஆராய்ச்சிநூல் வெளியிட்டவர் உண்டு. **(தொல்காப்பிய ஆராய்ச்சி - டாக்டர் சி. இலக்குவனார்.)** அதிகாரம் என்ற பெயரோடு, ஒத்து என்ற பெயரும் அதி காரங்களுக்கு வழங்கியது என்பதற்குப் பேராசிரியர் உரையில் பின்வரும் சான்றுகள் உள்ளன:

சொல் ஒத்தினுள், இவ்வாய்பாடு விரிந்து வருமாறு கூறாது.(மரபியல்-18,செய்-1)

“எழுத்து ஒத்தினுள் குறிலும் நெடிலும்“ (செய்-2)

இவர் காலத்தில் அதிகாரங்களுக்குப் படலம் என்ற பெயரும் வழங்கிற்று.

“தொல்காப்பியம் என்பது பிண்டம். அதனுள் எழுத்ததி காரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம், என்பன படலம் எனப்படும்“ (செம் - 172) என்று இவர் குறிப்பிடுகின்றார். பேராசிரியர் கருத்தை மேற்கொண்டு, இக் காலத்தும் அறிஞர்கள் சிலர், அதிகாரம் என்ற பெயரை நீக்கிவிட்டு, படலம் என்ற பெயரையே இட்டு வழங்கியுள்ளனர்.

உரைச் சிறப்பு

பேராசிரியர், இளம்பூரணருடன் மாறுபட்டு உரை எழுதும் இடங்கள் சில உண்டு. பேராசிரியர் உரையால்,மெய்ப் பாட்டியலும், உவம இயலும் பெரிதும் விளக்கமடைகின்றன. மெய்ப்பாட்டியலை மிகவும் விரிவாக ஆராய்ந்து பல நுட்பமான கருத்துகளை இவர் கூறுகின்றார். தலைவிக்கு மெய்ப்பாடுகளை வகைப்படுத்தி, புணரும்முன் தோன்றும் மெய்ப் பாடு, களவிற்குரிய மெய்ப்பாடு, கற்பிற்குரிய மெய்ப்பாடு என்று தெளிவாக விளக்குகின்றார். உவம இயலில் உள்ளுறை உவமம், இறைச்சி பற்றி இவர் கூறும் கருத்துகள் சிறப்பாகவும்

விளக்கமாகவும் அமைந்துள்ளன. இ இளம்பூரணர், ஏனை உவமத் திற்கு உரிய சூத்திரங்களாகக் கொண்டவற்றுள் சிலவற்றைப் பேராசிரியர் உள்ளுறை உவமத்திற்கு உரியவையாக்கி உரை எழுதி யுள்ளார். உரிய

மாறுபட்ட இடங்களை மிக நயமாக மறுக்கின்றார். இது இவருக்கு உள்ள சிறப்பியல்புகளுள் ஒன்று.

அவர் அறியார் அவ்வாறு சூத்திரம் செய்வது ஆசிரியர் கருத்து அன்று" (செய்-101) அவ்வாறு கூறுவார் செய்யுள் அறியாதார் (செய்-130) தலைகுலுக்கி வலியச் சொல்லினும் தன்சீர் இன்மையின் என மறுக்க (செய்-108) நாலசைச்சீர கொண்டாரும் உளர், ஐயசைச்சீர் கொண்டாரைக் கண்டிலம் (செய் -12) என்று இவர் மிக நயமாக மறுக்கின்றார்.

தமக்கு முன் இருந்த உரையாசிரியர்களின் பெயரையோ நூலாசிரியர்களின் பெயரையோ இவர் கூறுவதில்லை. கருத்துகளை மட்டுமே கூறி மறுக்கின்றார்.

இளம்பூரணர், மிகச்சுருக்கமாக எழுதிச் சென்றுள்ள இடங்களை எல்லாம் இவர் நன்கு விளக்கியுள்ளார். மெய்ப் பாட்டியலின் முதற்சூத்திர உரையில், பண்ணைத் தோன்றிய என்பதற்கு "விளையாட்டு ஆயத்தின்கண் தோன்றிய" என்று இளம்பூரணர் எழுதுகின்றார். பேராசிரியர், "முடியுடை வேந்தரும் குறுநில மன்னரும் முதலாயினார் நாடக மகளிர் ஆடலும் பாடலும் கண்டும் கேட்டும் காமம் நுகரும் இன்ப விளையாட்டினுள் தோன்றிய" என்று விளக்கமாக எழுதுகின்றார்.

பேராசிரியர் தொல்காப்பியரை, தொல்காப்பியன் என்றும், என்றான் ஆசிரியன் என்றும் ஆசிரியன் என்றும் ஒருமையிலேயே வழங்குகின்றார்.

பழமையும் புதுமையும்

பழைய மரபையும், பழைய நூற்கொள்கைகளையும் பேராசிரியர் பெரிதும் போற்றுகின்றார். புதிய நூல் வழக்கையும் கொள்கைகளையும் கடிந்து ஒதுக்கி விடுகின்றார்.

"அவை சான்றோர் செய்யுள் அல்ல என மறுக்க" (செய்-8)

அங்ஙனம் வந்தது பிற்காலத்துச் செய்யுள் என்க" (செய்-17)

"இவரொடு (தொல்காப்பியர்) மாறுபடுதல் மரபன்று என மறுக்க" (செய்-17.

இவ்வாறு இவர் புதிய மரபை ஒதுக்குகின்றார்.

"பிற்காலத்தில் செய்த நூல்பற்றி முற்காலத்துச் செய்யுட்கு எல்லாம் இலக்கணம் சேர்த்துதல் பயமின்று" (செய்-17).

"தமிழ்நூலுள்ளும் தமது மதத்துக்கு ஏற்பன முதல் நூல் உள இல் என்பது, முற்கூறிவந்த வகையான் அறியப்படும்" (மரபி-94)

"காலந்தோறும் "வேறுபட வந்த அழிவழக்கும் இழிசினர் வழக்கும் முதலாயினவற்றுக்கு எல்லாம் நூல் செய்யின், இலக்கணம் எல்லாம் எல்லைப்படாது இகந்தோடும்" (மர-94)

இத்தகைய கருத்துக்களைக்கூறும் பேராசிரியர், பழைய இலக்கண மரபைப் போற்றிப் பிற்காலத்தில் தோன்றிய இலக்கணக் கொள்கைகளை மறுக்கின்றார்.

நூலுக்கு உரிய பத்துவகைக் குற்றங்களுள் ஒன்றாக, தன்னான் ஒரு பொருள் கருதிக் கூறல்" என்பதை மரபியலில் உள்ள சூத்திரம் குறிப்பிடுகின்றது (மர-108). இச் சூத்திர உரையில் பேராசிரியர், "தன்னான் ஒரு பொருள் கருதிக் கூறல் என்பது, மலைபடு கடாத்தினை "ஆனந்தக் குற்றம்" எனப் பிற்காலத்தான் ஒருவன் ஒரு சூத்திரம் காட்டுதலும் (ஆளவந்த பிள்ளை ஆசிரியர், மலைபடு - 145 நச். உரை), பதமுடிப்பு என்பதோர் இலக்கணம் படைத்துக் கோடலும் (நன்னூல்-பதவியல்) போல்வன" என்று கூறுகின்றார் .

அணிநூலை மறுத்து இவர் கூறும் கருத்துகள் ஆராய்ச்சிக்குப் பெரிதும் துணை செய்கின்றன.

"இவ் ஒத்தினில் (உவம இயல்) கூறுகின்ற உவமங்களுள் சிலவற்றையும், சொல்லதிகாரத்தினுள்ளும் செய்யுள் இயலுள்ளும் சொல்லுகின்றன சில பொருள்களையும் வாங்கிக்கொண்டு, மற்றவை செய்யுட்கண்ணே அணியாம் என இக்காலத்து ஆசிரியர் நூல் செய்தாரும் உளர் " என்று கூறி, பின்வரும் காரணங்களைக் காட்டி அணி நூலை மறுக்கின்றார்:

1. அவை ஒருதலையாகச் செய்யுட்கு அணி என்று இலக்கணம் கூறப்படர் என்னை? வல்லார் செய்யின் அணி யாகியும், அல்லார் செயின் அணியன்றாகியும் வரும், தாம் காட்டிய இலக்கணத்தில் சிதையா வழியும்.

2. எல்லாம் தொகுத்து அணி எனக் கூறாது, வேறு சில வற்றை வரைந்து அணி எனக் கூறுதல் பயமில் கூற்றாம்.

3. வரையறுத்துக் கூறல் அமையாது.

4. அவற்றைப் பொருள்உறுப்பு என்பதுஅல்லது அ என்பவாயின், சாத்தனையும் சாத்தனால் அணியப்பட்ட முடிய தொடையும் முதலாயவற்றையும் வேறுகண்டாற்போ அவ்வணியும் செய்யுளின் வேறாதல் வேண்டும்.

5. செய்யுட்கு அணி செய்யும் பொருட்படை எல்லாம் கூறாது சிலவே கூறி ஒழியின் அது குன்றக் கூறலாம்."

இக் காரணங்களைக் காட்டி, அணி இலக்கணத்தை மறு கின்றார் பேராசிரியர்.

மேலும் சொல்லணிகளையும் மிறைக் கவிகளையும் பற்றி இவர் கொண்டுள்ள கருத்து, மிகவும் முற்போக்கு வாய்ந்தது.

மரயியலில் (90),

மரபுநிலை திரிதல் செய்யுட்கு இல்லை

மரபுவழிப் பட்ட சொல்லி னான

என்ற சூத்திரத்தின் உரையின்கீழ், பின்வருவனவற்றைக் குறிப்பிடுகின்றார்:

”நிறைமொழி மாந்தர் மறைமொழி போல்வன சில மிறைக் கவி பாடினார் உளர் என்பதே பற்றி, அல்லாதாரும் அவ்வாறு செய்தல் மரபு அன்று என்றற்கும் இது கூறினான் என்பது அவை சக்கரம் சுழிகுளம் கோமூத்திரிகை ஏகபாதம் எழுகூற்று இருக்கை மாலை மாற்று என்றாற் போல்வன. இவை மந்திர வகையான அன்றி, வாளாது மக்களைச் செய்யுள் செய்வார்க்கு அகள் ஐந்திணைக்கும் மரபு அன்று என்பது கருத்து. அல்லாதார் இவற்றை எல்லார்க்கும் செய்தற்கு உரிய என இழியக் கருதி அன்ன வகையான் வேறு சில பெய்து கொண்டு அவற்றிற்கும் இலக்கணம் சொல்லுப. அவை இத்துணை என்று வரை யறுக்கலாகார்என்னை? ‘ஒற்றை, இரட்டை, புத்தி, வித்தாரம் என்றாற் போல்வன பலவும் கூட்டிக்கொண்டு அவற்றானே செய்யுள் செய்யினும் கடியலாகாமையின், அவற்றிற்கு வரையறை வகையான் இலக்கணம் கூறலாகா என்பது.”

இவ்வாறு பழைய இலக்கண மரபே சிறந்தது என்று பல இடங்களில் கூறுகின்றார்.

புதிய இலக்கண மரபைப் போற்றாத இவர், வழிவழியாக வழங்கி வரும் பழங்கதைகளை மதித்துப் போற்றுகின்றார்.

தொல்காப்பியர், அகத்தியர் மாணவர் பன்னிருவரில் ஒருவர் என்று இவர் நம்புகின்றார்.

“எருமை யல் என்னும் புறநானூற்றைப் பாடல் (புறம் 5) தரிவெரூஉத் தலையார் தம் உடம்பு பெற்று வியந்து பாடியது என்று கூறுகின்றார் (மர-94).

ஆராய்ச்சித் திறன்

பேராசிரியர் தம் ஆராய்ச்சித் திறன் தோன்ற எழுதி நம்மை வியக்கச் செய்யும் இடங்கள் சிலவற்றைக் காண்போம்:

உவம இயலில், வினை பயன் மெய் உரு என்ற நான்கின் அடியாக உவமைகள் பிறக்கும் என்று தொல்காப்பியர் கூறுகின்றார். (உவம-1) வடிவமும் நிறமும் பண்பினுள் அடங்கும். அவ்வாறு அவர் கூறாது, வேறு வேறாகக் கூறியதற்குக் காரணம் கூறுகின்றார் பேராசிரியர்.

இரவுக் குறிக்கண் கூற்று நிகழ்த்தும் தலைவன் கண்ணால் காணும் நிறம்பற்றிய உவமை கூறமுடியாது. கையாலும் மெய்யாலும் தொட்டு அறிந்து வடிவம் பற்றிய உவமை மட்டுமே கூற முடியும். பகல்வேளையில் நிகழும் கூற்றுகளில் நிறம் பற்றிய உவமைகள் இடம் பெறுவது இயல்பே. நுட்பமாக இதனை உணர்ந்த தொல்காப்பியர், மெய், உரு என்ற இரண்டினையும். பண்பு என்ற ஒன்றினுள் அடக்கிவிடாமல் வேறுபடுத்திக் கூறினார் என்பது பேராசிரியர் கருத்தாகும். இக் கருத்து மிகவும் சிறப்பாக உள்ளது.

இதனைத் தொடர்ந்து, ”இந் நான்கு பகுதியே யன்றி அளவும் சுவையும் தண்மையும் வெம்மையும் தீமையும் சிறுமையும் பெருமையும் முதலாயின பற்றியும் உவமப் பகுதி கூறாரோ எனின் அவை எல்லாம் இந் நான்கினுள் அடங்கும்” என்று எழுதுகின்றார்.

உவம உருபுகளைப் பற்றி இவர் விரிவாக ஆராய்ந்துள்ளார். தொல்காப்பியர் கூறிய முப்பத்தாறு உருபுகளேயன்றி வேறுசில உவம உருபுகள் வரும் என்று குறிப்பிடுகின்றார்

”பிறவும் என்பதனான் எடுத்து ஓதினவே அன்றி, நேர நோக்க துணைப்ப மலைய ஆர ஆமர அனைய ஏர ஏர்ப்ப செத்து அற்று கெழுவ-என்றல்தொடக்கத்தன பலவும் ஐந்தாம் வேற்றுமைப் பொருள் பற்றி வருவனவும் என என் எச்சங்கள்பற்றி வருவனவும் பிறவும் எல்லாம் கொள்க” என்று தம் ஆராய்ச்சித் திறன் வெளிப்படும் வகையில் கூறுகின்றார். (உவம-ஐஐ)!

பல சொற்களின் பொருளை, மிக நுண்மையாக ஆராய்ந்து விளக்குகின்றார்.

மொழிபெயர்ப்பு - பிறபாடையாற் செய்யப்பட்ட பொருளைத் தமிழ் நூலாகச் செய்வது (மர-97).

வனப்பு-பெரும்பான்மையும் பல உறுப்புத் திரண்ட வழிப் பெறுவதோர் அழகு (செய்-235).

அரற்று-அழுகையன்றிப் பலவும் சொல்லித் தன்குறை கூறுதல் அது காடுகெழு செல்விக்குப் பேய் கூறும் அல்லல் போல வழக்கினுள்ளோர் கூறுவன (மெய்-12).

களவு -வாய்வெருவுதல், அதனானும் அவன் உள்ளத்து நிகழ் கின்றது ஒன்று உண்டு என்று அறியப்படும் (மெய்-12).

தத்தை - பெருங்கிளி கிளி-சிறுகிளி (மர-98).

கொலை- அறிவும் புகழும் முதலாயினவற்றைக் கொன்று உரைத்தல் (மெய்-10).

கொச்சகம்: ஒப்பினாகிய பெயர் ஓர் ஆடையுள் ஒரு வழி அடுக்கியது கொச்சகம் எனப்படும் அதுபோல ஒரு செய்யுளுள் பல குறள் அடுக்கப்படுவது கொச்சகம் எனப்பட்டது (செய்-12). இக் காலத்தார் அதனைப் பெண்டிர்க்கு உரிய உடை உறுப் பாக்கியும் கொய்சகம் என்று ஆக்கலின் என்பது (152).

தொல்காப்பியரை மதித்தல்

பேராசிரியர், தொல்காப்பியரிடத்துப் பெரிதும் மதிப் புடையவர். அவரைத் தெய்வப் புலவராய்-வினையின் நீங்கி விளங்கிய அறிவராய்ப் போற்றுகின்றார் தொல்காப்பியத்தில் குற்றம் குறை எதுவும் இருக்க முடியாது என்று மிக உறுதியாய் நம்புகின்றார். இதற்கு டாக்டர் இராம. பெரிய கருப்பன் (தமிழண்ணல்) பின் வரும் தகுந்த சான்றுகள் இரண்டினைக் காட்டுகின்றார்: **(சென்னைப் பல்கலைக் கழக உரையாசிரியர்கள் கருத்தரங்குச் சொற் பொழிவு.)**

1 செவிலி கூற்றமைந்த பாடல்கள் காணப்பட்டில எனினும் நம்பிக்கை காரணமாக இவர் (பேராசிரியர்) ”இலக்கணம் உண்மையின் அவையும் உள என்பது கருத்து” என்பார் (உவ-31.

2. தொல்காப்பியர் நண்டினை நான்கறிவுடைய உயிராக நூற்பா செய்துள்ளமையின், அதனைக்கண்ட பேராசிரியர், “இதற்கு (நண்டிற்கு) மூக்கு என்ற பொறி இலதே.” எனச் சற்றுத் திகைக்கின்றார். இங்கு “வண்டு“ என்றே பாடம் இருந்திருக்க வேண்டும் என்று யாழ்ப்பாணம் சி. கணேசையர் அவர்கள் சான்றுடன் குறிப்பிடுவது பெரிதும் பொருத்தமாகும். ஆனால்

தாம் நினைத்தவாறு பாடத்தை மாற்ற முனையாத அக்காலத்தில் பேராசிரியர்க்கு இத்தகு சான்றுகள் கிடைத்திருக்க இயலாத அக் காலத்தில், “ஆசிரியனை மறுப்பதா? ஏற்பதா?“ என்ற சிக்கல் வந்து நிற்கிறது. அதனை விடுவித்துப் பேராசிரியர் எழுதுகின்றார் “தண்டிற்கு மூக்கு

உண்டோ எனில், அ.ஃது ஆசிரியன் தொல்காப்பியர்) கூறலால் உண்டு என்பது பெற்றாம்". பழமொழி போல் எடுத்துக்கூறக் கூடிய சிறப்புடன் திகழும் இத்தொடர் பேராசிரியரின் ஆசான் பக்தியைப் புலப்படுத்துகின்றது.

இலக்கியத் திறனாய்வாளர்

பேராசிரியர் உரைவிளக்கம், சிறந்த இலக்கியத் திறனாய்வு நெறிகளைக் கொண்டுள்ளது. முற்காலத்து இலக்கியக் கொள்கை களையும் திறனாய்வு முறைகளையும் அறிந்து கொள்ள, இவரது உரை பயன்படுகின்றது. கவிதைக் கலையைப்பற்றி வரன் முறையாகவும் நுட்பமாகவும் சிறந்த மேற்கோள் தந்து ஆராய்ச்சித் திறனோடு இவர் விளக்குகின்றார். இலக்கியக் கலைமாட்சி, இலக்கியக்கொள்கை, இலக்கியத் திறனாய்வு வகை ஆகியவற்றைத் தனித்தனியே பெயர் கூறி இவர் விளக்கவில்லை என்றாலும், இவரது அவைபற்றிய உரையில் அடிப்படையான உண்மைகளைக் காண முடிகின்றது. இலக்கிய ஒப்பியல் ஆய்வும் இவரிடம் உண்டு. முற்காலத்துக் கொள்கைகளைப் பிற்காலத்துக் கொள்கைகளோடு (அணி, யாப்பு பற்றியவை) ஒப்பிட்டு ஒற்றுமை வேற்றுமை காணுதல்,வடமொழி நெறியை நினைவூட்டித் தமிழ் நெறியை விளக்குதல் போன்ற ஆய்வு நெறிகளை இவரிடம் காணலாம்.

6. தெய்வச்சிலையார்

தெய்வச்சிலையார் சொல்லதிகாரத்திற்கு உரை இயற்றியவர். இளம்பூரணர், சேனாவரையர் ஆகியவர்க்குப் பிற் பட்டவர். இவர், தம் உரையில் மற்ற உரையாசிரியர்களையோ, பிறர் கருத்தையோ குறிப்பிடவில்லை.

ˈவச்சிலை என்ற தொடர்,பல பொருளையுடையது. சிலை என்பதற்கு, கல் மலை வில் முதலிய பொருள்கள் உண்டு. போரில் இறந்த வீரர்களுக்கு நினைவாக நட்ட கல்லை, (நடுகல்லை) கொங்குநாட்டவர் தெய்வச்சிலை என்பர். பொதியமலை, தெய்வச்சிலை எனப்படும். திருமால் ஏந்திய வில்லை தெய்வச்சிலை என்பர்.

திருமாலுக்குரிய பல பெயர்களில் ஒன்று தெய்வச் சிலை யார் என்பது.

பவ்வத் திரைஉலவு புல்லாணி கைதொழுவேன்

தெய்வச் சிலையார்க்குஎன் சிந்தைநோய் செப்புமினே (பெரிய திருமொழி-9, 4,

என்று திருமங்கையாழ்வார், திருப்புல்லாணியில் வீற்றிருக்கும் திருமாலைக் குறிப்பிடுகின்றார். தெய்வச்சிலையார் என்பது இடைக்காலத்தில் மக்கள் பெயராக வழங்கியது. தேவர் பான் என்றும் கல்வெட்டுகளில் அப்பெயர் வருகின்றது சிலையான் தெய்வச் சிலையார் விறலி விடுதூது, தெய்வச் சிலைப் பெருமான் வாகனமாலை, தெய்வச் சிலையான் திருப்புகழ், தெய்வ சிலையான் வண்ண விருத்தம் ஆகியவை திருமாலைப் பற்றிய நூல்களாகும்.

வரலாறு

உரையாசிரியர் தெய்வச்சிலையார் வரலாற்றை, ஈரோடு புலவர் இராசு, கல்வெட்டுச் சான்றுகளைக் கொண்டு விரிவாக ஆராய்ந்து பல நல்ல செய்திகளை வெளியிட்டுள்ளார்

(கொங்கு -1975, ஏப்ரல் மே சூன் இதழ்கள்). அவர் ஆராய்ச்சி முடிவின்படி தெய்வச்சிலையார், முதல் மாறவர்மன் குல சேகர பாண்டியன் (1268-1310) காலத்தில் திருநெல்வேலிப் பகுதியில் வாழ்ந்தவர்.

இந்தப் பாண்டிய மன்னன் காலத்தில்தான் மார்க்கோ போலே தமிழகத்திற்கு வந்தார். இம் மன்னனுக்குப் பின், தமிழ் மண்ணில் மாலிக்காபூர் படையெடுப்பு நிகழ்ந்தது.

தெய்வச்சிலையார் உரையில், பாண்டி நாடு மதுரை பாண்டியர் பற்றிய பல மேற்கோள்கள் வருகின்றன.

திருமால் பெயர் தாங்கிய இவரை வைணவர் என்று கருத உரையில் சான்றுகள் உள்ளன:

”நிவந்தோங்கு உயர்கொடிச் சேவலாய்-சொல்

லுவோர் குறிப்பு மாயவனை நோக்கலில் கருடனாயிற்று

வலம்புரித் தடக்கை மாஅல் திருமகளோ அல்லள்”

போன்ற இடங்களைக் குறிப்பிடலாம்.

இருப்பினும் இவர், உரைக்கின்றார். சைவ சமயத்தைப் போற்றி

மன்னாப் பொருளும் அன்ன இயற்றே“ என்பதன் உரையில், ”வேதாகமத் துணிவு ஒருவர்க்கு உணர்த்துமிடத்து, உலகும் உயிரும், பாசமும் அனாதி, பதியும் பசுவும் பாசமும்

அனாதி என வரும். உலகும் உயிரும் பரமும் பசுவும் பொருந்தும் பொருள் ஆனவாறும், பாசமும் பதியும் இவற்றோடு பொருந்தாத பொருள் ஆனவாறும் காண்க“ என்று சைவசித்தாந்தக் கருத்தை எழுதுகின்றார்.

”மந்திரப் பொருள்வயின் ஆஅ குநனவும்“ என்பதற்கு உதாரணமாக, “நமசிவாய“ என்னும் ஐந்து எழுத்தைக் குறிப்பால் காட்டும் பாடலைக் காட்டுகின்றார் (32).

வடமொழி பயின்ற அந்தணர்: இவர் வடமொழி பயின்ற அந்தணராக இருக்கலாம். தலைமை பற்றிய வழக்கிற்குப் பார்ப்பார் வேதம்“ என்று உதாரணம் காட்டுகின்றார். சொல் என்பதற்கு வேதம் என்று பொருள் உரைக்கின்றார் (55). இந்நூல் செய்தான் வைதிக முனிவன் என்கிறார் (55).

பாணினி கொள்கையையும் (87, 410), வடமொழி இலக் கணக் கருத்தையும் (2,66,68, 81, 292) உரைகளில் குறிக்கின்றார்.

பஞ்ச திராவிடம், லோபம், பரிணாமம், வாக்கியம், கோமூத்திரம் போன்ற சொற்களை வழங்குகின்றார்.

எனவே இவரை வடமொழி பயின்ற அந்தணர் என்னலாம்.

உரையின் சிறப்பியல்புகள்

தெய்வச்சிலையார் ஒவ்வோர் இயலின் இறுதியிலும் உரையினது அளவை எழுத்துகளால் குறிப்பிடுகின்றார். கிளவியாக்கத்தின் இறுதியில், “இவ்வோத்தினுள் சூத்திரமும்

உள் பட்ட உரையினது அளவு கிரந்த வகையான் ஐந்நூற்று நாற்பது, என்கிறார். இவ்வாறே ஏனைய இயல்களுக்கும் அளவு கூறு கின்றார்.

“பெண்மை அடுத்த மகன் என் கிளவி”க்கு விளக்கம் எழுது கையில் ”விளையாடு பருவத்துப் பெண் மகளைப் பெண் மகன் என்றல் பண்டையோர் வழக்கு” (159), என்கின்றார். சேனாவரையர் இச் சொல் வழங்குமிடத்தைக் குறிப்பிடுகின்றார். தெய்வச் சிலையார் காலத்தில் அச் சொல்வழக்கு வீழ்ந்ததால் இவ்வாறு கூறுகின்றார். இதனால் சேனாவரையர்க்கும் தெய்வச் சிலையார்க்கும் உள்ள கால இடைவெளி புலப்படும்.

எச்சப் பெயர் என்பது, பெயரெச்சம் என மொழி மாறி நின்றது என்பது இவர் கருத்தாகும் (201).

சாலும் என்ற சொல்லை இவர் போதும் என்ற பொருளில் வழங்குகின்றார். (இச்சொல் தெலுங்கில் அப்பொருளில் வழங்கு கின்றது) ”யானும் என் எ.்.கமும் சாறும், நீயும் நின் படைக்கலமும் சாறீர்,அவனும் அவன்படைக்கலமும் சாலும்”என்று உதாரணங் கூறுகின்றார்(41).

புதிய விளக்கம்

“செப்பும் வினாவும் வழாஅல் ஓம்பல்“ (12) என்ற சூத்திரத திற்கு இவர் கூறும் விளக்கம் புதியது மற்ற உரையாசிரியாக கூறாதது.

”செப்பு நான்கு வகைப்படும் துணிந்து கூறல், கூறிட்டு மொழிதல், வினாவி விடுத்தல், வாய் வாளாதிருத்தல் என.”

துணிந்து கூறல்-தோன்றியது கெடுமோ என்ற வழி, கெடும் என்றல்.

கூறிட்டு மொழிதல்-செத்தவன் பிறப்பானோ என்ற வழி பற்றறத் துறந்தானோ பிறனோ என்றல்.

வினாவி விடுத்தல் - முட்டை மூத்ததோ பனை மூத்ததோ என்ற வழி எம் முட்டைக்கு எப்பனை என்றல்.

வாய் வாளாமை - ஆகாயப்பூ நன்றோ தீதோ என்றார்க்கு உரையாடாமை”

வேற்றுமை என்பதற்கு இவர் பின்வருமாறு விளக்கம் கூறிப் பொருள் உரைக்கின்றார்:

”வேற்றுமை: பொருள்களை வேறுபடுத்தினமையால் பெற்ற பெயர். என்னை வேறுபடுத்தியவாறு எனின், ஒரு பொருளை ஒருகால் வினைமுத லாக்கியும், ஒருகால் செயப்படுபொருள் ஆக்கியும் ஒருகால் கருவியாக்கியும் ஒருகால் ஏற்பது ஆக்கியும் ஒருகால் நீங்க நிற்பது ஆக்கியும், ஒருகால் உடையது ஆக்கியும் இவ்வாறு வேறுபடுத்தது என்க” (60).

சிறந்த எடுத்துக்காட்டுகள்

இவர் பல இனிய எடுத்துக் காட்டுகளை மிகப் பொருத் தமாக அமைந்துள்ளார். முத்தொள்ளாயிரம் வெண்பாக்களைப் போன்ற நயமான பல வெண்பாக்கள் இவர் உரையில் இடம் பெற்றுள்ளன.

வேற்றுமை மயங்கியலில் (20), சிலப்பதிகாரக் கதை நிகழ்ச்சிகளை மிகச் சுருக்கமாகக் கூறும் வெண்பா ஒன்றைக் காட்டுகின்றார்:

காதலியைக் கொண்டு கவுந்தி யொடுகூடி

மாதரிக்குக் காட்டி மனையின் அகன்றுபோய்க்

கோதில் இறைவனது கூடற்கண் கோவலன்சென்று

ஏதம் உறுதல் வினை.

புதிய உரை

திருக்குறளில் சில பாக்களுக்குப் புதிய ஒன்றார். உரை எழுது

அறனோக்கி (90), வானின்றுலகம் (103), அழுக்காறு உடையார்க்கு (165), அற்றார் அழிபசி (425) ஆகிய குறள்களுக்குச் சிறந்த உரை எழுதியுள்ளார்.

எச்சவியலில், 16ஆம் நூற்பா உரையில், "உலகம் உவப்ப" என்று தொடங்கும் திருமுருகாற்றுப்படையின் முதல் ஆறு அடிகளுக்குச் சிறந்த நயம் எழுதுகின்றார்.

சூத்திரங்களை இடம் மாற்றி அமைத்தல்

இவர் சொல்லதிகாரத்தில் உள்ள சூத்திர அமைப்புகளை மாற்றியுள்ளார். அவ்வாறு மாற்றியமைக்குத் தக்க காரணமும் கூறுகின்றார்.

எச்சவியலில் உள்ள மூன்று சூத்திரங்களைக் கொண்டு வந்து, வினையியலின் இறுதியில் வைத்து உரை எழுதுகின்றார். அவற்றை அவ்வாறு அமைக்குமுன், "வினைக்கு இன்றியமையாத முற்றினை ஒழிபியல் கூறுகின்றுழிக் கூறிய அதனாற் பெற்றது என்னை எனின், அ.்.து எமக்குப் புலனாயிற்று அன்று" என்று கூறுகின்றார். மேலும், "இவை மூன்று சூத்திரமும் ஈண்டைத் தொடர்புபட்டுக்கிடந்த இதனை, உரை எழுதுவோர், பிரிநிலை வினை என்னும் சூத்திரத்துள் சொல்லப்பட்ட பெயரெச்சம் வினையெச்சம் என்பவற்றை ஈண்டு ஓதப்பட்ட பெயரெச்ச வினையெச்சமாகக் கருதி, ஆண்டுச் சேர வைத்தார் என்பாரும் உளர்" என்று பிறர் கருத்தையும் தருகின்றார்.

எச்சவியலில், "இசைநிறை" என்னும் 15ஆம் சூத்திரத்தை 29ஆம் சூத்திரமாகவும், வேற்றுமை மயங்கியலில் "அது வென் வேற்றுமை" என்னும் 10-ம் சூத்திரத்தையும், "ஆறன் மருங்கின்" என்னும் 13-ஆம் சூத்திரத்தையும் மாற்றி 15, 16 ஆம் சூத்திரங் களாக வைத்துள்ளார்.

குத்திரங்களின் அமைப்பு

இவருக்கு முற்பட்ட உரையாசிரியர்கள் கொண்ட சூத்திர அமைப்பையும் இவர் மாற்றுகின்றார். ஒரு சூத்திரத்தை இரண்டாக்குகின்றார். சில சூத்திரங்களை ஒரு சேர எழுதி ஒரே சூத்திரமாக்கியுள்ளார். இத்தகைய மாறுதல்களை உரியியலில் மிகுதியாகக் காணலாம்.

வேறுபட்ட பாடங்கள் பலவற்றை இவர் மேற்கொண் டுள்ளார்.

வடமொழிப் புலமை

இவர் வடமொழிப் புலமை உடையவர். வடமொழி இழை கணக் கருத்தை நினைவூட்டிப் பல இடங்களில் எழுதுகின்றார் .

”வட மொழிக்கண் எழுவாயாகிய பெயர் ஈறுகெட்டு உருபேற்கும். அவ்வாறன்றித் தமிழ்மொழிக்கண் ஈறு திரியாது எழு வாயாகிய பெயரின் மேலே உருபு நிற்கும்” (67) என்று கூறுகின்றார்

பாணினியாரின் இலக்கணக் கொள்கையை இரண்டு இடத்தில் சுட்டுகின்றார்!“

ஒருவினை ஒடுச்சொல் உயர்பின் வழித்தே“ (88) என் சூத்திரத்திற்கு வேறுபட்ட உரையை எழுதி, “இப்பொருள் பாணினியார்க்கும் ஒக்கும்“ என்று உரைக்கின்றார்.

“வண்ணத்தின் வடிவின்“ என்ற சூத்திரத்தின் உரையில் (41) ”வேற்றுமைத் தொகை.... என்பன தம்முள் ஒருபுடை ஒப்புமை உடைய ஆதலின், பாணினியார் தற்புருட சமாசம் என்று குறியிட்டார்” என்று கூறுகின்றார்.

சில தமிழ்ச் சொற்களுக்கு அவற்றோடொத்த வடசொற் களைக் கூறுகின்றார்:

தமிழ்	**வடமொழி**
முதல்	காரகம்(69)
உரிச்சொல்	தாது
இசை	முக்கியம்
குறிப்பு	இலக்கணை
பண்பு	கௌணம் (293)
இவறல்	லோபம் (392)
அடை	விசேடணம் (408)

உரைநடை இயல்பு

தெய்வச்சிலையார் உரைநடை உயிரோட்ட முடையதாய், எளியதாய் உள்ளது. கீழே இவரது உரையின் ஒரு பகுதி தரப் படுகின்றது:

”காலம் என்பது முன்னும் பின்னும் நடுவும் ஆகி என்றும் உள்ளதோர் பொருள். உலகம் என்பது மேலும், கீழும் நடுவும் ஆகி, எல்லா உயிருக்கும் தோன்றுதற்கு இடமாகிய பொருள். உயிர் என்பது சீவன். உடம்பு என்பது மனம் புத்தி ஆங்காரமும் பூ தன்மாத்திரையுமாகி வினையினாற் கட்டப்பட்டு எல்லாப் பிறப்பிற்கும் உள்ளாகி நிற்பதோர் நுண்ணிய உடம்பு. இதலை மூலப்பகுதி எனினும் ஆம். பால்வரை தெய்வம் என்பது ஆணும் பெண்ணும் அலியும் ஆகிய நிலைமையை வரைந்து நிற்கும் பரம் பொருள். வினை என்பது ஊழ். பூதம் என்பது நிலம் நீர் தீ வளி ஆகாயம் ஆகிய ஐம்பெரும் பூதம். ஞாயிறு என்பது தீத்திரளாய் உலகிற்கு அருள் செய்வது, சொல் என்பது எழுத்தினான் இயன்று பொருள்

உணர்த்துவது. அச்சொல்லின் இயன்ற மந்திரம் விடம் முதலாயின தீர்த்தலின் தெய்வம் ஆயிற்று" (55).

மக்கள் வாழ்க்கையும் நாகரிகமும்

தெய்வச்சிலையார் காலத்தில் அறச்சாலை இயற்றுதல், குளம்அமைத்தல் போன்ற அறச்செயல்கள் நடைபெற்றன. "பாற்றினது கரைக்கண் நின்ற மரத்தை அறச்சாலை இயற்றுதற்கு ஊரினின்றும்வந்து மழுவினானே வெட்டினான் சாத்தன்" (62), "காவோடு அறக்குளம் தொட்டான்" (71) என்று இவர் உதாரணங்கள் காட்டுகின்றார்.

"நெல்லாதல், காணமாதல் ஒருவன் கொடுப்பக் கொண்ட வழி "இன்றைக்குச் சோறு பெற்றேன்" என்னும்: அவ்வழிச் சோற்றுக்குக் காரணமாகிய நெல்லும் காணமும் (காசு) சோறு என ஆகு பெயராயின" (110) என்று இவர் கூறுவது, அவர் காலத்தில் கூலியாக நெல்லும் காணமும் தரும் வழக்கம் இருந்ததை உணர்த்துகின்றது.

"இவ்வூரார் எல்லாம் கல்வியுடையார்" என்று இவர் உதாரணம் எழுதுகின்றர் (150). கற்றோர் நிரம்பிய ஊர்கள் அக்காலத்தில் பல இருந்ததை இது அறிவிக்கின்றது.

இவருடைய உரையில் நெசவுத் தொழிலைப் பற்றிய பல உதாரணங்கள் இடம்பெற்றுள்ளன. அவை கீழே தரப்படுகின்றன:

"நெய்தான் என்ற வழி, நெய்யப்பட்ட பொருளும், நெய்வதாகிய தொழிலும் நெய்தற்குக் கருவியும் நெய்தற்குக் காலமும் நெய்தற்கு இடமும் நெய்யும் கருத்தாவும் அதனைக் கொள்வானும் அதனாற் பயனும் உள்ளவழி."

"ஆடையை நெய்தான் கூடத்துக் கண் நெய்தான். ஆடையை நெய்து முடித்தான் (108).

"அடையை நெய்தான் தனக்கு", வேளா காணி **(வேளா காணி - வேளாண் காணி வேளாங் கண்ணி)**என்பது வேளா காணியிற்பிறந்தஆடையை அப்பெயரான் வழங்குதலின்"(110).

இவ்வாறு தெய்வச்சிலையார் நெசவுத் தொழிலைப் பற்றி உதாரணங்கள் காட்டி இருப்பதால் இவர் வாழ்ந்த ஊரில் நெசவு மிகுதியாக இருந்திருக்கும் என்று எண்ண இடமுண்டு.

நான்காம் வேற்றுமை உருபிற்கு, "ஈழத்திற்கு ஏற்றிய பண்டம்" என்ற உதாரணத்தைக் காட்டுகின்றார். இலங்கையுடன் தமிழகம் கொண்டிருந்த கடல்வணிக உறவை இது சுட்டுகிறது.

அரிய செய்தி

இவரது உரையில் அரிய வரலாற்றுச் செய்தி ஒன்று கிடைக் கின்றது. கல்வெட்டுகள் குறிக்கும் கொல்லம் ஆண்டு பற்றித தெரிந்து கொள்ள அது உதவுகின்றது.

இடைக் காலத்தில், சேர நாட்டின் ஒரு பகுதியாக இருந்த (பழைய) கொல்லம், கடல்கோளால் அழிந்தது. பிறகு கடலின் பெயர்ச்சியால் புதிய நிலப் பகுதி தோன்றியது. புதுநிலப் பகுதிக்கு மக்கள் கொல்லம் என்றே பெயரிட்டனர், புதிய கொல்லம் பகுதியில் மக்கள் குடியேறிய காலம் முதல், கொல்லம் ஆண்டு கணக்கிடப்பட்டு வருகின்றது.

இச் செய்தியைத் தெய்வச்சிலையார்,

கூபகமும் கொல்லமும் கடல்கொள்ளப்

படுதலின் குமரியாற்றிற்கு வடகரைக்கண்

அப்பெயரானே கொல்லம் எனக் குடியேற்றினார்

என்று கூறுகின்றார்.

செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலம்

என்பதற்கு இவர் தந்துள்ள விளக்கம், இன்றைய மொழியியல் அறிஞர்களைப் பெரிதும் மகிழ்விக்கின்றது. உரையாசிரியர்களில் சிலர் சோழ நாடே செந்தமிழ் நிலம் என்பர். வேறு சிலர் பாண்டி நாடே என்பர். ஆனால் தெய்வச்சிலையார் வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம் முழுவதுமே செந்தமிழ் வழங்கும் நிலம் என்று கூறி விளக்குகின்றார்.

7. கல்லாடர்

கல்லாடர் அல்லது கல்லாடனார் என்ற பெயருடன் பண்டைக் காலத்தில் புலவர் சிலர் இருந்தனர். அவர்களுள் ஒருவர் சொல்லதிகாரத்திற்கு உரைகண்ட கல்லாடர். கல்லாடம் என்பது ஊரின் பெயர். அவ்வூரில் சிவபெருமான் கல்லாடர் எனப்படுகின்றார். அப் பெயரை மக்களுக்கு இட்டு வழங்கினர்.**(கல் ஆல மரத்தின்கீழ் இருந்த தட்சிணாமூர்த்தி, கல்லாலன் அப்பெயரே, "கல்லாடன்" ஆயிற்று.)**

சொல்லதிகாரத்திற்கு உரை இயற்றியவர் அனைவர்க்கும் பிற்பட்டவர் கல்லாடர். இவர் உரை, முன்னோர் உரைகளிலிருந்து தமக்குப் பிடித்தவற்றை எல்லாம் ஒருங்கு சேர்த்து எழுதப்பட்ட உரையாக உள்ளது. இளம்பூரணர், சேனாவரையர் ஆகிய இருவரும் காட்டிய உதாரணங்களைக் கல்லாடர் அப்படியே மேற்கொள்கின்றார். "பெயர் நிலைக் கிளவி" என்னும் சூத்திர உரை நச்சினார்க்கினியர் உரையின் எதிரொலியாகவே உள்ளது. பரிமேலழகர் "ஒன்றாக நல்லது" (323) என்னும் குறள் உரையில் கூறிய "முற்கூறியதிற் பிற்கூறியது வலியுடைத்து ஆகலின்" என்னும் தொடரைக் கல்லாடர் 159 நூற்பாவுரையில் மேற்கொள்ளு" கின்றார்.

கல்லாடர் உரையைப் பிரயோக விவேக நூலாசிரியர் எடுத்துக் காட்டுகின்றார்: "சோற்றையட்டான் என, செய்வான் கருத்துள் வழிச் செயப்படுபொருள் ஆதலும், குழந்தை சோற்றைக் குழைத்தான் எனக் கருத்தில் வழியாதலும் என இரு வகைய" என்ற கல்லாடரின் விளக்கம் பிரயோக விவேகத்தில் (பிரயோக. -12 உரை) உள்ளது. "மக்கள் சுட்டு என்பதனைக் கல்லாடனாரும் பின்மொழியாகு பெயராய் நின்ற இருபெயரொட்டுப் பண்புத் தொகை என் என்பர்" என்று பிரயோக விவேக நூலார் குறிப்பிடுகின்றார் (பிரயோக-11 உரை).

எனவே, கல்லாடர் நச்சினார்க்கினியர்க்குப் பின்னும் பிரயோக விவேக நூலார்க்கு முன்னும் வாழ்ந்தவர் என்னலாம். இவரது காலம் 15, 16-ஆம் நூற்றாண்டாகலாம்.

கல்லாடர் உரை, இடையியல் (13 சூத்திரங்கள்) வரை உள்ளது.

இயல்களின் முறைவைப்பை விரிவாக இவர் ஆராய்ந்து கூறு கின்றார். வேற்றுமை

என்பதை, இலக்கண தெளிவாக விளக்குகின்றார். ஆராய்ச்சியுடன்

கல்லாடனார் தயக்கத்தோடும் ஐயத்தோடும் பல இடங் களில் உரைகண்டுள்ளார். 210ஆம் சூத்திரத்திற்கு உரைகூறி, "இரண்டனுள் நல்லது தெரிந்து உரைக்க" என்று மொழிகின்றார். சில சூத்திரங்களின் பொருளை எழுதி "என்பது போலும்" என்று கூறி முடிக்கின்றார். 222 ஆம் சூத்திரவுரையில், "பிறிது காரணம் உண்டாயினும் அறிந்திலம்" என்று எழுதுகின்றார்.

கல்லாடர் உரைக்கென்று சில தனிச் சிறப்பியல்புகள் இருப் பினும், செல்வாக்குடன் புலமை உலகில் இது பரவவில்லை.

8. பழைய வுரை

தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்குப் பழையவுரை ஒன்று உள்ளது. இதனை இயற்றியவர் ஊர் பேர் எதுவும் தெரிய வில்லை.

இவ்வுரை கிளவியாக்கம், வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல் ஆகிய மூன்றிற்கு மட்டுமே உள்ளது.

இவ்வுரை, முன்னைய உரைகளைத் தழுவியே செல்கின்றது. எல்லா உரைகளிலிருந்தும் நல்லன எடுத்து அமைத்துக் கொண் டுள்ளது.

இவ்வுரையாசிரியர் நறு நாற்றத்திற்குப் பூதி (விபூதி) நாற்றத்தையும், "நும்நாடு யாது?" என்ற வினாவுக்கு விடையாகப் பாண்டிய நாட்டையும் கூறியிருப்பதால் இவரைப் பாண்டிய நாட்டுச் சைவர் என்னலாம்.

மற்ற உரையாசிரியர்கள் ஓம்படைக் கிளவிக்குப் "புலி போற்றிவா" என்ற தொடரை மட்டுமே காட்டுகின்றனர். இவர்,

புலிபோற்றி வாவாழி ஐய ஒலிகூந்தல்

நின்னல தியாரும் இலள்

என்ற ஒரு குறள்வெண்பாவைக் காட்டுகின்றார்.

வெண்களமர், கருங்களமர் ஆகிய சொற்றொடர்களைச் சேனாவரையர் முதலிய உரையாசிரியர்கள் உதாரணங் காட்டி யிருப்பினும் அவற்றின் பொருளை விளக்கவில்லை. இவர் கிளவி யாக்கத்தினுள் (17) "வெள்ளாளரை வெண்களமர் என்றும், புலையரைக் கருங்களமர் என்றும், சாதி பற்றி வெள்ளாடு என்றும் சொல்லுதல் வழுவன்று" என்று பொருள் விளங்குமாறு கூறுகின்றார்.

9. நச்சினார்க்கினியர்

1.வரலாறும் சிறப்பியல்புகளும்

நச்சினார்க்கினியர், இலக்கணம், இலக்கியம் ஆகிய இருவகை நூல்களுக்கும் உரை எழுதிய சான்றோர். தலைசிறந்த தமிழ் நூல்கள் பலவற்றிற்கு உரை கண்டு, உரையாசிரியர்களுள் மிகச் சிறந்தவர் என்ற பெருமையுடன் மேலோங்கி நிற்பவர். பல நூறு ஆயிரம் பாடல்களை மனப்பாடமாகக் கொண்ட திறனும், பிறழாத நினைவாற்றலும், கலைச்சுவையுடன் அழகிய உரைநடை எழுதும் வன்மையும் கொண்டவர். உழைப்பின் திருவுருவாய்-நுண் அறிவின் இருப்பிடமாய்-இலக்கிய ஆராய்ச்சியின் பிறப்பிடமாய் விளங்குபவர். இவரது அருமை பெருமைகளை ஆராய ஆராய்ச்சி யாளர் ஈடுபட்டால், பெரு நூல் ஒன்று எழுத இடமுண்டு.

பழம்பெரும் இலக்கண நூலாகிய தொல்காப்பியம், சங்க இலக்கியத்துள் பத்துப்பாட்டு, கற்றறிந்தார் ஏத்தும் கலித்தொகை, குறுந்தொகையில் இருபது பாடல்கள், ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றான சீவகசிந்தாமணி ஆகிய சிறந்த நூல்களுக்கு நச்சினார்க்கினியர் உரை கண்டுள்ளார்.

பாரத்தொல் காப்பியமும் பத்துப்பாட் டுங்கலியும்
ஆரக் குறுந்தொகையுள் ஐந்நான்கும்-சாரத்
திருத்தகு மாமுனிசெய் சிந்தா மணியும்
விருத்திநச்சி னார்க்கினிய மே

என்ற வெண்பா, இவர் உரை கண்ட நூல்களைக் குறிப்பிடு கின்றது. இவற்றுள் குறுந்தொகை உரை கிடைக்கவில்லை.

இவர் நீண்ட நாள் வாழ்வாங்கு வாழ்ந்து, தம் வாழ் நாளின் பெரும்பகுதியைச் சிறந்த நூல்களைக் கற்பதிலும் உரை எழுது வதிலும் கழித்திருக்கவேண்டும். தாம் உரை எழுத எடுத்துக் கொண்ட நூல்களையும் அவற்றிற்குரிய உரைகளையும் பலமுறை பயின்று பயின்று தெளிவு பெற்றிருக்க வேண்டும், நூல்களுக்கு உரை இயற்றத் தொடங்குமுன் இவர், தமிழ் மொழியிலுள்ள பல நூல்களை ஆழ்ந்து பயின்று புலமை பெற்றுள்ளார். இலக்கண இலக்கியங்களையே அல்லாமல் ஏனைய கலைகளிலும் நிரம்பிய அறிவு பெற்றுள்ளார். மக்களின் வாழ்க்கை முறைகளை ஆராய்ந்து உலகஅறிவு பெற்றுள்ளார். வடமொழியிலுள்ள சிறந்த நூல் தோய்ந்து மகிழ்ந்துள்ளார். இவர், நூல் எதுவும் இயற்றவில்லை. ஆதலின் இவர் வாழ்நாள் முழுமையும் பண்டைத் தமிழ் நூல் களுக்கு நல்லுரை காண்பதிலேயே கழிந்தது என்னலாம்.“

நச்சினார்க்கினியர் வரலாற்றினை அறிய உரைச் சிறப்புப் பாயிரம் துணைபுரிகின்றது.

வண்டிமிர் சோலை மதுரா புரிதனில்
எண்டிசை விளங்க வந்த ஆசான்

பயின்ற கேள்வி பாரத் துவாசன்

நன்மறை துணிந்த நற்பொருள் ஆகிய

தூய ஞானம் நிறைந்த சிவச்சுடர்

தானே யாகிய தன்மை யாளன்

நவின்ற வாய்மை நச்சினார்க் கினியன்

என்ற பாயிரப்பகுதி இவர் வாழ்க்கை வரலாற்றைச் சுருக்கமாக உணர்த்துகின்றது. பாண்டிய நாட்டின் தலைநகராகிய மதுரையில் இவர் வாழ்ந்துவந்தவர் ஆசிரியத் தொழிலை மேற்கொண்டிருந் தவர் பாரத்துவாச கோத்திரத்தவர்: பார்ப்பன மரபினர் சிவஞானச் செல்வர் என்ற .. குறிப்புகளைப் பாயிரம் நமக்கு உதவுகின்றது. மேலும் இவரது கல்வி மாண்பினை,

பாற்கடல் போலப் பரந்த நன்னெறி

நூற்படு வான்பொருள் நுண்ணிதின் உணர்ந்த

போக்கறு கேள்விப் புலவோர் புலத்தின்

நாற்பொருள் பொதிந்த தாக்கமை யாப்பினைத்

தேக்கிய சிந்தையன்

என்று பாயிரம் பாராட்டுகின்றது.

இவரது உரைகளைத் திளைத்த இலக்கிய அன்பர் ஒருவர், இவரைப் பற்றிய சிறப்புப்பாயிரச் செய்யுளை இயற்றியுள்ளார். அதில் அவர், இவரது உரைத்திறன்களை எல்லாம் ஆராய்ந்து மதிப்பிடுகின்றார் கற்ற நெஞ்சத்தில் மண்டிக் கிடக்கும் இலக்கியச் சுவையை உணர்ச்சி பொங்கத் தெள்ளத்தெளிவாய் வெளிப்படுத் துகிறார்.

நச்சினார்க்கினியர் என்ற இனிய பெயர், சிவபெருமானுக்கு உரியது.

இச்சையால் மலர்கள் தாவி

இரவொடு பகலும் தம்மை

நச்சுவார்க் கினியர் போலும்

நாகவீச் சரவ னாரே (திருநா. திருநாகேச்சரம்,தே.)

என்று அப்பரும்,

நச்சினார்க் கினியாய் போற்றி

எனத்துதி நவிலும் காலை (காஞ்சிப்புராணம் - சந்ததான -11)

என்று சிவஞான முனிவரும் சிவபெருமானைப் போற்றிப் பாடி யுள்ளனர். இப்பெயரைத் தாங்கியுள்ள இவ்வுரையாசிரியர் சைவர் என்பதில் ஐயமில்லை.

இவரது உரையில், இவரைச் சைவ அன்பர் என்று அறிந்து கொள்ளத்தக்க சான்றுகள்

உண்டு. தொல்காப்பியம் எழுத்ததிகாரத்தில் (25) கண்டன், கந்தன், கம்பன், மன்றன் என்ற பெயர்களை வரிசையாக எடுத்துக்காட்டுகின்றார். மொழி மரபில் (2) "திருச்சிற்றம்பலம் -ஆறு எழுத்து ஒரு மொழி பெரும்பற்றப் புலியூர்-ஏழ் எழுத்து ஒரு மொழி" என்று குறிப்பிடுகின்றார்.

இவர், சைவ சமயக் கருத்துகளை நன்கு உணர்ந்துள்ளார் சைவ சமய நூல்களை நன்கு பயின்றுள்ளார். தம் உரைகளில் பலவிடங்களில் இலக்கண இலக்கியப் பொருள்களையும் தத்துவப் பொருள்களையும் விளக்க, சைவ சமய நூல்களாகிய திருவாசகம், திருக்கோவையார், திருவுலாப் புறம் முதலியவற்றிலிருந்து மேற்கோள் காட்டுகின்றார். சீவகசிந்தாமணி உரையில் சில பாடல்களுக்கு (362, 1141) விளக்கவுரை எழுதும்போதும், திருமுரு காற்றுப்படை உரையில் சில நயங்கள் எழுதும்போதும் இவரது சைவநூற்புலமை வெளிப்படுகின்றது.

இவர் பாரத்துவாச கோத்திரத்தார். தொல்காப்பியத்தின் ஒவ்வோர் இயல் முடிவிலும் பத்துப்பாட்டின் முடிவிலும் "மதுரை ஆசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியர்" என்று இவர் பெயர் குறிக்கப்பட்டுள்ளது. பாரத்துவாச கோத்திரத்தினர் வைணவர், ஸ்மார்த்தர், மாத்துவர் என மூன்று பிரிவினராய் உள்ளனர். அப்பிரிவினருள் நச்சினார்க்கினியர் ஸ்மார்த்த பிராமணர் ஆவர். ஸ்மார்த்தர் ஸ்மிருதியில் கண்ட நெறியை மேற்கொண்ட அத்வைதக் கொள்கையினர். நச்சினார்க்கினியர் ஸ்மார்த்தர் என்பதற்கும் அத்வைதக் கொள்கையினர் என்பதற்கும் இவரது உரையில் சான்று உண்டு.

"வேண்டிய கல்வி யாண்டுமூன்று இறவாது" (கற்-47) என்னும் சூத்திரத்திற்கு, "துறவறத்தினைக் கூறும் வேதாந்தம் முதலிய கல்வி வேண்டிய யாண்டைக் கடவாது. அக்கல்வி எல்லாம் மூன்று பதத்தைக் கடவாது என்றவாறு."

"மூன்று பதமாவன: அது என்றும், நீ என்றும், ஆனாய் என்றும் கூறும் பதங்கள் தாம், அவை பரமும் சீவனும் அவ்விரண்டும் ஒன்றாதலின், இம் மூன்று பதத்தின்கண்ணே தத்துவங் கடந்த ாம் விரியுமாறு உணர்ந்து பொருளை உணர்த்தும் ஆகமங்கள் எல்லாம். கொள்க" என்று உரையும் விளக்கமும் எழுதுகின்றார். இவர் இங்கே, தத்துவமஸி மகாவாக்கியம் சாந்தோக்ய உபநி'த்தில் கூறிய கருத்துகளை எடுத்துக் கூறுகின்றார் என்றும், இது அத்வைதிகளுக்குச் சிறப்பாக உரியது என்றும் கூறுவர்" (நச்சினார்க்கினியர் மு. அண்ணாமலை (1956) பக்கம். 6,7.)

இவர், சமயப் பொது நோக்கு உடையவர். திருமாலை நிலங்கடந்த நெடுமுடி அண்ணல் என்றும், வேங்கட மலையை நிலங்கடந்த நெடுமுடி அண்ணலை நோக்கி உலகம் தவம் செய்து வீடுபெற்ற மலை என்றும் (தொல்காப்பியம்-சிறப்புப்பாயிர உரையில்) குறிப்பிடுகின்றார். புறத்திணையியலில் அருளொடு புணர்ந்த அகற்சி" என்பதனை விளக்க, புத்த பெருமானின் துறவைக் குறிப்பிடும் பாடலை மேற்கோள் காட்டுகின்றார்.

சமண சமயக் காப்பியமாகிய சிந்தாமணிக்கு உரை எழுத அச்சமயக் கருத்துக்களை எல்லாம் நன்கு கற்றுத் தெளிந்துள்ளார். எழுத்ததிகார முதற் சூத்திர உரையில், "வீடு பேற்றிற்கு உரிய ஆண் மகனை உணர்த்தும் சிறப்பான் னகரம் பின்வைத்தார்" என்று

சைனசமயத்தவர் போலக் கூறுகின்றார்.

காலம்

நச்சினார்க்கினியர் சில உரையாசிரியர்களின் பெயரையும் உரையையும் குறிப்பிட்டுள்ளதால் அவர்களுக்குப் பின்னர் வாழ்ந்தவர் என்பது விளங்கும். இவர், இளம்பூரணர் சேனா வரையர் பேராசிரியர் ஆகிய மூவரையும் குறிப்பிடுகின்றார். வேறு சில உரையாசிரியர்களைப் பெயர் கூறாமல் அவர்களின் கருத்துக் களைக் குறிப்பிடுகின்றார். இவர் நன்னூலாரின் கருத்துக்களைச் சொல்லதிகார உரையில் (எச்ச-61, 19, 20) குறிப்பிடுகின்றார்.

தொடர்நிலைச் செய்யுள் என்பதனைக் காப்பியம் என்று வழங்கலாம் என்ற அடியார்க்குநல்லார் கருத்தை (சிலப் -பாயிரவுரை) சீவகசிந்தாமணி யுரையின் தொடக்கத்தில் மறுப்பதால், அவருக்கு இவர் பிற்பட்டவர் என்பது விளங்கும்.

திருமுருகாற்றுப்படையில் (176)). ஔவையார் பாடல் ஒன்றை மேற்கோள் காட்டுகின்றார்.

சீவக சிந்தாமணியில், முக்தி இலம்பகத்தில் "நாடக நயந்து காண்பார்" என்னும் செய்யுள் (391) உரையில் கோடகம் என்பதற்கு, "தாமம் மகுடம் பதுமம் கோடகம் கிம்புரி என்னும் ஐவகையிற் சிகரமாய்ச் செய்த முடி" என்று நச்சினார்க்கினியர் உரைப்பது, சூடாமணி நிகண்டு கூறும் கருத்து. (சூடாமணி-ஏழாம் பகுதி: செயற்கை வடிவப் பெயர்த் தொகுதி-22). சூடாமணி நிகண்டு (விசயநகரப் பேரரசர் கிரு'ண தேவராயர் காலமாகிய) பதினான்காம் நூற்றாண்டில் தோன்றியதாகும்.

எனவே, நச்சினார்க்கினியர் காலம் பதினான்காம் நூற்றாண்டின் இறுதியாகும்.

வான்புகழ்

சிறந்த பல நூல்களுக்கு அரிய உரை இயற்றிய இப் பெரியாரைப் புலவர் பெருமக்கள் பெரிதும் போற்றிப் புகழ் கின்றனர். "உச்சிமேற் புலவர் கொள் நச்சினார்க்கினியர்" என்று இலக்கணக் கொத்தின் ஆசிரியரும், "அமிழ்தினும் இனிய தமிழ்மடவரல் செய் அருந்தவத்தின் பெரும்பயனாக அவதரித்து" அருளியவர் என்று டாக்டர் உ.வே. சாமிநாத ஐயரும், "செந்தமிழ் மாமுகில் வள்ளல்" என்று மறைமலையடிகளும் இவரைப் புகழ் கின்றனர். இலக்கியச் சுவை சொட்டச் சொட்ட உரைநடை எழுதும் ஆற்றலை வியந்து, "அமுதவாய் உடையன்" என்று பாராட்டுவர். பல சிறந்த நூல்களை ஆழ்ந்து பயின்று உரை எழுதியதோடு, 82 அரும் பெரும் நூல்களைக் கற்றுத் தெளிந்து அவற்றிலிருந்து மேற்கோள் பல காட்டி இருப்பதால்,

நச்சினார்க்க கினியன் எச்சில்

நறுந்தமிழ் நுகர்வர் நல்லோர்

என்று பாடி, இவரைப் புகழ்வர். இவர் நுழையாத துறை இல்லை. தொட்டுச் சுவைக்காத நூல் இல்லை!

நச்சர்-நச்சினார்க்கினியரா?

திருக்குறளுக்கு முற்காலத்தில் உரை எழுதிய பதின்மரில் "நச்சர்" என்பவரும் ஒருவர். நச்சர் என்பவர், நச்சினார்க்கினியரே என்றும், அவர் செய்த திருக்குறள் உரை இன்று மறைந்துபோனது என்றும் சிலர் கூறி வருகின்றனர். நச்சர் என்ற பெயரே இவ்வாறு கருதத் தூண்டியது. இக் கருத்து உண்மையன்று என்பதற்குப் பின்வரும் காரணங்களைக் கூறலாம்:

1 பரிமேலழகர், திருக்குறள் உரையாசிரியர்களில் இறுதிப் நச்சர், மணக்குடவர் முதலிய ஒன்பது உரையாசிரியர்களை தோன்றியவர். பத்தாவது உரையாசிரியர் அவரே. அவருக்கு முன் இருந்தனர். நச்சினார்க்கினியர் பரிமேலழகர்க்குப் பிற்பட்டவ நச்சினார்க்கினியர் பரிமேலழகரை மறுக்கும் இடங்கள் உண்டு ஆதலின், பரிமேலழகருக்கு முன் தோன்றி, உரைஎழுதிய வேறு பரிமேலழகரை மறுக்கும் நச்சினார்க்கினியர் வேறு.

2. நச்சினார்க்கினியர் இயற்றிய உரைநூல்களை குறிப்பிடும் பழம்பாடலும் உரைச் சிறப்புப் பாயிரமும் நச்சினார்க்கினியர், திருக்குறளுக்கு உரை இயற்றியதாகத் குறிப்பிடவில்லை.

3. நச்சினார்க்கினியர், தாம் இயற்றிய உரைகளில், தமது உரைகளைப் பற்றிக் குறிப்பிடுவதுண்டு. எவ்விடத்தும் அவர், திருக்குறளுக்குத் தாம் குறிப்பிடவில்லை. உரை இயற்றி இருப்பதாய்க்

4. திருக்குறளை எடுத்தாளும் இடங்களிலும், குறட்பாவுக்கு வேறு உரையும், புதுவிளக்கமும் தரும் இடத்திலும் நச்சினார்க் கினியர் திருக்குறளுக்கு உரை எழுதிய குறிப்பு எதுவும் இல்லை.

"சங்கு உடைந்தனைய" (547) என்னும் சீவக சிந்தாமணிப் பாடலுக்கு உரை எழுதும்போது, "சங்கு சுட்டாலும் நிறம் கெடாதது போலக் கெட்டாலும் தன் தன்மை கெடாத குடியுமாம் நத்தம் போற்கேடும் (குறள் 235) என்ப" என்று திருக் குறளை எடுத்துக்காட்டுகின்றார். இக் குறளுக்கு இவர் ஏனைய உரையாசிரியர்கள் கொண்ட உரையினும் வேறு உரை கண்டுள்ளார்.

முதற் குறளுக்கு இவர் எழுதும் விளக்கம் சுவையானது:

"இறைவன் இயங்குதிணைக்கண்ணும் நிலைத்திணைக் கண்ணும் பிறவற்றின்கண்ணும் அவற்றின் தன்மையாய் நிற்குமாறு எல்லார்க்கும் ஒப்ப முடிந்தாற்போல, அகரமும் உயிர்க்கண்ணும் தனிமெய்க்கண்ணும் கலந்து அவற்றின் தன்மையாயே நிற்கு மென்பது சான்றோர்க் கெல்லாம் ஒப்ப முடிந்தது. "அகர முதல என்னும் குறளான், அகரமாகிய முதலையுடைய எழுத்துக்க ளெல்லாம் அதுபோல இறைவனாகிய முதலையுடைத்து உலகம் என வள்ளுவனார் உவமை கூறியவாற்றானும் பிற நூல்களானும் உணர்க." (மொழிமரபு -13)

இவற்றையெல்லாம் நோக்கும்போது, நச்சினார்க்கினியர் வேறு நச்சர் வேறு என்பது விளக்கும்.

தொல்காப்பிய உரை

இளம்பூரணருக்கு அடுத்தபடியாகத் தொல்காப்பியம் முழுவதற்கும் உரை செய்தவர்

நச்சினார்க்கினியரே. பொருளதி காரத்தில், மெய்ப்பாட்டியல் உவமவியல் மரபியல் ஆகிய மூன்று இயல்களைத்தவிர, மற்ற எல்லாப் பகுதிகளுக்கும் இவரது உரை உள்ளது. செய்யுளியலில் சில பகுதிக்கு உரை கிடைக்கவில்லை.

இவரை,

மறுவும் குறையும் இன்றி என்றும்

கலையின் நிறைந்த கதிர்மதி

என்றும்,

தொல்காப்பியம் என்னும் தொடுகடல் பரப்பை

நிலையுடை கலத்தின் நெடுங்கரை கண்டவர்

என்றும் சிறப்புப்பாயிரம் போற்றுகின்றது.

தொல்காப் பியத்தில் தொகுத்த பொருள்அனைத்தும்

எல்லார்க்கும் ஒப்ப இனிதுரைத்தான்-சொல்லார்

மதுரைநச்சி னார்க்கினியன் மாமறையோன் கல்விக்

கதிரின் சுடர்எறிப்பக் கண்டு

என்று வேறொரு வெண்பா இவரைப் பாராட்டுகின்றது.

இவருடைய உரையில், இனிய உவமையும், நயமான விளக்கமும், செவிக்கினிய சொல்லடுக்கும், இலக்கியச் சுவைமிக்க உதாரணப் பாடல்களும் இடம் பெற்றுக் கற்போரை மகிழ்விக்கின்றன. உரைச் சிறப்புப்பாயிரம்,

கல்லா மாந்தர் கற்பது வேண்டியும்

நல்லறி வுடையோர் நயப்பது வேண்டியும்

நச்சினார்க்கினியர் கொல்காப்பியத்திற்கு உரை இயற்றியதாகக் கூறுகின்றது. ஆம் இவருடைய உரையை, கல்லா மாந்தர் கற்றுப் புலமைபெறலாம் நல்லறிவுடையோர் நயந்து போற்றலாம்.

இலக்கண உரையாசிரியர்கள் - II

1. யாப்பருங்கல விருத்தியுரை

தமிழ்மொழிக்குரிய யாப்பு இலக்கணம் மிகவும் தொன்மையானது வடமொழிச் சார்பும் ஊடுருவலும் இல்லாதது தனித்தன்மையுடையது. அணி இலக்கணத்தில் வட மொழியின் செல்வாக்குப் பரவியது போல, யாப்பிலக்கணத்தில் வடமொழி நுழைய முடியவில்லை.”

டாக்டர் மு.வ. தமிழ்யாப்பின் பெருமையைப் பின்வருமாறு புகழ்ந்துள்ளார் (மொழி வரலாறு (1954) பக் 385, 386):

”வடமொழித் தொடர்பற்ற யாப்பிலக்கணம், பழந்தமிழில் அமைந்திருத்தல் ஆராய்ந்து

போற்றுதற்கு உரியதாகும். வெண்பா ஆசிரியப்பா கலிப்பா வஞ்சிப்பா எனப் பாவும், அவற்றிற்கு ஏற்பச் செப்பல் அகவல் துள்ளல் தூங்கல் என ஓசையும் தனித்தனியே அமைந்து, தளை தொடை முதலியனவும் தனியே அமைந்துள்ள முறை வடமொழியோடு எவ்வகையிலும் தொடர்பற்றதாக உள்ளது. கலப்பற்ற தூய யாப்பிலக்கணம் ஒரு மொழிக்கு அமைய வேண்டும் எனின், அந்த மொழி அதற்குமுன் எவ்வளவு பண்பட்டுத் தனியே வளர்ந்திருக்க வேண்டும் என்பது, எண்ணிப் போற்றுதற்கு உரியதாகும்."

மொழி ஞாயிறு தேவநேயப் பாவணர், தமிழ் இலக்கிய வகைகளை உலகமொழிகளுடன் ஒப்பிட்டு வியந்து பின்வருமாறு போற்றுகின்றார் (பண்டைத் தமிழ் நாகரிகமும் பண்பாடும் (1966) 46-37).

1. "காக்கைக் காகா கூகை என்னும் ஓர் எழுத்துப் பாட்டும்

2. சென்னி முகமாறுளதால் என்னும் காளமேகம் மும் மடியிரட்டுறலும்

3. இராமலிங்க அடிகளின் மாணவர் தொழுவூர் வேலாயுத முதலியார் பாடிய பதின்பங்கி (தசபங்கி), பதிற்றுப் பதின்பங்கி (சதபங்கி) என்னும் சொல்லணிகளும்

4. அருணகிரியார் பாடிய திருப்புகழ் வண்ணங்களும்

5. பட்டினத்தார் பாடிய உடற்கூற்று வண்ணமும்

6. அகப்பொருட் செய்யுட்களில் வரும் உள்ளுறை உவமையும்

-போன்ற அருஞ்சுவை இன்பக்கூறுகள், வேறு எம்மொழி இலக்கியத்திலும் காணக் கிடையா".

இவையேயன்றி, நாணிக் கண் புதைத்தல் என்ற அகத்துறை ஒன்றுக்கு ஒரு கோவை நூல் தமிழில் தோன்றி இருப்பதும், எண்ணி மகிழத்தக்கதாகும்.

இத்தகைய தனிச் சிறப்புகள் பல உடைய தமிழில் உள்ள யாப்பிலக்கணத்தைக் கற்பவர் விருப்பமுடன் பயிலும் நூல்கள் இரண்டாகும். ஒன்று யாப்பருங்கலம் மற்றொன்று யாப்பருங்கலக்காரிகை. இவ்விரு நூல்களையும் இயற்றியவர் அமுதசாகரர் என்னும் சமணப் புலவர். அருங்கலம் என்பது சமண ஆசிரியர் பரம்பரையில் ஒரு பிரிவு இது சங்க காலத்திற்குப் பின் தோன்றிய சமண சங்கத்தின் ஒரு பகுதி. இப் பிரிவினர் தீபங்குடியில் வாழ்ந்தனர் அமுதசாகரர் முதலியோர் இப்பிரிவினர் ஆதலின் தம் நூலுக்கு "அருங்கலம்" என்ற பெயரை இட்டனர் என்று கோபிநாதராவ் கூறுகின்றார். (ஆராய்ச்சிக் கட்டுரைகள் (1947). டாக்டர் மா. இராசமாணிக்கனார் பக்கம்.95.)

யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை என்ற இரு நூல்களுள் முன்னர்த் தோன்றியது யாப்பருங்கலம். அதனை அடுத்துத் தோன்றியது யாப்பருங்கலக் காரிகை. யாப்பருங்கலக் காரிகையுரை, "யாப்பருங்கலம் என்னும் யாப்பிற்கு அங்கமாய் -அலங்காரம் உடைத்தாகச் செய்யப்பட்டமையால் யாப்பருங்கலக் காரிகை என்னும் பெர்த்து" என்று கூறுகின்றது.

உரையாசிரியர்

யாப்பருங்கலத்திற்கு விருத்தியுரையும் யாப்பருங்கலக் காரிகைக்குக் காண்டிகையுரையும் பழங்காலத்தில் தோன்றின. நூல் தோன்றிய மிக அண்மைக் காலத்திலேயே உரைகளும் தோன்றியுள்ளன. இவ்விரு உரைகளுள் முதலில் தோன்றியது யாப்பருங்கல விருத்தியுரையாகும். யாப்பருங்கலக் காரிகையில் பத்தாம் செய்யுளின் உரையில், "வெண்பாவினோடும்

ஆசிரியத்தினோடும் வந்த மயங்கிசைக் கொச்சகக்கலிப்பா, பாப்பருங்கல விருத்தியுரையுள், "காமர் கடும் புனல்" என்னும் பழம்பாட்டில் கண்டுகொள்க்" என்று யாப்பருங்கல விருத்தியுரை சட்டப்படுகின்றது.

இரண்டு உரைகளையும் இயற்றியவர்களில் காரிகையின் உரையாசிரியர் குணசாகரர். யாப்பருங்கல விருத்தியுரைக்கு உரை இயற்றியவர் யார் என்பது பற்றிப் பல கருத்து வேறுபாடுகள் உள்ளன.

டாக்டர் மொ.அ. துரையங்கனார். "(யாப்பருங்கல) விரித்தியுரையை எழுதியவர் பெருமாள் பெயர் மகிழ்ந்த பேராசிரியர் என அவர் சிறப்பிக்கும் மயேச்சுரருடைய மாணவரோ, அவர் பரம்பரையினரோ ஆதல் வேண்டும் என்பர் தென்றலிலே தேன்மொழி (1958 பக்கம் 59, 60).

வேறு சில அறிஞர்கள் விருத்தியுரையாசிரியரும் காரிகையுரையாசிரியரும் ஒருவரே என்பர். இவ்வாறு அவர்கள் கூறுவதற்குக் காரணங்கள் பல உள்ளன. அவற்றைக் காண்போம்.

1. விருத்தியுரையில், காரிகை மேற்கோள் காட்டப் படுகின்றது. காரிகையை யாப்பருங்கலப் புறனடை என்று சுட்டுகிறது, விருத்தியுரை (விருத்தியுரை சூத் 48,59,68,85,86,89, 92, 93).

2. காரிகையுரை, விருத்தியுரையைச் சில இடங்களில் குறிக்கின்றது. காரிகையின் 38-ஆம் செய்யுள் உரையில் அம்போதரங்கம் குறையாதே வந்தவாறு யாப்பருங்கல விருத்தியுரையுள் கண்டு கொள்க" என்றும், 42-ஆம் செய்யுள் உரையில், "இவற்றிற்கு இலக்கியம் யாப்பருங்கல விருத்தியுள் கண்டு கொள்க" என்றும் கூறியுள்ள இடங்கள் இங்கே நினைக்கத்தக்கவை.

3. இரு நூல்களின் உரையில், பலவகை ஒற்றுமைகளைக் காணலாம். மேற்கோள் காட்டும் பல செய்யுள்கள், இரு உரைகளிலும் இடம் பெறுகின்றன. யாப்பிலக்கணக் கொள்கைகள் இரு உரைகளிலும் மாறுபாடின்றி உள்ளன. உரைநடையும் ஒத்துள்ளன. "ஆரியம் என்னும் பாரிரும் பௌவத்து" என்ற சொற்றொடர் காரிகையுரையின் தொடக்கத்திலும் விருத்தியுரை யாப்பருங்கல விருத்தியுரை - பக்கம் 509 பவானந்தம் பிள்ளை பதிப்பு)யிலும் மாறுதலின்றி இடம் பெற்றுள்ளது.

4. யாப்பருங்கலக் காரிகை, யாப்பருங்கலம் இரண்டையும் இன்பாசிரியர் அமுதசாகர்ர் எல்ல்லாங்வி நூல்களுக்கும் குணசாகரர் என்னலாம். இருநூல்களுக்கும்நூலாசிரியர் ஒருவர், உரையாசிரியர் ஒருவர் என்பது பொருத்தமாக உள்ளது.

வரலாறு

யாப்பருங்கல விருத்தியுரை யாப்பருங்கலக் காரிகையுரை இரண்டினையும் இயற்றியவர் குணசாகரர் எனில் அவரைப்பற்றி அறிந்த வரலாற்றுக் குறிப்புகளைக் கூறுவோம்.

உரையாசிரியரான குணசாகரர், நூலாசிரியரான அமுதசாகரரின் ஆசிரியர் என்பர்.

நூலாசிரியரும் உரையாசிரியரும் சமண சமயத்தைச் சேர்ந்தவர்கள். உரையாசிரியராகிய குணசாகரர் அருகனைப் பற்றிய துதிப்பாடல்களை விருத்தியுரையில் மேற்கோள் காட்டுகின்றார். சில இடங்களில் பிற சமயப் பாடல்களையும் காட்டுகின்றார். பொய்கையாழ்வார் பாடல் (57), இவை நலவாயினும் (திருமந் - 204) என்ற திருமூலர் பாடல் (93, கொன்றை வேந்தன் செய்யுள் (63), நக்கீரனார் பாடிய திருஎழுகூற்றிருக்கை (ஐ1-ஆம் திருமுறை) ஆகியவற்றை மேற்கோள் காட்டுகின்றார்.

காரிகையுரையில், எல்லாக் குற்றமும் தீர்ந்த செய்யுளுக்கு உதாரணமாக, ”தாமரை புரையும்” என்ற குறுந்தொகைக் கடவுள் வாழ்த்தை - பெருந்தேவனார் பாட்டை முருகக் கடவுளைப் போற்றும் செய்யுளை உதாரணம் காட்டுகின்றார்.

விருத்தியுரையுள் மயேச்சுரர் என்ற பெயருக்குச் சிவ பெருமானுக்கு உரிய பலவகையான சிறப்புப் பெயர்களைச் சேர்த்துச் சுட்டுகின்றார். (சில ஏட்டுப் பிரதிகளில் அடைமொழிப் பெயர்கள் இல்லை. என பிற்காலத்தில் யாரோ சேர்த்திருத்தல் கூடும் என்பர்.)

இவற்றால் குணசாகரர் சமயப்பொறை மிக்கவர்,எம் மதமும் சம்மதம் என்ற கொள்கையுடையவர் என்பது விளங்கும்.

குணசாகரர் காலத்தை இனிக் காண்போம். நூலும் உரையும் ஒரு காலத்தில் தோன்றியவை என்பதை முன்னரே குறிப்பிட்டுள்ளோம். யாப்பருங்கலக் காரிகையை இளம்பூரணர் செய்யுளியலில் பல இடங்களில் மேற்கோள் காட்டுகின்றார். வீரராசேந்திரன் காலத்தில் (1064-1070) எழுந்த வீரசோழிய உரை யாப்பருங்கல விருத்தியை மேற்கோள் காட்டுகின்றது. ஆதலின் யாப்பருங்கலத்தின் காலம் பதினோராம் நூற்றாண்டிற்கு முன் என்னலாம்.

யாப்பருங்கல விருத்தியுரை, எட்டாரைச் சக்கரச் செய்யுளில் குறிக்கப்படும் பல்லவ மன்னன் எட்டாம் நூற்றாண்டினன். அப் பல்லவ மன்னன்,

ஆராழி பாய்ந்த இடந்தோறழகிதாப்

பாராளும் பல்லவ மன்னன்

என்று புகழப்படுகின்றான். மேலும், மற்றொரு மேற்கோள் வெண்பாவில், “செந்தமிழ் ஆளி கலி மல்லன்“ என்று புகழப் படுகின்றான். இங்கே குறிக்கப்படும் “கலிமல்லன்“ நரசிம்ம பல்லவனான மாமல்லன் ஆகலாம். எனவே குணசாகரர் கி.பி. எட்டாம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டவர் என்பது உறுதி. இவற்றை நோக்கும்போது குணசாகரர் காலம் ஒன்பதாம் நூற்றாண்டு என்னலாம்.

விருத்தியுரை

குணசாகரர் விருத்தியுரை, பத்தாம் நூற்றாண்டு வரை தோன்றிய இலக்கிய இலக்கண நூல்களின் இயல்பும் சிறப்பும் வரலாறும் அறிவதற்குப் பெரிதும் துணைபுரிகின்றது. பல்லவர் கால இலக்கியத்தின் காலக் கண்ணாடியாக இவ்வுரை விளங்குகின்றது. இடைக்காலத்தில் தோன்றிய பலவகையான யாப்பிலக்கணக் கொள்கைகளைத் தெள்ளத் தெளிய ஆராய்ந்து கூறி விளக்குகின்றது. அக் கொள்கைகளினிடையே எழும் சிக்கல்களைத் தீர்க்கின்றது. முரண்பாடுகளைத் தீர்த்துச் சிறந்த யாப்பிலக்கணக் கொள்கைகளை உருவாக்குகின்றது. குணசாகரர் சுவைத்த பாடல்களின் திரட்டாக இவ்வுரை விளங்குகின்றது.

யாப்பும் பொருளும்

யாப்பிலக்கணத்தில் வரும் சொற்களுக்கு மிக நன்றாய்ப் பொருள் கூறி விளக்குகின்றார். அவற்றுள் சிலவற்றைக் காண்போம்:

கலிப்பா: சீர்பொருள் இசைகளால் எழுச்சியும் பொலிவும் கடுப்பும் உடைத்தாகலின் கலி என்பது காரணக் குறி (55).

விருத்தம்: ஒருபுடையால் தத்தம் பாவினோடு ஒத்த ஒழுக்கத்தானும் எல்லா அடியும் ஒத்தலானும் புராணம் முதலாகிய விருத்தம் உரைத்தலானும் விருத்தம் என்பதூஉம் காரணக் கூறி. இது வடமொழித் திரிசொல்.

கொச்சகம்: சிறப்பில்லாததனை ஒருசாரார் கொச்சை என்றும் கொச்சகம் என்றும் வழங்குவர் (79).

அம்போதரங்கம்: அம்போதரங்கம் என்பது நீர்த்திரையைச் சொல்லுமோ எனில் சொல்லும். அம்புத்தரங்கம் என்னும் வடமொழியை அம்போதரங்கம் Οαπές καταπαεθείς (80) என்று

சரிதகம்: ஓரிடத்து ஓடாதின்ற நீர், குழியானும் திடரானும் சார்ந்த இடத்து, சுரிந்து ஓடும் அதனைச் சுரிந்து என்றும், சூழ் என்றும் வழங்குவது (82)

புதிய விளக்கம்

இராக்கதம் பைசாசம் என்ற இருவகைத் திருமணத்திற்கும் இவர்தரும் விளக்கம் புதியவை மற்றவர் கூறாதவை.

”இராக்கதம்: ஆடை மேலிடுதல் பூமேலிடுதல் கதவடைத்தல் முதலியவற்றால் வலிதிற் கோடல்”

”பைசாசம், துஞ்சினாரோடும் மயங்கினாரோடும் சனித்தாரோடும் செத்தாரோடும் விலங்கினோடும் இழிதகு மரபில் யாருமில்லா ஒருசிறைக் கண் புணர்ந்து ஒழுகும் ஒழுக்கம்

கொள்கையும் கருத்தும்

விருத்தியுரையின் ஒழிபியல் பகுதியுள், ஆனந்தக குற்றங்களை விரிவாக ஆராய்கின்றார். ”பாட்டுடைத் தலைவனையே கிளைவிப்பட, கிளவித் தலைவனாகக்

கூறுவதூஉம் ஆனந்தம் எனக் கொள்க" என்று இவர் கூறியுள்ளார். மேலும், இவர் மலைபடு கடாம் பாடலுள் நான்கு இடங்களைக் காட்டி, பொருளானந்தம் ஆனந்தவுவமை என்று கூறுகின்றார்.

பாக்களின் வகையையும் சாதியையும் தொடர்புபடுத்தி விளக்குகின்றார். இவர் காலத்திலேயே பாட்டியல் கூறும் பொருத்தங்களைப் பற்றிய கருத்துகள் தோன்றிவிட்டன. அவற்றை இவர் சோதிட நுட்பத்துடன் விளக்குகின்றார்.

எழுத்துகள் உரு உணர்வு ஒலி தன்மை 67 610 நால்வகைப்படும் என்று விளக்குகின்றார்.

தொல்காப்பியத்தில் இல்லை

யாப்பருங்கல விருத்தியுரை, தொல்காப்பிய நூற்பாவாக மேற்கோள் காட்டுகின்ற ஒரு நூற்பா, இன்று தொல்காப்பியத்தில் இல்லை!

விருத்தியுரை (பக்கம் - 132, கழகப் பதிப்பு), பாவிற்குரிய அடிகளின் வரையறை பற்றி, தொல்காப்பியம் செய்யுளியலில் உள்ள நூற்பாக்கள் ஐந்தினைக்காட்டி ஆறாவதாக,

"முடிபொருள் அல்லாது அடியளவு இலவே" என்ற நூற்பாவைத் தொல்காப்பியர் இயற்றியதாகக் காட்டுகின்றது. இந்த நூற்பா இன்றைய தொல்காப்பியப் பதிப்புகளில் இல்லை!

நூலின் புகழ்

யாப்பருங்கலத்தைப் போற்றிப் புகழ்கின்ற வெண்பா ஒன்று, நூலின் இறுதியில் உள்ளது. யாப்பருங்கலம் சொல்லாற் சுருங்கியது பொருளால் பெருகியது தொல் ஞானம் எல்லாம் விளங்குவது அறியாமை இருளை அகற்றுவது. இத்தகைய சிறப்புடைய யாப்புநூலைக் கற்று வல்லவர் ஆயினவர் கேள்விச்செல்வம். அனைத்தையும் உணர்ந்து ஒருங்கு அறியவல்லவர் என்று கூறுகின்றது வெண்பா:

சொல்லிற் சுருங்கி, பொருள்பெருகி, தொன்ஞானம்
எல்லாம் விளக்கி இருளகற்றும் - நல்யாப்பு
அருங்கலம் வல்லவர் தாம்அன்றே கேள்வி
ஒருங்கறிய வல்லார் உணர்ந்து. "

2. யாப்பருங்கலக் காரிகையுரை

யாப்பருங்கலக் காரிகையுரை மிகவும் எளிமையும் தெளிவும் உடையது. கற்போர் நினைவில் என்றும் நிலைத்து நிற்கவல்ல பல சிறந்த மேற்கோள் பாடல்களைக் கொண்டது. தெளிவான யாப்பிக்கணக் கொள்கையை உணர்த்துவது.

இவ்வுரை முழுதும் உயிரோட்டமுள்ள நடையைக் காணலாம்.

"இந்நூல் யாது காரணமாகச் செய்யப்பட்டதோ எனின், பண்டையோர் உரைத்த தண்டமிழ்யாப்பிற் கொண்டிலாத குறியினோரைக் குறிக் கொளுவுதல் காரணமாகவும்,

தொல்லைப் பனுவல் துணிபொருள் உணர்ந்த நல்லவையோரை நகுவிப்பது காரணமாகவும் செய்யப்பட்டது".

"இந்நூல் யாவரால் செய்யப்பட்டதோ எனின், ஆரியம் என்னும் பாரிரும் பௌவத்தைக் காரிகையாக்கித் தமிழ்ப்படுத்திய அருந்தவத்துப் பெருந்தன்மை அமிதசாகரர் என்னும் ஆசிரியரால் செய்யப்பட்டது".

இந்த வாக்கியங்களில், ஓசைஇன்பமும் எதுகை மோனைச் சிறப்புடைய சொற்றொடரும் அமைந்திருப்பதைக் காணலாம்.

ஒழிபியலில் நூறுவகை வண்ணங்களை ஆராய்கின்றார்.

"ஒற்றுமைப்படாத உலோகங்களை ஒற்றுமைப்படப் -24) στεπ பற்றாசிட்டு விளக்கினாற்போல" (காரிகை -பொருத்தமான உவமையை ஓரிடத்தில் கூறுகின்றார்.

"அனுப்பிராசம் என்னும் வடமொழியை வழி எதுகை என்பது தமிழ்வழக்கு" (காரிகை - 56) என்று மற்றோர் இடத்தில் குறிப்பிடுகின்றார்.

"செந்தமிழ் நிலம் என்பது வையையாற்றின் வடக்கும் மருதயாற்றின் தெற்கும் கருவூரின் கிழக்கும் மருவூரின் மேற்குமாகிய நான்கு எல்லைக்குட்பட்ட சோணாடு" என்பது இவர் கருத்தாகும்.

உதாரண முதல்நினைப்புக் காரிகை

காரிகை உரையாசிரியர் எடுத்துக்காட்டிய உதாரணப் பாடல்களை நினைவில்கொள்ள, பிற்காலத்தவர் உதாரண முதல் நினைப்புக் காரிகைகளை இயற்றினார். இன்று அவை நூலாசிரியர் இயற்றியவை போலவே கருதிக் கற்கப்பட்டு வருகின்றன.

3. பெருந்தேவனார் - வீரசோழியம் உரை

வீரசோழியம் இலக்கண நூலுக்கு உரை இயற்றியவர் பெருந்தேவனார். வீரராசேந்திரன் (1063-1070) காலத்தில் பொன்பற்றி என்னும் ஊரில் வாழ்ந்த புத்த மித்திரர், அம்மன்னன் பெயரால் இயற்றிய நூலே வீரசோழியம். இது ஐந்திலக்கணம் கூறும் நூலாகும். இந்நூலாசிரியர் பழந்தமிழ் இலக்கண மரபைப் புறக்கணித்து, வடமொழி இலக்கணக் கொள்கைகளைத் தமிழ் மொழியில் கொண்டுவந்து புகுத்தியுள்ளார். இந்நூலைப் பின்பற்றியே பிற்காலத்தில் பிரயோக விவேகம், இலக்கணக் கொத்து ஆகிய நூல்கள் தோன்றின.

வீரசோழிய உரையாசிரியர் பெருந்தேவனார், நூலாசிரியர் கருத்துடன் மிக நெருக்கமாகப் பிணைந்து செல்லுகின்றார். இருவர்க்கும் பல வகையில் ஒற்றுமை உண்டு. இருவரும் ஒரே காலத்தினர் பௌத்த சமயத்தினர் வடமொழிக்கும் தமிழுக்கும் இலக்கணம் ஒன்றே என்னும் கருத்துடையவர்.

பெருந்தேவனார் என்ற பெயருடன் பலர் இருப்பதால் அப்பெயர் முற்காலத்தில் சிறப்புப்பெற்று விளங்கிற்று எனலாம். தொகை நூல்களுக்குக் கடவுள் வாழ்த்துப் பாடிய பாரதம் பாடிய

பெருந்தேவனார். பல்லவர் காலத்தில் வாழ்ந்த பெருந்தேவனார் என்று பலர் உள்ளனர்.. (இப் பெயர், இக்காலத்தில் மகாதேவன் என்று வழங்குகிறது.)

நூலாசிரியரைப் பற்றிக் கூறும் பாயிரப் பாடல்களுக்குப் பெருந்தேவனார் உரை இல்லை. அப்பாடல்களுக்கு உரை இருந்திருப்பின், நூலாசிரியரைப் பற்றிய வரலாறு தெளிவாகக் வா இடைத்திருக்கும். உரையாசிரியராகிய பெருந்தேவனாரைப் பற்றி,

தடமார் தருபொழில் பொன்பற்றி காவலன் தான்மொழிந்த
படிவீர சோழியக் காரிகை நூற்றெண் ப.ஃதொடொன்றின்
திடமார் பொழிப்புரை யைப்பெருந் தேவன் செகம்பழிச்சக்
கடனாக வேநவின் றான்தமிழ்க் காதலின் கற்பவர்க்கே

என்ற பாடல் அறிவிக்கின்றது.

மன்னன் புகழ்

பெருந்தேவனார் தம் உரையில் வீரராசேந்திர சோழனைப் புகழ்ந்து பாடும் பல பாடல்களை மேற்கோளாகக் காட்டியுள்ளார். அப்பாடல்களை இவரே இயற்றி இருக்கவும் கூடும். "பழையாறை நகர்ச் சுந்தரச் சோழரை யாவர் ஒப்பர்?" என்ற கருத்துப்பட பாடல் ஒன்று மேற்கோளாக உள்ளது (வீர -152). வீரராசேந்திரனைப் புகழ்ந்து பாடும் வெண்பாவும் கலிப்பாவும் யாப்பிலக்கண மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளன. வீரராசேந்திரனின் நாட்டில் பாய்ந்து செழிப்பூட்டும் காவிரியாற்றினை,

மரத்தினை ஓர்எழுத்துச் சொல்லும் மற்றொன்று
நிரப்பிட நீரிற்பூ ஒன்றா - நிரப்பிய
வேறொர் எழுத்துய்க்க வீரரா சேந்திரன்நாட்டு
ஆறாம் எனஉரைக்க லாம்

என்ற வெண்பா குறிப்பிடுகின்றது (வீர - 179).

புத்தர் புகழ்

பெருந்தேவனார் பௌத்த சமயத்தவர் ஆதலின், உரையில் பல இடங்களில் புத்தரைப்பற்றிய மேற்கோளும் உதாரணமும் தருகின்றார்.

புத்தர் கண்ணனை உய்வித்தார் ˙ (-41)

புத்தனைத் தெய்வமாய் உடையன் பௌத்தன (வீர-54)

என்று பல இடங்களில் உதாரணம் காட்டுகின்றார்.நேர், நிரை அசைகளுக்கு,

போதி வேந்தன்
சரணலா லரண் புகேம்

என்பதை உதாரணம் காட்டுகின்றார். புத்த தேவரின் துறவு, கொடை பற்றிய பாடல்கள் பலவற்றை யாப்பதிகாரத்தில் பெரும்பகை தாங்கும் மேற்கோளாகத் தருகின்றார். "மேன்மை மேன்மை. அருளொடுபுணர்ந்த அகற்சியாம்" என்று விளக்கி "புனிற்றுப் பசியுழந்த" என்ற பாடலைக் காட்டிப் புத்ததேவரில் அருட் பண்பை உலகிற்கு நினைவூட்டுகின்றார் (வீர - 109).

நூலறிவு

பெருந்தேவனார் தம் உரையில் பல நூல்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றார். இவர் குறிப்பிடும் நூல்களின் காலத்தைர் தெளிவாக அறியலாம். பெருந்தேவனார், வீரராசேந்திரன் காலத்தவர் ஆதலின் உரையில் காட்டப்பெறும் நூல்களின் காலத்தை அறுதி இடமுடியும்.

பன்னிருபடலத்தைப் பெருந்தேவனார் குறிப்பிடுகின்றார் (வீர -46). யாப்பருங்கல விருத்தியுரை காட்டிய பல செய்யுட்கை மேற்கோளாகத் தருகின்றார். யாப்பருங்கலக் கருத்தைத் தந்து "என்றார் அமுதசாகரனார்" என்று கூறுகின்றார்.

தண்டியலங்காரம் காட்டிய பல செய்யுள்களை இவர் மேற்கோள் காட்டுகின்றார். ஒன்பான்சுவை பற்றிய பாடல்கள் யாவும் தண்டியலங்காரம் காட்டியவை.

உவமைபற்றி இவர் கூறும் கருத்து, போற்றத்தக்கதாய் உள்ளது. அது பின்வருமாறு:

உவமம் எனப்படுவது அவமற விரிப்பின்
புகழே பழியே நன்மை என்றின்ன
நிகழும் ஒப்புமை நேர்ந்தன முறையே
அவைதாம்
கண்ணே செவியே மூக்கே நாவே
மெய்யே மனமே விளம்பின ஆறும்
ஐய மின்றி அறுமூன்று ஆமே.

வடமொழிப் புலமையும் பற்றும்

பெருந்தேவனார் வட மொழிப்பற்று மிக்கவர் புலடை உள்ளவர். கீழ்வரும் பகுதிகள் இவரது வடமொழிப் பற்றுக்கும் புலமைக்கும் சான்றாய் அமையும்:

"தமிழ்ச் சொல்லிற்கு எல்லாம் வடநூலே தாயாகி நிகழ்கின்றமையின், அங்குள்ள வழக்கு எல்லாம் தமிழுக்கும் பெறும்" (வீர - 60).

"வட மொழியில் அவ்வியச்சொல் தமிழின் இடைச்சொல் என அமைக்க" (வீர - 49).

"வடநூலில் பெண்பாலைக் குறித்த நதி, குமரி என்னும் ஈகாராந்தச் சொற்கள் நதி, குமரி எனக் குறுகும்" (வீர -56)

"வனிதா தாரா உமா மாலா சாலா என வட நூலில் ஆகா ராந்தமாய்ப் பெண்ணைக் குறித்துக் கிடந்த சொற்கள் தமிழில் ஐகாராந்தமாகி வனிதை தாரை உமை மாலை சாலை என முடியும். தேவதை கலை சீதை என வருவனவும் அது". (வீர -56).

சொல்லாராய்ச்சி

பெருந்தேவனார் பல இடங்களில் சொற்களைப் பற்றிய ஆராய்ச்சியில் மிகவிரிவாக ஈடுபட்டுள்ளார். அவற்றை இங்கே காண்போம்:

“பலவற்றை“ என்ற சொல்லை (பல ஃ அற்று ஃ ஐ) அற்றுச் சாரியை சேர்க்காமல் பலவை (பல ஃஐ) என்றே வழங்குகின்றார் (- 30).

மூவிடப் பெயர்களைப்பற்றி இவர் பின்வருமாறு கூறுகின்றார்.

”உன் என்பதற்கு நும் என்பதும் நின் என்பதும் நான் என்பதற்கு யான் என்பதும் ஆதேசமாம். நாம், யாம் எனவும் யாவர் யார் எனவும் ஆதேசமாதலுமாம். பன்மையில் நீர்கள் நீங்கள் நாங்கள் தாங்கள் எனவும் யாவர்கள் அவர்கள் இவர்கள் உவர்கள் எவர்கள் எனவும் வரும்.

நீர்கள் என்பது நீயிர்கள் நீவிர்கள் என ஆதேசமாதலுண்டு. நீர் என்பது நீயிர் நீவிர் என ஆதேசமாம். நாங்கள் என்பது யாங்கள் என ஆதேசமாம்” (வீர - 37.

இவர் கருத்துக்களை, “திராவிட மொழியின் மூவிடப் பெயர்கள்“ என்ற நூலில் வேங்கடராஜுலு ரெட்டியார் மறுத்துள்ளார்.

பெருந்தேவனார் தம் காலத்து வழக்குச் சொற்களையும் ஆராய்ந்து பின்வருமாறு கூறுகின்றார்:

”நாளி கோளி மூளை உளக்கு வாளை வளி எனவும், விழக்கு பழிங்கு தழிகை இழமை எனவும், பதினாறாம். உடலும்பதினைந்தாம் உடலும் (ழ், ள்) தம்முள் தேற்றக் கருநிலம் சுற்றிவு தேசத்துச் சிலர் வழங்குவர்.

”வெச்சிலை முச்சம் சுச்சை எனவும், உற்றியம்போது மற்றியம் பிற்றை வாங்கி விற்றான் எனவும் பதினேழாம் உடலாம் (ற்) மூன்றாம் உடலும் (ச்) தம்முள் தேற்றக் காவிரி பாய்ந்த

நிலத்துச் சிலர் வழங்குவர். ”நெல்லுக்கா நின்றது, வீட்டுக்கா நின்றது என்று பாலாறு பாய்ந்த நிலத்துச் சிலர் வழங்குவர்”.

”மற்றும் இவனைப்பாக்க, இங்காக்க அங்காக்க எனவும். சேத்துநிலம் ஆத்துக்கால் எனவும், வாயைப் பயம் கோயி முட்டை எனவும், உசிர் மசிர் எனவும் பிறவாற்றானும் அறிவில்லாதார் தமிழைப் பிழைக்க வழங்குவர்” (வீர - 82).

குண்டலகேசி முதலிய காவியங்களில் பயின்றுவந்த அரிய சொற்களைப்பற்றிப் குறிப்பிடுகின்றார்: பெருந்தேவனார் பின்வருமாறு

”குண்டலகேசியும் உதயணன் கதையும் உடையவற்றில் தெரியாத சொல்லும் பொருளும் வந்தன எனின், அகலக்கவி செய்வானுக்கு அப்படியல்லது ஆகாது என்பது. அன்றியும் அவை செய்தகாலத்து அச் சொற்களும் பொருள்களும் விளங்கி இருக்கும் என்றாலும் அமையும் எனக்கொள்க”. முதலாக

அயல்நாட்டுச் சொற்களைப் பற்றியும், இவரது சிந்தனை சென்றுள்ளது: “சிங்களவன் பேசுவது சிங்களம். வடுகன் பேசுவது வடுகு. துளுவன் பேசுவது துளுவு” (வீர - 54) என்றும், ”வட்டா

என்னும் ஆரிய தேயச் சொல்லு, வட்டை என வந்தவாறும், முருங்கா என்னும் சிங்களச் சொல்லும் முருங்கை என வந்தவாறும் கொள்க" (வீர - 59) என்றும் கூறுகின்றார்.

நாகரிகமும் மக்கள் வாழ்வும்

பெருந்தேவனார் காலத்திலேயே சேரநாடு, மலையாளம் என்று தனிநாடாக மாறிவிட்டது. தமிழ் வழங்கும் நிலத்தின் எல்லையைக் குறிக்கும்போது, "குணகடல் குமரி குடகம் வேங்கடம் என்னும் இந்நான்கு எல்லைக்குள்" என்கின்றார் (வீர -8).

இவர் காலத்தில் புகார், நாகபட்டினம், தஞ்சாவூர், உறையூர் குரங்காடு துறை, மயிலாடுதுறை ஆகிய ஊர்கள் சிறப்புடன் விளங்கின என்பதை இவர் உரையால் அறியலாம்.

புகழார் அளகேசர் பூம்புகார் என்னும் நகராரை ஒப்பவர் ஆர் நாட்டு

என்று இவர் பூம்புகார் நகர மக்களைப் புகழ்கின்றார்.

"நாகபட்டினம் தஞ்சாவூர் உறையூர் எனக்கிடந்த ஊர்ப் பெயர்ச் சொற்கள், கடைகுறைந்து நாகை தஞ்சை உறந்தை என ஐகாரத்தான் முடியும்" (வீர - 56) என்றும்,

"குரங்குகள் ஆடப்பட்ட துறை யாதொரு ஊரில் உண்டு அவ்வூர் குரங்காடு துறைற் மயில்கள் ஆடப்பட்ட துறை யாதொரு ஊரில் உண்டு அவ்வூர் மயிலாடுதுறை" (வீர - 47) என்றும் உதாரணம் காட்டுகின்றார். "கபில பரணர் தங்களிலே வாது செய்தார்கள்" (வீர -என்று ஓர் உதாரணம் காட்டுகின்றார். 49)

"மருந்துகளால் ஆடப்பட்ட எண்ணெய், மருந்தெண்ணெய், இருப்பை நெய் (வீர - 44), மருந்தைப் பண்ணுவான் மருத்துவன்" (வீர 54) என்ற உதாரணங்கள் அக்கால நாகரிகத்தை உணர்த்துகின்றன.

"மாச்சோறு உண்கின்ற சிறுக்கன் அதன்கண் வீழ்ந்த தூளியினைத் தின்றான்" (வீர - 41).

"தேசங்களிலே தேசங்களிலே பற்றிக்கொடு நிகழ்கின்ற யாதொரு பூசல் தேசாதேசி எனவும், தண்டுகளாலே தண்டுகளாலே அடித்து நிகழ்கின்றதோர் பூசல் தண்டாதண்டி எனவும் வருவன" (வீர 47) என்ற உதாரணங்களில், அக்கால மக்களின் பேச்சுமொழி இடம் பெற்றுள்ளது.

உயிரும் பயிரும்

நீர்க் காக்கை, கடற்பன்றி (வீர - 44) என்பனவற்றை இவர் உதாரணம் காட்டுகின்றார்.

"கல்லுத் தலையின்கண் யாதொரு மீனுக்கு உண்டு அம்மீன் கற்றலை" என வழங்கப்படும் என்கின்றார் (வீர - 47, 49).

"கொம்மட்டி போலக் காய்க்கும் மாதளை கொம்மட்டி மாதளை" (வீர - 51) என்று ஓரிடத்தில் எழுதுகின்றார்.

இவர் காலத்தில் "வழுதுணை" பயிரிடப் பெற்றது (வீர - 96).

மகரக்குறுக்கம் - சிறந்தவிளக்கம்

பெருந்தேவனார் தம் உரையில், மகரக் குறுக்கம் பற்றிய தொல்காப்பிய நூற்பாவுக்குச் சிறந்த

பொருள் கூறுகின்றார். இந்தப் பொருளே பொருத்தமாக உள்ளது.

தொல்காப்பியர், மகரம் தன் மாத்திரையில் குறுகி வருகின்ற இடத்தைக் கூறிய பின்,

உட்பெறு புள்ளி உருவாகும்மே " என்ற நூற்பாவை அமைத்துள்ளார். இதற்குத் தொல்காப்பிய உரையாசிரியர்கள் "ப்"

என்னும் மெய் உள்ளே ஒரு புள்ளி பெற்று, "ம்" என்னும் மெய்யின் வடிவத்தைப் பெறும் என்று பொருள் கூறியுள்ளனர்.

ஆனால், பெருந்தேவனார் இந்த நூற்பாவுக்கு வேறு ல் வவ்வரின் (சந்தி - 19) விளக்கம் கூறுகின்றார். முன் வயிற்கால்" என்ற நூற்பா விளக்கத்தில்,

வருமொழி முதல் வகரம் வந்து புணர்ந்தால், அந்த மகரமானது குறுகி, கால் மாத்திரையாய் - உட் புள்ளி பெறும் என்று கூறுகின்றார். இதுவே பொருத்தம் உடைய விளக்கம்,

மொழியியலும் இலக்கணமும்

இன்றைய மொழியில் சிந்தனையாளர்கள் போற்றி மேற்கொள்ளுகின்ற பல இடங்கள் நூலிலும் உரையிலும் உள்ளன. அவை வழிவழியாக வருகின்ற இலக்கணக் கொள்கைகளுக்கும், மரபுக்கும் மாறுபட்டவை. தொல்காப்பியமும் நன்னூலும் பரப்பிய இலக்கணக் கொள்கைகளினால் தோன்றியுள்ள நூல்கள் வீரசோழியத்தைத் தடுத்து நிறுத்தும் அரண்களாக உள்ளன.

4. தண்டியலங்கார உரை

பல்லவர் காலத்தில் (600-900) வடமொழி இலக்கண இலக்கியங்களுக்குத் தமிழ்நாட்டில் பெரிதும் செல்வாக்கு ஏற்பட்டது. அதனால் பல வடமொழி நூல்கள் தோன்றின. பிற்காலத்தில் வடமொழி நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்தனர். பன்னிரண்டாம் நூற்றாண்டில் தண்டியலங்காரம் என்னும் அணி இலக்கண நூல், வடமொழியில் உள்ள காவ்யாதர்சம் என்ற அலங்கார நூலின் மொழிபெயர்ப்பாகத் தோன்றியது. அந்த வடமொழி நூலை இயற்றியவர் ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆசார்ய தண்டி.

அம்பிகாபதி என்னும் தமிழ்ப் புலவரின் மகன் தண்டி என்பவர் இயற்றியதே தண்டியலங்காரம். தண்டி வடமொழி அலங்கார நூலை மொழிபெயர்த்து, உதாரணச் செய்யுள்கள் பலவற்றையும் வடமொழியிலிருந்து தழுவி இயற்றினார் என்பர். பிரயோக விவேக நூலாசிரியர், "தண்டியாசிரியர் மூலோதாரணமும் காட்டினாற்போல யாமும் உரை எழுதியதல்லது மூலோதாரணமும் காட்டினாம்" (காரக - 3) என்று கூறுகின்றார். ஆனால், தண்டியலங்கார உதாரணப் பாடல்களில் சில பழைமையானவை பழைய நூல்களிலிருந்து மேற்கொண்டவை.

தண்டியலங்கார நூலாசிரியர் வரலாறு பற்றி மிகுதியாக ஒன்றும் தெரியவில்லை. தண்டியலங்கார உரை பாயிரப் பகுதி தூலாசிரியரைப் பற்றிக் குறிப்பிடவில்லை. தண்டியலங்காரத்தின் சிறப்புப்பாயிரச் செய்யுள் ஒன்றை, "செந்தமிழ்" வெளியிட் டுள்ளது.

(செந்தமிழ் 36 பக். 385-400.)

அது பின்வருமாறு:

வடதிசை இருந்து தென்மலை ஏகி

மதிதவழ் குடுமிப் பொதிய மால்வரை

இருந்தவன் தன்பால் அருந்தமிழ் உணர்ந்த

பன்னிரு புலவரின் முன்னவன் பகர்ந்த

தொல்காப் பியநெறி பல்காப் பியத்தும்

அணிபெறும் இலக்கணம் அரிதினில் தெரிந்து

வடநூல் வழிமுறை மரபினின் வழாது

ஈரிரண்டு எல்லையின் இகவா மும்மைப்

பாரத இலக்கணம் பண்புறத் தழீஇத்

திருந்திய மணிமுடிச் செம்பியன் அவையத்து

அரும்பொருள் விளங்க யாப்பின் வகுத்தனன்

ஆடக மன்றத்து நாடக நவிற்றும்

வடநூல் உணர்ந்த தமிழ்நூற் புலவன்

பூவிரி தண்பொழிற் காவிரி நாட்டு

வம்பவிழ் தெரியல் அம்பி காபதி

மேவரும் தவத்தினில் பயந்த

தாவரும் சீர்த்தித் தண்டி என்பவனே.

தண்டியலங்காரம் இரண்டாம் குலோத்துங்க சோழன் காலத்தில் இயற்றப்பட்டது. அதில் இடம்பெற்றுள்ள பல உதாரணப் பாடல்கள் குறிப்பிடும் "அநபாயன்" இரண்டாம் குலோத்துங்கனே. அம் மன்னன் காலத்தில் சிறப்புற்று விளங்கிய ஒட்டக்கூத்தர் புகழைச் "சென்று செவியளக்கும்" என்ற உதாரணப் பாடல் கூறுகின்றது. அச் சோழ மன்னனின் முன்னோர் பெற்ற வெற்றிச் சிறப்புகளாகிய கலிங்கவெற்றி, கடாரம் கொண்டது ஆகியவையும் குறிப்பிடப்படுகின்றன. கங்கை கொண்ட சோழபுரத்தையும் சிதம்பரத்தையும் சிறப்பித்துப்பாடும் உதாரணப் பாடல்கள் சில உள்ளன. இவை யாவும் நூலாசிரியர் வாழ்ந்த காலத்தை நமக்கு அறிவிக்கும் தக்க சான்றுகளாகும்.

வரலாற்றுக் குறிப்புகள்

நூலாசிரியர் இயற்றியுள்ள பல உதாரணச் செய்யுட்கள் சோழர் வரலாற்று ஆராய்ச்சிக்குத் துணை புரிகின்றன.

சோழ மன்னன் அனபாயனின் வீரமும் கொடையும் பல பாடல்களில் இடம் பெறுகின்றன.

அன்னைபோல் எவ்வுயிரும் தாங்கும் அனபாயா

நின்னையார் ஒப்பார் நிலவேந்தர்

என்றும்,

தண்கவிகை யால்உலகம் தாங்கும் அனபாயன்

வெண்கவிகைக் குள்அடங்கா வேந்தில்லை

என்றும் அனபாயன் புகழப்படுகின்றான். சோழமன்னன் சிலந்த நிறம் உடையவன் என்று ஒரு பாடல் புகழ்கின்றது.

“செய்யனே, கோழியுடையான் மகன்“ என்று அவனது திருமேனி அழகில் ஈடுபட்டுப் புலவர் பாடுகின்றார்.

சோழமன்னன் கலிங்கநாட்டில் பெற்ற வெற்றிகளைச் சில பாடல்கள் குறிக்கின்றன.

ஒருவர் ஒருவர்மேல் வீழ்ந்துவட நாடர்

அருவர் அருவர்என அஞ்சி வெருவந்து

தீத்தீத்தீ என்றுஅயர்வர் சென்னி படைவீரர்

போர்க்கலிங்கம் மீதுஎழுந்த போது. (சொல்லணி -15)

இந்நிகழ்ச்சியைக் கலிங்கத்துப்பரணியில் விரிவாகக் காணலாம்.

பொருளணி இயலில், கருவிக்காரக ஏது அணிக்கு உதாரணமாக, சோழன் கலிங்கநாட்டிலிருந்து பெற்ற யானைக் கூட்டங்களின் சிறப்பை உணர்த்தும் பாடல் காட்டப்பட்டுள்ளது. யானைக் கூட்டம், “நேரார் கலிங்கத்து வாளாற் கவர்ந்த வளம்“ என்று புகழப்படுகின்றது:

அனபாயன் காலத்தில் கங்கை கொண்ட சோழபுரம் சிறந்த தலைநகரமாய் விளங்கிற்று. சோழன் அந்த நகரில் தங்கி ஆட்சி புரிந்தான். அந்த நகரில் வானளாவிய மாடங்கள் இருந்தன. இச் செய்திகளை எல்லாம்,

வண்புயலைக் கீழ்ப்படுத்தி, வானத் தருமலைந்து

மண்குளிரச் சாயல் வளர்க்குமாம் தண்கவிகைக்

கொங்கார் அலங்கல் அனபாயன் கொய்பொழில்சூழ்

கங்கா புரமா ளிகை

என்ற வெண்பா உணர்த்துகின்றது.

இம் மன்னன் காலத்தில், பாண்டியநாடு ஐந்தாகப் பிரிந்து இருந்தது என்றும், பாண்டிய மன்னன் அதனை ஆண்டான் என்றும் தெரிகின்றது. அப் பாண்டிய மன்னன்,

.....வியன் தமிழ் நா(டு) ஐந்தின்

குலங்காவல் கொண்டு ஒழுகும் கோ

என்றும் குறிக்கப்படுகின்றான்.

பலவேறு நாடுகளிலிருந்து சோழ மன்னனுக்குத் திறைப் பொருள்கள் வந்து குவிந்தன (இடமலைவு).

இம் மன்னன் காலத்தில் காஞ்சிபுரம் பெருஞ்சிறப்புடன் விளங்கியது. கச்சி என்று அது வழங்கியது. அப் பேரூரின் இரு பக்கமும் இரண்டு ஏரிகள் இருந்தன் நகரைச் சுற்றிலும் சிறந்த மதில் இருந்தது செழுமையான சோலை நகரில் இருந்தது திருமாலின் இருப்பிடமாகிய அத்தியூர் அந்நகரின் ஒரு பகுதியாக விளங்கியது வானத்தில் இருந்து அந் நகரைப் பார்த்தால், ஓர் அழகிய மயில்போல அந்நகர் விளங்கியது

ஏரி இரண்டும் சிறகா எயில்வயிறாக்

காருடைய பீலி கடிகாவா - நீர்வண்ணன்

அத்தியூர் வாயா அணிமயிலே போன்றதே

போற்றோரான் கச்சிப் பொழில் (பொருளணி இயல் - இயைபு உருவகம்)

என்ற பாடல் கச்சியின் சிறப்பை விளக்குகின்றது.

கச்சி படுவ கடல்படா கச்சி

கடல்படுவ எல்லாம் படும் (உயர்ச்சி வேற்றுமை)

என்றும் கச்சி சிறப்பிக்கப்படுகிறது.

வெ.ஃகா, பாடகம், ஊரகம் என்னும் திருப்பதிகள் திருமாலுக்கு உரியவையாய் கச்சியில் இருந்தன (நிரல் நிறையணி). கச்சியிலுள்ள ஏகாம்பரநாதரையும் சில பாடல்கள் குறிப்பிடு கின்றன. அந் நகரில் உள்ள கச்சாலை என்னும் பகுதியில் சிவனை, "கச்சாலைக்கனி" என்று பாடல் புகழ்கின்றது (நிரோட்டம், தன்மையணி).

சிதம்பரம், சிறந்த சைவத்தலமாக அக் காலத்திலும் விளங்கியது. தில்லையில் நடமிடும் கூத்தப்பெருமான் தில்லைத் திருநடம்செய்பூந்தாமரை, தில்லைப் பெருமான், அம்பலக் கூத்துடையான் என்றெல்லாம் புகழப்படுகின்றான்.

சோழநாட்டில் உள்ள கருவூர் வஞ்சி என்ற பெயருடனும், திருவண்ணாமலை சோணாசலம் என்ற பெயருடனும் சிறப்புறது விளங்கின.

உரையாசிரியர்

தண்டியலங்கார உரையாசிரியர் யார் விளங்கவில்லை. நூல் தோன்றிய காலத்தை அடுத்து உரையும் தோன்றியிருக்கக்கூடும் என்று கருதுகின்றார் டாக்டர் உவே சாமிநாத ஐயர். அவர், "தண்டியலங்கார உரைஅனபாய சோழன் காலத்தில் இயற்றப்பட்டது என்று

அந்நூலின் உரையிலுள்ள மேற்கோள்களால் தெரிய வருகின்றது. அந் நூலுரையாசிரியர் பெயர் விளங்கவில்லை" என்று கூறுகின்றார். (சங்கத்தமிழும் பிற்காலத் தமிழும். பக்கம் - 161.)

ஆனால், தண்டியலங்காரத்தைப் பழைய உரையுடன் பதிப்பித்தவர்கள் அவ்வுரையை இயற்றியவர் சுப்பிரமணிய தேசிகர் என்று குறிப்பிட்டுள்ளனர். இது உண்மைக்கு மாறானதாகும். தண்டியலங்கார என்பதற்குச் சான்றுகள் பல உரை பழமையானது தரலாம். அவ்வாறிருக்க. திருவாவடுதுறை ஆதீனத்தில் பதினான்காம் பட்டத்திற்கு உரியவராய் விளங்கிய சுப்பிரமணிய தேசிகர் உரை எழுதினார் என்பது பொருந்தாது. ஒருகால் பழைய உரையில் நடுவே ஏதேனும் விளக்கக் குறிப்பு எழுதிச் சேர்த்தவர் தேசிகராய் இருக்கலாம். அத்தகைய இடம் எது என்பதை இன்று அறிய இயலவில்லை.

உரையின் இயல்பு

உரை, சுருக்கமும் தெளிவும் உடையது. சூத்திரங்களின் பொருளை நன்கு விளக்கிச் செல்லுகின்றது. மிகச் சில இடங்களில் அணிகளுக்குள்ள வேறுபாட்டைக் குறிப்பிடுகின்றது. தடை விடை எழுப்பி விளக்குகின்றது. உதாரணச் செய்யுளை அணி இலக்கணத்துடன் பொருத்திக்காட்டி விளக்காமல் செல்லுவது இவ்வுரைக்குள்ள ஒரு குறைபாடாகும். கற்போர் உய்த்து உணர்ந்து தெளிந்து கொள்ளட்டும் என்று இதன் உரையாசிரியர் விட்டிருக்கலாம்.

பாயிரம் பற்றிய விளக்கம், சிறப்புப் பாயிரம் கூறும் வரலாறு ஆகியவை இல்லாமை பெரிய இழப்பாகும்.

முதல் நூலும் வழிநூலும்

தண்டியலங்காரம் வடமொழியிலுள்ள காவ்யா தர்சத்தின் வழிநூல் என்பதற்கு இதன் உரையே சான்றாக உள்ளது.

பொதுவணியியலில் (25), "இதன் முதல் நூல் செய்த ஆசிரியர் உலகத்துச் சொல்லை எல்லாம் சமஸ்கிருதம், பிராகிருதம், அபப்பிரஞ்சம் என மூன்று வகைப்படுத்தினார். அவற்றுள் சமஸ்கிருதம் புத்தேளிர் (தேவர்) மொழி எனவும் அப்ப் என்று உரை குறிப்பிடுகின்றது.

சொல்லணியியலின் இறுதியில், "மாலை மாற்றும். சுழிகுளமும், கோமூத்திரியும், சருப்பதோபத்திரமும் என நான்குமே அன்றே ஆண்டு ஆசிரியனால் வடநூலில் உரைக்கப் பட்டன. ஈண்டு உரைத்தன ஆகிய ஒழிந்த மிறைக்கவி, மிகைப்படக் கூறிற்றாம் பிற எனின், ஆகா: ஒழிந்தன, "ஒன்றின முடித்தல் தன்னின முடித்தல்" என்னும் தந்திர உத்தியால் உரைக்கப்பட்டன. அல்லதூஉம், இது வடநூலுக்கு வழிநூல் ஆதலால் தனது விகற்பம்பட உரைத்தார் எனினும் அமையும் என்று இந்நூலின் உரை கூறுகின்றது.

நல்ல விளக்கம்

உரையில் சில கருத்துகள் நன்கு விளக்கப்பட்டுள்ளன. அவ்விளக்கங்கள் நம் புலமைக்கு விருந்தாய் அமைகின்றன.

பொதுவணி இயலின் இறுதியில், செறிவு என்பதனைப் பின்வருமாறு விளக்குகின்றார்:

”மாங்கனியும் தீம்பாலும் வருக்கைச் சுளையும் சருக்கரையும் தம்முள் வேறுபட்ட சுவைய எனினும் கூறுவது மதுரம் ஒன்று அன்றே ? அதுபோல, எழுத்துச் செறிவும், சொற் செறிவும். பொருட் செறிவும் செறிவு எனவே சொல்லுவது அல்லது பிறிதொருவகை பேசிற் பெருகிய அகலம் உடைத்தாம் எனக் கொள்க.”

பொருளணி இயலில், ”இறக்கும் காலத்து உண்டாய நினைவு இறந்த பின்னர் வந்து ஊட்டும் என்பதனால் அறிக” என்ற விளக்கம், வாழ்த்து விலக்கு என்ற உதாரணச் செய்யுளுக்குச் சிறந்த ஒளியூட்டுகின்றது.

சத்துவம் என்பதனை இவர் நன்கு விளக்கியுள்ளார்: ”சத்துவம் என்பன வெண் பளிங்கில் செந்நூல் கோத்தால் அதன் செம்மை புறம்பே தோன்றுமாறுபோல, உள்ளம் கருதியது. புலனாக்கும் குணங்கள். அவை, சொற்றளர்வு, மெய் வியர்ப்பு, கண்ணீர் நிகழ்ச்சி, மெய் விதிர்ப்பு, மெய் விதும்பல், மெய்ம்மயிர் அரும்பல் முதலியன. சத்துவம் உள்ளதன் தன்மை”.

இன்றும் உதவும்

இளங்கவிஞர்கள் இன்று பாடும் கவிதைகளில் செய்யும் சிலவகையான பிழைகளை இவ்வுரை, அன்றே சுட்டிக் காட்டியுள்ளது.

பொன் தகடு என்பதனை பொற்றகடு என்று எழுதாமல், தகடு என்றே) எழுதுவது குற்றியலுகரத்தின் முன் வரும் உயிர் எழுத்தைச் சேர்த்து எழுதாமல், பாட்டில் சேர்ப்பது போன்ற குறைபாடுகளை இந்நூலின் உரை சுட்டிக் காட்டி அவற்றை நீக்குக என்று அறிவுரை கூறுகின்றது. (- பார்க்க: சொல்லணிஇயல் வழுக்களின் வகை (சந்திவழு யதிவழு).

சொல்லாட்சி

மொட்டு என்ற பெயர்ச்சொல்லிலிருந்து, இவர் வினைச் சொற்களைப் படைத்துக் கொள்கின்றார். குவியும் என்ற பொருளில் மொட்டியா நிற்கும் என்றும், குவிதல் என்ற பொருளில் மொட்டித்தல் என்றும் சொற்களை வழங்குகின்றார் (பொருளணி இயல் யுத்த - ஏது, இயல் - யுத்த ஏது).

எங்களுக்கு, நுனக்கு ஆகிய சொற்கள் இவர் காலத்தில் வழூஉச் சொற்களாகக் கருதப்பட்டன. (சொல்லணி இயல் -சொல் வழு).

வாழ்க்கை நிலை

வாழ்க்கையில் வெறுப்புற்ற மக்கள் தீயில் மூழ்கி இறக்கும் வழக்கம் அக் காலத்தில் இருந்தது.

இரவில் வீட்டில் திருடச்செல்லும் கள்வர், வீட்டிலுள்ளோர் விழித்துள்ளனரா, உறங்கி விட்டனரா என்று அறிந்து கொள்ளப் பொய்த்தலை ஒன்றைச் செய்து அதனைக் கோலில் செருகி வீட்டின் உள்ளே நீட்டுவர். பொய்த் தலையைக் கண்டு ஆரவாரம் செய்யாமல்

வீட்டிலுள்ளோர் இருப்பாராயின், பின் திருடுவர்.

கைத்தலம் கண்ணாக் களவுகாண் பான்ஒருவன்

பொய்த்தலை முன் நீட்டியற்றும் போந்து

என்ற அடிகள் இச்செய்தியை உணர்த்தும். (நகைச்சுவை உதாரணம்).

5.சாமுண்டி தேவ நாயகர் - புறப்பொருள் வெண்பாமாலை உரை

புறப்பொருள் வெண்பாமாலை தொல்காப்பியத்திற்குப் பின், பெரிதும் பயிலப்படும் புறப்பொருள் இலக்கண நூல், புறப்பொருளின் இலக்கணத்தை உணர்த்தும் தனி நூல் இது. இந்நூலை உரையாசிரியர்கள் அனைவரும் பயின்றுள்ளனர் தம் உரைகளில் மேற்கோள் காட்டியுள்ளனர்.

இலக்கணமும் இலக்கியமும்

இந்நூலாசிரியர் ஐயனாரிதனார். சேர அரச பரம்பரையில் தோன்றிய புலமைச் செல்வர். இவர் திணைகளை விளக்கும் சூத்திரங்கள் இயற்றி, துறைகளை விளக்கும் கொளுக்களைச் செய்து, அவற்றிற்கு ஏற்ற இலக்கியங்களையும் தாமே படைத்துள்ளார். பிற நூல்களிலிருந்து மேற்கோள் தராமல் தக்க மேற்கோள்களை இவரே வெண் பாக்களால் பாடிச் சேர்த்துள்ளார். மேற்கோள் காட்டுதல் உரையாசிரியரின் பணி என்றாலும் நூலாசிரியரே அதனைத் திறம்படச் செய்திருக்கின்றார். உரையாசிரியர் செய்ய வேண்டிய பணியை மேற்கோள் தேடித் தரவேண்டிய பணியை நூலாசிரியரே செய்து உரையாசிரியர்க்குப் பெரிதும் உதவி செய்து விட்டார்.

உரையாசிரியர்

இந்நூலின் உரையாசிரியர் சாமுண்டிதேவ நாயகர். ஜயங்கொண்ட சோழ மண்டலத்து மேற்கானாட்டு மாகறலூர் கிழார்" என்ற அடைமொழிகள் இவரது பெயரின் முன் சேர்ந்துள்ளன.

இவரைப்பற்றிய வரலாறு எதுவும் தெரியவில்லை. இவர் தம் உரையில் (பாடாண்-42),

உலவா வூக்கமொடு உள்ளியது முடிக்கும்

புலவர் ஆற்றுப்படை புத்தேட்கும் உரித்தே

என்ற பன்னிரு பாட்டியல் (320) சூத்திரத்தை மேற்கோள் காட்டுகின்றார். எனவே இவ்வுரையாசிரியர் 12-ஆம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டவர் என்பது விளங்கும்.

உரையின் இயல்பு

புறப்பொருள் திணையை விளக்கும் சூத்திரம், துறையை விளக்கும் கொளு, மேற்கோள் பாடல்கள் ஆகியவற்றிற்கு இவர் உரை இயற்றியுள்ளார். மேற்கோள் பாடல்களும் நூலாசிரியரால் இயற்றப்பட்டவை ஆதலின், அவற்றிற்கும் இவர் உரை இயற்ற வேண்டியதாயிற்று. மற்ற உரையாசிரியர்கள் (தண்டியலங்கார மேற்கோள்உதாரணப் பாடல்களுக்கு உரை இயற்றவில்லை என்பது இந்கே கருதத் தக்கதாகும்.

சொல் கிடந்தவாறே இவர் பொழிப்புரையாகப் பொருு் எழுதுகின்றார். எழுவாய் பயனிலை செயப்படுபொருள் தேடி கொண்டு கூட்டிப் பொருள் எழுதுவதில்லை. ,

வடசொற்கள் மிகுதியாக இவரது உரையில் இடம் பெறுகின்றன. நூலாசிரியர் எவ்வளவுக்கு எவ்வளவு தூய தனி தமிழ்ச் ரரோ அப் பண்புக்கு மாறாக உரையாசிரியர் வட சொற்களைக் கொட்டித் உரையை நிரப்பி விடுகின்றார். விசாரித்தல், உபகாரி, உத்திரம் பிராணன் போன்ற வட சொற்கள் இடம் பெறுகின்றன.

“அப்படிக் கொத்தவன்“ போன்ற பேச்சுமொழிச் சொற்களும் இடம் பெறுகின்றன. உலக வழக்கின் சார்பு இவரது உரையில் உண்டு.

மிகச்சில இடங்களில் செய்யுளை முடித்துக்காட்டுகின்றார். இலக்கணக் குறிப்பும், சொற்பொருள் விளக்கமும் அருகியே இடம் பெறுகின்றன. மேற்கோள் மிகுதியாகக் காட்டுவதில்லை.

நூலின் பல பகுதிகள் இவ்வுரையால்தான் விளங்குகின்றன. பல அரிய சொற்களுக்கு இவ்வுரைதான் பொருள் கூறுகின்றது..

நோலை என்பதற்கு எட்கசிவு என்றும் நெய்த்தோர் (நெத்துரு - தெலுங்கு என்பதற்கு உதிரம் என்றும் (வஞ்சி 59 இவர் பொருள் எழுதுகின்றார்.

நெடிபடு கானத்து நீள்வேல் மறவர்

அடிபடுத்து ஆரதர் செல்வான் துடிபடுத்து

வெட்சி மலைய விரவார் மணிநிரைக்

கட்சியுள் காரி கலுழ்ம் (வெட்சி-3)

என்ற பாடலில் பல அரிய தமிழ்ச் சொற்கள் உள்ளன. இப்பாடலின் உரை பின்வருமாறு உள்ளது:

”சிள் வீடு கறங்கும் காட்டிடத்து நீண்ட வேல்களையுடைய மறவர் காலிலே செருப்பைத் தொட்டு, கடத்தற்கரிய வழியிடத்துச் செல்வான் வேண்டி, துடியைக் கொட்டப் பண்ணி வெட்சிப் பூவைச் சூட, பகைவர் மணியாற் சிறந்த பசுவினையுடைத்தான காட்டிடத்துக் காரி என்னும் புள்ளுந் துந்நிமித்தமாக அழா நிற்கும்”.

இவ்வுரை யின்றேல் பாட்டின்பொருள் தெளிவாக விளங்குதல் அரிதாகும்.

வெண் கண்ணி என்பதற்கு (வாகை-2) கொத்தான் வாகை என்றும், எழுது எழில் மாடம் என்பதற்கு (உழிஞை - 26) சித்திரம் எழுதிய அழகிய மாளிகை என்றும் பொருள் எழுதியிருப்பது எண்ணி மகிழத்தக்கதாகும்.

இவருக்கு முன் இருந்தோர் கொண்ட வேறு பாடங் களையும் உரைகளையும் இவர் குறிப்பிடுகின்றார் (வாகை - 6.

எண்வகை தானியம் (ஒழிபு - 4), மன்னனுக்கு உரிய பல வகைத்தொழில், உறுப்பு

(பாடாண் 37, வாகை 32), மூவுலகம் (வாகை - 13) ஆகியவற்றை விரித்துரைக்கின்றார்.

ஒரே துறை வேறு வேறு திணைகளில் இடம் பெற்றால் அவற்றை வேறுபடுத்திக் காட்டுகின்றார்.

"திணை தோறும் வாணாட்கோள், குடை நாட்கோள் வேறுபாடுடைய" (உழிஞை - 3) என்றும், "தும்பையின் முன்தோக் குரவை பின்தேர்க் குரவை, போர்க்குச் செல்லும் தேரின்மேல். இவை (வாகைப் படலத்துள்) வென்று நின்ற தேரின் மேல்" வாகை-8) என்றும் கூறியுள்ளார்.

பல்கலைப் புலமை

பல்வேறு கலைகளைப்பற்றிய அறிவு இவ்வுரை பாசிரியருக்கு உண்டு. வடமொழிப் பயிற்சி போதிய அளவு உள்ளது.

கோழி வென்றியில் (ஒழிபு-6), "சொல்லுக்குச் சொல் வெல்லும், ஆமைக்கு ஆமை வெல்லும், தெங்குக்குத் தெங்கு வெல்லும் எனக் கோழிகளின் திறம் அறிந்து விடுதல் வித்தகர் கோழி நூல் வல்லவர்" என்று விளக்குகின்றார்.

பூழ் வென்றியில் (ஒழிபு-9), "சொல்லக் கடவ மந்திரம் பல ஆவன் தீற்றும் அரிசி ஓதும் மந்திரமும், பச்சிலை பிசைந்து தடவும்போது சொல்லும் மந்திரமும் செவியுள்ளுறுத்தும் மந்திரமும்" என்று உரைக்கின்றார்.

குதிரை வென்றியுள் (ஒழிபு-13) ஐந்து வகை கதியினையும் விளக்குகின்றார்.

6. நம்பி அகப்பொருள் விளக்கவுரை

தமிழிலக்கிய உலகில் இறையனார் அகப்பொருள் நூலுக்குப்பின், நாற்கவிராச நம்பி இயற்றிய "அகப்பொருள் விளக்கம்" சிறப்புற்று விளங்குகின்றது. தமிழ் அகப்பொருள் இலக்கணம் பயில்வோர் விரும்பிப்பயிலும் சிறந்த இலக்க நூலாக இந்நூல் விளங்குகின்றது.

நூலும் உரையும்

அகப்பொருள் விளக்கம் எழுதிய நாற்கவிராச நம்பியே தம் நூலுக்கு உரையும் இயற்றியுள்ளார். இதனை,

அகப்பொருள் விளக்கம்என்று அதற்கு ஒருநாமம்
புலப்படுத்து இருளறப் பொருள்விரித்து எழுதினன்

என்று சிறப்புப்பாயிரம் கூறுவதாலும்,

"இருளறப் பொருள் விரித்து எழுதினன்" என்பதற்கு மயக்கம் தீர உரையைப் பரப்பி எழுதினன் என்று அதன் உரை கூறுவதாலும் அறியலாம்.

சிறப்புப்பாயிரமும் அதன் உரையும் நாற்கவிராச நம்பியின் வரலாறுபற்றிக் கூறுவதைக் காண்போம்.

நம்பி என்பது இயற்பெயர் என்று பாயிரவுரை கூறுகின்றது நால்வகைக் கவிதைகளாகிய ஆசுகவி, மதுரகவி, சித்திரகள், வித்தாரகவி என்பனவற்றைப் பாடும் திறன் பெற்றிருந்ததால் "நாற்கவிராசர்" என்னும் சிறப்புப் பெற்றார். இவர் வடமொழி, தமிழ் இரண்டிலும் வல்லவர். சிறப்புப் பாயிரம்.

இருபெருங் கலைக்கும் ஒருபெருங் குரிசில்
பாற்கடற் பல்புகழ் பரப்பிய
நாற்கவி ராச நம்பி

என்று இவர் புகழைக் கூறுகின்றது.

புளிங்குடி என்னும் ஊரில் வாழ்ந்த முத்தமிழ் ஆசானாகிய "உய்யவந்தான்" என்பவரின் மைந்தர் இவர் என்பதைச் சிறப்புப் பாயிரம்,

உத்தமன் புளிங்குடி உய்யவந் தான்எனும்
முத்தமிழ் ஆசான் மைந்தன்

என்று அறிவிக்கின்றது. புளிங்குடி என்பது திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ளது.

இவர் காலம் குலசேகர பாண்டியன் (1196-1266) அரசாண்ட காலம் என்று சிறப்புப்பாயிரம் கூறுகின்றது.

இவர் சமண சமயத்தவர். சிறப்புப்பாயிரம்,

மாந்தரும் தேவரும் வாழ்த்திமுக் குடைக்கீழ்
ஏந்தெழில் அரிமான் ஏந்துபொன் அணைமிசை
மதிமூன்று களிப்ப உதய மால்வரைக்:
கதிர்ஒன்று இருந்தெனக் காண்டக இருந்து
தத்துவம் பகர்ந்தோன் சரணம் பொருந்திய உத்தமன்

என்று இவரைக் கூறுகின்றது.

உரையின் இயல்பு

உரை மிகவும் எளிமையும் தெளிவும் உடையது. இறையனார்களவியல் உரையின் சார்பு சில இடங்களில் மானப்படுகின்றது. இளம்பூரணர் உரையின் இயல்புகளை எல்லாம் இவ்வுரையிலும் காணலாம். அடக்கமும் அமைதியும் இவரது உரைநடையில் காணப்படுகின்றன. சூத்திரங்களின் பொழிப்புரைக்குப்பின் மிகச் சுருக்கமாக விளக்கமும் அருஞ் சொற்பொருளும் இலக்கண ஒப்புமையும் தருகின்றார்.

மேற்கோள் பாடல்கள்

இன்று அச்சில் உள்ள உரையில் அகப்பொருள் இலக்கணத்திற்கு இலக்கியமாகத் தஞ்சைவாணன் கோவைச் செய்யுட்கள் யாவும் காட்டப்பட்டுள்ளன. அவையேயன்றிச் சங்க

நூல்களிலிருந்து ஏற்ற பாடல்கள் தரப்படுகின்றன.

நம்பி அகப்பொருள் இலக்கணத்திற்கு இலக்கியமாக எழுதப்பட்ட நூல், தஞ்சைவாணன் கோவை. அதலின் நூலாசிரியரே உரை எழுதிய அகப்பொருள் இலக்கணத்தில் மேற்கோளாகத் தஞ்சைவாணன் ணன் கோவைப் பாடல்கள் ல்கள் இடம் பெற முடியாது. காலப்போக்கில் யாரோ ஒருவர் தஞ்சைவாணன் கோவைப் பாடல்களை மேற்கோளாக அமைத்திருக்க வேண்டும்.

திருக்கோவையார், திருவாரூர்க் கோவை ஆகியவற்றி லிருந்தும் மேற்கோள் தரப்படுகின்றன. இவையும் பின்னரே சேர்க்கப்பட்டிருக்க வேண்டும்.

இதன் உரையில், "இவற்றுள் சான்றோர் செய்யுள் இல்லாத வற்றிற்குச் சூத்திரம் தன்னையே இலக்கியமாகக் கொள்க" (சூத்-146) என்று குறிப்பிடப்படுகிறது. ஆனால், பெரும்பாலும் மேற்கோள் எல்லாவிடங்களிலும் தரப்பட்டே உள்ளன.

"நடுங்க நாட்டத்திற்குச் சான்றோர் செய்யுள் இல்லை" என்று உரை (சூத்-139) கூறிய போதிலும்,"பால்போல் மொழிவஞ்சி" என்ற தஞ்சைவாணன் கோவைப் பாடல் (63) மேற்கோள் காட்டப்பட்டுள்ளது.

இவற்றை எல்லாம் நோக்கும்போது தஞ்சைவாணன் கோவைப் பாடல்கள் பிற்காலத்தில்தான் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வரவேண்டியுள்ளது.

1878-ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் வ.ச. வைத்தியலிங்கப் பிள்ளை அகப்பொருள் விளக்கத்திற்கு ஓர் உரை இயற்றி மேற்கோள் பாடல்களைத் தஞ்சைவாணன் கோவையிலிருந்து தந்தார். இந்தப் புது உரைக்குப்பின், பழையவுரையிலும் அக்கோவைப் பாடல்கள் சேர்க்கப்பட்டிருக்கலாம்.

சுன்னாகம் அ. குமார சுவாமிப் பிள்ளை திருக்கோண மலை த. கனகசுந்தரம் பிள்ளை அகப்பொருள் விளக்கத்திற்கு உரை கண்டுள்ளனர்.

சொற் பொருள் விளக்கம்

சில சொற்களுக்கு நாற்கவிராசநம்பி கூறும் பொருள் கீழே தரப்படுகின்றன:

"நூல் என்ற சொற்குப் பொருள் உரைக்குங்கால், தந்திரம் என்னும் வடமொழியை நூல் என்று வழங்குவது தமிழ் வழக்கு எனக்கொள்க" (ஐ)

"உரன் எனினும் அறிவு எனினும் ஒக்கும். பெருமை என்பது பழியும் பாவமும் அஞ்சுதல். அறிவு என்பது தக்கது அறிதல். அச்சம் என்பது காணாதது ஒன்று கண்டாற்பெண்டிரிடத்து நிகழ்வது. நாணம் என்பது பெண்டிர்க்கு இயல்பாகிய குணம். மடம் என்பது பேதைமை எனக்கொள்க (247)".

"அல்ல குறி என்பது குறியல்ல என்றவாறு. அதனை முன்றில்போலக் கொள்க (159)".

"கோவலன் என்பது கோபாலன் என்னும் வடமொழித் திரிபால், ஆப் புரத்தல் தொழில்மேல் நின்றது" (247).

7. தமிழ்நெறி விளக்கவுரை

தமிழ்நெறி விளக்கம் என்பது, முன்னும் பின்னும் சிதைந்து அரைகுறையாகக் கிடைத்த நூல். இதனைப் பதிப்பித்தவர் டாக்டர் உவே. சாமிநாத ஐயர். அவர் பதிப்பித்த நூலில் அகப் பொருளைப்பற்றிக் கூறும் 25 சூத்திரங்களே உள்ளன.

பொருளியல் என்ற பகுதியின் முதற் சூத்திர உரையில், "நிறுத்த முறையான் பொருளிலக்கணம் ஆமாறு உணர்த்தல் நுதலிற்று" என்று இருப்பதால் இதற்கு முன் எழுத்தும் சொல்லும் கூறும் பகுதியும், பொருளியலில் புறப் பொருளும், அதற்குப்பின் யாப்பு அணி பற்றிய பகுதியும் இருந்திருக்கலாம்.

நூலாசிரியர் பெயரும் உரையாசிரியர் பெயரும் தெரிய வில்லை. நூலாசிரியரே உரை எழுதியிருக்கலாம் என்பதற்குச் சான்று உண்டு. உரையின் எப்பகுதியிலும், என்றார் நூலாசிரியர் "என்றோ, நூலாசிரியர் கருத்து இது என்றோ கூறாமல் உரை செல்லுகின்றது. களவியற் காரிகையின் உரையாசிரியர், "தமிழ் நெறி விளக்கத்தில் பொருளியலுடையாரும் களவொழுக்கம் ஆறு வகைப்படும் என்றார்" என்று இந்நூலை மேற்கோள் காட்டுகின்றார். "முக்கண் கூட்டம்" (21) என்ற சூத்திரத்தின் மூலமும் உரையும் இந்நூலில் உள்ளபடியே அவரால் மேற்கோள் காட்டப்படுகின்றன. ஆதலின் "தமிழ் நெறி விளக்கம் இயற்றிய ஆசிரியரே உரையும் இயற்றி இருக்கலாம்.

இந்நூலின் உரையில் மேற்கோளாகக் காட்டப் பெறும் பாடல்களில் சில, களவியற் காரிகை உரையில் உள்ளன. பரிமேலழகர் காமத்துப்பாலில் குறிப்பிடும் ஆயிடைப் பிரிவு. சேயிடைப் பிரிவு ஆகிய இரண்டும் இந்நூலில் கூறப்பட்டுள்ளன. எனவே, தமிழ்நெறி விளக்கம் களவியற் காரிகை ஆசிரியர்க்கும் பரிமேலழகர்க்கும் முன்னேரே தோன்றியது என்னலாம்.

உரைமேற்கோளாக வரும் பாடல்களில் (6,32, 52 ஆம் பாடல்கள்) "வழுத்தூர் மதிதரன்" என்பவரைப் பற்றிய குறிப்புக்கள் கிடைக்கின்றன.

தூய்மை சான்ற தொல்குடித் தோன்றிய
வாய்மை நாவின் மதிதரன் (மேற் பாடல்-33)

மண்மிசை விளங்கிய வழுத்தூர் மதிதரன்
நுண்ணியற் பனுவல் நுழைபொருள் நுனித்த
வாய்மொழி அமிர்தம் (மேற் பாடல்-62)

என்ற பகுதிகள் குறிப்பிடத்தக்கவை.

மதிதரன் என்பவர், நூல் இயற்றியவர்க்குக் கல்வி புகட்டிய ஆசிரியராக இருக்கலாம். மதிதரன் என்பது சிவபெருமான் திரு நாமங்களில் ஒன்று. ஆதலின் ஆசிரியரும் மாணவரும் சைவசமயத் தவராக இருக்கக்கூடும்.

வழுத்தூர் என்பது தஞ்சாவூர் மாவட்டத்தில் ஐயம் பேட்டைக்கு வடக்கே குடமுருட்டியாற்றின் தென்கரையில் உள்ளது.

உரையின் இயல்பு

உரை மிகவும் சுருக்கமாய் எளிமையாய் உள்ளது. மகுணன் (மகிழ்த) குறுஞ்சி (குறிஞ்சிர போன்ற மரூஉச் சொற்கள் இடம் பெற்றுள்ளன. இலக்கணச் செறிவோ நடையழகோ உரையில் இல்லை.

ஒருமை பன்மை மயக்கத்திற்கு மேற்கோளாகக் காட்டப் பெறும் "ஏவல் இளையர் தாய் வயிறு கரிக்கும்" என்ற அடி இவ் வுரையில் ஓர் பாடலில் இடம் பெறுகின்றது.

நிரையிர் செல்லு மோஎன நேர்ந்து

புலையன் எறிந்த பூசல் தண்ணுமை

ஏவல் இளையர் தாய்வயிறு கரிக்கும்

இன்னா அருஞ்சுரம் என்ப

என்னோ தோழி அவர்சென்ற ஆறே. (மேற். பாடல்-154)

8. களவியற் காரிகை உரை

உரையின் இயல்புகள்

களவியற் காரிகை, அகப்பொருள் உணர்த்தும் இலக்கண நூல், முன்னும் பின்னும் சிதைந்து அரைகுறையாகக் கிடைத்த தமிழ் நூல்களுள் இதுவும் ஒன்று. இதற்கு உரையும் உள்ளது. இந்த நூலின் பெயரோ, இயற்றியவர் பெயரோ, உரையாசிரியர் பெயரோ தெரியவில்லை. இந்நூலின் சில பகுதிகளை ஒன்று சேர்த்து வெளியிட்ட ஆராய்ச்சி அறிஞர் ச. வையாபுரிப் பிள்ளை, இந்நூலுக்குக் "களவியற் காரிகை" என்ற பெயரிட்டார். அவர் 1931-இல் இந்நூலையும் உரையையும் செப்பனிட்டு வெளி யிட்டார். சிதைந்து போனவை போகக் கிடைத்த துண்டுதுணுக்கு களை எல்லாம் ஒன்று சேர்த்து இயையு நோக்கி அமைத்து நூலாக்கி, பொருத்தமான பெயரும் இட்டு வெளிப்படுத்திய அறிஞரின் முயற்சியையும் திறனையும் எவ்வளவு பாராட்டி னாலும் தகும்.

பெயர்ப் பொருத்தம்: "களவியற் காரிகை" "இறையனார் களவியலைத் தழுவி எழுதப்பட்ட நூல். இறையனார் களவியலில் நூற்பாவால் ஆகிய அறுபது சூத்திரங்கள் இருக்கின்றன. அந் நூலைத் தழுவி எழுதப்பட்ட களவியற் காரிகையில் கட்டளைக் கலித்துறையால் ஆன அறுபது செய்யுள்கள் உள்ளன. நூற்பாவால் அமைந்த யாப்பருங்கலம் என்னும் நூலை ஒட்டி, கட்டளைக் கலித்துறையால் எழுதப்பட்ட யாப்பிலக்கண நூல் யாப்பருங்கலக் காரிகை என்று பெயர் பெற்றதுபோல, நூற்பாவால் ஆகிய களவியலைத் தழுவிக் கட்டளைக் கலித்துறையால் ஆன நூல் களவியற்காரிகை என்று பெயர் பெற்றது.

களவியற் காரிகையின் தொடக்கத்தில் பத்துச் செய்யுளும் இறுதியில் ஆறு செய்யுளும் மறைந்துபோயின. இப்போது ஐஐ முதல் 54 வரையில் உள்ள கட்டளைக்கலித்துறைகள் அந்தாதியாக அமைந்துள்ளன.

இதன் உரையாசிரியர் யார் என்று தெரியவில்லை. உரையில் மிகுதியான

விளக்கங்கள் இன்மையால் உரையாசிரியரைப்பற்றி அறிய வாய்ப்பு இல்லை. உரையின் தொடக்கத்தில் உள்ள ஆசிரிய விருத்தம், நெல்வேலி வேய்முத்தரை வணங்குவதாய் அமைந் துள்ளது. ஆதலின் இவரைத் திருநெல்வேலியில் வாழ்ந்த சைவர் என்னலாம். காட்சி என்ற துறையை விளக்கும்போது இவ்வுரையாசிரியர் இறையனார் களவியல் உரையிலிருந்து பல வரிகளை அப்படியே எடுத்து எழுதி இருக்கின்றார். எனவே, இவர் அவ்வுரையை விரும்பிப்பயின்று அதில் ஆழ்ந்தவர் என்னலாம். திருவரங்கத்துத் திருமாலைப் போற்றும் கோயிலந்தாதியிலிருந்து சில பாடல்களை மேற்கோள்தந்து தம் சமயப் பொதுநோக்கைக் காட்டுகின்றார்.

காலம்: இவ்வுரையாசிரியர் கண்டனலங்காரம் என்னும் நூலிலிருந்து மேற்கோள் தருகின்றார். கண்டன் அலங்காரம் சோழ மன்னனை, "பொன்னி நாட்டுமன்னன் கண்டன் பூபால தீபன்" என்று புகழ்கின்றது. இரண்டாம் இராசராசனுக்குக் கண்டன் என்றபெயர் உண்டு. இம் மன்னன் 1146 முதல் 1163 வரை அரசாண்டவன்.

இவ்வுரையாசிரியர் பல் சந்த மாலை என்ற நூலிலிருந்து மேற்கோள் தருகின்றார். இந் நூலில் வின்னன் என்ற முகம் மதிய சிற்றரசனைப் பற்றிய குறிப்புகள் வருகின்றன. முகம்மதியர் தென்னாட்டின்மீது படையெடுத்து மதுரையைக் கைப்பற்றியது 1310 முதல் 1325க்கு இடைப்பட்ட காலத்திலாகும். முகம்மதிய மரபில் வந்த வின்னன் பாண்டிய நாட்டுக் கீழ்க்கடற்கரையில் இருக்கும் வகுதாபுரி என்னும் காயல்பட்டினத்தில் வசித்தான் என்றும் பல் சந்தமாலை அவனைப்பற்றிய நூல் என்றும் கூறுவர். - வின்னன் வெளிநாட்டவன் ஆதலின் யவனராசன் என்று குறிப் பிடப்படுகின்றான். இவன் அஞ்சு வன்னத்தவர் குலத்தைச் சேர்ந்தவன் கலிபாமரபில் தோன்றியவன். ஆகையால் கலுபதி என்றும் அழைக்கப்பட்டான். இவனது காலம் 1325க்குப் பின்னர் ஆகும்.

எனவே, உரையாசிரியர் பதினான்காம் நூற்றாண்டின் பி பகுதியில் வாழ்ந்தவர் என்னலாம்.

இவர், தமிழ்நெறி விளக்கத்தையும் மேற்கோள் காட்டி யுள்ளார்.

மேற்கோள் நூல்கள்: இவ்வுரையாசிரியர் முப்பதுக்கு மேந் பட்ட நூல்களைத் தம் உரையில் காட்டியுள்ளார். பெரும்பாலான நூல்கள் இன்று கிடைக்காதவை. அகத்திணை, அரையர் கோலை, இன்னிசைமாலை, ஐந்திணை, கண்டனலங்காரம், கிளவித் தெளிவு. சிளவி மாலை, கிளவி விளக்கம், கோயிலந்தாதி. சிறப்பட்டகம், திணைமொழி, தில்லையந்தாதி, நரையூரந்தாதி, பல்சந்த மாலை, மழவை எழுபது, வங்கர் கோவை என்பன மறைந்துபோன தமிழ் நூல்கள். இவ்வுரையால் இந்நூல்களிலிருந்து பல செய்யுள்கள் கிடைக்கின்றன. தமிழ் நூல்களின் பெரும் பரப்புத் தெரிகின்றது. உரையாசிரியரின் நூலறிவு வெளிப்படுகின்றது.

பல இடங்களில் களவியலுரையைப் பெயர்த்து எழுதிச் செல்கின்றார்.

இல்லாத பாடல்கள்

"பையுள் மாலை" என்ற செய்யுளை மேற்கோள் காட்டி, அது நெடுந்தொகையுள் உள்ளதாய்க் குறிப்பிடுகின்றார்.

"ஆரணங்குற்றனை" என்ற பாடல் குறுந்தொகையுள் இருப்பு தாய்க் கூறி, மேற்கோள் தருகின்றார். இவை இரண்டும் இன்றைய பதிப்புக்களில் அத்தொகை நூல்களில் இல்லை.

9. நேமிநாத உரை

நேமிநாதம் 12 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில், திரி புவனதேவன் என்னும் மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் (1178-1219) இயற்றப்பட்ட இலக்கண நூல். இது நன்னூலுக்கு முற் பட்டது. வெண்பாக்களால் ஆனது எழுத்து சொல் ஆகிய இரண்டின் இலக்கணத்தைச் சுருக்கமாக உரைப்பது சின்னூல் என்னும் வேறு பெயரை உடையது.

இதில் பாயிரம் 1, அவையடக்கம் 1, எழுத்ததிகாரம் 24, சொல்லதிகாரம் 71 ஆக 97 வெண்பாக்கள் அடங்கியுள்ளன.

இதனை இயற்றியவர் குணவீர பண்டிதர் என்னும் சமணப் புலவர். நேமிநாதர் என்னும் 22-ஆம் சைன தீர்த்தாங்கரர் பெயரால் இந்நூலை இயற்றி, இந் நூலுக்கு நேமிநாதம் என்று பயரிட்டார்.

உரையாசிரியர்

இந்நூலுக்குப் பழைய உரை உள்ளது. இவ்வுரையாசிரியரின் ஊர், பெயர் எதுவும் தெரியவில்லை. ஆனால், இவர் சமண சமயத்தவர் என்பதற்கு உரையில் சில சான்றுகள் உள்ளன. அருகன் (10) முக்குடை பல்லவத்தின் சந்தம் (16) ஆகிய சொற்களை எடுத்துக்காட்டியுள்ளார்.

காலம்: இவர், எண் ஓகாரத்திற்கு (79), 'முத்தன் என்கோ மூர்த்தி என்கோ" என்னும் பாடலைக் காட்டி அதன் கீழ், "என்றார் அவிரோதி யாழ்வார்" என்று கூறுகின்றார். இப்பாடல் அவிரோதியாழ்வார் (அவிரோத நாதர்) என்னும் சமணப் புலவர் இயற்றிய திருநூற்றந்தாதி என்னும் நூலில் (31) உள்ளது. அவிரோதியாழ்வார் காலம் 14 ஆம் நூற்றாண்டு ஆகும்.. (கலைக்களஞ்சியம் 1, பக்-236.) ஆதலின் நேமிநாதவுரையாசிரியர் 14-ஆம் நூற்றாண்டிலோ அதற்குப் பின்னரோ வாழ்ந்தவர் என்னலாம்.

உரையின் இயல்பு

இவ்வுரை, சூத்திரங்களுக்குத் தெளிவான பொழிப்புரை யுடன் அமைந்து, தக்க எடுத்துக் காட்டுகளுடன் வினாவிடைகள் பொருந்தி,தேவையான இடங்களில் விரிவுரையோடு விளங்குகின்றது. இவ்வுரையில் நீளமான வாக்கியத்தையோ கடினமான ஆராய்ச்சியையோ காண இயலாது. எளிமையான சின்னஞ்சிறு வாக்கியங்கள் நூல் முழுதும் அமைந்து இன்ப மூட்டுகின்றன. சிறிதளவு தமிழ்ப் பயிற்சியுடையவரும், எளிமையாக இலக்கணம் கற்க விரும்புவோரும் இதனைப் படித்துப் பயன் பெறலாம். பிறர் கருத்தை மறுப்பதோ, முரண்பட்ட கருத்தை எடுத்துக் காட்டுவதோ இவ்வுரையில் இல்லை

இவ்வுரையாசிரியர் சமணராயினும், சமயக்காழ்ப்புச் சிறிதும் இன்றி, பிற சமய நூல்களையும் கொள்கைகளையும் ஆங்காங்கே எடுத்துக்காட்டுகின்றார்.

தொல்காப்பியத்திலிருந்து தொடர்ச்சியாய்ப் பல சூத்திரங்களை (6, 54 வெண்பாக்களின் கீழ்) எடுத்துத் தந்து, "இவைகளை விரித்துக் கொள்க" என்று எழுதிச் செல்கின்றார்.

திருவள்ளுவ மாலையில் (21) உள்ள,

உப்பக்கம் நோக்கி உபகேசி தோள்மணந்தான்

என்ற செய்யுளை மேற்கோள் காட்டி (30), அதன்கீழ், உபே ஆவாள் நப்பின்னைப் பிராட்டியார்" என்று எழுதும் விளக்கம், புதிய ஒளி தருகின்றது. இவ் விளக்கத்தால் அப்பாடல் தெளிவு பெறுகின்றது.

கீழ்வரும் உரைப்பகுதிகள், இவ்வுரையாசிரியரின் எளிய இனிய தெளிவான நடைக்குச் சான்று பகரவல்லவை:

"அரைக் கழஞ்சு என்புழி முன்மொழியிற் பொருள் நின்றது வேங்கைப் பூ என்புழிப் பின்மொழியிற் பொருள் நின்றது தூணிப் பதக்கு என்புழி இரு மொழியிலும் பொருள் நின்றது. பொற்றொடி என்புழி இரு மொழியினும் பொருள் இன்றி இவற்றை உடையாள் என்னும் வேறொரு மொழியிலே பொருள் நின்றது" (!).

"பவளக் கோட்டு நீல யானை சாதவாகனன் கோயி லுள்ளும் இல்லை. அம்மிப் பிந்தும் துன்னூசிக் குடரும் சக்கரவர்த்திக் கோயிலுள்ளும் இல்லை!" (36)

உவமைகள்:

"வல்லினம் கல்மேல் விரல் இட்டாற்போலவும், மெல்லினம் மணல் மேல் விரல் இட்டாற்போலவும், இடையினம் மண்மேல் விரல் இட்டாற்போலவும் கொளக்" (2).

""வாளும் கூடும் இருப்பின் வாளைக் கொடுவா என்னும் அத்துணை அல்லது கூட்டைக் கொடுவா என்பது இல்லை ஆதலின் இங்ஙனம் சொல்லப்பட்டது" (8).

10. பாட்டியல் உரைகள்

தொல்காப்பியர் காலத்தில் எழுத்து, சொல், பொருள் என மூன்று பகுதிகளாகத் தமிழ் மொழியின் இலக்கணம் ஆராயப்பட்டது. காலப்போக்கில் பொருள்இலக்கணம் பல வாறாகப் பிரிந்து வளர்ச்சி பெற்றது. அகம், புறம், யாப்பு, அணி என்று பிரிந்து வளர்ந்தன. பன்னிரண்டாம் நூற்றாண்டிற்குப்பின் "பாட்டியல்" என்று ஓர் இலக்கணம் பிரிந்து வளர்ந்தது.

பாட்டியல் என்பது ஒருவகை யாப்பிலக்கண ஆராய்ச்சியே யாகும். பாட்டியல் கூறும் செய்திகளை இரு பெரும் பிரிவுகளாகப் பகுக்கலாம். ஒன்று, பாட்டில் அமைந்திருக்க வேண்டிய பொருத்தங்கள் மற்றொன்று, இலக்கிய வகைகளைப் கூறும் இலக்கணங்கள். பற்றிக்

தமிழில் கணக்கற்ற பாட்டியல் நூல்கள் தோன்றின. அவற்றுள் பன்னிரு பாட்டியல், வெண்பாப் பாட்டியல், நவநீதப் பாட்டியல், சிதம்பரப் பாட்டியல், வரையறுத்த பாட்டியல் என்ற ஐந்துமே இன்று பயிலப்பட்டு வருகின்றன. பாட்டியல் உரைகளிலும், ஏனைய இலக்கண நூல்

உரைகளிலும் பல பாட்டியல் நூல்கள் குறிப்பிடப்படுகின்றன. சூத்திரங்கள் மேற்கோளாகக் காட்டப்படுகின்றன.

அகத்தியர் பாட்டியல், பண்டாரப் பாட்டியல், வருணப் பாட்டியல், பாட்டியல் மரபு, தத்தாத்திரேயப் பாட்டியல், தொல்காப்பியர் பாட்டியல், பரணர் பாட்டியல், கல்லாடர் பாட்டியல் என்பன போன்ற பல பாட்டியல் நூல்களின் பெயரும் குத்திரங்களும் உரையாசிரியர்களால் கூறப்படுகின்றன.

இலக்கண விளக்கம் நூலில் பொருளதிகாரத்தின் ஐந்தாம் இயலாகப் பாட்டியல் உள்ளது. அதனை இயற்றியவர் இலக்கண விளக்கத்தின் ஆசிரியர் அல்லர். அந்நூலாசிரியரின் மகனே அதனை இயற்றியுள்ளார். அதனையும் தனிப் பாட்டியல் நூலாகவே கருத வேண்டும். அதற்கு "இலக்கண விளக்கப் பாட்டியல்" என்று பெயரிடலாம்.

பாட்டியல் உரைகள்

பாட்டியல் நூல்களுள் பன்னிரு பாட்டியலுக்குப் பழைய வுரை இல்லை. இலக்கண விளக்கப் பாட்டியலுக்கு நூலின் ஆசிரியரே உரை இயற்றியுள்ளார். ஏனையவற்றிற்குப் பழைய வுரைகள் உள்ளன. அவற்றை இயற்றியவர் வரலாறு எதுவும் தெரியவில்லை.

பாட்டியல் நூல்களுள் பன்னிரு பாட்டியலுக்குப் பழைய வுரை இல்லை. இலக்கண விளக்கப் பாட்டியலுக்கு நூலின் ஆசிரியரே உரை இயற்றியுள்ளார். ஏனையவற்றிற்குப் பழைய வுரைகள் உள்ளன. அவற்றை இயற்றியவர் வரலாறு எதுவும் தெரியவில்லை.

பாட்டியல் நூல்களுள் காலத்தால் முற்பட்டது பன்னிரு பாட்டியலாகும். இதற்கு கா. ரா. கோவிந்தராச முதலியார் விளக்கவுரை எழுதி, முன்னுரையில் நூலைப் பற்றி விரிவாக ஆராய்ந்துள்ளார்.

வெண்பாப் பாட்டியல்-பழையவுரை

வெண்பாப் பாட்டியலுக்கு வச்சணந்திமாலை என்ற பெயரும் உண்டு. இந் நூலைச் லச் செய்வித்தவர் வச்சணந்தித் தேவர். இதற்குப் பழையவுரை உள்ளது.

செய்யுளியல் உரையில் (45) இவ்வுரையாசிரியர், "கந்த புராணம், கூர்மபுராணம் என்பன பாடப்படும் பொருள்பற்றி வந்தன" என்கின்றார். ஆதலின் இவர் அவ்விரு நூலாசிரியர் களுக்கும் பிற்பட்டவர் என்னலாம்.

உரையில் தெளிவும் எளிமையும் உண்டு. தேவையான அளவு சுவையான பாடல்களை மேற்கோள் தருகின்றார். இவ் வுரையாசிரியர். செய்யுளியல் உரையில் (செய்-3) மதுர கவிக்கு உதாரணமாக,

பூமகளும் நல்வாழ்வு பெற்றாள் புரைதீர்ந்த
நாமகளும் பல்கலையும் நண்ணினாள்-தோமகல்சீர்
வையம் புகழ்களந்தை வச்சணந்தி மாமுனிகள்
செய்ய பதகமலஞ் சேர்ந்து

என்ற வெண்பாவைக் காட்டுகின்றார்.

பாயிரவுரை மிகவிரிவாக உள்ளது. நூலை இயற்றியவர் குணவீரபண்டிதர் என்றும், இந்நூல் வச்சணந்தித் தேவன் செய்வித்ததால் வச்சணந்திமாலை என்று பெயர் பெற்றது என்றும், இந்நூல் திரிபுவன தேவன் என்னும் மன்னன் காலத்தில் இயற்றப்பட்டது என்றும் உரையாசிரியர் கூறுகின்றார்.

கற்பிக்கப்படும் நன்மாணாக்கர் இயல்புகளுக்கு இவர் சில புதிய எடுத்துக்காட்டுகள் தருகின்றார். எந்நிறத்தையும் ஏற்கும் வெண்ணிறம், கூட்டமாய்த் தம்மைக் காத்துக்கொள்ளும் யானை, ஒலியை உற்றுக்கேட்டு உணரும் ஆனேறு ஆகியவற்றை நன்மாணாக்கர்க்கு உவமை கூறுகின்றார். நெய்யரியை நன்மாணாக்கர்களுக்கு உவமை கூறித் திறம்பட விளக்குகின்றார்.

நல்லவை அகத்திட்டு நவைபுறத் திடுவது
நெய்யரி மாண்பென நினைத்தல் வேண்டும்

என்பது, இவர் தரும் புதிய விளக்கம்.

இவ்வுரையின் எளிமைக்கு ஓர் உதாரணம் காண்போம்:

ஆரொருவன் பாக்களை ஆங்கொருவ னுக்களிப்போன்
சோரகவி சார்ந்தொலியிற் சொல்லுமவன்-சீரிலாப்
பிள்ளைக் கவிசிறந்த பின்மொழிக்காம் புன்மொழிக்காம்
வெள்ளைக் கவிஇவனின் வேறு. -செய்யுளியல்-48

உரை

ஒருவன் பாட்டை மற்றொருவனுக்குக் கொடுப்போன் கள்ளக் கவியாம் ஒருவன் கவி இசையில் வேறொரு செய்யுள் பூணர்ப்போன் சார்த்துக் கவியாம் தனக்கென ஒன்றின்றி முன்னோர் மொழிந்த சொன்னடை பொருள் நடை கண்டு கவிபாடுவோன் பிள்ளைக் கவியாம் புன் மொழிகளால் ஒன்று கவிபாடுவோன் வெள்ளைக் கவியாம்.

நவநீதப்பாட்டியல்

நவநீதன் என்பவர் இயற்றிய பாட்டியல் நவநீதப் பாட்டியல் எனப்பட்டது. இந்நூலின் இறுதிப்பாடல் ஆக்கியோனைப்பற்றிச் இல செய்திகளைக் கூறுகின்றது. "ஈட்டிய எண்ணெண்" என்று தொடங்கும் அப் பாடல் (102) நூலாசிரியரை, நாட்டிய வேதத்தவன் "நவ நாட்டு நவநீதன்" என்றும், "குறுமுனியாதிக் கலைஞர் கண்ட பாட்டியல் ஆனவை எல்லாம் தொகுத்தான்" என்றும் கூறுகின்றது.

இந்நூலின் முதற் செய்யுளில், "கமலக் கண்ணன் பார் கோண்ட் பாதத்தை ஏத்திப் பகருவன் பாட்டியலை" என்று இவர் கூறுவதால் இவரை வைணவர் என்று கருதலாம். நவநீதப் பாட்டியல், பதின்மூன்றாம் நூற்றாண்டில் தோன்றிய வெண்பாப் பாட்டியலுக்குப்பின் தோன்றியது என்பர்.

இந்நூலுக்குப் பழைய உரை ஒன்றும் உள்ளது. நூலினையும் உரையினையும் நன்கு ஆராய்ந்து வெளியிட்ட ச. வையாபுரிப் பிள்ளை இந் நூலின் உரைமிகப் பழையது என்றும், இயற்றியவர் யார் என்று தெரியவில்லை என்றும் கூறுகின்றார். பழையவுரை நூலின் கருத்தை அறியப் பெரிதும் உதவுகின்றது.

நவநீதப் பாட்டியலுக்கு மு. சண்முகம் பிள்ளை புதிய உரை இயற்றியுள்ளார்.

சிதம்பரப் பாட்டியல்

சிதம்பரப் பாட்டியலை இயற்றியவர் பதினாறாம் நூற்றாண்டில் வாழ்ந்த பரஞ்சோதியார். இதற்குப் பழைய உரை உள்ளது. இவ்வுரை நூல் முழுமைக்கும் இல்லை. தனிநிலைச் செய்யுள் இலக்கணம் கூறும் உறுப்பியல், செய்யுளியல், ஒழிபியல் ஆகியவற்றிற்கு மட்டுமே உள்ளது. இவ்வுரை யாப்பருங்கல விருத்தி, இலக்கண விளக்கச் செய்யுள் உரை ஆகியவற்றைப் பின் பற்றிச் செல்லுகின்றது. அவ்விரு நூல்களுள்ளும் காட்டிய உதாரணப் பாடல்களை இவ்வுரையும் காட்டுகின்றது.

வரையறுத்த பாட்டியல்

வரையறுத்த பாட்டியல் என்பது பத்துப் பாடல்களால் ஆன சிறு நூல் இதனை இயற்றியவர் யார் என்று தெரியவில்லை பாட்டியல் கூறும் பத்து வகைப் பொருத்தங்களுள் மங்கலப் பொருத்தத்தை மட்டும் வரையறுத்துச் சுருக்கிக் கூறுவதால் இது இப் பெயர் பெற்றது.

இச் சிறு நாலுக்குப் பழைய உரை உள்ளது. பாட்டியல் கூறும் செய்தியை விளக்கி உதாரணங்காட்டிச் செல்லுகின்றது.

இலக்கண விளக்கப் பாட்டியல்

இலக்கண விளக்கம் இயற்றிய வைத்தியநாத தேசிகரின் மைந்தராகிய தியாகராய தேசிகர் இலக்கண விளக்கம் பொருளதிகாரத்தின் பிற்சேர்க்கையாகப் பாட்டியல் என்ற பகுதியை இயற்றி நூலோடு சேர்த்தார். பாட்டியலுக்குத் தாமே உரையும் செய்தார். இப் பாட்டியல் இலக்கண விளக்கத்துடன் சேர்ந்தே உள்ளது. இதனைத் தனியாகப் பாட்டியல் நூலாகக் கருதலாம் இலக்கண விளக்கப் பாட்டியல் என்று புதிய பெயரையும் தரலாம். இப்பாட்டியலின் பதிகம்,

ஐந்திய லும்தன் புந்திசான் றாகத்
தந்தைமுன் உரைத்த நூல்முடிபு எய்த
அந்தண் ஆரூர்ச் சந்திர மௌலி
அருள்உள் கொண்டு மருள்மனம் நீங்கி,
பவம்கொள் பாட்டியல் இலங்க உரைத்தனன்
வாய்மைதிரு தியாக ராய தேசிகனே

என்று கூறுகின்றது.

இப் பாட்டியலில் தொல்காப்பிய மரபியல், செய்யுளியல் (நூல் பற்றிய கருத்து), பொதுப்பாயிரச் செய்தி, பாட்டில் கூறும் செய்தி யாவும் திரட்டித் தரப்பட்டுள்ளன.

13.சுப்பிரமணிய தீட்சிதர் - பிரயோக விவேகம் உரை

பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் பாண்டிய நாட்டில் உள்ள ஆழ்வார் திருநகரியில் தோன்றிய சுப்பிரமணிய தீட்சிதர் பிரயோகவிவேகம் என்ற இலக்கண நூலையும் உரையையும் இயற்றினார். இந்நூல் முழுக்க முழுக்க வடமொழி இலக்கணத்தைப் பின்பற்றியது.

நூலின் தொடக்கத்தில் "பாணினி பதஞ்சலி ஆகிய வடமொழி வல்லுநரின் தாள் வணங்கி நூலை இயம்புகிறேன்" என்று கூறுகின்றார். தம் நூல் அரங்கேறிய வரலாற்றினை, பேர்கொண்டு நின்றபிர யோக விவேகத்தைச் சீர்கொண்ட ராமபத்ர தீக்கிதன்தான்-நேர்கொண்டு

கேட்டான் இனிக்கண்ணாற் கேட்கும் பதஞ்சலிதான்

கேட்டால்என் கேளாக்கால் என்

என்ற வெண்பாவால் உணர்த்துகின்றார்.

தம் நூலுக்கு வடமொழிப் பெயரை வைத்ததற்குக் காரணம் கூறும்போது, "வடமொழிப் பிரயோக விவேகத்தினும் சொல்லிலக்கணம் அல்லது எழுத்திலக்கணம் கூறாமையின் சொற்பிரயோக விவேகம் என்றாம்" என்று உரைக்கின்றார்

தாம் இயற்றிய நூலுக்குத் தாமே பதிகமும் உரையும் செய்து . அவ்வாறு செய்தல் வடமொழி மரபு என்கிறார்.

"வடநூலார் தாமே பதிகமும் உரையும் செய்வார். இந்நாலும் வடநூலைத் தற்பவமாகச் செய்தலான், யாமும் பதிகமும் உரையும் செய்து உதாரணமும் காட்டினாம்" என்று கூறுகின்றார் (காரக படலம்-3).

காரக படலத்தின் முதற் சூத்திரவுரையிலேயே, "வட மொழிக்கும் தமிழ் மொழிக்கும் இலக்கணம் ஒன்று" என்றும், "வட மொழிக்கு உரிய குறிஎல்லாம் வடமொழிக்கேயன்றித் தமிழ் மொழிக்கும் உரியன" என்றும் கூறுகின்றார்.

பழையன கழிதலும் புதியன புகுதலும்

வழுவல கால வகையி னானே

என்ற சூத்திரம் நன்னூலாருக்குப் பெருமை தருவதாகும். இதனை எடுத்துக்காட்டி இந்நூலாசிரியர், "இச்சூத்திரம் பாணினி கூறியவாறு கூறினார். அது வடமொழியிற் காட்டுதும்" என்கின்றார். (திங்மூப்படலம்-16)

நூலின் இறுதியில், "இந் நூலுள் சந்தேகம் தோன்றுவதனை மகாபாடியம், கையடம், சித்தாந்த கௌமுதி, சத்த கௌமதி, வாக்கிய பதீயம், அரிபீடிகை, தாதுவிருத்தி, பதமஞ்சரி, சத்த கௌத்துவம் கற்றவரைக் கேட்க. காசிகா விருத்தி, பிரக்கிரியா கௌமுதி என்னும் இரண்டினும் சித்தாந்தம் பிறவாது ஆதலின் அவை கற்றோரைக் கேளாது ஒழிக" என்று உரைக்கின்றார்.

இவை எல்லாம் வடமொழியில் இவர்க்குள்ள பற்றினையும் புலமையினையும் உணர்த்தும் சான்றுகளாகும்.

வேற்றுமை காட்டல்

மிகச்சில இடங்களில் வடமொழிக்கும் தமிழுக்கும் உள்ள வேற்றுமைகளைச் சுட்டுகின்றார். திங்ஙூப் படலத்தில் (6-ஆம் சூத்), "இருமைக்கு உதாரணம் வடமொழிக்கல்லது, தமிழ்மொழிக்கு இல்லை" என்று தெளிவுபடுத்துகின்றார். மேலும்,

சாற்றிய தெய்வப் புலவோர் மொழிக்கும் தமிழ்மொழிக்கும்
வேற்றுமை கூறின் திணைபால் உணர்த்தும் வினைவிகுதி
மாற்றரும் தெய்வ மொழிக்குஇல்லை பேர்க்குஎழு வாய்உருபும்
தேற்றிய லிங்கம் ஒருமூன்றும் இல்லை செழுந்தமிழ்க்கே

என்றும் கூறி இருமொழி இலக்கணத்தையும் வேறுபடுத்துகிறார் இங்குப் படலம்-15).

வடமொழித் திணிப்பு

பிரயோகவிவேகம் என்ற தலைப்பில் நூலை இயற்றிய இவர், நூலின் உட்பிரிவுகளுக்கும் வடமொழியை ஒட்டியே பெயரிட்டுள்ளார். காரக படலம், சமாச படலம், தத்தித படலம் திங்வுப்படலம் என்ற பெயர்களை அமைத்துள்ளார்.

வடசொற்களை, தமிழ்மொழியின் ஒலிமுறைக்குச் சிறிதும் ஒவ்வாத வகையில் தம் நூலில் எடுத்தாளுகின்றார். சந்தம், வாதேசம், திகந்த வினை, திங்ஙூ போன்ற சொற்களை இவர் உரையில் காணலாம்.

எளிய தமிழ்ச் சொற்களுக்கும், அவற்றோடு ஒத்த வட சொற்களைத் தந்து விளக்கம் தருகின்றார். கீழே சிலவற்றைக் காண்போம்:

"இயற்கை என்பது சகசம். செயற்கை என்பது ஆகந்துகம்" (-5).

"அலங்கார நூலார் இசை எச்சத்தைக் காகு என்பர் (திங்ஙூ-16)

"இலக்கணையாவது, பெயராக வினையாக நிற்கும் சொற்கள் தத்தம் பொருளை உணர்த்தாது, பொருளின் சம்பந்தப் பொருளையும் தாற்பரியப் பொருளையும் அறிவித்தல்" (திங்ஙூ-3)

"உரிச்சொல்லாவது பொருளும் தானும் பேதமின்ர் அபேதமாதற்குரிய சொல்... அர்த்த நாரீசுவரன் என்னும் பார்வதி பரமேசுவரன் போலப் பொருளும் சொல்லும் பேதாபேதமாய் வரும்

என்பாரும் உளர். காளிதாசனும் வாகர்த்தாவிய என்னும் சுலோகத்தால் அவ்வாறு கூறுவன்" (சமாச - 1)

சைவப்பற்றும் தமிழ்ப்புலமையும்

இவர் சைவ சமயத்தில் மிகுந்த ஈடுபாடு உடையவர். தம் உரைகளில் "மானேந்தி, பிறை சூடி, அம்பலத்தாடி" என்ற பெயர்களை உதாரணங் காட்டுகின்றார்.

தமிழறிஞர்களின் கருத்துகளை ஏற்ற இடங்களில் குறிப் பிடுகின்றார். அவற்றுள் சில பின்வருமாறு:

"சதி சத்தமியைத் தொல்காப்பியர் விளைசெய் இடம் என்பர். பரிமேலழகர் வினை நிகழ்ச்சி என்பர்" (காரசு-16).

"வஞ்சரை அஞ்சப்படும் என்னும் குறளினும், கொள்ளப் படாது மறுப்ப அறிவில்லன் கூற்றுக்களே என்னும் திருக் கோவையாரினும் பரிமேலழகரும் பேராசிரியரும் முதனிலையைப் பிரித்து எழுவாயாக்கி முடித்தலும் காண்க" (திங்மூ-2).

சந்தியக்கரம்

சந்தியக்கரம் பற்றி இவர் பின்வருமாறு கூறுகின்றார்:

"இனிச் சந்தியக்கரமாவது,

அகர இகரம் ஏகாரம் ஆகும்.

அகர உகரம் ஓகாரம் ஆகும்.

இகார உகாரம் என்னும் இவற்றோடு

ஆகாரம் ஐ ஔ ஆகலும் உரித்தே.

இவ்வுரைச் சூத்திரங்களால் ஈரெழுத்தாகிய சந்தியக்கரம் என்றும் ஓரெழுத்தாகிய ஏகாக்கரம் என்றும் அறிக" (காரசு-5)

14. ஐந்திலக்கண நூல்களும் உரைகளும்

பழம்பெரும் இலக்கண நூலாகிய தொல்காப்பியம், எழுத்து சொல் பொருள் என்று மூன்று அதிகாரங்களில் தமிழ் இலக்கணத்தை ஆராய்கின்றது. பொருளதிகாரத்தில் கூறப்பட்ட இலக்கணங்கள் பிற்காலத்தில் பலவேறு வகையாகப் பிரிந்து தனி நூல்கள் தோன்றின. பொருள் இலக்கணம், அகம் புறம் யாப்பு அணி எனத் தனித் தனியாகப் பிரிந்தது.

தொல்காப்பியர் பொருளதிகாரத்தில் கூறியுள்ள அகத் திணையியல், களவியல் கற்பியல் பொருளியல் ஆகியவை பிற் காலத்தில் அகப்பொருள் இலக்கணம் ஆயின. புறத்திணை இயல் புறப்பொருள் இலக்கணமாயிற்று. உவம இயல், அணி இலக்கண மாயிற்று. செய்யுளியல், யாப்பிலக்கணமாக வடிவம் கொண்டது. மெய்ப்பாட்டியல் வளர்ச்சியின்றி, போதிய கருத்து விளக்கமின்றி அணி நூலில் அடைக்கலம் புகுந்தது. மரபியல் மறக்கப்பட்டது. நிகண்டு நூல்கள் மரபியல் கூறும் சில செய்தியைச் சேர்த்துக்

கொண்டன. தொல்காப்பியர் கூறிய எழுத்து சொல் பொருள்

16. உவமான சங்கிரக உரை

அணி இலக்கண நூல்கள் அணி வகைகளைக் கூறி அவற்றின் இயல்புகளை விளக்கி, ஏற்ற உதாரணப் பாடல் களையும் காட்டி விளக்குகின்றன. பாட்டியல் நூல்கள், பிள்ளைத் தமிழ் நூல்களில் இன்ன இன்ன பொருள்களைக் குழந்தைகளுக்கு உவமை கூறவேண்டும் என்று விதிக்கின்றன. உவமான சங்கிரக நூல்கள் பெண்ணைக் கேசாதி பாதமாக வருணிக்கும்போது, எந்த எந்தப் பொருளை உவமையாகக் கூற வேண்டும் என்று பட்டியல் தருகின்றன.

தமிழில் மூன்று உவமான சங்கிரக நூல்கள் உள்ளன. அவற்றுள் ஒன்று ஆறுமுக நாவலரால் இரத்தினச் சுருக்கத்துடன் சேர்த்து வெளியிடப்பட்டது. மற்றொன்று கொங்கு நாட்டுப் புலவர் இயற்றிய ஆசிரிய விருத்தத்தால் ஆன நூல். மூன்றாவது நூல் செந்தமிழ் பதினான்காம் தொகுதியுள் (பக்கம் 161-165 வெளி யிடப்பட்டுள்ளது.

இம் மூன்று நூல்களுள் ஆறுமுக நாவலர் வெளியிட்ட உவமான சங்கிரகத்தை இயற்றியவர் ஸ்ரீவில்லிபுத்தூர்த் திரு வேங்கடையர் என்று குறிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு குறித்திருப்பது தவறு என்றும், அதனை இயற்றியவர், திருமேனி குருகை இரத்தின கவிராயர் என்பவரே என்றும் தக்க சான்றுகளுடன் நிறுவியுள்ளனர். செந்தமிழ் பதினான்காம் தொகுதியுள் (பக். 16) சடகோப ராமாநுசாசார்யன் தமக்குக் கிடைத்த உவமான சங்கிரகப் பழைய ஏட்டில் பதினேழாம் செய்யுளாகக் கீழ்வரும் பாடல்காணப்பட்டதாகக் குறிப்பிடு கின்றார்:

பார்புகழ் குருகை யூரன் பைங்குவ ளைத்தார் மார்பன் நாரியர் வேளாம் ரத்ந நாற்கவிச் சிங்கம் எங்கோன் வார்முலை மடவார் தேக வன்னனை அனைத்தும் தேர்ந்து சீர்புனை தமிழால் மாறன் திருவடி தொழுது செய்தான்.

இப்பாடல் "திருமேனி குருகை இரத்தின கவிராயர்" உவமான சங்கிரகம் செய்தார் என்று குறிப்பிடுகின்றது.

இந்த உவமான சங்கிரகத்தினுள் உள்ள பதினாறு வெண் பாக்கள் அந்தாதியாக உள்ளன. முதல் வெண்பா காப்புச் செய்யுள் ஏனைய பதினைந்து வெண்பாக்கள் கேசாதி பாத வருணனைக்குரிய உவமைப் பொருள்களைக் கூறுகின்றன.

இந்நூலுக்குக் காஞ்சிபுரம் இராம யோகிகள் சிறந்த உரை இயற்றியுள்ளார். இவ்வுரை 1914ஆம் ஆண்டில் வெளிவந்துள்ளது. வெண்பாவிற்குப் பதவுரை இயற்றிய பின்னர் விசேடவுரையும் தருகின்றது.

இந்நாலுடன் இவர் இரத்தினச் சுருக்கம் என்ற நூலுக்கும் உரை எழுதிச் சேர்த்துள்ளார்.

17. அணிநூல் உரைகள்

““தொளிவிளக்கு“ என்ற நூல் வடமொழியில் உள்ள ““தவநயாலோக“ என்னும் நூலின் மொழிபெயர்ப்பாகும். அந்நூல் வடமொழியுல் அலங்கார இலக்கண நூல்களுள் சிறந்ததாகப் போற்றப்படுகின்றது. அது ஒன்பதாம் நூற்றாண்டில், கா'மீரத்தில், அவந்தி வாமன் அவையில் இருந்த புலவர்களுள் ஒருவரான ஆனந்த வர்த்தனரால் இயற்றப்பெற்றது.

“த்வந்யாலோக“ என்ற வடமொழி அணியிலக்கண நூலைத் தமிழில் “தொனி விளக்கு“ என்ற பெயரில் பின்னங்குடி சா சுப்பிரமணிய சாஸ்திரி நூற்பாவால் மொழி பெயர்த்து (1944), உரையும் தாமே இயற்றி வெளியிட்டார். இலக்கணத்திற்குத் தேவையான மேற்கோள் பாடல்களை வடமொழியிலிருந்து மொழிபெயர்த்துக் காட்டியுள்ளார்.

குவலயானந்தம் என்னும் அணி நூலை மாணிக்கவாசகர் என்பவர் (19 ஆம் நூற்) இயற்றியுள்ளார்.

மு.இராகவ ஐயங்காரின் தந்தையார் முத்துச்சாமி ஐயங்கார், சந்திரலோகத்தை வடமொழியிலிருந்து ஆசிரியப் பாவால் மொழிபெயர்த்துள்ளார். இது உரையுடன் மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடாக வந்துள்ளது.

நன்னூல் சங்கர நமச்சிவாயர் உரை

நன்னூலுக்கு, மயிலைநாதருக்குப்பின் உரைஎழுதிப் பெரும்புகழ் பெற்றவர், சங்கர நமச்சிவாயர். இவர் பதினேழாம் நூற்றாண்டில் திருநெல்வேலியில் தடிவீரையன் கோயில் தெருவில் வாழ்ந்தவர் சைவ வேளாளர் குடியில் தோன்றியவர். அக்காலத்தில் இவரைச் சங்கர நமச்சிவாய பிள்ளை என்றும், சங்கர நமச்சிவாயப் புலவர் என்றும் வழங்கி வந்தனர்.

இவரது ஆசிரியர், நெல்லை ஈசான மடத்திலிருந்த இலக்கணக் கொத்தின் ஆசிரியராகிய சாமிநாத தேசிகர். தொல்காப்பியம் முதலிய இலக்கணங்களையும், சங்க இலக்கியம், வடமொழி நூல்கள் ஆகியவற்றையும் நன்கு பயின்றார் இவர். சைவ சித்தாந்தங்களையும் திருமுறைகளையும் வைணவ இலக்கியங்களையும் கற்றுத் தேர்ந்தார். இவரைச் சிறப்புப் பாயிரம், ”பன்னூற் செந்தமிழ்ப் புலவன்” என்று பாராட்டு கின்றது. சங்கர நமச்சிவாயர் தம் ஆசிரியராகிய சாமிநாத தேசிகரை,

நன்னெறி பிறழா நற்றவத் தோர்பெறும்

தன்னடித் தாமரை தந்துஎனை ஆண்ட

கருணையங் கடலைஎன் கண்ணைவிட்டு அகலார்

சுவாமி நாத குரவனை அனுதினம்

மனமொழி மெய்களில் தொழுது

என்று போற்றுகின்றார்.

”சாமிநாத தேசிகர் மட்டுமன்றி இலக்கண விளக்கம் வைத்தியநாத, தேசிகர் முதலியோரும் அவரைப்போன்ற வ சில பெரியாரும் இவர் காலத்தில் திருநெல்வேலியி இருந்தவர்கள் ஆதலின், கல்வி கேள்விகளில் சிறந்த ஓர் இலக்கண நூலுக்கு உரை இயற்றுதற்குப் போதிய ஆற்றலைப் பெறுவது இவருக்கு எளிதாயிற்று” என்பர் டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர்.

சங்கரநமச்சிவாயர் நன்னூலுக்கு காரணமாய் இருந்தவர், ஊற்றுமலை சமீன்தாராகிய மருதப்பு தேவர். உரைப்பாயிரத்துள் சங்கரநமச்சிவாயர் ஊற்றுமலை மருதப்பரை, உரை இயற்ற

பொன்மலை எனஇப் புவிபுகழ் பெருமை

மன்னிய ஊற்று மலைமரு தப்பன்

முத்தமிழ்ப் புலமையும் முறையர சுரிமையும்

இத்தலத்து எய்திய இறைமகன்

என்று போற்றுகின்றார். மருதப்பர் கூற, தாம் உரை இயற்றி வரலாற்றை,

...ஊற்றுமலை மருதப்பன்

”நன்னூற்கு உரைநீ நவையறச் செய்து
பன்னூற் புலவர்முன் பகர்தி“என்று இயம்பலின்,

நன்நா வலர்முக நகைநா ணாமே

என்னால் இயன்றவை இயற்றும் இந்நூலுள்

என்று உரைக்கின்றார்.

சங்கரநமச்சிவாயர் உரை எழுதிக் கொண்டிருக்கும் போது மருதப்பர் வேண்டிய உதவிகளைச் செய்து தந்து, உரையை அரங்கேற்றிப் பரிசு நல்கிச் சிறப்பித்தார்.

சங்கர நமச்சிவாயர் சைவர் ஆதலின், இவரது உரை முழுதும் சைவமணம் கமழ்கின்றது. மேற்கோள்களும், எடுத்துக் காட்டும் சைவ சமயச் சார்பானவையாகும்.

உரைத்திறன்

சங்கர நமச்சிவாயரின் உரைத் திறனை வெளிப்படுத்தும் சிறந்த பகுதிகள் பல உள்ளன.

“நடவாமடி“ என்ற நூற்பா (137) நன்னூலாரின் இலக்கணப் மையை உணர்த்தவல்ல சிறந்த நூற்பா என்பதை அறிந்த சங்கர நமச்சிவாயர் “கையறியா மாக்கட்கு அன்றி நூலியற்றும் அறவினையுடைய மக்கட்குப் பல்கலைக்குரிசில் பவணந்தி என்னும் புலவர் பெருமான் புகழ்போல் விளங்கி நிற்றலான், உலக மலையாமை பத்தழகோடும் பிறந்து நின்றது இச் சூத்திரம் என்று உணர்க” என்று வியந்து போற்றுகின்றார்.

“பல்வகைத் தாதுவின் உயிர்க்கு உடல் போல்“ என்ற சூத்திரத்தில் (268) உள்ள உவமையை, ”தோல் இரத்தம் இறைச்சி மேதை எலும்பு மச்சை சுவேதநீர் என்னும் எழுவகைத் தாதுக்களினால் உயிர்க்கு இடனாக இயற்றப்பட்ட உடம்பு போல” என்று விளக்கிப் பொருள் உரைக்கின்றார்.

எச்சங்களை விளக்கும் சூத்திரவுரையில் (360) சில குறள்களுக்கு நல்ல விளக்கம் கூறுகின்றார். “இணர் எரி தோய்வன்ன“ (குறள் - 308) என்ற குறளின் விளக்கம் படித்து மகிழத் தக்கது.

உரியியலில் “இன்னாது இன்னுழி“ (நன் -460) என்ற சூத்திரவுரையின் கீழ், “இவ்வியலில் சால என்பது முதல் ஆர்ப்பு என்பது ஈறாக நாற்பத்து ஐந்து உரிச்சொல் எடுத்துச் சுருங்கச் சொல்லுதல்“ என்று உரிச்சொற்களைக் கணக்கிட்டு உரைக் கின்றார்.

பொருள் கோள்களின் பெயர்ப் பொருத்தங்களைச் சங்கர நமச்சிவாயர் நன்கு விளக்குகின்றார். அவை பின்வருமாறு:

தாப்பிசை: ஊசல்போல் இடைநின்று இருமருங்கும் செல்லும் சொல். தாம்பு என்பது ஊசல்.

அளைமறிபாப்பு: அளை மறிபாம்பு என்பதில் பாம்பு என்பது

பாப்பு என நின்றது.ழு

மொழி மாற்று: தனக்கு உள்ளதைக் கொடுத்துப் பிறர்க்கு உள்ளதை வாங்கும் பண்டமாற்றுப் போறல்.

வடமொழிப் புலமை

சங்கர நமச்சிவாயர் தம் வடமொழிப் புலமையை வெளிப் படுத்தும் இடங்கள் சிலவற்றைக் கீழே காண்போம்:

வளைக்குள் நுழைகின்ற நல்ல பாம்பு, தலையை முன்னால் வைத்து உடலைக் கருட்டி அதன்மேல் தலையை வைக்கும்.

”வட நூலார் இடுகுறியை ரூடி என்றும், காரணத்தை யோகம் என்றும், காரண இடுகுறியை யோக ரூடி என்றும் வழங்குப்” (62).

”பிரகிருதி விகிருதி என்னும் ஆரிய மொழிகள் பகுதி விகுதி எனத் திரிந்து நின்றன (133).

”வடநூலார் சொற்பொருளை வாச்சியம் வெங்கியம் இலக்கணை என மூன்று எனவும், இலக்கணையை வெங்கியத்துள் அடக்கி இரண்டு எனவும் கூறுப. இவற்றுள் வாச்சியம் என்பது வெளிப்படைட் வெங்கியம் என்பது குறிப்பு இலக்கணை என்பது ஒரு பொருளினது இலக்கணத்தை மற்றொரு பொருட்குத் தந்து உரைப்பது அது விட்ட இலக்கணை, விடாத இலக்கணை, விட்டும் விடாத இலக்கணை என மூவகைப்படும் (269).

உவமைகள்

இவர் பல இனிய உவமைகளை எடுத்துக்காட்டி, இலக்கணக் கருத்துக்களை இனிது விளக்குகின்றார். அவ்வுவமை கள் எளியவையாயும், சிறியவையாயும் இருப்பினும் கற்போர் உள்ளத்தில் நன்கு பதியவல்லவை.

தொகை வகை விரி என்பவை ஒன்றோடொன்று தொடர் புடையவை என்பதற்கு "மரத்தினது பராரையினின்றும் கவடு கோடு கொம்பு வளார் பலவாய் ஒன்றோடொன்று தொடர் பட்டு எழுந்து நிற்றல்போல் என்ற உவமையைக் கூறுகின்றார் (பாயிரம்).

மேலும், மரங்களைப்பற்றிய பின்வரும் உவமைகளைக் கூறுகின்றார்: மா பலா முதலியன பராரை முதலிய சினையொடு நின்றன எனக் கண்டது கூறுவார்போல (141).

கமுகந் தோட்டம் என்றாற்போல (151).

இவைகளேயன்றி முதல் நூல் வழி நூல் சார்பு நூல் என்பவற்றிற்குத் தந்தை மகன் மருமான் என்பவர்களை உவமை கூறுகின்றார். ஙகரம் சுட்டு வினா எழுத்துகளை முதலில் பெற்று வருவதற்கு முடவன் கோலூன்றி வருவதை உவமை கூறுகின்றார். இத்தகைய சிறந்த உவமைகள் உரை முழுதும் உள்ளன.

போற்றும் நூல்கள்

சங்கர நமச்சிவாயர் தொல்காப்பியம், திருக்குறள், திருக் கோவையார் ஆகிய மூன்று நூல்களையும் பெரிதும் போற்று கின்றார். தொல்காப்பியர் கொள்கையிலிருந்து நன்னூலார்

மாறுபடும் இடங்களைத் தெளிவாகச் சுட்டுகின்றார். இடையிடையே தம் உரையில் தொல்காப்பியச் சூத்திரங்களை மேற்கோள் தருகின்றார். தொல்காப்பியவுரைகளை ஆழ்ந்து பயின்று, பொருந்தாவுரைகளை மறுக்கின்றார்.

திருக்குறளிலிருந்து பல மேற்கோள்கள் இவர் தருகின்றார். "பல்வகைத் தாதுவின்" என்ற சூத்திரத்திற்கு மேற்கோளாக, "வரும் குன்றம் அனையான்" என்ற திருக்கோவையார் பாடலை எடுத்துக் காட்டுகின்றார்.

இவர் இம்மூன்று நூல்களையும் போற்றிக் கற்றவர் என்பது தெளிவாகின்றது.

4. ஆண்டிப் புலவர்

ஆண்டிப் புலவர் நன்னூலுக்கு பிருத்தப்பாவினால் உரை இயற்றியவர். இவர் இயற்றிய உரை, உரையறி நன்னூல் என்று பெயர் பெற்றிருந்தது. இவர் ஆசிரிய நிகண்டும் இயற்றினார். அந் நூலின் பாயிரம், "இயம்பிய நிகண்டின் உரையறி நன்னூலினோடு இரண்டுமே செய்து வைத்தான்" என்று உரைக்கின்றது.

"உரையறி நன்னூல்" இன்று கிடைக்கவில்லை.

இவர் பதினைந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்தார். தொண்டை மண்டலத்தில் செஞ்சிக்கு அருகேயுள்ள ஊற்றங்கால் என்பது இவரது பிறப்பிடமும் இருப்பிடமுமாகும். இவரது

தந்தையாராகிய பாவாடை வாத்தியார் சிறந்த தமிழறிஞராக விளங்கினார். தந்தையாரிடம் கல்வி பயின்ற ஆண்டிப் புலவர், கல்வியிற் சிறந்து பலர்க்கு ஆசிரியராய்த் திகழ்ந்தார். ஆசிரிய விருத்தம் விரைந்து பாடவல்ல இவர், தம் மாணவர் நன்னூலை உரையுடன் கற்றுத் தெளிய ஆசிரிய விருத்தப்பாவால் உரை இயற்றினார்.

““செம்மை “சிறுமை“ என்ற நன்னூல் சூத்திரத்தின் விளக்கமாய்ப் பின்வரும் ஆசிரிய விருத்தம் அமைந்துள்ளது:

செம்மையும் கருமையும் பசுமையும் வெண்மையும்
திண்மையும் நுண்மை யுடனே
சிறுமையும் பெருமையும் குறுமையும் நெடுமையும்
தீமையும் தூய்மையும் அலால்
வெம்மையும் குளிர்மையும் கொடுமையும் கடுமையும்
மேன்மையும் கீழ்மை யும்பின்
மெய்ம்மையும் வறுமையும் பொய்ம்மையும் வன்மையும்
மென்மையும் நன்மை யும்சொல்
ஐம்மையும் பழமையும் புதுமையும் இனிமையும்
அணிமையும் நிலைமை யும்நேர்
ஆண்மையும் மும்மையும் ஒருமையும் பன்மையும்
அறுமையும் இருமையும் மிக்க
கைம்மையும் கூர்மையும் கேண்மையும் சேண்மையும்
கடிய வளமையும் இளமையும்
காணரிய முதுமையும் பண்புப் பகாப்பதம்
காட்டுமின் னனைய மாதே.

(தமிழ்ப் புலவர் வரிசை (13-ஆம் நூற்) பக்கம்-16. சு.அ. இராமசாமிப் புலவர்.)

உரையறி நன்னூல் முழுதும் கிடைத்திருந்தால் பல அரிய விளக்கங்கள் வெளிப்பட்டிருக்கும்!

5. கூழங்கைத்தம்பிரான்

கூழங்கைத்தம்பிரான், கூழங்கையார் என்று அழைக்கப் படுகின்றார். இவர், சைவ சித்தாந்தம் வல்ல புலவர் வேளாளர் குடியில் காஞ்சிபுரத்தில் பிறந்தவர்.

இவரது இயற்பெயர் தெரியவில்லை. கை கூழையாய் இருந்தால், இவர் இப்பெயர் பெற்றார். இவர், திருவாரூர் மடத்தில் சில காலம் தம்பிரானாக இருந்தார். அப்போது இவர்மீது மடாதிபதி சாட்டிய திருட்டுக் குற்றச்சாட்டை மறுத்து, தாம் குற்றமற்றவர் என்பதை

மெய்ப்பிக்க, பழுக்கக்காய்ச்சிய இரும்புக் கம்பியைப் பிடித்தமையால் இவரது கை வெந்து கூழையாயிற்று என்பர் (தமிழ்ப்புலவர் அகராதி - பக்கம்-138).

பின்னர் இவர் யாழ்ப்பாணத்தில் குடியேறி வைத்தியலிங்கம் செட்டியார் ஆதரவில் வாழ்ந்தார். பல மாணவர்களுக்குத் தமிழ் கற்பித்தார், சித்திவிநாயகர் இரட்டை மணிமாலை" முதலிய சிறு நூல்களை இயற்றினார்.

தம் வாழ்நாளின் இறுதிக் காலத்தில் கிறித்துவ சமயத்தைத் தழுவி வாழ்ந்தபோது, யோசேப்புராணம் முதலிய கிறித்துவ சமயச் சார்பான நூல்களை இயற்றினார். சிவியாதெருவில் வாழ்ந்து வந்த இவர் 1795-இல் மறைந்தார்.

இவர், நன்னூலுக்கு ஓர் உரை இயற்றினார். அந்நூல் மறைந்துபோய் விட்டதாய்ப் பலரும் எண்ணிவிட்டனர். அது, தமிழ் நாட்டிலோ, இலங்கையிலோ கிடைக்காமல் இருந்தது. அதனால், அது, மறைந்து போன தமிழ் நூல்களின் பட்டியலில்

இடம் பெற்றது. ஆனால், தமிழரின் தவப்பயனாய் அலைகடல் தாண்டிச் சென்று, ஜெர்மனி நாட்டில் இருக்கிறது.

மேற்கு ஜெர்மனியில் உள்ள ஹைடல்பெர்க் பல்கலைக் கழகம் 1962-இல் தொடங்கிய "தெற்கு ஆசியக் கழகம்", கூழங்கைத்தம்பிரான் நன்னூலுக்கு எழுதிய உரையைக் கண்டெடுத்தது. அங்கே தமிழ்த்துறையில் பணியாற்றிவரும் தமிழறிஞர் அ. தாமோதரன் அவர்கள் அதனை மிகவும் போற்றித் திருத்தமான கையெழுத்தில் படிஎடுத்துத் தந்துள்ளார். (1980). அதன் பிரதி, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில்-மொழியியல் துறையில் உள்ளது. அதனை வெளிப்படுத்திய தாமோதரனாரே சிறந்த முறையில் பதிப்பித்து வருகின்றார். அந்தப்பதிப்பு வெளிவருமானால் பல சிறந்த ஆய்வுக் கருத்துகளும் உரை நலன்களும் வெளிப்படும்.

கூழங்கைத் தம்பிரான் உரை, மயிலை நாதர் உரையைத் தழுவி எழுதப்பட்டுள்ளது.

6. இராமநுசக் கவிராயர்

இராமாநுசக் கவிராயர் இராமநாதபுரத்தில் நாயுடு வகுப்பில் பிறந்தார். சிவஞான முனிவரின் மாணவராகிய சோம சுந்தரக் கவிராயரிடம் கல்வி பயின்றார். சென்னையில் குடியேறித் தமிழ்ப் பணி புரிந்தார். சென்னையில் வண்ணாரப்பேட்டையில் சஞ்சீவிராயன் கோயில் தெருவில் வாழ்ந்தார்.

சென்னையில் இவரிடம் தமிழ்பயின்ற மாணவர்கள் பலர் அவர்களுள் கந்தப்பையரின் மக்களான விசாகப் பெருமாள் ஐயர், சரவணப் பெருமாள் ஐயர், தாண்டவராய முதலியார், அ வீராசாமி செட்டியார் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். வெளி நாட்டவரான ஜி.யு. போப், ட்ரு தாம்சன் கிளார்க், ரானஸ், வின்ஸ்லோ ஆகியோரும் இவரிடம் பயின்றுள்ளனர்.

ஜி. யு. போப் இராமாநுசக் கவிராயரைப் பற்றிப் பின் வருமாறு தாம் இயற்றியுள்ள திருக்குறள் உரையின் ஆங்கில முன்னுரையில் எழுதுகின்றார்:

மதி நுட்பமும் உடைய எவரினும் சிறந்தவர் ழு தமிழ்ப் புலவர் வரிசை (13-ஆம் நூற்) பக்கம்-16. சு.அ. இராமசாமிப் புலவர்.

”என் முதல் தமிழாசிரியர், யான் அறிந்த புலமைத் திறனும் மதி நுட்பமும் உடைய எவரினும் சிறந்தவர் நெடு நாட்களுக்குப்

பின் காலஞ் சென்றவர் ஒரு பேரறிஞர் அவர், பிறர் கண்டு அழுக்காறு அடையத்தக்க வீறுமிக்க வைணவர் (1. "My first teacher of Tamil was a most learned scholar> long dead (Pest to his ashes!)> who possessed more than any man I have known> the cleverness ingenium perfervidum. He was a profound and Zealous Vaishnavite")

இவர், பள்ளிச் சிறுவர்கள் பயில்வதற்கு ஏற்ற வகையில் ஆத்திகுடி, கொன்றை வேந்தன், வெற்றி வேற்கை ஆகியவற்றிற்கு உரை இயற்றினார்.

நன்னூலுக்குக் காண்டிகையுரை எழுதினார். திருக்குறன் அறத்துப்பாலில் இல்லறவியல்வரை உரை இயற்றினார். பரிமேலழகர் உரைக்கு விளக்கவுரை இயற்றி, சில இடங்களில் “வேறுரை“ என்று குறிப்பிட்டுத் தம் கருத்தை எழுதி வெளியிட்டார்.

குடாரம் என்னும் கண்டன நூல் ஒன்றும் இயற்றினார். அந் நூலின் முன்னுரையில் அதன் தலைப்பிற்குப் பின் வருமாறு விளக்கம் தந்துள்ளார்:

குடாரம்: இது திருவள்ளுவர் குறளையும் பரிமேலழகர் உரையையும்பற்றிச் சிலர் மயங்கிக்கூறிய வழுஉக் களை குடாரம்.

நன்னூல் உரை

இவர் இயற்றியுள்ள நன்னூல் உரை பெரும்பாலும் சிவஞான முனிவர் உரையைத் தழுவிச் செல்லுகின்றது. எளிமையும் தெளிவும் வாய்ந்த நடையில், நினைவில் நிற்கத் தகுந்த எளிய உதாரணங்களுடன் அமைந்துள்ளது.

இவர் தம் உரையில்,

தொல்லை வடிவின எல்லாஎழுத்தும் ஆண்டு
எய்தும் எகரம் ஓகரம் மெய் புள்ளி

(நன் -எழுத்-43)

என்ற நன்னூல் சூத்திரத்தை,

தொல்லை வடிவின எல்லா எழுத்தும் ஆண்டு

எய்தும் ஏகாரம் ஓகாரம் மெய்புள்ளி

என்று மாற்றிவிட்டார். மாற்றியதற்குக் காரணம் கூறுகையில், “இச் சூத்திரத்தை ஏகாரம் ஓகாரம் மெய் புள்ளி பெறும் எனத் திருப்ப வேண்டிற்று என் எனின், இக் காலத்தார் ஏகார ஓகாரங்களுக்கு புள்ளியிட்டு எழுதுவது பெருவழக்கு ஆயினமையால் என்கீ” என்று எழுதுகின்றார்.

7. விசாகப்பெருமாள் ஐயர்

விசாகப்பெருமாள் ஐயர் திருத்தணிகையில் பிறந்தவர் வீர சைவராகிய கந்தப்பையரின் புதல்வர் இராமாநுசக் கவிராயரின் மாணவர். சரவணப் பெருமாளையரும் இவரும் இரட்டைப் பிறவிகளாகப் பிறந்தவர்கள். இவர் வாழ்ந்த காலம் பத்தொன்ப தாம் நூற்றாண்டின் பிற்பகுதியாகும்.

இவர் நன்னூலுக்குக் காண்டிகையுரை ஒன்றைத் தம் தெளியும் வகையில் இயற்றினார். இவரது நன்னூல் உரைப் பாயிரத்தில் சேயூர் முத்தைய முதலியார்,

தத்துவம் உணர்திருத் தணிகை மடாதிபன்
சத்தெனும் வீர சைவமா கேசன்
கற்றுணர்ந் தோங்கிய கந்தப்ப தேசிகன்
பெற்றருள் விசாகப் பெருமா ளையன்

என்று இவரைக் குறிப்பிடுகின்றார்.

இவர் நன்னூலுக்கு உரை இயற்றிய சிறப்பை,

நயன்மிகு சங்கர நமச்சி வாயனால்
பயன்மிகச் செய்திடப் பட்டதன் பின்னர்,
தவஞா னந்தனிற் சால்புகூர் துறைசைச்
சிவஞான முனிவனால் திருத்திடப் பட்ட
விருத்தி யுரைதனை வெளிப்படச் சுருக்கி,
கருத்துப் பதப்பொருள் காட்டு மற்றும்சில
வறுமுறை காண்டிகை உரையுளங் கொண்டு
சிறுவரும் உணர்தரும் செவ்வியிற் செய்தனன்

என்று பாயிரம் உரைக்கின்றது.

விசாகப்பெருமாள் ஐயர் எளியவுரை எழுதி மாணவர் உலகிற்கு நன்மை செய்த பின்னரே, இவரைப் பின் பற்றிப் பலர் நன்னூலுக்கு உரை எழுதும் முயற்சியில் ஈடுபட்டனர்.

8. ஆறுமுக நாவலர்

ஆறுமுக நாவலர் நன்னூலுக்குக் காண்டிகை யுரை எழுதி வெளியிட்டார். இவ்வுரை தமிழ் கற்கும் இளைஞர்க்கு நாவலர் டிகை புரை எழுதி தந்த நல்ல பரிசாகும். இவ்வுரை இளைஞர் உலகில் என்றும் நிலைத்து வாழும்.

நாவலர் பல ஆண்டுகள் தமிழ் கற்பிக்கும் பணியில் ஈடுபட்டு மாணவர் உள்ளத்தை அறிந்து சிறந்த முறையில் உரை "இயற்றியுள்ளார். ஒவ்வொரு சூத்திரத்தின் கீழேயும்

“பரிட்சை வினாக்கள்“ இடம் பெற்றுள்ளன. ஆகுபெயர், அன்மொழித் தொகை வேறுபாடுகளை மிகத்தெளிவாக இனிய முறையில் சிறுசிறு வாக்கியங்களில் விளக்குகின்றார் நாவலர்.

நூலின் இறுதியில் பிற்சேர்க்கையாக அப்பியாசம் என்னும் தலைப்பில் பல பயிற்சிகள் தரப்பட்டுள்ளன. இவ்வாறு அறுபது பகுதிகளில் பலவேறு பயிற்சிகள் இடம்பெற்றுள்ளன. இலக்கண அமைதி என்ற பகுதியில் சொல்லுக்கும் வாக்கியங்களுக்கும் இலக்கணம் கூறும் முறை விளக்கப்பட்டுள்ளது. சொற்களுக்குப் பகுபத இலக்கணம் காட்டப்பட்டுள்ளது. சொல்லிலக்கண சூசி என்ற தலைப்பில் சொற்களின் வகைகளை விரிக்கின்றார். தொடர் இலக்கணம் கூறிப் பல வாக்கியங்களைத் தெளிவு படுத்துகின்றார்.

9. சடகோப ராமாநுசாச்சாரியார்

நன்னூலுக்கு எளிய முறையில் உரை எழுதி மாணவர் உலகில் செல்வாக்குப் பெற்றவர் இவர். தமிழ் மொழியின் மாறுதலையும் வளர்ச்சியையும் உணர்ந்து தக்க உதாரணமும் மேற்கோற்கோளும் காட்டி இவரது உரை செல்லுகின்றது. எளிமையும் தெளிவும் இவரது உரையின் சிறப்பியல்புகளாகும்.

இவர் 1871ஆம் ஆண்டு, திருவல்லிக்கேணியில் (சென்னை) அப்பனையங்காருக்கு மகனாகத் தோன்றினார். பல வேறு தமிழ்ப் பணி புரிந்த இவர் 1910-இல் மறைந்தார்.

நன்னூலுக்குக் குமாரசாமிப் புலவர் பவானந்தம் பிள்ளை, ஆ முத்துத்தம்பிப் பிள்ளை ஆகியோரும் உரை இயற்றியுள்ளனர். இவர்கள் இயற்றியுள்ள உரைகள் யாவும் மாணவர்க்கு இலக்கணங் கற்பிக்கும் நோக்கத்துடன் எழுதப்பட்டவையாகும்.

தமிழக அரசியலார் ஓலைச் சுவடி நூல் நிலைய வெளியீடாக இயற்றியவர் பெயர் தெரியாத நன்னூல் காண்டிகை உரை ஒன்று வெளிவந்துள்ளது (1952). இவ்வுரை மிக எளிமையாக, பழைய உரைகளைத் தழுவிச் செல்லுகின்றது. எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் 13 சூத்திரம் வரையிலுமே உரை உள்ளது.

வினாக்கள்

அலகு ு 2

இலக்கண உரைகள்

ஒரு மதிப்பெண் வினாக்கள்

1.தொல்காப்பியம் முழுமைக்கும் முதலில் உரை எழுதியவர்

அ).சேனாவரையர்

ஆ).இளம்பூரணர்

இ).பேராசிரியர்

ஈ).நச்சினார்க்கினியர்

2.” தமிழ் நூல் ஒன்றே வல்ல உரையாசிரியர்” என்று இளம்பூரணரை குறிப்பிட்டவர் யார் ?

அ).சிவஞான முனிவர்

ஆ).ஆறுமுகநாவலர்

இ).வைத்தியநாத தேசிகர்

ஈ).பேராசிரியர்

3.தொல்காப்பிய சொல்லதிகாரத்திற்கு உரை எழுதியவர்

அ).இளம்பூரணர்

ஆ).சேனாவரையர்

இ).தெய்வச்சலையார்

ஈ).கல்லார்

4.நன்னூலுக்கு காண்டிகை உரை எழுதியவர்

அ).மயிலை நாதர்

ஆ).சங்கர நமசிவாயர்

இ).ஆறுமுக நாவலர்

ஈ).தெய்வச் சிலையார்

5.நன்னூலுக்கு விருத்தப்பாவில் உரை எழுதியவர்

அ).ஆண்டிப் புலவர்

ஆ).ஆறுமுக நாவலர்

இ).மயிலை நாதர்

ஈ).உ.வே.சா

6.பன்னூற் செந்தமிழ் புலவன் என்று அழைக்கப்படுபவர்

அ).ஆறுமுக நாவலர்

ஆ).சங்கர நமச்சிவாயர்

இ).மயிலை நாதர்

ஈ).பேராசிரியர்

7.தண்டியலங்காரத்திற்கு உரை எழுதியவர்

அ).தண்டி

ஆ).உ.வே.சா.

இ).குணசாகரர்

ஈ).இளம்பூரணர்

8.யாபருங்கலகாரிகைக்கு உரை எழுதியவர்

அ).அமிர்த சாகரர்

ஆ).குணசாகரர்

இ).தெய்வச்சலையார்

ஈ).ஐயனாரிதனார்

9.வெண்பா பாட்டியலின் வேறு பெயர்

அ).நவநீத பட்டியல்

ஆ).வச்சணந்திமாலை

இ).சிதம்பரப் பாட்டில்

ஈ).பன்னிரு பாட்டியல்

10.பாட்டியல் நூல்களுள் காலத்தால் முற்பட்ட பாட்டியல் நூல் எது ?

அ).பன்னிரு பாட்டியல்

ஆ).இலக்கண விளக்கப் பட்டியல்

இ).சிதம்பர பட்டியல்

ஈ).வெண்பா பாட்டியல்

ஐந்து மதிப்பெண் வினாக்கள்

1.இளம்பூரணர் பற்றிய செய்திகளைத் தொகுத்து வரைக.

2.யாப்பருங்கல விருத்தி உரை குறித்து எழுதுக.

3.புறப்பொருள் வெண்பாமாலை குறிப்பு வரைக.

4.நேமிநாத உரையை விளக்குக.

5.வெண்பா பாட்டியல் பற்றி கூறுக.

6.உபமான சங்கீரக உரை பற்றி எழுதுக.

7.சங்கர நமசிவாய நன்னூலுக்கு செய்த உரைநயம் பற்றி எழுதுக.

8.விசாகப்பெருமாள் ஐயர் உரை நயம் பற்றி விளக்குக.

எட்டு மதிப்பெண் வினாக்கள்

1.தொல்காப்பிய உரையாசிரியர்கள் பற்றி கட்டுரை வரைக.

2.நன்னூல் உரையாசிரியர்கள் பற்றி கட்டுரை வரைக.

3.அகப்பொருள் நூல்களுக்கு எழுந்த உரைப் பற்றி கட்டுரை வரைக.

4.பட்டியல் நூல்களுக்கு எழுதப்பட்ட உரைகள் பற்றி தொகுத்து எழுதுக.

5.யாப்பு நூல்களுக்கு எழுந்த உரைகள் பற்றி கட்டுரை வடிவில் எழுதுக.

அலகு - 3

இலக்கிய உரைகள் - சுருக்கமான அறிமுகம்

பாட நோக்கம்

பழந்தமிழ் இலக்கிய உரையாசிரியர்கள் பெயர் தெரியாத பழைய உரையாசிரியர்கள், நீதி இலக்கியம், காப்பிய உரையாசிரியர்களின் உரைத்திறன்கள் சைவம், வைணவம் போன்ற சமயம் சார்ந்த உரையாசிரியர்களின் பக்தி நெறிகள் ஆகியவற்றை வெளிப்படுத்துதல் புலப்படுத்துதல்.

பாட அறிமுகம்

பல்வேறு இலக்கிய உரையாசிரியர்களின் உரைப் போக்குகளை ஒப்பிட்டு நோக்கும் ' திறனை மாணாக்கர்களுக்கு அறிவித்தல்.

இலக்கிய உரைகள் சுருக்கமான அடிப்படை அறிமுகம்

எட்டுத்தொகை உரைகள் பத்துப்பாட்டு உரைகள் பதினெண்கீழ்க்கணக்கு உரைகள் நாலடியார் உரைகள் பதுமனார், தருமா உரைகள், திருக்குறள் உரைகள் பரிதியார் காலிங்கர், மணக்குடவர், பரிப்பெருமாள், பரிமேலழகர் காப்பிய உரைகள் சிலப்பதிகாரம் அரும்பத உரை நீலகேசி சமய திவாகரவாமன முனிவர், கம்பராமாயண உரைகள் ஆழ்வார்க்குறிச்சி வெ.சுப்பிரமணிய முதலியார் இன்கவித்திரட்டு உரை, அண்ணாமலைப் பல்கலைக்கழக உரைப்பதிப்பு, வை.மு.கோபாலகிருட்டிணமாச்சாரியார் உரை.

சமயநூல் உரைகள்

நாலாயிர திவ்வியபிரபந்த வியாக்கியானம் நாதமுனிகள் வழித்தோன்றல் 6000,9000,12000,24000,36000 முதலான படிகள், ஈடு, மணவாளமாமுவி, திருமுறை உரைகள் திருவாசக வியாக்கியானம், திருக்கோவையார் பழைய உரை பேராசிரியா உரை. சிகாழித் தாண்டவராயர், பிறர் உரைகள், திருமந்திர உரைகள், பெரியபுராண உரைகள் சைவசித்தாந்த உரைமரபு சிவஞானபோதம், சிவஞான முனிவர் சிற்றுரை பேருரை (பாடியம்). பாண்டிப்பெருமாள் உரை, மெய்கண்டதேவர் (வார்த்திகப் பொழிப்பும்) சிவஞானசித்தியார் ஞானவாரணம் (செய்யுள் வடிவ உரை), பரபக்க சுபக்க உரைகள்.

இலக்கிய உரையாசிரியர்கள்

எட்டுத்தொகை உரைகள்

எட்டுத் தொகை நூல்களை,

நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு

ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்

சுற்றறிந்தார் ஏத்தும் கலியோடு அகம்புறம்என்று

இத்திறத்த எட்டுத் தொகை

என்ற பழைய வெண்பா கூறுகின்றது.

எட்டுத்தொகை நூல்களுள் நற்றிணைக்குத் தவிர, ஏனைய ஏழு நூல்களுக்கும் பழங்காலத்தில் உரைகள் தோன்றியுள்ளன. குறுந்தொகைக்குப் பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் எழுதிய உரை இருந்தது. அகநானூற்றுக்குப் பால்வண்ண தேவனார் இயற்றிய அகவல் உரையும் இருந்தது. ஆனால், இவ்விரு நூல் களின் பழையவுரைகள் மறைந்துபோயின.

ஐங்குறுநூற்றிற்குப் பழைய வுரையும் பதிற்றுப்பத்திற்குப் பழைய வுரையும், அகநானூற்றுக்குப் பழைய குறிப்புரை இரண்டும் புறநானூற்றுக்குப் பழையவுரையும் உள்ளன. இவ்வுரை களை இயற்றிய புலவர்களின் பெயரும் தெரியவில்லை. "ஊர் வேண்டேன், பேர் வேண்டேன்!" என்று முற்றத்துறந்த சான்றோர்கள் இவர்கள்.

பரிபாடலுக்குப் பரிமேலழகர் உரையும், கலித்தொகைக்கு நச்சினார்க்கினியர் உரையும் உள்ளன.

நற்றிணை

நற்றிணைக்குப் பழைய உரை இல்லை. இருபதாம் நூற்றாண்டு உரையாசிரியர்களில் ஒருவரான பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் நற்றிணைக்குச் சிறந்த உரையும் ஆராய்ச்சி முன்னுரையும் இயற்றிப் பதிப்பித்தார். அண்மையில் ஔவை சு. துரைசாமிப் பிள்ளை, அரியதோர் உரை விளக்கம் எழுதியுள்ளார்.

குறுந்தொகை

குறுந்தொகைக்குப் பேராசிரியர் 380 பாடல்களுக்கும், அவர் உரை எழுதாது விட்ட இருபது பாடல்களுக்கு நச்சினார்க் கினியரும் உரை இயற்றினர் என்ற செய்தியை நச்சினார்க்கினியர் உரைப்பாயிரம் கூறுகின்றது. இருபெரும் உரையாசிரியர்களும் இயற்றிய பழையவுரை மறைந்து போயிற்று.

இருபதாம் நூற்றாண்டில், திருக்கண்ணபுரம் திருமாளிகைச் சௌரிப் பெருமாள் அரங்கன் (1915-ஆம் ஆண்டில்) குறுந்தொகையைப் பதிப்பித்து உரையும் இயற்றினார். டாக்டர். உ.வே. சாமிநாத ஐயரும், பொ.வே. சோமசுந்தரனாரும் குறுந் தொகைக்கு விளக்கவுரை எழுதியுள்ளனர்.

இராகவ ஐயங்கார் குறுந்தொகையில் முதல் 112 பாடல் களுக்கு விளக்கவுரை இயற்றியுள்ளார்.

ஐங்குநுறு

ஐங்குறுநூற்றுக்குப் பழைய உரை குறிப்புரையும் அன்று பொழிப்புரையும் அன்று. அகத்திணை நூல்களுக்குரிய உள்ளுறை உவமம், இறைச்சிப் பொருள் ஆகியவற்றைத்

தெளிவாக விளக்குகின்றது சிற்சில இடங்களில் அருஞ்சொற்களுக்குப் பொருள் உரைக்கின்றது தேவையான இடங்களில் இலக்கணக் குறிப்பும் வினைமுடிபும் கூறுகின்றது. துறைகளையும் கூற்றுக்கு உரியவரையும் நன்கு விளக்குகின்றது. உள்ளது. இது

ஐங்குறுநூற்றின் முதற்பாட்டிற்குச் சிறந்த விளக்கம் எழுதிய பாடல்களுக்கும் அவ்வாறு இவ்வுரையாசிரியர் ஏனைய பாட எழுதாமல் விட்டது பெரிய இழப்பாகும். முதற்பாட்டின் விளக்கமாக, "தலைவியை யாய் என்றது புலத்தற்குக் காரணமாயின உளவாகவும் அவை மனங்கொள்ளாத சிறப்பை நோக்கி தோழி யாங்கள் என உளப்படுத்தது ஆயத்தாரை நோக்கி எனக் கொள்க. பூவும் புலாலும் ஒக்க விளையும் ஊர் என்றது குலமகளிரைப்போல, பொது மகளிரையும் ஒப்புக் கொண்டு ஒழுகுவான் என்பதாம். ஆதன் அவினி என்பான் சேரமான்களில் பாட்டுடைத் தலைவன்" என்று உரைக்கின்றார்.

எல்லாப் பாடல்களிலும் உள்ளுறைகளைத் தெளிவாக விளக்கும் இவர், 177 ஆம் பாடலில் இறைச்சிப் பொருளையும் சுட்டு கின்றார்.

"கன்னம் என்பது நோய்த் தணித்தற்குப் பண்ணிக் கொடுக்கும் படிமம். கெழுதகை என்பது உரிமை" (245) என்று சொல்லுக்குப் பொருளும், "வெள்ளிலோத்திரத்துக் குளிர்ச்சியை யுடைய மலரை ஆற்றின் வெம்மை தீர, செல்வோர் அணிந்து செல்வர் என்றுழி வெம்மை கூறியவாறாயிற்று" (301) என்று பாட்டால் வெளிப்படும் கருத்தையும் கூறுகின்றார்.

இவ்வுரை சிறியதாயினும், செய்யும் உதவி பெரியது.

இவ்வுரைக்கு டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் குறிப்புரை எழுதியுள்ளார்.

ஔவை சு. துரைசாமிப் பிள்ளையும், பொ.வே. சோம சுந்தரனாரும் விளக்கவுரை எழுதியுள்ளனர்.

பதிற்றுப்பத்து

பதிற்றுப்பத்திற்குப் பழையஉரை உள்ளது. இவ்வுரை பதவுரையும் அன்று அருஞ்சொற் பொருள்உரையும் அன்று குறிப்புரையும் அன்று. எல்லா உரை நெறிகளையும் தழுவிச் செல்லுகின்றது இவ்வுரை.

இவ்வுரையினை இயற்றியவர் பெயர் முதலிய வரலாறு தெரியவில்லை. 76ஆம் பாடலின் உரையில், "சின்மையைச் மின்னூல் என்றதுபோல ஈண்டுச் சிறுமையாகக் கொள்க" என்று இவர் எழுதுகின்றார். சின்னூல் என்பது குணவீர பண்டிதரால் இயற்றப்பெற்ற நேமிநாதத்திற்குப் பெயராக வழங்குகின்றது. நேமிநாதம் நன்னூலாருக்கு முன் தோன்றியது. ஆதலின், இவ் வுரையாசிரியரும் நன்னூலாரின் காலத்திற்கு முற்பட்டவர் என்னலாம்.

68ஆம் பாடலில் (வரி -13) வடபுலம் என்பதற்கு, "போக பூமியாகிய உத்தர குரு" என்று உரை எழுதுகின்றார். இது சமணர் கருத்தாகும். இவர் சமணராக இருக்கலாம். இவருக்கு முன்னும் பதிற்றுப்பத்திற்கு உரை இருந்திருக்க வேண்டும். என்பர். என்று உரைப்பாரும் உளர். என்றும் பாடம் கொள்வர் என்று இவர் குறிப்பிடுகின்றார்.

பழந்தமிழ் நூல்கள் பலவற்றிலிருந்து பல மேற்கோள்களை இவர் காட்டுகின்றார்.

பாட்டில் அமைந்துள்ள அரிய சொற்களுக்குச் சிறந்த முறையில் பொருள் கூறுகின்றார். வினைமுடிபுகள் தருகின்றார். பிற உரையாசிரியர்கள் விளக்காத இலக்கணக் குறிப்புகளை இவர் எடுத்து ஆண்டுள்ளார். பாட்டில் உள்ள புறத்துறைகளைத் தெளிவாக விளக்குகின்றார். செய்யுளுக்குப் பெயராய் அமைந்த தொடர்மொழிகளின் பொருளை விளக்கி, நயவுரை கண்டு அதன் அழகில் ஈடுபடுகின்றார். பாட்டிற்குரிய தூக்கு வண்ணம் துறை இவற்றின் பொருத்தத்தை நன்கு விளக்குகின்றார். ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் "இதனால் இன்னது பெறப் பட்டது" என்று செய்யுளின் கருத்தைக் கூறுகின்றார்.

இவர், பதிகச் செய்யுளுக்கு முன்னால் குறிப்புரை தருகின்றார். வரலாற்றுச் செய்திகளை இவர் விளக்காமையால் அவற்றைப் பற்றி விரிவாக அறிந்துகொள்ளும் வாய்ப்பு இவருக்கு இல்லை என்னலாம்.

செம்மீன் என்பதற்கு அருந்ததி (31-28) என்று பொருள் உரைக்கின்றார். "ஆயிடைப் அவ் என்னும் வகர ஈற்றுப் பெயர் ஆயிடை என முடிந்தது" என்றும், (11:24). "அருவியாம்பல் என்றது வீ அரிய எண்ணாம்பல் என்றவாறு. வீ என்பது குறுகிற்று அருவி பண்புத் தொகை" (63:19) என்று இவர் தரும் இலக்கணக் குறிப்பு கள் அரியவை.

கட்டணம் என்ற சொல்லே. கட்டடம் (65:7) என்று மாறியதாக இவர் கருதுகின்றார்.

கயிறு குறு முகவை என்பதற்கு இவர் தரும் நயஉரை மிகவும் இனியது.

"கயிறு குறு முகவை என்றது, தன்னால் நீர் தாங்குவது பெரிதன்றித் தன் கயிற்றையே நின்று வாங்கப்படும் முகவை" (22) என்று மிக அழகாக விளக்குகின்றார்.

பதிற்றுப்பத்திற்கு டாக்டர், வே. சாமிநாத ஐயர் பழைய உரையின் கீழே குறிப்புரை எழுதியுள்ளார். ஔவை சு துரைசாமிப்பிள்ளை விளக்கவுரை எழுதியுள்ளார். ஈழ நாட்டுத் தமிழ்ப்புலவர் அருள் எழுதியுள்ளார். அம்பலனார் ஆராய்ச்சியுரை

அகநானூறு

அகநானூற்றுக்குப் பழைய உரை உண்டு. அதனை இயற்றியவர் பால் வண்ணத் தேவர் என்பவர். அவர் அகவலால் உரை கண்டார் என்று சிறப்புப்பாயிரம் கூறுகின்றது. அந்த அகவல் உரை கிடைக்கவில்லை. மறைந்து போன உரை நூல் களுள் அதுவும் ஒன்று.

அகநானூற்றுக்குக் குறிப்புரைகள் இரண்டு பழங்காலத்தில் தோன்றியுள்ளன. அவற்றுள் ஒன்று, கடவுள் வாழ்த்திற்கும் முதல் தொண்ணூறு பாடல்களுக்கும் குறிப்புரையாய் அமைந்துள்ளது. இவ்வுரையாசிரியர் ஒவ்வொரு செய்யுளிலும் உள்ள அருஞ் சொற்களுக்கும், அரிய தொடர்களுக்கும் பொருள் எழுதுகின்றார். உள்ளுறை உவமம், இறைச்சிப்பொருள் ஆகியவற்றைக் குறிப் பிடுகின்றார்.வேண்டிய இடங்களில் சொல்முடிபு பொருள்முடிபு, இலக்கணக் குறிப்பு, வரலாற்று நிகழ்ச்சி ஆகியவற்றைத் தருகின்றார்.

இவரைப் பற்றிய வரலாறு எதுவும் தெரியவில்லை.

மற்றோர் குறிப்புரை, உரை என்ற அளவில் இல்லாமல், படித்தவர் தம் நினைவுக்காக எழுதி வைத்த சொற்பொருளும், திணை விளக்கமும் அமைந்த குறிப்புப்போல் உள்ளது.

தொடர்ச் சியாக இக் குறிப்பு இல்லாமல், ஆங்காங்கே சில பாடல்களுக்கு மட்டுமே உள்ளது.

அகநானூறு மூலமும் இவ்விரு பழையவுரைகளும் ரா இராகவ ஐயங்காரால் வெளியிடப்பட்டன. இராச கோபால் ஐயர் பழையவுரைக்குப்பின் (90 பாடலுக்குப்பின்) எழுபது பாடல் களுக்கு உரை இயற்றியுள்ளார்.

ந.மு. வேங்கடசாமி நாட்டாரும், கரந்தைக் கவியரசு ரா. வேங்கடாசலம் பிள்ளையும் அகநானூறு முழுமைக்கும் செம்மை யான உரை எழுதியுள்ளனர்.

புறநானூறு

புறநானூற்றுக்குப் பழையவுரை உள்ளது. இவ்வுரை 266 பாடல்கள் வரை உள்ளது. இவ்வுரையாசிரியரின் வரலாறு தெரிய வில்லை. இவ்வுரையின் பல்வேறு இயல்புகளை மிக நன்றாக ஆராய்ந்து டாக்டர் உவே. சாமிநாத ஐயர் எழுதியுள்ளார்.

பழைய உரையாசிரியர் ஆற்றொழுக்காகச் செய்யுளில் சொல் கிடந்தவாறே பொருள் உரைக்கின்றார். உரைநடை மிகவும் எளிமையானது. தமக்கு முன் இருந்த மற்ற உரையாசிரியர் கருத்துக்களையும், அவர்கள் கொண்ட பாடங்களையும் பல இடங்களில் குறிக்கும் இவர் அவர்களை மறுப்பதில்லை. தயங்கூறுதல், வினைமுடிபு காட்டுதல் சொற்களை வருவித்துக் கூறல் துறைகளை விளக்குதல் போன்ற பல இயல்புகள் இவரிடம் உள்ளன. நாலடியார், திருக்குறள் போன்ற நூல்களின் செய்யுள் அடிகளை உரைநடையாக்கி எழுதுகின்றார். உலக வழக்குச் சொற்களைக் குறிக்கின்றார். உவமைகளை விளக்குகின்றார். குறிப்புப்பொருள் தருகின்றார். ஆங்காங்கே மிக அரிய இலக்கணக் குறிப்புகளைத் தருகின்றார்.

இவர், வேதங்களைப் பின்பற்றும் வைதிக சமயத்தவர் கடவுள் வாழ்த்துப் பாடல் உரையில், சிவபெருமானுக்கு உரிய பொருள்களை, "திரு" என்னும் அடைகொடுத்து, திருநுதல் திருச்சடை, திருமுடி என்கின்றார். 56-ஆம் பாடலின் உரையில், திருமால் மேனியைத் திருமேனி என்றும், பலதேவரை நம்பி மூத்த பிரான் என்றும் முருகக் கடவுளைப் பிள்ளையார் என்றும், பிணி முகம் பிள்ளையார் ஏறும் யானை என்றும் மரபு வழுவாமல் உரைக்கின்றார்.

நன்றாய்ந்த" என்னும் புறப்பாட்டினுள் (166), "இகல் கண்டோர் மிகல் சாய்மார்" என்பதற்கு இவ்வுரையாசிரியர், வேதத்திற்கு மாறுபட்ட நூல்களைக் கண்டோராகிய புத்தர் முதலாயின புறச் சமயத்தோரது மிகுதியைச் சாய்க்க வேண்டி" என்று பொருள் உரைக்கின்றார்.

இவ்வுரையாசிரியர் புராணக் கதைகளையும், வரலாறு களையும் கூறுகின்றார். அவற்றை விரிவாகக் காண்போம்.

பாண்டியன் நெடுஞ்செழியனை, "எழுவர் நல்வலங் கடந்தோய்" என்று ஒரு பாடல் (19) குறிப்பிடுகின்றது. அதற்கு

இவர், "இரு பெருவேந்தரும் ஐம்பெரு வேளிருமாகிய எழுவர் என்று உரை எழுதுகின்றார்.

‘குழவி இறப்பினும்“ என்ற பாட்டில் (74) ”கேளல் கேளிர் என்றது சிறைக் கோட்டங் காவலரை“ என்று உரைக்கின்றார். 99 ஆம் பாடலில் ஔவையார் அதியமான் பனந்தார் சூடியுள்ளதாகப் பாடியுள்ளார். “இவனுக்குப் பனந்தார் கூறியது. சேரமாற்கு உறவாதலின்“ என்று சிறந்த முறையில் விளக குகின்றார்.

சிறந்த வரலாற்றுச் செய்தியையும் இவர் புராணச் ف رم செய்தியாக்கி விடுகின்றார். 99 ஆம் பாடலில் உள்ள “பூவார்கா என்பதற்கு “வானோர் இவன் (அதியமான்) முன்னோர்க்கு வரங் கொடுத்தற்கு வந்திருந்ததொரு கா“ என்றார். மேலும், 195 பாடலில் வரும் மோரியரை, “சக்கரவாள சக்கர வர்த்திகள்: விச்சாதரரும், நாகரும் என்ப“ என்று கூறி விடுகின்றார். வரலாற்று நிகழ்ச்சியையும் புராணச் செய்தியாக்க இவர்க்கு எந்தச் சான்றுகள் கிடைத்தனவோ, தெரியவில்லை!

புறநானூற்றுப் பாடல்களில் வந்துள்ள உவமைகளைப் பொருளுடன் பொருத்திக்காட்டுவதில் இவ்வுரையாசிரியர் வல்லவர்.

புலிசேர்ந்து போகிய கல்லளை போல

ஈன்ற வயிறோ இதுவே (86)

என்பதற்கு, ”புலி சேர்ந்து போகிய அளை போல, அவனுக்கு என்னிடத்து உறவும் அத்தன்மைந்து என்பதாம்” என்று உரைக் கின்றார்.

ஔவையார் பாடிய 206-ஆம் பாடலில்,

மரங்கொல் தச்சர் கைவல் சிறாஅர்

மழுவுடைக் காட்டகத் தற்றே

எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே

என்ற உவமையை இவ்வுரையாசிரியர் பின்வருமாறு விளக்கு கின்றார்: ”பரிசிலர்க்குச் சிறாரும், கல்விக்கு மழுவும், செல்லும் திசைக்குக் காடும், சோற்றுக்குக் காட்டுள் மரமும் உவமையாகக் கொள்க”.

இத்தகைய உவமை விளக்கங்களை 13, 54, 87, 102, 109, 218 ஆகிய பாடல்களின் உரைகளில் காணலாம்.

இவ்வுரையாசிரியர் அரிய சொற்கள் பலவற்றிற்குப் பொருள் கூறுகின்றார். சிலவற்றைக் கீழே காண்போம்:

அருள் - ஒன்றின் துயர்கண்டால் காரணம் இன்றித் தோன்றும் இரக்கம் (5).

அன்பு தன்னால் புரக்கப்படுவார் மேலுளதாகிய காதல் (5).

அல்லிப்பாவை ஆடுவனப்பு ஆண்கோலமும் பெண் கோலமுமாய அவ்விருவரும் ஆடும் கூத்தை(33).

கராம் - முதலையுள் ஒரு சாதி (37).

வன்புலம் - குறிஞ்சியும் முல்லையும். மென்புலம்-மருதமும் நெய்தலும் (42).

கணிச்சி-குந்தாலி, மழு (42).

கலி-புகழும் அரவம் (52).

கோளி - பூவாது காய்க்கும் மரம் (58).

செம்மீன் - திருவாதிரை (60).

தளம்பு - சேறுகுத்தி (61).

அனந்தல்பறை - பறைகொட்டுவார் கை, புண்படுதலின் மந்தமாக ஒலித்தல் (62).

எருவை- தலைவெளுத்து, உடல் சிவந்திருக்கும் பருந்து கழுகு எனினும் அமையும் (64).

ஓரி -தேன் முதிர்ந்தால் பரக்கும் நீலநிறம் முசுக்கலை எனினும் அமையும் (109)

படை மடம் - வீரர் அல்லாதார் மேலும், முதுகிட்டார் மேலும், புண்பட்டார் மேலும், இளையார் மேலும் செல்லுதல் (142)

கைவழி - கையகத்து எப்பொழுதும் இருத்தலான் யாழைக் கைவழி என்றார், ஆகு பெயரான்.

இவ்வுரையாசிரியர் பதினெண்கணம் (!), முத்தீ (2), (9), மூவகை முரசம் (58) ஆகியவற்றைப் பெயர் கூறி விளக்குகின்றார்.

சில இடங்களில் மிகநயமாக இவர் விளக்கம் கூறுகின்றார். 148ஆம் பாடலில், “எய்யாதாகின்று எம் சிறு “செந்நாவே“ என்ற அடியை விளக்கும்போது, ”பொய் கூறாமையின் செந்நா“ என்றார் தற்புகழ்ந்தார் ஆகாமல் சிறு செந்நா என்றார்” என்று நயமாக உரைக்கின்றார். 219 ஆம் பாடலில்,” முழு வள்ளூரம் உணக்கும் மள்ள” என்பதற்கு, ”அரசு துறந்து வடக்கிருந்து உயிர் நீத்த உள்ள மிகுதியால் மள்ள என்றார்” என்று நயங் காண்கின்றார்.

பிட்டங் கொற்றனை வாழ்த்தவந்த வடம வண்ணக்கன் தாமோதரனார், ”மாறுகொள் மன்னரும் வாழியர் நெடிதே” (172) என்று பகைவரையும் வாழ்த்துகின்றார். இதற்கு இவ்வுரை யாசிரியர், ”மாறுகொள் மன்னரும் வாழியர் என்ற கருத்து, இவன் வென்று திறைகொள்வது அவர் உளராயின் என்பதாம்,”என்று ந ம் உரைக்கின்றார்.

பாரி மகளிரை விச்சிக்கோனிடம் கொண்டு சென்று ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டிய பாடல் (200) பரிசில் துறை என்பது பொருந்துமா என்ற வினாவுக்கு மிகநயமாக விடை கூறுகின்றார் இவ்வுரையாசிரியர். ”உலகத்து மகட் பேசிவிடக் கொடுத்தலை அன்றி, தாமே இவரைக் கொள்வாயாக என்று இரந்து கூறினமையின், இது பரிசில் துறையாயிற்று” என்பது இவர் தரும் விளக்கம்.

இத்தகைய பல சிறப்பியல்புகளையுடைய இப் பழைய உரை 266 பாடல்களுக்கு மட்டுமே உள்ளது. 267 முதல் 400 வரை உள்ள பாடல்களுக்கு டாக்டர் உ.வே. சா. குறிப்புரையும் சிறு விளக்கமும் எழுதி வெளியிட்டார். பின்னர் ஔவை சு. துரைசாமி பிள்ளை

நூல் முழுமைக்கும் சிறந்த உரை விளக்கம் எழுதியுள்ளார். இவ்வுரை பொருத்தமான பாடங்களை ஆராய்ந்து தருகின்றது. வரலாற்றுச் செய்திகளையும், சங்க காலத்து மக்கட் பெயர், ஊர் நாடுகளின் பெயர் ஆகியவற்றைக் கல்வெட்டுகளின் உதவி கொண்டு தெளிவுபடுத்துகின்றது. புலவர் வரலாற்றையும் மன்னர் களின் வரலாற்றையும் விரிவாக ஆராய்ந்து உரைக்கின்றது.

கலித்தொகை உரை

கலித்தொகைஉரை, பல சிறப்பியல்புகளைக் கொண்ட தாகும். ஆராய்ச்சிக்குத் திறவுகோலாய் உதவும் பல அரிய குறிப்புகளை அதில் காணலாம்.

கலிப்பாட்டு ஒவ்வொன்றிலும் நச்சினார்க்கினியரின் நுண்மாண் நுழைபுலம் வெளிப்பட்டு ஒளிர்கிறது. பாட்டில் அமைந்துள்ள உள்ளுறை உவமம், ஏனை உவமம், இறைச்சிப் பொருள் ஆகியவற்றைத் திணைக்கு ஏற்ப ஆராய்ந்து கூறுகின்றார். பாட்டின் துறையை விளக்கிப் பொருள் எழுதுகின்றார். வினைமுடிபுகளை முடித்துக் காட்டுகின்றார் பாட்டில் அமைந்து கிடக்கும் மெய்ப்பாட்டை இனிது வெளிப்படுத்துகின்றார் இவற்றோடு கலிப்பாட்டின் வகையைக் கூறுகின்றார்.

கலித்தொகை உரையின் சிறப்பியல்புகளை எல்லாம் நுணுகி ஆராய்ந்து சிறப்புப் பாயிரம் கூறுகின்றது:

கலித்தொகைக் கருத்தினைக் காட்சியிற் கண்டு அதற்கு
உள்ளுறை உவமமும், ஏனை உவமமும்,
தெள்ளிதின் தெரிந்து திணைப்பொருட்கு ஏற்ப
உள்ளுறை உவமத்து ஒளித்த பொருளைக்
கொள்பவர் கொள்ளக் குறிப்பறிந்து உணர்த்தி
இறைச்சிப் பொருளுக்கு எய்தும் வகையைத்
திறப்படத் தெரிந்து சீர்பெறக் கொளீஇ,
துறைப்படு பொருளொடு சொற்பொருள் விளக்கி
முறைப்பட வினையை முடித்துக் காட்டி
பாட்டிடை மெய்ப்பாடு பாங்குறத் தெரித்து
பாற்பட நூலின் யாப்புற உரைத்த
நாற்பெயர் பெயரா நடப்பக் கிடத்திப்
போற்ற இன்னுரை பொருள்பெற விரும்பியும்

என்று நச்சினார்க்கினியரின் உரைநலம் நன்கு ஆராய்ந்து கூறப் பட்டுள்ளது.

செய்யுளியல் உரையில், ”நூற்றைம்பது கலியுள்ளும் ஒத்தாழிசைக் கலி அறுபத்துஎட்டு வந்தது” (செய்-130) என்றும், நூற்றைம்பது கலியுள் கலிவெண்பாட்டு எட்டு” (செய் - 153) என்றும் கலித்தொகைப் பாடல்களின் இனத்தைக் கணக்கிட்டுக் கூறுகின்றார்.

கலித்தொகைப் பாடல்களை இயற்றிய புலவர்களைப் பற்றி ஆராய்ச்சி உலகம் பல்வேறு கருத்துக்களை வெளியிட்டுள்ளது. நச்சினார்க்கினியர் உரை, ஆராய்ச்சி உலகிற்கு ஒளிதந்து உதவு கின்றது.தோற்றுவாயில், ”ஈண்டுப் பாலைத்திணையையும் திணையாக ஆசிரியர் நல்லந்துவனார் கோத்தார் என்று கூறுக” என்றும், நூலின் இறுதியில், ”பாலை குறிஞ்சி மருதம் முல்லை நெய்தல் என இம்முறையே கோத்தார் நல்லந்துவனார்” என்றும் கூறுகின்றார். “கோத்தல்“ என்ற சொல்லை, நச்சினார்க்கினியர், (பிறர் செய்த செய்யுளைத்) தொகுத்தல் என்னும் பொருளில் ஆண்டுள்ளார். ”இவர் (பெருங்கௌசிகனார்) செய்த செய்யுளை (மலைபடுகடாம்) நல்லிசைப் புலவர் செய்த ஏனைச் செய்யுட் களுடன் சங்கத்தார் கோவாமல் நீக்குவர் அங்ஙனம் நீக்காது கோத் தற்குக் காரணம் ”(மலைபடு-145) என்ற இடத்தில் கோத்தல் என்ற சொல்லைத் தொகுத்தல் என்ற பொருளிலேயே ஆண்டுள்ளார். ஆதலின் கலித்தொகையைத் தொகைநூல் என்றும், நல்லந்துவனாரே அதனைத் தொகுத்தவர் என்றும் கருதுகின்றார் என்பது தெரிகின்றது.

நெய்தற்கலியை இயற்றியவர் நல்லந்துவனார் என்பது நச்சினார்க்கினியர் (25) ”தம் பேரறிவு தோன்ற ஆசிரியா நல்லந்துவனார் செய்யுள் செய்தார்” என்று கூறுவதால் உணரலாம்.

ஆனால், ஏனைய பகுதிகளில் அவற்றை இயற்றிய ஆசிரியர் பெயர் எதுவும் எங்கும் குறிப்பிடவில்லை. இதனை ஆராய்ச்சி உலகம் நினைவில்கொண்டு உண்மை காணமுயல வேண்டும்.

துறை விளக்கம்

அகத்திணைத் துறைகளையும் கூற்றுகளையும் மிக விரிவாகத் தொல்காப்பியத்தின் துணைகொண்டு ஆராய்கின்றார்.

நெய்தற்கலியில் “புரிவுண்ட புணர்ச்சியுள்“ (25) என்னும் பாடலின் துறைபற்றிய விளக்கம் மிக விரிவானது.

இவ்வாறே குறிஞ்சிக்கலியில் முதற்பாட்டும் இறுதிப் பாட்டும், இவர் விளக்கத்தால் அவற்றிற்குரிய துறைகள் சிறந்த விளக்கம் பெறுகின்றன.

நாடக நோக்கு

கலித்தொகைப் பாடல்கள் நாடகப்போக்கில் அமைந் துள்ளன. ஒவ்வொரு பாடலும் ஓரங்க நாடகமாய் உள்ளது. தொடங்கி வளர்ந்து சிக்கல் அடைந்து, முடியும் நாடகத்தின் பல்வேறு இயல்புகள், கலிப்பாடல்களில் உண்டு. கதை நிகழ்ச்சி இடம் உரையாடல் நாடக உறுப்பினரின் பல்வேறுவகையான பண்பு ஆகியவற்றை அவற்றில் காணலாம். முல்லைக் கலியிலும், குறிஞ்சிக் கலியிலும் பல சிறந்த ஓரங்க நாடகங்கள் இடம் பெற்றுள்ளன.

நச்சினார்க்கினியர் சிறந்த நாடக ஆசிரியரைப் போல அப் பாடல்களின் அமைப்பை நுணுகி ஆராய்ந்து நாடகப் போக்கில் அரிய உரை எழுதுகின்றார். இவரது நாடக நோக்கு நமக்கு வியப் பளிக்கின்றது.

உவமை விளக்கம்

உவமையின் சிறப்பை ஆராய்ந்து, பொருளோடு பொருத்திக் காட்டுவதில் இவர் வல்லவர். உதாரணத்திற்கு ஓர் உவமை விளக்கத்தைக் காண்போம்.

... இன நாரை,

முக்கோல்கொள் அந்தணர் முதுமொழி நினைவார்போல்

எக்கர்மேல் இறை கொள்ளும் (-126)

உரை: "அந்தணர்-காசாயம் போர்த்த குழாங்கள்". (முதுமொழி - பிரணவம்.)

"பெரிய நாரை சிறகு சிவந்திருத்தலானும் னும் மூக்குத் சரையிலே சென்று குத்தலானும் அதனை முக்கோலை ஊன்றி இருந்த அந்தணரொடு ஒப்புரைத்தார்."

உரைநயம்

பல நயமான பகுதிகள் உரைமுழுதும் உள்ளன. கீழே சிலவற்றைக் காண்போம்.

1. கொடுங் கொட்டி: கொடு கொட்டி என விகாரமாயிற்று கொடுங் கொட்டி என்றார், (சிவபெருமான்) எல்லாவற்றையும் அழித்து நின்று ஆடுதலின்.

8. முக்கோல் (அந்தணர்) அரி அயன் அரன் என்னும் மூவரும் ஒருவர் என்று சொல்லுதல் தன்னிடத்தே அமைந்த கோல் காணேம் அல்லேம் கண்டனம் என்றதனால் அங்ஙனம் போகின்றவரை அறிந்து விலக்கல் அறம் அன்று என்று போந்தேம். ஆகக் கொள்க.

37. உண்கண் மை யுண் கண்.

40. உலக்கை வயின் வயின் ஓச்சி: உலக்கையை என்னிடத்தும் நின்னிடத்தும் உயர்த்தி.

50. நல் கூர்ந்தார் செல்வமகள்: பிள்ளையான் மிடிப் பட்டாருடைய செல்வத்தை உடைய மகள்.

108.கட்குத்திக் கள்வன்" என்றது விழித்திருக்க மிண்டையைக் கொள்வான் என்னும் பழமொழி.

115. குடம் சுட்டும் நல்லினம்- இன்னதனைக் குடம் பால் போதும் என்று கருதப்படும் பசு இனம்.

129."தொல்லூழி தடுமாறி, தொகல்வேண்டும் பருவத்தால் பல்வயின் உயிரெல்லாம் படைத்தான்கண் பெயர்ப்பான் போல்",

"பல உலகங்களில் உயிர்கள் எல்லாம் பழையதாகிய ஊழிக் காலத்தே பிறந்து இறந்து திரியும்படி, அயனாய்நின்று படைத்த முதல்வன் அரனாய் அவ்வுயிர் எல்லாம் தன்னிடத்தே வந்து தொகுதலைத் தான் விரும்பும் ஊழி முடிந்த காலத்திலே தன்னிடத்தே

மீட்டு ஒடுக்கிக் கொள்கின்றவனைப்போல”

133.பொறை எனப்படுவது போற்றாரைப் பொறுத்தல்-”பொறை என்று சொல்லப்படுவது, பகைவரைக் காலம் வரும் அளவும் பொறுத்திருத்தலை”.

சொல்லும் பொருளும்

சிறைப் படுத்தியது என்ற பொருளில், “சிறைத்தது“ என்ற சொல்லை ஆளுகின்றார் (82). சில அரிய சொற்களுக்கு ஆங்காங்கே பொருளும் எழுதியுள்ளார்:

33. ஈர் - ஈர்க்குமரம்.

75. அஞ்சி அச்சுறுத்தலும் என்றாற்போல “அச்சு“ எ விகாரமாய் நின்றது.

84. பரத்தைமை, பரத்தை என நின்றது “தன் வயி உரிமையும் அவன் வயிற் பரத்தையும்“ என்றார் ஆசிரியர் ஆகலின்

91 கண்ணி - தலைமாலை.

94. “நடுவுயர்ந்து“ என்றது, நோன்புயர்ந்தது என்றாற் போ நின்றது.

பரிபாடல்

எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான பரிபாடலுக்குப் பரிமேலழகரே உரை எழுதினார் என்பது அறிஞர்கள் கண்ட முடிபு. பரிமேலழகர், திருக்குறளுக்கு எழுதிய உரைக்கு உரை கண்ட இரத்தினக் கவிராயர், நுண்பொருள் மாலையில், ”பரிபாட்டினுள் மழையிருஞ்சூல் என்பதனை முன் பின்னாகத் தொக்க இரண்டாம் வேற்றுமைத்தொகை என்றார் இவ்வுரை பாசிரியர் (குறள் 216)” என்று கூறுகின்றார். பரிபாடலைப் பதிப்பித்த டாக்டர் உ வே. சாமிநாத ஐயர் முன்னுரையில், ”நுணுகி ஆராயின், திருக்குறள் உரையிலும் இவ்வுரையிலும் (பரியாடல் உரையிலும்) ஒத்த கருத்துக்களும் ஆசிரியர்

பரிமேலழகருடைய கொள்கைகளும் பல காணலாம்“ என்று எழுதியுள்ளார்.

பரிபாடலின் உரைச் சிறப்புப்பாயிரம்.

சிற்றறி வினர்க்கும் தெற்றெனத் தோன்ற
மதியின் தகைப்பு விதியுளி அகற்றி
எல்லையில் சிறப்பின் தொல்லோர் பாடிய
அணிதிகழ் பாடத்துத் துணிதரு பொருளைச்
சுருங்கிய உரையின் விளங்கக் காட்டினள்
நீள்நிலம் கடந்தோன் தாள்தொழு மரபின்
பரிமே லழகன் உரிமையின் உணர்ந்தே

என்று பரிமேலழகரைப் புகழ்ந்து கூறுகின்றது.

பரிமேலழகர் வைணவ சமயத்தினர் என்பதற்குப் பரிபாடல் உரையும் சான்றாக உள்ளது. உரைச் சிறப்புப்பாயிரம்,

நீள்நிலம் கடந்தோன் தாள்தொழு மரபின்

பரிமே லழகன்

என்று கூறுகின்றது. பரிபாடலின் பழைய ஏட்டுப் பிரதிகளில்,

விரும்பி அருள்நீல வெற்புஇமயக் குன்றின்

வரும்பரிசு புள்ஊரும் மாலே !- சுரும்பு

வரிபாட லுன்சீர் வளர்துளவத் தோளாய்!

பரிபாட லின்சீர்ப் பயன்

என்ற பாடல் காணப்படுகின்றது. இப்பாடல் பரிபாடல் உரைக்குப் பரிமேலழகர் கூறிய கடவுள் வணக்கமாக இருக்கலாம் என்று டாக்டர் உ வே. சாமிநாத ஐயர் கருதுகின்றார்.

பரிபாடலுக்குப் பரிமேலழகர் எழுதியுள்ள உரையின் இயல்புகளைப் பற்றி ஐயர் பின்வருமாறு கூறுகின்றார்.

”இந்த உரை பலவிடத்துப் பொழிப்புரையாயும்சில இடத்துப் பதவுரையாயும்: சில இடத்துக் கருத்துரையாயும் சிறிதும் புலப்படாத சொற்களின் பழைய வடிலங்களைப் புலப்படுத்தியும் உரிய இடங்களில் இலக்கணக் குறிப்புகளை பெற்றும் சில இடத்து மிக அழகான பதசாரத்துடன் கூடியும் விளங்காத சிலவற்றைத் தக்க தமிழ் நூல் மேற்கோள்களாலும் வேதம் உபநிடதம் முதலியவற்றின் கருத்துகளாலும் விளக்கியும் மிக விரிவாக அமைந்துள்ளது.”

பொழிப்புரை

பரிமேலழகர் பரிபாடலின் சில அடிகளுக்கு ஒரு ே பொழிப்புரை திரட்டித் தருகின்றார். அத்தகைய இடங்களில்

பொருள்தெளிவும் கருத்துச்சிறப்பும் அமைந்துள்ளன.

உதாரணங்கள் இரண்டினைக் காண்போம்:

காதற் காமம் காமத்துச் சிறந்தது

விருப்போர் ஒத்து மெய்யுறு புணர்ச்சி (9: 14, 15)

உரை : ““காமத்துச் சிறந்தது காதலையுடைய காமம்: அ.்.தாவது, மெய்யுற்று அறியாதார் இருவர் அன்பொத்துப் பான்மை வகையால் தாமே மெய்யுற்றுப்புணரும் புணர்ச்சி”.

இந்திரன் பூசை இவள்அக லிகை இவன்

சென்ற கவுதமன் சினனுறக் கல்லுரு

ஒன்றிய படியிதுஎன் றுரைசெய் வோரும் (19, 50-52)

உரை: இப பூசை இந்திரன் அவ்விடத்திற்சென்ற கௌதம் முனிவன் இவன் சினன் மிகுதலால் இவன் கல்லுரு வெய்தியவாறு இதுவென்று கொண்டோற் பிழைத்த தண்டம் கூறுவாருமாய்"

வானநூற் புலமை

பரிபாடலில் பதினோராம் பாட்டில் வானநூலைப் பற்றிய குறிப்பு (1-15) இடம் பெற்றுள்ளது. நாள் கோள்களின் நிலை, சந்திரகிரணம் ஏற்படும் காலம் இவற்றைப் பற்றிய குறிப்புக்கள் விரிவாக இடம் பெற்றுள்ளன. பரிமேலழகர், மூலத்தை நன்கு அறிந்து, வானநூற் புலமையுடன் ஆராய்ந்து தெளிந்து நன்கு அப் பகுதியை விளக்குகின்றார். முடிவில் "இதனாற்சொல்லியது ஆவணித திங்கள் அவிட்ட நாளில் இக்கோள்கள் தமக்குரிய நிலமாகிய இவ் இராசிகளில், நிற்பச் சோமனை அரவு தீண்ட என்பதாயிற்று" என்று தெளிவுபடுத்துகின்றார். இவ்வுரைப் பகுதி இவர்க்கு வான நூலில் ஆழ்ந்த பயிற்சி உண்டு என்பதை உறுதிப் படுத்துகின்றது.

உரைத் திறன்

"கம்பலைத்தன்று என்பது, உரிச்சொல்லடியாகப் பிறந்த வினைத்திரிசொல்" (8-37) என்று இவர் குறிப்பிடுவது இவரது ஆராய்ச்சித் திறனைப் புலப்படுத்தும்.

"மாற்றே மாற்றலிலை" (4-53) என்ற தொடரை, "மாற்று ஏமம் ஆற்றல் இலை" என்று பிரித்து, "மாற்றுதல் தொழிலும் அதற்கு ஏமம் செய்தல் தொழிலும் உடையை அல்லை" என்று இவர் உரை எழுதி இருப்பது இவரது புலமை நுட்பத்தை வெளிப்படுத்தும்.

நயவுரை

பரிமேலழகர் நயமாக உரை காணும் இடங்கள் சிலவற்றை இங்கே காண்போம்:

3-21 தீ செங்கனலி - எல்லாம் தீகின்ற செந்நெருப்பு: எல்லாம் தீதற்குக் காரணமாகிய செந்நெருப்பு என்றவாறு.

3-31 கூந்தல் என்னும் பெயரோடு கூந்தல்- கூந்தல்மா என்று கண்டார் சொல்லும் வடிவொடு வந்த கேசி.

கூந்தலை உடைய மாவைக் "கூந்தல்" என்றும், பெயரினை உடைய வடிவைப் பெயர் என்றும் கூறினார், ஆகுபெயரான்.

கேசி குதிரையாய் வந்து பொருதான் ஓர் அசுரன் இப் பெயர் கேசம் என்னும் வடமொழி முதனிலையாக முடிந்தமையின் அதன் பொருண்மை பற்றி, "கூந்தல்" என்றார்.

3-35 வித்திடுபுலம் மேடாயிற்று-நாற்றங்கால் வண்டலிட்டு மேடாயிற்று.

7-84 பேஎ நீர் - ஆழத்தான் அச்சத்தைத் தரும் நீர்.

17-53 ஏம வைகல் - பிறவித் துன்பம் சாராத வைகல்

13-1 மங்குல் ஞாயிறு -இருளைக் கெடுக்கும் ஞாயிறு இதனை "நோய மருந்து" என்றாற்போலக் கொள்க

8-15 ஒரு நிலைப் பொயகை-வற்றாப் பொய்கை.

20-81 நீ அன்பன் எற்கு அன்பன்-நீ சால அன்பு பூண்டவள்

என்மாட்டு அன்புடையான்.

காரணம் கூறி விளக்கல்

3-77 பாழ் - புருடன் சாங்கியர் பிறிதொன்று பிறத்தற்கு இடன் ஆகாது என்ப ஆகலான், அவர் மதம் பற்றிப் புருடனைப் "பாழ்" என்றார். ஈண்டுத் தத்துவம் கூறுகின்றமையின்.

10-11 ஏணிப்படுகால் இருகோவை முதல் முப்பத்து இரு கோவை ஈறாக ஒன்றற்கு ஒன்று வடம் ஏறுதலான் மேகலையை "ஏணிப் படுகால்" என்றார்.

10-13 மூஉய் - மூடுதல் உடைமையால் பூப்பெட்டியை "மூஉய்' என்றார்.

11-88 மழபுலவர் இளைய புலவர் கல்வி தொடங்கின அளவாதலின் மழபுலவர் என்றார்.

13-29 அறி துயில் - யோக உறக்கம் ஆதலால் அறிதுயில் எனப் பட்டது.

19-98 படையும் பவழக் கொடி நிறம் கொள்ளும்-குருதி தோய்ந்துழி அல்லது அந் நிறம் இயல்பு அன்மையின் கொள்ளும் என்றார்.

11-81 அம்பா ஆடல் என்று தைந் நீராடற்குப் பெயர் ஆயிற்று. தாயோடு ஆடப்படுதலின்.

2-69 வாயடை வாயின்கண் அடுக்கப்படுதலின் உணவிற்கு வாயடை என்று பெயராயிற்று.

5-37 நொசிப்பு -மனத்தினை ஒன்றாக்கி நுண்ணியதாகக் காண்டலாதலின் சமாதி நொசிப்பு எனப்பட்டது.

உலக வழக்குக் கூறல்

மக்கள் பேச்சில் இடம்பெறும் தொடரும் சொல்லும் உரையில் எடுத்துக்காட்டுகின்றார்.

8-21 "எதிர்குதிர் ஆகின்று""-எதிர்குதிர் என்பது, ஓர் உலக வழக்கு

8-49 மாலைக்குமாலை என்றது, அடிக்கடி என்றாற்போல நின்றது

8-60 ஈதா என்பது, ஒரு மரூஉ முடிப்பு அ.்.து இக்காலத்து இந்தா என்று வழங்கப்படும். சுட்டு நீண்டது.

8-6 ஏறுமாறு என்பது பகைத்தற்கு ஓர் உலக வழக்கு.

20-13 குதுகுதுப்ப - ஆசைப்பட.

சொல்லும் பொருளும்

1-44 மடங்கல் - உலகு உயிர்களினது ஒடுக்கம்.

2-27 "நின்னிலைத் தோன்றும்" என்புழி "நிலை" என்பது இடப் பொருட்டாய் நின்றது.

3-8 தருமன்- யமன் மடங்கல் - அவன் ஏவல் செய்யும் கூற்றம்.

4-32 மருந்து - காற்று.

4-18 தாக்கு இரை - எறிந்து எடுக்கும் இரை.

5-14 சால்வ- சால்பினை உடையாய்

10-74 உறு நறவு - வெம்மை மிக்க நறவு

12-21 தேசு - செயற்கை அழகு, ஒளி - கல்வியால் வந்த நிறம்.

4-8 மணந்து தணந்தோர்-கூடிப் பிரிந்தோர்.

2-38 எதிர் கழறும் - ஒக்கும்

7-55 ஏ - இறுமாப்பு

10-33 கையறவு - ஊடல்

10-102 ஒய்வார்- ஒழுக்குவார்

11-69 தெவி - நிறைத்து

30-39 ஒய்ய-தப்ப

12-17 புட்டகம் - புடைவை

16-8 முஞ்சம் - ஒருதலையணி

19-44 கூரம் - யாழ்

இலக்கிய உரையாசிரியர்கள் - I

1. பத்துப் பாட்டு உரைகள்

பத்துப்பாட்டு எட்டுத் தொகை பதினெண் கீழ்க்கணக்கு ஆகியவை பழந்தமிழ் இலக்கியக் கருவூலங்கள். பத்துப்பாட்டு எட்டுத்தொகை ஆகியவற்றை (பதினெண்) மேல் கணக்கு என்று கூறுவதுண்டு. கணக்கு என்ற சொல், நூலைக் குறிக்கின்றது. மேல் கணக்கை, உரையாசிரியர்கள் பாட்டும் தொகையும் என்று குறிப்பிடுகின்றனர் இவற்றைப் பாடியவரைச் சங்கச் சான்றோர் என்று கூறுகின்றனர் கீழ்க்கணக்கு நூல்களைப் பாடியவரைப் பிற் சான்றோர் என்றும் கூறுகின்றனர். மேல், கீழ் என்பவை பாடலில் அடி வரையறை கருதி இட்ட பெயர்கள்.

மேல்கணக்கு, பலர் பாடிய பாடல்களின் தொகுப்பு (தொகை) நூல்கள். கீழ்க்கணக்குகளில் நாலடியார் ஒன்றினைத் தவிர மற்றவை தனித்தனிப் புலவர் பாடிய தனி

நூல்கள். பாட்டும் தொகையும் ஆசிரியப்பாக்களால் ஆனவை் கீழ்க் கணக்கு நூல்கள் வெண்பாக்களால் ஆனவை.

முச்சங்க வரலாற்றைக் கூறுகின்ற இறையனார் களவியல் உரை கடைச் சங்க நூல்களாக எட்டுத் தொகை நூல்களைக் குறிப்பிடுகின்றது. பத்துப்பாட்டைக் கூறவில்லை. இது ஆராய்ச்சிக்குரிய செய்தியாகும். அந்த உரை தோன்றிய காலத்தில் தனித்தனிப் பாடல்களாகவே வழங்கி, பின்னர்த் தொகுக்கப் பட்டிருக்கலாம்.

தமிழ்விடுதூது (56),

மூத்தோர்கள்

பாடியருள் பத்துப் பாட்டும் எட்டுத் தொகையும்

கேடில் பதினெட்டுக் கீழ்க் கணக்கும்

என்று கூறுகின்றது.

அடுத்து வரும் பகுதிகளில் இவற்றிற்கு உள்ள உரைச் நல்வங்களைப்பற்றி விரிவாகக் காண்போம்.

திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபா மாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, துரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப் மலைபடுகடாம் ஆகிய பாடல்கள் பத்தும் அடங்கிய நூல் த்துப் பாட்டு என்று பெயர் பெற்றது. இப் பாடல்களை னைவில் கொள்ளுவதற்குப் பின்வரும் பழைய வெண்பா துணைய்கின்றது.

முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை

பெருகு வளமதுரைக் காஞ்சி-மருவினிய

கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சிப் பட்டினப்

பாலை கடாத்தொடும் பத்து

பத்துப்பாட்டு முழுவதற்கும் உரை எழுதியுள்ள நச்சினார்க் னியர் உரைத்திறன்களை முன்னர்க் கண்டோம். அவருக்கு முன்னும் பத்துப்பாட்டிற்குச் சில பழைய உரைகள் இருந்தன. அவ்வுரைகளை நச்சினார்க்கினியர், பெயர் குறிப்பிடாமல் சுட்டு ன்றார். அந்த உரையாசிரியர் கொண்ட வேறு வேறு பாடங் தனைக் காட்டுகின்றார்.

திருமுருகாற்றுப் படைக்கு மட்டும் நான்கு பழைய உரைகள் நிடைத்து வெளிவந்துள்ளன.

பத்துப்பாட்டு முழுவதற்கும் பொ. வே. சோமசுந்தரனார் 5 திக அருமையான உரை எழுதியுள்ளார். இவர்க்குமுன், வை. மு. - கோபால கிரு‘ணமாச்சாரியார் பத்துப் பாட்டில் பெரும்பான் மயான பாடல்களுக்கு உரைகண்டுள்ளார். ஐயம்பெருமாள் கோனார் கல்லூரி மாணவர்கட்குப் பாடமாக வைத்த பாடல் களுக்கு உரையும் விளக்கமும் எழுதியுள்ளார். ந.

சி. கந்தையா பிள்ளை எல்லாப் பாடல்களுக்கும் பொழிப்புரை (வசனம்) தந்துள்ளார். பத்துப் பாட்டுச் சொற்பொழிவு நூலைக் கழகம் வெளியிட்டுள்ளது.

டாக்டர் மா. இராசமாணிக்கனார், பத்துப்பாட்டில் வருகின்ற இடப் பெயர்களை விரிவாக ஆராய்ந்து இன்று அவை எங்கெங்கே உள்ளன என்று தக்க சான்றுகளுடன் காட்டியுள்ளார். முற்காலத்து அரசியல் நாகரிகம் மன்னர் வரலாறு மக்கள் வாழ்க்கை ஆகியவற்றை நன்கு விளக்கியுள்ளார். இதனைச் சென்னைப் பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ளது.

ஏதேனும் ஒரு பாடலுக்கு விளக்கமும் திறனாய்வும் எழுதியவர்கள் பலர் உள்ளனர். கல்லூரிகளில் பாடமாக வைக்கப் பட்ட பாடல்கள் விளக்கம் பல பெற்றன. அவற்றைக் காண்போம்.

1. திருமுருகாற்றுப்படை: முருகக் கடவுளைப் பற்றிய ஆர்தும் படை ஆதலின், "திரு" சேர்த்து இதனைச் சைவ சமயத்தவ ஆண்டுகளாக இதனைச் சைவு சமயத்தவர் மனப்பாடம் செய்து வருகின்றனர். பத்துப்பாட்டில் போற்றிவருகின்றனர். பல முதலில் இடம் பெற்றுள்ள இந்தப் பாடலை, பதினோராம் திருமுறையில் சேர்த்துச் சிறப்பித்துள்ளனர்.

இதனைத் தனியாக ஒதும் பழக்கம் இருந்து வருகின்றது இதன் கீழ், பிற்காலத்தவர் எழுதிச் சேர்த்த பத்து வெண்பாக்கள் உள்ளன. அவற்றில், பிள்ளையார் இடம் பெறுவதால், கி.பி. ஏழாம் நூற்றாண்டிற்குப் பின் அவை தோன்றின என்பது வெளிப்படை திருமுருகாற்றுப்படையினுள் விநாயகர் இடம்பெறவில்லை. ஆதலின் இது ஏழாம் நூற்றாண்டிற்கு முன் தோன்றியது என்பது உறுதி.

சைவர்கள் பாராயணம் செய்து நாள்தோறும் வழிபாட்டில் ஒதுகின்ற சிறப்புடைய திருமுருகாற்றுப் படை, அடியவர்களின் மனக்கவலையை நீக்கும் மருந்தாகி வேண்டியவற்றை வேண்டிய வாறு நல்கும் என்று போற்றப்படுகின்றது.

நக்கீரர் தாம்உரைத்த நன்முருகாற்றுப்படையைத்
தற்கோல நாள்தோறும் சாற்றினால் முற்கோல
மாமுருகன் வந்து மனக்கவலை தீர்த்தருளி,
தான்நினைத்த எல்லாம் தரும்.

இவ்வாறு சைவ அன்பர்களால் போற்றப்படும் இப் பாடல் உரைவளம் கொண்ட சிறப்புடையது. நச்சினார்க்கினியர்க்குமுன் இதற்கு நான்கு உரைகள் தோன்றியுள்ளன.

பரிமேலழகர் உரை: சென்னை நகரில் தோன்றிச் சைவமும்

தமிழும் தழைத்தினிது ஓங்க, பல அரிய தமிழ் நூல்களை வெளியிட்டு வருகின்ற சைவ சித்தாந்த மகாசமாஜம், பல ஆண்டு களுக்கு முன், பரிமேலழகர் உரை என்ற பெயரோடு திருமுகு காற்றுப் படைக்குப் பழைய உரை ஒன்றினை வெளியிட்டது. இதனை இயற்றியவர் பரிமேலழகர் அல்லர் என்பர் ஆராய்ச்சியாளர். டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர், பத்துப்பாட்டு மூன்றாம் பதிப்பில், அடிக்குறிப்பாக இவ்வுரையைச் சேர்த்து "வேறுரை" என்று குறிப்பிட்டுள்ளார்.

பரிமேலழகர் பெயரால் வழங்கிவரும் இந்தப் பழையவுரை பல வகையில் சிறப்புடையது. செறிவும் நுட்பமும் வாய்ந்தது, நல்ல தமிழ் நடையில் ஆனது அடிதோறும் பதவுரை கூறிக் கீழே அருஞ் சொல் விளக்கம், வினைமுடிபு, இலக்கணக் குறிப்பு ஆகியவற்றைத் தருவது.

இந்த உரையை,

அரிமேல் அழகுறறூஉம் அன்பமை நெஞ்சப்

பரிமே லழகன் பகர்ந்தான் - விரிவுரைமூ

தக்கீரிஞ் ஞான்று தனிமுருகாற் றுப்படையாம்

நக்கீரன் நல்ல கவிக்கு

என்ற வெண்பா போற்றுகின்றது.

உரையாசிரியர் உரை திருமுருகாற்றுப் படைக்கு உரையாசிரியர் உரை" என்ற பெயருடன் பழைய உரை கிடைத்தது. இதனை மதுரைத் தமிழிச் சங்க வெளியீடாக (1943) ஆராய்ச்சி அறிஞர் எஸ். வையாபுரிப் பிள்ளை சிறந்த ஆராய்ச்சி முன்னுரையுடன் பதிப்பித்துள்ளார்.

இந்த உரையாசிரியர் உரைக்கும் இளம்பூரணர்க்கும் எவ் வகையிலும் தொடர்பில்லை. இவ்வுரையை நச்சினார்க்கினியர். "வசிந்துவாங்கு நிமிர்தோள்" (முருகு-106) என்ற அடிக்கு உரை எழுதும்போது, "வளைய வேண்டுமிடம் வளைந்தும் நிமிர வேண்டுமிடம் நிமிர்ந்தும் என்றும் உரைப்பர்" என்று குறிப்பிடுகின்றார்.

இவ்வுரையின், சிறப்பியல்பைப் பின்வருமாறு வையாபுரிப் பிள்ளை போற்றுகின்றார்:

"இ.ந்து ஒரு சிறந்த பழைய உரையாகும். யாவரும் அறியக் கூடியபடி மிகவும் எளிமையான நடையில் எழுதப் பெற்றிருக் கிறது. மாட்டு முதலிய இலக்கணத்தால் அடிகளைச் சிதைத்து அலைத்துப் பொருள் பண்ணாதபடி சொற்கிடக்கை முறையிலேயே பெரும்பாலும் பொருள் கொள்ளப்பட்டிருக்கிறது. ஆற்றுப் படையைக் கற்போர்க்கு இது மிகவும் உதவியாக இருக்கும்.

முன்னர்க் குறிப்பிட்ட பரிமேலழகர் உரையுடன் இந்த உரை பெரிதும் ஒத்துள்ளது.

இவையேயன்றி வேறு இரண்டு பழைய உரைகளும் கிடைத்துள்ளன. தமிழ்த் தொண்டர் வே. ரா. தெய்வ சிகாமணிக் கவுண்டர் கவிப் பெருமாள் உரையையும் பரிதி குறிப்புரையையும் கண்டெடுத்து வழங்கியுள்ளார். இவை (1959 ஆம் ஆண்டு), திருப்பனந்தாள் ஆதீனம் வெளியிட்ட திருமுருகாற்றுப்படைஉரை வளம்(ஐந்து பழைய உரைகள்: நச்சினார்க்கினியர், பரிமேலழகர், உரையாசிரியர், கவிப்பெருமாள், பரிதி) என்ற நூலில் இடம்பெற்றுள்ளன:

கவிப்பெருமாள் உரை: இது அடிகளின் பொருள் தொடர்பு நோக்கி வரையறுத்துப் பொழிப்புரையாக அமைந்துள்ளது. 80ழ விளக்கமும் இலக்கணக் குறிப்பும் தரப்பட்டுள்ளன. ஆற்றொழுக் காய்-இனிய ஓசையுடன் செல்லுகின்றது.

இவ்வுரையைப் பின்வரும் வெண்பா பாராட்டுகின்றது:

வண்டமிழ்தேர் கீரன் வளமறையாய்ச் சேந்தன்மேல்

தண்டமிழ்ஆற் றுப்படையாத் தானுரைத்தான் - ஒண்டமிழின்

தெய்வக் கவிப்பெருமாள் தேன்போல் உரைசெய்தான்"

கைவந்த நூன்முறைமை கண்டு,

பரிதி உரை: இது, அருஞ் சொற்களுக்குப் பொருள் கூறும் குறிப்புரையாகும். இப்போது கிடைக்கின்ற உரைகளில் காலத்தால் இது முற்பட்டதாக இருக்கலாம். தேவையான இடங்களில் மிகச்சுருக்கமாய் இலக்கண விளக்கம் தருகின்றது. சுருங்கச் சொல்லி விளங்கவைக்கும் திறனை இவ்வுரை முழுதும் காணலாம்.

இந்த உரையைப் பின்வரும் வெண்பா பாராட்டுகின்றது:

நக்கீரர் தாம்செய்த நன்முருகாற் றுப்படைக்குத்

தக்கவுரை சொன்ன தகுதியான்

பன்னூல் அறிந்த பரிதி மறைப்புலவன்

தொன்னூல் அறிவால் துணிந்து. மிக்குலகில்

உரை வேற்றுமை

திருமுருகாற்றுப் படைக்கு ஐந்து பழைய உரைகள் இருப்பதால் அவற்றை ஒப்பிட்டுக் காண்பது அறிவுக்கு விருந்தாய் உள்ளது: ஆராய்ச்சிக்குத் தூண்டுகோலாய் உள்ளது.

மென்தோள் பல்பிணை தழீஇத் தலைத்தந்து

குன்றுதோறு ஆடலும் நின்றதன் பண்பே

என்ற அடிகளில் உள்ள "தலைத் தந்து" என்ற தொடர் பலவாறு விளக்கப்பட்டுள்ளது. அவற்றைக் காண்போம்:

நச்: முதற்கை கொடுத்து.

பரிமே: அவ்விடத்து வந்து

உரையா: அவர்கள் (மகளிர்) களவறிந்து அவர்கட்கு இருப்பிடம் கொடுத்து.

கவி: தானும் ஒரு தலையிலே கை கோத்து

பரிதி: ஒருத்தியை எடுத்து ஒருத்திமேல் போட்டு.

இவ்வுரைகளுள் உரையாசிரியர் உரை மிகவும் பொருத்த மாய் உள்ளது. முற்காலத்து வழக்கத்தை அறிந்து எழுதிய விளக்கமாய் உள்ளது. இந்த அரிய விளக்கம் வேறு உரையாசிரியர்களால் (புறம் - 24, பழைய உரை) கூறப்படவில்லை.

பழமுதிர்சோலை (முருகு - 317) என்பது,

பழம்ூ உதிர்ூ சோலை என்றும்.

பழம்ூ முதிர்ூ சோலை என்றும்

இரு வகையாகப் பிரித்துப் பொருள் கொள்ள இடம் தருகின்றது. முற்காலத்து உரையாசிரியர்கள் இரு வகையாகவும் பொருள் கொண்டுள்ளனர்:

நச்: பழம் முற்றின சோலை

பரிமே: பழம் முதிரும் சோலை

உரையா: நற்கனிகள் உதிரப்பட்ட சோலை

கவி: பழங்கள் முற்றப் பெற்ற சோலை

பரிதி: முதிர்ந்த பழங்கள் பொருந்திய சோலை.

திருமுருகாற்றுப்படை மிகவும் சிறப்பு வாய்ந்த அழகான உவமையுடன் தொடங்குகின்றது. இந்த உவமை இலக்கிய உலகத்தின் இமயம் அணிகளுக்கு அரசு கற்பனையின் தலைமை யிடம் ' புலமையின் விளைநிலம். நீலத்தோகையை விரித்து நின்று ஆடும் பச்சை மயிலின்முன் நிற்கும் குமரக் கடவுளின் தோற்றத்தைப்பாடும் நக்கீரர்,

உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு

பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்கு (1-2)

என்று உள்ளக்களிப்போடு-பேரின்பக் காட்சியைப் பாடுகின்றார். உலகமெல்லாம் உவகை கொள்ளுமாறு இளங்கதிர் கடலில் தோன்றியதுபோல என்று உவமை கூறுகின்றார். இளஞாயிறு முருகனுக்கும், நீலக்கடல் மயிலுக்கும் உவமையாகின்றன. இக் காட்சியைப் பலவேறு உரையாசிரியர்கள் பல வகையாய் விளக்கு கின்றனர்.

நச்: சீவான்மாக்கள் உவப்ப எழுந்து, மகாமேருவை வலமாகத் திரிதலைச் செய்யும் எல்லாச் சமயத்தாரும் புகழும் ஞாயிற்றைக் கடலிடத்தே கண்டாற்போல.

உரையா: உலகத்திலுள்ள பல்லுயிர்களும் மகிழ மேருவை வலமாக, யாவர்க்கும் நேராகச் "சுழலும் தனது ஒளியாற் காட்சியின் பயன் கொள்வார் பலரும் புகழும் ஞாயிற்றைக் கடலிடத்தே கண்டாற் போல.

பரிமே: உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டு **(பிங்கலந்தை நிகண்டு.)**

ஆதலாலும் உயர்ந்தோராகிய பரம இருடிகளாய் உள்ளோர் விரும்ப. வலமாகத் திரிந்தருளுகின்ற கொண்டாடப்பட்ட எல்லாச் சமயத்தாராலும் ஆதித்தனைக் கடலிற் கண்டாற் போல

. கவி: உயர்ந்தோர் விரும்பும்படி எழுந்து மேருவை வலமாக வருகின்ற பலராலும் புகழப்பட்ட ஆதித்தன் கடலிடத்தே கண்டால் ஒத்த.

பரிதி: உலகின்கண் உள்ள எண்பத்து நான்கு இலட்சம் சீவ பேதங்களாகிய உயிர்த்தொகுதிகள். பலர் சமயத்தாரும், ஞாயிறு - இளைய சூரியன். கண்டாஅங்கு

உதயமானது போல. எல்லாச்

சைவசமயச் சான்றோர் பலர், திருமுருகாற்றுப் படைக்கு உரை எழுதி அந்த நூலைப்பரப்புவதைச் சிறந்த சமயத் தொண்டாகக் கருதிப் பணி செய்துள்ளனர். திருத்தணிகைச் சரவணப்பெருமாள் ஐயரும் ஆறுமுக நாவலரும் எழுதிய பதவுரை பல பதிப்புகள் வந்துள்ளன. வை. மு. கோபாலகிரு‘ண மாச்சாரியார், சு. அருள் அம்பலனார், எஸ். வையாபுரிப்பிள்ளை, இரா. இராதாகிரு‘ணன், எம். ஆறுமுகம் பிள்ளை, புலியூர்க் கேசிகன் ஆகியோர் உரை எழுதியுள்ளனர்.

சென்னை மாகாணத் தமிழ்ச்சங்கம் (திருநெல்வேலி) வெள்ளி விழா மலராக (1960) விளக்கவுரையை வெளியிட்டுள்ளது.

திறனாய்வு நூல்கள் சில வெளி வந்துள்ளன. தமிழறிஞர்கள் கி.வா.ஜகந்நாதன் (வழிகாட்டி, திருமுருகாற்றுப் படை விளக்கம்), டாக்டர் மொ. அ. துரையரங்கனார் (அன்பு நெறியே தமிழர் சமயம்), செ. வேங்கடராமச் செட்டியார் (பெறலரும் பரிசில்) கோதண்டபாணி பிள்ளை (திருமுருகாற்றுப்படைத் திறன்) ஆகியோர் இயற்றியவை சிறந்து விளங்குகின்றன. சொல்லுக்குச் சொல், தொடருக்குத் தொடர், அடிக்கு அடி நுண்பொருள் கண்டு, பாடலின் அமைப்பை வியந்து, இயற்கைக் காட்சிகளில் மூழ்கி உவமைகளில் திளைத்து இவர்கள் நக்கீரர் புலமை மாண்பைக் கொண்டாடுகின்றனர். சமயக்-கருத்துக்களையும் குறிப்புப் பொருளையும் வெளிப்படுத்துகின்றனர்.

தமிழ்த்தென்றல் திரு.வி.க. முருகன் அல்லது அழகு என்னும் நூலில்,

மணம்கமழ் தெய்வத்து இளநலம் காட்டி (5-290)

என்ற அடிக்கு விளக்கம் கண்டுள்ளார். இந்த வரி, அவர் நெஞ்சத்தில் ஆழப்பதிந்து நுண்பொருள் பல உணர்த்தி விரிந்த கருத்துகளைத் தந்துள்ளது. பின் வருமாறு அவர் தம் நூலைத் தொடங்குகின்றார்:

”முருகன் எவன்? முருகையுடையவன் முருகன். முருகு என்றால் என்ன? முருகு என்பது பல பொருள் குறிக்கும் ஒரு சொல். அப் பல பொருள்களுள், சிறப்பாகக் குறிக்கத்தக்கன நான்கு. அவை மணம் இளமை கடவுள் தன்மை அழகு என்பன. இந் நான்கு பொருள் அடங்கிய ஒரு சொல்லால் பண்டைத் தமிழ் மக்கள் முழு முதற் பொருளை அமைத்தது வியக்கத்தக்கது. இயற்கை மணமும், மாறா இளமையும், எல்லாப் பொருள் கனையும் கடந்து ஒளிரும் தன்மையும், அழியா அழகும் இறைவனி டத்தில் இலங்குவது கண்டு, அப் பொருள்கள் முறையே உறைதற்கு இடம் பெற்றுள்ள முருகன் என்னும் சொல்லை, அவ் இறைவனுக்குப் பழந்தமிழ் மக்கள் சூட்டியதன் திறமையை நோக்குழி அவர்களது கூர்த்தமதி புலனாகிறது”

திரு.வி.க.வின் உள்ளத்தைக் “கைபுனைந்து இயற்றாக் கவின்பெறு வனப்பு“ என்ற அடியும் பெரிதும் கவர்ந்துள்ளது.

இந்த நூல்களேயன்றி, பத்துப்பாட்டுச் சொற்பொழிவுகள் (கழக வெளியீடு), பத்துப் பாட்டுவளம் (லெ.ப.கரு இராம்நாதன் செட்டியார்), பத்துப் பாட்டும் பைந்தமிழும் போன்ற பல திறனாய்வுத் தொகுப்புக் கட்டுரை நூல்கள் வெளிவந்துள்ளன.

2. **பொருநராற்றுப் படை:** 1907-ஆம் ஆண்டு வா. மகாதேவ முதலியார் உரை எழுதியுள்ளார். கா. ஸ்ரீ. கோபாலாச்சாரியார் எழுதியுள்ள விளக்கவுரை சிறப்பாக உள்ளது. கருவிலே திருவுடையான்" என்று பெயரிட்டு, டாக்டர் மொ. அ. துரையரங்கனார் திறனாய்வு எழுதியுள்ளார்.

3. **சிறுபாணாற்றுப் படை:** நான் இதற்குத் திறனாய்வு எழுதியுள்ளேன். இதில் சிறுபாணன் சென்ற வழி,ஓய்மான் நாடு, அந் நாட்டில் உள்ள ஊர்கள் ஆகியவை விளக்கம் பெற்றுள்ளன. பாடலின் இலக்கியச் சுவை பழந்தமிழர் நாகரிகச் சிறப்பு ஆகியவை நன்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளன. பாணர்களின் கலைவாழ்வும், நல்லியக்கோடனின் பண்பும் போற்றப் பட்டுள்ளன.

4. **பெரும்பாணாற்றுப் படை:** யாழ்ப்பாணத்து அறிஞர் அருள் அம்பலனார் ஆய்வுரை வழங்கியுள்ளார். இதில் பாணர் வரலாறு விரிவாக ஆராயப் பட்டுள்ளது. தமிழறிஞர் ரா. இராகவ ஐயங்கார் எழுதியுள்ள விளக்கவுரையில், இளந்திரையன் வரலாறு வடநாட்டு மன்னர்களுடன் இணைத்துக் காட்டப்பட்டுள்ளது. இதனை அறிஞர் பலர் மறுத்துள்ளனர்.

5. **முல்லைப்பாட்டு**: மறைமலை அடிகள் சிறந்த ஆராய்ச்சி யுரை எழுதியுள்ளார். சங்கப் பாடலின் மேன்மை, இலக்கியச் சுவை ஆகியவற்றை நன்கு வெளிப்படுத்தியுள்ளார்.

6. **மதுரைக்காஞ்சி:**மதுரைக் காஞ்சிக்கு விளக்கமும் ஆய்வும் தனி நூலாக எழுதப்படவில்லை.

7. **நெடுநல்வாடை:** புலவர் உலகத்தைக் கவர்ந்த விழுமிய பாடல் இது. திறனாய்வுக் கலைஞர் கோதண்ட பாணி பிள்ளை திறனாய்ந்து தெளிதல் என்ற பெயருடன் இரண்டு நூல்கள் (சொல் நோக்கு, பொருள் நோக்கு) எழுதியுள்ளார். செ. வேங்கடராமச் செட்டியார் "புனாய ஓவியம்" என்ற பெயரிட்டு, பாடலை நுணுகி நோக்கி நுண்பொருள் கண்டுள்ளார்.

8. **குறிஞ்சிப்பாட்டு:** திறனாய்வாளர் எஸ். ஆர். மார்க்கபந்துசர்மா விளக்கம் எழுதி, பாடலின் சுவையைப் புலப்படுத்தி யுள்ளார். டாக்டர் தமிழண்ணல் மிகச் சிறந்த திறனாய்வு நூல் எழுதியுள்ளார்.

9. **பட்டினப்பாலை:** மறைமலை அடிகள், பாடலின் அமைப்பை வியந்து, ஓசை வேறுபாட்டில் திளைத்து, அணியழகில் ஈடுபட்டு, பொருள் சிறப்பில் மூழ்கித் திறனாய்வு செய்துள்ளார். ரா. இராகவ ஐயங்கார், சாமி சிதம்பரனார் ஆகிய இருவரும் எழுதியுள்ள விளக்கம் சிறந்து விளங்குகின்றன.

10. **மலைபடுகடாம்**: தனியாகத் திறனாய்வு நூல் இன்னும் தோன்றவில்லை. மதுரைக்காஞ்சி, மலைபடுகடாம் ஆகிய இரண்டும் வெளிப்படாத புதையலாய்- பலர் கண்ணில் படாத ஓவியக் கூடமாய் திறக்கப்படாத அருங்காட்சியகமாய் உள்ளன.

நச்சினார்க்கினியர் பத்துப் பாட்டு உரை

பத்துப்பாட்டிற்கு நச்சினார்க்கினியர் உரை எழுதவில்லை என்றால், பல பாடல்களின் சிறப்பான பகுதிகள், பொருள் தெளிவின்றி இருந்திருக்கும். இருளில் இருக்கும் வண்ண ஓவியமாய்ப் பார்த்துக் களிப்பாரின்றிப் போய்இருக்கும். பழந்தமிழ் இலக்கியங்களை மரபறிந்து, பொருள் தெளிவுடன் சுவையாக எடுத்து விளக்கிய பெருமை, நச்சினார்க்கினியர்க்கு உண்டு.

ஆன்றோர் புகழ்ந்த அறிவினில் தெரிந்து

சான்றோர் உரைத்த தண்டமிழ்த் தெரியல்

ஒருபது பாட்டும் உணர்பவர்க்கு எல்லாம்

உரையற முழுதும் புரைபட உரைத்தும்

என்று சிறப்பாயிரம் இவரைப் பாராட்டுகின்றது.

பத்துப்பாட்டை இவர் பலநோக்குடன் கண்டு தெளிந்து உரை எழுதுகின்றார். பாடல்களின் தலைப்பை ஆராய்ந்து அவற்றின் கருத்தை எண்ணி வியக்கின்றார். பாடலின் பொருள் முடியும்தோறும் நிறுத்தி, வினை முடிபுகளை இயைத்துக் காட்டுகின்றார். விளக்கவேண்டிய பகுதிகளை நயமாக விளக்கு கின்றார். இடையிடையே தொல்காப்பிய இலக்கணத்தைப் பொருத்திக்காட்டித் தமிழ்மரபை நினைவூட்டுகின்றார். சொற்களுக்குப் பொருள் எழுதுகின்றார். சங்ககால மக்களின் பழக்கவழக்கம், நாகரிகம், வரலாறு ஆகியவற்றை நினைவில் கொண்டு, வேண்டிய இடங்களில் தெளிவு பெறச் செய்கின்றார்.

பெயர் விளக்கம்

பத்துப்பாட்டின் பெயர்கள் யாவும் கலையழகு வாய்ந்தவை. பொருளாழம் மிக்கவை. தலைப்புகளை எண்ணிப் பார்த்து அத்தகைய சிறந்த தலைப்புகளைப் பாடலுக்கு இட்ட புலவர் பெரு மக்களின் கற்பனைத்திறனை வியக்கலாம். நச்சினார்க் கினியர் இப் பணியைப் பல ஆண்டுகளுக்கு முன்னரே தொடங்கி இருக்கிறார்.

“நெடுநல்வாடை“ என்ற இனிய தலைப்பு, ஏழாம் பாடலுக்கு உரியதாக விளங்குகின்றது. வாடை என்றும், நெடுவாடை என்றும், நெடுநல் வாடை என்றும் பெயர் சூட்டிய நக்கீரரின் கற்பனைத் சிறன் மிக உயர்ந்தது. நச்சினார்க்கினியர் புலமைக்கு இத் தலைப்பு இனிய விருந்தாய் அமைகின்றது. “நெடியதாகிய நல்ல வாடை“ என்று பொருள்கூறி, மேலும் அதில் நயங் காண்கின்றார். தலைவனைப் பிரிந்திருந்து வருந்தும் தலைவிக்கு, ஒரு பொழுது ஓர் ஊழிபோல நெடிது ஆகிய வாடையாய்“- நெடுவாடையாய் உள்ளது. ”அகத்து ஒடுங்கிப் போகம் நுகர்வார்க்குச் சிறந்த காலமாயினும் அரசன் போகம் வேண்டிப் பொதுச் சொற் பொறானாய், அப் போகத்தில் மனமற்று வேற்றுப்புலத்துப் போந்து இருக்கின்ற இருப்பு ஆதலின், அவற்கு நல்லதாகிய வாடை ஆயிற்று.” இவ்வாறு நச்சினார்க்கினியர் பாட்டின் தலைப் பிற்கு நயம் கூறுகின்றார்.

பட்டினப்பாலை என்பதைப் பின்வருமாறு விளக்கு ஒன்றார்: ”இது பட்டினத்தைச் சிறப்பித்துக் கூறிய பாலைத் நிணையாகலின், இதற்குப் பட்டினப்பாலை என்று பெயர்

கூறினார்.”

மலைபடுகடாம் என்ற தொடர், நச்சினார்க்கினியரால் சிறந்த விளக்கம் பெற்று, புதிய ஒளி பெறுகின்றது:

மலைபடுகடாஅம் மாதிரத்து இயம்ப” (348) என்ற அடிக்கு, மலைகளாகிய யானைக்கு உண்டாகின்ற ஒலி, திசைகள் எல்லாம் ஒலிப்ப“ என்று பொருள் எழுதி, “கடாம், ஆகுபெயராய் அதனாற் பிறந்த ஓசையை உணர்த்திற்று“ என்று விளக்கமும் தருகின்றார். பின்னர், ”மலைக்கு யானையை உவமித்து அதன்கண் பிறந்த ஓசையைக் கடாம் எனச் சிறப்பித்ததனால், இப்பாட்டிற்கு மலைபடுகடாம்“ என்று பெயர் கூறினார்” என்று நயம்பட உரைக் என்றார்.

மாட்டு

பத்துப்பாட்டில் இவர் “மாட்டு“ என்ற இலக்கணத்தின் பயரால், பாடல்களைச் சிதைத்தும், உருக்குலைத்தும் பொருள் எழுதுகின்றார். ”மாட்டு இலக்கணத்தான் இப்பாட்டுகள் பத்தும் செய்தார்கள் ஆதலின், இவ்வாறே மாட்டி முடித்தல் யாண்டும் வரும் என்று உணர்க“ என்று இவர் கூறி (முருகு-44) மாட்டு என்ற பெயரில் பாடல்களைச் சிதைக்கின்றார்.

இவ்வாறு, மாட்டு என்ற பெயரால் உரை கூறுவது பொருந்தாது என்பதை முன்னரே கண்டோம்.

நயவுரை

நச்சினார்க்கினியரின் கலைத்திறன் முழுவதையும் வெளிப் படுத்துதற்குரிய சிறந்த இடமாகப் பத்துப்பாட்டு விளங்குகின்றது. நயமான உரைப்பகுதிகள் சிலவற்றைக் காண்போம்:

மத்திகை வளைஇய மறிந்துவீங்கு செறிவுடை
மெய்ப்பை புக்க வெருவரு தோற்றத்து“
வலிபுணர் யாக்கை வன்கண் யவனர் (முல்லை.59-61)

என்று யவனரின் தோற்றத்தை முல்லைப்பாட்டு புனைகின்றது. யவனர் தோற்றம் நச்சினார்க்கினியர் உரையால் நன்கு விளங்கித் தோன்றுகிறது.

“புரவியை அடிக்கின்ற சம்மட்டி மறையும்படி வடிம்பு தாழ்ந்து பெருக்கும் செறிதலையுடைய புடைவை உடையினையும், அச்சம் வரும் தோற்றரவினையும், இயல்பான வலி சட்டை இட்ட அ கூடின மெய்யினையும் உடைய, தறுகண்மையினையுடைய சோனகர்“.

சில சொற்றொடர்களுக்கு இவர்தரும் விளக்கம் மிகவும் நயமானது:

திருமுருகாற்றுப் படை

4. மதன் உடை நோன் தாள் - அறியாமை உடைதற்குக் காரணமாகிய வலியினையுடைய தாள்.

7. கார்கோள்-கடல் கார்முகப்படுதலின், கடல் கார்கோள் என்று பெயர் பெற்றது.

61. செவ்வேல்-எக்காலமும் போர் செய்தலின் செவ்வேல் என்றார்.

102. வள்ளியோடு நகை அமர்ந்தன்று

காம நுகர்ச்சி இல்லாத இறைவன் இங்ஙனம் நகை அமர்ந் தான், உலகில் இல்வாழ்க்கை நடத்தற்கு என்று உணர்க.

பொருநராற்றுப்படை

159. ஏடு இல் தாமரை: (பொற்றாமரை) ஒருவன் செய்த தன்றி, தமக்கென இதழ் இல்லாத தாமரை.

176. நில்லாத உலகம்-செல்வமும் யாக்கையும் முதலியன நிலை நில்லாத உலகம்.

சிறுபாணாற்றுப்படை

139. மடவோர்-வறுமை உறுதலும் இயல்பு என்று அறியாது புறங்கூறுவோர்.

140. அழி பசி-அறிவு முதலியன அழிதற்குக் காரணமான பசி.

பெரும்பாணாற்றுப்படை

22. புலவுவாய் - கற்ற கல்வியை வெறுத்துக் கூறும் வாய்.

418. அடங்காத் தானை-ஓர் எண்ணின்கண் அடங்காத பகைவர்.

481. ஆன்று அடங்கு அறிஞர்-கல்விகள் எல்லாம் நிறைந்து களிப்பின்றி அடங்கின அறிவினையுடையார்.

குறிஞ்சிப் பாட்டு

225. வளமையின் தன் தலை தீர்ந்தன்றும் இலனே-நற் குணங்களைத் திரித்தற்கு உரிய செல்வச் செருக்கான், எந்நாளும் தன் குலத்திற்கு உரிய நற்குணங்களின் நீங்கியதும் இலன்.

மலைபடுகடாம்

40. பைதீர் பாணர்- பசுமையற்ற பாணர் என்றது கல்வி முதிர்ந்தமையின் இளமையற்ற பாணர் என்றவாறு.

398. சுட்டினும் பனிக்கும் சுரம் - தத்தம் ஊர்களிலே இருந்து நினைப்பினும் தலை நடுங்குவிக்கும் சுரம்.

445. உண்ணுநர்த் தடுத்த இடிநுண் நுவணை - தன்னை நுகர் வாரை வேறொன்றை நுகராமல் தடுத்த இடித்தலால் நுண்ணிதாகிய தினைப் பிண்டி.

சொல்லும் பொருளும்

காடு கிழாள் என்பது, இக்காலத்து "காடு காள்" என்று மருவிற்று (முருகு.259).

கல்லா இளையர்-தம் தொழிலை ஒழிய வேறு கல்லாத இளையர் (சிறுபாண்-33).

வாடுஊன் - உப்புக்கண்டம் (பெரும்பாண்-100).

கடுப்பு உடை பறவை-குளவி (பெரும்பாண் - 229).

பறி-மீன் வாரி எடுக்கும் பறி (பெரும்பாண்-265).

நோக்கு-அழகு (மதுரைக்-13).

விறலியர்- விறல்பட ஆடுதலை உடையார் (மதுரை-218)

தட்டை- தட்டப்படுதலின் தட்டை என்றார் (மதுரை-305).

தீம்புளி - கருப்புக்கட்டி கூட்டிப் பொரித்த புளி (மதுரைக்- 318)

கொழுமீன் குறைஇய துடிகண் துணியல்- கருவாடு (-320).

கவ்வை - எள்ளிளங்காய் (மதுரைக்-271).

தொய்யில்- எழுதும் குழம்பு (மதுரை-416).

நாளொடு பெயரிய விழுமரம்-உத்தரம் என்னும் நாளின் பெயர் பெற்ற உத்தரக் கற்கவி (நெடுநல்- 82).

ஒருத்தல்-யானைத் தலைவன் (மலைபடு -299)

அரி-அரிசி (மலைபடு -416).

முடுவல்- பெண் நாய் (மலைபடு - 566).

பனிக்கும் பாசறை - நோய் தீரும் மருந்துபோல் நின்றது ([illegible]-79).

உவமை விளக்கம்

பத்துப்பாட்டில் இடம்பெற்றுள்ள பல உவமைகள், நச்சினார்க்கினியர் விளக்கத்தால் நன்கு விளங்குகின்றன. இவர் உரை இன்றேல், பல உவமைகள் விளங்காமல் போய் இருக்கும். திருமுருகாற்றுப் படையில்(1-3),

உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு

பலர்புகழ் ஞாயிறு கடல்கண் டாஅங்கு

ஓவற இமைக்கும் சேண்விளங்கு அவிர்ஒளி

என்ற இனிய உவமை முருகனின் தோற்றத்தை நம் கண்முன் கொண்டு வந்து நிறுத்துகிறது. இவ்வுமையின் சிறப்பை நச்சினார்க் கினியர் நன்கு விளக்குகின்றார்:

"ஞாயிறு இருளைக் கெடுக்குமாறு போல, தன்னை மனத்தால் நோக்குவோர்க்கு மாயையைக் கெடுத்தலின் தொழில் உவமும் தன்னைக்கட்புலனால் நோக்குவோர்க்குக் கடலின் பசுமையும் ஞாயிற்றின் செம்மையும்போல மயிலின் பசுமையும் திருமேனிச் செம்மையும் தோன்றலின் வண்ண உவமமும் கொள்ளக் கிடந்தமை காண்க" என்று தம் புலமை மாண்பு வெளிப் படும் வண்ணம் நயவுரை எழுதுகின்றார்.

பட்டினப்பாலையில், காவிரி கடலோடு கலப்பதை,

மாமலை அணைந்த கொண்மூப் போலவும்

தாய்முலை தழுவிய குழவி போலவும்

தேறுநீர்ப் புணரியோடு யாறுதலை மணக்கும் (ஈட். 95-97)

என்று சிறப்பிக்கின்றது. நச்சினார்க்கினியர், இவ்விரு உவமை களைப் பின்வருமாறு விளக்குகின்றார்:

“கரிய மலையைச் சார்ந்த செக்கர் மேகம் போலவும்-இது கரிய உயர்ந்த திரையின் மீதே சிவந்த ஆற்றுநீர் பரத்தற்கு உவமை. தாயுடைய முலையைத் தழுவிய பிள்ளையைப் போலவும்-இ.ன்து ஒன்றுபடுதற்கு உவமை.“

மலைபடுகடாத்துள்,

காழ்மண்டு எ.ன்கம் களிற்றுமுகம் பாய்ந்தென

ஊழ்மலர் ஒழிமுகை உயர்முகம் தோயத்

துறுகல் சுற்றிய சோலை வாழை (129-131)

என்று அழகிய மலைக்காட்சி ஒன்று இடம்பெற்றுள்ளது. நச்சினார்க்கினியர் உவமையின் பொருத்தத்தை, ”வேல், யானையைக் குத்தினாற்போல வாழைப்பூ மலையைத் தீண்டி நின்றது என உணர்க் வாழைப்பூ உதிர்ந்து பின்பு உலராது நிற்றல் இயல்பு” என்று விளக்குகின்றார்.

நெடுநல்வாடையில், கத்தூரி முதலியவற்றை அரைக்கும் சாத்தம்மியினை நக்கீரர் கொள்உறழ் நறுங்கல் (50), என்ற உவமையுடன் குறிப்பிடுகின்றார். உவமையின் பொருத்தமும் சிறப்பும் நச்சினார்க்கினியரின் விளக்கத்தால் தெளிவு பெறுகின்றன. “கருங்கொள்ளின் நிறத்தை ஒத்த நறிய சாத்தம்மி என்பது நச்சினார்க்கினியரின் விளக்கமாகும்.

உவமையை விளக்க, இரண்டு பொருளும் மூன்று பொருளும் கூறிப் பொருத்திக் காட்டுவது இவரது இயல்பு. பட்டினப்பாலையில்,

மழைநீங்கிய மாவிசும்பின்

மதிசேர்ந்த மகவெண்மீன்

உருகெழுதிறல் உயர்கோட்டத்து

முருகமர்பூ முரண்கிடக்கை

வரியணிசுடர் வான்பொய்கை (34-38)

என்ற அடிகளுக்குப் பொருள் எழுதியபின்“ “மதியும் மீனும் பொய்கைக்கும் கரைக்கும் உவமிக்கும் பொருள். இனி, உயர் கோட்டத்தை, எல்லாரும் மதியைச்சேர்ந்த மக் வெண்மீனைப் பார்க்கைக்கு இடமாகிய கோயிலாக்கி, கோயிலும் பொய்கையும் எண்ணுதலாம். இனி, பொய்கைக் கரையிலே கோயிலாக்கிக் கோயிலும் பொய்கையும் மதி சேர்ந்த வெண்மீன்

போன்ற என்றுமாம்" என வேறு சில கருத்துகளையும் கூறுகின்றார். மலைபடுகடாத்துள்,

தாரோடு பொலிந்த வினைநவில் யானைச்

குழியிற் பொலிந்த சுடர்ப்பூ இலஞ்சி (227, 228)

என்ற இரண்டு அடிகளுக்கும் பொருள் எழுதியபின் மூன்று வேறு விளக்கங்களை, உவமையையும் பொருளையும் தொடர்பு படுத்தி எழுதுகின்றார். பெரும்பாணாற்றுப்படையில்,

குழுவித் திங்கள் கோள்நேர்ந் தாங்கு (384)

என்ற உவமையை இல்பொருள் உவமை என்று நச்சினார்க்கினியர் கூறுகின்றார். பௌர்ணமியன்றுதான் சந்திர கிரணம் ஏற்படும். ஆதலின், "பிறைமதியைப் பாம்பு தீண்டினாற்போல" என்ற உவமையை இல்பொருள் உவமை என்று இவர் குறிப்பிட்டுள்ளார்.

பத்துப்பாட்டில் - வெண்பாக்கள்

பத்துப்பாட்டில் ஒவ்வொரு பாட்டின்கீழும் வெண்பாக்கள் சில இடம்பெற்றுள்ளன. அவற்றின் எண்ணிக்கை மொத்தம் 24. அவற்றுள் முல்லைப்பாட்டின் கீழே உள்ள இரண்டு வெண்பாக் கனில் "புனையும் பொலம்படை" என்ற வெண்பா புறப்பொருள் வெண்பா மாலையில் உள்ளதாகும் (கார்முல்லை-276. நெடுநல் வாடையின் கீழே உள்ள "வாடைநலிய" என்ற வெண்பாவும் புறப்பொருள் வெண்பா மாலைக்குரியதே (வாடைப்பாசறை 170). பட்டினப்பாலையின் கீழேஉள்ள "முச்சக்கரமும்" என்ற வெண்பா பொருநராற்றுப் படையின்கீழும் எழுதப்பட்டுள்ளது.

ஏனைய வெண்பாக்களில் சிலவற்றை உரையாசிரியர்கள் மேற்கோள்களாகக் காட்டியுள்ளனர்.

நச்சினார்க்கினியரும் சிலவற்றை மேற்கோள் காட்டி யுள்ளார். பொருநராற்றுப்படையின் கீழுள்ள "ஏரியும்" என்ற வெண்பாவைப் புறத்திணையியலிலும் (31), "முச்சக்கரமும்" என்ற வெண்பாவை, பொருநராற்றுப்படை உரையிலும் (148 அடிக்கு மேற்கோள்), மலைபடுகடாம் பாடலின் கீழுள்ள "தூஉஉத்

தீம்புகை" என்ற வெண்பாவை நுன்மரபிலும் (6) மேற்கோளாகத் தந்துள்ளனர்.

யாப்பருங்கல விருத்தி யுரையாசிரியரும், (எழுத்-4), பேராசிரியரும் (செய்-62) "தூஉஉத்தீம்புகை" என்ற வெண்பாவைக் காட்டியுள்ளனர்.

எனவே, இவ் வெண்பாக்கள் பழமையானவை என்பதில் ஐயமில்லை. ஆனால், திருமுருகாற்றுப் படையின் கீழே உள்ள வெண்பாக்கள் பத்தும், பத்துப்பாட்டு ஏட்டுப் பிரதிகளில், காணப்படாமல் திருமுருகாற்றுப்படை மட்டும் இருந்த புதிய ஏட்டுப் பிரதிகளில் இருந்தன என் என்று டாக்டர் உவே. சாமிநா ஐயர் கூறுகின்றார். ஏழாம் வெண்பா, "ஒருகை முகன் தம்பியே என்று முருகனை விளிக்கின்றது. விநாயகர் தமிழகத்திற்கு வந்தது ஏழாம் நூற்றாண்டு ஆதலின் அவ்வெண்பாக்கள் தோன்றிய காலத்தை அறியலாம்.

பெரும்பான்மையான வெண்பாக்கள் பழமையானவையாக இருந்தும் அவற்றிற்கு நச்சினார்க்கினியர் உரை இல்லை. அவ்வெண்பாக்களை நச்சினார்க்கினியர் உரை எழுதி முடித்தபின் யாரேனும் சேர்த்தனரா? அல்லது அவை பத்துப்பாட்டு இயற்றிய பழம்புலவர்கள் இயற்றியவை அல்ல என்று கருதி நச்சினார்க்கினியரே உரை எழுதாமல் விட்டாரா?

இவ்வினாக்களுக்கு விடை எளிதில் கிடைக்கவில்லை!

6. பல்கலைப் புலமை

நச்சினார்க்கினியர், நூலறிவோடு நுண்ணறிவு உடையவர். பலவேறு கலைகளைக் கற்றுத் துறைபோகிய வித்தகர். பாட்டிற்குச் சொற்பொருள் கண்டு உரை எழுதுவதோடு இவர் நிற்கவில்லை. நூலில் இடம்பெறும் சமயக் கருத்து இசை நாடகம் முதலிய கலைகளைப் பற்றிய அறிவு, ஆடை அணிபற்றிய நுண்ணிய விளக்கம், உலகிலுள்ள பலஇனத்து மக்களின் பழக்க வழக்கம் பண்பாடு ஆகியவற்றை அறிந்தவர். வடமொழியும் நன்கு பயின்றவர். தமிழில் உள்ள இலக்கணம், இலக்கியம், நிகண்டு, காவியம், புராணம் ஆகியவற்றை நன்கு கற்றவர். சோதிடம், மருத்துவம் பற்றியும் கட்டடக்கலை பற்றியும் போதிய அறிவு இவரிடம் உண்டு. பயிர்வகையும் உயிர்வகையும் நன்கு அறிந்துள்ளார்.

இவர் அறிந்துள்ள பலவேறு கலைத்துறைகளை விரிவாகக் காண்போம்.

இலக்கியப் புலமை

நச்சினார்க்கினியர் தாம் உரை எழுத மேற்கொண்ட இலக் கியங்களைப் பலமுறை நுணுகிக் கற்றுப்புலமை பெற்றவர். எண்பதுக்கு மேற்பட்ட நூல்களிலிருந்து பல எடுத்துக்காட்டுகளை இவர் தந்துள்ளார். இவற்றோடு இலக்கணம், நிகண்டு முதலியவற்றிலும் இவர் சிறந்த பயிற்சி யுள்ளவர். வடமொழி யிலுள்ள பலவகை நூல்களை அறிந்தவர்.

திருமுருகாற்றுப்படை உரையில் (63,102) திருவாசகப் பாடல்கள் இரண்டினை மேற்கோள் காட்டியுள்ளார். செய்யுளியல் உரையில் திருவாய்மொழி முதலியவற்றைக் குறிப் பிடுகின்றார்.

”திருவாய்மொழி, திருப்பாட்டு, திருவாசகம் என்கின்ற கொச்சக ஒரு போகுகளில் காண்க (செய் - 149)

திருவெம்பாவை எட்டடியான் வந்து, இவ்வாறு இற்றன செய் -149).

திருவுலாப் (ஆதி உலா) புறத்துள்ளும் வாமான ஈசன் வரும் என முடித்து” (செய் -160).

பிற்காலத்தில் தோன்றிய சிற்றிலக்கியங்களாகிய பிள்ளைத் உலாச்செய்யுள், கலம்பகம் ஆகியவற்றை நன்கு தமிழ், உலா அறிந்துள்ளார் (புறத் - 29, செய் - 239).

வடமொழிப் புலமையும் சமயநூல் அறிவும்

நச்சினார்க்கினியர் வடமொழியில் உள்ள கீதையைத் தம் உரையில்,

”கண்ணன் எப்பொருளும் தானாய் இருக்கின்ற படியைக் காட்டி ஸ்ரீகீதை அருளிச் செய்து எல்லாரையும் போதித்தாற் போல“ (மதுரைக் - 763) என்று குறிப்பிடுகின்றார்.

வேள்வி செய்வதற்குரிய முறை,பொருள், சடங்கு ஆகிய வற்றைச் சீவக சிந்தாமணியில் இலக்கணையார் இலம்பகத்தில் (2462,-68) தெளிவாக விளக்குகின்றார்.

பத்துப்பாட்டில் (முருகு-180) முத்தி என்பதனை "ஆகவனீயம் தக்கிணாக்கினி, காருகபத்தியம்" என்று கூறுகின்றார்.

நான்மறை,ஆறங்கம் எவை எவை என்பதைப் பல இடங் களில் தெளிவுபடுத்துகின்றார், (தொல்-பாயிரம் கலி-1. புறத் - 20.)

அந்தணர் முதலிய சொற்களுக்கு, பொருள் பின் வருமாறு உரைக்கின்றார்:

"அந்தத்தை அணவுவார் அந்தணர் என்றது வேதாந் தத்தையே நோக்குவார் (முருகு-96, கலித்-ஐ).

"வேதாந்தத்தை எக்காலமும் பார்ப்பார் (மதுரை -474).

இருபிறப்பாளர் - உபநயனத்துக்கு முன்பு ஒரு பிறப்பும், பின்பு ஒரு பிறப்புமாகிய இருபிறப்பினையும் உடைய அந்தணர் (55-182).

கந்தழி - ஒரு பற்றுக்கோடின்றி அருவாகித் தானே நிற்கும் தத்துவம் கடந்த பொருள்.

நச்சினார்க்கினியர் தம் சமயப்புலமையும் கொள்கையும் வெளிப்படும் வகையில் உரை எழுதும் இடங்களில் சில:

உலகம் உவப்ப சீவான்மாக்கள் உவப்ப (முருகு-1)

பெரியோர் மேஎய்-சீவன் முத்தராய் இருப்பார் இடதிடி சிலகாலம் பொருந்தி நின்று (மதுரை-473).

நின் என்றது சீவான்மாவை நின் அவலம் கெடுக நின்னிடத்து உண்டாகிய மாயை இனிக் கெடுவதாக (207-ஆ இத்தகைய இடங்களில், நச்சினார்க்கினியர் தம் சமயத் கொள்கையை வெளிப்படுத்தியுள்ளார்.

நிலநூல் அறிவு

சங்க இலக்கியங்களில் கூறப்படும் ஊரும், நாடும், ஆறும், மலையும் பலவாகும். அவை இன்று எங்கெங்கே உள்ளன என்று அறிந்து கொள்வது சங்க இலக்கியப் பயிற்சிக்குப் பெரிதும் துணை செய்யும். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட இடங்களின் பெயரை நாம் இன்று அறிந்து இன்புறத் துணை செய்கின்றார் நச்சினார்க்கினியர்.

பட்டினப்பாலை குறிப்பிடும் "காழகம்" என்பதனை (பட்-19) கடாரம் என்றும் திருமுருகாற்றுப்படையில் வரும் "ஏரகம்" என்பதனை (முருகு -189) மலைநாட்டகத்து ஒரு திருப்பதி என்றும் சிறுபாணாற்றுப்படை குறிக்கும் "மதிலொடு பெயரிய பட்டினம் என்பதனை (சிறுபாண்-153) எயிற்பட்டினம் என்றும் அறிந்து எழுதுவது போற்றத்தக்கதாகும்.

மலைபடுகடாம் குறிப்பிடும் "சேயாறு" என்பதைச் "சேயாறு அவ்வியாற்றின் பெயர்" (மலைபடு-476) என்று கூறித் தம் நில நூல் அறிவைப் புலப்படுத்துகின்றார்.

கலைகள்

இசை, நாடகம் முதலிய கலைகளைப்பற்றி ஆராய்ந் துள்ளார். "பாட்டு காமத்தை விளைவித்தலின், யாழை வாசித்து" என்று இவர் கூறுவது கருதத் தக்கது (மதுரை-558).

பத்துப்பாட்டில் வரும் யாழ் என்னும் பண்டை இசைக் கருவியின் நுட்பங்களை எல்லாம் இவர் நன்கு தெரிந்து விளக்குகின்றார். இவரது விளக்கம் இன்றேல் நாம் யாழ்க்கருவி பற்றிய பல செய்திகளை அறிந்திருக்க முடியாது. யாழின் தோற்றம், உறுப்புகளின் அமைப்பு, அளவு ஆகியவற்றோடு அவை செய்தற்குரிய மரங்களையும் இவர் கூறுகின்றார். (பொருந-22. இசைகளின் பெயர்களையும் குறிப்பிடுகின்றார்.

துணங்கை முதலிய கூத்து வகைகளை இவர் நன்கு விளக்கு கின்றார். திருமுருகாற்றுப்படை உரையில், (56)

பழுப்புடை இருகை முயக்கி அடிக்க,

துடங்கிய நடையது துணங்கை யாகும்

என்று துணங்கைக் கூத்தை விளக்குகின்றார்.

ஆடுமகளிராகிய விறலியரை "விறல்பட (மெய்ப்பாடு தோன்ற) ஆடுதலையுடையார்" என்று விளக்கி அறிமுகப் படுத்து கின்றார் (மதுரை -218)

பாணர், கூத்தர் ஆகிய கலைஞர்களைப் பற்றி இவர் பின் வருமாறு கூறுகின்றார்:

எரும், இசைப்பாணரும் யாழ்ப்பாணரும், மண்டைப் பாணரும், பாணரும் எனப் பலராம். பொருநரும் ஏர்க்களம் பாடுநரும் போர்க்களம் பாடுநரும் பரணிபாடுநரும் எனப் பலராம்"(40-36).

"கூத்தர்-நாடக சாலையர், தொன்றுபட்ட நன்றும் தீதும் கற்றறிந்தவற்றை அவைக்கு எல்லாம் அறியக் காட்டுதற்கு உரியர்" (-27)

"ஆடல் தொழிற்கு உரியோரும் பாரதி விருத்தியும் விலக்கியற் கூத்தும் கானக் கூத்தும் கழாய்க் கூத்தும் ஆடுபவர்" (40கூ-36).

நாடகத்திற்கு இவர் தரும் விளக்கம் மிகவும் சிறப்பு வாய்ந்தது. அகத்திணையியலில் (3) "யாதானும் ஒரோவழி ஒரு சாரார்மாட்டு உலகியலான் நிகழும் ஒழுக்கத்தினை எல்லார்க்கும் பொதுவாக்கி இடமும் காலமும் நியமித்துச் செய்யுள் செய்தல்" என்பது இவர் தரும் விளக்கம்.

சங்க காலத்தில் மகளிர் அணிந்த பலவகை அணிகளை நச்சினார்க்கினியர் நன்கு அறிந்து விளக்குகின்றார். அணிகளைப் பற்றி இவர் தரும் விளக்கங்களைப் பத்துப்பாட்டிலும் (முருகு-16, 84) மருதக் கலியினும் (20) கண்டு மகிழலாம். தமிழர் நாகரிகத்தை அறிய விரும்புவர்க்கு இவரது விளக்கம் பெரிதும் உதவும்.

வீட்டின் பல்வேறு பகுதிகளை "மண்டபம் கூடம் தாயக் கட்டு அடுக்களை" என்று விளக்குகின்றார். (மதுரை-358).

சமையல் கலையிலும் இவரது நாட்டம் சென்றுள்ளது. "தீம்புளி" என்பதனைக் கருப்புக் கட்டி

கூட்டிப் பொரித்த புளி என்று (மதுரை-318) விளக்குகின்றார். ஊறுகாயைச் சங்க நூல்கள் “காடி “ என்று குறிப்பிடுகின்றன. நச்சினார்க்கினியர் ”ஊறுகறி” என்றும், “புளியங்காய் நெல்லிக்காய் முதலியன ஊறவிட்டு வைத்தவை“ என்றும் கூறுகின்றார். (பெரும் - 310, 57).

மருத்துவம், சோதிடம் முதலியவற்றில் இவர்க்குப் புலமை உண்டு என்பதை, நெடுநல் வாடை (72-5) பதுமையார் இலம்பகம் (1280-90) ஆகியவற்றின் உரைகளால் அறியலாம்.

வாழ்வியல்

உலகம் பலவகை என்பது பழமொழி. இந்த உ எத்தனையோ வகையான மக்கள் வாழ்கின்றனர். அம் மக்களில் வாழ்க்கையில் எத்தனையோ பழக்கவழக்கங்கள், மேடு பள்ளங்கள் உள்ளன. நச்சினார்க்கினியர் அந்தண குலத்தில் பிறந்து, தம் குலத்துப் பழக்கவழக்கங்களைப் போற்றி வாழ்ந்தவர். எனினும் அவர் தம் காலத்து மக்களின் வாழ்க்கையை நு ஆராய்ந்து பல செய்திகளைத் தெரிந்து கொண்டிருக்கின்றார்.

நிலம் உழுது பயிர்செய்யும் உழவர் பேச்சை, ”ஒரு சால் இர சால் என்றல் உழவுத் தொழிற்கு மரபு” (பெரும்-197) என்று நச்சினார்க்கினியர் குறிப்பிடுகின்றார்.

பெரும்பாணாற்றுப்படையில், முற்காலத்தில் தமிழ் நாடெங்கும் நடமாடிய வண்டியின் தோற்றமும் அதன் பல்வேறு உறுப்புக்களும், தெளிவாக விளக்கப்பட்டுள்ளன (45-50) நச்சினார்க்கினியர், வண்டியின் ஒவ்வொரு உறுப்பையும் நன்கு அறிந்து, அவற்றின் பெயர்களைப் பொருள் அறிந்து விளக்குகின்றார்.

குறிஞ்சி நிலத்தில் தினைப்புனம் காக்கும் வேட்டுவ மகளிர் கிளிகளை விரட்டத் தட்டை என்னும் ஒரு கருவியை வைத் திருந்தனர் என்று குறிஞ்சிப்பாட்டு குறிப்பிடுகின்றது (43)

தட்டை என்பதை ”மூங்கிலைக் கண்ணுக்குக் கண் உள்ளாக நறுக்கிப் பலவாகப் பிளந்து ஓசையுண்டாக ஒன்றிலே தட்டுவதோர் கருவி” என்று இவர் விளக்குகின்றார்.

முல்லை நிலத்தில் ஆடு மாடு மேய்க்கும் இடையர் தோற்றத்தைப் பெரும்பாணாற்றுப்படை ஓவியம் தீட்டியுள்ளது (169-175). நச்சினார்க்கினியர் இடையரின் உடை, பழக்கவழக்கம் ஆகியவற்றை உணர்ந்து இப் பகுதிக்கு உரை எழுதுகின்றார்.

மதுரைநகர்த் தெருவில், வெற்றிலைபாக்கு விற்போரை,

தகைசெய் தீஞ்சேற்று இன்னீர்ப் பசுங்காய்

நீடு கொடி இலையினர் (400, 401)

என்று மதுரைக்காஞ்சி குறிப்பிடுகின்றது. நச்சினார்க்கினியர் ”உடம்பிற்கு அழகைக் கொடுக்கும் இனிய கருங்காலி சீவிச் காய்ச்சின களிக்கலந்த இனிய நீரினையுடைய பசியபாக்கு” என்று பாக்கு வேகவைத்துப் பக்குவப்படுத்தும் முறையினை அறிந்து எழுதுகின்றார்.

யானைப்பாகர், ”யானைப் பேச்சான வடமொழி கற்று. அப்புது அப்புது, அது ஆது, ஐ ஐ என்று கூறி யானையை ஓட்டுபவர்” என்று இவர் கூறுகின்றார் (முல்லை-36, சீவக-1834).

அந்தணராகிய நச்சினார்க்கினியர், எளிய மக்கள் உண்ணும் புலால் முதலிய உணவு வகைகளையும் தெளிவாக அறிந்திருப்பது நமக்கு வியப்பைத் தருகின்றது.

சிறுபாணாற்றுப்படை குறிப்பிடும் "அலவன் கலவை" (195) என்பதனை, ஞெண்டும் பீர்க்கங்காயும் கலந்த கலப்பு" என்று எழுதுகின்றார். பெரும்பாணாற்றுப்படை கூறும் "வாடு ஊன்" என்பதற்கு (100) உப்புக்கண்டம் என்றும், மதுரைக் காஞ்சியில் வரும் (320). "கொழுமீன் குறைஇய துடிக்கண் துணியல்" என்பதற்குக் "கருவாடு" என்றும் பொருள் கூறுகின்றார்.

உயிரியல்

விலங்கு, பறவை முதலிய உயிர்களைப் பற்றியும் நச்சினார்க் கினியர் அறிந்துள்ளார். அவ்வுயிர்களின் தோற்றம் பழக்க வழக்கம், உணவு, உறையுள் ஆகியவற்றையும் உரையில் கூறுகின்றார்.

முல்லைப்பாட்டு, யானைக்கு "இன்குளகு" தந்ததாய்க் குறிப்பிடுகின்றது. (33) அதிமதுரத் தழை என்று இவர் யானைக்கு விருப்பமான தழையினைக் கூறுகின்றார்.

மருதக்கலிப் பாடலில் (31) குதிரைக்கு உரிய பலவகை அணிகள் கூறப்படுகின்றன. இவர் அவற்றின் வடிவம், அணி விக்கும் முறை, அணிய வேண்டிய உறுப்பு ஆகியவற்றை நன்கு அறிந்து விளக்குகின்றார். (கலி. 96, 7-21). மதுரைக்காஞ்சியுள் குதிரைக்கு ஐந்து கதியும் பதினெட்டுச் சாரியும் கற்பிக்கப்படும் என்கின்றார் (389).

மக்கள் வளர்க்கும் பன்றியைப் பற்றிய குறிப்பு ஒன்று பெரும் பாணாற்றுப்படையில் வருகின்றது (339 344). ஊனுக்காக வளர்க்கப்படும் ஆண்பன்றி, பெண்பன்றிகளுடன் புணர்ச்சிக்குச் சேராது என்று அப் பாடல் குறிப்பிடுகின்றது. (ஆண்பன்றி பெண்பன்றியைப்) "புணரின் கொழுப்பு இன்றாம்" என்பது இவரது விளக்கம்.

அன்னப் பறவைகளில் கறுப்புநிற அன்னமும், வெள்ளை நிற அன்னமும் உண்டு என்று கூறுகின்றார் (சீவக 930 பெரும்: 317). அன்னப் பறவை தாவிப்பறக்கும் என்றும் அறிந்துள்ளார் (நெடுநல்-91)

பாம்புகளின் இயல்பறிந்து இவர் எழுதும் இடங்கள் ப உள்ளன. மலைப்பாம்பு பாத்தன் (குறிஞ்-259) எனப்படும். இதனை இவர், பெரும்பாம்பு என்கின்றார். இரவில் பாம்பு இரை தேடும் போது, தன்னிடம் உள்ள மாணிக்கத்தை உமிழும் என்று முய மரப் பொந்துகளில் கூறுகின்றார். (குறிஞ்-221), பாம்புகள் பழைய வாழும் என்பதை இவர் அறிந்துள்ளார் (பெரும்-232).

கடலில் வாழும் மீன்களில் "பனைமீன்" என்பது மிகவும் பெரியது. அது ஒளிமிக உடையது. அந்த மீனைப் பற்றி நன்கு அறிந்து மதுரைக் காஞ்சியில் (375) பனைமீன் வழங்கும் வளைமேய் பரப்பின், என்பதற்கு "பனை மீன் என்னும் சோதி உலாவும் சங்கு மேய்கின்ற கடலிடத்தே" என்று விளக்குகின்றார்.

பயிரியல்

தமிழ்நாட்டில் உள்ள பயிர்வகைகளைப் பற்றிய அறிவு இவர்க்கு உண்டு.

சுவை மிகுதியாக உடைய பலாப்பழத்தில் சுளைகள் மிகுதி யாக இருப்பதில்லை.என்றும் (பெரும் 78), தேங்காய் பழுத்தால், அதன் அடிப்பகுதி மூன்றாகப் புடைத்து இருக்கும் என்றும் (பெரும்.364) இவர் அறிந்திருக்கின்றார்.

நறைக்காய் என்பதற்கு 'நறு நாற்றத்தை உடைய காய் அது சாதிக்காய்" என்றும் (முருகு-190), யாமரம்-ஆச்சாமரம் என்றும் (மலைபடு. 429) இவர் கூறுவது இன்றும் நாம் அவற்றை அறிந்து கொள்ளத் துணை செய்கின்றது.

கண்பு என்பதற்குச் சண்பங்கோரை என்று பொருள் எழுதி இன்றும் நாம் அதனைக் கண்டுமகிழத் துணை செய்கின்றார் (-220).

அகராதிக் கலைஞர்

இவர் சிறந்ததோர் அகராதிக் கலைஞர். பெரிய தமிழ் அகராதி ஒன்றை உருவாக்கவல்ல புலமைத் திறனும் சொல்லா ராய்ச்சியும் சொற்களஞ்சியமும் இவரிடம் உண்டு. விலங்கு, பறவை, மரஞ்செடிகள், மக்களால் ஆக்கப்பட்ட செயற்கைப் பொருள் ஆகிய பல்வேறு பொருள்களைப்பற்றிய சொற்களையும், ஒரு பொருளைப்பற்றிய பல சொற்களையும் பல பொருளைக் குறித்த ஒரு சொல்லையும் இவர் நன்கு அறிந்துள்ளார்.

பத்துப்பாட்டில் வரும் "அரி" என்ற சொல்லுக்கு இவர் பலவேறு பொருள்களை இடம்நோக்கிக் கூறுகின்றார். அவற்றைக் காண்போம்.

அஞ்சிறை வண்டின் அரிக் கணம் (முருகு-76) அரி அழகு

பலர்புகழ் மூவரும் (முருகு-162). அயன் அரி அரன் என்னும் மூவரும் (திருமால்),

அரிமயிர் முன்கை (பொருந-32) அரி-ஐம்மை (மென்மை).

அரி ஏர் உண்கண் (சிறுபாண்-215 அரி-செவ்வரி (கோடு)

அரி செத்து உணங்கிய (பெரும்பாண்-473) அரி-ஞாயிறு.)

அரி தேர் நல்கி (பெரும்பாண்-490)

அரி-பொன்.வன்கை வினைஞர் அரி பறை (மதுரைக் -262) அரித்து எழுகின்ற பறையோசை, அரி - அரித்தல்.

அரி பொன் சிலம்பு (மதுரைக்-444) அரி-சிலம்பின் உள்ளே இடும் மணி.

அரி ஞிமிறு ஆர்ப்ப (மதுரைக்-684) அரி- வண்டு.

அரி மா அன்ன (பட்டினப்-298) அரி-சிங்கம்.

நெல்லின் பல அரி அன்ன (மலைபடு 413) அரி -அரிசி

வெள்ளரி வெண் சோறு (மலைபடு - 465) அரி - மாமிசத் துண்டு.

அறைக் கரும்பின் அரி நெல்லின் (பொருந-193) அரி-அறுத்தல்

கணச் சிதல் அரித்த (சிறுபாண்-133) அரித்த-தின்ற.

இவ்வாறு நச்சினார்க்கினியர் அரி என்ற சொல்லுக்கு அழகு, திருமால், மென்மை, கோடு, ஞாயிறு, பொன், அரித்தல், மணி, வண்டு, சிங்கம், அரிசி, மாமிசத் துண்டு, அறுத்தல், தின்னல் அகிய பல பொருள்களைத் தருகின்றார். இத்தகைய சொற் செல்வம் மிகுந்த நச்சினார்க்கினியரை அகராதிக் கலைஞர் என்னலாம்.

நோக்கு என்ற சொல்லுக்கு நச்சினார்க்கினியர் பார்வை, அறிவு, அழகு, கண் முதலிய பொருள்களை இடத்திற்கு ஏற்ற வகையில் கூறுகின்றார்.

மான் நோக்கின் (பட்-149)-மான் போலும் பார்வை.

நுழைந்த நோக்கின் கண்ணுள் வினைஞர் (மதுரைக் 17, 18). –

கூரிய அறிவினையுடைய சித்திரகாரிகள்.

நோக்கு விளங்க (மதுரைக்-13)-அழகு விளங்க.

நோக்கு விசை (மதுரைக்-486)-கண்பார்க்கும் விசை.

மக்கள் வாழ்வும் பண்பாடும்

நச்சினார்க்கினியரின் உரையைக் கொண்டு அவர் காலத்து மக்கள் வாழ்வையும் பண்பாட்டையும் அறிய முடிகின்றது.

இவர் காலத்தில் குமரக் கோட்டம், பிரமக் கோட்டம் ஆகிய கோயில்கள் இருந்தன. ஆசீவகப்பள்ளியும், நிக்கந்த கோட்டமும் இருந்தன. (எழுத். (153), நூற்றுக்கால் மண்டபம் இருந்தது (எழுத். 472). சிவன் கோயில்களில் இருந்த தெய்வங்களை இவர்காலத்து மக்கள் நாயன்மார் என்று வழங்கினர் (மதுரைக் - 445). கோயில்களிலும் செல்வர் மனைகளிலும் பொன் அகலும் நெய்யகலும் சுடர்விட்டன (எழுத். 160). கார்த்திகைத் திங்களில் கார்த்திகை நாளில் விளக்குகள் ஏற்றப்பட்டன. (புறத்-35). மக்கள்

அமாவசையன்று உண்ணாநோன்பு இருந்தனர் (எழுத். -223).

பிணத்தைக் குடங்களில் இட்டுப் புதைத்தனர் (எழுத்.-354)

தமிழ் நூல், தமிழ் யாழ் (எழுத். -128), தமிழ்க் கூத்து (385), இராஅக் கூத்து (227) என்ற உதாரணங்கள் அக்காலத்துக் கலைகளை நினைவூட்டுகின்றன.

ஆண் பெண் ஆகிய இருபாலரும் உடுத்தும் உடையைப் புடவை என்ற சொல்லால் இவர் காலத்து மக்கள் வழங்கினர்ம (மதுரைக்-513). பக ولا

செல்வம் படைத்த மக்கள் கோவேறு கழுதைமீதும், சிவிகையிலும் சென்றனர் (பொருளதி-212).

இவர் காலத்தில் வழுதுணங்காயும் (கத்தரிக்காய்) முந்திரிகைப்பழமும் (திராட்சை கொடி முந்திரி எனப்பட்டது.) தமிழகத்தில் பயிராயின (மதுரை - 529), புளியங்காயும் நெல்லிக்காயும்

ஊறுகாயாகப் போட்டுப் பயன் படுத்தப்பட்டன (பெரும்.-57).

போர்க்காலத்தில் அம்பும் பிறவகைக் கருவியும் பயன் பட்டன. ஏஎக்கொட்டில், சாலை, துளை, புழை (எழுத்.-277) என்ற உதாரணங்கள் நினைக்கத்தக்கவை. குதிரையை வீரர்கள் மத்திகையால் (சாட்டை) அடித்து ஓட்டினர் (எழுத்.-(202): போரில் அம்பு ஏறியும், வேல் குத்தியும் வடுப்பட்ட வீரர்கள் அவ் வடுக்களை "இ.ஃது ஓர் ஏறு இ.ஃது ஓர் குத்து" என்று சுட்டிக் காட்டிப் பெருமையோடு பேசினர் (சொல்-119).

இவர் காலத்தில் அண்ணாத்து ஏரியும், திட்டாத்துக் குளமும் பலரும் அறிந்த சிறப்புடன் விளங்கின் (எழுத்-226).

கொற்றங்குடி, கொற்ற மங்கலம், சாத்தங்குடி, சாத்த மங்கலம், வேட்டங்குடி, வேட்டமங்கலம் ஆகிய ஊர்கள் சிறப் புடன் இருந்தன (எழுத்-350).

மதுரைக்காஞ்சியில் வரும்,

பரதர் தந்த பல்வேறு கூலம்

என்ற அடிக்கு "செட்டிகள் கொண்டு வருவதால் மிக்க பலவாய் வேறுபட்ட பண்டங்கள்" என்று பொருள் எழுதுகின்றார். இவர் காலத்தில் கடல் வாணிகத்தில் ஈடுபட்டிருந்த வணிகர்கள் "செட்டிகள்" எனப்பட்டனர்."

மந்திரங்களைத் தமிழில் சொல்லிச் சபிக்கும் வழக்கம் இவர் காலத்தில் இருந்தது.

ஆரியம் நன்று தமிழ்தீது எனவுரைத்த

காரியத்தால் காலக்கோள் பட்டானைச்-சீரிய

அந்தண் பொதியில் அகத்தியனார் ஆணையாற்

செந்தமிழே தீர்க்க சுவா

என்ற வெண்பாவைக்காட்டி, "தெற்கில் வாயில்திறவாத பட்டி மண்டபத்தோர் பொருட்டு நக்கீரர், ஒருவன் வாழவும் சாவவும் பாடி இன்னவாறு ஆக எனச் சவித்தற் பொருட்டு வந்த மந்திரம்" என்று உரைக்கின்றார் (செய்-178).

தானே தனக்கு நிகர்

மறைமலையடிகள் திருவொற்றியூர் மும்மணிக் கோவையுள் (19,71 - 74),

தமிழ்வரம்பு உணர்ந்த கமழுறும் அறிவினும்

உரைத்திறம் நிலையிடும் வரைப்படா விறலினும்

தானே தனக்கு நிகர்என விளங்கிய

நச்சினார்க்கினியனும்

என்று பாராட்டுகின்றார்.

இவரது உரைகளைக் கற்கும் தமிழன்பர் இவரை நோக்கி,

எல்லாம் திருச்செவியில் ஏறும்படி உரைக்க

வல்லாய்! உன்போல் எவர்க்கு வாய்க்குமே? (தமிழ்விடுதூது: 264)

என்று வியந்து போற்றுவர்.

3. பதினெண் கீழ்க்கணக்கு உரைகள்

பதினெண் கீழ்க்கணக்கில் உள்ள பல நூல்கள், வச்சிர நந்தி மதுரையில், நான்காம் தமிழ்ச்சங்கம் நிறுவித் தமிழ் வளர்த்த காலத்தில் தோன்றியவை என்று ஆராய்ச்சியாளர்கள் கருது கின்றனர்.

"பன்னிரு படலம்" கீழ்க்கணக்கைப்பற்றி

அடிநிமிர் வில்லாச் செய்யுள் தொகுதி

அறம்பொருள் இன்பம் அடுக்கி அவ்வகைத்

திறம்பட வருவது கீழ்க்கணக் காகும்.

என்று கூறுகின்றது. கணக்கு என்ற சொல்லுக்கு நூல் என்பது பொருள். கீழ் என்பது, பாடலின் குறுகிய அளவைக் குறிக்கின்றது.

"வனப்பியல்தானே" என்ற தொல்காப்பிய (செய்யுளியல்) நூற்பாவில், பேராசிரியர் "கீழ்க்கணக்கு" நூல்களைக் குறிப்பிடு கின்றார்.

பதினெண் கீழ்க்கணக்கின் பெயர்களை,

நாலடி நான்மணி நானாற்பது ஐந்திணைமுப்

பால்கடுகம் கோவை பழமொழி மாமூலம்

இன்னிலைசொல் காஞ்சியுடன் ஏலாதி என்பவே

கைந்நிலைய வாம்கீழ்க் கணக்கு

என்னும் பழைய வெண்பா குறிப்பிடுகின்றது. இந்தப் பாடலில் உளநூலின் பெயர்களை 1885-இல் சி.வை. தாமோதரம் பிள்ளை ராயத் தொடங்கினார். அவர் தொடங்கி வைத்த ஆராய்ச்சி னர்ந்தது. பலர் பங்கு கொண்டனர்.

முப்பால் என்பது எது? திருக்குறளா? கடுகம் என்பதற்கு அடை மொழியா?

இன்னிலை, கைந்நிலை என்பவை தனித்தனி நூல்களா? இன்னிலை சொல்" என்பது காஞ்சிக்கு அடைமொழியா? இரண்டும் நூல்கள் ஆயின், அவை எங்கே?

இத்தகைய ஆராய்ச்சி நடந்து கொண்டிருக்கும்போது இன்னிலை" என்ற பெயருடன் புதிதாய் ஒரு போலி நூல் தோன்றிப் பழையநூல் போல் மருட்டியதால்,வ.உ.சி. யால் அ.ச்.து உரையுடன் பதிப்பிக்கப்பட்டது.

காலம் செல்லச் செல்லத் தெளிவு பிறந்தது. முப்பால் என்பது திருக்குறளே என்று முடிவு செய்யப்பட்டது. இன்னிலை என்பது "காஞ்சி"க்கு அடைமொழி என்பது தெரிந்தது. கைந்நிலை என்பது பழைய நூல் என்பதை, தொல்காப்பியம் இளம்பூரணர் பரை அறிவித்தது. அவ்வுரை கைந்நிலைக்குரிய சில வெண் பாக்களை மேற்கோள்காட்டி இருப்பதை அறிந்து, அந்த நூல் ஐந்திணை கூறும் அகப்பொருள் நூல் என்று தெளிய முடிந்தது. அதனால் "இன்னிலை" பிற்காலத்துப் பொய்ந்நூல் என்பது உறுதி பாயிற்று.

இனி, மேலே உள்ள வெண்பா கூறுகின்ற 18 நூல்களின் பெயர்களைக் காண்போம்:

1. நாலடி-நாலடியார்

2. நான்மணி-நான்மணிக்கடிகை

3.6. நானாற்பது -இனியவை நாற்பது, இன்னா நாற்பது, கார் நாற்பது, களவழி நாற்பது.

7.10. ஐந்திணை- திணைமொழி ஐம்பது, ஐந்திணை எழுபது, ஐந்திணை ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது.

11. முப்பால் திருக்குறள்

12. கடுகம் - திரிகடுகம்
13. கோவை -ஆசாரக் கோவை
14. பழமொழி -பழமொழி நானூறு
15. மாமூலம் - சிறுபஞ்சமூலம்
16. காஞ்சி முதுமொழிக் காஞ்சி
17. ஏலாதி -ஏலாதி
18. கைந்நிலை - கைந்நிலை

இவற்றுள் திருக்குறள் நாலடியார் இரண்டும், அறம் பொருள் இன்பம் ஆகிய மூன்றையும் கூறுகின்றன.

நான்மணிக்கடிகை, இனியவை நாற்பது, இன்னா நாற்பது, திரிகடுகம், ஆசாரக் கோவை, பழமொழி நானூறு, சிறுபஞ்சமூலம், முதுமொழிக் காஞ்சி, ஏலாதி ஆகிய ஒன்பதும் நீதி நூல்கள்

. கார் நாற்பது, திணைமொழி ஐம்பது, ஐந்திணை எழுபது, ஐந்திணை ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது, கைந்நிலை ஆகிய ஆறும் அகப்பொருள் நூல்கள்.

களவழி நாற்பது ஒன்று மட்டும் போர்க்களக் காட்சியைப் பாடும் புறப்பொருள் நூல்.

உரைகள்

மேலே குறிப்பிட்ட 18 நூல்களில் பெரும்பாலானவற்றிற்குப் பழைய உரைகள் உள்ளன. திருக்குறளுக்குப் பத்து உரைகள் தோன்றியுள்ளன. நாலடியாருக்கு மூன்று உரைகள் உள்ளன.

நீதி நூல்களில் ஏலாதி நீங்கலாக உள்ள எட்டிற்கும் பழைய உரைகள் முழுமையாய் உள்ளன. ஏலாதியில் சில பகுதிகளுக்கு உரை சிதைந்து விட்டது.

அகப்பொருள் நூல்களில் ஐந்திணை ஐம்பது, திணைமாலை ஐம்பது இரண்டிற்கும் பழைய உரைகள் முழுமையாகக் கிடைத் துள்ளன. திணைமாலை நூற்றைம்பதில், 126 ஆம் பாட்டிற்குமேல் பழைய உரை கிடைக்கவில்லை. ஐந்திணை எழுபதில், முதல் 24 பாடல்களுக்கே உரை உள்ளது. கைந்நிலை, நூல் சிதைந்துள்ளது போலவே உரையும் சிதைந்துள்ளது. கார் நாற்பதில் 23 முதல் 38 வரையுள்ள பாடல்களுக்குப் பழைய உரை இல்லை.

புறப்பொருள் நூலாகிய களவழி நாற்பதுக்கு உரை முழு மையாகக் கிடைத்துள்ளது.

இந்தப் பழைய உரைகள் யாவும் பொழிப்புரையாக உள்ளன் பழை:மரபு அறிந்து எழுதப்பட்டுள்ளன. சுருக்கமும் தெளிவும் பெற்றுள்ளன் அருஞ்சொற்பொருளும் இலக்கணக் குறிப்பும் தருகின்றன.

1883-ஆம் ஆண்டில், ஆசாரக் கோவையைப் பழைய உரையுடன், திருத்தணிகை விசாகப் பெருமாள் ஐயர் வெளியிட்டார். சைவ சித்தாந்த கழகம், பல பழைய உரைகளை வெளியிட்டுள்ளது. கா. நமசிவாய முதலியார், திருமணம் செல்வக்கேசவராய முதலியார் ஆகியோர் பழமொழி நானூற்றைப் பழைய உரைரயுடன் வெளியிட்டனர்.

சில தமிழறிஞர்கள் தாமே புதிதாக உரை எழுதி ளியிட்டனர். அவற்றுள் சில:

நான்மணிக்கடிகை (1922)-கோ. இராசகோபாலபிள்ளை

இன்னா நாற்பது (1922)-கா.ரா. கோவிந்தராச

களவழி நாற்பது (1877) -சோடாவதானம் சுப்பராய முதலியார் செட்டியார் உரை.“

இன்னும்பலர், உரை எழுதும் பணியில் ஈடுபட்டுத் தொண்டு செய்துள்ளனர்.

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், எல்லா நூல்களுக்கும் தக்க அறிஞர் பெருமக்களைக் கொண்டு மிகச் சிறந்த முறையில் ரகளை எழுதி வெளியிட்டுள்ளது.

அடுத்து வரும் பகுதிகளில், நாலடியார் திருக்குறள் இரண்டிற்கும் தோன்றியுள்ள உரைகளின் திறன்களைக் காண்போம்.

4.நாலடியார்

நாலடியார் என்னும் நூலை, “நாலடி நானூறு“ என்றும் வழங்குவர். நாலடியார் ஒரு தொகை நூல். இதில் உள்ள வெண்பாக்களைச் சமண முனிவர் பலர் இயற்றியுள்ளனர். நச்சினார்க்கினியர், சீவக சிந்தாமணி உரையில் (1089) நாலடியார் பாடல் ஒன்றை மேற்கோள் காட்டுகின்றார். ”பிறரும் இச்சமயத் தார், “சீறுகா பெருகா முறைபிறழ்ந்து வாரா“ (நாலடி-110) என்பதனாலும் உணர்க” என்று கூறுகின்றார். இதனால் நாலடியார், சமண சமயத்தவர் செய்த நூல் என்பது தெளிவாகின்றது. நச்சினார்க்கினியர், நூலியற்றியவரை “இச் சமயத்தார்“ என்று பன்மையாற் சுட்டுகின்றார்.ஒருவர் பெயரையும் குறிப்பிட்டுக் கூறவில்லை.

யாப்பருங்கல விருத்தி (செய்யுளியல்-4), செப்பலோசையை விளக்கும்போது, ”இன்னவை பிறவும், நக்கீரர் நாலடி நானூற்று வண்ணத்தால் வருவனவும் எல்லாம் தூங்கிசைச் செப்பலோசை” என்று கூறுகின்றது. இதைக் கொண்டு நாலடியார் நக்கீரரால் எழுதப்பட்டது என்பர் (**தமிழ் : அன்றும் இன்றும்-பக்.23 (1967). மே.வீ. வேணுகோபாலப் பிள்ளை.)** இங்கே குறிப்பிடும் ‘நக்கீரர் நாலடி நானூற்று வண்ணம்“ என்பது மறைந்துபோன நூலாக இருக்கலாம். இதனை வலிமையான சான்றாகக் கொள்ள இயலாது.

நாலடியாரைப் பயில்பவர், அது ஒரு தொகை நூல் என்பதை எளிதில் உணர்வர். அதில் உள்ள பாடல்கள் வேறு வேறு நடையின் பல வேறு வகையான சொல்லமைப்பின: கருத்துத் தொடர்ச்சி உடையவை அல்ல.

நக்கீரர் என்ற பெயர், சமண சமயத்தவர்க்கு உரியதன்று. நாலடியாரில் தொட்ட இடமெல்லாம் சமணக்கருத்துகள் உள்ளன. ஆதலின், அதனை நக்கீரர் இயற்றினார் என்ற கருத இயலாது.

உரைகள்

பதினெண் கீழ்க்கணக்குகளில், திருக்குறளுக்கு அடுத்த படியாக அறிஞர் பெருமக்களின் பாராட்டுதலைப்பெற்ற நீதி நூல் நாலடியாராகும். இந் நூலுக்கும் காலந்தோறும் பலப்பல உரைகள் தோன்றியுள்ளன.

நாலடியாருக்குப் பழைய உரைகள் மூன்று உள்ளன. ஒன்று. பதுமனார் இயற்றியது. மற்றொன்று, தருமர் செய்தது. இன்னொன்று, பெயர் அறியப்படாத ஒருவர் செய்தது.

பதுமனார்

நாலடியாருக்கு முதன் முதலில் உரைகண்டவர் பதுமனார். பத்மம் என்ற சொல்லுக்குத் தாமரை என்பது பொருள். பதுமம் என்ற சொல்லின் திரிபு அது. பதுமம் என்ற பெயரினடியாகப் பிறந்த பெயரே பதுமனார் என்பது.

பதுமனாரின் வரலாறுபற்றி அறியத்தக்க சான்றுகள் கிடைக்கவில்லை.

நாலடியாரில் உள்ள நானூறு வெண்பாக்களையும் பொருள் அறிந்து ஓதி உணர்ந்து, திருக்குறளைப் பின்பற்றி அதிகாரம் தோறும் பத்துப்பாடலை அமைத்து அதிகாரங்களுக்கு ஏற்ற பெயரிட்டவர் பதுமனாரே. மேலும் அறம், பொருள், இன்பம் என்ற மூன்று பெரும்பகுதியாக்கி, அவற்றில் பல இயல்களை அமைத்து உரை இயற்றி வரும் இவரே.

பதுமனார் நாலடியாருக்கு அதிகாரம் வகுத்த செய்தியைத் தருமர் தம் உரைச் சிறப்புப் பாயிரத்தில்,

மதுமலர்த் தண்டார்ப் பதுமன் தெரிந்த

ஐயமில் பொருண்மை அதிகா ரம்தாம்

மெய்யா நலத்த எண்ணைந்து அவற்றுள்

என்றும், பழையவுரையாசிரியர் முகவுரையில், "இப்படி நாற்பது அதிகாரமும் பதுமனார் அடைவு செய்த இந்த அறம் பொருள் இன்பம் மூன்றும் வழுவாமல் நடாத்தி" என்றும் கூறுகின்றார்கள்.

டாக்டர் உ.வே.சாமிநாதஐயர் "நாலடியார்க்கு உரை இயற்றிய பதுமனார் நாலடியாரில் திருக்குறளிற் போல அதிகாரம் வகுத்தவர். குடத்துக்குள் யானையைப் புகுத்துவது போல், பல பாடல்களைச் சில அதிகாரங்களில் அவர் புகுத்தி இருக்கின்றார்.• **(சங்கத் தமிழும் பிற்காலத் தமிழும் (பக்கம் 159,160)** என்று கூறுகின்றார்.

பதுமனாரின் உரைப்பாயிரம் நாலடியாரைப் பின் வருமாறு பகுத்துக் காட்டுகின்றது.

அறவியல் இருவகைத் தாம் அவை தம்முள்
துறவுஏழ் இல்லறம் இருமூன்று என்ப்
பொருளியல் வகைஏழ் புலப்படக் கிளப்பின் -
அரசியல் ஏழதி காரம் ஆகும்
நட்பியல் நான்கதி காரம் இன்பம்
மூன்றே துன்ப இயல் அதி காரம்
நான்கே ஒன்றே பொதுவியல் பகையியல்
கூறு அதிகாரம் நான்கே பன்னெறி
வகைதான் இருவகைக் அவற்றுள் இன்ப
துன்பத்து அதிகாரம் ஒன்றே- ஏனை
இன்பம் கூறுஅதி காரம் இரண்டே.

உரையில் இவை விரித்து அதிகாரங்களின் பெயர்களோடு விளக்கப்படுகின்றன.

பதுமனார் உரை முதலில் தோன்றிய உரையாக இருந்தும் மிகவும் சிறப்பாக அமைந்துள்ளது. பழம்பெருமை வாய்ந்த இவ்வுரை பல ஆண்டுகளாக வெளிப்படாமல் இருந்து 1953ஆம் ஆண்டில்தான், தஞ்சை சரசுவதி மகால் வெளியீடாக (59-2) உரைவளம் என்ற பெயருடன் இருபகுதியாக வெளிவந்தது. உரை வளத்தில் தருமர் உரையும் பழையவுரையும் இடம் பெற்றுள்ளன.

பதுமனாருடைய உரை, பொழிப்புரையாக உள்ளது. தேவையான இடங்களில் பொருள் விளக்கத்திற்காகப் பல சொற்களை வருவித்துக் கூறுகின்றது. பொழிப்புரையின் கீழ் அருஞ்சொற் பொருளும், மிகக்குறைவாக இலக்கணக் குறிப்பும்

உள்ளன. கருத்துச் செறிவும் இலக்கண வழுவற்ற நடையும், தனித் தமிழ்ச் சொல்லாட்சியும் பதுமனாரிடம் காணலாம். சுருங்கச் சொல்லி விளங்கவைப்பதில், இவர் வல்லவராக விளங்குகின்றார்.

தருமர்

தருமர் பதுமனாருக்குப்பின் நாலடியாருக்கு உரை எழுதியவர். உரைப்பாயிரத்தில் இவர் பதுமனாரைக் குறிப் பிடுகின்றார். திருக்குறள் உரையாசிரியர்களில் 'தருமர்" குறிப்பிடப் படுகின்றார். இருவரும் ஒருவரா அல்லது வேறுபட்டவரா என்று அறிய, திருக்குறள் தருமர்உரை கிடைக்கவில்லை.

பதுமனார் உரைக்கு விரிவுரையாகத் தருமர்உரை உள்ளது. பாடலுக்குப் பொழிப்புரை இயற்றியபின் மிகவிரிவாக நயமும்

பொருளும் கூறுகின்றார். தருமர் உரைப்பாயிரம் நாலடியாரைப் பற்றியும் பதுமனாரைப்பற்றியும் விளக்கமாகக் குறிப்பிடுகின்றது.

நாலடியார் பாடல்கள் இயற்றிய முனிவர்களை,

வளங்கெழு திருவொடு வையகம் முழுதும்

உளங்குளிர் இன்பத்து இன்பம் உவப்ப

வண்பெருஞ் சிறப்பின் மாதவம் புரிந்தா அங்கு

எண்பெருங் குன்றத்து இருந்தவ முனிவர்

என்று பாயிரம் குறிப்பிடுகின்றது சமண முனிவர்கள் தவம் புரிந்துகொண்டு எண்பெருங் குன்றத்து இருந்ததைக் கூறுகின்றது. அம் முனிவர்கள் எண்ணாயிரம் வெண்பாக்கள் இயற்றியதாய்ப் பாயிரம் கூறுகின்றது:

அறம்பொருள் இன்பம் வீடுஎனும் அவற்றின்

திறம்பிறர் அறியும் திறத்தை நாடிப்

பண்புற எடுத்துப் பாங்குறப் பகர்ந்த

வெண்பா வியல் எண்ணாயிரம்.

இவ் எண்ணாயிரம் பாடல்களில், பல பாடல்கள் மறைந்து காலப் போக்கில் நானூறு பாடல்களே எஞ்சி நின்று வாழ்வுபெற்றன என்பதைப் பாயிரம்,

எண்ணாயிரம் இவற்றுள்

பார்எதிர் கொண்டு பரவி ஏத்த

நீர்எதிர் வந்து நிரையணி பெற்ற

மேல்நூல் தகையின் விதிமுறை பிழையாஅ

நானூறு

என்று கூறுகின்றது.

நானூறு பாடல்களைப் பதுமனார் நயத்தெரித்து ஓதி நாற்பது அதிகாரங்கள் வருத்ததை,

நானூறு அவற்றின் நயந்தெரிந்து ஓதிய
மதுமலர்த் தண்டார்ப் பதுமன் தெரிந்த
ஐயமில் பொருண்மை அதிகாரம் தாம்
மெய்யா நலத்த எண் ஐந்து

என்று பாயிரம் உரைக்கின்றது.

தருமனார் நாற்பது அதிகாரங்களையும் பாகுபடுத்தியதை

.எண் ஐந்து அவற்றுள்,
அறவியல் பதின்மூன்று அரசர்க்கு உரிய
பொருளியல் இருபத்து ஒருநான்கு இன்பம்
ஆன்ற வகையை மூன்றுஎன மொழிந்தனன்
சான்றோர் ஏத்தும் தருமத் தலைவனே

என்று கூறி முடிக்கின்றது பாயிரம்..

தருமரைப் பற்றி

சீல முனிவர் இருந்து தெரிந்துரைத்த
நாலடி நானூற்றின் நற்பொருளைப்- பால்வகையே
கண்டான் பொருள்தான் பயனுரைத்தான் காதலித்துத்
தண்டார்ப் பொறைத்தருமன் தான்

என்ற வெண்பா ஒன்றும் உள்ளது.

விளக்கவுரை

பதுமனார், தருமர் உரைகளேயன்றி நாலடியாருக்கு வேறோர் உரையும் உள்ளது. அவ்வுரை இயற்றியவர் பெயர் தெரியவில்லை. அவ்வுரையை வெளியிட்ட சரசுவதி மகால் விளக்கவுரை என்ற பெயரைத் தந்துள்ளது.

விளக்கவுரை, பதுமனார் தருமர் ஆகிய இருவர் உரை களையும் தழுவி எழுதப்பட்டுள்ளது. இவர், மற்ற இரு உரை யாசிரியர்கள் கருத்திலிருந்து வேறுபட்டு அதிகாரங்களைப் பிரிக்கிறார். அறத்துப்பாலில் பதின்மூன்று அதிகாரமும், பொருட் பாலில் இருபத்து ஆறு அதிகாரமும், காமத்துப் பாலில் ஓர் அதி. காரமும் அமைக்கின்றார்.

பிற்கால உரைகள்

நாலடியார் போன்ற நீதி நூல்களை, மாணவர் பயிலும் நோக்கத்துடன் பத்தொன்பதாம் நூற்றாண்டில் பாட நூலாக வைத்த பின்னர், அவற்றிற்குப் உரைகள் பல தோன்றின. உரையும் விளக்கமும் நாடெங்கும் பரவின.

நாலடியாருக்கு உரை கண்டவர் பெயரும், உரை வெளி வந்த ஆண்டும் கீழே தரப்படுகின்றன:

புதுவை நயனப்ப முதலியார் (1812)

புதுவை அ. வேதகிரி முதலியார் (1812)

திருமயிலை முருகேச முதலியார் (1874)

கோமளபுரம் ராசகோபால பிள்ளை (1904).

வேதகிரி முதலியார் (1908)

களத்தூர் வேதகிரி முதலியார் (1913)

வை.மு. சடகோப ராமாநுசாச்சாரியார் (1921)

வே. நாராயண ஐயர் (1924).

இவர்களுக்குப் பின்னரும் நாலடியாருக்கு உரை காணும் முயற்சியில் பலர் ஈடுபட்டு வந்துள்ளனர்.

திருக்குறள் உரையாசிரியர்கள்

1. திருக்குறள் உரைகள்

தமிழ்மொழியில் தோன்றிய நூல்களுள் திருக்குறளுக்குப் பலவகையான சிறப்புகள் உண்டு. உரைகள் காலந்தோறும் தோன்றி வருவது அந்நூலின் சிறப்புகளில் ஒன்று. பரிமேலழகர்க்கு முன், ஒன்பது உரைகள் திருக்குறளுக்குத் தோன்றின. பத்தாவது உரையாகப் பரிமேலழகர் உரை தோன்றிய பின்னரும் கூட, கணக்கற்ற உரைகள் தோன்றியுள்ளன.

திருக்குறளுக்கு நேரே உரை எழுதியவர்களே அல்லாமல் இளங்கோ அடிகள், சீத்தலைச் சாத்தனார், சேக்கிழார், கம்பர் போன்ற புலவர் பெருமக்கள் தம் நூல்களில் ஆங்காங்கே திருக்குறளை எடுத்தாண்டு, விளக்கமும் கூறியுள்ளனர். அப் ளை எல்லாம் ஒன்றுசேர்த்துப் பார்த்தால் அச் பகுதிகளை சான்றோர்கள் திருக்குறளுக்குச் செய்யுள் வடிவில் உரைவிளக்கம் கூறி இருப்பது வெளிப்படும். பிற்காலத்தில் நீதி நூல்களை இயற்றிய சான்றோர்களும், திருக்குறளுக்குச் செய்யுள் வடிவில் உரை இயற்றியுள்ளனர்.

திருக்குறளைப் பயின்றவர்கள் அதன் சுவையில் ஈடுபட்டுப் புகழ்ந்து பாடினர். திருக்குறளில் உள்ள பால், இயல், அதிகாரம், பா ஆகியவற்றைக் கணக்கிட்டு உரைத்தனர்.

அவ்வாறு புகழ்ந்து பாடிய பாடல்கள் திருவள்ளுவமாலை என்ற பெயருடன் வழங்கி வருகிறது. திருக்குறளில் பால்தோறும் உள்ள இயல்களை ஆராய்ந்து உரைப்பது உரையாசிரியரின் பணியாதலின் திருவள்ளுவ மாலையில்) இயல்ஆராய்ச்சியில் ஈடுபட்டுப் பாடல்கள் இயற்றியவர்களும் உரையாசிரியர்களாக மதிக்கத் தகுந்தவர்களே.

திருக்குறளுக்கு உரை எழுதாமல் வேறு நூல்களுக்கு உரை இயற்றியவர்கள் தம் உரைகளில் தேவையான இடங்களில் திருக்குறட்பாக்கள் சிலவற்றிற்கு உரை எழுதியுள்ளனர்.

சிலப்பதிகாரத்தின் அரும்பதவுரையாசிரியர். அடியார்க்கு நல்லார், நச்சினார்க்கினியர், மயிலைநாதர், சங்கர ஆகியோர் தம் உரைகளில் வாய்ப்பு நேர்ந்தபோது திருக்குறன் சிலவற்றிற்கு உரை கண்டுள்ளனர். அவ்வுரைகள் புதிய கருத்து களுடன், இன்றுள்ள உரைகளோடு மாறுபட்டு உள் திருக்குறள் உரைகளைப் பதிப்பித்து வெளியிடுவோர் அத்தகைய உரை விளக்கங்களையும் சேர்த்து வெளியிட வேண்டும். நமசிவாயர்

பல ஆண்டுகளுக்குமுன், திருக்குறளுக்கு உரை எழுதிய பதின்மரை,

தருமர் மணக்குடவர் தாமத்தர் நச்சர்

பரிதி பரிமே லழகர் -திருமலையர்

மல்லர் பரிப்பெருமாள் காலிங்கர் வள்ளுவர்நூற்கு

எல்லையுரை செய்தார் இவர்

என்ற தனிப் பரிமேலழகர், மணக்குடவர், பரிதி, பரிப்பெருமாள், காலிங்கர் ஆகிய ஐவர் இயற்றிய உரைகள் கிடைத்து அச்சில் வெளி வந்துள்ளன. ஏனையோர் உரைகள் கிடைக்கவில்லை. கடவுள் வாழ்த்தில் (5.6) இரண்டு குறள்களுக்குத் தாமத்தர் நச்சர் தருமர் ஆகிய மூவர் உரைகள் கிடைத்துள்ளன. மற்ற உரைகள் மறைந்தது தமிழிலக்கிய உலகிற்குப் பெரிய இழப்பாகும்.

கம்பர் காலத்தில், திருக்குறளுக்குச் சில உரைகள் வழங்கின என்று கருத இடமுண்டு.

அன்போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு

என்போடு இயைந்த தொடர்பு

என்ற குறளுக்குத் தம் காலத்தில் வழங்கிய வேறு உரைகளைப் பின்வரும் பாடலில் கம்பர் குறிப்பிடுகின்றார்:

என்பென்பது யாக்கைஎன்பது உயிர்என்பது இவைகளெல்லாம்

பின்பென்ப அல்லவேனும் தம்முடை நிலையிற்பேரா

முன்பென்ப உளஎன்னும் முழுவதும் தெரிந்தவாற்றால்

அன்பென்பது ஒன்றின்தன்மை அமரரும் அறிந்ததன்றால். (யுத்த-மருத்துமலை-4)

பரிமேலழகர்க்குமுன் இருந்த தருமரைப்பற்றி அபிதான கோசம், "வள்ளுவருக்கு உரை

செய்த பதின்மருள் முற்பட்ட வராகிய தருமர் (தரும சேனர்) உரையில் ஆருகத மதக் கொள்கைகளே பிரசங்கிக்கப்பட்டன" என்று கூறுகின்றது.

தருமர் நாலடியாருக்கும் உரை இயற்றியுள்ளார். அவ்வுரை அச்சில் வந்துள்ளது. இவரைப்பற்றி வேறு செய்தி எதுவும் தெரிய வில்லை.

நச்சர் என்பவர் நச்சினார்க்கினியர் என்று சிலர் கருது கின்றனர். ஆனால் நச்சர், நச்சினார்க்கினியர் என்பதற்குப் போதிய சான்றுகள் இல்லை. பெயரில் உள்ள சில எழுத்துக்களின் ஒற்றுமை அவ்வாறு நினைக்க இடம் தருகின்றது. நச்சினார்க் ஒனியரைப்பற்றிய சிறப்புப் பாயிரம் அவர் திருக்குறளுக்கு உரை இயற்றியதாய்க் குறிப்பிடவில்லை.

திருமலையர் என்பவர் சமணராய் இருத்தல் கூடும். திருமலை என்பது, வட ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ளது சமணர்க்குரிய இடமாய்த் திகழ்ந்து வருகின்றது.

தாமத்தர், மல்லர் ஆகியோரைப்பற்றி எந்தச் செய்தியும் வெளிப்படவில்லை.

ஏனைய உரையாசிரியர்களைப்பற்றி அடுத்து வரும் பகுதி களில் விரிவாகக் காண்போம்.

பத்து உரைகளே அன்றி, இயற்றியவர் பெயர் தெரியாத இரண்டு உரைகளும் உள்ளன. அவற்றுள் ஒன்றினை "திருக்குறள் பழையவுரை" என்ற பெயருடன் டாக்டர் உவே.சா. நூல் நிலையம் வெளியிட்டுள்ளது. மற்றோர் உரை பரிதியாரின் உரையைத் தழுவி எழுதப்பட்டுள்ளது. முதல் பதினோரு அதிகாரங்களுக்குமேல் இப் பழைய உரைக்கும் பரிதியார் உரைக்கும் வேறுபாடில்லை. கடவுள் வாழ்த்துப் பகுதியில் சைவ சமயக் கருத்திற்கு ஏற்பக் கடவுளின் தன்மை கூறப்பட்டுள்ளது. வழக்குச் சொற்களும் வடசொற்களும் மிகுதியாக உள்ளன. சைவ சமயச் சார்புடைய புராணங்கள் மேற்கோள் காட்டப்பெறுகின்றன. நடைச் சிறப்பு இல்லா விட்டாலும் கருத்துச் சிறப்பிற்காகக் கற்று மகிழவேண்டிய இடங்கள் பல உள்ளன.

திருக்குறளுக்குப் பல உரைகள் தோன்றியதற்கு உரிய காரணங்களை ஆராய்ந்த டாக்டர் வ.சுப. மாணிக்கம் பின்வரும் காரணங்களைக் கூறுகின்றார்:

""இதுகாறும் வந்த உரைகளை ஆராய்ந்தால் அவை பல்கியதற்குப் பின்வரும் காரணங்கள் கூறலாம்.

1. பாட வேற்றுமையால் சில உரை வேற்றுமைகள் காணப் படும். இவை ஆராய்ந்து ஏற்கத்தக்கன.

2. பாடம் கற்பித்துக்கொண்டு ஓரிருவர் புதுப் பொருள் காட்டியுள்ளனர் இவர் பொறுக்கத் தகார் மக்கள் கண்டிக்கவும் அரசு தண்டிக்கவும் தகுவர்.

3. இலக்கண வறுமையாலும் இலக்கணச் செருக்காலும் எழுத்த உரைவேற்றுமைகளும் உள் இவை பழிக்கத் தகும்.

6. முன்னோன் எழுதிய உரைப்பொருளைப் பெரிதும் தழுவக்கூடாது தாம் ஒரு தனி யுரை எழுதத் துணிந்ததற்குச் சான்றாக எங்ஙனமேனும் பல குறட்குப் புத்துரை சொல்ல வேண்டும் என்னும் முனைப்பே திருக்குறள் உரை பலவற்றில் தோற்றத்துக்குக் காரணம் என்று சுருங்கச் சொல்லலாம்." "(**1.எந்தச் சிலம்பு (1964) பக்கம் 40, 41.)**

திருக்குறள் உரை வேற்றுமைகளை நன்கு ஆராய்ந்து வெளியிட்ட டாக்டர் இரா. சாரங்கபாணி உரை வேற்றுமைக்கு உரிய காரணத்தைப் பின்வருமாறு உரைக்கின்றார்.

"ஏடெதுவோர் பிழையால் புகுந்த பாட வேறுபாடுகளும், குறளைப் பிரிக்கும் முறைகளும் சொற்களைக் கொண்டு கூட்டும் நெறிகளும், காலத்தால் சொற்கள் எய்திய பொருள் வேறுபாடு களும் சமுதாயத்தின் பழக்க வழக்க மாறுபாடுகளும் இயல்பாகவே உரை வேற்றுமைகட்கு இடங்கொடுத்து விட்டன. புற நாகரிகச் சார்பும் சமயச் சார்பும் அரசியற் சார்பும் முன்னிற்க, வலிந்து வேறுபட்ட உரைகளை எழுதினோரும் உளர். (**2.உரைவேற்றுமை நூன்முகம்)**

உரைகள் பல தோன்றியும் எல்லோரும் ஒப்பும் ஓர் உரை இல்லாமை பெரிய குறைபாடே ஆகும். திருவள்ளுவர் கருத்து ஏதேனும் ஒன்றாகத்தான் இருக்கமுடியும். ஒரு குறளுக்கு ஒரு கருத்துத்தான் இருக்கமுடியும். ஆனால் திருவள்ளுவர் அவ்வாறெல்லாம் கருதினாரோ இல்லையோ, அவரது வாக்கு நமக்குப் பல வகையாய்ப் பொருள் கொள்ள இடத்தருகின்றது. வங்கக் கவிஞர் இரவீந்திரநாத தாகூர் கீதாஞ்சலியில், "கவிஞரின் சொற்களிலிருந்து மக்கள் தாம் விரும்பும் பொருளைப் பெற்று மகிழ்கின்றனர்" (**3. From the words of the poet men take what meanings please them.)** என்று கூறியுள்ள கருத்து இங்கே நினைவுக்கு வருகின்றது.

பழைய உரைகளில் இன்று பரிமேலழகர் மணக்குடவர் பரிப்பெருமாள் காலிங்கர் பரிதி ஆகிய ஐவர் உரைகள் உரைக் கொத்திலும் உரை வளத்திலும் இடம் பெற்றுள்ளன. பரிமேலழகர் உரையும் மணக் குடவர் உரையும் பரிப்பெருமாள் உரையும் தனித்தனியாய் வெளிவந்துள்ளன. ஏனைய உரைகளும் விரிவான ஆராய்ச்சி முன்னுரைகளுடன் வெளிவருவது திறனாய்வுக்குப் பயன்தரும்.

1935-இல் பரிதி உரை வெளிவந்துள்ளது. அதனை மீண்டும் வெளியிடவேண்டும்.

3. பரிதியார்

திருக்குறளுக்கு உள்ள பழைய உரைகளில் மிகவும் எளி மையானது பரிதியார் உரையேயாகும். இவரது உரை பேச்சு நடையில் அமைந்து உலக வழக்குச் சொற்களை மிகுதியாகக் கொண்டுள்ளது. இருப்பினும் அவற்றில் ஒரு வகை அழகும். எளிதில் பொருள் உணர்த்தும் ஆற்றலும் இருப்பதைக் காணலாம். மிகுதியாக வட சொற்கள் கலந்துள்ளன. இலக்கணச் செறிவு இல்லாத எளிய நடையில் சில இடங்களில் பிழைகளும் உள்ளன. சொற்பொழிவாற்றியதை எழுதி வைத்ததுபோல, பல இடங்கள் உள்ளன. குறளின் கருத்தை அறிந்து தம் விருப்பம் போல், கூட்டியும் குறைத்தும் பொருள் கூறுகின்றார் பரிதியார். இவர்

உரையைப் பொழிப்புரை என்றோ விளக்கவுரை என்றோ கூற இயலாது. சில இடங்களில் குறளைவிடச் சுருக்கமாக உரை உள்ளது. இன்னும் இடங்களில் குறளுக்கும் உரைக்கும் தொடர் பில்லாமல் எழுதிச் செல்கின்றார்."குறளுக்கும் (பரிதியார் உரைக்கும் ஒற்றுமைப்படுத்தி, கருத்து அறிந்து கொள்ளுதல் ஒரு கயிற்றலாகிய பாலத்தில் காவிரியைக் கடக்க நினைத்தலை ஒக்கும். **(1. திருக்குறள் அழகும் அமைப்பும் (1961). மகாவித்துவான் ச. தண்டபாணி தேசிகர். (பக்-177)**

இவரது உரையில் பாலின் தொடக்கத்தில் விளக்க வுரையோ, இயல் பிரிப்புப் பற்றிய ஆராய்ச்சியோ இல்லை. அதிகார முறை வைப்பைத் தொடர்புபடுத்திக் காட்டல், ஒரே அதிகாரத்திற்குள் குறட்பாக்களைப் பொருள் நோக்கிப் பிரித்து அமைத்தல் ஆகிய முறைகள் இல்லை.

ஏனைய உரையாசிரியர்கள், இவ்வாறு செய்யாமல் நூலின் அமைப்புப் பற்றிய ஆராய்ச்சி நிகழ்த்தியுள்ளனர். இவற்றை நோக்கும்போது பரிதியார் உரை இன்றுள்ள உரைகளில் மிகவும் முற்பட்டதோ என்று கருத இடமுண்டு.

191, 166, 167, 191, 194 ஆகிய குறள்களுக்குப் பரிதியாரும் காலிங்கரும் ஒரே வகையாய் உரை கூறியுள்ளனர்.

1126 ஆம் குறளின் உரைக்கும் வேறுபாடு இல்லை. பரிதியார் உரைக்கும் பரிமேலழகர்

வரலாறு

பரிதியார் என்ற பெயர், பருதியார் எனவும் வழங்குகின்றது. அவர் பெயரைக் கொண்டு, திருப்பருதி நியமம் என்பது இவரது ஊராய் இருக்கலாம் என்று கருதுகின்றார் துடிசைக் கிழார். இருப்பரிதி நியமம் என்னும் பெயருடைய ஊர் தஞ்சாவூர் மாவட்டத்தில் ஓரத்த நாடு செல்லும் வழியில் ஊழ் ஊருக்குப் பக்கத்தில் உள்ளது. **(1. திருக்குறள் அழகும் அமைப்பும் (1961) பக்.177.)** அவ்வூரில் கோயில் கொண்டுள்ள கடவுளின் பெயர் பருதியப்பர் என்பதாகும். பருதியப்பர் எ என்று குறுகி பரிதி என்று திரிந்து "ஆர்" விகுதி சேர்ந்து பரிதியார் என்று ஆகி இருக்கலாம். என்ற பெயர் பருதி

பரிமேலழகர்க்கு முற்பட்ட இவர், சைவ சமயத்தவர் வேதநெறி ஒழுகிய அந்தணராக இருக்கலாம். வடமொழி பயின்றவர் உலகியல் அறிவு மிக்கவர். உரை இயற்றிய காலத்தில் மிக முதியவராக இருந்திருக்கக் கூடும்.

சமயம்

இவர் சைவ சமயத்தைச் சேர்ந்தவர் என்பதற்கு இவரது உரையில் தக்க சான்றுகள் பல உள்ளன. கடவுள் வாழ்த்தில் "கற்றதனாலாய" என்னும் குறளுரையில் (2) நற்றாள் என்பதற்குச் சிவன் ஸ்ரீபாதம் என்று பொருள் உரைக்கின்றார். இறைவன் பொருள் சேர் புகழ் (5) என்பதற்குச் சிவகீர்த்தி என்றும் அறவாழி அந்தணன் (8) என்பதற்குத் தன்மம் என்னும் சமுத்திரமாகவுள்ள பரமேசுவரன் என்றும் பொருள் கூறுகின்றார்.

வாய்மை அதிகாரத்தில் உள்ள "பொய்யாமை அன்ன" என்னும் குறளில் (296) எல்லா அறமும் தரும்" என்பதற்குச் சிவ புண்ணியம் எல்லாம் உண்டாம் என்கின்றார்.

பொருட்பாலில் "முறை செய்து" என்னும் குறளுரையில் (388) "மக்கட்கு இறை என்று வைக்கப்படும்" என்பதற்கு "உலகத்தை இரட்சிக்கின்ற பரமேஸ்வரன் என்று எண்ணப்படும்" என்கின்றார்.

"யான் எனது" என்னும் குறளுரையில் (310) துறந்தார் என்பதற்கு, "தொண்ணூற்றாறு தத்துவத்தையும் உடலோடே துறந்தார்" என்று பொருள் கொள்ளுகின்றார்.

கடவுள் வாழ்த்தில் "கோளிற் பொறியிற் குணமி என்னும் குறளுரையில் (9) எண்குணத்தான் என்பதற்குச் சைவ சமயச் சார்பாக விளக்கம் தருகின்றார்:

"எட்டுக் குணமாவன: அனந்த ஞானம், அனந்த வீரியம், அனந்த குணம், அனந்த தெரிசனம், நாம் மின்மை, கோத்திர மின்மை, அவா வின்மை, அழியா இயல்பு என்பன" என்பது பரிதியாரின் விளக்கம்.

இவற்றால் பரிதியார் சைவ சமயத்தினர் என்பது உறுதி யாகின்றது.

பரிதியும் பரிமேலழகரும்

பரிதியாரின் கருத்துக்களைப் பரிமேலழகர், சில இடங்களில் மறுக்கின்றார் சில இடங்களில் என்பாரும் உளர் என்று மதித்துச் சுட்டுகின்றார் பரிதியார் கொண்ட வேறு பாடங்களைக் குறிப் பிடுகின்றார்.

பரிதியாரின் கருத்துக்களைப் பரிமேலழகர் அப்படியே ஏற்றுக் கொண்ட இடங்களும் உண்டு.

நகையும் உவகையும் கொல்லும் சினத்திற்

பகையும் உளவோ பிற (304)

என்ற குறளுக்குப் பரிதியார், "முகத்தில் சிரிப்பும் மனத்தில் களிப்பும் கொல்லுகின்ற சினத்திலும்" என்று கூறிய உரைப் பகுதியைப் பரிமேலழகர், "முகத்தின் கண் நகையையும் மனத்தின்கண் உவகையையும் கொன்று கொண்டு எழுகின்ற சினம்" என்று தம் கருத்தாக எடுத்து அமைத்துக் கொள்ளுகின்றார்.

உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச் செல்வான் என்று

அப்பால்நாற் கூற்றே மருந்து (950)

என்ற குறளுக்குப் பரிதியின் விளக்கத்தைப் பரிமேலழகர் மேற் கொண்டு, சிலவற்றை மாற்றியும் கூட்டியும் குறைத்தும், தம் உரையில் அமைத்துள்ளார்.

இருவர் விளக்கமும் கீழே தரப்படுகின்றன:

பரிதியார்

”வியாதி கொண்டவர்க்கும் பண்டிதர்க்கும் மருந்திற்கும் பரிகாரம் பண்ணுவார்க்கும் நந் நான்கு குணம் உண்டு. அது ஏதெனில்,

வியாதியாளர் குணம்-திடவான், பதார்த்தவான். கிரமத்திலே வருபவன், கிளையுள்ளவன் ஆக நான்கு

வைத்தியன் குணம் - சுற்றவன், தெய்வசகாயம் உள்ளவன்.

ஆனி உள்ளவன். கோவண சுத்தம் உள்ளவன் ஆக நான்கும்

மகுந்தின் குணம் -எளிதாய். ஒரு மருந்தாய், சுத்த முன்னதாய், தப்பாமல் பொறுப்பதாய் உள்ள நான்கு.

பரிகாரம் பண்ணுவிப்பான் குணம்- வியாதி யாள்பவன் மேல் பத்தி, வைத்தியன் சொன்ன சிரமத்திலே வருபவன் சோம்பின்மை உள்ளவன், கொடையுள்ளவன்

ஆக நான்கு இந்த நான்கு பேருக்கும் பதினாறு குணம் வேணும் மருந்து என்னும் அதிகாரம் என்றவாறு.

பரிமேலழகர்

உற்றவன் வகை நான்காவன: பொருளுடைமை, மருத்துவன் வழிநிற்றல், நோய்நிலை உணர்த்தல் வன்மை, மருந்துத் துன்பம் பொறுத்தல் என இவை.

தீர்ப்பான் வகை நான்காவன: பல பிணிகட்கும் ஏற்றல், சுவை வீரியம் விளைவாற்றல்களான் மேம்படுதல், எளிதின் எய்தப்படுதல், பகுதியோடு பொருந்துதல் என இவை.

இயற்றுவான் வகை நான்காவன: ஆதுரன் மாட்டு அன்புடைமை, மனமொழி மெய்கள் தூய்வாதல், சொல்லியன அவ்வாறே செய்தல் வன்மை, அறிவுடைமை என இவை.

இவை எல்லாம் கூடிய வழியல்லது பிணி தீராமையின், இத்தொகுதியையும் “மருந்து“ என்றார்.

பரிதியார் எழுதியுள்ள விளக்கமும் பரிமேலழகர் கூறியுள்ள விளக்கமும் பெரும்பாலும் ஒத்துள்ளதை உணரலாம்.

வடசொல்லாட்சி

பரிதியார் வடசொற்களை மிகுதியாக ஆளுகின்றார். எல்லோரும் அறிந்த நல்ல தமிழ்ச் சொல்லுக்கும் பொருள் கூறும் போது வடமொழிச் சொல்லையே பயன்படுத்துகின்றார்:

வெயில் என்பதற்கு (77) ஆதித்த கிரணம் என்று பொருள் எழுதுகின்றார். விதானம் என்ற வடசொல்லை (விசனம்) கவலை, துன்பம் என்ற பொருளில் இவர் அடிக்கடி ஆளுகின்றார். வாக்குத் தோ'ம் (129), வங்கிசம் (112), ல'மி, சே'டாதேவி (167), உத்தியோகம்

போன்ற வடசொற்களை எடுத்தாளுகின்றார்.

அறம் பொருள் இன்பம் என்று திருவள்ளுவர் பயன் படுத்திய தமிழ்ச் சொற்களுக்கும் "தன்மம், அர்த்தம், காமம்" என்ற வடசொற்களால் பொருள் கூறுகின்றார் (501)

முளை என்ற தமிழ்ச் சொல்லை விட்டுவிட்டு அங்குரம் என்ற வடசொல்லை ஆளுகின்றார் (959).

தீயனவின்றி (947) என்னும் குறளுக்கு, "உதராக்கினி அளவையறியாமல் கறி பதார்த்தம் உருசி யறிந்து புசித்தான் என்று வடசொல்லை மிகுதியாக ஆண்டு உரை எழுதுகின்றார்.

சொல்லும் பொருளும்

பரிதியார், "வறுமையுடையோம்" என்ற பொருளில் வருவியோம் என்ற சொல்லை ஆளுகின்றார் (205). சேவகன் என்ற சொல்லைப் போர் வீரன் என்ற பொருளிலும் (763), புடவை என்ற சொல்லை உடை என்ற பொருளிலும் (788), இராவுத்தன் என்ற சொல்லைக் குதிரை வீரன் என்ற பொருளிலும் (814), பரியாரி என்ற சொல்லை மருத்துவன் என்ற பொருளிலும் இவர் பயன் படுத்துகின்றார். பணம் என்ற சொல்லும் இவரால் ஆளப்படு கின்றது (932).

சுருக்கமும் எளிமையும்

பல குறட்பாக்களுக்கு மிகச் சுருக்கமாகவும் எளிமை யாகவும் இவர் பொருள் கூறுகின்றார். அத்தகைய இடங்களைக் கீழே காண்போம்:

நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்

பெருமை உடைத்திவ் வுலகு (336)

"நேற்றிருந்தான் இன்று செத்தான் என்னும் பெருமை உண்டு உலகுக்கு"

உறங்கு வதுபோலும் சாக்காடு உறங்கி

விழிப்பது போலும் பிறப்பு (339)

"நித்திரை போல மரணம்: விழிப்பது போலப்பிறப்பு என்று அறிக."

நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்

பின்னீர பேதையார் நட்பு (782)

"வளர் மதி ஒப்பது நல்லோர் நட்பு தேய்பிறை ஒப்பது பொல்லா நட்பு."

பெண்ணேவல் செய்தொழுகும் ஆண்மையின் நாணுடைப்

பெண்ணே பெருமை உடைத்து (907)

பெண்ணுக்குப் பயப்படுகிற ஆண்மையினும் பெண்ணே விசே'ம்."

வாராக்கால் துஞ்சா வரின்துஞ்சா ஆயிடை

ஆரஞர் உற்றன கண் (1179)

”நாயகர் வாராக்காலும் நித்திரையில்லை: வந்தாலும் கூவியினால் நித்திரையில்லை.”

நாம்காதல் கொண்டார் நமக்கெவன் செய்பவோ

தாம்காதல் கொள்ளாக் கடை (1195)

”ஒருதலைக் காமம் நன்றல்ல் இருதலைக் காமம் நன்று”.

விளக்கமும் நயமும்

பரிதியார் சில குறளுக்கு எழுதும் உரையும் விளக்கமும் மிகவும் போற்றத்தக்கவையாய் உள்ளன. அவ்வாறே சில தொடருக்கு இவர் தரும் நயவுரை எண்ணி எண்ணி மகிழத்தக்க தாய் உள்ளது. அவற்றுள் சிலவற்றை இங்கே காண்போம்:

துறந்தாரின் தூய்மை உடையர் இறந்தார்வாய்

இன்னாச்சொல் நோக்கிற் பவர்“ (159)

”துறந்தார் பெரியோரானாலும் தவத்தின் பெருமை யினாலே ஒருவரைச் சாபமிடுவார் இவன் இல்லறத்திலே இருந்தும் தனக்கு ஒருவர் செய்த குற்றம் பொறுப்பவன் ஆதலின் பெரியவன்”.

பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி

நட்பாடல் தேற்றா தவர் (187).

”இரண்டுபேர் ஒருமனமாகக் கூடியிருக்கின்ற சிநேகத்தைப் புறஞ்சொல்லிப் பிரித்தவர் யார் என்னில் இரண்டு பேருக்கும் மனம் பிரியப்படச் சொல்லி உறவு பண்ண அறியாதவர்.”

தவம்செய்வார் தம்கருமம் செய்வார்மற் றல்லார்

அவம்செய்வார் ஆசையுட் பட்டு (266)

”நிலையாமை நோய் மூப்புச் சாக்காடு என்று எண்ணித் தலையாவார் தம் கருமம் செய்வர்தம் கருமமாவன் தவம் பூசை நியதி தானம் தன்மம் என்பன. மற்றல்லாதார் செனனவழி தேடி ஆசை விலங்கிட்டு அவம் செய்வார்”.

கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்

மெய்வேல் பறியா நகும் (774)

”மதயானை கூடப் போர்செய்து கைவேல் பறி கொடுத்த வீரன் மெய்யிலே தைத்த வேலைப் பறித்து இந்தத் தறுவாயில் வேல் நேர்பட்டது என்று சிரித்துச் சலிப்பிலன்.”

விழுப்புண் படாதநாள் எல்லாம் வழுக்கினுள்

வைக்கும்தன் நாளை எடுத்து (776)

”வீரன் நாள்தோறும் தன் சரீரத்திலே புதுமைப் புண்படாத நாள்களை உயிருடன் வாழாத நாளாக எண்ணுவான்”.

காமக் கணிச்சி உடைக்கும் நிறைஎன்னும்

நாணுத்தாழ் வீழ்த்த கதவு (1251)

”பயிர்ப்பாகிய வீட்டில், அச்சம் என்னும் நிலையில் மடம் என்னும் சுதவில் இட்ட நாணம் என்னும் தாளை வெட்டும் காமமாகிய மழு

நயவுரை

சில தொடர்களுக்குப் பரிதியார் எழுதும் விளக்கம் மிகவும் நயமாகவுள்ளது. அவற்றுள் சிலவற்றைக் கீழே காணலாம்:

துறந்தார் (42)-மண் பொன் பெண் இந்த மூன்று வகை ஆசையைத் துறந்தார்.

கோடாமை (115)-எக்காலமும் ஒரு தன்மையாக இருப்பது

அற்றார் (506) -பொருளும் கிளையும் கல்வியும் அற்றார்.

(காக்கை) கரைந்துண்ணும் (527)-இனங் கூட்டிப் புசிக்கும்.

செறுநர் செருக்கறுக்கும் எ.ஃகு (759)-சத்துருக்கள் என்னும் காட்டை வெட்டுதற்கு ஆயுதம்.

கூற்று (765)-தன்னுயிரை ஒருவர்க்கும் கொடாத கூற்றுவன்.

பீடு நடை (1014)-மதயானை போல-ரி‘பம் போல நடக்கிற நடை.

நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் (1049)-நெருப்பினுள்ளும் நித்திரை செய்யலாம், அக்கினித் தம்பம் பண்ணி.

துச்சில் (340) துச்சில் என்பது ஒருத்தர் அளவிலே ஒதுக்குக் குடியிருத்தல்.”

பேச்சு நடையும் வழக்குச் சொல்லும்

பரிதியார் உரையில் பேச்சு நடையும் வழக்குச் சொல்லும் மிகுதியாக உள்ளன. அவற்றைக் காண்போம்:

நானாபதார்த்தம் (52), நானாவகை (514), வேணும் (116) கனவிலும் பிறவாது (139), எப்படி என்றால் (140), வயிறு வளர்ப்பது (183, 1032), சுட்டுப் போடும் (202), விளையாட்டிலும் சொல்லார் (199), தனக்கு வேண்டாதார் (203), வகையற்ற இடம் (218), தலை எழுத்து முடிந்த நாள் (269), விசாரித்து (514), இத்தனையல்லோ (912) நாட்டாண்மைக்காரன் (736).

அகழ்வாரைத் தாங்கும் நிலம் (151)-பூமி வெட்டுகிற பேரையும் சுமக்கும்.

தன்னுயிர் தானறப் பெற்றானை (268)-தன் ஆத்மா ஈடேறப் பார்ப்பானை.

வானுயர் தோற்றம் எவன் செய்யும் (272)-வான் போலப் பெரிய தபசு பண்ணி ஆவது என்ன?

மாடல்ல மற்றையவை (400)- அழுஞ்சு போகிற செல்வம் செல்வமல்ல.

மண் மாண் புனைபாவை (407) -மண்ணினால் பண்ணின பொம்மை.

இடிக்குந் துணையார் (447)-சிரிக்கச் சொல்லிக் கெடுக்காமல், அடிச்சுப் புத்தி சொல்லுகிற பேர்

காட்சிக் கெளியன்-குடியான பேர் வந்தால் எளிதாகக் காண.

கதை சொல்லும் கலைஞர்

பொதுமக்கள் குழுமியுள்ள இடத்தில் நின்று, அவர்கள் கேட்டு மனம் மகிழும்வகையில் இனிக்க இனிக்கக் கதைகளையும் கருத்துகளையும் கூறும் கலைஞர்களைப்போல் (உபந்நியாசம், கதா காலட்சேபம் செய்வோர்) பரிதியார் பல குறட்பாக்களுக்கு விளக்கம் தருகின்றார். கருத்தைச் சொல்லும்முறை, எளிய பேச்சு மொழியை ஆளல், இலக்கணத்தை நினையாமல் மக்கள் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் கூறுதல் போன்ற இயல்புகளை இவரிடம் காணலாம்.

நோயெல்லாம் நோய்செய்தார் மேலவாம் நோய்செய்யார்

நோயின்மை வேண்டு பவர் (320)

என்ற குறளுக்குப் பரிதியார், "ஒருவர்க்குத் தான் செய்த விதனம், பின்பு தனக்கு வருகிறபடியினாலேயே, ஒருவர்க்கும் தாங்கள் விதனம் செய்யார்" என்று பொருள் எழுதியபின், பின்வரும் கதையைக் கூறுகின்றார்:

""அ.்து எப்படி என்றால், பிரம்ம ராட்சதன் ஓர் இராசாவின் மகளைப்பற்றி நின்று, சந்தியாவந்தனை செய ஆற்றங்கரையிலே வந்து நின்றளவில், பிராமணப் பிள்ளையின் பிள்ளை வாசிக்கின்றவனுக்கு அன்றையிற் பாடம் இந்தக் குறள் ஆகையால் அவன் முகசுத்திபண்ண வந்தவன், இந்தக் குறளைப் பாடமாகச் சொல்லிக்கொண்டு வந்தான். இத்தை பிரம்ம ராட்சதன் கேட்டுத் தானொரு பிராமண வடிவாய், இந்தப் பிள்ளை வாய்ப்பாடத்தை இரண்டு பிரகாரங் கேட்டு, "நாம் இராசாவின் மகளை நோய் செய்தோமே! நமக்கு அந்த விதனம் வரும்" என்று பயப்பட்டு, இந்தப் பிள்ளை முன்னிலையாக இராச குமாரத்தியை விட்டுப் போச்சு என்றவாறு"

கூத்தாட்டு அவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்

போக்கும் அதுவிளிந் தற்று" (332)

என்ற குறளுக்குப் பரிதியார் எழுதியள்ள உரை காலட்சே முறையிலேயே உள்ளது:

"சந்தையிற் கூட்டம் நாலுபேரும் ஆறுபேரும் வந்து சந்தையில் காரியங்கண்டு மீண்டும் போவார்கள்: அப்படியல்ல செல்வம். எப்படி என்றால், கூத்தாடல் பார்க்க நாலு பேரும் ஆறுபேரும் வந்து கூத்துக்கண்டு, கூத்துக் குலைந்த போது ஒருக்காலே பிரிந்து ஓடுவார்கள். அதற்கு ஒக்குமே செல்வத்தின் கூட்டம் எப்படி என்றால் இவன் செய்த புண்ணியத்திற்கு தக்கதாக இலட்சுமி இருப்பாள் இவன் தவசு மாறி இலட்சு போன பின்பு அக்கினி கள்ளார்

இராசா ஆறு இவையிற்றினாலே செல்வம்போம் இ.ந்து அறிந்து உள்ளபோதே தன்மம் செய்வான் என்றவாறு"

யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்

வாய்மையின் நல்ல பிற (300)

என்ற குறளுக்கும் உரை பின்வருமாறு உள்ளது.

"ஆத்மாவைச் சேனனத்திலே தள்ளாமல் திருவடியிலே சேர்ப்பது சத்திய வாக்கியம் அன்றி, வேறொன்றும் கண்டிலோம். அசத்தியம் சொன்ன தருமபுத்திரன் நரகங் கண்டான் சத்தியம் சொன்ன அரிச்சந்திரன் ஸ்ரீபரமேசுவரன் பாதம் கண்டு சிவலோகம் சேர்ந்தான் என்றவாறு".

கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்

ஆற்றல் தலைப்பட்ட வர்க்கு (269)

தலை எழுத்து முடிந்த நாள்வர, அப்போது கூற்றுவனையும் வெல்லலாம், தவத்திற் பெரியோர்க்கு.

அதற்கு நந்திகேசுவர தேவனையும் மார்க்கண்டேயனையும் கண்டுகொள்க.

துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து

இறந்தாரை எண்ணிக்கொண் டற்று (22)

"காமக் குரோத லோப மோக மத மாச்சரியங்களையும் துறந்த பேருக்கு உவமை கூறில், பூமியில் இறந்த சேனனம் எத்தனையுண்டு. அத்தனை அறிந்தால் அவர்கள் பெருமை அறியலாம் என்றவாறு"

இத்தகைய பகுதிகளை 54, 56, 79, 89, 134, 148, 206, 213, 229, 262, 330, 371, 389, 447, 570, 927, 1066 ஆகிய குறட்பாக்களில் உரைகளிலும் காணலாம்

பொருந்தாவுரை

பரிதியார் உரையில், பல இடங்கள் மூலத்திற்கும் உரைக்கும் தொடர்பே இல்லாமல் உள்ளன. ஏடு எழுதியவராலோ வேறு பூக்காரணத்தாலோ இவர் உரையில் இலக்கணப் பிழைகள் ந்துள்ளன. சில குறட்பாக்களுக்கு இவர் தரும் உரையும் விளக்கமும், சிறிதும் பொருந்தவில்லை.

புகழ்புரிந்த இல்லிலோர்க் கில்லை இகழ்வார்முன்

ஏறுபோல் பீடு நடை (59)

என்ற குறளுக்குப் பரிதியார் "இன்னாள் பதிவிரதை என்று சொல்லும் சொல் பெறாத மடவாரை மனையாளாகவும் கடையான் தன்னை வேண்டார் முன்னே, "இன்னார் ரி'பம் போலே திரிகின்றான்" என்று ஏசுதற்கு இடமாவான் என்றவாறு" என்று எழுதியுள்ள உரை குறளின் கருத்தோடு பொருந்தவில்லை.

பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்

சால மிகுத்துப் பெயின் (475)

”நொய்ய பீலியாகிலும் கனமாக ஏற்றினால் வண்டி அச்சு முறியும் அதுபோலப் பெலமில்லாதார் பலர் கூடினாலும் சத்துவ மாம் ஆகையால் அரசன் வீரராகாத பேரையும் கனம் பெறக் கூட்டிக் கொள்வான்.”

இக் குறள் வலியறிதல் என்னும் அதிகாரத்தில் உள்ள தாலும் எளியர் பலர் என்று பலரோடு பகை கொள்வான் தான் வலியனே ஆயினும் அவர் தொக்க வழி வலி அழியும் என்னும் பொருள் தோன்ற இக்குறள் இருப்பதாலும் பரிதியார் உரை பொருத்தமில்லை.

“புணர்ச்சி மகிழ்தல்“ என்ற அதிகாரத்தில் உள்ள,

கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்

ஒண்டொடி கண்ணே யுள (1101)

என்ற குறளுக்குப் பரிதியார், ”விளக்குக் கண்டு அழிந்த விட்டிலும், யாழ் கேட்டு அழிந்த அசுணமும், இரை கண்டு அழிந்த மீனும், செண்பக மணம் உண்டு அழிந்த வண்டும். மெய்யின்பம் கண்டு அழிந்த யானையும் ஒவ்வொரு புலனால் அழிந்தன. ஐம்புலனும் ஓரிடத்திலே கூடியதால் என் செய்யாது” என்று பொருள் உரைக்கின்றார்.

இயற்கைப் புணர்ச்சியில் மகிழ்ந்த தலைமகன் மனநிலையைப் பரிதியார்உரை, வெளிப்படுத்துவதாக இல்லை! ஐம்புலனும் ஆரத்துய்த்த தலைவன், தலைவியை வியந்து போற்றும் நிலையைப் பரிதியார் உரை உணர்த்தவில்லை.

இத்தகைய பொருந்தாவுரைகளை 9. 91, 165, 394, 432 576, 599, 714, 840, 890, 1105 ஆகிய குறட்பாக்களின் உரைகளிலும் காணலாம்.

சிறப்பான உரைப்பகுதி

பரிதியார் உரையில் கற்போர் மகிழும் வகையில் அமைந் துள்ள உரைப்பகுதிகள் சில உள்ளன. அவை கீழே தரப்படு கின்றன.

எழுபிறப்பு (62)- தேவர், மனிதர், மிருகம், ஊர்வன, நீர் வாழ்வன, பட்சி, தாவரம்.

அழுக்காறு உடையான் (135- அழுக்கு மனம் உடையார்.

ஆக்கம் (177) -மரபு வழிச் செல்வம்.

பயன் மரம் (216)-பயன்படு மாமரம் பலாமரம் பனை மரம்

கள்வார்க்குத் தள்ளும் உயிர்நிலை (290) - கபடியார்க்கு அற்பாயுசுவாய்ச் சுவர்க்கமில்லை.

துறந்தார் (310)-தொண்ணூற்றாறு தத்துவத்தையும் உடலோடே இருக்கையிலே புளியம் பழமும் ஓடும்போலே துறந்தார்.

நாள் (334)- ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி சனி என்று தோன்றும் நாள்.

நாச்சென்று (335) என்னும் குறளுக்கு "நாக்குக் குழறி விக்கலும் வருமுன்னே அறம் செய்வான் பின்னை வசமல்ல பொன்னும் பொரி விளங்காயாம்" என்று பொருள் உரைக்கின்றார். "பொன்னும் பொரி விளங்காயாம்" என்பது இவர் காலத்தில் வழங்கிய நாட்டுக் கதையாகவோ, பழமொழியாகவோ இருக்கலாம். சீவக சிந்தாமணியில் வரும், "கையால் பொதித்துணையே காட்ட" (1553) என்ற பாடல் கூறும் கதை இங்கே கருதத்தக்கதாகும்.

குடிபுறம் காத்து (549)-"குடியை அறுவகைப் பயம் தீர்த்து" என்கின்றார். இக்கருத்துப் பெரியபுராணத்தில் சேக்கிழார் மன்னனைப் பற்றிக் கூறும் கருத்துடன் ஒத்துள்ளது. ("மாநிலங்காவலாவான்" - திருநகரச் சிறப்பு-36.)

கல்லார்ப் பிணிக்கும் (570) என்ற குறளுக்கு "பூமிக்கு எட்டுமலையும் எழுகடலும் பாரமல்ல் கொடுங்கோல் மன்னவன் பாரம்" என்று உரை எழுதுகின்றார்.

இணர் ஊழ்த்தும் நாறாமலர் (650) முருக்கம்பூ

மகளிர் மனம்போல வேறுபடும் (822) "இருமனப் பெண்டிர் " என்பது இவர் தரும் சிறப்புரை. பிற உரையாசிரியர்கள் இவ்வாறு கூறவில்லை.

நூலாருள் நூல்வல்லன் ஆகுதல் (683)-கல்வியுள்ளார் தான் சுல்வி வளங்குதல் "வெண்பாமாலையை" வெல்லுதற்கு

எரியாற் சுடப்படினும் உய்வுண்டாம் (896.˙.- நெருப்புப் பற்றின மரம் வேர் உண்டாய்ப் பதினைந்து நாளையில் நினைக்கும்.

அற்றது போற்றி உணின் (942)-செரித்தால் சாமம் பார்த்து அன்னம் இரண்டு கூறும், தண்ணீர் ஒரு கூறும், வாயு சஞ்சரிக்க ஒரு கூறும், வாத பித்த சிலேட்டுமத்திற்கு வேண்டாக் கறியை விட்டு அசனம் பண்ணக்கடவன்",

துய்க்க துவரப் பசித்து (944) "நித்தியம் ஒரு பொழுது அசனம் பண்ணி வருவானாகில் அவனுக்கு வியாதியில்லை".

உயிர் (1012) - "தேவர் கதி, மக்கள்கதி, விலங்கின் கதி,பட்சி இவை எல்லாம் நவ தாதுவினால் எடுத்த சரீரம்".

அரியவற்றுள் (443)"அரிதான காரியம் ஒருமலையை எடுத்து ஒருமலைமேலே வைத்தல் ஒரு கடுகிலே எழுகடலை. அடக்கல்."

வன்மை (1063) -மலையை எடுத்து மயிரிற் கட்டலும் கடுகில் எழுகடலை அடக்கலும் ஆகிய அவை அருமையல்ல"

புதுமையான விளக்கம்

பரிதியார் சில குறளுக்குத் தரும் விளக்கம் புதுமையாய் உள்ளது. இவர் கூறும் விளக்கம் ஏனைய உரைகளின் கருத்துக்கு மாறானவை.

“நத்தம்போல் கேடும்“ (235) என்பதற்கு, ”சங்கு ஆயிரம் சூழ்ந்த வலம்புரி போலே கிளையானது தன்னைச் சூழ வாழ்வது” என்று பொருள் எழுதுகின்றார்.

எண் என்ப (392) என்ற குறளின் உரையில், ”எண்ணாகிய சோதிடமும்” என்று உரைக்கினாறார்.

கல்லாதான் சொற்கா முறுதல் முலையிரண்டும்

இல்லாதாள் பெண்காமுற் றற்று.(402)

இக்குறளுக்குப் பரிதியார், ”கல்லாதான் சொல்லைக் காமுறுதல் தன்பாரம் இல்லாத பெண்ணைக் காமுறுதற்கு ஒக்கும்” என்று பொருள் கொள்ளுகின்றார்.

தேவர் அனையர் கயவர் அவரும்தாம்

மேவன செய்தொழுக லான் (1073)

”தேவர்க்கு நிகர் கயவர். அது எப்படி எனில், தெய்வமும் பத்தி பண்ணுவார்க்கு நன்மை தரும் அல்லாதார்க்குத் தீமை தகும். அதுபோல, கயவரும் தமக்கு இதம் செய்வார்களுக்கு இதமும் அகிதம் செய்வார்களுக்கு அகிதமும் செய்வர்”

கோட்டுப்பூச் சூடினும் காயும் ஒருத்தியைக்

காட்டிய சூடினீர் என்று (1313)

”செண்பகப்பூ, பாதிரிப்பூ, புன்னைப்பூச் சூடினும் குறிஞ்சி நிலத்து நாயகியை வேண்டிச் சூடினீர் என்று ஊடினாள்”

மக்கள் வாழ்வும் நாகரிகமும்

பரிதியாரின் உரையைக்கொண்டு அக்கால மக்களின் வாழ்வும் நாகரிகமும் அறியலாம்.

”குறிஎதிர்ப்பை நீரதுடைத்து” (221) என்பதற்கு “வட்டிக்குக் கொடுப்பதை ஒக்கும்“ என்று கூறுவதால், கடன் கொடுத்து வட்டி வாங்கும் வழக்கம் அக்காலத்தில் இருந்தது என்று அறியலாம்.

விலைப் பொருட்டால் ஊன்தருவார் இல் (256) என்பதற்கு, ”அகரத்திலே (அக்கிராகாரம்) மாங்கிசம் (புலால்) விற்பாரில்லை” என்று உரைக்கின்றார்.

நீராடி (278) என்பதற்கு, ”மார்கழித் தீர்த்தம் என்றும் மகா தீர்த்தம் என்றும் ஆடி” என்று கூறுகின்றார்.

”பிறன் பொருளைக் கள்ளத்தால் கள்வேம் எனல்” (282) என்பதற்கு ”ஒரு திருப்பணி போலே காட்டி வாங்குதல்“ என்று இவர் கூறுவதால் அக்காலத் துறவிகள் திருப்பணிக்குப் பணம் திரட்டினர் என அறியலாம்.

தன்னுயிர் நீப்பினும் (327) என்ற குறளுக்கு, தன்னுயிர் துறக்கும் காலமாகினும் இது பிழைக்கும் என்று, ஆடு கோழி பன்றியினைப் பிரார்த்தனை செய்வான் அல்லன்” என்று விளக்கம் எழுதுவதால் அக்கால மக்கள் ஆடு முதலியவற்றைப் பலி கொடுப்பது வழக்கம் என்று அறியலாம்.

கூத்தாட்டு அவைக்குழாத்து (332) என்ற குறள் உரையில், “சந்தையிற் கூட்டம் நாலு பேரும் ஆறு பேரும் வந்து சந்தையில் காரியங்கண்டு மீண்டும் போவார்கள்“ என்று உரைப்பதால், இவர் காலத்தில் ஊர்தோறும் சந்தைகள் கூடின என்று தெரிகின்றது.

4. காலிங்கர்

திருக்குறளுக்குப் பரிமேலழகர் உரைக்கு முன் தோன்றிய உரைகளில் காலிங்கர் உரை பெரிதும் போற்றப் பட்டிருக்கலாம். செறிவு வாய்ந்த நடையும் இலக்கண வரம்பறிந்து பழைய உரை தூய தமிழ்ச் சொற்களை ஆளும் திறனும் காலிங்கரிடம் உண்டு. கற்போர் உள்ளத்திற்குக் கிளர்ச்சியூட்டித் தம் கருத்தைத் திறம்படக் கூறும் வல்லமை இவரிடம் உண்டு. காலிங்கர் என்ற பெயர் காளிங்கர் என்றும் வழங்கும். காலிங்கராயர் என்ற பெயர் தமிழ்ப்புலவர்களுக்கு வழங்கியதற்குக் கல்வெட்டுக்கள் சான்றுகளாக உள்ளன.“

திருவள்ளுவ மாலை கூறும் இயல் பிரிப்பை அப்படியே இவர் பின்பற்றுவதாலும், மணக்குடவர், பரிப்பெருமாள் ஆகியோர் அம் முறையை மாற்றி வேறுவகையில் இயல் பிரிப்ப தாலும் அவ்விருவர்க்கும் காலிங்கர் முற்பட்டவராகலாம்.“

சமயம்

இவர் சமண சமயத்தவர். இவ்வாறு கருத இவரது உரை உறுதுணை புரிகின்றது.

வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது (377)

என்ற குறளில்,வகுத்தான் என்பதற்கு வகுத்தார் என்று பாடங் கொண்டு, பின்வருமாறு உரை எழுதுகின்றார்:

”அதனால் முன்னஞ்செய்தார் செய்த வினைவகையால் துய்த்தல் அல்லது மற்றுக் கோடிபொருள் ஈட்டினார்க்கும் அது கொண்டு துய்த்தல் அரிது எனவே, அங்ஙனம் ஈட்டுதற்கு உரியர் தானம் முதலிய நல்வினை முன்செய்து மற்றது கொண்டு தான் நுகர்தற்கு வேண்டும் நல்வினை முன்னஞ் செய்யாரேல் ஈட்டினரே ஆயினும், குறைவறத் துய்த்தல் அரிது என்றவாறு”.

இங்கே சைன சமயக் கருத்து இடம் பெற்றுள்ளது. பழவினை தன்னைச் செய்தானைத் தானே சென்றடையும்“ **(சாஸனத் தமிழ்க் கவி சரிதம் (1937) பக்கம்-161.)** என்பது அச்சமயக் கொள்கையாகும்.

பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க

நாகரிகம் வேண்டு பவர் (580)

என்ற குறள் உரையில் "நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர்" என்பதற்கு, "பெரியோரால் விரும்பத்தக்க உம்பர் உலகினுள்

சிறப்புடைய உத்தரகுருவினைத் தாம் எய்தி இனிது வாழ்த்திரும் வேண்டுபவர்" என்று எழுதுகின்றார்.

"உத்தரகுரு-போகம் துய்க்கும் பூமி" என்பது சைன கொள்கையாகும்.

உரையின் சிறப்பியல்புகள்

காலிங்கர் ஒரு பாலின் தொடக்கத்தில் எழுதும் முகவுரை யின் இறுதியில், அடுத்துவரும் பாலுக்குத் தோற்றுவாயும் எழுது கின்றார் இயல் ஆராய்ச்சியில் ஈடுபடுகின்றார் ஒவ்வோர் அதிகாரத்தின் இறுதிக் குறளிலும் அடுத்த அதிகாரத்தை தொடர்பு படுத்திக் காட்டுகின்றார். ஆனால், அதிகாரத்தின் தலைப்புப் பொருளை விளக்குவதில்லை.

திட்பமும் செறிவும் சுருக்கமும் வாய்ந்த நடையை இவரது உரையில் காணலாம். தனித்தமிழ் நடையில், சிறந்த தமிழ்ச் சொற்களை ஆளுகின்றார். உரை முழுவதும் இவரது தனித்தமிழ ஆர்வம் மணம் வீசுகின்றது. பழைய நூல்கள் பலவற்றிலிருந்து மேற்கோள் தருவதால், இவர் புலமை மிக்கவர் என்பது உறுத் திருக்குறளுக்கு உரை எழுதும் போது, முன்னும் பின்னும் நோக்கி தொடர்புகாட்டுகின்றார். இல்லறவியலில் கூறிய ஈகைக்கும். பொருட்பாலில் "அஞ்சாமை ஈகை" (382) என்ற குறளில், மன்னனுக்கு உரிய இயல்பாகிய ஈகைக்கும் வேறுபாடு காட்டுவது இங்கே நினைக்கத்தக்கதாகும்.

குறளுக்கு உரை எழுதியபின், குறளில் இடம் பெற்றுள்ள அரிய சொல்லுக்குப் பொருள் எழுதுகின்றார். மிகுதியாக விளக்கம் இல்லாமல் இரண்டொரு சொல்லுக்குமட்டும் அகராதி போலப் பொருள் உரைக்கின்றார். அவற்றுள் சிலவற்றைக் கீழே காண்போம்:

அன்மை என்பது அல்லாமை என்றாயிற்று (172).

தப்பு என்றது பொய் என அறிக (183).

சீர்மை என்பது ஒழுக்கம். சிறப்பு என்பது ஆக்கம். நீர்மை என்பது தண்ணளி (195).

அவாவல் - சூழ்தல் (215).

எவ்வம் என்பது துயரம் (223).

மன்ன என்றது நிலைபெறுதலை (245).

தெருளாதான் என்பது அறிவில்லாதவன். தேரின் என்பது ஆராயின் (249)

குடம்பை என்பது புள்ளியற்றும் கூடு (338).

தெய்வத்தான் என்றது விதியினால் என்றது (619).

ஏந்துதல்-மிகுதல் (899).

உறில் என்பது இன்புறுதல் என்றது (1270).

தஞ்சம் என்பது எளிமைப் பொருட்டு, இடுக்கண் உற்ற

விடத்து எய்துதல் என்பது (1300).

காலிங்கர், தம் உரையில் ஆங்காங்கே சுவையான மேற்கோள்களை நாலடியார், புறநானூறு, சீவக சிந்தாமணி, தொல்காப்பியம் முதலிய நூல்களிலிருந்து தருகின்றார்.

இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்

திருநீக்கப் பட்டார் தொடர்பு (920)

ஏன்ற குறளின் உரைக் கீழ்,

இம்மையே தவஞ்செ யார்கை

இருநிதி அகற்றல் வேண்டி

நம்மையும் கள்ளும் சூதும்

நான்முகன் படைத்து விட்டான்

என்ற சுவையான பாடலை மேற்கோள் தருகின்றார்.. **(இப்பாடல் சிறிது வேறுபாட்டுடன் விவேக சிந்தாமணியில் உள்ளது.)**

காலிங்கர் தம் உரையை வினாவிடை முறையில் அமைத் துன்னார். ஆசிரியர், மாணவர்க்குப் பாடம் சொல்லும் போது, ஏன் எனில், ஆயின் என்று வினா எழுப்பி விடை கூறி விளக்குவது போல இவர், உரை எழுதிச் செல்லுகின்றார்.

வினாவும் விடையும்

காலிங்கர், உரை எழுதிச் செல்லும் போக்கில் பிற உரையாசிரியர்களிடமிருந்து விலகித் தமக்கென ஒருவகைத் தனித் தன்மையை நிலைநாட்டி விடுகின்றார். இவரது உரையின் பெரும்பகுதி, மாணவன் ஒருவன் வினா எழுப்ப அதற்கு ஆசிரியர் விடை கூறுவதுபோலவே அமைந்துள்ளது.

பழகிய நட்புஎவன் செய்யும் கெழுதகைமை

செய்தாங்கு அமையாக் கடை (803)

என்ற குறளுக்கு, "அவரோடும் நெடுங்காலம் பழகிய நட்பு எல்லாம் என் செய்யும் யாதும் இல்லை எவ்விடத்து எனின், கீழ்ச் சொன்னபடியே அவர் தமக்கு வேண்டும் கெழுதகைமை செய்து அமையா இடத்து" என்று உரை எழுதுகின்றார். இங்கே வினா விடை முறை அமைந்துள்ளது. இம் முறை குறட்பாக்களின் உரையில் அமைந்துள்ளது. பல

வினாவிடை முறைக்கு வேறோர் சொல், ஆக்கந் தருகின்றது மற்று என்ற சொல் குறள்உரை தோறும் இடம் பெற்று ஒருவகை இணைப்பை முன்னும் பின்னும்

உண்டாக்கின்றது.

இவ்வாறு, பாடம் கூறும் முறையில் எழுதிச் செல்வது இவரது உரையின் தனித்தன்மையாகும்.

சொல்லோவியம்

காலிங்கர் உரையில், கற்பவர் கண்முன் தோன்றும் வகையில் எழுதப்பட்ட சொல்லோவியங்கள் சில உள்ளன.

"முலை இரண்டும் இல்லாதாள் பெண்காமுற்று அற்று" (402) என்ற உவமையைப் பின்வருமாறு விளக்குகின்றார்: "முலை இரண்டும் முன்னமே தனக்கு இல்லாதாளாகிய பேடியானவன் மற்று அம்முலை வனப்புறூஉம் திருவுடையாட்டியது பெண்மை கொண்டு இன்புறுதற்குத் தானும் காதலித்த அத்தன்மைத்து

வேலொடு நின்றான் இடு என்றது போலும் (552) என்ற உவமையைப் பின்வருமாறு விளக்குகின்றார்: "தான் கைப் பற்றிய மூவிலை வேலொடு நின்றான் ஒரு மூர்க்கன் அதனை ஓங்கி "வேலே! கடிதின் கொணர்ந்திடு பலி!" என்றதனை ஒக்கும்".

கவிதை மின்னல்

இவரது உரையில் சில இடங்களில் கவிதை மின்னல் பளிச்சிட்டு ஒளி வீசுவதைக் காணலாம். அவ்விடங்களில் இலக்கியச்சுவை முதிர்ந்து, இன்பம் அளிக்கின்றது.

அறத்துப்பாலின் இறுதியில், "வள்ளுவக் கடவுள் வகுத் தமைத்துரைத்த எள்ளறு சிறப்பின் அறத்துப்பால் முற்றும்" என்று எழுதுகின்றார். இங்கே எதுகைமோனை நயம்பட அமைந்து இன்ப மூட்டுகிறது.

"மண்ணோடியைந்த" என்ற குறளின் (576) உரை சிறந்த கவிதையாய் - ஓசைநயம் வாய்ந்த அகவல் பாடலாய் அமைந் துள்ளது:

"வண்ணம் எழுதா வகைத்து உருவாகிய மண்மேல் எழுதிய கற்பகத்தரு முதலிய போல்பவர் யார்எனில், செய்யவாயும் செவ்வரிக் கண்ணும் கரிய குழலும் வெளியநகையும் பிறவும் ஆகிய வகையமை உறுப்பின் வனப்பு வேற்றுமை தகைபெற உடைய தன்மையரேனும் கண்ணுறுப்பாகிய கண்ணோட்டம் இல்லாத கடுவினையாளர்" என்ற உரைப்பகுதியை எதுகைமோனை இயைபு நோக்கிச் சீர்பிரித்து அமைத்தால் ஆசிரியப்பா ஒன்று அமையும்.

பிற உரைகளைக் குறிப்பிடல்

காலிங்கர் தமக்குமுன் வழங்கி வந்த உரைகளையும், பிற பாடங்களையும் குறிப்பிடுகின்றார். இவர் குறிப்பிடும் பிற உரைகளும் வேறு பாடங்களும் இன்று கிடைத்துள்ள உரைகளில் காணப்படவில்லை. காலிங்கருக்கு முன்னர்ப்பல உரைகள் இருந்தன என்று அறியலாம்.

“குடிமடிந்து“ என்ற குறள் உரையில் (604) “குடிமடிந்து என்பதனைச் சுற்றத்தார் மாய்ந்து என்பாரும் உளர்“ என்று கூறு ஒன்றார்.

அற்றம் மறைக்கும் பெருமை சிறுமைதான்

குற்றமே கூறி விடும் (980)

என்ற குறளை இவர்,

அற்றம் மறைக்கும் சிறுமை பெருமைதான்

குற்றமாக் கொண்டு விடும்

என்று வேறு பாடங்களுடன் கொண்டுள்ளார். மேலும் சிறப்புரையில்,

”“அற்றம் மறைக்கும் பெருமை சிறுமைதான்

சுற்றமாய்ச் குழ்ந்து விடும்“

என்பது பாடமாயின்” என்று பிற பாடத்தைக் கூறி அதற்கு ஏற்ற வாறு உரையும் கூறுகின்றார். ”இன்னும் பிறவாறு பாடம் ஒதுவாரும் உளர் என்னின், அதற்கு ஏற்குமாறு அறிந்து உரைக்க” என்றும் உரைக்கின்றார்.

காலிங்கர் உரையிலிருந்து இக் குறள் பலவேறு பாடங் களைக் கொண்டிருந்தது என்பது விளங்கும்.

“செல்லான் கிழவன்“ என்ற குறள்உரையில் (1039) ”நிலம் புலந்து இல்லாளை ஊடிவிடும்“ என்பாரும் உளர்“ என்று உரைக் கின்றார்.

கோட்டுப் பூச் சூடினும் என்ற குறளின் உரையில் (1313) ”கோட்டுப்பூ-தாளிப்பூ என்பாரும் உளர்” என்கின்றார்.

உரை ஒற்றுமை

காலிங்கர் உரை, சில குறட்பாக்களுக்குப் பரிதி உரை யாகவே உள்ளது. காமத்துப்பாலில் உள்ள இரண்டு குறள்களுக்குப் பரிப்பெருமாள் உரையோடு ஒத்துள்ளது. இத்தகைய ஒற்றுமை எவ்வாறு ஏற்பட்டது என்பது தெரியவில்லை.

அறத்துப்பாலில் அழுக்காறாமை என்ற அதிகாரத்தில் “ஒழுக்காறாக் கொள்க்“ (1610 “கொடுப்பது அழுக்கறுப்பான்“ “அவ்வித்து அழுக்காறு“ (167) ஆகிய மூன்று குறள்களுக்கும் பரி காலிங்கர் இருவரும் ஒரே வகையாய் உரை எழுதுகின்றனர் பயனில் சொல்லாமை என்ற அதிகாரத்தில் “பல்லார் முனிய“ (19 “நயனிலன் என்பது“ (193), “நயன் சாரா“ (194) ஆகிய மூன்று குறள்களுக்குக் காலிங்கர் உரை, பரிதி உரையுடன் ஒத்துள்ளது

காமத்துப்பாலில் “கோட்டுப்பூச் சூடினும்“ (1313), “புல்வி விடா (1324) என்ற இரண்டு குறள்களுக்குக் காலிங்கர் உரையும் பரிப் பெருமாள் உரையும் ஒத்துள்ளன.

பரிமேலழகர் காலிங்கரைக் குறிப்பிடும் இடங்கள்

பரிமேலழகர், காலிங்கர் கூறிய உரையையும் கொண்ட பாடத்தையும் சில இடங்களில் குறிப்பிடுகின்றார்: மிகச் சில இடங்களில் மறுக்கின்றார்.

அறம் பொருள் இன்பம் உயிரச்சம்" என்ற குறளின் (50 உரையில் பரிமேலழகர், "உயிர் எச்சம் எனப் பாடம் திரித்துக் தத்தமக்குத் தோன்றியவாறே உரைத்தார்" என்று குறிப்பிடுவது காலிங்கரையேயாகும்.

ஊனைக் குறித்த உயிர் எல்லாம்" என்ற குறளின் (1013) உரையில் பரிமேலழகர், "ஊணைக் குறித்த என்று பாடம் ஓதுவாரும் உளர்" என்று காலிங்கர் கொண்ட பாடத்தைச் சுட்டு கின்றார்.

பேணாது பெட்டார் உளர்மன்னோ மற்றவர்க்

காணாது அமைவில கண் (1178)

என்ற குறளில் "மற்றவர் என்பதற்குக் காலிங்கர் "கொண்களை என்று வேறு பாடம் கொண்டுள்ளார். பரிமேலழகர் இப்பாடத்தை, இனி, "கொண்கனை என்று பாடமாயின்" என்று கூறி இப் பாடத்திற்கு ஏற்ற பொருளும் கூறுகின்றார்.

அதிகாரங்களின் பெயர்-வேறுபாடு

காமத்துப்பாலில் உள்ள நான்கு அதிகாரங்களின் பெய களில், சில வேறுபாடுகள் காலிங்கர் உரையில் காணப்படுகின்றன

பரிமேலழகர்	காலிங்கர்
110. குறிப்பறிதல்	குறிப்புணர்தல்
111. புணர்ச்சி மகிழ்தல்	புணர்ச்சியின் மகிழ்தல்
118. கணவிதுப்பழிதல்	கண்விதுப்பழித்தல்
127. அவர்வயின் விதும்பல்	அவர் வயின் விரும்பல்

குறள்களின் இடமாற்றம்

காலிங்கரது உரையில், காமத்துப்பாலில் உள்ள சில குறள்கள் அதிகாரம் விட்டு அதிகாரம் மாறியுள்ளன

தனிப்படர் மிகுதி என்ற அதிகாரத்தில் உள்ள "வீழ்வாரின் . இன்சொல்" (1198) என்ற குறள், நினைந்தவர் புலம்பல் என்ற அதிகாரத்தின் இறுதிக் குறளாக உள்ளது.

நினைத்தவர் புலம்பல் என்ற அதிகாரத்தில் உள்ள "விடாஅது சென்றாரை" (1210) என்ற குறள், அவர்வயின் விதும்பல் என்ற அதிகாரத்தில் ஆறாவது குறளாக உள்ளது.

வேறுபாடமும் கருத்துச்சிறப்பும்

காலிங்கர் சில குறள்களுக்குக் கொள்ளும் வேறு பாடங் களால், பொருள் சிறக்கின்றது.

அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்

வற்றல் மரந்தளிர்த் தற்று (78)

என்ற குறளில் "வன்பால்" என்பதற்குக் காலிங்கர் "வன்பார்" என்று பாடம் கொண்டு, "கல்செறிந்து வற்கென்ற தரை" என்று பொருள் கூறுகின்றார்.

நயன் சாரா நன்மையின் நீக்கும் (194)

என்ற குறளில், "நன்மையும் நீங்கும் என்று வேறு பாடம் கொண்டு, நயம் சேராமால் திருமாதும் பொய்க்கும்" என்று பொருள் கொள்ளுகின்றார்.

வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை

ஆண்டும் அ.ஃ.தொப்ப தில் (363)

என்ற குறளில் ஆண்டும் என்பதற்கு யாண்டும் என்று வேறு பாடம் கொண்டு, "எவ்விடத்தும்" என்று பொருள் உரைக்கின்றார்.

புதுப்பொருளும் விளக்கமும்

காலிங்கர் சில இடங்களில் புதுமையாகப் பொருளும் விளக்கமும் கூறுகின்றார். அவற்றைக் காண்போம்.

உயிரெச்சம் (510) - முத்தி

கழிபெருங்காரிகை (517) பெரிய நன்மை.

ஒருவந்தம் (593) - பெருஞ்செல்வம்.

எச்சம் (1004) - குலம் உருபு குணம் ஒழுக்கம் புதல்வர் புகழ் பொருள் பூமி என்னும் எச்சம்.

பேடி கைவாள் (614) -உறையகத்து இருந்த வாள்.

உப்பு (1050) என்பது இனிமை. காடி என்பது நடுவு நிலைமை அ.ஃ.தாவது சிறுமக்கள் பலர் கண்புதைத்து நகையாடும் இடத்து அவருள் ஒருவனை "இவன் காடிச்சால்" என்று நடு இருத்துவர் நடுநிலை ஆக வழக்கு என்பது அறிக..

உட்பகை அஞ்சித் தற்காக்க உலைவிடத்து

மட்பகையின் மாணத் தெறும். (883)

உட்பகை சிறிதும் உறுவழிப் பெரிதும் அஞ்சித் தன்னைப் ப கரித்துக்கொள்க் ஏன்எனின் தனக்கு ஓர் தளர்ச்சி வந்த இடத்தே கரைப்படக் கட்டிய மண், உறுதிக்கு ஒரு தளர்ச்சி வந்த இடத்து மற்று அதனை முழுவதும் முரித்து எறியும் வெள்ளம்போல் இதுவும் தன் குடிமுழுதும் குலைத்து எறிந்துவிடும்."

மட்பகை என்பதற்கு இவர் வெள்ளம் என்று பொருள் கொள்ளுகின்றார். இவ்வுரையின் சிறப்பை அறிஞர் டி.பி. பழனி யப்ப பிள்ளை பின்வருமாறு புலப்படுத்துகின்றார்கள்.

"மட்பகை என்னும் தொடர்மொழி மணவினைஞராகிய குயவர் கையாளும் கருவிகளாகிய சுழலுருளி, கொட்டுக்கோல், அச்சுச் சட்டம், ஊசி, ஓலை முதலியவற்றுள் எதற்கும் பெயராக வழக்குப் பெற்றுள்ளதன்று. மண்ணைப் பகுக்கும் காரணத்தால் போந்தது எனின், அவ்வினை செய்யும் மண்வெட்டி குந்தாலி முதலியவற்றுக்கும் பெயராதல் செல்லாது ஊசி ஒன்றற்கே பெயராய் அமைதலும் பொருந்தாது எனக் காண்க. மற்று, திணிந்த மண்ணினை இயல்பாகக் கரைக்கும் தன்மையுடைத்தாகிய நீர் அம் மண்ணிற்குப் பகையாதலோடு, இறுகச் செறிந்த கரைகளை வெள்ளப் பெருக்கால் முரித்து எடுத்து எறிந்து செல்லுதல் கண்கூடு ஆதலால், "மண்பகை" என்ற தொடர்க்கு நீர்வெள்ளம் என்பது பொருட்பேறு உடைத்தாவது காண்க. அன்றியும் ஊசி, வனைந்த பாண்டத்தை வனையா மண்ணிற் பகுக்குங்கால் உலை விடத்துப் பயனாவது இன்றாய் நிலையிடத்துப் பயனாவது. நீர் வெள்ளம் உலைவிடன் உடைய கரையை முற்றி மோதியுடைத்தல் எளிதாகலின் உலைவிடத்துச் செயலுடைமை உட்பகைக்கும் மட்பகைக்கும் பொருந்தும் அன்றி, குயவன் ஊசிக்குப் பொருந்தாமை அறிந்து கொள்க." (**1.திருக்குறள் பொருட்பால் காலிங்கர் பரிப்பெருமாளுரை முன்னுரை.)**

5.மணக்குடவர்

திருக்குறள் உரைகளில், பரிமேலழகர் உரைக்கு அடுத்த படியாக அச்சேறி மக்களிடத்தில் பரவிச் செல்வாக்குப் பெற்ற பெருமை, மணக்குடவர் உரைக்கு உண்டு பரிமேலழகர் உரையை மறுப்பவர்களும் அவரது கருத்தை ஏற்காதவர்களும் மணக்குடவர் உரையையே நோக்குவது பல ஆண்டுகளாக இருந்து வரும் வழக்கமாகும்.

மணக்குடவருடைய உரை, தெள்ளிய தமிழில் எளிய கடையில் அமைந்துள்ளது. பொழிப்புரையும், சில இடங்களில் விளக்கமும் உள்ளன. தமிழ்ப் பண்பாடு தழுவி எழுதப்பட்ட தெளிவுரை என்று இவரது உரையைப் போற்றுவர். பிற உரையாசிரியர்களைப்போல வட நூற் கருத்தைத் தம் உரையில் பகுத்துவதில்லை. புதிய பாடங்களைக் கொண்டு, சொற்களைப் பிரிக்கும் முறையில் புதுமை கையாண்டு சிறப்பாக உரை எழுதிச் செல்வது இவரது பண்பாகும்.

இவரிடம் ஆரவாரமோ புலமைச் செருக்கோ காணப் படவில்லை. கற்று அறிந்து அடங்கிய அறிஞராக இவர் காணப்படுகின்றார். தமக்கு ஐயப்பாடாக உள்ள கருத்தினைத் தயக்கத்துடனே எழுதுகின்றார். வான் சிறப்பு என்ற அதிகாரத்திற்கு விளக்கம் எழுதும் இடத்தில், "இது கடவுட் செய்கைத்தாதலால் அதன்பின் கூறப்பட்டது. இ.ந்து ஈண்டுக் கூறியது என்னை எனின், பின் உரைக்கப்படுகின்ற இல்லறமும் துறவறமும் இனிது நடப்பது மழை உண்டாயின் என்றற்குப் போலும், அன்றியும் காலத்தின் பொருட்டுக் கூறினார் எனினும் அமையும்" என்று எழுதுவது இங்கே நினைக்கத்தக்கதாகும்.

மணக்குடவரைப்பற்றி அறிந்து கொள்ள, இவரது உரைக்கு முன்னால் உரைச் சிறப்புப்பாயிரம் எதுவும் இல்லை. ஆதலின் மற்ற உரையாசிரியர்களை அறிந்த அளவிற்கும் இவரைப்பற்றி அறிய இயலவில்லை.

மணக்குடி என்ற ஊரில் பிறந்து அவ்விடத்தில் வாழ்ந்த தால் மணக்குடியர் என்று பெயர் ஏற்பட்டு அப் பெயரே மணக்குடவர் என்று மருவிற்று. மணக்குடி என்ற பெயருடன் தமிழகத்தில் பல ஊர்கள் இருப்பதால் அவர் எப்பகுதியில் வாழ்ந்தார் என்றும் அறியமுடியவில்லை. மணக்குடி என்பது, இவர் பிறந்த குடியின் பெயர் என்றும் கூறுவர்.

திருக்குறள் உரையாசிரியர்களில் காலத்தால் முற்பட்டவர் இவர் என்ற கருத்தும் நிலவி வருகின்றது. ஆனால் இவரே பிறர்கொண்ட பாடங்களையும் மற்ற உரைகளையும் தம் உரையில் குறிப்பிடுவதால் இவருக்கு முன்னும் உரையாசிரியர் சிலர் இருந்திருக்க வேண்டும் என்று அறியலாம்.

சமயக் கருத்து

மணக்குடவர் உரையில் அவரது சமயத்தை அறியும் வகையில் சமயக் கருத்துக்கள் பல இடங்களில் உள்ளன.

“ஆதிபகவன்“ (ஐ) என்பதற்கு ஆதியாகிய பகவன் என்றும், “தன்னுயிர் தானறப் பெற்றானை“ என்ற குறளின் (268) விளக்க வுரையில், ”உயிர் என்றது சலிப்பற்ற அறிவை தான் என்றது சீவனாகி நிற்கின்ற நிலைமையைத் தானறுதலாவது அகங்காரம் அறுதல்” என்றும், “மலர் மீசை ஏகினான்“ என்பதற்கு (3) மலரின் மேல் நடந்தான் என்றும், “தாமரைக் கண்ணான் உலகு (1103) என்பதற்கு இந்திரனது சுவர்க்கம் என்றும் கூறுகின்றார்.

“வகுத்தான் வகுத்த வகை“ (377) என்பதற்கு விதானம் பண்ணினவன் விதானம் பண்ணின வகை என்று பொருள் உரைக் கின்றார்.

இருள் நீங்கி இன்பம் பயக்கும்“ (352) என்ற குறளின் கீழ் ”இது, மெய்யுணர்ந்தார்க்கு வினைவிட்டு முத்தி இன்பம் உண்டாமே என்றது” என்று கூறுகின்றார்.

“எதிரதாக் காக்கும்“ (429) என்ற குறளின் உரையில் ”இது, முன்னை வினையால் வரும் துன்பமும், முற்பட்டுக் காக்கிள் கடிதாக வாராது என்றது” என்றும், ‘ஒருமைக்கண்“ (398) என்ற குறளில், ““இது, வாசனை (வாசனாமலம்) தொடர்ந்து நன்னெறிக்கண் உய்க்கும் என்றது” என்றும் உரைக்கின்றார்.

இக் கருத்துக்கள் யாவும், மணக்குடவர், சமண சமயத்தவர் என்பதை விளக்கும்.

உரையின் சிறப்பியல்புகள்

மணக்குடவர் உரையின் சிறப்பியல்புகள் கற்போரை மகிழச் செய்பவை. அவை, மணக்குடவரின் உரைத் திறனுக்குச் சான்று பகர்பவை.

இவரது உரை பொழிப்புரையாக உள்ளது தேவையான இடங்களில் மிகச் சுருக்கமாக விளக்கம் எழுதுகின்றார். குறளின் கருத்து இது என்று கூறுகின்றார். திருக்குறள் இருக்கும்

அமைப்பிலேயே பொருள் உரைக்கின்றார். எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் இவற்றை நன்கு ஆராய்ந்து முன்பின் மாற்றி அமைத்து, கொண்டு கூட்டிப் பொருள் எழுதுவதில்லை.

முகத்தின் முதுக்குறைந்த துண்டோ உவப்பினும்

காயினும் தான்முந் துறும் (707)

என்ற குறளுக்குப் பரிமேலழகர் உரையும் மணக்குடவர் உரையும் ஒப்பிட்டு நோக்கின் மணக்குடவர் குறள் கிடந்தவாறே பொருள் உரைப்பது புலனாகும்.

சில இடங்களில் தேவையான சொற்களை வருவித்து எழுதுதலும் உண்டு.

மடியுளாள் மாமுகடி என்ப மடியிலான்

தாளுளாள் தாமரையி னாள் (617)

என்ற குறளின் உரையில், மடியுளாள் மாமுகடி என்பதற்கு வினை செய்யுங்கால் அதனைச் செய்யாது சோம்பி இருப்பானது சோம்பலின்கண்ணே மூதேவி உறைவாள்" என்று சில சொற்களை வருவித்துப் பொருள் உரைக்கின்றார்.

"பகல் வெல்லும் கூகையைக் காக்கை" என்ற குறளின் (481) கீழ், "இதனால் காலத்தது சிறப்புக் கூறப்பட்டது" என்று குறளின் கருத்தைச் சுருக்கமாகச் சுட்டுகின்றார். இவ்வாறு குறளின் கருத்தை நூல்முழுதும் சுட்டிச் சொல்லுவது இவர் வழக்கம்.

உவமை விளக்கம்: திருவள்ளுவர் கூறிய உவமைகளை மிகச் சில இடங்களில் விளக்குகின்றார்.

ஏறுபோல் பீடு நடை" என்பதில் உள்ள ஏறு நடை என்பதனை, அசைவும் தலையெடுப்பும் பொருந்திய நடை" என்று விளக்குகின்றார். இந்த விளக்கம் மிகவும் அரியதாகும்.

"நட்பிற்கு உறுப்புக் கெழுதகைமை" என்னும் குறளின் (802) விளக்கவுரையில், "இது பேய்ச் சுரைக்காய்க்குப் பல காயம் அமைத்தாலும் இனிமை உண்டாகாதது போல, உடன் படாராயின் இனிமை உண்டாகாதாகலான் உடன்படல் வேண்டும் என்றது" என்று உவமை கூறி விளக்குகின்றார்.

மேற்கோள்: மிக அருகியே மேற்கோள்களை இவர்

காட்டுகின்றார். "அரங்கின்றி வாட்டாடியற்றே என்ற குறளின் விளக்கவுரையில் (401) "கோட்டி கொளல், புல்லா எழுத்திற் பொருளில் வறுங்கோட்டி என்றாற்போல" என்று நாலடியாரை மேற்கோள் காட்டுகின்றார்.

சொல்லாட்சி: மிகக் குறைவாக இவர் வடசொற்களையும் வழக்குச் சொற்களையும் பயன்படுத்துகின்றார்.

கல்லா ஒருவன் தகைமை" என்ற குறளின் (404) உரையில், "கல்லாத ஒருவனது பெருமை கற்றவன் கிட்டி உரையாட மறையும் என்றவாறு" என்ற பகுதியில் "கிட்டி" என்ற வழக்குச் சொல்லை ஆண்டுள்ளார்.

முரண் அகற்றுதல்

பொருட்பாலில் உள்ள,

அஞ்சாமை ஈகை அறிவுஊக்கம் இந்நான்கும்

எஞ்சாமை வேந்தர்க்கு இயல்பு (392)

என்ற குறளும்,

அஞ்சுவ தஞ்சாமை பேதைமை அஞ்சுவது

அஞ்சல் அறிவார் தொழில் (428)

என்ற குறளும் முரண்படுவதுபோலத் தோன்றுவதை அறிந்த மணக்குடவர், "அஞ்சுவது அஞ்சாமை" (428) என்ற குறளின் உரையில், "மேல் அஞ்சாமை வேண்டும் என்றாராயினும் ஈண்டு அஞ்ச வேண்டுவனவற்றிற்கு அஞ்சுதல் அறிவு என்றார்" என்று கூறி முரண்பாட்டை நீக்குகின்றார்.

பரிமேலழகரும் மணக்குடவரும்

பரிமேலழகருக்குச் சிறந்த வழிகாட்டியாய் இருந்தவர் மணக் குடவரே. இவர் அமைத்துச் செப்பனிட்ட பாதையிலேயே பரிமேலழகர் முன்னேறிச் செல்கின்றார்.

அதிகாரந்தோறும் அமைந்துள்ள குறட்பாக்களை, கருத்து இயைபு நோக்கிப் பிரித்துப் பொருள்கூறும் முறையைப் பரிமேலழகர், மணக்குடவரிடமிருந்தே பெற்றுள்ளார்.

பல குறட்பாக்களின் உரையும் விளக்கமும்கூடப் பரிமேலழகர், மணக்குடவரைத் தழுவியே உரைக்கின்றார். "அறத் தாறு இதுவென" என்ற குறளின் (37) விளக்கவுரையில் மணக்குடவர், "இது பொன்றினாலும் துணையாகுமோ என்றார்க்குத் துணையாயினவாறு காட்டிற்று," என்கிறார். பரிமேலழகர் அவர் கருத்தைத் தழுவி, "இதனாற் பொன்றாத் துணையாதல் தெளிவிக்கப்பட்டது" என்று உரைக்கின்றார்.

"செவிக்குணவு" என்ற குறளின் (412) விளக்கவுரையில் மணக்குடவர், "பெருக உண்ணின் கேள்வியை விரும்பாது காம நுகர்ச்சியை விரும்பும் ஆதலான் "சிறிது" என்றார்", என்று கூறுகின்றார். பரிமேலழகர் அவர் கருத்தை மேற்கொண்டு "நோயும் காமமும் பெருகுதலால் "சிறிது" என்றும் கூறினார்" என்று உரைக்கின்றார்.

"உலகம் தழீஇயது" என்ற குறளின் (425) உரையில் மணக்குடவர், "நீர்ப்பூப்போல மலர்தலும் குவிதலும் இன்றி, ஒரு தன்மையாகச் செலுத்துதல் அறிவு" என்று கூறுகிறார். பரிமேலழகர் அக்குறளின் விளக்கவுரையில், "கயப்பூப் போல வேறுபடாது கோட்டுப் பூப்போல ஒரு நிலையே நட்பாயினான் எல்லா இன்பமும் எய்தும் ஆகலின், அதனை அறிவு என்றார்" என்று மணக்குடவர் கருத்தைத் தழுவி எழுதுகின்றார்.

வேறு சில இடங்களில் பரிமேலழகர், மணக்குடவரைப் பெரிதும் மதித்து, அவர் உரையையும் கருத்தையும் சுட்டிச் செல்லுகின்றார். அவர் கருத்துப் பொருந்தாக இடங்களைக் காரணங்கூறி மறுக்கின்றார்.

6. பரிப்பெருமாள்

மணக்குடவருக்குப்பின் திருக்குறளுக்கு உரை இயற்றியவர் பரிப்பெருமாள். மணக்குடவரைப் பெரிதும் பின்பற்றி, தேவையான இடங்களில் மட்டும் விளக்கம் எழுதிச் சேர்த்து இவர் தம் உரையை அமைக்கின்றார். எழுத்திற்கு எழுத்து, சொல்லுக்குச் சொல் அப்படியே மணக்குடவர் உரையை யாதொரு மாறுதலும் இன்றி எடுத்துச் சேர்த்துக்கொண்ட இடங்களும் பல உண்டு. நன்னூலுக்குச் சிவஞான முனிவர், சங்கர நமசிவாயர் உரையைத் திருத்தி விளக்கங்கள் சேர்த்து அமைத்ததுபோல, பரிப்பெருமாள் மணக்குடவர் உரையைத் திருத்தி அமைத்துள்ளார். பாலின் தொடக்கத்தில் கூறும் விளக்கம், இயல் பிரிப்புப் பற்றிய ஆராய்ச்சி, அதிகாரத்தின் முன்னுரை, குறள் வைப்பு முறை ஆகிய எல்லாவற்றிலும் பரிப்பெருமாள் மணக்குடவரைப் பின்பற்றியுள்ளார்.

“இயற்றலும் ஈட்டலும்“ என்ற குறளின் விளக்கவுரையில் (385) இருவர் கருத்தும் கீழே தரப்படுகின்றன.

மணக்குடவர்: ”பகுத்தல் யானை குதிரை முதலிய படைக்குக் கொடுத்து, அவையிற்றை உண்டாக்குதல். இது பண்டாரம் கூட்டுமாறு கூறிற்று”.

பரிப்பெருமாள்: ”வகுத்தலாவது யானை, குதிரை படைக்குக் கொடுத்து அவையிற்றை உண்டாக்குதலும், அரண் செய்யவும், படைக்கலன்கள் பண்ணுதல் முதலாயினவற்றிற்கும் கொடுத்தல். இவை எல்லாம் பண்டாரம் ஆதலின் ஒரு பொருளைப் பலவாக வகுத்தல் என்றார். இது பண்டாரம் கூட்டுமாறு கூறிற்று”.

இருவர் உரைகளையும் ஒப்பிட்டு நோக்கினால் மணக்குடவர் உரையுடன் பரிப்பெருமாள் விளக்கம் சேர்த்து, உரை எழுதிச் செல்வது விளங்கும். இத்தகைய இடங்கள் பல நூல் முழுதும் உண்டு.

வேறு பாடம் கொள்ளுதல்

பரிப்பெருமாள், மணக்குடவரைப் பின்பற்றினாலும் மிகச் சில இடங்களில் வேறு பாடம் கொண்டு புதிய பொருள் காணுகின்றார்.

“அணங்கு கொல்“ என்ற குறளில் (1081) கனங்குழை என்பது மணக்குடவர் கொண்ட பாடம். கணங்குழை என்பது பரிப்பெருமாள் கொண்ட பாடம்.

“பேணாது பெட்டார்“ என்ற குறளில் (1178) காணாது அமைவில கண் என்ற மணக்குடவர் பாடத்தை மாற்றிப் பரிப்பெருமாள் “காணாது இமைவில கண்“ என்று வேறு பாடம் கொண்டுள்ளார்.

நாம்காதல் கொண்டார் நமக்கெவன் செய்பவோ (1195)

இது மணக்குடவர் கொண்ட பாடம்.

நாம்காதல் கொண்டால் நமக்கெவன் செய்யவோ

இது பரிப்பெருமாள் கொண்ட பாடம்,

பிறரைச் சுட்டுதல்: பரிப்பெருமாள் மணக்குடவரையே பின்பற்றிச் சென்றாலும், வேறு சிலருடைய உரையையும் சில இடங்களில் சுட்டுகின்றார்.

பொருட்பாலில், "உளவரை தூக்காத" (480) என்ற குறளின் உரையில், "ஒப்புரவாண்மை என்று ஒப்புரவிற்கே போக்குவாரும் உளர்" என்று சுட்டுகின்றார்.

காமத்துப்பாலில், "மதியும் மடந்தை முகனும்" (1116) என்ற குறளின் உரையில், "பதியிற் கலங்கிய மீன் அறியா" என்று பாடம் ஓதி, தம் நிலைமையினின்றும் கலங்கின மீன்கள் மதியினையும் மடந்தை முகத்தினையும் அறியாவாயின எனினும் அமையும்" என்று வேறொரு கருத்தைக் கூறுகின்றார்.

வரலாறு

திருக்குறள் உரையாசிரியர்கள் பதின்மர் பெயரைக் குறிப்பிடும் தொண்டை மண்டலச் சதக மேற்கோள் பாடல், பரிப்பெருமாளைக் கவிப் பெருமாள்" என்று குறிப்பிடுகின்றது.

பரிப்பெருமாள் உரை இறுதியில்,

தெள்ளிய மொழியியலைத் தேர்ந்துரைத்துத் தேமொழியார்

ஒள்ளிய காமநூல் ஓர்ந்துரைத்து - வள்ளுவனார்

பொய்யற்ற முப்பாற் பொருளுரைத்தான் தென்செழுவைத்

தெய்வப் பரிப்பெருமாள் தேர்ந்து

என்ற வெண்பா காணப்படுகின்றது. இவ்வெண்பாவால் ப்பெருமாள் மொழியியல், காமநூல் என்ற இரண்டு நூல்களை இயற்றினார் என அறியலாம். தென்செழுவை என்பது இவரது ஊர் என உணரலாம். தென்செழுவை, பாண்டி மண்டலத்துச் சேது நாட்டில் உள்ளது.

இவரைப் பற்றிய சில பாடல்கள் பெருந்தொகையில் உள்ளன. உரைச் சிறப்புப்பாயிரம் பின்வருமாறு அமைந்துள்ளது.

மாயிரு ஞாலத்து மன்பொருள் விளக்கும்

ஆயிரம் கதிரும் ஆழ்கடல் மறைந்தபின்

விரிகதிர் மதியும் விளங்காக் காலத்து

எரிதலைக் கொளீஇய சில்திரி விளக்கின்

அரியவும் பெரியவும் அறிந்தோர் போல

வசையில் வள்ளுவன் வாய்மொழிப் பொருளை

இசைபட நுவல்வோர் இறந்த பின்னர்

நன்மதி யுடையோர் நாடார் ஆதலின்

என்மதி அளவின் யான்அறிந்து உரைத்த

மழலைக் கிளவியை மதியோர் ஆராய்ந்து

இகழ்தல் இன்றியே யாவையும் இயைத்துத்

திருத்தி உரைத்தல் வேண்டும்

அருத்தம் பயில்வோர் அருங்கடன் எனவே (-1539)

என்ற உரைச்சிறப்புப் பாயிரத்தில் வரும், "வள்ளுவன் வாய்மொழிப் பொருளை இசைபட நுவல்வோர் இறந்த பின்னர், யான் அறிந்து உரைத்த மழலைக்கிளவி" என்ற அடிகள் பரிப்பெருமாளுக்கு முன்னரே வேறு சிலர் திருக்குறளுக்கு உரை இயற்றினர் என்பதை உணர்த்தும்.

இவரது புதிய உரையை அக்காலத்தவர் போற்றாது புறக்கணித்ததால் பின்வரும் செய்யுளை இவர் இயற்றி யிருக்கக்கூடும்.

புதியது தீது பழையது நன்றுஎன்றல் பூமியுள்ளோர்

விதியது பொருளென -என்னன்மின் நல்லோர் விருப்பமுண்டேல்

புதியது நன்று பழையது தன்னினும் பூமடந்தை

புதியதின் மேவில் பருமுத்தோடு ஆடையைப் பார்மின்களே!(- 1540)

பரிப்பெருமாள், தமது உரை திருக்குறளின் உட்பொருளை நன்கு விளக்குவது என்றும் முப்பாலின் கருத்தறியாது

உட்பொருள் காணமுயல்வோர் முயற்சி பயனற்றது என்றும் உரைக்கின்றார்.

கண்ணும் முகமும் கருங்குழலும் செவ்வாயும்

வண்ண முலையும் வனப்புடைத்தென்று எண்ணிக்

கருத்தறியார் சாரலுறும் காளையர்நேர் முப்பால்

கருத்தறியாது உட்பொருள்காண் பார் (பெருந் -1541)

இவரது புதிய உரையை அக்காலத்து மக்கள் புறக்கணித்த தால் இப்பாடலையும் இயற்றி இருக்கக்கூடும்.

காலம்: இவர் காமத்துப்பாலின் தொடக்கத்தில் வாத்ஸ்யாயனம் என்ற காமநூலைக் குறிப்பிடுகின்றார். அத்நூலாசிரியர் காலம் 11-ஆம் நூற்றாண்டு ஆகும். பரிப்பெருமாள் அக்காலத்திற்குப் பிற்பட்டவர்.

தமிழ் நூலறிவு

பரிப்பெருமாள் தமிழ் இலக்கண இலக்கியங்களில் புலமை நிரம்பப் பெற்றவர். தம் உரையில் ஏற்ற இடங்களில், பல தமிழ் நூல்களை மேற்கோள் காட்டுகின்றார்.

காமத்துப்பாலில், காதற் சிறப்புரைத்தல் என்னும் அதிகாரத்தில் (1126-1129) தொல்காப்பியர் கூறும் மெய்ப் பாடுகளைக் குறிப்பிடுகின்றார். மெய்ப்பாட்டியலில் 22-ஆம்

நூற்பா கூறும் மெய்ப்பாடுகளை நான்கு குறட்பாக்களில் கூறுகின்றார்.

மெய்ப்பாட்டியல் 22

எதிர் பெய்து பரிதல்
கண்ணுள்ளிற் போகார் (1126)
இன்பத்தை வெறுத்தல் கண்ணுள்ளார் (1127)
பசியட நிற்றல்
நெஞ்சத்தார் (1128)
கண் துயில் மறுத்தல் இமைப்பின் (1129)

இவ்வாறே காமத்துப்பாலின் தொடக்கத்தில் தொல் காப்பியக் களவியல் (14) சூத்திரமும் இறையனார் அகப்பொருள் சூத்திரமும் இவரது உரையில் இடம் பெறுகின்றன. பிரிவாற்றாமை அதிகாரத்தின் தொடக்கத்தில், பிரிவு பற்றி இறையனார் அகப்பொருள் கூறும் சூத்திரம் ஒன்றும் ஆளப் பட்டுள்ளது.

“நாநலம் என்னும் நலன் உடைமை“ (641) என்பதற்கு, சொல்வலை வேட்டுவன் என்றாரும் உளர்“ (புறம் 252) என்று புறநானூற்றைக் குறிப்பிடுகின்றார்.

மூன்று வகையான தூதர் இயல்பை, ”தலையான தூதன் தானே காரியம் அறிந்து சொல்லும் இடையான தூதன் சொன்ன மாற்றத்தைச் சொல்லும் கடையான தூதன் ஓலை காட்டும்” என்று இவர் உரைக்கின்றார் (687). இக்கருத்து,

தானறிந்து கூறும் தலைமற் றிடையது
கோன்அறிந்தது ஈதுஎன்று கூறுமால் தானறியாது
ஓலையே காட்டும் கடைஎன்று ஒருமூன்றும்
மேலையார் தூதுரைத்த வாறு

என்ற பாரத வெண்பாவின் கருத்தைத் தழுவியதாகும்.

வடமொழிப் புலமை

வடமொழியில் உள்ள காமநூலையும் அரசியல் நூலையும் ஆழ்ந்து பயின்று அவற்றைப் பரிப்பெருமாள் பயன்படுத்து கின்றார்.

காமத்துப்பாலின் தொடக்கவுரையில், ”இக் காமப் புணர்ச்சியை வடநூலாசிரியர் அராகத்தார் கூடும் கூட்டம் என்ப” என்றும்,”இதற்கு இலக்கணம் வாத்ஸ்யாயனம் என்னும் காமதந்திரத்துச் சுரதவிகற்பம் என்னும் அதிகரணத்துள் கண்டு கொள்க” என்றும் கூறுகின்றார்.

பொருட்பாலில் பல அரசியல் நூலின் கருத்துக்களைக் குறிக்கின்றார்.தெரிந்து தெளிதல் என்னும் அதிகாரத்தில் துரோணர் மதம் (503), கௌடிலியர் மதம் (504), நாரதர் மதம் (505), பராசரர் மதம் (507), வியாதன் மதம் (508), உத்தவாசாரியார் மதம் (510) என்று அரசியல் நூற்கொள்கைகளைக் குறிப்பிடுகின்றார்.

கதைகள்

குற்றங் கடிதல் என்னும் அதிகாரத்தில் பல கதைகளைக் கூறிக் கருத்துகளை விளக்குகின்றார். அவை பின்வருமாறு:

""பிறர்மனை நயத்தலால் கெட்டான் இராவணன் ' வெகுளியால் கெட்டான் சனமேயன் நுகர்ச்சியால் கெட்டான் 5" (431).

"மாண்பு இறந்த மானமாவது தொடங்கின வினை, நன்மை பயவாதாயினும் அதனைவிடாது ஒழிதல். இதனால் கெட்டான் துரியோதனன். உவகையாவது, மாணா எளியாரை

அடர்க்கையால் பிறந்ததொரு மகிழ்ச்சியால் வலியார்மட்டும் செல்லுதல். இதனால் கெட்டான் வாதாபி" (432)

"இது பிறர் பொருளை விரும்பினால் வரும் குற்றம் கூறிற்று, இதனால் கெட்டான் புரூரவா" (437)

"எல்லா நாளும் தன்னைப் பெரியனாக நினைத்து வியலாது ஒழிக இதனால் கெட்டான் கார்த்த வீரியார்ச்சுனன்" (439).

"வத்தராயன் யானை பிடிக்கப்போய்ச் சிறைப்பட்டான் (440).

உலகியல் அறிவு

பரிப்பெருமாள், தம் காலத்துப் பழக்கவழக்கங்களை நன்கு அறிந்துள்ளார். உலகியலை அறிந்து போற்றித் தம் உரையில் கூறுகின்றார்.

குடிசெயல் வகை என்னும் அதிகாரத்தில், அமரகத்து என்னும் குறள் உரையில் (1027), "இ.'.து ஒரு குடிப்பிறந்தார் பலர் உளர் ஆயினால் அவருள் மூத்தவருக்குக் கடனோ, எல்லார்க்கும் கடனோ என்று ஐயுற்றார்க்குக் கூறப்பட்டது" என்று கூறுகின்றார்.

இவர் சுற்றந்தழால் என்னும் அதிகாரத்தில் தம் காலத்துச் சமுதாய அமைப்பினையும் குலமுறைக் கோட்பாடுகளையும் குறிப்பிடுகின்றார். அவற்றைக் கீழே காண்போம்:

"பிள்ளைகளை வேறு வேறு இடத்து நிறுத்தவேண்டும் என்பது சில ஆசாரியர் மதம். அதனை மறுத்து, மக்களை ஓரிடத்தே கொண்டிருக்க வேண்டும் என்பதூஉம், அதனானே குலம் வளரும் என்பதூஉம் கூறிற்று" (522).

"மக்கள் பலர் உண்டானால் எல்லார்க்கும் பகுத்து உண்ணக் கொடுக்க வேண்டும்" (527).

"மக்கள் பலர் உண்டானால் எல்லாரையும் ஒக்கப்பாராது நீதிமான் ஒருவனை இளவரசு ஆக்க வேண்டும்" (529).

"இது, விட்டுப்போன புத்திரனைக் கூட்டிக் கொள்ளுமாறு " (529).

"இது, மீண்டுவந்த இராஜ புத்திரனோடு செய்யும் திற " (530)

5பரிமேலழகர் திருக்குறள் உரை

1. வரலாறு

பரிமேலழகர் என்னும் அழகிய பெயரைத் தாங்கியவர். சிறந்த தமிழ் நூலாகிய திருக்குறளுக்கு உரை இயற்றிப் பெருமையுடன் விளங்குகின்றார். பரிமேலழகர் என்று பெரிதும் வழங்கும் பெயரைப் பரிமேலழகியார், பரிமேலழகியன், பரிமேலழகரையன் என்று பலவாறு வழங்குகின்றனர். சிவஞான முனிவர் இவரைப் பரிமேலழகியார் என்றே குறிப்பிடுகின்றார். ரா. இராகவ ஐயங்கார் "பரிப்பெருமாளைப் பரி என்று கொண்டு அவரினும் உரை வன்மையான் அழகு உடையர் ஆதலால், பரிமேலழகர் எனப்பட்டாரோ என்று ஊகிக்க இடமுண்டு" என்று கூறுவது. **(சேதுநாடும் செந்தமிழும் -பக்.16 (1928).** கேட்பதற்கு இனிமையாய் உள்ளதே ஒழிய உண்மையை வெளிப்படுத்துவதாய் இல்லை. பரிமேலழகர் என்ற பெயர் திருமாலுக்கு உரியது . திருமால் பரிமேல் அழகராயும், யானைமேல் அழகராயும் எழுந்தருளுவது இன்றும் வைணவக் கோயில விழாக்களில் உண்டு.

வாழ்ந்த இடம்

பரிமேலழகர் மதுரையில் வாழ்ந்தவர் என்று சிலரும், காஞ்சிபுரத்தில வாழ்ந்தவர் என்று சிலரும் கூறுகின்றனர் இரு வேறு கருத்தினரும் தம் தம் கருத்திற்குச் சான்றுகள் காட்டுகின்றனர்.

பெருந்திரட்டில் உள்ள செய்யுள் ஒன்று (பெருந். 1547) பரிமேலழகரைக் "கலைதேர் ஒக்கைக் காவலன்" என்று குறிப்பிடுகின்றது. ஒக்கை என்பது ஒக்கூர் என்பதன் மரூஉ மொழி அவ்வூர் பாண்டிய நாட்டில் உள்ளது. காவலன் என்று குறிக்கப்படுவதால், அரசியல் தலைவராய் இருந்திருக்கலாம். வேறொரு செய்யுள் (பெருந். 1.548) "போற்று தமிழ்க் கூடற்

பரிமேலழகியான்" என்று இவரைக் குறிப்பிடுவதால் மதுரையி இவர் வாழ்ந்தவர் என்பது பெறப்படும். இரு கருத்துக்களையு இணைத்து நோக்கும்போது, பரிமேலழகர் ஒக்கூரில் அரசியன் தலைமை பூண்ட குடியில் பிறந்து, பின் புலமைச் செல்வரா விளங்கி, தமிழ் வளர்த்த மதுரையில் தங்கித் தமிழ்ப் பணிபுரிந்து வந்தார் என்று கருதலாம்.

இவரது உரையில், நெல்லை மாவட்டத்துப் பேச்சு வழக்கு இடம்பெற்றுள்ளது. "செவ்வி பெற மலர்ந்து வைத்தும் நாற்றம் இல்லாத பூ குடப்படாதவாறு போல, நன்று மதிக்கப்படார் என்று பொருட்பாலில் உள்ள "இணர் ஊழ்த்தும்" (650) என்று குறளின் சிறப்புரையில்! கூறுகின்றார். மலர்ந்து, கற்று என்ற சொற்களுடன் "வைத்து" என்ற சொல்லைச் சேர்த்துள்ளார். வைத்து என்ற சொல்லை இன்றும் பாண்டிய நாட்டு மக்கள் தம் பேச்சில் வழங்குகின்றனர். எனவே, பரிமேலழகர் பாண்டிய நாட்டைச் சேர்ந்தவர் என்பது உறுதிப்படுகின்றது. திருநெல்வேலி மாவட்டத்தில் பரிமேலழகர் என்ற பெயருடைய பலர்க்கு நினைவாகப் பல இடங்களில் கல்லறைகள் உள்ளன." **. (முருக தனுஸ்கோடி - மணிவிழா மலர் (1967) பக்.74, 75.)**

இன்னொரு சாரர் பரிமேலழகரைக் காஞ்சிபுரத்தில் வாழ்ந்தவர் என்பதற்குச் சான்றுகள் காட்டுகின்றனர். தொண்டை மண்டலச் சதகம் (41), "திருக்காஞ்சி வாழ் பரிமேல்ழகன் வள்ளுவர் நூற்கு வழிகாட்டினான்" என்று கூறுகின்றது.

13-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆட்சி புரிந்த விசய கண்ட கோபாலன் என்னும் தெலுங்குச் சோழனின் 22-ஆம் ஆட்சியாண்டில் (கி.பி. 1271) எழுந்த கல்வெட்டு ஒன்று, "வண்துவரப் பெருமாளான பரிமேலழகிய பெருமாள் தாதன் என்ற பெயரைக் குறிப்பிடுகின்றது. இப்பெயருடையாரிடமிருந்து நிலம் ஒன்று வாங்கிய செய்தி கூறப்பட்டுள்ளது. இக் கல்வெட்டுக் குறிப்பிடும் பரிமேலழகிய பெருமாள் தாதன் என்பவரே உரையாசிரியர் பரிமேலழகராக இருக்கலாம் என்பர்." **(2.சாசனத் தமிழ்க்கவி சரிதம் (1937) பக்கம் -114-118. மு. இராகவ ஐயங்கார்.)**

சமயம்

பரிமேலழகர், வைணவ சமயத்தினர் என்பதற்கு, சான்றுகள் பல உள்ளன.

"மடியிலா மன்னவன்" என்னும் குறளில் (610). அடியளந்தான் என்பதற்கு, "தன் அடியளவானே எல்லா உலகையும் அளந்த இறைவன்" என்று பொருள் கூறி, தாம் ஒருமாலுக்கு அன்பர் என்பதை வெளிப்படுத்துகின்றார்.

தாமரைக் கண்ணான் உலகு என்பதற்கு (1103), "துறந்த யோகிகள் எய்தும் செங்கண்மால் உலகம்" என்று பொருள் தறுகின்றார் "இந்திரன் உலகு என்று உரைப்பாரும் உளர் தாமரைக் கண்ணான் என்பது அவனுக்குப் பெயர் அன்மையின், கு அ.ஃது உரையன்மை அறிக" என்று பிறர் கருத்தை மறுத்து, வைணவ சமயப்பற்றைக் காட்டுகின்றார்.

நாலாயிர திவ்வியப் மேற்கோள்களைக் காட்டுகின்றார். பிரபந்தத்திலிருந்து பல

"பற்றற்ற கண்ணே" என்னும் குறள் உரையில் (349) "அற்றது பற்றெனில் உற்றது வீடு" என்னும் திருவாய் மொழியை (1, 2,5)க் காட்டுகின்றார்.

"ஆரா இயற்கை" என்ற குறள் உரையில் (370) நன்றாய் ஞானம் கடந்துபோய்" என்ற திருவாய். மொழிப்பாடல் (78-6) முழுவதையும் மேற்கோள் தருகின்றார்.

பொருட்பால் இறைமாட்சியின் தொடக்கத்தில், "திருவுடை மன்னரைக காணில் திருமாலைக் கண்டேனே என்னும் என்று பெரியாரும் பணித்தார்" என்று நம்மாழ்வார் பாடலை (4-4-8) நினைவூட்டுகின்றார்.

இவை யாவும் பரிமேலழகர் வைணவ சமயத்தினர் என்பதை உணர்த்தும் சான்றுகளாகும்.

காலம்

உமாபதி சிவாசாரியார், "வள்ளுவர்சீர்" என்னும் வெண்பாவில், "பரிமேலழகர் செய்தவுரை" என்று இவர் உரையைக் குறிப்பிடுகின்றார். உமாபதிசிவனார், சங்கற்ப நிராகரணம் என்ற நூலை 1313-ஆம் ஆண்டில் இயற்றினார். ஆதலின் பரிமேலழகர் இக்காலத்திற்கு முற்பட்டவர்.

காமத்துப்பாலின் முன்னுரையில், "வடநூலுள் போசராசனும் "சுவை பல என்று கூறுவார் கூறுக் யாம் கூறுவது இன்பச்சுவை ஒன்றனையுமே" என இதனையே மிகுத்துக் கூறினான்" என்று கூறுகின்றார். இங்கே கூறப்பட்ட போசராசன் "சிருங்காரப் பிரகாசம்" இயற்றிய காலம், 11-ஆம் நூற்றாண்டின் முற்பகுதி.

நன்னூலார் படைத்து வழங்கிய 'ஒருபொருட் பன்மொழி என்னும் அழகிய தொடரைத் தம் உரையில் இரண்டு இடங்களில் (571, 863) பரிமேலழகர் எடுத்தாளுகின்றார் ஆதலில் தன்னூலாருக்குப் பிற்பட்டவர்.

சேனாவரையர் (கி.பி. 1276) கருத்தைப் பரிமேலழகர் தழு வானோக்கி வாழும்குடி, (542) என்ற குறளுக்கு உரை கூறுகின்றார் (சொல் 93) சொல்லெச்சத்திற்கும் சேனாவரையர் கருத்தையே பால் - 441, குறள் தழுவியுள்ளார் (சொல் 10, 37). □□□□, சேனாவரையருக்குப் பிற்பட்டவர் பரிமேலழகர்.

தலைமையோன்

பரிமேலழகர் உரைச் சிறப்புப்பாயிரம்,

வடநூல் துறையும் தென்திசைத் தமிழும்
விதிமுறை பயின்ற நெறியறி புலவன்
அன்பு அருள் நாண் ஒப்புரவு கண்ணோட்டம்
நன்றறி வாய்மை நற்றவம் உடையோன்
இத்தகை யன்றி ஈசனது அருளால்
உய்த்துணர் வுடையவோர் அருளால்
பரிமே, வழகன் எனப்பெயர் படைத்துத்
தரைமேல் உதித்த தலைமை யோனே

என்று புகழ்கின்றது. இங்கே கூறப்படும் புகழுரைகள் யாவும் பரிமேலகழர் பெருமையை நன்கு உணர்ந்து கூறப்பட்டலை யாகும்.

2. திருக்குறள் உரை

தருமர், மணக்குடவர், தாமத்தர், நச்சர், பரிதி, திருமலையர், மல்லர், பரிப்பெருமாள், காலிங்கர் ஆகிய ஒன்பது உரையாசிரியர்களுக்கும் காலத்தால் பிற்பட்டவர் பரிமேலழகர். இச்செய்தி.

செவ்வி முப்பாலுக்கு
ஓர்உரை யின்றி ஒன்பது சென்றும்
ஐயுற வாக நையறு காலை
...குறட்பாத் தமிழ்மனு நூலிற்கு

விழுப்பொருள் தோன்ற விரித்தினிது உரைத்தனன்

பரிமேலழகன் எனப்பெயர் படைத்துத்

தரைமேல் உதித்த தலைமை யோனே

என்று உரைப்பாயிரம் கூறுவதால் வெளிப்படுகின்றது.

காலம் தந்த வாய்ப்பு

பரிமேலழகர் தமக்குமுன் தோன்றிய ஒன்பது உரைகளையும் கற்கும் வாய்ப்புப் பெற்றார். எல்லா உரைகளிலும் உள்ள நல்ல இயல்புகளை அறிந்தார். ஒவ்வொரு உரையிலும் காணப்பட்ட குறை நிறைகளை உணர்ந்தார். இதன் பயனாய் நல்லனவற்றை மேற்கொண்டு குற்றங்குறைகளை நீக்கி, சிறந்த உரை காணும் வாய்ப்பு உண்டாயிற்று.

பரிமேலழகர்க்கு முற்பட்ட உரையாசிரியர் ஒவ்வொரு வரிடமும் ஒவ்வொரு சிறப்பியல்பு காணப்படுகின்றது. பாலின் தொடக்கத்தில் எழுதும் விரிவுரை, இயல்பற்றிய ஆராய்ச்சியுரை, அதிகாரம் தோறும் எழுதும் முன்னுரை, அதிகார வைப்பு முறை பற்றிய விளக்கம், அதிகாரத்திற்குள் குறட்பாக்களைப் பொருள். தொடர்போடு தொகுத்து நோக்குதல் ஆகியவற்றைப் பரிமேலழகர் நமக்கு முற்பட்ட உரையாசிரியர்களிடமிருந்து பெற்றார்.

மணக்குடவர் ஓர் அதிகாரத்திற்குள் குறட்பாக்களைப் பொருள் தொடர்போடு தொகுத்து நோக்குகின்றார். பரிமேலழகர் இம்முறையை மேற்கொண்டு புதுவிளக்கம் சில காணுகின்றார். காலிங்கர் அதிகாரம் தோறும் பத்தாவது குறளின் இறுதியில் அடுத்து வரும் அதிகாரத்திற்குத் தோற்றுவாய் கூறுகின்றார். பரிமேலழகர் இம்முறையைச் சிறிது மாற்றி அதிகாரத்தின் தொடக்கத்தில் முறை வைப்புப் பற்றி ஆராய்ச்சி நிகழ்த்துகின்றார். இவ்வாறு ஒவ்வொரு உரையிலும் காணப்படும் நல்லனவற்றை எல்லாம் மேற்கொள்ளுகின்றார் பரிமேலழகர்.

குறட்பாவுக்கு உரை எழுதும் போதும், ஏனைய உரைகளை நினைவில்கொண்டே உரை எழுதுகின்றார். பிறர் கொண்ட வேறு பாடங்களைக் குறிப்பிடுகின்றார். பொருத்தமற்ற பாடங்களை விலக்குகிறார். தவறான உரையைக் காரணங்கூறி மறுக்கின்றார். தமக்கு உடன்பாடு இல்லாத கருத்துகளைச் சுட்டிச் செல்லுகின்றார். மாறுபட்ட கொள்கையை மதிக்கின்றார். போற்றத்தகுந்த வேறுபாடுகளைப் போற்றுகின்றார்.

எல்லா உரையாசிரியர்கள் கருத்தையும் நெஞ்சத்தில் நிறுத்தி, உரை எழுதுகின்றார் என்பதற்குச் சான்றுகள் பல உள்ளன.

இலன்என்னும் எவ்வம் உரையாமை ஈதல்

குலன் உடையான் கண்ணே உள (- 223)

என்ற குறளுக்கு உரை எழுதியபின், வேறு உரைகளாக மூன்று கருத்துக்களைக் குறிப்பிடுகின்றார்.

"இளிவரவை ஒருவன் தனக்குச் சொல்வதற்கு முன்னே அவன் குறிப்பறிந்து கொடுத்தல்"

என்பது மணக்குடவர் உரை.

”அதனைப் பின்னும் பிறன் ஒருவன்பாற் சென்று அவன் உரையா வகையால் கொடுத்தல்” என்பது பரிதியார் உரை,

மூன்றாவது கருத்தைக் கூறிய உரையாசிரியர் யார் என்று இன்று நமக்குத் தெரியவில்லை. தருமர் நச்சர் தாம்த்தர் ஆகியவர்களில் யாரேனும் ஒருவர் கூறியதாக இருக்கலாம்.

“வன்கண் குடிகாத்தல்“ என்ற குறள் உரையில் (632) வேறு இரண்டு உரைகளைக் குறிப்பிடுகின்றார்.

இன்னும் சில இடங்களில் பரிமேலழகர் மற்ற உரை யாசிரியர்களை எல்லாரும் உரைத்தார் (643), பிறர் எல்லாம் உரைத்தார் (817, 1069,1262) என்று சுட்டுகின்றார்.

பரிமேலழகர் பிறர் உரைக்கருத்துகளை ஆழ்ந்து பயின்று தெளிவு பெற்றதுடன், காலிங்கர் உரையின் சிறப்பியல்புகளுள் ஒன்றான தனித்தமிழ் நடையை மேற்கொண்டுள்ளார். பிற உரையாசிரியர்களின் நல்லியல்புகளுடன் பரிமேலழகரின் ஆழ்ந்த இலக்கண அறிவும் வடமொழிப் பயிற்சியும் தமிழ் இலக்கிய புலமையும் அவர் உரைக்கு ஆக்கம் தந்தன. ஆதலின், அவர் உரை ஏனைய உரைகளை எல்லாம் வென்று மேலோங்கியது.

திருவள்ளுவரைப் பற்றி

திருவள்ளுவரைப்பற்றிப் பரிமேலழகர் கூறும் கருத்துகள் மிகச் சிறந்தவை திருவள்ளுவர் நெஞ்சத்தை அளந்து அறிந்து, புலமை மாண்பை அளவிட்டுக் கூறப்பட்டவை.

”எல்லா நூல்களிலும் நல்லன எடுத்து எல்லார்க்கும் பொதுபடக் கூறுதல் இவர்க்கு இயல்பு” (322) என்று திருவள்ளுவரைப் பற்றிக் கூறுகின்றார். இங்கே கூறப்பட்ட ஒவ்வொரு சொல்லும் பொருள் ஆழம் உடையதாகும்.

முரண்பாடு நீக்கல்

ஊழிற் பெருவலி யாவுள (380)

என்று கூறிய திருவள்ளுவர்,

ஊழையும் உப்பக்கம் காண்பர் (620)

என்று கூறுகின்றார். இவை மாறுபட்ட கருத்துகளாக இருப்பதை உணர்ந்த பரிமேலழகர், ”ஊழ் ஒரு காலாக இரு காலாக அல்லது விலக்கல் ஆகாமையின், பலகால் முயல்வர் பயன் எய்துவர்

என்பார் “உப்பக்கம் காண்பர்“ என்றார்” என்று தெளிவு படுத்துகின்றார்.

இகல்வெல்லும் வேந்தற்கு வேண்டும்பொழுது (481)

என்ற கருத்தும்,

குடி செய்வார்க்கு இல்லை பருவம் (1028)

என்ற கருத்தும் முரண்பட்டவை அல்ல என்பதைப் பரிமேலழகர், "இகல்வெல்லும் வேந்தர்க்கு வேண்டும் பொழுது (481) என்றது உட்கொண்டு இவர்க்கும் வேண்டுமோ என்று கருதினும் அது கருதற்க என்று மறுத்தவாறு" என்று விளக்குகின்றார்.

மாந்தர்க்குக் கற்றனைத் தூறும் அறிவு (396)

என்ற கருத்து,

நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்

உண்மை அறிவே மிகும் (373)

என்ற கருத்துடன் மாறுடுவதுபோல் தோன்றுவதை அறிந்து, ஸ்ரீ "இ.ஂது ஊழ் மாறுகொள்ளாவழியாகலின் மேல் உண்மை அறிவே மிகும் என்றதனோடு மலையாமை அறிக" என்று உரைக்கின்றார் (396).

தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்

நீங்கா நிலன்ஆள் பவர்க்கு (383)

என்பதும்,

தூங்குக தூங்கிச் செயற்பால (672)

என்பதும் மாறுபாடு உடையவைபோல் உள்ளதை உணர்ந்து, "மேல் தூங்காமை என்றார் (383) ஈண்டு அதனைப் பகுத்துக் கூறினார் (672)" என்று உரைக்கின்றார்.

இத்தகைய அரிய விளக்கம் பல தந்த பரிமேலழகரை,

திருவள்ளுவர் தம் கருத்தமைதி தானேகருதி

விரித்து உரைத்தான் (- 1544)

என்று புலவர்கள் போற்றுவர்.

உலகியல் அறிவு

பரிமேலழகர் உலக மக்களிடையே நன்கு பழகி, அவர்களின் பேச்சு, பழக்கவழக்கம் ஆகியவற்றை அறிந்திருக்கின்றார்.

மக்களைப் "பகைவர், நட்டார், நொதுமலர்" என மூன்றாகப் பிரிக்கின்றார் (752).

"குற்றம் இல்லாதார் உலகத்து இன்மையின்" என்று கூறுவது இவரது உலக அறிவை உணர்த்தும் (793).

நல்குரவு என்னும் அதிகாரத்தில், சிறந்த அறிஞர்கள் வறுமையுடையவராய் இருப்பின், அவர்களது சிறந்த பேச்சும் பயனற்றுப் போகும் என்பதற்குக் காரணம் கூறுகின்றார். "யாம் இவர் சொல்லியன விரும்பிக் கேட்குமாயின், கண்ணோடி இவர் உறுகின்ற குறைமுடிக்க வேண்டும் என்று அஞ்சி யாவரும் கேளாமையின் பயனில் சொல்லாய் முடிதல்" (1046).

வறியனைச் சுற்றத்தார் நீக்கிவிடுவர் என்பதற்கு, "கொள்வது இன்று ஆதலேயன்றி, கொடுப்பது உண்டாதலும் உடைமையின், அது நோக்கிச் சுற்றத்தார் யாவரும் துறப்பர்" என்று காரணம் கூறுகின்றார் (1047)

புறங்கூறாமை என்னும் அதிகாரத்தில் ஒரு குறளில் (186) "தன்னைப் புறங்கூறியவாறு கேட்டான், அக்கூறியாற்கு அவ்வளவன்றி அவன் இறந்துபட்டு உளையும் திறத்தனவாகிய பழிகளைநாடி, ஏதிரே கூறும்" என்று உரைக்கின்றார்.

தும்மும்போது மூச்சுடன் உயிரும் போய்விடுமோ என்றஞ்சி "நூறு ஆயுள்" என்று மகளிர் வாழ்த்துதலையும் (1312). அன்புடையார் நினைத்த வழி அந்நினைக்கப்பட்டார்க்குத் தும்மல் தோன்றும் என்ற மகளிர் வழக்கினையும் (1317) இவர் குறிப்பிடுகின்றார்.

இவையேயன்றி மக்கள் பேச்சு வழக்கினைக் குறிப்பிடும் இடங்களும் உண்டு.

"தெருப்பை நெருப்பாகவே கருது" என்றாற்போல (602), ஒருவர் கூறை எழுவர் உடுத்து" என்றாற்போல (1269) என்ற இடங்களில் தம் காலத்துப் பேச்சு வழக்கினை அறிந்து எழுதுகின்றார்.

தமிழ் நெஞ்சம்

பரிமேலழகரின் தமிழ்ப்பற்றும், பண்பட்ட உள்ளமும் வெளிப்படும் வகையில், உரை எழுதும் இடங்கள் சில உண்டு.

"பழங்குடி என்ற (955) சொற்றொடருக்குத் "தொன்று தொட்டு வருகின்ற குடி " என்று பொருள் கூறி, "தொன்று தொட்டு வருதல், சேர சோழ பாண்டியர் என்றாற்போலப் படைப்புக் காலம் தொடங்கி மேம்பட்டு வருதல்" என்று விளக்குகின்றார்.

மானம் என்ற அதிகாரத்தின் முதற் குறள் உரையில் (961) "இறப்ப வருவழி இளி வந்தன செய்தாயினும் உய்க" என்னும்

வடநூல் முறையை மறுத்து, "உடம்பினது நிலையின்மையையும் மானத்தினது நிலையுடைமையையும் தூக்கி அவை செய்யற்க என்பதாம்" என்று இவர் கூறுவது நினைவில் கொள்ளத் தக்கதாகும்.

"ஈன்றாள் பசி காண்பான் ஆயினும்" (6.56) என்னும் குறள் உரையில், "இறந்த மூப்பினராய இரு முது குரவரும் கற்புடை மனைவியும் குழவியும் பசியான் வருந்தும் எல்லைக்கண் தீயன பலவும் செய்தாயினும் புறந்தருக" என்னும் அறநூற் பொருள் நூல்வழி ஒழுகுதலும், அரசர் தொழிற்கு உரியராதலும், நன்கு மதிக்கற்பாடும் உடைய அமைச்சர்க்கும் எய்தாமைபற்றி இவ்வாறு கூறினார்" என்று எழுதுகிறார்.

தமிழ் நடை

இவரது உரையின் தனிப்பட்ட நற்பண்புகளில் ஒன்று தீந்தமிழ் நடை. உரைநடையில் இவர்க்கு ஒப்பான செறிவு இனிமை தெளிவு நயம் ஆகியவற்றின் இணைப்பை வேறு எவரிடத்தும் நாம் காண இயலாது. செய்யுளில் திருக்குறளுக்கு உள்ள சிறப்பியல்புகளை

எல்லாம், உரை நடையில் பெற முயன்ற இவர் வெற்றி பெற்றுள்ளார். திருவள்ளுவருடன் போட்டியிட்டு, திருவள்ளுவர் நடையை - சொற்செறிவை- இனிமையை - கருத்து ஆழத்தைப் பெற்றுள்ளார்.

கருத்தளவில் சில இடங்களில் வடமொழிச் சார்பாக இருக்கின்ற இவர், சொல் நடையில் வியக்கத்தக்க முறையில் சீரிய தனித்தமிழ் நடையைப் படைத்துள்ளார்.

முன்னோர்மொழி

நயமான பாடல்களின் அடியை, உரைநடையில் எழுதிச் செல்வது பரிமேலழகர் இயல்பு. அத்தகைய இடங்களில் சில காண்போம்:

64. சிறுகையான் அளாவலாவது, இட்டும் தொட்டும் கௌவியும் துழந்தும், நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தல் (புறம் - 188).

110. பெரிய அறங்களைச் சிதைத்தலாவது ஆன்முலை அறுத்தலும், மகளிர் கருவினைச் சிதைத்தலும், குரவர்த்தபுதலும் (புறம் - 33).

425. கயப்பூப்போல வேறுபடாது கோட்டுப்போல ஒரு நிலையே நட்பாயினான் எல்லா இன்பமும் எய்தும் (நாலடியார்)

970. புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின் வலவன் ஏவா வானவூர்தி எய்துவர் (புறம் -27).

1109. இருதலைப் புள்ளியின் ஓருயிராய உழுவல் அன்பு (அகம்).

1120. பாத்தி அன்ன குடுமிக் கூர்ங் கற்களை. உடைய வெஞ்சுரத்தை (அகம் - 5).

1099. மது மறைந்து உண்போர் மகிழ்ச்சிபோல உள்ளத்துள்ளே மகிழ்தலின் (இறையனார் 8 உரை மேற்).

சான்று காட்டுதல்

திருக்குறளில் உள்ள சொற்களுக்குத் தாம் கொள்ளும் பொருள் முன்னோர் பாடல்களில் அவ்வாறே உள்ளது என்பதற்குத் தக்க சான்று காட்டி நிறுவுவது பரிமேலழகரின் வழக்கம். அத்தகைய இடங்கள் கீழே தரப்படுகின்றன.

580.நாகரிகம் என்பது கண்ணோட்டமாதல், முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின் நஞ்சும் உண்பர் நனி நாகரிகர் (நற் - 355) என்பதனாலும் அறிக.

899. வேந்தனும் வேந்து கெடும் - இந்திரனும் இடையே தன்பதம் இழந்துவிடும். "வேந்தன் மேய தீம்புனல் உலகமும் (தொல்.பொருள் - 5) என்றார் பிறரும்.

1182. என் மேனிமேல் இவர்தந்து ஊரும் - என் மேனியை மேற்கொண்டு செலுத்தா நின்றது. "வேலன் கூந்தன்மா இவர்ந்து செல்ல" (சீவக. விமலை இப்பொருட்டாதல் அறிக. -1) என்புழியும் இவர்தல்

1165. துப்பின் எவன் ஆவர் கொல் -துன்பம் செய்தற்குரிய பகைமைக்கண் என் செய்வார் கொல்லோ. துப்புப் பகையும் ஆதல், "துப்பு எதிர்ந்தோர்க்கே உள்ளாச் சேய்மையான்" (புறம்

-380) என்பதனாலும் அறிக.

திருக்குறளைச் சான்று காட்டுதலும், மேற்கோள் தருதலும், உரைநடையாக்கி எழுதுதலும் இவரது வழக்கம் (135, 161, 263, 305, 457, 755, 955, 971, 972).

உவமை கூறுதல்

தம் உரையில் பல உவமைகளைக் கூறி, கருத்தை விளக்குகின்றார்.

இனிய கனிகள் என்றது, ஒளவையுண்ட நெல்லிக்கனி போல அமிழ்தானவற்றை இன்னாத காய்கள் என்றது காஞ்சிரங்காய் போல நஞ்சானவற்றை (100).

இந்திரன் போல எல்லாப் பொருளையும் இழந்து சிறுமை எய்தல் (144).

விறகு பெற்ற தழல்போல் (343).

காட்டுத் தீ முன்னர்ப் பஞ்சுத் துய்போலும் (360)

கரும்பு அயிறற்குக் கூலிபோல (399).

ஏரல் எழுத்துப் போல்வதோர் விழுக்காடு (404).

மழைத்துளிபோல வந்து ஈண்டி (416)

குதிரையை நிலமறித்து செலுத்தும் வாதுவன்போல (422).

கயப்பூப்போல வேறுபடாது, கோட்டுப்பூப்போல ஒரு நிலையே நட்பாயினான் (425)

தானே கெடுதலாவது, பாகன் இல்லாத யானைபோல நெறியல்லா நெறி சென்று கெடுதல் (448).

புலியை அடைந்த புல்வாய் இனம் போன்று (571).

கடன் கொண்டான் தோன்றப் பொருள் தோன்றுமாறு ஷ (693).

இத்தகைய அரிய உவமைகள் இன்னும் சில இடங்களிலும் (741, 797, 300) 2.

தமிழிலக்கியப் புலமை

பரிமேலழகர் தமிழிலக்கியங்களை ஆழ்ந்து கற்றுத் தேர்ந்து தெளிந்த புலமை பெற்றுள்ளார். தாம் கற்ற நூல்களிலிருந்து கணக்கற்ற மேற்கோள்களைத் தருகின்றார்.

அகநானூறு (210), பதிற்றுப்பத்து (432), நற்றிணை (401), பத்துப்பாட்டு (811, 1033, 1144) நான்மணிக்கடிகை (121), (556) ஆகிய பழந்தமிழ் நூல்களிலிருந்து மேற்கோள் தருகின்றார்.

சீவகசிந்தாமணியிலிருந்து சில மேற்கோள்களைத் தருகின்றார் (384, 514, 771). பெரிய புராணக் கருத்து ஒரு குறளின் உரையில் இடம் பெற்றுள்ளது (442). இராமாயணக் கருத்து மற்றோர் குறள் உரையில் வருகின்றது (773).

சில இடங்களில் பழங்கதைகள் இடம்பெறுகின்றன. மகனை முறை செய்தான், தன்

கை குறைத்தான் (547),பாண்டவர் (935), நகுடன் (899), திரிபுரம் எரித்தான் (900) ஆகியோருடைய வரலாறு ஆங்காங்கே சுட்டப்படுகின்றன.

திருவாய்மொழி (349, 570), முத்தொள்ளாயிரம் (576), திருக்கோவையார் (277) ஆகிய இலக்கியங்களிலிருந்தும் மேற்கோள்கள் தரப்பட்டுள்ளன.

இலக்கணப் புலமை

எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்ற ஐந்து இலக்கணங்களிலும் புலமை நிரம்பியவர் பரிமேலழகர் இலக்கணப் புலமை வெளிப்படும் வகையில், திருக்குறளுக்கு உரைகண்ட சிறப்பை,

பொழிப்பு அகலத்தோடு நுட்பம் எச்சம்

விழுப்பொருள் தோன்ற விரித்துஇனிது உரைத்தனன் (ஞ - 1543)

என்று பாராட்டுவர்

அசைநிலை, ஆகுபெயர், வினைஎச்சத் திரிபு, தொகை மொழிகள், உருபு மயக்கம், வேற்றுமை, இடைச்சொல் ஆகியவற்றை நினைவூட்டி எழுதும் இடங்கள் பலவாகும்.

“யா என்பது அ.ஃறிணைப் பன்மை வினாப் பெயர்“ என்றும் (127),

பயனில் சொல் (196) என்னும் குறளில் உள்ள எனல் என்பதில் உள்ள “அல் விகுதி வியங்கோள் முன் எதிர்மறையினும், பின் உடன்பாட்டினும் வந்தது“ என்றும் பரிமேலழகர் எழுதித் தம் இலக்கணப் புலமை மாண்பை வெளிப்படுத்துகின்றார்.

இலக்கணை என்னும் இலக்கணம் வரும் இடங்களை நன்கு ஆராய்ந்து இலக்கணை வழக்கு (272), இலக்கணைக் குறிப்பு (1115) இலக்கணைச் சொல் (1186) என்று தெளிவுபடுத்துகின்றார்.

மேலும் குறிப்பு மொழி, (1029) குறிப்பு உருவகம் (1030) என்று இவர் சுட்டும் இடங்கள் மிக நுண்ணியவையாகும்.

அகப்பொருள் இலக்கணத்தைக் காமத்துப்பாலில் நன்கு பொருத்திக்காட்டி நயமாகப் பொருள் எழுதுகின்றார். அங்கே உள்ள ஒவ்வொரு இயலிலும் அதிகாரத்திலும், குறட்பாவிலும் அகப்பொருள் இலக்கணம் நன்கு பொருந்தி, குறட்பாக்களைத் தெளிவுபடுத்துகின்றது.

புறப்பொருள் இலக்கணம் வெளிப்படும் இடங்களை. படைச்செருக்கு, படைமாட்சி ஆகிய இரண்டு அதிகாரங்களிலும் காணலாம். நெடுமொழி வஞ்சி (771), தழிஞ்சி (773), நூழிலாட்டு (774) என்று இவர், புறப்பொருள் துறைகளைக் குறிப்பிட்டு உரை எழுதுகின்றார்.

அணி இலக்கணத்தை இவர், நினைவூட்டும் இடங்கள் பல உண்டு.

உருவகம், ஏகதேச உருவகம், பிறிது மொழிதல் (நுவலா நுவற்சி, ஒட்டு) எடுத்துக்காட்டு உவமை. சொற்பொருள் பின்வருநிலை, சொற்பின் வருநிலை ஆகியவற்றை மறவாமலம் உரைகளில் காட்டிச் செல்லுகின்றார்.

தொல்காப்பியச் சூத்திரங்களை 3,402, 899, 960, 1043 ஆகிய குறள் உரைகளில் எடுத்தாளுகின்றார்.86,183,457 ஆகிய குறள் உரைகளில் இடவழுவமைதி என்று தொல்காப்பிய விதி கருதியே கூறுகின்றார்.

நன்னூலார் தம் இலக்கணத்தில அமைத்துத் தந்த ஒரு பொருட்பன்மொழி" என்ற அழகிய இலக்கணத் தொடரை 863 ஆம் குறள் உரையில் எடுத்தாளுகின்றார்

வடமொழிப் புலமை

பரிமேலழகரை உரைச் சிறப்புப்பாயிரம்,

வடநூல் துறையும் தென்திசைத் தமிழும்

விதிமுறை பயின்ற நெறியறி புலவன் (- 1543)

என்று பாராட்டுகின்றது.

வடமொழியில் உள்ள இலக்கணம் இலக்கியம், சமய நூல் ஆகியவற்றின் கருத்தை அறிந்து, தம் உரையில் பரிமேலழகர் கூறுகின்றார்.

இசை எச்சத்தை வடநூலார் "காகு" என்பர் என்றும் (1318) பிறன் மனைவிழைந்து ஒழுகுதலைப் பரகியம் என்பர் என்றும் (141) நினைவுபடுத்துகின்றார்

குடங்கம் என்னும் வடசொல் குடங்கர் என்று திரிந்தது என்பது இவர் கருத்து (890).

வட நூலார் கூறும் அற உபதை, பொருள் உபதை, இன்ப உபதை, அச்ச உபதை ஆகியவற்றை விளக்கி, பொருட்பாலில் சில இடங்களில் நினைவுபடுத்தி உரை எழுதுகின்றார் (501,693)

வடமொழியில் உள்ள அறம் பொருள் இன்பம் பற்றிக் கூறும் நூல்களை ஆங்காங்கே பரிமேலழகர் குறிப்பிடுகின்றார்.

அறம்

"இனி, மனு முதலிய அற நூல்களால் பொதுவாகக் கூறப்பட்ட இவ்லறங்கள் எல்லாம் இவர் தொகுத்துக் கூறிய இவற்றுள்ளே அடங்கும்" (240).

பொருள்

"கொடியவர் என்றது தீக்கொளுவுவார்? நஞ்சிடுவார், கருவிற் கொல்வார், கள்வர், ஆறலைப்பார், சூறைகொள்வார்." பிறனில் விழைவார் என்றிவர் முதலாயினாரை. இவரை வட நூலார் ஆத தாயிகள் என்ப" (550).

"வட நூலார் இவற்றுள் பொருத்துதலைச் சந்தி என்றும், பிரித்தலை விக்கிரகம் என்றும் கூறுப" (663).

"வடநூலார் இவ்விரு வகையாருடன் ஓலை கொடுத்து நிற்பாரையும் கூட்டித் தூதரை தலை இடை கடை என்று வகுத்துக் கூறினாராதலின் அவர் மதமும் தோன்றத் தலை

στρπή" (687).

"வடநூலாரும் இக் கருந்தான் விதனம் என உடன் " (920)

இன்பம்

காமத்துப்பால் தொடக்கம்: "வட நூலுள் போசராசனும் "சுவை பல என்று கூறுவர் கூறுக் யாம் கூறுவது இன்பச் சுவை ஒன்றையுமே" என இதனையே மிகுத்துக் கூறினான்".

காமத்துப்பால் முடிவு (1330): "ஈண்டுப் பிரிவினை வடநூல் மதம்பற்றி, செலவு ஆற்றாமை விதுப்பு புலவி என நால்வகைத் தாக்கிக் கூறினார். அ.ஃதேல் வடநூலார் இவற்றுடனே சாபத்தினானாய நீக்கத்தினையும் கூட்டிப் பிரிவினை ஐவகைத்து என்றாரால் எனின், அ.ஃது அறம் பொருள் இன்பம் என்னும் பயன்களுள் ஒன்றுபற்றிய பிரிவு அன்மையானும், முனிவ ராணையான் ஒரு காலத்து ஓர் குற்றத்து உளதாவதல்லது உலகியல்பாய் வாராமையானும் ஈண்டு ஒழிக்கப்பட்டது என்க".

பல்கலைப் புலமை

பரிமேலழகர் இலக்கிய இலக்கண நூல்களையேயன்றி வேறு சில நூல்களையும் அறிந்துள்ளார். இவரது உரைகளில் அறத்துப்பாலில் அற நூல்களையும் சமய நூல்களையும் அறிந்த புலமை வெளிப்படும் பொருட்பாலில் அரசியல் அறிவு புலப்படும் காமத்துப்பாலில் இன்பத்துறை நூலறிவு தோன்றும்.

அறத்துப்பாலில் "எழுபிறப்பும் தீயவை" (62) என்ற குறளில் விளக்கவுரையில், எழுவகைப் பிறப்பையும் கூறும் வெண்பாலை மேற்கோள் தருகின்றார்.

ஊர்வ பதினொன்றாம் ஒன்பது மானுடம்

நீர்பறவை நாற்காலோர் பப்பத்துச் சீரிய

பந்தமாந் தேவர் பதினால் அயன்படைத்த

அந்தமில்சீர்த் தாவரநா லைந்து.

இந்த வெண்பா கூறும் கணக்குப்பற்றி ஆராய்ந்து முடிவு செய்யாமல்,இப்படியும் ஒரு வகை சிந்தனை தமிழறிஞர் உள்ளத்தில் எழுந்துள்ளது என்று போற்ற வேண்டும்.

இசைப்புலமை

பொருட்பாலில் "பண் என்னாம் பாடற்கு" (573) என்ற குறளின் விளக்கவுரையில் இசைப்புலமை தோன்ற உரை எழுதுகின்றார்:

"பண்களாவன: பாலையாழ் முதலிய நூற்று மூன்று.பாடல்

தொழில்களாவன: யாழின் கண் வார்தல் முதலிய எட்டும்.

பண்ணல் முதலிய எட்டும், மிடற்றின்கண் எடுத்தல் படுத்தல் நலிதல் கம்பிதம் குடிலம்

என்னும் ஐந்தும் பெருவண்ணம் இடை வண்ணம் வனப்பு எழுபத்தாறுமாம்" வண்ணம் முதலிய வண்ணங்கள்

மருத்துவ நூலறிவு

மருந்து என்ற அதிகாரத்திற்கு, பரிமேலழகர் தம் மருத்துவ நூலறிவு தோன்ற உரை எழுதுகின்றார். "மிகினும் குறையினும்" (941), "உற்றவன் தீர்ப்பான்" (950) ஆகிய இரு குறட்பாக்களின் உரை விளக்கம் படித்து மகிழத்தக்கன.

"அற்றது அறிந்து" (944) என்ற குறளுரையில் மருத்துவக் கலையின் நுட்பத்தை வெளிப்படுத்துகின்றார். "தேனும் நெய்யும் தம்முள் அளவொத்து நஞ்சாதல் போல்வன" என்ற விளக்கம் நமக்கு வியப்பைத் தருகின்றது. இவர் காலத்தில், நோயைத் தீர்த்தற்கு உதிரங்களைதல், அறுத்தல், சுடுதல் முதலிய முறைகள் இருந்தன (948).

அரசியல் நூல் அறிவு

பொருட்பாலில் உள்ள ஒவ்வோர் அதிகாரத்திலும் பரிமேலழகரின் அரசியல் நூல் அறிவு வெளிப்படுகின்றது.

"இயற்றலும் ஈட்டலும்" (385) என்ற குறளின் உரையில், பொருள்கள், அவை வரும் வழிகள், அவற்றை அறம் பொருள் இன்பம் என்ற மூவகை வழியில் செலவிடல் ஆகியவற்றை நன்கு விளக்குகின்றார்.

"உற்ற நோய் நீக்கி" (442) என்ற குறளின் விளக்கத்தில் மக்களுக்கு வரும் துன்பங்களின் வகைகள் அவற்றைப் போக்கும்

வழிகள் ஆகியவற்றைப் பரிமேலழகர் விளக்குவதனைக் காணலாம்.

"பல் குழுவும்" (735) என்ற குறளின் விளக்கவுரையில் உட்பகை என்பதற்கு, "ஆறலைப்பார் கள்வர் குறளை கூறுவார் முதலிய மக்களும், பன்றி புலி கரடி முதலிய விலங்குகளும்" என்று விளக்கம் தருகின்றார்.

"உறுபொருளும்" (756) என்ற குறளுரையில், 'உறு பொருள் வைத்தார் இறந்துபோக நெடுங்காலம் நிலத்தின் கண்ணே கிடந்து பின் கண்டெடுத்ததூஉம், தாயத்தார் பெறாததூஉம் ஆம்" என்று விளக்குகின்றார்.

"தார் தாங்கி" (767) என்ற குறளின் விளக்கத்தில் படை வகுப்பாகிய வியூகத்திற்கு நல்ல விளக்கம் தருகின்றார்.

சமய நூலறிவு

அறத்துப்பால் உரை, பரிமேலழகர், பரந்த சமய நூலறிவு பெற்றவர் என்பதை விளக்குகின்றது. சாங்கிய நூல் (27), ஆருகதர் சமயக்கொள்கை (286) ஆகியவற்றைக் குறிப்பிடுகின்றார் சமயம் பற்றிய பொதுவான கருத்துக்களை 21, 351, 355, 358, 338, 360 ஆகிய குறட்பாக்களின் உரைகளில் படித்து இன்புறலாம்.

வான் புகழ்

திருக்குறளுக்குப் பத்தாவது உரையாகத் தோன்றிய பரிமேலழகர் உரை மற்ற உரைகளைவிடச் செல்வாக்குப் பெற்றுப் பரவியது ஏனைய உரைகளுக்கு இல்லாத பெருமை ஏற்பட்டது.

பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ பாரிலுள்ள

நூலெல்லாம் வள்ளுவர்செய் நூலாமோ நூலில்

பரித்தவுரை எல்லாம் பரிமே லழகன்

தெரித்தவுரை யாமோ தெளி

என்று கற்றவர் போற்றும் சிறப்பை அவ்வுரை பெற்றது.

திருவள்ளுவரைப் போலவே பரிமேலழர் மதிக்கப்பட்டார். திருவள்ளுவரின் உள்ளக் கருத்தைத் தெள்ளிதின் உணர்ந்த பெரும் புலவராக அவர் கருதப்பட்டார்.

வள்ளுவன் மீளவும் வந்து உதித்து உலகோர்க்கு

உள்ளிய பொருளை உரைத்தனன் என்ன ...

விழுப்பொருள் தோன்ற விரித்துஇனிது உரைத்தான்...

பரிமே லழகள் எனப்பெயர் படைத்துத்

தரைமேல் உதித்த தலைமை யோனே .

திருத்தகுசீர்த் தெய்வத் திருவள் ளுவர்தம்

கருத்தமைதி தானே கருதி - விரித்துரைத்தான்

பன்னு தமிழ்சேர் பரிமே லழகன்எனும்

மன்னு முயர்நாமன் வந்து

தெய்வப் புலமைத் திருவள் ளுவர்குறளில்

உய்விக்கும் நூலெல்லாம் உள்ளதெனச் -செய்வித்தான்

தத்துவம்எல் லாம்உடம்பில் தந்துணர்வார் போல்உலகம்

ஒத்தபரி மேலழகன் ஓர்ந்து.

என்று பல பாடல்களால் பரிமேலழகரைப் புலவர்கள் சிறப்பித்தனர்.

பரிமேலழகர் உரை தனிப்பெரும் நூலாக, திருக்குறளோடு ஒத்த சிறப்புடையதாக எண்ணப்பட்டது.

வள்ளுவர்சீர் அன்பர்மொழி வாசகம்தொல் காப்பியமே

தெள்ளுபரி மேலழகர் செய்தவுரை - ஒள்ளியசீர்த்

தொண்டர் புராணம் தொகுசித்தி ஓராறும்

தண்டமிழின் மேலாம் தரம்

என்று உமாபதி சிவனார் போற்றுகின்றார்.

காலம்தோறும் கற்றவர் போற்றும் சிறப்பைப் பெற்று வந்த னிமேலழகர் உரை, இக் காலத்திலும் அறிஞர்களின் ராராட்டுதலைப் பெற்றுள்ளது

"திருக்குறளின் பெருமையை ஆராய்ந்து அதன் கருத்துக்களை நுட்பமாக உணர்ந்து, அதற்கு ஓர் அரிய உரை இயற்றி அதன் புகழை வளர்த்தவர் பரிமேலழகர்" **(1 தமிழ்ச்சுடர் மணிகள் (1949) பக்கம 167 க. வையாபுரிப்பிள்ளை.)**

"திருவள்ளுவரது திருக்குறள், பரிமேலழகியாரது உரையாகிய புணையைக் கொண்டுதான், இடைக்காலமாகிய கருங்கடலைக் கடந்து நம் காலம் எனும் கரைக்குச் செவ்வனே வந்து சேர்கின்றது"." (**2. வள்ளுவரும் மகளிரும் (1930) பக்கம் - 11. தெ.பொ. மீனாட்சி சுந்தரனார்.)**

"திருவள்ளுவர் ஏடும் அதற்குரிய பரிமேலழகர் உரையும் இரண்டுமே தத்தம் கட்டுக்கோப்புடையவையாய் அமைந் துள்ளன. இதுநாள்வரை திருவள்ளுவரின் கட்டுக்கோப்புக்கு ஒப்பான கட்டுக்கோப்புடன் கட்டி எழுதப்பட்ட ஒரே உரை. பரிமேலழகர் உரைதான் என்று கூற வேண்டும்" (**3.கா. அப்பாதுரைப் பிள்ளை "முப்பால் ஒளி" - முதல் இதழ் - பக்கம். 44.)**

அபிதான கோசம் இவரது புலமை மாண்பைப் பின் வருமாறு போற்றியுரைக்கின்றது:

"இவர் உரையிலே பொருள் வன்மையும், செஞ்சொற் சிறப்பும், இலக்கணங்களும் சாதுரியமும், விசேடவுரை தெரிக்கும் ஆற்றலும், மேற்கோள்எடுத்துச் சித்தாந்தம் செய்யும் உபாயமும், பிறர்க்கெல்லாம் பல வசனங்களான் அன்றி அமையாத வி'யங்களைச் சில சொற்கொண்டு தெற்றெனக் காட்டும் பேராண்மையும், வடமொழிப் பதங்களைச் செந்தமிழ் மொழியாக்கும் அற்புத சாமர்த்தியமும், சொன்முட்டுற்று வடமொழிப் பதங்களை எடுத்தாளும் நல்குரவுடையார் போலாது செந்தமிழ்ச் சொற் செல்வமுடைமையும், வேதாகம வியாகரண சாத்திர புராண இதிகாச ஸ்மிருதி காவிய அலங்காராதி வடநூற்பயிற்சியோடு முத்தமிழ்ப் பரப்பெல்லாம் முற்றுணர்ந்த திண் புலமையும் நன்கு பெறப்படுகின்றன".

டாக்டர் உ.வே.சாமிநாத ஐயர் திருக்குறளுக்கு உரை வகுத்த பரிமேலழகரின் பெருமையைத் தெரிந்துகொள்ள ஒரு வழி கூறுவார் "ஏதேனும் ஒரு குறளின் மூலத்தை மட்டும் தெரிந்துகொண்டு ஒரு மாதம் வரை ஆராய்ந்து அதற்கு உரை எழுதுங்கள். சொல் நயம், பொருள் நயம், என்பவற்றைத் தெளிந்து விரிவாக எழுதுங்கள் அதன் பிறகு, பரிமேலழகர் உரையைப் பாருங்கள். நீங்கள் எழுதாத எதேனும் ஒன்றையாவது அவர் நிச்சயம் சொல்லியிருப்பார். அப்போதுதான அவர் உரையின் அருமை தெரியும்" என்பார்.

இத்தகைய புகழ் மொழிகள் பலவற்றைத் தாங்கி நிற்கின்ற இவரை,

பருச்சொல் பருப்பொருள் பன்னுபு நீக்கி,

பொருட்சொல் நிரப்பும் புலவர் (பெருங்கதை. 2-4, (51, 52)

என்று நயந்து போற்றலாம்.

அறிஞர் பெருமக்களின் போற்றுதலைக் காலந்தோறும் பெற்றுவரும் பரிமேலழகரின் ஆற்றலும் அறிவும் அளவிடற்கு அரியவை. தனித் தமிழில் அமைந்த இலக்கிய நடை, திட்ப நுட்பம் வாயந்த அரிய விளக்கம், மூல நூலின் கருத்துச் செறிவுக்கு ஏற்ற முழுமைவாய்ந்த கட்டுக்கோப்பு ஆகியவை பரிமேலழகர் உரையின் சிறப்பியல்புகள் ஆகும். தம் காலத்தில் விளங்கிய தமிழ் இலக்கியம் கருத்துக்களை வடித்துக் கலைப்பண்பு கெழுமத் திருக்குறளை அனைத்தையும் நுணுகிக் கற்று அவற்றின் உரைவடிவில் அளித்துள்ள பரிமேலழகரது அருஞ்செயலின் பெருமை அளவிடற்கு அரியது. வடமொழி, தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் மிக்க பயிற்சியுடைய இவர் சிறந்த செந்தமிழ் நூலாகிய திருக்குறளுக்கும் அதன் தூய்மைக்கும் உயர்வுக்கும் ஏற்றவாறு தெள்ளிய தூய தமிழில் நல்லுரை கண்டுள்ளார்.

உரையின் இயல்புகள்

பரிமேலழகர் நூலின் தொடக்கத்தில் உரைப்பாயிரம் எழுதி, நூலின் பொருட்பாகுபாடுகளை விளக்குகின்றார் பால்தோறும் விரிவுரை தருகின்றார் இயல்களை ஆராய்கின்றார் அதிகாரம் தோறும் தோற்றுவாய் கூறுகின்றார் முன் அதிகாரத்திற்கு இயைபு உரைக்கின்றார். பத்துக் குறள்களும் கருத்துவகையால் பிரிந்து நிற்பதைக்காட்டி இன்ன பொருளை உணர்த்தின என்கிறார்.

குறடபாக்களுக்குப் பரிமேலழகர் பொழிப்புரை எழுதி, பின்னர் அருந்தொடரை விளக்குகின்றார். ஏட்டுப் பிரதிகளில் பொழிப்புரையே உள்ளது என்றும், பதிப்பித்தவர்களே பதவுரையாக்கி வெளியிட்டனர் என்றும் கூறுகின்றனர்.

பொழிப்புரையில், அதிகாரத்திற்கு ஏற்பத் தேவையான சொற்களை வருவித்தும், வேற்றுமை உருபு முதலிய இடைச் சொற்களை விரித்தும் உரைக்கின்றார். பொழிப்புரையின் கீழ் எழுதும் விளக்கவுரையில் பல அரிய ஆராய்ச்சிக் கருத்துக்களைக் கூறுகின்றார் அருந்தொடரைத் தக்க மேற்கோளுடன் விளக்குகின்றார் உவமை காட்டியும், இலக்கியக் கதை வரலாறு முதலியன தந்தும் அழகு செய்கின்றார். தேவையான இலக்கணக் குறிப்புக்கள் தந்து தெளிவுபடுத்துகின்றார் தமக்கு முன் இருந்த உரையாசிரியர்கள் கருத்தைக் குறிப்பிடுகின்றார் மாறுபட்ட கருத்தை மறுக்கின்றார் தவறான பாடத்தைக் கடிகின்றார். பொருத்தமானவற்றைப் போற்றுகின்றார். வடமொழி, தமிழ் ஆகிய இருமொழி இலக்கியங்களிலிருந்தும் கருத்துகளைக் கூறுகின்றார் வட சொற்களைத் தமிழ்மொழிக்கு ஏற்ப மொழி பெயர்க்கின்றார் தமிழ் மரபையும் பண்பாட்டையும் நினைவூட்டுகின்றார்.

இத்தகைய சிறப்பியல்புகள் பல வாய்ந்த பரிமேலழகர் உரை “விரித்தியுரை“ என்றும் வழங்கியது. சிறந்த உரை வழங்கிய பரிமேலழகரை,

வள்ளுவன் மீளவும் வந்து உதித்து உலகோர்க்கு

உள்ளிய பொருளை உரைத்தனன் என்ன

எழுத்து முதல இலக்கண வகையும்

வழுத்து வேதாகம வகையதன் பயனும்

தங்கிய குறட்பாத் தமிழ்மனு நூலிற்கு

இதுவே உரைஎன்று யாவரும் வியப்பப்

பொழிப்பு அகலத்தொடு நுட்ப எச்சம்

விழுப்பொருள் தோன்ற விரித்தினிது உரைத்தனன்

என்று உரைப்பாயிரம் புகழ்கின்றது.

இலக்கண உரை

உரையை பரிமேலழகர் இலக்கணவுரை என்று கூறுவதுண்டு 1885-ஆம் ஆண்டில், பரிமேலழகர் உரைக்கு விளக்கக் குறிப்புக்கள் எழுதிப் பதிப்பித்த முருகேச முதலியார். "திருக்குறள் மூலமும் பரிமேலழகர் செய்த இலக்கணவுரையும் என்று தலைப்பு இட்டு வெளியிட்டார்.

பரிமேலழகரின் இலக்கணப புலமை, அவர் உரை முழுதும் வெளிப்படுகின்றது. பலவகை இலக்கணங்களை ஆங்காங்கே எடுத்துக்காட்டும் இவர், பிற உரையாசிரியர்களை மறுக்கும் இடங்களில் கூட அவர்கள் இலக்கணத்தை மறந்ததையும், அவர்கள் உரையில் இலக்கணப் பிழைகள் இருப்பதையும் எடுத்துக்காட்டுகின்றார்.

கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்

வேட்ப மொழிவதாம் சொல் (643)

என்ற குறளின் விளக்கவுரையில், "தகையவாய் என்பதற்கு எல்லாரும் தகுதியுடையவாய் என்று உரைத்தார் அவர் அப பன்மை, மொழிவது என்னும் ஒருமையோடு இயையாமை நோக்கிற்றிலர்" என்று பிறர் உரைகளை மறுக்கின்றார்.

சலத்தால் பொருள்செய்தே மார்த்தல் பசுமண்

கலத்துள்நீர் பெய்திரீஇ யற்று (660)

என்ற குறளின் கீழ,"பிறர் எல்லாம் ஏமாத்தல் என்று பாடம் ஓதி, அதற்கு மகிழ்தல் என்றும், இரீஇயற்று என்பதற்கு வைத்தாற் போலும் என்று உரைத்தார் அவர் அவை தன்வினையும் பிறிதின் வினையுமாய் உவமை இலக்கணத்தோடு மாறுகோடல் நோக்கிற்றிலர்" என்று எழுதுகின்றார்.

பரிமேலழகர் உரை, இலக்கணக் கொள்கைகளை நன்கு நெஞ்சில் நிறுத்தி எழுதப்பட்டதாகும். அவ்வுரையில் இலக்கணப் பிழையையோ, இலக்கணக் கொள்கைகளோடு

மாறுபட்ட கருத்தையோ காண இயலாது.

ஆதலின் இவர் உரையை இலக்கண உரை என்று கூறுவது மிகவும் பொருத்தமாகும்.

குறள் பெற்ற புதுவிளக்கம்

திருக்குறளைப் புதிய பார்வையுடன் கண்டவர் பரிமேலழகர். அதனால் பல குறட்பாக்கள் புதிய விளக்கம் பெற்றுள்ளன. அப்பாடல்களைப் பிறர் கூறுவதாக அமைத்துக் காட்டி அழகு செய்கின்றார்.

கான முயல்எய்த அம்பினில் யானை

பிழைத்தவேல் ஏந்தல் இனிது (772)

என்ற குறள், மாற்றரசன் படையோடு பொருதானோர் வீரன். அது புறங் கொடுத்ததாக நாணி, பின் அவன் தன் மேற் செல்லலுற்றானது கூற்று" என்கிறார் பரிமேலழகர். இக் கூற்றால் மேலே கண்ட குறள, புதிய விளக்கம் பெறுகின்றது.

இன்றும் வருவது கொல்லோ நெருநலும்

கொன்றது போலும் நிரப்பு (1048)

என்ற குறளை,"நெருநல் மிக வருந்தித் தன் வயிறு நிறைத்தான் ஒருவன் கூற்று என்று புதிய நோக்குடன் காண்கின்றார்.

மதியும் மடந்தை முகனும் அறியா

பதியில் கலங்கிய மீன் (1116)

என்ற குறளினை (தலைவன்) "இரவுக்குறிக்கண் மதி கண்டு சொல்லியது" என்று கூறுகின்றார். திருக்குறளின் பொருளையும் பரிமேலழகரின் குறிப்பையும் இணைத்து நோக்கும்போதுதான், குறளின் பொருட்சிறப்பு நமக்கு நன்கு வெளிப்படுகின்றது.

அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்

அடிக்கு நெஞ்சிப் பழம் (1120)

என்பது பலர் அறிந்த குறள். இது, "உடன்போக்கு உரைத்த தோழிக்கு அதனது அருமை கூறி மறுத்தது" என்று உரைக்கின்றார் பரிமேலழகர். எவ்வளவு பொருத்தமான விளக்கம் இது

தொடிநோக்கி மென்தோளும் நோக்கி அடிநோக்கி

அ.ஃது ஆண்டு அவள்செய் தது (1279)

என்ற குறளுக்குத் தம் புலமைத் திறம் அனைத்தும் வெளிப்படும் வகையில் பொருள் உரைக்கின்றார். "அவர் பிரிய யான் ஈண்டு இருப்பின் இவை நில்லா எனத் தன் தொடியை நோக்கி, அதற்கு ஏதுவாக இவை மெலியும் எனத் தன் மென்தோள்களையும் நோக்கி, பின் இவ்விரண்டும் நிகழாமல் நீர் நடந்து காத்தல் வேண்டும் எனத் தன் அடியையும் நோக்கி, அங்ஙனம் அவள் செய்த குறிப்பு உடன்போக்காய் இருந்தது".

நோக்கு

திருக்குறளில் உள்ள சில பாக்களுக்குப் பரிமேலழகர் மாத்திரை முதலா அடிநிலை காறும் நோக்கி நுண்பொருள் எழுதுகின்றார். குறட்பாவில் உள்ள ஒவ்வொரு சொல்லுக்கும் இவர் பொருளாழம் வாய்ந்த உரை கூறிச் சிறப்பிக்கின்றார். அவற்றுள் சிலவற்றை இங்கே காண்போம்:

செவிக்குஉணவு இல்லாத போழ்து சிறிது

வயிற்றுக்கும் ஈயப் படும் (412)

"சுவை மிகுதியும் பிற்பயத்தலும் உடைய கேள்வி உள்ள பொழுது வெறுக்கப்படுதலான் "இல்லாதபோழ்து என்றும். பெரிதாயவழித் தேடல் துன்பமே அன்றி நோயும் காமமும் பெருகுதலான் "சிறிது" என்றும், அதுதானும் பின் இருந்து கேட்டற் பொருட்டாகலான் ஈயப்படும் என்றும் கூறினார். ஈதல் - வயிற்றது இழிவு தோன்ற நின்றது."

ஏதிலார் ஆரத் தமர்பசிப்பர் பேதை

பெருஞ்செல்வம் உற்றக் கடை (837)

"எல்லா நன்மையும் செய்து கோடற்கருவி என்பது தோன்ற பெருஞ் செல்வம்" என்றும், அதனைப் படைக்கும் ஆற்றல் இல்லாமை தோன்ற "உற்றக் கடை" என்றும், எல்லாம் பெறுதல் தோன்ற "ஆர" என்றும் உணவும் பெறாமை தோன்ற "பசிப்பர்" என்றும் கூறினார்."

ஆவிற்கு நீர்என்று இரப்பினும் நாவிற்கு

இரவின் இளிவந்தது இல் (1069)

"ஆ காத்து ஓம்பல் பேரறம் ஆகலின் ஆவிற்கு என்றும் பொருள் கொடுத்துக் கொள்ள வேண்டாத எண்மைத்தாகலின் நீர் என்றும் இரக்கின்றவனுக்கு இளிவு அச்சொல் அளவே ஆகலின் "நாவிற்கு" என்றும் அதுதான் எல்லா இளிவினும் மேற்படுதலின் "இளி வந்தது இல்" என்றும் கூறினார்."

இத்தகைய சிறப்பு வாய்ந்த உரைகள் (306, 334, 321, 727, 968, 1160, 1289) இன்னும் பல இடங்களில் உள்ளன. அவற்றைக் சுற்போர் பரிமேலழகரின் உரைத் திறனை வியந்து போற்றுவர்.

உவமை விளக்கம்

திருவள்ளுவர் கூறியுள்ள பல இனிய உவமைகள் பரிமேலழகர் உரையால், நன்கு பொருள் விளக்கம் அடைகின்றன.

ஒருமையுள் ஆமைபோல்" (126) என்பதில் உள்ள உவமையினை இவர், "ஆமை ஐந்து உறுப்பினையும் இடர் புகுதாமல் அடக்குமாறு போல, இவனும் ஐம்பொறிகளையும் பாவம் புகுத்தாமல் அடக்க வேண்டும் என்பார் ஆமை போல் என்றார்" என்று விளக்குகின்றார்.

"கொக்கு ஒக்க" என்ற குறளில் (940) உள்ள உவமையில் பொருத்தத்தைப் பின்வருமாறு கூறுகின்றார்.

"மீன் கோடற்கு இருக்கும்வழி. அது வந்து எய்தும் துணையும் முன் அறிந்து தப்பாமல் பொருட்டு உயிர் இல்லது போன்று இருக்கும் ஆகலானும் எய்திய வழிப் பின் தப்புவதற்கு முன்பே விரைந்து குத்தும் ஆகலானும் இருப்பிற்கும் செயலிற்கும் கொக்கு உவமையாயிற்று."

நிலத் தியல்பால் நீர்திரிந் தற்றாகும் (452)

என்ற உவமையை, "விசும்பின்கண் தன் தன்மைத்தாய நீர் நிலத்தோடு சேர்ந்தவழி நிறம், சுவை முதலிய பண்புகள் திரிந்தாற்போல, தனிநிலைக்கண் தன் தன்மைத்தாய அறிவு பிற இனத்தோடு சேர்ந்தவழிக் காட்சி முதலிய தொழில்கள் திரியும்" என்று பொருத்தமாக விரித்துரைக்கின்றார்.

தலையின் இழிந்த மயிரனையர் (964)

என்ற உவமையை மிகச் சுருக்கமாக விளக்குகின்றார் "நிலையைவிடாது நின்றவழிப் பேணப்படுதலும், விட்டுத் தாழ்ந்த வழி இழிக்கப்படுதலும் உவமையாற் பெற்றாம்". இவ்வாறு சுருக்கமாக விளக்கும் பரிமேலழகர் இவ்வுவமையை மிக விரிவாகக் கூறும் ஆற்றல் உடையவர். எனினும் பல சொல்லி விளக்குவதை விரும்பாத சான்றோர் இவர் ஆதலின் சில சொல்லியே விளக்குகின்றார்.

அறைபறை அன்னர் கயவர் (1076)

என்பது திருவள்ளுவர் கூறிய சிறந்த உவமை. "பறை ஒருவன் கையால் தன்னை அறிவித்தது ஒன்றனை இடந்தோறும் கொண்டு சென்று யாவரையும் அறிவிக்குமாகலான், இது தொழில் உவமம்" என்பது பரிமேலழகரின் நல்ல விளக்கம்.

அறிதோறு அறியாமை கண்டற்றால் (1110)

என்னும் உவமையின் சிறப்பு, "அறிவிற்கு எல்லை இன்மையான் மேன்மேல் அறிய அறிய முன்னையறிவு அறியாமையாய் முடியுமாறுபோல" என்ற விளக்கத்தால் வெளிப்படுகின்றது.

உணலினும் உண்டது அறல்இனிது காமம்

புணர்தலின் ஊடல் இனிது (1326)

இக்குறளில் உள்ள எடுத்துக்காட்டு உவமையின் பொருத்தம் பரிமேலழகரால் வெளிப்படுகின்றது.

"பசித்து உண்ணும் வழி, மிக உண்ணலுமாய் இன்சுவைத்துமாம் அதுபோல அகன்று கூடும் வழி ஆராததுமாய்ப் பேரின்பத்ததுமாம்".

காமக் கணிச்சி உடைக்கும் நிறைஎன்னும்

நாணுத்தாழ் வீழ்த்த கதவு (125)

இக்குறளில் உள்ள உருவகம் பின்வருமாறு பரிமேலழகரால் விளக்கப்படுகின்றது:

”நாணுள்ள துணையும் நிறை அழியாது ஆதலின், அதனைத் தாழ் ஆக்கியும் அகத்துக்கிடந்தன பிறர் கொள்ளாமல் காத்தலின் நிறையைக் கதவாக்கியும் வலியவாய்த் தாமாக நீங்காத அவவிரண்டினையும் ஒருங்கு நீக்கலின் தன் காம வேட்கையைக் கணிச்சியாக்கியும் கூறினார்”

நயவுரை

பரிமேலழகர் பல குறள்களுக்கு எழுதியுள்ள உரைநயம் மகிழ்ந்து கற்றுப் போற்றுதற்கு உரியதாகும்.

“மக்கட்பதடி“ என்ற தொடருக்கு, ”அறிவு என்னும் உள்ளீடு இன்மையின் “மக்கட்பதடி“ என்றார்” என்று நயம்படப் பொருள் உரைக்கின்றார் (196).

“தீயவை, தீயினும் அஞ்சப்படும்“ (202) என்பதற்குப் ”பிறிதொரு காலத்தும் பிறிதொரு தேயத்தும், பிறிதோர் உடம்பினும் சென்று சுடுதல். தீக்கு இன்மையின் தீயினும் அஞ்சப்படுவதாயிற்று” என்று எழுதுகின்றார்.

மருந்தாகித் தப்பா மரத்தற்றால் (217)

என்னும் குறள் உரையில், ”தப்புதலாவது கோடற்கு அரிய இடங்களில் நின்றாதல், காலத்தான் வேறுபட்டாதல் பயன்படாமை”

“ஒப்புரவினால்“ என்னும் குறளில் வரும், “விற்றுக்கோள் தக்கது உடைத்து“ (220) என்ற பகுதி பரிமேலழகரால் நயம் பெறுகின்றது. ”தன்னை விற்றுக்கொள்ளப்படுவதொரு பொருள் இல்லை அன்றே, இ.ஃ.தாயின் அதுவும் செய்யப்படும் என்றது, புகழ் பயத்தல் நோக்கி”.

உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல் (394)

என்ற குறளில் உள்ளப் பிரிதல்“ என்பதற்கு ”இனி இவரை யாம் எங்ஙஸம் கூடுதும் என நினையுமாறு நீங்குதல்” என்று இவர் எழுதுவது போற்றத்தக்கதாகும்.

கணைகொடிது யாழ்கோடு செவ்விது (279)

என்ற அடியை, ”அம்பு வடிவால் செவ்விதாயினும் செயலால் கொடிது யாழ்கோட்டால் வளைந்ததாயினும் செயலால் செவ்விது” என்று பொருள் எழுதி நன்கு விளக்குகின்றார்

நெருநல் உளன் ஒருவன்“ (336) என்பதில் உள்ள “உளன்“ என்பதற்கு “உளன் ஆயினான் (பிறந்தான்)“ என்று பொருள் எழுதி நிலையாமையை நன்கு வலியுறுத்துகின்றார்.

“எப்பொருள் எத்தன்மைத்து“ (355) என்னும் குறள் உரையில், பொருள்தோறும் உலகத்தார் கற்பித்துக்கொண்டு வழங்குகின்ற கற்பனைகளைக் கழித்து, நின்ற உண்மையைக் காண்பது (அறிவு)” என்று தெளிவுபடுத்தியபின், இந்த விளக்கத்திற்கு ஏற்றதொரு பெயரை எடுத்துக்காட்டித் தம் கருத்தை நிலை நாட்டுகின்றார்.

”கோச்சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை என்றவழி, அரசன் என்பதோர் சாதியும், சேரமான் என்பதோர் குடியும், வேழ நோக்கினையுடையான் என்பதோர்

வடிவும், சேய் என்பதோர் சிறப்புப் பெயரும், மாந்தரஞ்சேரல் இரும்பொறை என்றதோர் சிறப்புப் பெயரும் ஒரு பொருளின்கண் கற்பனை".

நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாதே

கல்லார்கண் பட்ட திரு (408)

என்ற குறளுக்கு, "திரு கல்லாரைக் கெடுக்க, வறுமை நல்லாரைக் கெடாது நிற்றலின் "வறுமையினும் திரு இன்னாது" என்றார் என்று நயவுரை எழுதியுள்ளார்.

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் (423)

என்பதற்கு இவர் பின்வருமாறு சிறப்புரை எழுதுகின்றார்.

"குணங்கள் மூன்றும் மாறிமாறி வருதல் யாவர்க்கும் உண்மையின், உயர்ந்த பொருள் இழிந்தார் வாயினும், இழிந்த பொருள் உயர்ந்தோர் வாயினும் உறுதிப்பொருள் பகைவர் வாயினும், கெடுபொருள் நட்டார் வாயினும், ஒரோவழிக் கேட்கப்படுதலான், "எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் என்றார்".

இன்மையின் இன்மையே இன்னாதது (1041)

என்பதை, "ஒப்பது இல்லை எனவே, மிக்கது இன்மை சொல்ல வேண்டா ஆயிற்று" என்று தெளிவுபடுத்துகின்றார்.

நன்றறிவாரின் கயவர் திருவுடையர் (1072)

என்று கூறிய திருவள்ளுவரின் கருத்தைத் தெளிவாக விளக்குகின்றார்

(புகழ், அறம், ஞானம் ஆகியவற்றை) "அறிவார் இவை செய்யா நின்றே மிகச் செயப் பெறுகின்றிலேம் என்றும், செய்கின்ற இவை தமக்கு இடையூறு வருங்கொல் என்றும், இவற்றின் மறுதலையாய பழிபாவம் அறியாமை என்பனவற்றுள் யாது விளையுமோ என்றும், இவ்வாற்றால் கவலை எய்துவர் கயவர் அப்புகழ் முதலிய ஒழித்துப் பழி முதலிய செய்யாநின்றும் யாதும் கவலை உடையர் அல்லராகலான் திருவுடையர் எனக் குறிப்பால் இகழ்ந்தவாறு"

பரிமேலழகரின் நயவுரையை, "கேட்டார்ப் பிணிக்கும்" (643), "வாராக்கால் துஞ்சா" (1179) ஆகிய குறள் உரைகளிலும் காணலாம்.

பொருள் விளக்கம்

பரிமேலழகர் சில சொற்களுக்கும் தொடர்களுக்கும் மிக விளக்கமாகப் பொருள் எழுதுகின்றார். அவற்றுள் சில கீழே தரப்படுகின்றன.

19. தானம்: அறநெறியான் வந்த பொருளைத் தக்கார்க்கு உவகையோடும் கொடுத்தல்.

தவம்: மனம் பொறிவழி போகாது நிற்றற் பொருட்டு விரதங்களான் உண்டி சுருக்கல் முதலாயின.

விரதம்: இன்ன அறம் செய்வல் எனவும், இன்ன பாவம் ஒழிவல் எனவும் தம் ஆற்றலுக்கு ஏற்ப வரைந்து கொள்வன துறவற இயல - முன்னுரை).

244. மன் உயிர்: உயிர்கள் எல்லாம் நித்தம் ஆதலின் மன் உயிர் என்றார்.

வரைவின் மகளிர்: தம் நலம் விலைகொடுப்பார் யாவர்க்கும் விற்பதல்லது, அதற்கு ஆவார் ஆகாதார் என்னும் வரைவு இல்லாத மகளிர் (வரைவின் மகளிர் - அதிகாரம்).

மானம்: எஞ்ஞான்றும் தம் நிலையில் தாழாமையும், தெய்வத்தால் தாழ்வு வந்துழி உயிர் வாழாமையும் ஆம்.

பண்பு உடைமை (அதிகாரத்தின் விளக்கம்): எல்லார் இயல்புகளும் அறிந்து ஒத்து ஒழுகுதல்.

221. குறி எதிர்ப்பை: அளவு குறித்து வாங்கி அவ் வாங்கியவாறே எதிர்கொடுப்பது.

சொல்லாராய்ச்சி

பரிமேலழகர் செய்யும் சொல்லாராய்ச்சி சுவையானது சிந்தனைக்கு விருந்தாய் அமைவது. கீழே எடுத்துக்காட்டுகள் சில காண்போம்:

ஊழ்: அ.்.தாவது இருவினைப் பயன் செய்தவனையே சென்றடைதற்கு ஏதுவாகிய நியதி, ஊழ், பால்,முறை, உண்மை,

தெய்வம், நியதி, விதி என்பன ஒரு பொருள் கிளவி (ஊழ் அதிகாரம்).

563. ஒருவந்தம், ஒருதலை, ஏகாந்தம் என்பன ஒரு பொருள் கிளவி.

561. தக்காங்கு, ஒத்தாங்கு என்பன ஒரு சொல்.

951. இல்,குடி,குலம் என்பன ஒரு பொருள்.

1112. மையாத்தல்: ஈண்டு ஒவ்வாதவற்றை ஒக்கும் எனக் கோடல் இறுமாத்தல், செம்மாத்தல் என்பன போல ஒரு சொல்.

பரிமேலழகர் சொற்களை, செஞ்சொல், இலக்கணைச் சொல். குறிப்புச்சொல் என்ற மூன்று வகையாகக் குறிப்பிடுகின்றார் (குறள்:711),

“கேட்டார்ப் பிணிக்கும் தகை அவாய்“ (643) என்னும் குறள் உரையில், ”(கேட்டாரைப் பிணிக்கும்) குணங்களாவன: வழுவின்மை, சுருங்குதல், விளங்குதல், இனிதாதல், விழுப்பயன் தருதல் என்று இவை முதலாயின. அவற்றை அவாவுதலாவது சொல்லுவான் குறித்தனவே அன்றி வேறு நுண்ணுணர் வுடையோர் கொள்பவற்றின் மேலும் நோக்குடைத்தாதல்” என்று எழுதுகின்றார்.

சொல்லும் பொருளும்

பலசொற்களுக்குத் தெளிவாகப் பொருள் கூறி. பரிமேலழகர் தாம் ஓர் அகராதிக் கலைஞர் என்பதை வலியுறுத்துகின்றார். சில சொற்களுக்கு அவர் தரும் பொருள் கீழே தரப்படுகின்றன.

28. நிறைமொழி -அருளிக் கூறினும் வெகுண்டு கூறினும் அவ்வப் பயன்களைப் பயந்தேவிடும் மொழி.

43. பிதிரர் படைப்புக்காலத்து அயனால் படைக்கப் பட்டதோர் கடவுட் சாதி அவர்க்கு இடம் தென்திசை ஆதலின் தென்புலத்தார் என்றார்.

238, எச்சம் (இசை என்னும் எச்சம்):என்றார், செய்தவர் இறந்துபோகத் தான் இறவாது நிற்றலின்.

386. முறை வேண்டினார் - வலியரான் நலிவு எய்தினார். குறை வேண்டினார் - வறுமையுற்று இரந்தார்.

395. ஏக்கறுதல் - ஆசையால் தாழ்தல்.

698 ஒளி (மன்னர்) காக்கின்ற அவர் கடவுள் தன்மை. உறங்கா நிற்கவும் தாம் உலகம்

971. ஒளி - தான் உளனாய காலத்து மிக்குத் தோன்றுதல் உடைமை

765. ஆற்றல் மனவலி

768 பாடு - கண்ட அளவிலே பகைவர் அஞ்சும் பெருமை.

1023, (மடி) தற்றுதல் - இறுக உடுத்தல்.

1063 வன்பாடு செய்து நிற்றல். முருட்டுத் தன்மை அ.்தாவது ஓராது

1095 சிறக்கணித்தல- (சிறங்கணித்தல்) சுருங்குதல்

1133. இழிவாயின செய்தற்கண் விலக்குவது. ஆண்மை - ஒன்றற்கும் தளராது நிற்றல்.

உரைக்கு உரை

பரிமேலழகர் உரை திட்ப நுட்பம் வாய்ந்து, கருத்துச் செறிவு உள்ளதாய, பலமுறை கற்றுத் தெளிந்தவரிடம் முறையாகப் பாடம் கேட்டறிய வேண்டியதாய் இருக்கின்றது. ஆதலின் அவ்வுரையை எல்லோரும் சுற்றுப் பயனடைய வேண்டும் என்று விரும்பியவர்கள் உரைக்கு உரை கண்டனர் தெளிபொருளும் விளக்கவுரையும் எழுதினர் குறிப்புரை வரைந்தனர்.

பதினேழாம் நூற்றாண்டில் ஆழ்வார்த் திருநகரியில் புலமைச் செல்வராய் விளங்கிய திருமேனி இரத்தின கவிராயர் பரிமேலழகர் உரைக்கு உரையாக "நுண் பொருள் மாலை" என்ற பெயருடன் விளக்கம் ஒன்று எழுதினார். நுண்பொருள் மாலை செந்தமிழ் இதழில் வெளிவந்தது (செந்தமிழ்த் தொகுதி 6 முதல் 10 வரை) நுண்பொருள்மாலை, இரத்தினகவிராயரின் இலக்கணப் புலமைக்குச் சான்றாய் ஆராய்ச்சித் திறனுக்கு எடுத்துக் காட்டாய் விளங்குகின்றது. திருக்கோவையார் உரையை ஆங்காங்கே மேற்கோளாகப் பெற்றுள்ளது.

1869-ஆம் ஆண்டில், ஏட்டுச் சுவடிகளில் இருந்த பரிமேலழகர் உரைக்குப் பலவகையான விளக்கக் குறிப்புக்கள் எழுதி, திருவள்ளுவமாலைக்கு உரை எழுதிச் சேர்த்து விருத்தியுரை என்ற பெயருடன் சரவணப் பெருமாள் ஐயர் வெளியிட்டார். இவ்வுரை

பரிமேலழகர் உரையின் அருமை பெருமைகளை எல்லாம் நன்கு விளக்குவதாய் அமைந்தது இவ்வுரையைப் பின்பற்றிப் பலர், பரிமேலழகர் உரைக்கு விளக்கம் எழுதி வெளியிட்டனர்.

1885-ஆம் ஆண்டு பரிமேலழகர் உரையை இலக்கண உரை என்ற பெயருடன், விளக்கவுரை எழுதிச் சேர்த்து, முருகேச முதலியார் வெளியிட்டார்.

இராமாநுசக் கவிராயர் வை.மு. சடகோப ராமாநுசாச் சாரியார், கோ. வடிவேல் செட்டியார் (1919) ஆகியோர் குறிப்புரைகளுடன் பரிமேலழகர் உரையை வெளியிட்டுள்ளனர்.

சோழவந்தான் அரசன சண்முகனார் செந்தமிழில் செந்தமிழ் - தொகுதி ϧ பக்கம் 207) திருக்குறள் ஆராய்ச்சி என்ற பெயருடன் பரிமேலழகர் உரையை விளக்கி எழுதியுள்ளார். ”பரிமேலழகர் உரையைக் காண்டிசையாகக் கொண்டு விருத்தி எழுதப்படும்” என்றும், ”பரிமேலழகர் உரையே சிறப்புடைத் தாகலின், அதனைக் காண்டிகையாகக் கொண்டு அவ்வுரையுள் பொருந்தாமை மறுத்து, ஏனையவற்றோடு விரிப்பன விரித்து இவ்வுரை எழுதப்படும்” என்றும் முகவுரையில் கூறி, திருவள்ளுவ மாலையைத் திருக்குறளின் சிறப்புப் பாயிரமாகக் கொண்டு, பால், இயல், அதிகாரம் ஆகியவற்றின் அமைப்பை ஆராய்ந்து சொல்லுகின்றார்.

1946-ஆம் ஆண்டில்,வை மு. கோபாலகிரு‘ணமாச் சாரியார் சிறந்த ஆராயச்சி முன்னுரை ஒன்றை விரிவாக எழுதி, பலவகையான நோக்குடன் அடிக்குறிப்புகளை எல்லோருக்கும் பயன்படும் வகையில் வெளியிட்டார்.

உரைக்கு உரைகள் பலவற்றைக் கண்ட உரை, பரிமேலழகர் உரை ஒன்றேயாகும்.

காப்பிய உரைகள்

3. சமய திவாகர வாமன முனிவர் - நீலகேசி

சிறுகாப்பியங்கள் ஐந்தனுள் ஒன்றான தீலகேசிக்கு உரை இயற்றியவா சமய திவாகர வாமன முனியா நீலகேசி சைன சமய

நீயகேசிக்குச் சமய திவாகர வாமன முனிவர் இயற்றிய விருத்தியுரை, “தீலகேசி விருத்தி சமய திவாகரம்“ எனப்படும். வாமன முனிவரின் பிம்பம் சைன் காஞ்சியில் உள்ளது.

இவரது உரை,சிவாஞான சித்தியார் (பர பக்கம்) உரையில் ஞானப்பிரகாசரால மேற்கோள் காட்டப்படுகின்றது.

நீலகேசியின் உரைச் சிறப்பை,

மெய்ந்நூல் நெறியை விளக்கி விளங்காப் பிடகமுதற்
பொய்ந்நூல் இருள்களைப் போகத் துரந்தது பூதலத்தில்
எந்தாலும் வல்லவர் ஏத்தச் சமயத் திறைவன்கண்ட
செந்நீல கேசி விருத்தி சமய திவாகரமே

என்ற பாடலும்,

அருகன் திருவறத் தன்புசெய் வாகும் அழிவழக்காற்

பெருகும் திருநெறிப் பீடழிப் பாரும்குப் பேருலகிற்

பொருவின்றி நின்ற தமிழ்ப்புல வோர்க்குப் பொருளைஎல்லாம்

திரியின்றிக் காட்டும் சமய திவாகரம் சேவிக்கவே

என்ற பாடலும் உணர்த்தும்.

மணிப்பிரவான நடையாசிரியர்களைப்போல இவ மிகுதியாக வடசொற்களைக் கலந்து உரை எழுதுகின்றார். சை சமயக் கருத்துக்களை நன்கு விளக்குகின்றார். ஏனைய பௌத்த இந்து சமயங்களின் கருத்தையும் நன்கு அறிந்துள்ளார். தம் சமயக் கருத்துக்களை மறுக்கும் பிற சமயங்களை மறுக்கும் திறன் இவரிடம் உண்டு.

குண்டலகேசியிலிருந்து கணக்கற்ற மேற்கோள்களைக்கு காட்டுகின்றார். அக் காப்பியத்தின் கதையைச் சுருக்கமாகக் கூறுகின்றார்.

இவர் உரையில் அரிய சொற்களையும் மறைந்துபோன தமிழ் நூல்களைப் பற்றிய குறிப்புகனையும் மிகுதியாகக் காணலாம்.

சமய நூல் உரையாசிரியர்கள்

1. நாலாயிர திவ்வியப் பிரபந்த வியாக்கியானங்கள்

தமிழிலக்கிய உலகத்தில்- இடைக்காலத்தில் செந்தமிழை வளர்த்துச் செழிக்கச்செய்த பெருமை ஆழ்வார்களுக்கு உரியது. இலக்கியச் சுவை முதிர்ந்த வளமான கவிதைக் கனிகளை நல்கித் தமிழிலக்கியத்திற்கு அளப்பருந்தொண்டுகளை அவர்கள் செய் திருக்கிறார்கள். ஆழ்வார்கள் வழிபட்ட கண்ணனைத் தமிழ் மொழியின் மீது தணியாத காதல் கொண்டவன் என்றும், தமிழ்க் கவிதை அமுதம் உண்டு திளைத்தவன் என்றும் பெரியோர்கள் போற்றிப் புகழ்வர். ஆழ்வார்களின் பாமாலைகள் அனைத்தையும் கண்ணன் மிக விரும்பி ஏற்பதாய்க் காலந்தோறும் சான்றோர்கள் நம்பிவருகின்றனர். திருமாலையும் தமிழையும் தொடர்புபடுத்தித் தோன்றிய கதைகள் சில உள்ளன.

அருடபெருங் கவிஞராகிய குமரகுருபரர்,

பழமறைகள் முறையிடப் பைந்தமிழின் பின்சென்ற

பச்சைப் பசுங் கொண்டலே

என்று திருமாலை அழைக்கின்றார். கம்பர் இயற்றிய சடகோபர் அந்தாதி.

கவிப்பா அமுதம் இசையின் கறியொடு

கண்ணற்கு உண்ணக் குவிப்பான்

என்று நம்மாழ்வாரைப் பாராட்டுகின்றது. உலகளந்த மாயவன் கோயில்கொண்டு நிற்கும்

எழில்மலையாம் திருவேங்கட மாமலையை.

ஆழ்வார்கள் செந்தமிழை ஆதரித்த வேங்கடம்

என்று பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் புகழ்கின்றார்.

ஆழ்வார்கள்பலரும், திருமாவை வரைங்க வாழ்த்தி அல்வது பெருமைகளைப் புகழ்ந்து பாடிய பாடல்கள்,தினய பிரபந்தம் எனப்பட்டன.

ஆய்வார்களின் அருடகள்நாதமுனிகளால்,ஒன்பதாம் அதொண்டின் முற்பகுதியில் தொகுக்கப்பட்டன். முளிகள் அவற்றைத் தொகுத்த வரல சுவையானது

நாதமுனிகள்

வாழ்க்கைப் பாதையில் ஒரே சீராய் அமைதியாய் சென்று கொண்டிருக்கிறான் மனிதன் அவனுடைய பாதையில் யாரோ சிலர் குறுக்கிட்டு அவனைத் தடுத்துத் திசை திருப்பி விடுகின்றனர் அவனுடைய பாதையின் இடையே நிகழகின்ற சில நிகழ்ச்சிகள் அவனை ஆட்கொண்டு அவன் பாதையை மாத்தி விடுகின்றன. எதிர் பாராத வகையில் தோன்றும் சில குழவகளால். வாழ்க்கை பலவாறாகப் பிரிந்து விடுகின்றது. மனிதன தான் வந்த வழிபிலிருந்து விலகி ஏதேனும் ஒரு வழியில் செல்லத்தொடங்கி விடுகிறான்.

வாழ்க்கைப் பாதையைப் பின் நோக்கித திரும்பிப் பார்த்தால் இத்தகைய அனுபவம் ஒவ்வொரு மனிதனுக்கும் ஏற்பட்டிருப்பது புலனாகும். பேராற்றலும் பேரறிவும் செயற்கரிய செய்யும் திறனும் படைத்தவர் வாழ்க்கைப் பாதையில் ஏற்படுகின்ற மாறுதல்கள் நாட்டு வரலாற்றையே மாற்றுகிற மக்களினத்தின் போக்கை மாற்றுகின்றன. மனித குலத் முத்தளையை-பழக்க வழக்கங்கனுதல் நாதமுனிகளின் மாறது ய நல்லதொரு கின்றன. இத்தகைய கையில் நிகழ்ந்தது.

நாதமுனிகள் வைண சமயச் சான்றோர். இவர் தென்னார்க காடு மாவட்டத்தில் (சிதம்பரம் வட்டத்தைச் சேர்ந்த காட்டு மன்னார் கோயில் என்னும் வீர நாராயணபுரத்தில் கி.பி. 825இல தோனறினார். திருமாலிடம் பக்தி கொண்டு, அவ்வூரில் உன்ன மன்னனார் கோயிலுக்குப் பூந்தோட்டம் அமைத்துப் பூசை செய்து வத்தார்

வாழ்வில் ஒருநாள்

நாதமுனிகள் ஒருநாள் மன்னனார் கோயிலில் வழிபாடு செய்து கொண்டிருந்தபோது, மைசூர் நாட்டிலிருந்து வந்த வைண அடியவர் சிலர் பின்வரும் பாடலைப் பாடத் தொடங்கினர்:

ஆரா அமுதே! அடியேன் உடலம் நின்பால் அன்பாலே

நீராய் அலைந்து கரைய உருகின்ற நெடுமாலே

சீரார் செந்நெல் கவரிவீசம் செழுநீர்த் திருக்கு டந்தை

ஏரார் கோலம் திகழக் கிடந்தாய் ! கண்டேன் எம்மாவோ!

இதனைத் தொடர்ந்து பத்துப்பாடல்களைப் பாடி முடித்துப் பதினோராம் இறுதியில்

குருகூர்ச் சடகோபன்

குழலின் மலியச் சொள்ள ஓர் ஆயிரத்துள் இப்பத்தும்

மழலை தீர வல்லார் காமர் மானேய் நோக்கியர்க்கே

இவற்றை எல்லாம் கேட்டுக் கொண்டிருந்த நாதமுனி வியப்பில் மூழ்கினார் பாட்டுக்கு நெஞ்சைப் பறிகொடுத்த இவா, குருகூர்ச் சாலே யார்? அவர் குழலின் மலியச் சொள்ள ஓர் ஆயிரம் பாடல்கள் யாவை ?"என்று சிநதிக்கத் தொடங்கி விட்டார்

ஆரா அமுதே" என்று பாடிய அடியவர்களை நோக்கி, "உங்களுக்குச் சடகோபரின் ஆயிரம் பாடலகளும் தெரியுமா?" என்றார். அவர்கள் தாம் அறிந்தவை பத்துப் பாடல்களே என்று கூறிச் சென்று விட்டனர்

அன்று முதல் நாதமுனிகள் சடகோபரின் ஆயிரம் பாடல் கனையும் தேடத தொடங்கி விட்டார் தமமாழ்வாரின் பிறப்பிட மான ஆழ்வார் திருநகரிக்குச் சென்று பராங்குச் தாசரைச் சத்தித்தார். அவர் மதுரகவியாழ்வாரின் சீடர், அவா துணையால் ஆழ்வார்களின் பாடல்களை எல்லாம் அறித்து தொகுத்தார். தாதமுனி தேடிச் சென்றது.. ஓர் ஆயிரம் பாடல்களை ஆனால், அவருக்குக் கிடைத்தவையோ ஏறததாழ நாலாயிரம் பாடல்கள்

"நாலாயிரம்" பெற்ற நாதமுனிகள் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை: பின்னர், அவற்றைப் பாகுபாடு செய்து இயலும் இசையுமாக ஓதிவருமாறு தம் மருமக்கள் இருவருக்கும் பணித்தார் இருவரும் மேலை அகத்து ஆழ்வான் என்றும் கீழை அகத்து ஆழ்வான் என்றும் பெயர் பெற்றனர்.

நாலாயிர திவ்வியப் பிரபந்தங்கள் இசையாய் இசைக்கப் பட்டும் இயவாய் ஓதப்பட்டும் நாடெங்கும் பரவின. பெருமாள் கோயில் திருவிழாக்கள் தோறும் ஒலிக்கத் தொடங்கின.

வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த இந்த நிகழ்ச்சியை, பின் பழகிய ஜீயர் இயற்றிய "குருபரம்பரா ப்ரபாவம்" என்னும் மணிப்பிரவான நூல் விரிவாகக் கூறுகிறது..

4000 பாடல்கள்

ஆழ்வார்கபாடல்கள்நாலாயிரம் என் கூதி பன்னிர் பாடல்களிவிவரப்படுகின்றது

1 பொய்கை வாழ்வார் -	முதல் திருவந்தாதி	100
2 பூத்தாழ்வார்-	இரண்டாம் திருவந்தாதி	100
3 பேயாழ்வார்-	மூன்றாம் திருவந்தாதி	100
4 திருமழிசையாழ்வார்	திருவந்தாதி	96
	திருச்சந்த விருத்தம்	120
5 நம்மாழ்வார்	திருவிருத்தம்	100

	திருவாசிரியம்	70
	பெரிய திருவந்தாதி	87
	திருவாய்மொழி	
6 .மதுர கவியாழ்வார்-	கண்ணிநுண் சிறுத்தாம்பு	1102
7. குலசேகர ஆழ்வார்-	திருமொழி	105
8 பெரியாழ்வார் -	பெரியாழ்வார் திருமொழி	473
9 ஆண்டாள்	திருப்பாவை	30
	நாச்சியார் திருமொழி	143
10 தொண்டாடிப் பொடியாழ்வார்-	திருமாலை	45
	திருப்பள்ளி எழுச்சி	10
11 திருப்பாணாழ்வார்-	அமலனாதி பிரான்	10
12. திருங்கையாழ்வார்	பெரிய திருமொழி	1084
	திருக்குறுந் தாண்டகம்	20
	திருநெடுத் தாண்டகம்	30
	திருவெழு கூற்றிருக்கை	1
	சிறிய திருமடல்	1
	பெரிய திருமடல்	1
	மொத்தம்	**3776**

இவை ஏறக்குறைய நாலாயிரம் இருத்தலால் நாலாயிர இவ்வியப் பிரபந்தம் எனப்பட்டன. சிலா, சிறிய திருமடலின் கண்ணிகளை 7741 ஆகவும், பெரிய திருமடலின் கண்ணிகளை 13415ஆகவும் எண்ணிக் கணக்கிட்டு நாலாயிரம் எனக் கொள்வா

இப் பிரபந்தம் ஆழ்வார்களின் கால வரிசைப்படி தொகுக்கப்படவில்லை.

இராமாநுச நூற்றந்தாதியை நாதமுனிகள் காலத்திற்குனப்பின் ஆழ்வார்களின் பாடலுக்கு இறுதியில் சேர்த்தனர்.

உரைகள்

ஆழ்வர்களின் பாடவானாகிய இல்லியப் பிரபந்தத்தை கோண்டு வளர்ந்து வந்தது. இப்பாடலுக்கு மரபு நிலை தவறாமல் இராமாதுசர் காலத்திலிருந்து பல உரைகள் காலந்தோறும் நோனறின. இராமாநுசர் தம் லிடெடாத்துவைதத கொள்கைங் உகுப்படுத்த ஆழ்வார்களின் பாடல்களை அடிப்படையாகக் கொண்டார். அப்பாடல்களுக்கு அலா அழகான னக்க வரைகள் கூறினார் அவருக்குப் பினல வைணவப் பெரியோர்கன் தோன்றி

ஆழவார்களின் பாடவகளுக்குப் பொருள் கூறி விளக்குவதை ஒரு பெருங்கலையாக வளர்த்து வந்தனர். அவர்கள் அனைவரும்.

நேர்த்தெழுதி

வாசித்தும் கேட்டும் வணங்கி வழிபட்டும்

பூசித்தும் போக்கிளேன் போது"

என்ற சான்றோரின்கொள்கையைத் தம் வாழ்வின் குறில்

உரைகளின் சிறப்பு

ஆழ்வார்களின் பாடலுக்கு உரை இயற்றிய வைணவப் பெரியோர்கள் தாம் கற்ற கலைகள் அனைத்தையும் தம் உரை களில் வழங்கிச் சென்றுள்ளனர். அப் பெரியவாகளின் இதய மனிகள் பலப்பல வகையாய் உரைகளின் வாயிலாக வெளிப் படுகின்றன. பாடல்களின் ஆழந்த பொருளகளை மிக்க நயம்படப் புலப்படுத்தி எழுதியுளளனர் மிக அரிய செய்திகளும் விளக்கங்களும், நுண்கலைச் சொற்களும் உரைகளில் பொதிந்து கிடக்கின்றன இவ்வுரைகள் தனி இலக்கியமாகவும், வைண சமய வைணவர்கள் அழ்வார்களின் பாடல்களைவிட, உரைவிளக்கங் களையே சிறந்தவையாகக் கருதிப் பின்பற்றினர் விளக்கம் கூறிச் சமயக் கருத்துக்களைப் பரப்ப உரைகளையே ஏற்ற சான்றுகளாகக் தத்துவ விளக்கமாகவும் போற்றப்படுகினறன. பிறகாலத்தில கொண்டனர்.

திவ்வியப் பிரபந்த உரையாசிரியர்களின் சிறப்பை டாக்டர் உவே. சாமிநாத ஐயா, "அவர்களுடைய உரையில் ஒரு பாடலுக்கு உரை கேட்டு விட்டால் மனம் வேறு ஒன்றில் செல்லாது" என்று கூறிப் புலப்படுத்துகின்றார்." **(1 சங்கத் தமிழும் பிங்காலத் தமிழும், பக்கம் 162)** பெருமையா? வியாத்யொாங்களாள் அப்பிரபந்தங்களுக்கு மனியாத்திபானத்தில் எவ்வனவு இரகசியங்கள் தினறன்.தில்னியபிரபந்தத்தாய் வியாக்கியானங் பெருமையா என்று ணுயல்ன் இருக்கிலா என்று கூறியுள்ளார்!

விபாகதியானங்களிவு சமயத்தின் உயிர் முயற்சியில் கோட்பாடு வழவோழியாகவந்த மாபுநிதிருமாவின் அ மாண்புகள்,விசிட்டாத்துவைதத்தின் தத்துவ துட்பம் ஆகி விழாக்கப்படுகின்றன வடமொழியில் உள்ள வேதம் உய புராணம் இதிகாசம் முதலியவற்றிலிருந்து கணசுதற்ற மேற்மே கள்ளத் காட்டிப் பல கருத்துகள் ளக்கப்படுகின்றன பாடல்களி கருத்தையும் அவற்றிய உள்ளுற அருநகத சமய நோக்குடன் ஆராய்ந்து தம் நண்ணறிவு தோன்ற உர்ம கதைப்போக்கையும் பொருளையும் சிறப்புடன் பல இடங்கள், எடுத்துக்காடடி அந்நாலை வைணவ சமயத்திற்கு ஒரு சிறந்த பிரமாணலாகவே காட்டியுள்ளனர் அதன் மூலமாகத்த உள்ள படைப்புத்திறனையும் வளமான சற்பனை ஆரதலையும் புலப்படுத்தியுளனனாழ்வார்களின் பாடல்களில் தோய் அவர்கள் கூறும் இராமன் கதையிலும் திருமாலின் அவதார கதையிலும் ஈடுபட்டுள்ளனா வி'ணு புராணம், பாகவதம் ஆகியவற்றிலும் மூழ்கி தனைத்திருக்கின்றனர். இவை எல்லாம் விபாக்தியான உரையாசிரியாக சிந்தனையை வளர்த் நுள்ளன் படைக்கும் திறளைப் பெருக்கியுள்ளன.

நடையும் மொழியும்

வியாக்கியானங்கள் பேச்சு நடையில் அமைந்துள்ள கொச்சை மொழிகள் விரவியுள்ளன். இவற்றிலும் ஒருவகை அழகும் ஆற்னும் வெளிப்படுகின்றன. கணக்கற்ற வகைவகையான மரபுத் தொடர்கள், நல்ல நல்ல கதைகள், சுவையான பழக்க வழக்கங்கள், வியப்பூட்டும் நிகழ்ச்சிகள் ஆகியவை வியாக்கியாளங்களில் நிரம்பியுள்ள

மணிப்பிரவாள நடை

வெண்ணிற முத்துமணிகளையும் செம்பவளங்களையும் கலந்து முத்தும் பவளமும் ஒன்றன்பின் ஒன்று வருமாறு அமைத்து மாலை கட்டுவதுபோல, சொற்களைத் தமிழ்மொழியுடன் இடையிடையே கவந்து எழுதும் இலக்கிய நடை இயல்புகனை உடைய மொழிகளஒனது சோக்கும் பிறந்ததே இந் நடையாகும். மணிப்பிரவாளம் என்ற தொடரில் மமுத்தையும், பிரவாளம் பலனத்தை குறிக்கும் தவடமொழி இரண்டனுள் எது முத்து, எது பவனம் என்ற வினாவை எழுப்பி விடைகாணபது வீணை வேலையாகும். பவனம் ال ي لا ب பிரவான நடையைத தோற்றுவித்தவர்.

மணிப்பிரவாள நடையில், வட சொற்களும் தொடர் மொழிகளும் தமிழுடன வீரவிவரும். தமிழில் உள்ள இடைச் சொற்களும் வினைமுற்று எச்சங்களும் வந்து கலக்கும் வடமொழி இராமாயடமொழி வேற்றுமை உருபெற்று வழங்கும் பிராகிருதமொழிர் வினைச்சொற்களும் வந்து சேரும், வடமொழிப் பெயர்ச்சொறகள் சொற்களும் இடம் பெறும்.

தோற்றமும் வளர்ச்சியும்

300 ஆண்டிற்குப்பிறகு தமிழகத்தில் பலலவர்களின் அரசி வேரூன்றியது. பல்லவ மன்னர்கள் காஞ்சி மாநகரைக் கைப்பற்றினர் தம் ஆட்சியை மெல்ல மெல்லத தெற்கே பரப்பினர். அவர்களால் வடமொழிக்கு ஏற்றம் பிறந்தது. சமண சமயத்திறகு வளர்ச்சி ஏற்பட்டது.

சமண சமயத்தைப் பரப்பும் நோக்கத்துடன் வடக்கே இருந்து பல சமணத்துறவிகள் தமிழகத்திற்கு வந்தனர் அக்காலத்தில் சமண சமய நூல்கள் எல்லாம் சமஸ்கிருதத்திலும் பிராகிருத (பாகத) மொழியிலும் இருந்தன. அந்தூல்களில் பொதிந்து கிடந்த சமண சமயக் கருத்துகளைத் தமிழ் மக்களிடம் பழமொழிபரப்ப சமணத் துறவிகள் முயன்றனர். ஆனால், அவர்கள் நாட்டுப்புமுயற்சிக்கு மொழி தடையாக இருந்தது. ஆதலின், தமிழ் மொழியை அவர்கள் கற்றுத் தேர்ச்சி பெறவேண்டியதாயிற்று. தொடக்கத்தில் வடமொழியில் இருந்த சமண சமயக்கருத்து களைத் தமிழில எடுத்துக் கூறப் பெருமுயற்சி செய்தனர் உயர்ந்த கருத்துகளை எல்லோருக்கும் விளங்கும்வகையில் தமிழில் கொண்டுவர அவர்களால் எளிதில் இயலவில்லை. இத்தகைய சூழ்நிலையில் தமக்குத் தெரிந்த வடமொழியையும் குலந்து (மொழி பெயர்ப்பு வேலையில் ஈடுபடாமல் தமிழையும் யான புதிய நடையைத் தோற்றுவிததனர். இந்த நடையே மணிப்பிரவாள நடை என்று பெயர் பெற்றது.

கிரந்த எழுத்துக்கள்

மணிப்பிலான நடைல்வாக்யங்களின் கணங்களை போறியே வந்ததுனால், தமிழ் மொழியுட இங்குகள் அண்டிராத அளவுக்கு வடமொழிச் சொற்க சொற்களைத் தமிழ் மொழியின் ஒலி முறைக்கு ஏற்றனாடு ரமைத்து வழங்க வேண்டும் என்ற தொல்காப்பி துணையை மறந்து விட்டு, வடசொற்கனை எவ்வித மாற்ற செய்யாமல் வடமொழி ஒலிமுறைப்படியே எழுத முற்பட்ட இதன் விளைவாலித் தமிழ்மொழியில் இல்லாத ஒலிகளுக்கு வடிவம் தேவை ஏற்பட்டது. வடமொழிச் சொற்கை அவநீந்திய ஒலியின்படி வழங்கும் முயற்சி கிரந்த எழுத் களைத் தமியில் தோற்றுவித்தது.தெள வடமொழி எழுத்தொலிகள் கிரந்த வடிவில் எழுதிச் சோக்க பட்டன.வடசொற்களையும் தொடர்கனையும் க எழுத்திறம் தமிழ் மொழியைத் தமிழ் எழுத்திலும் எழுதலாயினா மணிப்பிரவாள நடை இவ்வாறு ஒலியிலும் வரி வடிவிலும் சொற்களிலும் கலப்பு அடைத்து, தனிஇயல்புடன் உருவாயிற்று சமணர்கள் மணிப்பிரவாள நடையில் எழுதியதூங்கள் உள்ளன. ஸ்ரீபுராணம், சுத்திய சிந்தாமணி ஆகிய இரண்டும் பணிப்பிரவாள நடையில் அமைந்த சமண நூல்களாகும்

மணிப்பிரவாள நடையில் உரைநடை மட்டுமனந் செய்யுள்களும் தோன்றின யாப்பருங்கல விருத்தியுரை மணிப்பிரவாள நடையில் தோன்றிய நூல்களை, "இனிப் பாவினங்களுன் சமக்கிரகமும் வேற்றுப் பாடையும் வீரம் வந்தால் அவற்றையும் அவகிட்டுப் பாச்சார்த்தி வழங்கப்படும் அலை குறு வேட்டுவச் செய்யுளும் லோக விலாசனியும் பெருவன நல்லூர்ப் பாசாண்டமும் முதலாக உடையன எனக்கொள் என்று கூறுகின்றது" **யாப்பருங்கல விருத்தி (ஒழிபியல்) பக்கம் 491, பவானந்தம் பிள்ளை பதிப்பு**

இலக்கணம்

மணிப்பிரவான நடை வளர்த்து பெருகி, நூல்கள் சில நடையில் தோன்றியதால் வீரசோழியம் அந்த நடைக்கு இலக்கணம் வகுத்தது:

இடையே வடஎழுத்து எய்தில்

விரவியல் ஈண்டெதுகை

நடைஏதும் இல்லா மணிப்ர

வாளநற் நெய்வர்சொல்லின்

இடையே முடியும் பதமுடைத்

தாம்கிள விக்கவியின்

தொடையே துறைநற் பிரளிகை

யாதி துணிந்தறியே (அலங்ட் 23

என்பது அநுல் கூறும் இலக்கணம்

பிரவான நடைக்கு இலக்கணம் கூறுகிலை மணி என்பதற்கு மாணிக்கம் என்று பொருள கொண்டு, "வெந்த மாணிக்கமணியும் செம்பவளமும் கலந்து கோத்த மாலையில் இரண்டு

செந்திறமும் வேறுபாடு தோன்றாதவாறு ஒனதாக காட்சியளிப்பதுபோல இருமொழிக சொற்களும் கலந்து அமையும் நடை" என்று விளக்குகிந்

வைணவ உலகில்-மணிப்பிரவாளம்

பன்னிரண்டாம் நூற்றாண்டிற்குப் பிறகு வைணவ உலகில் பல மாறுதல்கள் ஏற்பட்டன், அழவார்களின் பதிப் பாடல் களுக்குதி நததுப் பொருள் கூறும் நோக்கம் பெரியவர்களிடம் உண்டாயிவடமொழியிலுள்ள வேத ஆகம புராணங்களின் கருத்துகளைக் கொண்டு வந்து, ஆழ்வார்களில் பாடல்களுக்கு விளக்கமாய் அமைத்துக் காட்டினா தமிழ், வடமொழி ஆகிய இரு மொழிகளையும் ஒப்ப நோக்கிச் சிறப்புச் செய்தனா வடமொழிச் சுலோகங்களை, ஆழ்வார்களின் பாடல்களுக்கு விளக்கம் கூறப் பயன்படுத்தினா. வடமொழியே சமயல் கருத்துக்களை விளக்கும் மொழி என்ற நிலைமையை மாற்ற முயன்றனர். அதனால், அவ்லிரு மொழிகளையும் ஒன்றாக இணைத்துச் செல்லும் மணிப் பிரவாள நடையை மேற்கொண்டனர் சமணர்கள் தம் சமயக கருத்தை விளக்க மேற்கொண்ட மணிப்பிரவாளம் வைணவ உலகில் புகுந்தது: புகுந்து வளம்பெற்றுச் சிறப்புடன் வளர்ந்தது: வளர்ந்து செழித்தது.

வைணவ உரையாசிரியர்கள், வடமொழியிலிருந்த சமயக் கருத்துகளைக் கற்றுத்தேர்ந்தவர்கள் ஆழ்வார்கள் பாடலில் ஊறித் திளைத்தவர்கள் அறிவையும் உணாச்சியையும் இணைத்து வைணவ சமயத்தை வளர்க்க அவர்கள் முயன்றனர் அவர்களைத் தென்சொற கடந்து வடசொற்கு எல்லை கண்ட சான்றோர்கள்" என்னலாம்.

எதிர்ப்பும் தோல்வியும்

சமணர்கள் தோற்றுவித்த மணிப்பிரவாள நடை வளர்ந்து வைணவ உலகில் நுழைந்து செல்வாக்குப் பெற்றதுலாம் தொடக்கத்தில் மணிப்பிரவானக்குஎதிரப்பு இருத்த சமர்த்தை எதிர்த்துறை திருஞான சம்பந்தா சமர் கையாண்ட வானதடைவையும் எதிர்த்துள் என்பதற்குஅது பாடல்களில் சான்று உண்டு மணிப்பிரவ்ன்வு நடையில் எழுதுவது, சியத்தோடு செந்தமிழ்ப் ப இகழ்கின்றார் இவ்வாறு எதிர்த்தும் மணிப்பிரவாட அறில்லாது கருச் சிதைந்து கரைப்பது என்று வர்த்து வந்து, எவணவ உலகில் சிறப்புப் பெற்றது

மணிப்பிரவாள நடையை சமணர்கள் காரணத்தினால் மட்டும திருநாஞனு சம்பந்தா எதிர்த்தார்என்ற மணிப்பிரவான தடையை. ருதயத் பொருத்தாது அத்தடை தமிழ் மரபிற்கு ஒவ்வாம இருந்ததாலும் இரு மொழியில் வல்லவர்களால் மட்டுமே அறிந்து கொள்ளக் கூடி தாய் இருந்ததாலும்அதை எதிர்த்தார்.

தமிழுடன் மிகதியான வட சொற்கள் கவந்த நடைபே மணிப்பிரவாள நடை என்று நினைப்பது தவறு.வடமொழி இலக்கணப்படி அமைந்த கூட்டுச் சொற்கள், கூட்டு ஒல்கள் நீளமான தொடர்கள் யாவும் அப்படியே எடுத்தாளப் பெறும் அவற்றைப் படித்து அறிய வட சொற்களின் பொருள் மட்டும் அறிவ போதாது வடமொழிக்கு உரிய இலக்கணத்தையும் அறிய வேண்டும் ஆதலின், இரு மொழிப் புலவர்கள் மட்டுமே மணிய பிரவாள தடையில் அமைந்த நூல்களைக் கற்க முடியும்.

வைணவ சமயத்தில் மணிப்பிரவாள நடைகுச் செல்வாக்கு ஏற்பட்டபின், அத்தடையில் அரிய பெரிய சமயம் கருத்துகளை இருமொழி வல்ல சான்றோர்கள் எழுதி வைத்தனர்

காலப்போக்கில் மணிப்பிரவான நடை வழக்கிழந்தது அத்தடையை எழுதுவோகும் படிப்போகும் அருகினர் ஏதேனும் ஒரு மொழியில் புலமை பெற்றவர்கள் அந்நடையில அமைந்த நாலைப் புறக்கணித்தார்கள், பயில்வாரின்றி அவை ஒதுங்கி திடக்கவே பொதுமக்களிடம் அவற்றைப் பாப்புவோ இன்மையால் தேங்கி நின்றன. அறிவுச் செல்வமாய்-சமயக கருத்துக்களின் கடலாய் ஆராய்ச்சிக் களஞ்சியமாய் விளங்கும் கற்போர் இன்மையால் போற்றுவாரின்றிப் போனது வந்ததற்கு உரியதாகும். உரை விளக்கம் கண்ட பெரியார்களின் நோக்கம், காலப்போக்கில் நிறைவேறாமல் போனதை எண்ணும் துன்பம் மிகுகின்றது.

உரைகண்ட சான்றோர்கள்

மணிப்பிரவான நாடயில் எவனால் சமயத்திற்கு அமைந்த உரைதடை நூல்களை இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம் அழ்வார்களின் பாடல்களுக்கு அமைந்தயாஸ் யானங்கள், மற்றொவர்களின் வரலாற்றையும் அவர் களுக்குப்பின் தோவறிய வைணவப் பெரியோர்களைப் பற்றிய வரவாற்றையும் கூறுகின்ற "குருபரம்பரா பரபாவம் என்று வழங்கும் வரலாற்று நூல்கள்.

இனி, வியாக்கியானங்கள் தோன்றிய வரலாற்றையும் அவந்தை இயற்றிய உரையாசிரியாகள் வரலாற்றையும் காண்போம்.

நாதமுனியின் வழித்தோன்றல்

வீர நாராயணபுரத்தில் வாழ்ந்த நாதமுனியின் மைந்தர் ஈசுவரமுனி. ஈசுவர முனியின் மைந்த்ர் ஆளவந்தார். ஆளவந்தாருக்கு யமுனைத் துறைவர் என்ற பெயரும் உண்டு ஆளவந்தார் வைணவ ஆசாரியாகளில் சிறப்புடன் லினங்கினார் இவருக்குச் சீடர் பலா தோன்றினர். பெரியநம்பி திருக்கோட்டியூர் தம்பி பெரிய திருமலை நம்பி திருமலையாண்டான் மாறனேரி நம்பி திருக்கச்சி நம்பி முதலிய 16 பேர் சீடாகள் இருந்தனர்.

இவர்களுள், பெரிய திருமலை நம்பி திருவேங்கடத்தில் வாழ்ந்து வந்தார். இவரது தங்கை, பூமி பிராட்டியார் (காந்திமதி என்ற பெயரும் உண்டு) இந்த அம்மையார், திருப்பெரும்புதூரில் ஆசூரி கேசவப் பெருமாள் (கேசவ சோமாஜி என்றும் கூறுவர்) என்பாரை மணந்து கொண்டு இல்லறம் நடத்தி வந்தார்.

இவர்கள் செய்த நற்றவப் பயனாய், 1017 ஆம் ஆண்டு (பிங்கள ஆண்டு, சித்திரை மாதம், திருவாதிரை நட்சத்திரத்தில்) ஓர் ஆண் மகவு பிறந்தது.

தம் தங்கைக்கு ஆண் குழந்தை பிறந்த செய்தியைக் கேட்டு, திருமலை நம்பி திருப்பெரும்புதூர்க்கு வந்து குழந்தையைக் கண்டு மகிழ்ந்தார். குழந்தையின் பேரழகில் ஈடுபட்டு அதற்கு இலட்சுமணன் (இளைய ஆழ்வான்) என்று பெயரிட்டார்."

இவட்சுமணரே பிற்காலத்தில் (32 ஆவது வயதில் துறவு பூண்டு) இராமானுசர் என்ற பெயருடன வைணவ உலகின் திகழ்ந்தார்.

வைணவ ஞாயிறு

ஒன்பது பத்தாம் நூற்றாண்டுகளில் தமிழகத்தில் சமயத் துறையில் இருள் பரவிக் கிடந்த்து. ஆழ்வரர்களின் பிரபந்தமும் மூவர் தேவாரமும் வெளிப்பட்ட போதலும் அவை பொரும் வினக்கத்தோடு மக்கள் நடுவே பரவலில்லை கற்றவர் கடம் வடமொழி வேதங்கள் கயதிடதம் பகவத்கீதை ஆகியவை வடமொழி செல்வாக்கும் பெற்றிருந்தது. சூழ்நிலையில்தான் இராமானுசர் தோன்றினார். ஆழ்வார்களின் பிரபந்தங்கள்ன்று தெளிந்தார். வடமொழியிலும் தேர்ச்சி பெற்றார் இரு மொழியிலும் புலமை பெற்றபின சமயப்பணியாந்த் தொடங்கினார்.

இராமானுசர் பிறந்தது திருப்பெரும்புதூரில்அல்லி றது காஞ்சிபுரத்தில் சமயத்தொண்டு புரிந்தது திருவரங்கத்தில் இவ? பன்னிரண்டு ஆண்டுகள் மைசூர் நாட்டில் தங்கி இருந்து வைவைத்தை வளர்த்தார். இராமேசுவரம் முதல் கா'மீரம் வரை இந்தியா முருழுதும் முக்கோல் ஏந்தி யாத்திரை செய்து, பகத்நெறி பரப்பி வெற்றிக்கொடி நாட்டினார். இதனால் இவரை,

வையம் குருடன்றோ மாமறையும் பொய்யன்றோ

ஐயன் உரைத்ததமிழ் ஆர்அறியார்-வையத்துக்கு

ஊன்றுகோல் எந்தை எதிராசர் ஆதரித்த

மூன்றுகோல் காண்பதற்கு முன்

என்று வைணவ உலகம் போறுகின்றது.

இராமானுசர், ஆதிசங்கரரிடமிருந்து வேறுபட்டு வீசி பாத்துவைத தத்துவத்தை ஒரு தனிப்பெருங் கொள்கையாகல் வைணவ சமயத்திற்கு உறுதுணையாக்கினார். தென்னகத்து மக்களின் தொன்றுதொட்டு வருகின்ற வழிபாட்டு முறை, மரபுநிலை பிறழாத சமயச்சடங்கு, மாறாத பக்தி உணர்ச்சி ஆகியவற்றை வைணவத்துடன் இணைத்தார். இதனால், வைணவ சமயமும் தத்துவமும் புதிய எழுச்சி பெற்றன. இவர் வைணவ ஆசாரிய பரம்பரைக்குத் தலைமை தாங்கினார்? எம்பெருமானார் யதிராசர் ஸ்ரீ பர'யகாரர் உடையவர் திருப்பாவை சியா முதலிய சிறப்புப் பெயர்களைப் பெற்றார். தம்மாழ்வார்க்கு அடுத்த படுகின்றார். இவரை வைணவத்த நிலையில் வைத்துப் போற்றப்படுகின்றார். இவரை

வான்திகழும் சோலை மதில் அரங்கர் வண்புகழ்மேல்

ஆன்ற தமிழ்மறைகள் ஆயிரமும்என்ற

முதல்தாய் சடகோபன் மொய்ம்பால் வளர்த்த

இதத்தாய் இராமா நுசன்.

என்று போற்றுகின்றார்

ஆளவத்தார் விருப்பங்கள்

இளமைக் காலத்தில் காஞ்சிபுரத்தில் தங்கி இருந்த இராமானுசர் யாதவப் பிரகாசரிடம் வேதாந்த கற்றறிந்தார் இவரது கல்விச் சிறப்பையும் துணை நிலையும் கேள்விப்பட்ட ஆவைத்தார் திருவரங்கத்திலிருந்து காஞ்சிபுரம் வந்தார். இவரைக் கண்டு உரையாடி மகிழ்ந்தார் பிற்காலத்தில் παπιοτερος σπευστών στοχία απωωστες επιπτ பெரிய செயல்களை ஆற்றப் போகிறார் எனது அறிந்து கொண்டார் தம் தல்வாழ்த்துகளைத் தெரிவித்து, தம் இருப்பிடம் சென்று சேர்த்தார்.

சில நாட்கள் கழித்தபின் ஆனவந்தார் தோயுற்றிருக்கும் செய்தி அறிந்து இராமானுசர் அவரைக் காணச் சென்றார் காஞ்சி புரத்திலிருந்து திருவரங்கம் சென்று சோவதற்குள் ஆளவந்தார் இறந்து விட்டார்.

ஆளவந்தார் திருநாடு அவங்கரித்தபில், இராமானுசர் திருவரங்கம் வந்து அவர் உடலைக் கண்டபோது, கை விரல்கள் மூன்று மட்டும் மடங்கி இருக்கக் கண்டார் அவை, ஆளவந்தாரின் திறைவேறாத மூன்று விருப்பங்களைக் காட்டும் அடையாளம் என்று ஆளவந்தாரின் சீடாகள் கூறினா அவை!

1.நம்மாழ்வாரின் திருவாய் மொழிக்கு விளக்கவுரை எழுத வேண்டும்.

2. வியாச சூத்திரத்திற்கு விசிட்டாத்துவைதபரமாக ஒரு விரிவுரை எழுத வேண்டும்.

3.வியாசபராசரருக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் நல்லதொரு பணியைச் செய்ய வேண்டும்.”

இந்த மூன்று விருப்பங்களையும் தாம் நிறைவேற்றுவதாக இராமாநுசா வாக்களித்தவுடன் மூடி இருந்த (ஆளவந்தார்) விரல்கள் மூன்றும் விரித்தன..

பின்னர்த் தம் சீடராகிய பிள்ளானைக் கொண்டு இருவாய் மொழிக்கு வியாக்கியானம் செய்வித்தார். மற்றொரு சீடரான பராசா பட்டரைக் கொண்டு சகஸ்ர நாம பா‘யம் செய்வித்தார். கா‘மீரம் வரை சென்று வடமொழி பயின்று தோந்தபின், தாமே வேதவியாசரின் பிரமம சூத்திரத்திற்கு ஸ்ரீ பா‘யம் செய்தார்.

தமிழ் நாட்டில் உள்ள திருவரங்கத்தில் கோயில்“ என்ற பெருஞ் சிறப்புடைய வைணவ தலத்தில் வாழ்ந்து கொண்டு ஆழ்வார்களின் பாடல்களைப் பெரிதும் போற்றிக் கொண்டாடிய இவர், தாம் எழுதிய பா‘யங்கள் அனைத்தையும் வட

மொழியிலேயே செய்தார். தமது ஸ்ரீ பா‘யத்தில் ஓர் இடததில் கூட ஆழ்வார்களின பாடகளைக் குறிப்பிடவே இல்லை. வட மொழியில் பேருரை பல கண்டு பா‘யகாரர் என்ற சிறப்பு பெயாரம் பெற்ற இவர், திருவாய் மொழிக்கு விளக்கவுரை எழுதாமை தமிழரின் தவககுறையே யாகும். **(அருணாசலம் தமிழ் இலக்கிய வரலாறு - 12 நூற் 11: பக். 741, 742)**

விழுதுகள்

வைணவ உலகில் ஆலமரம் போல் ஓங்கி வளர்ந்து, பல நூறு கினைகளுடன் பெவித்த இராமானுசருக்கு விழுதுகள் போல சீடர் பலர் தோன்றினர். பலவேறு நாட்டினரும்,

யினரும் சீடர்கள் ஆயினர் மகளிர் பலர், அடியவர் ஆயி மைந்தர் களும்இவரை நாடி வந்து மாணவர் ஆபினர் அரிசனங்களைத் திருக்குவத்தார்" என்று பெயரிட்டுச் சீட்ராகசுக கொண்டார்.

இவ்வாறு 74 பேர் குறிப்பிடத் தக்க சீடர்கள் ஆயினர். இவர்களில் கூரத் தாழ்வான், அமுதனார், வடுக நம்பி, பின்னான், பராசர பட்டா ஆகியோர் சிறப்பு வாய்த்தவர்கள்.

கூரத்தாழ்வான்

இவர் இராமானுசருக்குச் செய்த உதவிகள் மிகப் பலவாகும் இவா கல்வியிற் சிறந்த பெரியவர் வடமொழியும் தென் மொழியும் கற்றுத் துறை போகிய வித்தகா இல்ரை அமுதனார். மொழியைக் கடக்கும் பெரும் புகழாள்" என்றும் வஞ்சக் குறும்பாம் குழியைக் கடக்கும் நம் கூரத்து ஆழ்வான

அமுதனார்

அமுதனார். இராமானுசரைப் போற்றிப் பாடல்கள் இயற்றி இராமானுச நூற்றந்தாதி என்று பெயரிட்டு, தம் பக்தியை வெளிப் படுத்தினார். இந்தநூல், திவ்வியப் பிரபந்தங்களுக்கு இறுதியில் சேர்க்கப்பட்டுள்ளது.

அமுதனார். தம் பெயருக்கு ஏற்ப அமுதப் பாடல்களை இயற்றியுள்ளார். இராமானுசரை,

அறஞ் செப்பும் அண்ணல்

உண்மை நல்ஞானம் உரைத்த இராமானுசன்

நல்லார் பரவும் இராமானுசன்

தெரிவுற்ற கீர்த்தி இராமானுசன்,

சுற்றார் பரவும் இராமானுசன்

பொற் கற்பகம் ம் இராமானுசன்

என்று போற்றுகின்றார்.

இராமானுசர், இராமாயணத்தில் ஈடுபாடு மிகுந்தவர் என்பதை

படிகொண்ட கீர்த்தி இராமாயணம் என்னும் பக்தி வெள்ளம்

குடிகொண்ட கோயில் இராமானுசன்

என்று வியந்து கொண்டாடுகின்றார்.

எழுதாத உரைகள்

-இராமானுசர் காலம்வரை, திவ்வியப் பிரபந்தத்திறகு வாய் மொழியாகவே பரம்பரை பரம்பரையாக உரைகள் வழங்கி வந்தன. இராமாலுசருக்குப் பின்னரே வைணவ உரைகள், வியாக்கியானங்கள் என்ற பெயரால் எழுதப்பட்டன்

இராமானுசருக்குச் சீடா பலா தோனறினர் கூரத தாழ்வான இராமானுசரின் நெருங்கிய மாணவா ஆனார், பிரபந்தத்திற்கு விரிவுரை கூறும் ஆற்றலும் வைணவு சம்பக சருத்துகளை

விளக்கும் திறனும் பெற்றார் அவா காஞ்சிபுரத்திறகு அருகே கூரம் என்னும் இடத்தில் பிறந்தார் அவருடைய மைந்தன் பராசர பட்டரும் தம் தந்தையைப் போலவே சிறப்புறது விளங்கினார். இவர்களில் ஒருவரும் பிரபந்தத்திறகு எழுத்து வடிவில் உரை எழுதிவைக்கவில்லை. ஆனால், வாய்மொழ இவர்கள் கூறிவந்த உரைகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

இராமானுசரின முனனோராகிய ஆளவந்தார் பிரபந்தத்திற்கு உரைத்த பல நுட்பங்களை, ஈட்டின் உரை யாசிரியா ஆங்காங்கே குறிப்பிடுகின்றார். ஏணைய உரையாசிரியா களும் கூரத்தாழ்வான இவ்வாறு கூறினார், பராசர பட்டர் இவ்வாறு விளக்கினார் என்று தம் உரைகளில் குறிப்பிடுகின்றனர்.

எடுத்துக் காட்டிற்கு ஒன்று தருவோம் "உறுமோ பாலி வேனுக்கு" என்ற பாடலில் வரும் "சிறுமா மனிசராய் என்ற தொடர், முரணாய் இருக்கிறதே என்று கூரத்தாழ்வாளை, அவர் மகன் பட்டர் கேட்டார் என்றும், "மேனி சிறுத்து ஞானம் விரிந்து இருக்கலாம் அன்றோ?

என்றும் உரை கூறுகின்றது.

எழுத்து வடிவம் பெறாமலே நெடுங்காலம் வியாக கியானங்கள் வழங்கி வந்தன என்பதற்கு இன்னும் பல சான்றுகள் உள்ளன. வாயால் விளக்கம் கூறிய பெரியோர்களின் உரையை எல்லாம் கேட்டு எழுதிப் போற்றிய பிறகாலப் பெரியோர்கள், வாய்மொழியாக உரைகூறி வந்தவர்களைப் பெரிதும் போற்றி ஐயங்கார் அந்தாதியில் (குருபரம்பரையைக்

சீதரன் பூமகள் சேனையர் கோன்தென் குருகைப்பிரான்

நாத முனியப்பம் கொண்டார் இராமர்தல் ஆனவந்தார் சமைப் பராங்குச தாசர் எதித்தலைவர் ஏதமில் வண்ஆழ்வாளம் பார்பட்டர் மற்றுமக்கேத

பாதம் அடைந்துய்ந்த ஆழ்வான்ளம் பார்பட்டர் மற்றுளமக்கே

என்று போற்றுகின்றார்

நாதமுனிகள் தேக்கிவைத்த ழ்வர்களின் பாடல்களால் வேறு வாய்க்கால்களில் பெருகி கரை புரண்டு ஓடி வைணவப் புவினர் வளர்த்து வருகின்றது

பெயர் பெற்ற சிறப்பு

திருமால் அன்பர்களுக்கு வழுங்குகின்ற பெயர்கள் நம் கருத்தைச் சுவர்கின்றன. நம்மை எல்லாம் ஆள்பவர்கள் என்ற அருத்தில்ஆள்வான்வான் ஆண்டான் ஆண்டாள் போளம் பெயர்கள் வழங்குகின்றனண ஆசான் (ஆச்சா) நம்பி படடா யா பெருமான பெருமாள்) அரையா பிள்ளான் தாசர் போன்ற பெயர்கள் அவர்களுக்கு உண்டு. இப் பெயர்களுக்கு முன்னால் "தம்" சேர்ந்து வருவது வழக்கம். இதனை உபதேச ரத்தினமாலை,

நம்பெருமாள் தம்மாழ்வார் நஞ்சீயர் நம்பிள்ளை

என்பர் அவரவர்தம் ஏற்றத்தால்

என்று குறிப்பிடுகின்றது.

இராமானுசர் காட்டிய வழி

இராமானுசர், திருவரங்கத்திலே வீற்றிருந்து சமயத் தொண்டு புரிந்து வந்த போது, சீடர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து, திருக்குருகைப் பிரான் பிள்ளையை, "திருவாய் மொழிக்கு விளக்கவுரை எழுத வேண்டுமென்று, நீர் இராமானுசரை வேண்டிக் கொள்ளவேண்டும். அவர்கள் காலத்திலேயே அவர்கள் திருவுள்ளப்படியே-அவர்கள் வாக்காலேயே வியாக்கியாணம் பெற வேண்டும்! என்று கூறினர். அதற்குப் பிள்ளான் உடன் பட்டார்.

இராமானுசர், பெருங்கூட்டமாக இருந்த அடியவர்களின் நடுவே வீற்றிருந்தபோது, பின்னான் சென்று அவரது திருவடிகளில் வீழ்ந்து வணங்கி, "தேவரீர், திருவாய் மொழிக்கு வியாக்கியானம் செய்தருள வேண்டும்!" என்று வேண்டினார்.

தம் மாணவர் வேண்டுகோளுக்கு இணங்காத இராமா சர். தாம் விளக்கும் எழுதுவது தகாது என்று பின்வரும் காரணங்களைச் கூறி மறுத்துவிட்டார்

ஆழ்வார்களின் அருளிச் செயல்குளக்கு விளக்கம் எழுதி விட்டால் மந்த மதிகட்கு. இச்க்கு இத்துணையே பொருள் என்று தோன்றிவிடும்

ஆழ்வார் பாடல்களில் கருத்து எழுத்தில் அடங்கி வீடும் தன்மையுடையது அது அவரர்களின் அறிவு நுட்பத்திற்கும் பதிமேம்பாட்டிற்கும் உலக அனுபவத்திற்கும் ஏற்றவாது விரிவடையும் இயல்புடையது.

தாம் உரை செய்துவிட்டால் ஆழ்வார் பாடல்களுக்கு இதுவே கருத்து என்று வரம்பு கட்டியதுபோல் ஆகிவிடும். ஏனெனில் ஆசிரியர் மீது கொண்டுள்ள அளவற்ற பக்தியினால் அவரது மாணவர், அதற்கு மேல் சிந்திக்க-விளக்கம் கூற முறபடார். யாரேனும் பிற்காலத்தில் சிறந்த விளக்கம் கூறினாலும் அதனை ஏற்காது புறக்கணிப்பர்.

இத்தகைய காரணங்களைக்கூறி இராமானுசர் தாம் விளக்கம் எழுத மறுத்துவிட்டார் ஆனால் அதே நேரத்தில் பிள்ளானையே உரை செய்யுமாறு மணித்தார். பிறர் உரை எழுது வதை வரவேற்றார். ஊக்குவித்தார்.

இராமானுசா காட்டிய வழி, காலப் போக்கில் பெருவழி படி அதனை விரிவாக்கி தஞ்சியா 9000 படி இயற்றினார் பெரியவாச்சான் பிள்ளையால் அது 24000 படி, ஆயிற்று. வடக்குத் திருவீதிப்பிள்ளை அதனை 36000 படியாக்கினார். இவ்வாறு உரைகள் ஒன்றன் பின் ஒன்றாய்-ஒன்றிற்கு ஒன்று விளக்கமாய்த் தோன்றின.

இவற்றிற்குப்பின், மணவாளசீயா 12000 படி செய்து. சுருங்கச் சொல்லி விளக்கினார்

திருவாய் மொழிக்கு, காலந்தோறும் விளக்கவுரை எழுதி வந்த ஆசாரியார்களைக கீழவரும் வெண்பா போற்றியுரைக்கின்றது.

பிள்ளாள்நஞ் சீயர் பெரியவாச் சான்பிள்ளை

தெள்ளார் வடக்குத் திருவீதிப் - பிள்ளை

மணவாள யோகிதிரு வாய்மொழியைக் காத்த

குணவாளர் என்றுநெஞ்சே கூறு - மணவாளமாமுனி

இந்தப் பாடல் பிள்ளான் நஞ்சீயர் முதலியோரைத் திருவாய் மொழியைக் காத்த குணவாளர்" என்று போற்றுகின்றுத. இது குறிப்பிடும் சான்றோர்களையும் அவர்கள் இயற்றியுள்ள உரைவிளக்கங்களையும் காண்போம்.

பிள்ளான் - திருக்குருகைப் பிரான் பிள்ளை 6000 படி இயற்றியவர்

நஞ்சீயர் - நம்பிள்ளை கூறிய விளக்கத்தை எழுதிப் போற்றியவர் 9000 படி

பெரியவாச்சான்பிள்ளை – வியாக்யானச்சக்கரவர்த்தி 24000 படி

வடக்குத் திருவீதிப் பிள்ளை – 36000 படி

மணவாளயோகி – 12000 படி

மேலேஉள்பட9000 படியைத் தோற்றுவித்த நம்பிள்ளையைக் குறிப்பிடவில்லை. ஏனெனில், நம்பிள்ளை எழுதின விளக்கம் அவர் ஆசிரியர் ஞ்சியா பெயரால் வழங்கிவருகிறத் அந்த உரை நம்பிள்ளை பெயராலேயே வழங்குதல் வேண்டும். ஆனால் வழி வழியாக வந்த மரபை யொட்டி தஞ்சியா பெயரால் குறிப்பிடப்படுகின்றது

முந்துரயே பிள்ளான் முதலானோர் செய்தருளும்

அந்த வியாக்கியைகள் அன்றாகில்- அந்தோ,

திருவாய் மொழிப்பொருளை, தேர்ந்துரைக்க வல்ல

குரு.ஆர்இக் காலம் ?நெஞ்சே கூறு.

திருவாய்மொழி உரைக்களஞ்சியம் உடைய பெருதாலாய்கு நிழ்கின்றது. இத்தகைய சிறப்பு, வேறு எத்தச் சமய நூலுக்கும் சான்றோர்கள் எவ்வாறு போற்றியுள்ளனர் என்பது இவ்வுரைகளால் விளங்கும்.

வைணவ உரையாசிரியர்கள், தாம் செய்த விளக்கவுரையை வியாக்கியானம் என்று குறிப்பிட்டனர். உரைகளில் உன்ன எழுத்துகளைக் கணக்கிட்டு, எண்களால் அவற்றிற்குப் பெயரிட்டனர். படி என்ற சொல்லை ஓர் அளவையாகப் பயன் படுத்தினா.

படி என்பது எழுத்துகளை எண்ணிக் கூறுகின்ற ஓர் அளவு மெய் எழுத்துகள் நீங்கலாக மற்ற எழுத்துகள் (உயிரும் உயிர் மெய்யும்) 32 கொண்டது ஒருபடி, படியைக் கிரந்தம் என்றும் கூறுவர். "ஒரு கிரந்தமாவது ஒற்று ஒழித்து, உயிரும் உயிர்மெய்யும்

ஆகிய முப்பத்திரண்டு எழுத்து என்பது யாப்பருங்கலக் காரிகை தருகின்ற விளக்கம்

ஆறாயிரப்படி என்பது 6006ழு32 எழுத்துக்களைக் கொண்டதாகும். இவ்வாறே ஏனையவற்றிற்கும் கணக்கிட்டுக் கொள்ளவேண்டும்.

திருவாய்மொழி வியாக்கியானங்கள்

திருவாய்மொழி வியாக்கியானங்கள் வைணவர்கள் "பசுவத வி'யம் என்று கொண்டு அவற்றைப் பிரகியமாகா கத்திப் பெரிதும் போற்றிவருகின்றனா இவ்வுரை பெருங்கடலில் மிகவும் உண்டாகும் இரையாசிரியாகளிடம் தீரமான எவணவ பகதியும், இருமொழிப்புலமையும் உண்டு அளவற்ற அறிவாதிரம் உரை எழுதும் மைக இவர்களிடம் உண்டு தமிழ்மொழியிலும்ழ்வான் பாடல்ளிலும் ருக்கும் அன்வற்ற ஈடுபாட்டை ஆங்காங்கே வெளிப்படுத்திக செலகின்றனர்.

6000 படி

நாதமுனிகள் காலம் முதல் இராமானுசா காலம்வரை. திருவாய் மொழிககு வாய்மொழி வாயிலாகவே உரைகள் வ பட்டுவந்தன. ஆறாயிரப்படியே முதன் முதலில் எழுத்து வடிவில் தோன்றிய திருவாய்மொழி வியாக்கியானம் இதலே வடிவில் வைணவ உரைகளுககுத் தோற்றுவாய்

இதனை இயற்றியவர். ஆளவந்தாரின் சீடராகிய பெரிய திருமலை நம்பியின் புதல்வரான பிள்னான என்பவா. பின்னான 2062 இல தோன்றினார் இவர் இராமானுசரின் உள்ளங்கவர் தன் மாணாக்கள்: ஆசானின குறிப்பறிந்து நடந்து கொண்ட சீலா

இராமானுசரின் கட்டளையை மேற்கொண்டு இவா 8000படி என்ற வியாக்கியானம் இயற்றினார். இவரது வியாக்கியானத்தைக் கண்டு மகிழ்ந்து இராமானுசர் இவருக்கு தம்மாழ்வார் நினைவாக "திருக்குருகைப் பிரான்" என்று பெயரிட்டார். 6000படியின் பெருமையையறிந்து, "யாம் செய்த ஸ்ரீ பா'யத்தைப் போலவே, இதுவும் காலட்சேபத்தில் வைக்கப் படுவதாக!" எனது பணித்தார் இராமானுசர்.

பிள்ளானை 74 சிம்மாசனாதிபதிகளுக்கு முதல்வர் ஆகினார். இராமானுசரின் ஞானபுத்திரர் ஆனார். இறுதிக் காலத்தில் பிள்ளான் மடியில் தலை வைத்து இராமானுசர் திருநாட்டிற்கு எழுந்தருளினார்.

பிள்ளானின் உரையை

தெள்ளாரும் ஞானத் திருக்குகு கைப்பிரான்

பிள்ளான் எதிராசர் போருளாய்- உள்ளாகும்

அன்புடனே மாறன் மழைப்பொருளை அன்றுரைத்தது

இன்பமிகும் ஆறா யிரம்

என்று மணவாளமாமுனிகள் போற்றுகின்றார்.

பிள்ளான் 6000 படி விளக்கவுரையில் இராமானுசர் தம் நூல்களில் எழுதியுள்ள வடமொழித தொடர்களைய எடுத்து வைத்து எழுதுகிறார் ஆளவந்தாருடைய சத்தின கருத்துகளையும் எடுத்து அமைத்திருக்கிறார் பதங்களுகுயம் காட்டி முடிப்பார்பாடல்களிட பாடல்களுக்குச் சுருத்தை மட்டும் கூறுவார் சிவவத சுருக்கமாக ஒரே வரியில் உரை

எழுதுகிறார். வடமொழி. தொடர்களை தமிழ் உருபுகளையும் வினைகளையும் கொண்டு முடிக்கிறார். அனறியும் ஒவ்வொரு திருமொழியிலும் முன்வந்த பாசுரங்களோடு தொடர்புபடுத்தி எழுதுவது இவர் இயலபு. திருமொழியில் சில பாடல்களுக்கு விரிவான மேற்கோள்களைக் காட்டி மற்றவற்றைச் சுருக்கி சொல்வதும் இவருடைய மற்றோர் இயல்பு. (**மு. அருணாசலம், தமிழிலக்கிய வரலாறு (12 நூற். 11) பக். 758.)**

9000 படி

இதனை இயற்றியவர் தயா (182-1287), இவா, தாழ்வானின் மைத்தராகிய பராசர பட்டரின் டெர் ஏர அடுத்துள்ள மேனாட்டில் இவா பிந்தார்.

திருவாய்மொழிக்குப் பின்னான எழுதிய ஆதாயிரப் படிமை விரிவுபடுத்தி, நஞ்சீயர் சொற்பொழிவு செய்தார். நஞ்சியா வைதத்தில் தோந்தவர் திருவரங்கத்தில் வாழ்ந்தவா, வேதார கடலை நீந்தியவர். இவரது இயற்பெயர் மாதவாசார்யா.

நஞ்சீயா கூறிவந்த வியாக்கியானங்களில் ஒலறு தப்பாமல் பதறாமல் கேட்டுத் தரித்து இராமுற்ற எழுதி, காய் கொம்பு சுழி ஏறாமல் அப்படியே எழுத்து வடிவில் தந்தன நம்பிள்னை. இவரது இயற்பெயர் வரதராசர்.

பட்டர் மறைவுக்குப்பின, நஞ்சியர் ஆசாரியா பதவி ஏற்றார் தாம் விரிவுபடுத்தியுள்ள வியாக்கியானத்தைத் திருத்தமானபடி ஒன்று எடுக்குமாறு தம் மாணவர் நம்பிள்ளையிடம் தந்தார். நம்பிள்ளை காவிரியின் தென்கரையில் வாழ்ந்து வந்தார்.

நம்பிள்ளை திருவரங்கத்தில் தஞ்சியரிடமிருந்து இறங்கினார் காவிரியில வெள்ளம் மிகுதியாக வரவழ தவடி எனதவுறி ஆற்று வெள்ளத்தில் விழுந்து மறைந்து போய்விட்டுத.

ஒலைச்சுவடியை இழந்த பெரிலும் வருந்திததம் கலருக்குச் சென்று தாமே திருவாய்மொழிக்கு விளககம் எழுதினார் எழுதி முடித்து விட்ட பின்தாள் எழுதிய அதலைப் பிரித்துப் பார்த்தபோதுபுதியவிளக்கமும் அருத்தும் அதில் சோத்திருந்தனஅறநைம் கட சுரரைம் கேட்டார் நம்பிள்ளைதவநறை எவ்வரம் ஒன்றும் மறைக்காமல் கூறி வருந் நப்பின்னையில்விளக்கம் மிகவும் சிறப்பாய் இருப்பதை அறிந்து அவரது புலமைத் திறனைப் போற்றி ஏற்றுக்கொண்டார்.

இவ்வாறு தம்பிள்னை எழுதிய விளக்கமே 9000 படியாகும் இந்த வியக்கத்தை நம்பின எழுதி இருந்தாலும், கும் பெயரால் இது வழங்கி வருகின்றது

9000 படியை உபதேச ரத்தினமாலை (3)

தஞ்சீரை ஞானியர்கள் தாம்புகழும் வேதாந்தி

நஞ்சீயர் தாம்பட்டர் நல்லருளால்- எஞ்சாத

ஆர்வமுடன், மாறன் மறைப்பொருளை ஆய்ந்துஉரைத்தது

ஏர்ஒன் பதினா யிரம்

என்று போற்றுகின்றது.

24000 படி

ஆசான் என்ற சொல்லுக்கு ஆசிரியன் என்பது பொருள் இச் சொல் ஆச்சான என்று வழங்கும். பெரிய ஆசான் என்ற தொடர் பெரியவாச்சான என்று ஆயிற்று பெரியவாச்சாள் பிள்ளை, நம்பிள்ளையின் அன்பிற்குரிய மாணவர் குடத்தை அருகே உள்ள சேங்கநல்லூரில் பிறந்தவர் திருவரங்கத்தில் தங்கிப் பணிபுரிந்தவர். பல நூல்களைக் கற்றறிந்த பெரும்புலவா. 70 எழுத்துப் பணிகளை புரிந்தவர்.

பெரியவாச்சான் பிள்ளையின் கல்விமாண்பை அறிந்த நம்பிள்ளை, திருவாய்மொழிக்குப் பெரியநொரு வியாதல்பா

நம்பிள்ளை தம்முடைய நல்லருளால் ஏவியிட

பின்பெரிய வாச்சான்பிள் ளையதனால் இன்பா

வருபத்தி மாறன் மறைப்பொருளைச் சொன்னது

இருபத்து நாலாயிரம்.

என்று இதன் வரலாற்றை ரத்தின மாலைறது பெரியலாச்சான் பிள்ளை, நாலாயிர திலிப்பி விலக்கம் என்னும் முழுமைக்கும் வியாக்கியானம்ற்றவியாக்தியாம்

பெரியவர்ச்சாய் பிள்ளையின் வியாக்கியானங்களைப் பின் வருமாறு புழகினறது நடை ”திலலியப் பிரபந்த தாதபரியங்களை அறிகைகக பெரியவாச்சானபிள்னை செய்தருளின வியாக்கியானங்களை ஒழிய வேறு ஈதி இல்ஆகைகயால், ஸ்ரீ வை‘ணவர்கள் எவ்வாகும் பெரியவாச்சால் பிள்ளை சம்பந்தம் பெற் அவருக்குச் சி‘ய கோடியாய் இருப்பார்கள்”

திவ்விய பிரபந்தம் கியானம் முழுவதிலும் பெரிய வாச்சாளபிள்ளையில் ர் நாடி துடிக்கின்றது இவரது எழுத்துக்கள்யாவும் வைசமய உண்மையின் காட்சியளிக்கின்றன மாபெரும் உண்மைகளுக்கும் கொள்ளக களுக்கும் இடையே கவிதைத் திறனோடு கூடிய புலமை மாணம் ஊடுருவிச் செல்லுகின்றது. இவர்க்கு சிறந்த உயிர்த்துடிபை உண்டாக்கி ஆழ்வார்களின பாடல்களுக்குப் புதியதோர அழகைத் தருகின்றது. இவரது மேதைமையும் உன்னப்பாங்கும். பிரபந்த உலகின் இருண்ட பகுதிகளில் மின்னலைப் போல் ஊடுருவிச் சென்று பேரொளி வீசுகின்றன. இவரது உதவியால் ஆழ்வார்களின் இதய ஒலியைக் கேட்கின்றோம் ஆசாரியார் கனின் திருவுள்ளப் பாங்கினைக காண்கின்றோம். அவற்றோடு இணைத்து செல்லும் பெரியவாச்சான் பிள்ளையின் உள்ளத்தை அறிந்து இன்புறுகிறோம்.

இராமாயணப் புலமை

பெரியவாச்சான் பிள்ளை, வடமொழியில் உள்ள வால்மீல் இராமாயணத்தில் மிகுந்த ஈடுபாடு உடையவர்? அக்காவியததை குற்றுப் தம் உரைகளில் பல இடங் வால்டீல் காவியத்தை மேற்கோளகாட்டுறார்

இவர் காலத்தில் வாழ்ந்த வேதாந்த தேசிகர் வால்மீல் அவோகங்குஅபய பிரதா சாரம் என்ற பெயரிய தமிழாக்கம்செய்து வந்தார். மேற்கோள்காடின்கிவருவது அறிந்தார். அவற்றைப்

படித்துப்பார்த்தபின் வேதாந்த தேசிகா தாம் எழுதி இருக்கும் வினக்கம்வாவும் ”சோழியன் உமிழ்ந்த சசுகை”என்று கூறினார்.

பெரியவாச்சான் பீளளை சோழ்நாட்டு அந்தணர் ஆதலின் இவரை, சோழியன் என்று தேசிகர் குறிப்பிட்டார்

இராமாயனததை மொழி பெயாகக விரும்பினார் சி

கம்பர் தமிழ்

கவிச சகரவாத்தியாகிய சம்பா, நஞ்சீயா காலத்தில் வாழ்த்தவர் என்பர் வைணவ உரைகள் பல தோன்றி. விளக்கத்திற்கு விலக்கம் உணக்கு உரை என்று விரிவடைந்த காலத்தில் வைணவ சமயக கருத்தும், இலககியமும் நாடெங்கும் பரவின், இராமானுசரும் அவரது வழித்தோன்றல்களும் வால்மீல் இராமாயணத்தைத் தமிழ் நாடெங்கும் கதா காலட்சேப வாயிலாகப் பரப்பி வந்தனர் இராமானுசரை அமுதனார், “படி கொண்ட ாதேத்தி இராமாயணம் என்னும் பக்தி வெள்ளம் குடிகொண்ட கோயில் என்று பாராட்டுகின்றார். வைணவ அடியார்கள் பரப்பி வந்த இராமயணம் என்னும் பக்தி வெள்ளம் தமிழ் மக்கள் தெஞ்சில் பாய்ந்தது. எங்கும் இராமன் கதை பேசப் பட்டது. இராமன் புகழ் தமிழகமெங்கும் மண்டிக்கிடந்தது.

இத்தலைய சூழலில்தான் கம்பர் தோன்றினார். இராமன் கதையைப் கம்பராமாயணம் பாடினார் வைணவ ஆசாரியர்களின் காலத்திலேயே தமிழ் நாடெங்கும் பரவத் தொடங்கியது. பெரியவாச்சான பிள்ளை காலத்தில், கம்பர் காலியம் கற்றவர் உள்ளத்தில் இடம் பெற்றது. கம்பர் பாடல்கள் இரண்டைப் பெரிய வாச்சான பிள்ளை, தம் உரையில் மேற் கொண்டுள்ளார்.

”மஞ்சுவாம் சோலை வண்டறை மாநீர்“ என்னும் திருவாய் மொழிப் பாடலுக்குப் பெரியவாச்சான் பின்வருமாறு விளக்கம் கூறுகின்றார்:

”வண்டறை என்கிறது சோலைக்கு அடைமொழியாகவும், மாதீர்க்கு அடைமொழியாகவும் ஆம், ஜலத்தினுடையரஸ்யதையாலே ஈக்கள் வண்டொடு மொய்ப்பபது என்று ஆற்று வரவுகளிலே சொல்லுவார்களாய்த்துத் தமிழர்.

இங்கே .ஈக்கள் வண்டொடு மொய்ப்ப வரம்பு இகந்து (பால – ஆற்று - 10) என்ற கம்பர் பாடலின் அடியை மேற்கோள் காட்டியுள்ளார்.

யுத்த காண்டத்தில் வருணனை வழி வேண்டு படவத்தில் தொடங்கும் பாடலில் வருகின்ற

கருணை பங்கடல் கிடத்தது கருங்கடல் நோக்கி

என்ற அடியையும் பெரியவாச்சான் பிள்ளை எடுத்தாண்டுள்ளார்

”கடல் தன்னைப் பொர அளவுடைத்தாக தினைத்திருக்கு வுற்று. அதுக்காக ஒரு கடல் ஒரு கடலோடே ஸ்பாதித்த மாறுபட்டு கிடந்தாற்போலே கருங்கடல் தோக்கிக் கிடந்தது. திருவாய்மொழி, 6..

தமிழ் நடை

பெரியவாச்சான் பிள்ளை, பகவானையும் பிரபஞ்சத்தையும் ஆன்மாவையும் இவர்களுக்குள்ள தொடர்பையும் பற்றிப் பேசும் போது, பெரிதும் வடசொற்றொடர்களைக் கொண்டு எழுது கின்றார். ஆனால், (இயற்கை வருணனை போன்றவை கூறும் இடங்களில் தம்மை மறந்து இனிதாகத் தமிழ்ச் சொற்களாலேயே விளக்கமும் கதைகளும் சொல்லிக் கொண்டு போகிறார்..)

36000 படி

நம்பிள்ளையின் மற்றொரு மாணவராகிய வடக்குத் திரு விதிப்பிள்ளை முப்பத்தாறாயிரப் படியை வழங்கினார். இதுவே ஈடு என்று வழங்கப்படுகின்றது.) ஈட்டின் ஆசிரியர், திருவரங் கத்தில் வடக்கு வீதியில் வாழ்ந்து வந்ததால் வடக்குத் திருவீதிப்பிள்ளை என்னும் பெயர்பெற்றார். நம்பிள்ளை நாள் தோறும் செய்துவந்த காலட்சேபத்தில் அருளிச்செய்த விரிவுரை, வடக்குத் திருவீதிப் பிள்ளையால் எழுதிவைக்கப்பட்டு டு என்னும் பெயர் பெற்றது. இச் செய்தியை மணவாள மாமுனிகள்,

தெள்ளியதா நம்பிள்ளை செப்பு நெறிதன்னை
வள்ளல் வடக்குத் திருவீதிப்-பிள்ளைஇந்த
நாடறிய மாறன் மறைப்பொருளை நன்குரைத்தது
ஈடுமுப்பத் தாறா யிரம்

என்று கூறுகின்றார்.

ஈடு

ஈடு என்று இவ்வுரை வழங்குவதற்குப் பல காரணங்களைக் கூறுகின்றனர்.

(ஈடு என்ற சொல்லுக்குக் சுவரம் என்பது பொருள்) (சிந்தாமணி 537 உரைஸ, கவசம் உடலைக் காப்பது போல முப்பத் தாறாயிரப்படி வியாக்கியானம் திருவாய்மொழியைக் காத்து நிற கின்றது. கற்போராலும் எழுதுவோராலும் வேற்றுமக்களாலும் தனநிலை திரிந்து மாறுபடாத வண்ணம் இவ்வுரை திருவாய் மொழியைக் காக்கின்றது என்பது கருத்து.

1 இடுதல் என்ற சொல்லுக்கு எழுதுதல் என்ற பொருள் உண்டு. இடு முதல் நீண்டு ஈடு என வழங்கும்.)

2. நம்பிள்ளை நாள் தோறும் காலட்சேபத்தில் அருளிச் செய்தவற்றை வடக்குத் திருவீதிப் பிள்ளை எழுதிவைத்ததால் ஈடு என்று வழங்கப்பட்டது.

3. ககுதப் பிரகாசிகையினை அளவால் ஒத்து இருத்தலின் இதனை ஈடு என்றனர். ஈடு என்ற சொல்லுக்கு ஒப்பு என்பது ஒரு பொருள்.)

4. தன்னைக் கற்பவர் எல்லாரையும் இறைவனிடம் ஈடுபடச் செய்வது ஆதலின் இது ஈடு எனப்பட்டது.)

ஈட்டின் பெருமையை வைணவப் பெரியோர் பலவாறு எடுத்துக் கூறுகின்றனர். பின்வரும் பகுதி ஈட்டின் புகழை உணர்த்தும்:

”ஈட்டின் நடையழகு தனிச் சிறப்பு வாய்ந்தது பொருள் உணர்வோடு பயிலப்பயிலப் பேரின்பம் பயப்பது சொல் வாற்றல்கள் பொருளாற்றல்கள் அமைந்தது சுருங்கச் சொல்லல் விளங்கவைத்தல் என்னும் வனப்பு வாய்ந்தது: கூறப்புகும் பொருளை விளக்குவதற்குக் காட்டப்படும் மேற்கோள்கட்குப் பொருள் கூறும்முறை எத்தகையோரும் வியக்கத்தக்கது பதசாரம் கூறுவதில் இவ் ஈட்டின் ஆசிரியருக்கு ஒத்தாரும் மிக்காரும் இத் தமிழ் நாட்டில் இலர் பிற நாட்டிலும் இலர் என்று கூறலாம்ஒரு பதிகத்தோடு மற்றொரு பதிகத்திற்கும் உள்ள பொருள் தொடர்பைக் கூறிச்செல்லும் மாண்பு வேறு எவ்வுரையிலும் காண்டல் அரிது”.. (திருவாய்மொழி ஈட்டின் தமிழாக்கம் பகுதி ’ (1957) பக்கம் 46.)

ஒரு பகுதி

திருவாய்மொழி ஈட்டிலிருந்து ஒரு பகுதியை இங்கே காண்போம்:

அடங்கெழில் சம்பத்து அடங்கக்கண்டு ஈசன்

அடங்கெழில் அ.ந்தென்று அடங்குக உள்ளே

என்பது திருவாய்மொழி

இவ்விரு அடிகளுக்கும் ஈட்டு உரையின் பொழிப்புரை பின் வருமாறு: ”அழகியதான செல்வம் முழுவதையும் பார்த்து அ.ந்து இறைவனுக்குள் அடங்கிய செல்வம் என்று நினைத்து, அச் செல்வத்திற்குள் நீயும் அடங்கு.”

விளக்கம்

”கடலிலே புக்க துரும்பானது இரண்டு தலையிலும் நினை வின்றியே இருக்கவும், திரைமேல் திரையாகத் தள்ளுண்டு போந்து கரையிலே சேருகிறதில்லையோ? அப்படியே அவனுடைய ஐசுவரிய அலையானது அவனைத் தள்ளாதோ என்னில், இந்த ஐசுவரியம் எல்லாம் நமக்கு வகுத்த சேீயானவனுடைய ஐசுவரியமென்று நினைத்தால் தானும் அதுவாகச் சேரலாமே. ஆனபின்னர், சம்பந்த ஞானமே வேண்டுவது என்கிறார்.

மேற்கோள் கதை

எங்ஙனம் எனின், ஒருவணிகன் தன்மனைவி கருவுற் றிருக்கும் காலத்தில் பொருள்தேடும் விருப்பினால் வெளிநாடு சென்றான் அவளும் கருவுயிர்த்தாள் மகனும் தக்க வயதடைந்து தனக்கும் தகப்பனாருடைய வாணிகமே தொழிலாகப் பொருள் தேடப் போனான். இருவரும் தத்தமக்கு வேண்டியச் சரக்குப் பிடித்துக் கொண்டு வந்து ஒரு பந்தலில் தங்கினார்கள். அ.ந்து இருவர்க்கும் இடம் போதாமையால் அம்பறுத்து எய்யவேண்டும் படி விவாதம் உண்டான சமயத்தில், இருவரையும் அறிவான் ஒருவன் வந்து, “இவன் உன் தகப்பன் நீ இவன் மகன்!“ என்று அறிவித்தால் கீழ் இருந்த நாட்களுக்குச் சோகித்து, இருவர் சரக்கும் ஒன்றாய் அவன் காப்பாற்றுகின்றவனாய், இவன் காப்பாற்றப் படும் பொருளாய்க் கலந்துவிடுவார்களன்றோ!

கருத்துரை

அதுபோன்று, சீவான்மாவும் பரமான்மாவும் சரீரமாகிய ஒரு மரத்தினைப்பற்றி இருந்தால், ஒருவன் இருவினைப் பயன்களை நுகரா நிற்பான் ஒருவன் நுகர்வித்து விளங்கா நிற்பன் அவன் ஏவுகின்றவன் நாம் ஏவப்படும் பொருள் என்னும் முறையறிவே பொருந்தலாம் அன்றே?

எடுத்துக்காட்டு

ஓர் அரச குமாரன் பூங்கா ஒன்றினைக்கண்டு புகஅஞ்சி னால், "இது உன் தகப்பனதுகாண்" என்னவே, நினைத்தபடி நடந்துகொள்ளலாம் அன்றோ? ஆனபின்னர், அவனுடைய உடைமை இவை எல்லாம் என்னும் நினைவே வேண்டுவது தானும் அதற் குன்ளே ஒருவனாகச் சேரலாம் என்கின்றார்"

உரையால் அறியும் செய்திகள்

ஈட்டு உரை பலவகையான அரிய செய்திகளை நமக்கு அறி விக்கின்றது. அதில் இடம்பெற்றுள்ள பல நூறு உவமைகளில் எத்தனையோ செய்திகள் அடங்கியுள்ளன.

மன்னர்களைப்பற்றிய குறிப்புகள்

அரசர்கட்கு நாடெங்கும் தமது ஆணை செல்லுமாயிலும் தங்கள் தேவியரும் தாங்களுமாகப் பூந் தோட்டங்கள் சிலவற்றைக் குடநீர் வார்த்து ஆக்குவது அழிப்பதால் விளையாட்டின்பம் துய்க்குமாறு போன்று-

அரச குமாரன் அழுகு சிறையிலே கிடந்தால், முடி குடி அரசை தடத்துவதிலும் சிறை விடுகைதானே பயனாக இருக்கு மாறு போன்று-

இராஜாக்கள் இராஜதுரோகம் செய்தவர்களை நலிகைக்கு வேற்காரரை வரவிடுமாறு போன்று-

செடி சீய்த்துக் குடியேற்றின படைவீடுகளை விடாதே இருக்கும் அரசர்களைப் போன்று-

இராஜாக்கள் அந்தப்புரத்தில் ஒரு கட்டில் நின்றும் மற்றைக் கட்டில் ஏறப்போகா நிற்க அந்தரங்கர் நடுவே முகங்காட்டித் தம் காரியம் கொண்டு போமாறு போன்று-

சிறையிலே இருந்த இராஜ குமாரன் தலையிலே முடியை வைத்துப் பின்னைச் சிறையை வெட்டிவிடுவாரைப் போன்று-

அரச குமாரர்கட்கு உரிய அவ்வக் காலங்களில் வெள்ளிலை இடாதபோது அவர்கள் வருந்துவார்கள் அது போன்று-

அரசனுடைய சந்நிதியில் கூனர் குறளர்களாய் வசிப்பது போன்று-

நாகரிகம், பழக்கவழக்கம் முதலியன

செப்பிலே கிடந்த ஆபரணத்தை வாங்கிப் பூண்டு பின்னையும் அவ் ஆபரணத்தை வாங்கிச் செப்புக்குள்ளே இட்டு வைக்குமாறு போன்று-

கெடுமரக்கலம் கரை சேர்ந்தாற் போன்று-

இருகை முடவனை யானை ஏறு என்றால் அவனால் ஏறப் போகாதது போன்று-

ஒருவன் ஒருவனை, "உனக்கு ஒரு மாத ஜீவனத்துக்கு என்ன வேணும்?" என்றால் தன் மனைவி மக்களையும் கூட்டிக் கொண்டு, "எனக்குக் கலம் நெல் வேணும்" என்பது போன்று

தம்மால் காதலிக்கப்பட்டவர்கள் இருக்கும் இடத்திற்குச் செல்லும் ஆடவர்கள் தம்மை அலங்கரித்துக்கொண்டு போமாறு போன்று-

வேற்றரசர்களால் கலகங்கள் உண்டான காலங்களில் அடைய வளைந்தானுக்குள்ளே குடிவாங்கி இருந்து, இவ்விடம் இன்னார் பற்று, இவ்விடம் இன்னார்பற்று" என்று பின்னும் தம் இடத்தைச் சொல்லிவைக்குமாறு போன்று-

பயிர்த் தொழில்

வேரிலே வெப்பந் தட்டினால் கொழுந்து முற்பட வாடுவது.

போன்று-

நெற்பயிர் செய்யப் புல் தேயுமாறு போல-

நோயும் மருந்தும்

பசியில்லாத காலத்தில் உணவு நோயினைத் தருவதாம் எனப்படுதலால் . நோயின் மூலத்தை அறியும் மருத்துவர்கள் உணவு உண்ணலாகாது என்று விலக்குமாறு போன்று-

பால்குடிக்க நோய் தீருமாறு போன்று-

தண்ணீர்ப் பந்தல்

விடாயன் தண்ணீர்ப் பந்தலில் வந்ததும் சால் உருண்டு "கிடந்தது போன்று-

தார்மிகள் வைத்த தண்ணீர்ப் பந்தலை அழிப்பாரைப் போன்று-

இராமாயணக் கதை

மோஹித்துக் கீழே விழுந்த ஸ்ரீபரதாழ்வானைப் போன்று-

சக்கரவர்த்தித் திருமகன் திரு அவதரித்த பின்பு வானர சாதி வீறு பெற்றாற் போன்று-

விபீ"ணனைச் சேர்த்துக் கொண்டாற் போல-

12000 படி

இதனை இயற்றியவர் அழகிய மணவாள சீயர். இவர் கல்வி கற்று, உரை எழுதிய வரலாறு சுவையானது. 32 வயது வரை.

இவர் கல்லியறிவு இல்லாதவராய் இருந்தார். ஒரு நாள் கூட்ட மாய்ச் சேர்த்து படித்துக் கொண்டிருந்த மாணவர் சிலரைக் கண்டு, "நீங்கள் என்ன படிக்கிறீர்? என்று கேட்டார். அந்த மாணவர்கள். இவர் எழுத்தறிவில்லாதவர் என்று.அறித்து சிரித்துக் கொண்டே, "முசலிசலயம் படிக்கிறோம்!" என்றனர்.

அதன் பொருளை அறியாத இவர், தம்மை மாணவர்கள் என்வி நகைக்கின்றனர் என்று மட்டும் அறிந்து கொண்டார். பின்னர்ப் பெரியவாச்சான் பிள்ளையிடம் சென்று வணங்கி நடந்ததைக் கூறினார் முசல கிசலயம் என்பதற்கு விளக்கம் கூறுமாறு வேண்டினார். பெரியவாச்சான் பிள்ளையும் நகைத்துக் கொண்டே, "நீர் படிப்பு வாசனை இல்லாதவர் "நாங்கள் படிப் பதைப் பற்றி ஏன் கவலைப்படுகிறீர்?" என்று உம்மை எள்ளி நகைக்கின்றனர். முசலகிசலயம் என்பதற்கு, உலக்கைக் கொழுந்து என்பது பொருள். அப்படி ஒரு நூல் இல்லை" என்றார்)

இவ்வாறு பிள்ளை கூறியவுடன், மணவாளர் பெரிதும் நாணமடைந்தார். அவரது திருவடிகளில் விழுந்து வணங்கினார். "அடியேனை மாணவனாய் ஏற்றுக் கொண்டு, கல்வி கற்பித்துப் புலவனாய் ஆக்குதல் வேண்டும்!" என்று வேண்டினார். பிள்ளை மனம் உருகி இவருக்குக் கல்லி மீது ஏற்பட்ட ஆர்வத்தை அறிந்து போற்றி, அன்றுமுதல் கல்வி கற்பித்து இவரைப் பெரும் புலவராய் ஆக்கினார்.

புலமை பெற்றபின், "முசலகிசலயம்" என்னும் பெயரில் காவியம் ஒன்றை இயற்றினார். அதனை, முன்பு தம்மை இகழ்ந்த மாணவர்களிடம் காட்டி அவர்களைத் தலைகுனியுமாறு செய்தார்.

பின்னர், திருவாய்மொழிக்குத் தோன்றிய மிகவிரிவான வியாக்கியானங்களை எல்லாம் கற்றறிந்தார். அவற்றைச் சுருக்கி, சாரமாய்-எளிதாய்-எல்லோர்க்கும் விளங்கும் வகையில் 12000 படி இயற்றினார்.)

பராசரபட்டர் (1192-1220)

கூரத்தாழ்வாரின் மைந்தர். கி.பி. 1123-இல் பிறந்தவர். இராமானுசரின் சரின் சீடர் ஆன பின், இவருடைய கீர்த்தி விளங்கி வரும் காலத்தில் (வடநாட்டிலிருந்து மாதவசூரி என்னும் வேதாந்தி, அனைவரையும் தர்க்கத்தில் வென்று மிக்க சிறப்போடு திருவரங்கம் வந்தார். அவரைப் பட்டர் சென்று பார்த்து வெற்றி கொண்ட செய்தியை நஞ்சீயர் வரலாற்றால் அறியலாம் தோற்ற அந்த வேதாந்தியே இவருடைய மாணாக்கராகி, நஞ்சீயர் என்று பெயர் பெற்றார்.

பட்டா திருநெடுந்தாண்டக வியாக்கியானத்தில் மிகவும் வல்லவா. அதிலும் சிறப்பாக 21 ஆவது பாடலாகிய.

மைவண்ண நறுங்குஞ்சிக் குழல்பின்தாழ

என்ற பாடலுக்கு மிகவும் விரிவாகப் பிரசங்கம் செய்வாராம். இதைச் சொல்லியே இவர் வேதாந்தி (மாதவசூரி)யை வென்றார். இந்தப் பகுதி மட்டும் இன்று கிடைக்கிறது. கிடைக்கவில்லை. (மு. அருணாசலம், 12 நூற், 11 இலக்கிய வரலாறு பக். 764.)

திருக்கோனேரிதாஸ்யை (1217-1312)

இவர், புள்ளமமிக்க வைணவப் பெண்மணி. திருவாய் மொழி வாசகமாலை என்னும் விவரண சதகம் எழுதினார்.

இந்த நூல், திருவாய்மொழியிலிருந்து தேர்ந்தெடுத்த 164 றது. திருவாய்மொழியின் பாடல்களுக்கு விளக்கம் கூறுகிறது. ஒவ்வொரு பதிகத்திலும் உள்ள முதல் பாட்டையோ அடுத்த பாட்டையோ எடுத்து விளக்குகின்றது. பதிகத்திலுள்ள பத்துப் பாடல்களின் கருத்தும் ஒன்றிலேயே அடங்குமாறு விளக்கு கின்றார். நூறுபகுதியாக விவரிப்பதால் இது விவரண சதகம் எனப்பட்டது.

இதனை 1952-இல், தஞ்சை சரசுவதி வெளியிட்டுள்ளது. மகால்

மணவாள மாமுனி

இரிமனுசகுக்குப்பின், ஆசாரியார் பரம்பரையில் சிறப்புடன் விளங்கியவர் மணிவான மாமுனிகள். இவர் ஆழ்வார் திருநகரியில் இல் (சாதாரண ஆண்டு, ஐப்பசி மாதம் மூல நட்சத்தி தோவறினார்.

பெரியாழ்வார் திருமொழிக்கும், இராமானுச நூற்ற தாதிக்கும் வியக்கம் எழுதிப் புகழ் பெற்றவர் இவர். வைண உலகம்,

அடியார்கள் வாழ, அரங்க நகர்வாழ,

சடகோபன் தண்டமிழ்நூல் வாழ,- கடல்சூழ்ந்த

மண்ணுலகம் வாழ மணவாள மாமுனியே!

இன்னும்ஒரு நூற்றாண்டு இரும்

என்று போற்றுகிறது.

வேதாந்த தேசிகர் (1269-1369)

காஞ்சிபுரத்தின் ஒரு பகுதியாள துப்புல்" (1. தூ-புல் துப்புல் ஆயிற்று. தூ-தூய் துப்புல்-தருப்பைப்புல்). இவர் பிறந்த இடம். இவர் காலத்தில் வடகலை தென்கலை என, வைணவம் இரண்டாகப் பிரிந்தது.

மாலிக்காப்புர் படையெடுப்பால் திருவரங்கம் பாழ்பட்ட போது அங்கே இருந்து, கோயிலைக் காத்தார் இவர்.

ஆழ்வார் பாடல்களும் ஆசாரியார்கள் விளக்கமும்

திருவாய்மொழிக்கு வியாக்கியானங்கள் பல தோன்றியது போல, திருவிருத்தத்திற்கும் ஐந்து உரைகள் தோன்றியுள்ளன. நம்பிள்ளை பெரியவாச்சான் பிள்ளை அழகிய மணவாள சீயர் அப்பிள்ளை பெரிய பரகால சுவாமி ஆகிய ஐவரும் விளக்கவுரை கண்டுள்ளனர்.

இவற்றுள், இப்போது பெரியவாச்சான் பிள்ளை விளக்கம் ஒன்றே கிடைக்கின்றது. அப்பிள்ளையுரை, முதல் பதினைந்து பாடல்களுக்கு மட்டுமே கிடைக்கின்றது. ஏனையவை மறைந்து விட்டன. (2. கரந்தைக் கட்டுரைகள், பக்-274. பூவராகம் பிள்ளை.)

நம்பிள்ளை திருவாய்மொழிக்கு ஒன்பதாயிரப்படி (நஞ்சியர் கூறிய விளக்கவுரை) எழுதி அருளியதோடு நம்மாழ்வாரின் பெரிய திருமொழி, திருவிருத்தம் தொண்டரடிப் பொடியாழ்வாரின்

திருப்பள்ளி எழுச்சி ஆகியவற்றிற்கு விளக்கம் எழுதியுள்ளார்..

நஞ்சீயர் மதுரகவியாழ்வாரின் கண்ணிநுண் சிறுதாம்புக்கு உரை இயற்றியுள்ளார். ஆண்டாளின் திருப்பாவைக்கு ஈராயிரப்படி, திருப்பல்லாண்டு வியாக்கியானம் ஆகியவற்றை அருளி இருக்கின்றார்.

அழகிய மணவாள சீயர் திருவிருத்த வியாக்கியானம் இயற்றியுள்ளார். மேலும், அவர் தீபப் பிரகாசிகை, கீதா சாரம் முதலிய பல நூல்களை இயற்றியுள்ளார்.

பெரியவாச்சான் பிள்ளை, நாலாயிர திவ்வியப் பிரபந்தம் முழுமைக்கும் வியாக்கியானம் எழுதி வியாக்கியான சக்ரவர்த்தி என்னும் புகழைப் பெற்றார். இவரைக் குருபரம்பரா பிரபாவம், "அநந்தரம் பெரியாழ்வார் திருமொழி முதலான ஆழ்வார்கள் அருளிச் செயல்களுக்கு எல்லாம் வியாக்கியானம் செய்தருளி லோகத்தை வாழ்வித்தருளினார்" என்று புகழ்ந்து கூறுகின்றது.

இவர்களேயன்றி இவர்கள் காலத்திற்குப் பின்னும் பல சான்றோர்கள் தோன்றி, ஆழ்வார்கள் பாடலுக்கு உரை எழுதியதோடு வைணவ தத்துவப் பொருளை விளக்கிக் கூறும் நூல்களை இயற்றினர். அவர்களில் பிள்ளை லோகாச்சாரியார், மணவாள மாமுனிகள், வேதாந்த தேசிகர், அழகிய மணவாளப் பெருமாள் நாயனார். திருவாய்மொழிப் பிள்ளை ஆகியோர் குறிப்பிடத் தகுந்தவர்கள்.

பிள்ளை லோகாச்சாரியாரின் விளக்கம் செறிவும் விரிவும் உடையது. இவரது விளக்கங்களில் இனிய உவமைகள் இடம் பெற்றுள்ளன. கீழே சிலவற்றைக் காண்போம்:

"திருமந்திரத்தால் பிறக்கும் ஞானம், பைத்ருக தனம் போலே.-

பர்த்தாவினுடைய படுக்கையையும் பிரஜையினுடை தொட்டிலையும் விடாதே இருக்கும் மாதாவைப் போலே-

ஸ்ரீநந்தகோபரையும் கிருஷ்ணனையும் விடாத யசோதைப் பிராட்டியைப் போலே-"

இவர், புராண இதிகாசங்கள் வேதத்தின் விளக்கம் என்னும்கருத்தினார்:

"வேதாந்தம் அறுதியிடுவது ஸம்ருதீதிஹாஸ புராண களாலே" என்றும், "இதிஹாஸ சிரேஷ்டமான ஸ்ரீ ராமாயணத் தால் சிறையிருந்தவள் ஏற்றம் சொல்லுகிறது மகா பாரதத்தால் தூது போனவன் ஏற்றம் சொல்லுகிறது" என்றும் இவா கூறியுள்ளார்.

அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் என்பவர் ஆசார்ய ஹ்ருதயம் எழுதியிருக்கின்றார். நாலாயிரதிவ்வியப் பிரபந்தப் பாடல்களின் கருத்தும் தொடரும் அடியும் மிகுதியாக அந்நூலில் உண்டு.

வேதாந்த தேசிகர் மணிப்பிரவாள நடையில் எழுதினாலும் தனித் தமிழில் கவிதைகள் பல இயற்றியுள்ளார். இவர் மூன்று பக்கம் ஒரே வாக்கியம் வரும்படி எழுதுவார். சிறு சிறு தொடரே ஒரு வாக்கியமாய் அமைவதும் உண்டு. தனித் தமிழ் நடை பல இடங்களில் ஒளி வீசுகின்றது.

உரைக்கு உரை

திருவாய்மொழியின் 36000 படி வியாக்கியானத்திற்குச் சீயர் அரும்பதம், அடைய வளைந்தான் அரும்பதம் என்ற குறிப்புரைகள் இரண்டு உள்ளன.

ஆத்தான் சீயர், திருவாய்மொழி வியாக்கியான அரும்பர் விளக்கம், திருப்பல்லாண்டு வியாக்கியான அரும்பத விளக்க இரண்டும் எழுதியுள்ளார்.

திருவிருத்தம் பெரியவாச்சான் பிள்ளை விளக்கத்திற்கு அப்பு அரும்பதமும், பெயர் தெரியாத இருவர் எழுதிய அரும்பத உரைகள் இரண்டும் உள்ளன.

செய்யுள் வடிவ உரை

நம்மாழ்வாரின் திருவாய்மொழிப் பொருளைச் சுருக்கமாய் மதுரகவியாழ்வார் "கண்ணிநுண் சிறுத்தாம்பு" என்ற பகுதியில் பாடித்தந்துள்ளார்.

கம்பர் இயற்றிய 'சடகோபர் அந்தாதி" நம்மாழ்வாரைப் போற்றிப் பாடுகின்றது.

திருவாய்மொழிப் பதிகம் ஒவ்வொன்றின் கருத்தையும் சுருக்கி வெண்பா ஒன்றில் அமைத்துப்பாடும் நூல், திருவாய் மொழி நூற்றந்தாதி.

தனியன் உரை

திவ்வியப் பிரபந்தத்தில், ஒவ்வொரு நூலின் முன்னும் பின்னும் சிறப்புப் பாயிரப்பாடல் ஒன்றோ பலவோ உள்ளன. இவை நூலின் கருத்தைச் சிறப்பிக்கின்றன் நூலியற்றிய ஆழ்வார்களைச் சிறப்பிக்கின்றன. இவற்றைத் "தனியன்" என்று கூறுவது வழக்கம். நூலுள் சேராமல், தனித்து நிற்றலின் தனியன் என்ற காரணப் பெயரால் வழங்குகின்றது. தனியன்கள் எல்லாவற்றிற்கும் பிள்ளை லோகாசார்ய ஜீயர் சிறந்த உரை இயற்றியுள்ளார்.

சைவர்களின் பாராட்டு

வைணவப் பெரியோர்கள் எழுதியுள்ள வியாக்கியானங்கள் ஏனைய சமயத்தவராலும் பெரிதும் பாராட்டப்படுகின்றன. அவ்வுரை விளக்கங்களைச் சைவ சமயத்தவரும் போற்றிக் கற்று மகிழ்கின்றனர். திருஞான சம்பந்தர், அப்பர் முதலிய அருட் கவிஞர்களின் திருமறைப் பாடல்களுக்கு வைணவ வியாக்கி யானங்களைப் போன்ற விளக்கவுரைகள் தோன்றவில்லையே என்ற ஏக்கம் சைவப் பெரியோர்கள் நெஞ்சத்தில் தோன்றிய துண்டு.

டாக்டர் உ.வே. சாமிநாத ஐயரின் நண்பரான தியாகராச செட்டியாரை, அக் காலத்தில் உயர் பதவியிலிருந்த பட்டாபிராம பிள்ளை சைவத் திருமுறைகளுக்கு வைணவ வியாக்கியானங் களைப்போல் விளக்கவுரை எழுதுமாறு அடிக்கடி தூண்டி வந்தார்.

பண்டிதமணி கதிரேசன் செட்டியார், "இந் நூல்க வியாக்கியானங்களைப் போல தேவாரம் முதலிய சைவநூ களுக்கு வியாக்கியானம் எழுத யாராவது முன் வருவார் களானால் அது வர்வேற்கத் தகுந்த இலக்கியப்பணியாகும்" என்று கூறியுள்ளார். (பண்டிதமணி, சோமலே-பக்கம்:197),

இத்தகைய எழுச்சியின் காரணமாக இருபதாம் நூற்றாண்டில் திருவாசகத்திற்குப் பல உரைகள் தோன்றி ஏனைய திருமுறைகளுக்கும் விளக்கங்கள் சில எழுதப்பட்டன

தாயுன்மார்களின் வரலாற்றைத் தெள்ளுதமிழில், பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய சேக்கிழார் வைண உலகத்தில் தோன்றி ஆழ்வார்களின் வரலாற்றை எழுதிப் பரப்ப வில்லையே என்ற குறை வைணவர்களுக்கு உண்டு.

ஆழ்வார்களின் பாடல்களுக்கு வியாக்கியானங்கள் எழுதி வைணவத்தைச் செழிக்கச்செய்த பெரியவாச்சான் பிள்ளை, சைவ உலகில் தோன்றித் திருமுறைகளுக்கு விளக்கங்கள் எழுத வில்லையே என்ற குறை சைவர்களுக்கு இருந்து வருகின்றது. ”வைணவத்திற்கு ஒரு சேக்கிழாரும் சைவத்திற்கு ஒரு பெரிய வர்ச்சான் பிள்ளையும் இல்லை!” என்று கூறுவதுண்டு.

திங்களில் களங்கம்

வெண்ணிலவில் உள்ள களங்கம்போல், இவ்வுரைகளில் சில குறைகள் இருப்பதாய்ப் பெரியோர் சிலர் கூறுகின்றனர். பண்டிதமணி, ”இவ் வியாக்கியானங்களில் எடுத்ததற்கு எல்லாம் மேற்கோள் காட்டப்பட்டிருக்கிறது. முன் சொன்னதே பல இடங்களில் திருப்பிச் சொல்லப் பெற்றிருப்பதால் இந் நூல்களில் ஒழுங்குமுறை இல்லை என்று சொல்லலாம்” என்று கூறுகின்றார்.

பி. ஆர். மீனாட்சிசுந்தர முதலியார் தமிழ்நூல் விளக்கு (முதற்பாகம் 1939) என்னும் நூலில், ”நாலாயிர திவ்வியப் பிரபந் தத்திற்கும் வேதாகமங்களுக்கும் கருத்து உடையன எனப் போதிக்கப்பட்டு வருவது தமிழ் மக்களிடை அறியாமையை வளர்த்து வருவதே. அப் பிரபந்தங்கள் வடமொழி வேத சம்பந்தத் தொடர்பு அன்னியில், தமிழ்நாட்டில் தமிழ்ப் பெரியோர்களால் ஆக்கப்பட்டன என்ற உண்மை தமிழ் மக்களுக்குத் தெரிய வேண்டியது அவசியம்” என்று கூறியுள்ளார் (பக்கம் 2,3),

வேறொரு குறையும் தமிழறிஞர்களின் உள்ளத்தில் எழுவதுண்டு. மிகச் சிறப்பான கவிதைகளைத் தூயதமிழில் -செஞ்சொற்களால் இயற்றியுள்ள வியாக்கியான ஆசிரியர்கள் சில இடங்களில் தூய தமிழிலும் உரை இயற்றியுள்ளனர். ஆனால், இடையிடையே மணிப்பிரவாள நடையைக் கையாண்டு அரும் அறிவுச் செல்வங்களாகிய வியாக்கியானங்களை பெரும் அ இன்றுள்ளவர்க்கு விளங்காமல் செய்து விட்டனரே என்று ஏங்கு பவரும் உள்ளனர். சமய நோக்குடன் பயில்வோர் ஒருபுறமிருக்க இலக்கிய இன்பம் கருதி அவ்வுரைகளைத் தமிழ் மட்டும் அறிந்த வர்கள் பயில இயலாத நிலை ஏற்பட்டுள்ளது.

ழுஆழ்வார்களுடைய பாடல்களுக்குப் பிற்காலத்தில் உரை வரைந்த பேரறிஞர்கள், தம் காலத்து வைணவக் கருத்துக்களுக்கு எல்லாம் அப்பாடல்களில் இடம் காட்ட வேண்டும் என்ற எண்ணத்தால், பல வடமொழி நூற் செய்திகளையும் ஆழ்வார் பாடல்களின் கருத்துக்களாக வலிய செய்துள்ளனர். தமிழ் மொழி இலக்கணம் நிகண்டு இலக்கிய மரபு அமைத்து உரை ஆழ்வார்களின் பாடல்களுக்கு இவைகளைக் கொண்டே விளக்கம் கூற வேண்டி இருக்க இதனைவிடுத்து, வடமொழி வான்மீகி இராமாயணத்தை அடிப்படையாகக் கொண்டு விளக்கம்

கூறுவதின் காரணம் புரியவில்லை. இவற்றை, திவ்வியப்பிரபந்த உரை என்பதை விட வைணவ சம்பிரதாயத்தை விரித்துக் கூறும் நூல் என்று கூறுவதே மிகவும் பொருத்தமானது". " வரலாற்றில் பிறந்த வைணவம், பக். 304.

குரு பரம்பரா ப்ரபாவம்

மணிப்பிரவாள நடையில் வைணவச் சான்றோர்கள் ஆழ் வார்களின் பாடல்களுக்கு எழுதிய வியாக்கியானங்களோடு. ஆழ்வார்களின் வரலாற்றையும் வைணவத்தை வளர்த்த ஆசிரியர்களின் தொண்டையும் வியாக்கியானம் எழுதிய உரை யாசிரியர்களின் அருட்செயல்களையும் விளக்கிக்கூறும் "குருபரம் பரா ப்ரபாவம்" என்னும் உரை நடை நூல்களையும் இயற்றி யுள்ளனர். குருபரம்பரையைக் கூறும் நூல்கள் வைணவச் சான்றோர்களின் வாழ்க்கையை, வரலாற்றுப் பின்னணியுடன் வாய்மொழிக் கதைகளை இணைத்துத் தெய்விக நிகழ்ச்சிகளோடு தொடர்புபடுத்திக் கூறுகின்றன. கற்பவர் உள்ளத்தில் வைணவச் சான்றோர்களிடம் பெருமதிப்பும் பக்தியும் ஏற்படும் வகையில் அவை அமைந்துள்ளன. அந் நூல்களில் இலக்கியச் சுவையும் நயமும் உண்டு.

குருபரம்பரையைக் கூறும் நூல்கள் பல உள்ளன. பின் பழகிய பெருமாள் சீயர் இயற்றிய (6000 படி) குருபரம்பரையே காலத்தால் முற்பட்டது பலவகை நயங்களால் சிறந்து விளங்குவது. அந்நூல் வைணவச் சான்றோர்களாலும் தமிழறிஞர் கனாலும் பெரிதும் போற்றப்படுகின்றது.

ஏனைய குருபரம்பரை நூல்களும், சான்றோர்களின் வாழ்க்கை வரலாறுகளை-விறுவிறுப்பான கதை நிகழ்ச்சிகளைக் கட்டுக்கோப்புடன் பல்வேறு சுவைகள் வெளிப்படும் வகையில் நல்ல நாடகமாக அமைத்துக் காட்டுகின்றன. வைணவச்

அந்நூலாசிரியர்களைக் "கதை சொல்லும் கலைஞர்கள் காவியங்கள் என்று போற்றலாம்.

ஆண்டாள் வைபவம்

குடிக்கொடுத்த சுடர்க்கொடி என்றும், பெரியாழ்வார் பெற்ற பெண்கொடி என்றும் வைணவப் பெருமக்களால் பெரிதும் கொண்டாடப்படும் ஆண்டாளின் வாழ்க்கை வரலாறு இன்று தோன்றிய புத்தம் புதுக் கதைபோல இனிக்கின்றது. இலக்கியவானில் மிக உயரத்தில் கற்பனைச் சிறகு விரித்து மண்ணுலகை மறந்து, மண்ணுலக மக்களை மறந்து, கண்ணன்மீது காதல் கொண்டு பறந்து மகிழும் கலைப்பறவையாகத் திகழும் ஆண்டாள். மக்கள் நெஞ்சத்தில் என்றும் வாழ்ந்து கொண்டிருப்பாள். அவள் கண்ணனை நினைந்து பொழிந்த காதல் கவிதைகள் எக்காலத்திலும் வாடாத கற்பக மலர்களாகப் பொலியும்.

ஆண்டாளின் கதையைக் குருபரம்பரை நூல் மிக அழகாக வண்ண ஓவியங்கள் தீட்டி விளக்குகின்றது.

"நாச்சியார் தமது திருத்தகப்பனாராகிய பெரியாழ்வார் வடபெருங்கோயில் உடையானுக்காகத் திருமாலை கட்டிப் போடுகிற விதத்தை அதிக நுட்பமாகக் கவனித்துக்

கற்றுச் சில நாளைக்கு மேல் தாமும் அவரைத் தொடர்ந்து திரு நந்தவனத்துக்குப் போய், பூக்கொய்து புட்டிலில் சேர்த்துக் கொண்டுவந்து, செண்டுமாலை குழல்மாலை முடிமாலை கிளிமாலை தொங்கல்மாலை உலாமாலை வெற்றிமாலை முதலிய நானாவித மாலைகளைத் தகப்பனார் மகிழ்வடையும்படிக் கட்டிக்கொண்டு வந்து, நாளுக்கு நாள் பெருமாள் பக்கல் ப்ரேமை அதிகரிக்கப்பெற்று" என்று ஆண்டாளின் கதை சொல்லப் படுகின்றது.

ஆண்டாளின் உள்ளத்தில் மலர்ந்த பெண்மைப் பண்பு களையும், இளம் பெண் ஒருத்தியின் நெஞ்சத்தில் தோன்றும் மிக மென்மையான காதல் உணர்ச்சிகளையும் பின்வரும் பகுதி ஆற்றல் வாய்ந்த சொற்களால் வெளிப்படுத்துகின்றது.

ஆழ்வார் (பெரியாழ்வார்) இல்லாத அவசரங்களிவேட கட்டி வைத்திருக்கும் மாலைகளை எடுத்துச் குடிக்கொண்டு, "இந்த வடபெருங்கோயில் உடையானுக்கு நேர் ஒவ்வாது இருக் இறேனோ! ஒத்திருக்குறேனோ! என்னும் சொல் விளைத்து, காரை பூண்டு கூறை உடுத்துச் குடகம் அணிந்து தோள்வளை தரித்து, கைவளை குலுக்கி, சிலம்பும் பாடகமும் அணிந்து, அஞ்சனம் தீட்டி, செவ்வாய் திருத்தி, அசைந்து அசைந்து அவ் ஒப்பனை அழகை அங்குள்ள கண்ணாடியிலே கண்டு ஹ்ருதயம் குளிர்ந்து, அந்தரங்களைத்து அவை தம்மை முன் இருந்தபடியே வைத்து வீட்டு வேறு கைங்கர்யத்தில் ஈடுபட்டிருப்பார்."

இப்பகுதியைப் படிக்கும்போது ஆண்டாள் ஒப்பனை செய்து கொண்டு கண்ணாடிமுன் நின்று அழகு பார்த்து மகிழும் திருக்கோலம் நம் கண்முன் தோன்றி, கலைவல்லான் ஒருவளால் இட்டப் பெற்ற எழில் ஓவியமாய் மின்னிப் பொலிகிறது. உரை நடைக்கு உள்ள ஆற்றல் இப்பகுதியால் நன்கு வெளிப்படுகின்றது.

வைணவ ஆசாரியர் பரம்பரை

நாத முனிகள் (824-918)

ஈசுர பட்டர் (மைந்தர்)

ஆளவந்தார் (மைந்தர்)

பெரிய திருமலை நம்பி (மாணவர்)

காந்திமதி ஃ கேசவ சோமாஜி

இராமானுசர் (1107-1227)

74 சிம்மாசனாதிபதிகள்

பிள்ளான் (6000 படி) கூரத்தாழ்வார் அமுதனார்

பராசர பட்டர் (மைந்தர்)

நஞ்சீயர் (மாணவர் 9000 படி)

நம்பிள்ளை (மாணவர்)

மாணவர்கள்

வடக்குத் திருவீதிப் பிள்ளை 36000

நடுவில் திருவீதிப் பிள்ளை பட்டர்

பெரியவாச்சான் பிள்ளை)24000

) பிள்ளை லோகாசாரியர் (1264-1327) (மைந்தர்)

அழகிய மணவாள சியர் மாணவர்) (12000 டி

வேதாந்த தேசிகர் (1269-1369)

மணவாள மாமுனி

அ்டதிக் கஜங்கள்

வானமாமலை சியர் முதலியோர்.

2. திருமுறை உரைகள்

சைவசமயச் சான்றோர்கள் அருட்பாடல்களைப் பொழிந்து பக்திப்பயிர் வளர்த்தனர் தமிழை ஆண்டவனுக்கு உகந்த மொழி யாக்கினர்: தமிழுக்கு அளவற்ற தெய்வத் தன்மையை ஏற்றினா தமிழ் மொழியையும் சிவ பெருமானையும் தொடர்புபடுத்தி அதனை ஆற்றல் மிக்க மொழி என்று காட்டினர். தமிழிள் பெருமையைப் பரஞ்சோதியார்,

தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்ததும், முதலை

உண்ட பாலனை அழைத்ததும், எலும்புபெண் உருவாக்

கண்ட தும்மறைக் கதவினைத் திறந்ததும் கன்னித்

தண்டமிழ்ச் சொலோ ? மறுபுலச் சொற்களோ ? சாற்றீர்!“

(1. பரஞ்சோதியார் - திருவிளையாடற்புராணம், நாட்டுச் சிறப்பு - 68.)

என்று போற்றிப் புகழ்கின்றார்.

சைவ அடியார்களை நாயன்மார்கள் என்று அழைப்பது வழக்கம். நாயன்மார்களுள் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் சுந்தரமூர்த்திசுவாமிகள், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரும் “நால்வர்“ என்று சிறப்பாக வழங்கப்படுகின்றனர். இவர்களு முதல் மூவரும் இயற்றிய பாடல்கள் தேவாரம் என்றும் மாணிக்கவாசகர் இயற்றிய பாடல்கள் திருவாசகம் என்றும் வழங்கப்பெறும்.

நம்பியாண்டார் நம்பி, திரு முறைகள் என்ற பெயருடன், நால்வர் அருட்பாடல்களையும் அவர்களுக்கு முன்னும் பின்னும் தோன்றிய ஏனைய சைவ நூல்களையும் அமைத்துப் பாகுபாடு செய்தார்.

திருமுறை என்பதில் உள்ள “முறை“ என்ற சொல்லுக்கு நூல் என்பது பொருள். சேக்கிழார், முறை என்ற சொல்லை “நூல்“ என்ற பொருளில், “திருமுறை எழுதுவோர் வாசிப்போர்“ என்று கணநாதர் புராணத்தில் ஆண்டுள்ளார்.

திருமுறைகள் பன்னிரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளன. திருஞானசம்பந்தர் தேவாரப் பாடல்கள் முதல் மூன்று திருமுறைகள், திருநாவுக்கரசரின் தேவாரப் பாடல்கள் நான்கு முதல் ஆறு திருமுறைகள். சுந்தரமூர்த்திசுவாமிகள் ப நான்கு ஏழாம் திருமுறை, திருவாசகமும், திருக்கோவையாரும் எட்டாம். திருமுறை, ஒன்பதாம் திருமுறை, சேந்தனார் முதலியோர் பாடிய திருவிசைப்பா திருப்பல்லாண்டு முதலியன. திருமூலர் பாடிய திருமந்திரம் பத்தாம் திருமுறை. பதினோராம் திருமுறை திருவாலவாயுடையார் காரைக்கால் அம்மையார் முதலியோர் பாடிய நூல்கள். சேக்கிழார் பாடிய பெரியபுராணம் பன்னிரண்டாம் திருமுறை.

திருமுறைகளையும், அருணகிரிநாதர் பாடல்களையும் ஓதி உணர்ந்த ஒருவர் அவற்றை இயற்றிய புலவர்களின் சிறப்பியல்பு களை.

வாக்கிற்கு அருணகிரி வாதவூ ரர்கனிவில்
தாக்கில் திருஞான சம்பந்தர்-நோக்கிற்கு
நக்கீர தேவர் நயத்திற்குச் சுந்தரனார்
சொற்குஉறுதிக்கு அப்பர்எனச் சொல்

என்ற வெண்பாவில் கூறியுள்ளார்.

நால்வர் புகழ்

சம்பந்தர் அப்பர் சுந்தரர் மாணிக்கவாசகர் ஆகியவரை ““நால்வர்“ என்று குறிப்பிடுவர். மூவர் தேவாரமும், மணிவாசகரின் திருவாசகமும் பெரும் புகழ் பெற்றவை.

தாயுமானவர்,

மொழிக்கு மொழி தித்திப்பாக
மூவர் சொலும் தமிழ்

என்று பாராட்டுகின்றார்.

தேவாரத்தில் உள்ள இனிய இசையின் மாண்பை.

வெந்தழல் நீராமால் வெள்ளெலும்பு பெண்ணாமால்
வந்த மதவேழம் வணங்கிடுமால் -சந்தமெழப்
பாடுவார் உள்ளுருகிப் பாடும் தமிழிசைக்கு
நீடுலகில் உண்டோ நிகர்

என்ற வெண்பாவால் அறியலாம். நால்வரின் பெருமை,

சொற்கோவும் தோணிபுரத் தோன்றலும்என் சுந்தரனும்
சிற்கோல வாதவூர் தேசிகனும்-முற்கோலி

வந்திலரேல் நிறுளங்கே மாமறைநூல் தான்எங்கே

ஏந்தைபிரான் ஐந்துஎழுத்து எங்கே

என்ற பாடலால் வெளிப்படுகின்றது.

உரை இல்லாத குறை

திருமுறைகளுக்குப் பழைய உரையாசிரியர்கள் உரை எழுதாதது நம் தவக்குறைவேயாகும். "சைவ அடியார்களின் அருள் வாக்கிற்கு-சிவனருட் செல்வர்களின் திருப்பாடலுக்கு ஆண்டவனே விரும்பிக்கேட்ட தெய்வப்பாடலுக்கு-ஆற்றல் மிகுந்த மறைமொழிக்கு எளியவர்களாகிய நாம் உரை எழுத முடியுமா? நாம் எங்கே, திருமுறை எங்கே!" என்று எண்ணி, திருமுறைகளைத் தொழுது போற்றிக் கற்று, உரை எழுதாமல் முன்னோர்கள் சென்று விட்டனர். திருமுறைகளைக் கற்ற நம் முன்னோர்களிடம்,

அறம்உரைத் தானும் புலவன்முப் பாலின்

திறம்உரைத் தானும் புலவன்- குறுமுனி

தானும் புலவன் தரணி பொறுக்குமோ

யானும் புலவன் எனில்

என்ற நினைப்பே நெஞ்சில் நிலவிவந்தது.

சைவ சமயவுலகில் திருமறைகளுக்கு உரை எழுதக் கூடாது என்ற கொள்கை பன்னெடுங்காலமாக நிலவி வந்தது திருவாதவூரர்புராணம் கூறும் வரலாறு ஒன்று இக்கொள்கையை வற்புறுத்தப் பெருந்துணையாக இருந்தது. "தில்லைவாழ் அந்தனர் ஒருங்குகூடி. தில்லையில் எம்பெருமானைச் செப்பிய தமிழ் மாலையின் பொருளைக் கூறுமாறு மாணிக்கவாசகள வேண்டினர் என்றும், அதற்கு அவர், அருளுக்கு இடமான செம்பொனின் அம்பலம் எய்தி "ஒன்றிய இத் தமிழ்மலைய பொருள் இவர்" என்று உரை செய்து மன்றதனில் கடி மறைந்தனர்" என்றும் திருவாதவூர் புராணம் கூறுகின்றது. வரலாற்றை நினைந்து, "திருவாசகத்திற்கும் ஏனைய திருமுறை களுக்கும் உரை எழுதக் கூடாது அவற்றின் உட்பொருளை அடியவர்களே ஓதி ஓதி உணர்ந்து இன்புற வேண்டும்: உள்ளத்தால் உணர்கின்ற உயர்கருத்தை நாவால் உரைப்பதும் கையால் எழுதுவதும் கூடாது எழுத்தும் சொல்லும் திருமுறை கனின் உட் பொருளை உணர்த்தா" என்று சைவ அடியவர்கள் திருமுறைக்கு உரை எழுதாது விட்டனர்.

இக்கொள்கையால் காலப்போக்கில் திருமுறைகளைப் பொருளுணர்ந்து ஓதும் பழக்கம் குறைந்தது. பொய்யுரையும் போலி விளக்கமும் பெருகின. பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே சைவமும் தமிழும் நன்கு அறிந்த சான்றோர்கள், உரை இயற்றி இருந்தால் எவ்வளவு பெரும் பயன் விளைந்திருக்கும்! "கறந்த பால் கன்னலொடு நெய்கலந்தாற் போல"த் திருமுறையும் உரையும் சேர்ந்து சைவர்களுக்குச் சுவையூட்டி இருக்குமே!

மாணிக்கவாசகர்,

சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்

சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்

செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்

பல்லோரும் ஏத்தப் பணிந்து (சிவபுராணம் 92-95)

என்று கூறியுள்ளார். சிவபெருமானின் திருவடிக்கீழ்ச் சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லவேண்டாமா? பொரு குணர்ந்து சொல்ல வேண்டுமாயின், திருவாசகம் போன்ற அருட் பாடல்களுக்குப் பொருள் எழுதுவது தவறாகுமா?

இத்தகைய எண்ணம் பிற்காலச் சைவ அன்பர்களுக்குத் தோன்றியது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் திரு முறை களுக்கு உரைகாணும் முயற்சி எழுந்தது. அப்போதும் திருவாசகம் போன்ற அருள் நூல்களுக்கு உரை எழுதும் தகுதி தம்மிடம் இல்லை என்றுகூறி ஒதுங்கிவிட்டவர் உண்டு.

டாக்டர் உ.வே.சாமிநாத ஐயரின் நண்பராகிய வித்துவான் தியாகராச செட்டியார் சிறந்த தமிழ்ப் புலவர். அவரது பெரும் புலமையை அறிந்த அக்காலத் திருச்சிராப்பள்ளிக் கலெக்டர் பட்டாபிராமபிள்ளை, செட்டியாரைத் திருவாசகத்திற்கு உரை எழுதுமாறு அடிக்கடி வற்புறுத்தி வந்தார். ஒரு நாள் நண்பகலில் செட்டியாரைக் கலெக்டர் காவிரிப் பாலத்தில் சந்திக்க நேர்ந்தது. மிக ஆவலுடன் கலெக்டர் செட்டியாரை நோக்கி, "திருவாசக உரை எழுதிவிட்டீரா?" என்றார். உடனே செட்டியார் "அதற்கு நானா உரை எழுதுவது? திருவாசகம் எங்கே? நான் எங்கே? அதற்கு உரை எழுதுவதற்கு என் படிப்பு எம்மாத்திரம்?" என்று கூறினார். கலெக்டர் செட்டியாரை உரை எழுதுமாறு மேன்மேலும் வற்புறுத்திப் பேசினார். செட்டியார் கடுங்கோபம் கொண்டு, "இப்படிக் கண்டகண்ட இடங்களில் எல்லாம் நச்சு நச்ச என்று என்னைத் துன்புறுத்துவீர்களா? இனிமேலும் இப்படித் தொந்தரவு செய்வதாய் இருந்தால் இதோ இப்படியே காவிரியில் பொத்தென்று விழுந்து என் பிராணனை விட்டு விடுவேன்!" என்று கூறினார். உடனே கலெக்டர், "ஐயா! ஐயா! வேண்டாமையா!" என்று தடுத்து நிறுத்திப் பணிவாகச் சொன்னார். இவ்வரலாற்றினை டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் எழுதியுள்ளார். (வித்துவான் தியாகராச செட்டியார் (1947) பக்கம் 142-145.)

வைணவமும் சைவமும்

ஆழ்வார்களின் பாடல்களாகிய நாலாயிர திவ்வியப் பிரபந்தத்திற்குப் பழங்கால உரையாசிரியர்கள் விளக்கங்கள் எழுதி அப்பாடல்களுக்குச் சிறப்பு நல்கினர். அவ்விளக்கவுரைகள் சைவ அன்பர்களின் பாராட்டுதலையும் பெற்றுள்ளன. 'இத்தகைய அரிய பெரிய விளக்கவுரைகள் திருமுறைகளுக்கு இல்லையே" என்ற ஏக்கம், சைவர்களிடம் ஏற்பட்டது. அதன் விளைவாக மிகப் பிற்காலத்தில்தான் திருமுறைகளுக்கு உரைகள் எழுதப்பட்டன.

திருமுறைகளில் திருக்கோவையாருக்குத்தான் பழங் காலத்தில் தோன்றிய உரைகள் இரண்டு உள்ளன. ஒன்று இயற்றியவர் பெயர் தெரியாத பழையவுரை மற்றொன்று நல்லறி வுடைய தொல்பேராசான் எனச் சிறப்பிக்கப்பெறும் பேராசிரியர் இயற்றியது. இவ்வுரையும் திருக்கோவையாரை ஓர் இலக்கியமாகக் கருதியே அமைக்கப்பட்டுள்ளது. திருக்கோவையாருக்குப் பேராசிரியர் உரை இயற்றியது இலக்கியப் பணியேயன்றி, சமயப் பணி என்பதற்கு இடமில்லை.

ஆழ்வார்களின் பாடல்களுக்கு வைணவ உரையாசிரியர்கள் வியாக்கியானங்கள் இயற்றிய காலத்தில் சைவப் பெருமக்கள் வேறு துறையில் பணியாற்றினர். சைவ சித்தாந்த நூல்களை இயற்றிச் சாத்திர அறிவை வளர்க்கும் பணியில் முனைந்து நின்றனர். அதன் விளைவாய்ச் சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கு தோன்றின. சாத்திர நூல்கள் தோன்றிய பின்னரும், சைவப் பெருமக்கள் திருமுறைகளுக்கு உரை இயற்ற முயலாமல், சாத்திரநூல்களுக்கே தம் அறிவுத் திறனையும் ஆராய்ச்சி வன்மையையும் காட்டி உரை வகுத்தனர். வைணவ உரையாசிரி யர்களைப் போல் மணிப்பிரவாள நடையை-பேச்சு மொழியை -கையாளாமல் தனித் தமிழ் நடையையும், வடித்த சொற்களையும் இலக்கண வரம்புடைய வாக்கிய அமைப்பையும் தம் உரையில் பயன்படுத்தினர். வடசொற்களுக்கு நேரான தமிழ்ச் சொற்களைத் தேடித் தந்தனர். கலைச் சொற்களைப் படைக்கும்போதும் தமிழ் வேர்ச்சொற்களைக் கொண்டே படைத்துக்கொண்டனர்.

உரையும் விளக்கமும்

திருமுறைகளில் திருவாசகம், திருமந்திரம், பெரிய புராணம் ஆகியவற்றிற்கே பல உரைகளும் விளக்கங்களும் பிற்காலத்தில் தோன்றியுள்ளன. ஏனைய திருமுறைகளில் சில பகுதிகளுக்கும் சில பாடல்களுக்கும் உரையும் விளக்கமும் எழுதப்பட்டுள்ளன. திருமுறைகள் பன்னிரண்டிற்கும் உரை இல்லாததால் ஏற்படும் துன்பத்தைத் தமிழறிஞர் கி.வ. ஜகந்நாதன் பின்வருமாறு உரைக் கின்றார்:

”பன்னிரண்டு திருமுறை முழுவதையும் படித்துப் பொருள் உணர்ந்து இன்புறல் மிகமிக அருமையான காரியம். எல்லாப் பாடல்களுக்கும் பொருள் தெளிவாக விளங்கும் என்று சொல்ல முடியாது. பழங்காலத்தில் திவ்வியப் பிரபந்தத்துக்குச் சில பெரியோர்கள் உரை வகுத்ததுபோல் திருமுறைகளுக்கும் யாரேனும் வகுத்திருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்! இப் போதுள்ள மூலத்தில் எத்தனையோ பிழைகள் இருக்கின்றன. பல பாடல்களுக்கு எத்தனைதான் மண்டையை உடைத்துக் கொண்டாலும் பொருள் விளங்குவதில்லை.” (உள்ளங் கவர் கள்வன் முன்னுரை, பக்கம் 5.)

திருவாசகவுரைகள்

வைணவ உலகில், நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய் மொழி சிறந்து விளங்குவதுபோல, சைவ உலகில் மாணிக்க வாசகர் அருளிச்செய்த திருவாசகம் சிறந்து விளங்குகின்றது. திருவாய்மொழியைப்போல், திருவாசகத்திற்கும் பல உரைகள் தோன்றியுள்ளன.

திருவாசகத்தை, "வாதவூர் எங்கோன் திருவாசகம் எனும் தேன்" என்று சைவ அன்பர்கள் போற்றுவர். திருவாசகம், கல்நெஞ்சத்தையும் கனிவிக்கும் தன்மை வாய்ந்தது. திருவாசகத் திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார்" என்பது பழமொழி. சிவப்பிரகாச சுவாமிகள் நால்வர் நான்மணி மாலையில் (4)

திருவா சகம்இங்கு ஒருகால் ஓதின்,
கருங்கல் மனமும் கரைந்துஉகக் கண்கள்
தொடுமணற் கேணியின் சுரந்துநீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப்பு எய்தி
அன்பர் ஆகுநர் அன்றி
மன்பதை உலகின் மற்றையர் இலரே

என்று திருவாசகத்தின் பெருமையைப் பாடுகின்றார்.

திருவாசகத்திற்குப் பழைய உரைகள் இல்லை என்றாலும் சைவப் புலவர்கள் தாம் இயற்றிய செய்யுள் நூல்களிலும், உரை நூல்களிலும் வாய்ப்பு நேரும்போதெல்லாம் திருவாசகத்தின் சில பாடல்களுக்கு உரையும் விளக்கமும் கூறியுள்ளனர். குமர குருபரர், மாதவச் சிவஞான முனிவர், கச்சியப்ப முனிவர். சிதம்பர முனிவர், மதுரைச் சிவப்பிரகாசர், வெள்ளியம் பலவாணர் ஆகிய சிவனருட் செல்வர்கள் தாம் இயற்றிய செய்யுள்களிலும், உரைகளிலும் திருவாசகப் பாடல்கள் பலவற்றிற்கு உரையும் விளக்கமும் கூறியுள்ளனர்.

பரஞ்சோதி முனிவரும், பெரும்பற்றப்புலியூர் நம்பியும் தம் திருவிளையாடற் புராணங்களில் திருவாசகத்தின் சில பாடல்களின் உட்பொருளை விளக்கியுள்ளனர். கடவுள் மாமுனிவர் திருவாதவூரர் புராணத்திலும், மீனட்சிசுந்தரம் பிள்ளை திருப்பெருந்துறைப் புராணத்திலும் திருவாசகப் பகுதிகள் சிலவற்றிற்கு உரை இயற்றியுள்ளனர்.

திருப்போரூர்ச் சிதம்பர சுவாமிகள் திருவாசகத்திற்கு உரை எழுதத்தொடங்கி நிறுத்திவிட்டார் என்று செவிவழிச் செய்தி ஒன்று கூறுகின்றது.

திருவாசக வியாக்கியானம்

திருவாசக வியாக்கியானம் என்னும் "திருவாசக அனுபூதி உரை" சீர்காழித் தாண்டவராயரால் எழுதப்பட்டது. இவ்வுரை "கலியுகம் 4945, சாலிவாகனம் 1756 இவையிற் செல்லும் செய வருடம் மகர மாசம் பூச நாளில் தில்லை அம்பலவாணர் சந்நிதியில் துவங்கி, அதற்கடுத்த மன்மத வருடம் மார்கழி மாதம் 10உ பன்னிரு திருநாமம் பெற்ற சீகாழியில் எழுதி முற்றுப் பெற்றது" என்று சிறப்புப் பாயிரவுரை கூறுகின்றது. உரைப் பாயிரத்தில் தாண்டவராயர், "இவ்வநுபூதியுரை சம்பிரதாய உபதேசமாகும். திருவாதவூரடிகளாகிய மாணிக்கவாசக சுவாமியார் அருளிச் செய்த இவ்வருள் நூலிற் சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து பொதியாசலமுனி அருளிய கருத்தநுபூதியான சூத்திரங்களை எமது குரவரான குரு சுவாமி அவை விளங்கப் பொழிப்புரை அநுபூதியை அடியேற்கு உபதேசித்தபடி அடியேன்

கருத்தில் உறைவதான திருவருளையும் கலந்து சிவனடியார்கள் அனுக்கிரகப்படி பத வியாக்கியானமும் அவைகட்கு நுட்பமும் விரிவும் எழுதியுள்ளேன்" என்று உரைக்கின்றார். இவர் சைவ சித்தாந்தங்களைக் கற்றுத்தெளிந்து, பக்தியுடன் பொருள் எழுதுகின்றார். நாயன்மார்களின் அருட் பாடல்களிலிருந்தும், சாத்திரம், புராணம், ஆகியவற்றிலிருந்தும் பல மேற்கோள்களைத் தந்து விளக்குகின்றார்

. இவர் உரையில், வைணவ வியாக்கியானங்களின் சாயல் உள்ளது.

இவ்வுரை இரு பகுதிகளாகத் தமிழக அரசால் (1954) வெளியிடப்பட்டுள்ளது.

உரையின் சிறப்பியல்புகள்

இவ்வுரை எளிதில் விளங்கும் வகையில் தெளிவாக அமைந்துள்ளது.

அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்

அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி

ஒன்றனுக்கு ஒன்று நின்றெழில் பகரின் சிறியவாகப் பெரியோன்

நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன

இன்னுழை கதிரின் துன்அணுப் புரையச்

சிறியவாகப் பெரியோன் (1-6)

என்ற அடிகளுக்கு விளக்கம் பின்வருமாறு உள்ளது:

""உண்டை போலும் இருக்கின்ற அண்டத்தினது முடியடிகளை விசாரிக்கும்போது, அளத்தற்கு அரிய தன்மைகளும் வளத்திற் சிறந்த காட்சிகளும் மிகுந்திருக்கிற ஒவ்வோர் அண்டத்திற்குத் தொகையளவு சொல்லுமிடத்து நூறு கோடி யோசனை அளவாக இருக்கும். அப்படி அளவில்லாத அண்டங்களும் பல உண்டு. அவ்வண்டங்கள் எல்லாம் சிவனது பெருமைக்கும் அண்டங்களின் பெருமைக்கும் அளவைப் பிரமாணம் சொல்லுமிடத்து ஓர் அண்டத்தின், ஓர் உலகத்தின், ஒரு தேசத்தின், ஒரு நாட்டின், ஒரு வீட்டில், ஓர் ஓட்டையின்கண் சூரிய கிரணம் ஓடும்போது அதற்குள்ளே கண்ணுக்குத் தெரிகிற பல அணுக்கள் கூட்டத்தில் ஓர் அணு என்று சொல்லலாம்."

திருக்கோத்தும்பி என்னும் பகுதியில், தும்பி பறக்கும் விளையாட்டைப் பற்றி, "(தேன்) எனக்கும் கிடைத்தது. உனக்கும் கிடைத்தது என்று ஒருவர்க்கு ஒருவர் மடி பிடித்துக்காண வண்டு சுழல்கிறதுபோலச் சுற்றும் ஆனந்த விளையாட்டு" என்று கூறு கின்றார்.

மற்ற உரைகள்

சுந்தரமாணிக்க யோகீசுவரர்: இவர் திருவாசகத்திற்கு இயற்றிய உரை அட்டாங்கயோக முறைகளை விளக்கும் நிலையில் உள்ளது. இவர் உரை, அன்பு நூலாகிய திருவாசகத்தை யோகாநுபவமாக மாற்றி விட்டது என்பர்.

வாசுதேவ முதலியார், இராமசாமி முதலியார் (1397) முருகேச முதலியார் ஆகியோர் உரைகள் பாடல்களுக்குப் பொருள் கூறும் அளவிலேயே உள்ளன.

சிவ அருணகிரி முதலியார்: இவர் எல்லாப் பாடல்களுக்கும் தேவையான அளவு குறிப்புரைகளும், திருவாசக வி'ய சூசளம் அறுபது என்ற தலைப்பில் சில பகுதிகளுக்கு வேதாகம உபநிடதப் பிரமாணங்களுடன் தடை விடை விளக்கங்களும் தந்திருக்கிறார். இந்தவுரை, மரபிற்கு மிக ஏற்றதாய் அனுபவத்திற்கு வழிகாட்டி யாய் உள்ளது.

கா. சுப்பிரமணிய பிள்ளை: இவர் உரை பொழிப்புரையாக உள்ளது. மிகத் தெளிவாகச் சொற்பொருளை உணர்த்துகின்றது. யாரும் எளிதில் உணர உதவுகின்றது: சிறந்த வழிகாட்டியாய் உள்ளது. இவ்வுரையில் ஆசிரியரின் தமிழ்ப்பற்றும் சித்தாந்தச் செந்நெறியின் கீர்த்தியும் தொட்ட இடம் எல்லாம் பொலிந்து தோன்றுகின்றன.

மறைமலையடிகள்: வடமொழி, தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் ஆழ்ந்த புலமைமிக்க இவர், திருவாசகத்தில் முதல் நான்கு பாடல்களுக்குமட்டும் விரிவுரை மிகச் சீரிய முறையில் எழுதியுள்ளார். "போற்றி" என்று சொல்லுக்கு இவர் செய்யும் இலக்கண ஆராய்ச்சி கற்று மகிழத்தக்கது. வடமொழியிலும் தமிழிலும் உள்ள சைவ நூற் பிரமாணங்களோடு திருவாசகத்தின் உண்மைப்பொருளை உணர்வதற்கு உறுதுணை செய்கின்றது இவரது உரை.

பண்டிதமணி: வடமொழியும் தமிழும் வல்ல இவர், திருச்சதகம், நீத்தல் விண்ணப்பம், திருவெம்பாவை ஆகிய மூன்றிற்கு மட்டும் உரை இயற்றியுள்ளார். இவர் உரை உள்ளுணர்விலிருந்து பிறந்து, அனுபவத்தை வெளிப்படுத்து கின்றது. உரையில் சொல்நயம், சைவ சித்தாந்தக் கருத்து. வரலாற்று நுணுக்கம் ஆகியவை மிளிர்கின்றன. இலக்கியச்சுவை தோன்ற நயம்பட எழுதிச் செல்வது இவரது இயல்பு. நீத்தல் விண்ணப்பத்தில் வரும்,

இருதலைக் கொள்ளியின் உள் எறும்பு ஒத்து (9)

என்ற உவமையினைப் பின்வருமாறு நயமாக விளக்குகின்றார்.

"கொள்ளி நடுவண், கொள்ளிமேல் என்னாது கொள்ளியுள் என்றது ஒரு நயம். கொள்ளி நடுவிடத்துள்ள எறும்பு, அங்கும் இங்கும் சென்று போக்குவழி பெறாமல் உழன்று அக் கொள்ளிக்குப் பற்றுக்கோடாக உள்ளது ஒன்றைத் தானும்பற்றி ஒருவாறு உய்யவும் கூடும். அக்கொள்ளி நிலத்தில் கிடந்தால் அவ் ஏறும்பும் நிலத்தில் இறங்கலாம். அ.'.து ஒன்றில் சார்த்தப்பட்டு இருந்தால், அச் சார்ச்சிப் பொருளைத் தானும் பற்றி உய்யலாம். அக் கொள்ளி உள் துளையுடைய மூங்கிலாக இருக்க, முன்னரே அதன் துளையுள் ஓர் எறும்பு நுழைந்திருக்குமாயின், இருபுறமும் நெருப்பு எரியுங்கால் அதனுள்பட்ட அவ் எறும்புக்கு எவ்வாற்றானும் உய்யும் நெறி இன்று என்பது கண்கூடாகக் காணத்தக்கது. இந்நயம் கருதியே கொள்ளி மேல், நடு என்னாது, இருதலைக் கொள்ளியின் "உள் எறும்பு ஒத்து" என்றார் என்க."

நவநீதகிரு'ண பாரதியார்: இவர் உரை ஆராய்ச்சிப் பேருரையாகும். இவரது அகன்ற புலமையையும் ஆழ்ந்த அனுபவத்தையும் உரை வெளிப்படுத்துகின்றது. இவர், திருவாசகம் முழுதும் வெளிப்படையாகவும், குறிப்பாகவும் அகப் பொருள் நுதலி வருவதாகக் கருதி உரை

கண்டுள்ளார்.

சிவபுராணம் - திருவாசகத்தின் தற்சிறப்புப் பாயிரம் திருச்சதகம் -நுதலிய பொருள் நீத்தல் விண்ணப்பம் - நுதலிய பொருள் மேல்வருவன எல்லாம் காதல் பாவனை என்பது இவர் தரும் குறிப்பு.

இவர் உரை, கருத்து பொழிப்பு விசேடம் ஆகியவற்றுடன் சிறப்பாக அமைந்துள்ளது.

தண்டபாணிதேசிகர்: இவர் உரை 1964ஆம் ஆண்டில் வெளிவந்தது. பலவுரைகளின் துணைகொண்டு, சிவஞான முனிவர் போன்றார் தந்த விளக்கங்களை ஊன்றுகோலாகக் கொண்டு தேவையான விளக்கக் குறிப்புகளுடன் இவர் அமைந்துள்ளது. உரை

திருமந்திரவுரைகள்

திருமூலர் இயற்றிய திருமந்திரத்திற்குத் திருமந்திரமாலை என்ற பெயரும் உண்டு. இதனால், திருமந்திரம் அந்தாதி நூலாக இருக்கலாம் என்பர். இந்நூலைச் சைவ அன்பர்கள் தோத்திர மாகவும் சாத்திரமாகவும் கருதிப் பயில்கின்றனர்.

திருமந்திரத்திற்குத் திரிசிரபுரம் அ. சிவானந்த சாகர யோகீசுவரர் இயற்றிய உரை ஒன்று உண்டு. யாழ்ப்பாணம் விசுவநாதம் பிள்ளை 1912 ஆம் ஆண்டில் திருமந்திரத்திற்குக் குறிப்புரை எழுதி வெளியிட்டார். 1913ஆம் ஆண்டு சேற்றூர் இரா.

உரையாசிரியர்கள்

சுப்பிரமணியக் கவிராயர் நூறு பாடல்களுக்கு உரை எழுதி வெளியிட்டார். இலங்கையில் பரமேசுவரக் கல்லூரியில் ஆசிரியராக இருந்த நவநீத கிரு'ண பாரதியார் (1889-1956) திருமந்திரத்திற்கு உரை இயற்றினார். இவர்களேயன்றிச் சேலம் சுந்தர முதலியார், (20-நூற்), வை,வே ரமண சாஸ்திரியார் ஆகியோரும் உரை இயற்றியுள்ளனர்.

பெரியபுராணவுரைகள்

மீனாட்சிசுந்தரம் பிள்ளை, சேக்கிழார் பிள்ளைத்தமிழில் "பக்திச் சுவை நன் சொட்டச் சொட்டப் பாடிய கவிலல என்று சேக்கிழாரைப் போற்றுகின்றார். சிவனடியார்களின் பெருமையைப் பெரியபுராணத்தில் பாடி, செல்வர்களின் புகழைப் பரப்பியவர் சேக்கிழார். சிவனருட்

பெரியபுராணத்திற்கு அண்மைக் காலத்தில்தான் உரைகள் தோன்றின. தொழுவூர் வேலாயுத முதலியார் (1832-1889) பெரியபுராண வசனம் எழுதி அந்நூலை மக்களிடையே பரப்பிப் பக்திப்பயிர் வளர்த்தார். ஆறுமுக நாவலர் பெரியபுராண வசனம், பெரியபுராண சூசனம் இரண்டும் இயற்றினார். காஞ்சிபுரம் சபாபதி முதலியார் (?-1870), ஆலால சுந்தரம் பிள்ளை (1853-1923 ஆகியோர் பெரியபுராணத்திற்கு உரை இயற்றினர். திரு. வி. கல்யாண சுந்தரனார் பெரியபுராணக் குறிப்புரை எழுதினார். அவ்வுரையின் இரண்டாம் பதிப்பு, முதற் பதிப்பைவிடத் திருத்தம் பெற்றது. அதனை அவரே தம் வாழ்க்கைக் குறிப்புக்கள் என்ற நூலில் (பக்கம் - 142) "பெரிய புராணம் இரண்டாம் பதிப்பில் புரட்சி நிகழ்ந்துள்ளது. உரிமை, புரட்சியை நிகழ்த்தி நிலைமையைச் சீர் செய்வது இயற்கையே. என்ன புரட்சி? ஜைனத்தைப் பற்றிச்

சைவ உலகில் சில கறைகள் படிந்தன. அக் கறைகள் உரையால் களையப்பட்டன. அக் களைவே புரட்சியாயிற்று" என்று குறிப்பிடுகின்றார்.

சிவக் கவிமணி சி.கே. சுப்பிரமணிய முதலியார் பெரிய புராணத்திற்கு மிக விரிவாக உரை எழுதியுள்ளார். இவர் உரை காலத்தை வென்று நிலைபெறும். பல வகையான அரிய விளக்கங்களும், நாயன்மார்கள் தல யாத்திரை செய்த வழிகளை விளக்கும் தரைப்படங்களும் (ஆயிள) உரையில் இடம் பெற்றுள்ளன.

இவ்வுரை இயற்றும் பணியை இவர் தம் வாழ்வின் தலையாய பெரும்பணியாகக் கருதி உழைத்து, தமிழுக்கும் சைவத்திற்கும் அருந் தொண்டாற்றியுள்ளார்.

3. சைவ சித்தாந்த உரைகள்

வேதாந்தம் என்னும் மரத்தினில் பழுத்த கனியின் சாரமே சைவ சித்தாந்தம் என்று போற்றுகின்றார் குமர குருபரர்:

வேதம் என்னும் பாதபம் வளர்த்னை!

பாதபம் அதனில் படுபயன் பலவே- அவற்றுள்

இலைகொண்டு வந்தனர் பலரே இலைஒரீஇத்

தளிர்கொண்டு வந்தனர் பலரே தளிர்ஒரீஇ

அரும்பொடு மலர்பிஞ்சு அருங்காய் என்றிவை

விரும்பினர் கொண்டு வந்தனர் பலரே

அவ்ஆறு உறுப்பும் இவ்வாறு பயப்ப,

ஒரும் வேதாந்தம் என்று உச்சியிற் பழுத்த

ஆரா இன்ப அருங்கனி பிழிந்து

சாரம் கொண்ட சைவ சித்தாந்தத்

தேனமுது அருந்தினர் சிலரே. - பண்டார மும்மணிக்கோவை

சைவ சித்தாந்த நூல்கள் பதினான்கு. அவற்றின் பெயர்களை,

உந்தி களிறோ டுயர்போதம் சித்தியார்

பிந்திருபா உண்மைப் பிரகாசம்-வந்தஅருள்

பண்புவினா போற்றிகொடி பாசமிலா நெஞ்சுவிடு

உண்மைநெறி சங்கற்ப முற்று

என்ற வெண்பா உரைக்கின்றது. 1. திருவுந்தியார் 2. திருக்களிற்றுப் பாடியார். 3. சிவஞான போதம் 4. சிவஞான சித்தியார். 5. இருபா இருப.்.து. 6. உண்மை விளக்கம். 7. சிவப்பிரகாசம், 8. திருவருட்பயன். 9. வினா வெண்பா. 10. போற்றிப் ப.்.றொடை. 11

கொடிக்கவி. 12. நெஞ்சுவிடு தூது. 13. உண்மை நெறி விளக்கம். 14. சங்கற்ப நிராகரணம் ஆகிய பதினான்கு நூல்களைச் சைவ சமயச் சான்றோர் ஐவர் இயற்றினர். உய்யவந்தார். மெய்கண்டார், அருள் நந்தியார், மன வாசகங்கடந்தார், உமாபதி சிவனார் ஆகிய ஐவரும் மேலே கூறிய பதினான்கு நூல்களையும் இயற்றினர். இவர்களுள் மெய்கண்டாரின் மாணவர் மனவாசகங் கடந்தார். அருள் நந்தியாரின் மாணவர் உமாபதி சிவனார்.

ஆசிரியரும் நூல்களும்

1.உய்யவந்தார் -1. திருவுந்தியார் 2. திருக்களிற்றுப்பாடியார்.

2. மெய்கண்டதேவர்-3. சிவஞான போதம்.

3. அருள் நந்தியார் -4. சிவஞான சித்தியார் 5. இருபா இருப.்.து

4. மனவாசகங் கடந்தார் -6, உண்மை விளக்கம்.

5. உமாபதி சிவனார்-7. சிவப்பிரகாசம் 8. திருவருட்பயன் 9. வினா வெண்பா 10. போற்றிப் ப.்.றொடை 11. கொடிக்கவி 12. நெஞ்சு விடு தூது 13. உண்மை நெறி விளக்கம் 14. சங்கற்ப நிராகரணம்

சைவ சித்தாந்த நூல்களுள் சிவஞான போதமும், சிவஞான சித்தியார். சிவப்பிரகாசம் ஆகிய மூன்று நூல்களுக்கும் மிகுதி யான உரைகள் தோன்றியுள்ளன. அவற்றை இங்கே விரிவாகத் காண்போம். .

சிவஞான போதம்

தமிழ்மொழியிலுள்ள சைவசித்தாந்த நூல்கள் பதினான் கனுள் சிவஞான போதம் தலைமையும் சிறப்பும் வாய்ந்தது. இதனை இயற்றியவர் திருவெண்ணெய் நல்லூர் மெய்கண்ட தேவ நாயனார். இவரது காலம் பதின் மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதியாகும்.

சிவஞான போதத்தினுள் பன்னிரண்டு சூத்திரங்கள் பன்னிரண்டு சூத்திரங்களும் நாற்பது வரிகளை உள்ளன. ப யுடையவை. இந்நூலில், பன்னிரண்டு சூத்திரங்களையும் ஏதுக்கள் கொண்டு, விளக்கி உரைக்கும் முப்பத்தொன்பது அதிகரணங்கள் உள்ளன் எடுத்துக்காட்டுகளாக அமைந்த சி வெண்பாக்கள் உள்ளன.

பன்னிரண்டு சூத்திரங்களில் முதல்ஆறும் பொது அதிகாரம் என்றும், பின் ஆறும் உண்மை அதிகாரம் என்றும் பெயர் பெறும். பொது அதிகாரத்தில் உள்ள முதல் மூன்று சூத்திரங்கள் பிரமாண இயலிலும் பின் மூன்றும் இலக்கண இயலிலும் அடங்கும். உண்மை அதிகாரத்தில் உள்ள முதல் மூன்று சூத்திரங்கள் சாத இயலிலும், பின் மூன்றும் பயனியலிலும் அடங்கும்.

பன்னிரண்டு சூத்திரங்களும் கூறும் பொருளை இனிக்கு காண்போம்:

முதற் சூத்திரம் பதி (இறைவன்) உண்மையை உணர்த்து கின்றது. இரண்டாம் சூத்திரம் பாச உண்மையையும், மூன்றாம் சூத்திரம் பசு (உயிர்) உண்மையையும் கூறுகின்றது. நான்கு ஐந்து ஆறு சூத்திரங்கள் முறையே பசு பாச பதி இலக்கணத்தை

விளக்குகின்றன. ஏழாம் சூத்திரம் முத்திபெறுவதற்கு ஏதுவாகிய உயிரின் சிறப்பிலக்கணமும், எட்டாம் சூத்திரம் சிவஞானத்தை உயிர் உணரும் முறையையும், ஒன்பதாம் சூத்திரம் உயிர் பாச ஞானத்திற்கு மீளாதவாறு அதனைப் புனிதமாக்கும் முறையையும் சனுகின்றன. பத்தாம் சூத்திரம் பாசநீக்கம் பண்ணும் முறையை உணர்த்துகின்றது. பதினொன்றாம் சூத்திரம் உயிரானது அயரா அன்பால் இறைவன் திருவடியாகிய சிவானந்த அனுபவம் எய்துவதை உணர்த்துகின்றது. பன்னிரண்டாம் சூத்திரம் சீவன் முக்தர் நிலையைக் கூறுகின்றது.

உரைகள்: சிவஞானபோதத்திற்குச் சிவஞான முனிவர் சிற்றுரையும் பேருரையும் இயற்றியுள்ளார். பேருரை, பாடியம் என்று போற்றப்படுகின்றது. இந் நூலுக்குப் பதினேழாம் நூற்றாண்டில், திருநெல்வேலியில் வாழ்ந்த பாண்டிப் பெருமாள் உரை இயற்றியுள்ளார்.

சிவஞான போதச் சூத்திரக் கருத்து என்னும் நூல் பன்னிரண்டு சூத்திரக் கருத்துக்களையும் திரட்டிக் கூறுகின்றது.

சிவஞான போத உதாரண வெண்பா என்னும் நூல், சிவஞான போதத்தின் சூத்திரப் பொருள்களுக்கு உதாரணமாக எழுந்தது.

இருபதாம் நூற்றாண்டில் காரைக்குடி சொக்கலிங்கையா, சிவஞானபோத லகுவசனம் இயற்றியுள்ளார்.

மெய்கண்டதேவர்

சிவஞான போதத்திற்கு மெய்கண்டதேவர் எழுதிய வார்த்திகப் பொழிப்பில், அவர் காலத்தில் வழங்கிய பல பேச்சு மொழிச் சொற்கள் இடம் பெற்றுள்ளன. எளிய மக்களும் சைவ சமயக் கருத்துக்களைப் புரிந்துகொள்ள வேண்டும் என்று அவர் அவ்வாறு எழுதியிருக்கலாம்.

”அத்துவிதம் என்ற சொல்லானே ஏகம் என்னில் ஏகம் என்று சுட்டுவது உண்மையின் அத்துவிதம் என்ற சொல்லே அந்நிய நாத்தியை உணர்த்தும் ஆயிட்டு” என்பது போன்ற இடங்களில் பேச்சு மொழியின் இயல்பைக் காணலாம். ஆயிட்டு என்ற சொல் ஆயிற்று என்பதன் திரிபாகும். இச் சொல் அக் காலத்துப் பேச்சு வழக்கில் இருந்திருக்கலாம்.

சிவஞான சித்தியார்

இதனை இயற்றிய அருள் நந்தி சிவாச்சாரியார் பதின்மூன்றாம் சிவஞான சித்தியார், சிவஞான போதத்தின் வழிநூல். நூற்றாண்டினர். பிரிவுகளை உடையது. “பார்விரித்த நூல் எல்லாம் பார்த்தறியச் சிவஞான சித்தியார், பரபக்கம் சுபக்கம் என இரு பிரிவுகளை உடையது.“பார்விரித்த நூல் எல்லாம் பார்த்தறியச் சித்தியிலோர் விருத்தப் பாதிபோதும்“ என்று இதன் புகழைக் கூறுவர்.

உரைகள்: சிவஞான சித்தியார் ஞானாவரணம் என்ற ஒரு நூல், செய்யுள் வடிவில் சித்தியாருக்கு உரையாய்த் தோன்றியது. அந்த உரைக்கு உரையாக, பதினேழாம் நூற்றாண்டில் வெள்ளியம் பலத்தம்பிரான் சிவ ஞான சித்தியார் ஞானாவரணவுரை என்ற பெயரில் ஓர் உரை நூல் இயற்றினார். பதினாறாம் நூற்றாண்டில் சிவாக்கிரயோகிகள்

சிவஞான சித்தியார் விருத்தியுரை எழுதினார். பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்த வரும் ஆறுமுக நாவலருக்கு "நாவலர்" என்ற பட்டம் வழங்கியவருமான சுப்பிரமணிய தேசிகர் சிவஞான சித்தி யாருக்குப் பதவுரை இயற்றினார்.

சித்தியாரின் முழுமைக்கும் உரை எழுதாமல் ஏதேனும் ஒரு பகுதிக்கு உரை கண்டவர்களும் உண்டு. அவ்வுரைகளைக் காண்போம்:

பரபக்க உரைகள்: பதினாறாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருவொற்றியூர் ஞானப்பிரகாசர், தத்துவப் பிரகாசர், வேலப்ப (வேலுப்) பண்டாரம் ஆகியோர் பரபக்கத்திற்கு உரை இயற்றினர்.

சுபக்க உரைகள்: பதினாறாம் நூற்றாண்டில் வாழ்ந்த

மறைஞான தேசிகர், நிரம்ப அழகிய தேசிகர், ஆறுமுக சுவாமிகள், பதினேழாம் நூற்றாண்டினரான (திருவண்ணாமலை ஆதீனம் ஞானப்பிரகாச (முனிவர்) தேசிகர், பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த சிவஞான முனிவர் ஆகியோர் சுபக்கத்திற்கு உரை எழுதியுள்ளனர்.

சிவஞான சித்தியாருக்கு முதன் முதலில் உரை கண்டவர் நிரம்ப அழகிய தேசிகர். அவரைப் பின்பற்றி, சிவக்கொழுந்து ஆசாரியர் உரை இயற்றினார். மறைஞான தேசிகர் சித்தியார் உரைப்பாயிரமாக,

ஓராது எழுதினேன் ஆயினும் ஒண்பொருளை
ஆராய்ந்து கொள்க அறிவுடையார்- சீராய்ந்து
குற்றங் களைந்து குறைபெய்து வாசித்தல்
கற்றறிந்த மாந்தர் கடன்

என்ற வெண்பாவை இயற்றியுள்ளார்.

சிவப்பிரகாச உரைகள்:

சிவப்பிரகாசத்திற்குப் பலர் உரை இயற்றியுள்ளனர். அவர்களுடைய காலம் வரலாறு ஆகியவற்றை அறிய இயல் வில்லை.

பதினைந்தாம் நூற்றாண்டில் சிற்றம்பல நாடிகள் சிவப்பிரகாசக் கருத்துரைச் சூத்திரம் என்ற நூலை இயற்றினார். திருவாவடுதுறைச் சங்கரமூர்த்தி தேசிகரின் சீடராகிய நல்லசிவ தேவர், சிவப்பிரகாசச் சிந்தனை உரை எழுதினார். மதுரைச் சிவப்பிரகாசர், சத்திய ஞானப் பிரகாசர், சிதம்பரநாத முனிவர் ஆகியோர்களும் உரைகண்டுள்ளனர்.

சைவசித்தாந்த நூல்களுள் ஏனையவற்றிற்கும் உரை உண்டு. திருக்களிற்றுப் பாடியார்க்குச் சிவப்பிரகாசரும், இருபா இருப.்துக்குத் திருவாவடுதுறைமடத்து நமச்சிவாயத் தம்பிரானும் (15 நூற்), திருவருட்பயனுக்கு நிரம்ப அழகிய தேசிகரும், சங்கற்ப நிராகரணத்திற்குத் திருவொற்றியூர் ஞானப்பிரகாசரும் (16 நூற்) உரை இயற்றியுள்ளனர். உண்மை விளக்கத்திற்குப் பழையவுரை ஒன்றும் உள்ளது.

4.சைவசாத்திர உரைகள்

சைவ சாத்திர நூல்களுக்குக் காலந்தோறும் சைவ நூல்வல்ல அறிஞர்கள் உரை கண்டுள்ளனர்.

பௌட்கர ஆகமத்திற்கு உமாபதி சிவனார் (14-நூற்) உரை இயற்றியுள்ளார். குகை நமசிவாயர் இயற்றிய நிட்டானுபூதி என்ற வீரசைவ சமய நூலுக்கு முத்து கிரு'ணபிரமம் உரை எழுதியுள்ளார். பதினாறாம் நூற்றாண்டில் சிதம்பரத்தில் வாழ்ந்த ஆதிசைவராகிய அகோரசிவாசாரியார், போசதேவரின் தத்துவப் பிரகாசிகைக்கும் மிருகேந்திர ஆகமத்திற்கும் உரை கண்டார். தாண்டவராய சுவாமிகள் (17-நூற்.) இயற்றிய கைவல்ய நீதம் என்ற நூலுக்கு அருணாசல சுவாமிகள் உரை செய்துள்ளார்.

கீழே சில ஆசிரியர் பெயரும் அவர்கள் இயற்றியுள்ள உரைகளும் தரப்படுகின்றன:

ஒழிவில் ஒடுக்கம்-(252 வெண்பாக்கள்) இயற்றியவர் கண்ணுடைய வள்ளல் (18 நூற்) உரையாசிரியர்-திருப்போரூர்ச் சிதம்பர சுவாமிகள்.

சின்மய தீபிகை: ஆசிரியர்- முத்தைய சுவாமி.

உரை இயற்றியவர்: இராமானந்தயோகி (19-நூற்) வேதாந்த சூடாமணி சித்தாந்தவுரை-சர்க்கரைப் புலவர் (1645-70).

சோண சைலமாலை-இயற்றியவர்: துறைமங்கலம் சிவப்பிரகாசர், உரையாசிரியர்: கொ. இராமலிங்கத் தம்பிரான் (19-)

சிதம்பர சுவாமிகள் (18 ஆம் நூற்றாண்டு) சாந்தலிங்க சுவாமிகளின் மாணவர், உரை இயற்றிய நூல்கள்: வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம், அவிரோதவுந்தியார். கொலை மறுத்தல், நெஞ்சுவிடு தூது.

திருக்கருவைப் பதிற்றுப் பத்தந்தாதி-ஆசிரியர்: அதி வீரராம பாண்டியன். உரை இயற்றியவர்: நாகை சொ தண்டபாணிப்பிள்ளை.

திருச்செந்தில் நிரொட்டக அந்தாதி, இயற்றியவர்: துறை மங்கலம் சிவப்பிரகாசர், உரையாசிரியர்: ஆறுமுக நாவலர்.

ஞானாமிர்தம் - பழையவுரை

ஞானாமிர்தம் என்ற நூலை வாசீகமுனிவர் இயற்றினார். இந்த நூலிலிருந்து பல பகுதிகளைச் சிவஞான முனிவா சிவஞான பாடியத்தில் மேற்கோள் காட்டிப் போற்றுகின்றார்.

ஞானாமிர்தத்திற்குப் பழையவுரை ஒன்று உள்ளது. அதன் ஆசிரியர் ஊர்பேர் எதுவும் தெரியவில்லை.

உரையின் இயல்பு

ஒவ்வொரு பாட்டுரையின் இறுதியிலும் இலக்கணக் குறிப்பு எழுதுவது இவரது வழக்கமாகும். இக் குறிப்புகள் சில ஏடுகளில் மிகுதியாக உள்ளன: சிலவற்றில் குறைவாக

உள்ளன. இக் குறிப்பு களும் பெரும்பாலும் அசைநிலைகளை விளக்குகின்றன. சிவ இடங்களில் அருஞ்சொற்களுக்குப் பொருள் கூறுகின்றார்.

இவ்வுரையாசிரியர் நடை இலக்கியவளம் அற்றது பாட்டின் பொருளை, சிறிது கற்றவரும் எளிதில் அறிந்து கொள்ளும் வகையில் தெளிவாக உள்ளது.

மேற்கோள் முதலியன இவ்வுரையில் இல்லை. ஆகமச கருத்துக்களும் இடம்பெறவில்லை. "பாட்டின் முறுக்கை அவிழ்த்துக் கண்ணழித்துப் பொருள்காட்டும் திட்பமும் தெளிவும் நம் உள்ளத்தைக் கவர்ந்து கொள்கின்றன."

காலம்

சிவஞான முனிவர் மாபாடியத்தில் இந்தப் பழைய வுரையைச் சில இடங்களில் மறுப்பதால் இவ்வுரை சிவஞா முனிவர்க்கு முற்பட்டது என்பது விளங்கும்.

1. திருக்கோவையார் பழையவுரை

திருக்கோவையாரின், பேராசிரியர் உரைக்கு முற்பட்ட உரை ஒன்று உள்ளது. அவ்வுரை இயற்றியவர் பெயர் தெரியவில்லை. அவ்வுரைக்குப் பழையவுரை என்று பெயரிட்டு, தஞ்சை சரசுவதி மகால் நூல்நிலையத்தார் வெளியிட்டுள்ளார். (1951).

திருக்கோவையாருக்குப் பேராசிரியர் உரை எழுத இவ்வுரை பெரிதும் பயன்பட்டுள்ளது. இப் பழையவுரையை அவர் "வேறுரை" என்று ஆங்காங்கே குறிப்பிடுகின்றார். பழையவுரை கொண்ட பாடங்களைத் தருகின்றார்.

பேராசிரியர் உரையில், பாடலுக்குப்பின் கொளு உள்ளது பழையவுரையில் பாடலுக்கு முன் கொளு அமைந்துள்ளது.

இவ்வுரையில் வடமொழிச் சொற்கள் மிகுதியாக இடம் பெற்றுள்ளன. நிமிடம் என்ற சொல் இவ்வுரையில் இடம் பெற்றுள்ளது. தாழேன் (269) என்பதற்கு, "நிமிடம் அளவும் தாழ்ந்து அங்கே உயிர் கொண்டு இரேன்" என்று பொருள் கூறுகின்றார்.

இறைவன் என்ற சொல்லுக்கு முதலியார் (6, 29, 44, 80, 82, 121) என்று பொருள் கூறுகின்றார்.

சில சொற்களுக்கு இவ்வுரை தரும் பொருள் போற்றத் தக்கவை. அவற்றுள் சிலவற்றைக் காண்போம்:

தென்புலியூர் (19) தெற்குத் திருப்பதியாக உள்ள பெரும்பற்றப்புலியூர்.

சேய் (370) சுப்பிரமணியன்.

சுழியல் (377) திருவலஞ்சுழி.

சிந்தாமணி (12,400) சிந்தாமணி என்கின்ற வள்ளல்.

பாடலின் பொருள் நன்கு விளங்கும்பொருட்டு, சில சொற்களை வருவித்து இவ்வுரையாசிரியர் எழுதுகின்றார். ஞரசைபந

மீண்டார் எனஉவந் தேன்கண்டு நும்மைஇம் மேதகவே
பூண்டார் இருவர்முன் போயினரே புலியூ ரெனைநின்று
ஆண்டான் அருவரை யாளிஅன் னானைக்கண் டேனயலே
தூண்டா விளக்கனை யாய்என்னை யோஅன்னை சொல்லியதே (244)

என்ற பாடல், மூவர் சேர்ந்து உரையாடுவதை உணர்த்துகின்றது பாட்டில் மூவர் பெயரும் பேச்சும் எளிதில் விளங்கும் வகையில் அமையவில்லை. பழையவுரை இப்பாடலின் பொருளை நண்கு விளக்கி, சில சொற்களை வருவித்து விளக்குகின்றது.

"உங்களைக் கண்டு. எம்மகளும் அவளுடை நாயகனும் மீண்டார்கள்" என்று பிரியப்பட்டிருந்தேன் இம்மெய்ப்பாடு தக்க ஒழுக்கத்தினைப் பூண்டவர்கள் இரண்டு பேர் முன்னே போனார்களோ?" என்று செவிலி கேட்ப, எதிரே வருகிற நாயகள் சொல்லுவான் "புலியூரில் நின்று என்னை அடிமை கொண்டவன் அவனுடைய அரியமலையில் சிங்கம் போன்றவனைக் கண்டேன். அவனுக்கு அயலாக "தூண்டப்படாத விளக்கினை ஒப்பாய் அன்னை சொன்ன வடிவு எத்தன்மைத்து?"

2. திருக்கோவையார் பேராசிரியர் உரை

"தேனூறு செஞ்சொல் திருக்கோவை என்கின்ற நானூறு பாடல்களுக்கும் பேராசிரியர் உரை இயற்றியுள்ளார். திருக்கோவையைச் சிறந்ததோர் இலக்கியமாகப் பரப்பிய பெருமை பேராசிரியர்க்கு உண்டு. அந்நூல் பலவேறு நோக்கத்துடன், பல ஆண்டுகளாகக் கற்கப்பட்டு வருகின்றது.

ஆரணம் காண்என்பர் அந்தணர்
யோகியர் ஆகமத்தின்
காரணம் காண்என்பர் காமுகர்
காமநன் னூல்அதுஎன்பர்
ஏரணம் காண்என்பர் எண்ணர்
எழுத்துஎன்பர் இன்புலவோர்
சீரணங் காயசிற் றம்பலக்
கோவையைச் செப்பிடினே

என்ற பாடல் இங்கே நினைக்கத்தக்கதாகும்.

திருகோவையாருக்கு உரை எழுதியவர் யார் என்பது பற்றி இயற்றிய பேராசிரியரே அறிஞர்களிடையே கருத்து வேறுபாடு நிலவி வருகின்றது. தொல்காப்பியத்திற்கு உரை திருக்கோவையாருக்கும் உரை இயற்றினார் என்பது டாக்டர் மு.வ. அவர்களின் கருத்தாகும் (கலைக் களஞ்சியம் தொகுதி 5 பக்கம் 485). இரு பெரும் நூல்களுக்கும் உரை

இயற்றியவர்கள் வேறு வேறானவர்கள் என்றும் சிலர் கூறுகின்றனர்.

திருக்கோவையாரை உரையுடன் பதிப்பித்த ஆறுமுக நாவலர் அதன் உரையாசிரியரை நச்சினார்க்கினியர் என்று குறிப்பிட்டார். தஞ்சைவாணன் கோவைக்கு உரை எழுதிய சொக்கப்ப நாவலர் திருக்கோவையாரின் உரையாசிரியர் சேனாவரையர் என்று குறிப்பிட்டுள்ளார். பிரயோக விவேக நூலாசிரியரான சுப்பிரமணிய தீட்சதரும், பரிமேலழகர் நுண்பொருள்மாலை இயற்றிய இரத்தின கவிராயரும் திருக்கோவையாரின் உரையாசிரியர் பேராசிரியரே என்று கூறுகின்றனர்.

"திருக்கோவையாரின் உரையாசிரியர், பேராசிரியரே" என்ற கொள்கையே அறிஞர்களிடம் நிலவி வருகின்றது.

காலம்

இவர் பரிமேலழகருக்கு முற்பட்டவராய் இருக்கலாம். பல இடங்களில் பேராசிரியர் உரையின் சாயல் பரிமேலழகர் உரையில் தெரிகின்றது.

வித்தகம் என்ற சொல்லுக்குச் சதுரப்பாடு என்று பேராசிரியர் பொருள் கூறியுள்ளார் (109). இப்பொருளையே பரிமேலழகரும் "நத்தம்போல்" என்ற குறளின் உரையில் (235) மேற்கொண்டுள்ளார்.

மேற்கோள் சூத்திரங்கள்

திருக்கோவையார் உரையில் பேராசிரியர் அகப்பொருள் துறைகளை விளக்கக் கொளுக்களை அமைத்துத் தருகின்றார். பல பெரிய அகப்பொருள் சூத்திரங்களை மேற்கோள் காட்டுகின்றார். இவற்றை எல்லாம் ஒன்று சேர்த்து அகப்பொருளை விளக்கும் இலக்கணநூல் ஒன்றை உருவாக்கலாம். அக்கொளுக்கள், எதுகை மோனை நயம் வாய்ந்து ஓசை இன்பத்தோடு அமைந்துள்ளன.

விற்செறி நுதலியை இற்செறி வித்தது (133)

முளையெயிற் றரிவை விளைவிலள் என்றது (104)

ஏனல் விளையாட் டினியில்லை யென்று

மானற் றோழி மடந்தைக் குரைத்தது (138)

என்பவை அவற்றுள் சில.

உரையில் அமைந்துள்ள அகப்பொருள் சூத்திரங்கள் மித விளக்கமானவை நீளமானவை. கொளுக்களும் சூத்திரங்களும் இயற்றியவர் யார் என்று அறியமுடியவில்லை. டாக்டர் உவே சாமிநாத ஐயர், "திருச்சிற்றம்பலக் கோவையார் உரையில் பேராசிரியர் அந்நூலுக்கு ஏற்பக் காட்டும் சூத்திரங்கள் அகப்பொருள் இலக்கண நூலில் உள்ளனவோ அன்றி, அவராக அமைத்துக்கொண்ட உரைச் சூத்திரங்களோ இன்ன என்று துணிய முடியவில்லை" என்று கூறுகின்றார்.. ழு தமிழ் நெறி விளக்கம் (உ.வே.சா. பதிப்பு) முகவுரை, பக்கம். 7

சமயக் கருத்துக்கள்

பேராசிரியர் சைவ சமயத்தவர். ஆதலின், வேற்று மதத்தவராகிய சமண பௌத்தரை வேதத்தொடு முரண்பட்டார் என்று குறிப்பிடுகின்றார். மூல நூலில் இல்லாத சிவ கருத்துகளையும் நுழைத்து உரை எழுதுகின்றார். அத்தகைய இடங்கள் சிலவற்றைக் கீழே காணலாம்.

குறுகலர் ஊர் தீங்கில் புகச் செற்ற கொற்றவன் குறுகாதார் புரங்கள் பாசண்ட தருமமாகிய தீங்கிலே புகுதலான் அவற்றைக் கெடுத்த வெற்றியை உடையான் (13).

அம்பலத்தோன் எல்லை செல்குவோர் என்றது. அவர் சீவன் முத்தராய் இருத்தல். அ.்.தாவது, சீவன் உடனிருக்கும் போதே முத்தியை அடைந்திருத்தல். முத்தியாவது எங்கும் ஒக்க வியாத்தியை அடைந்திருத்தல். இ.்.து அகண்ட பரிபூரணம் என்றபடி (197).

தில்லைத் தொல்லோனைக் காணாதவர் தில்லைக்கண் உள்ளோனாகிய பழையோனைக் குருமுகத்தால் அறியாதார் (284).

நயவுரை

பேராசிரியர் நயவுரை எழுதும் இடங்கள் சிலவற்றைக் கீழே காணலாம்:

சிந்தாமணி-ஒருவன் தவம்செய்து பெறும் சிந்தாமணி (12).

நிறை - ஐம்புலன்களையும் அடக்குதல் (31).

பிழை கொண்டு ஒருவி, கெடாது அன்பு செய்யின் அடைந்தார் பிழைப்பின், தலையாயினார் பிழையை உட்கொண்டு அமைதலும், இடையாயினார் அவரைத் துறத்தலும், கடையாயினார் அவரைக் கெடுத்தலும் உலகத்து உண்மையின் அம்மூவகையும் செய்யாது எனினும் அமையும் (65).

முகமதியின் வித்தகம்சேர் மெல்லென் நோக்கம் முகமாகிய மதியின்கண் உண்டாகிய சதுரப்பாட்டைச் சேர்ந்த மெல்லென்ற நோக்கம் (106).

தொழுது எழுவார் - துயில் எழும் காலத்து அல்லது முன் உணர்வின்மையான் உணர்வுள்ள காலத்து மறவாது நினைவார் (118)

இருவி என்பது கதிர் கொய்த தட்டை. தாள் என்பது கதிர் கொய்யாத முன்னும் சொல்வதோர் பெயர் (144).

செறிகடல் - என்புழி, செறிவு எல்லை கடவா நிலைமை (179).

அம்பல் (180). – பரவாத களவு

திகழ்ந்து என்றதனால் ஒளிமிகுந்து விளங்கும் (182).

மெய்த்தகை - புனையா அழகு (231)

உய்த்து உணர்வோர் - வெளிப்படாத பொருளை ஏதுக்களால் உணர்வோரை (236).

இறுமாத்தல் தாழாத உள்ளத்தராய்ச் செம்மாத்தல் (242)

எழுங்குலை - இளங்குலை செழுங்குலை - முதிர்ந்த சூலை (250).

நிறைவு - அறிவோடு கூடிய ஒழுக்கம் (266)

கடவுள் மழை - கடவுளால் தரப்பட்ட மழை (279).

உவமைகளை விளக்குதல்

பேராசிரியர், திருக்கோவையாரில் உள்ள உவமைகளில் பெரிதும் ஈடுபட்டு ஆராய்ந்து விளக்கம் கூறுகின்றார்.

அபூத உவமை (125), இல்பொருள் உவமை (244), இல் பொருள் உவவை னினும், அபூத உவமை எனினும் ஒக்கும் (12.) என்று உவமையின் வகைகளைச் சுட்டி விளக்குகின்றார்.

நூலில் இடம்பெற்றுள்ள உள்ளுறை உவமங்களை விளக்குகின்றார். (250, 260, 276, 254, 369, 377, 99, 128, 133, 168, 128).

உவமை நயந்தோன்ற விளக்கும் இடங்கள் சிலவற்றைக் காண்போம்: ன

தலைவன் தலைவியை அமிழ்து என்றும் அணங்கு என்றும் பாராட்டுகின்றான். அதற்குப் பேராசிரியர் "இன்பத்தைச் செய்தலின் அமிர்தமாய், துன்பத்தைச் செய்தலின் அணங்காய் (39 என்றும், "அமிழ்தே, அணங்கே என்றான் இன்பமும் துன்பமும் ஒருங்கு நிகழ்தலின்" (41) என்றும் நயங்கூறுகின்றார்.

கார்த்தரங் கம்திரை தோணி

சுறாக்கடல் மீன்எறிவோர்

போர்த் தரங்கம் துறை மானும் (187)

என்ற பகுதியில் உவமையைப் பின்வருமாறு விளக்குகின்றார்.

"குதிரைத் திரன் தரங்கத்திற்கும், தேர் தோணிக்கும், யாளன சுறாவிற்கும் காலாள் மீன் எறிவோர்க்கும். போர்க்களம் கடற்கும் உவமையாக உரைக்க".

"மதிக் கமலம் எழில் தந்தென பொழில் ஆயத்துச் சேர் (124) என்பதில் உள்ள உவமைக்குப் பேராசிரியர் பின்வருமா விளக்கம் தருகின்றார்:

"கமலத்தோடு மதிக்கு ஒத்த பண்பு வெண்மையும் வடிவும் பொலிவும். மதியோடு தலைமகட்கு ஒத்த பண்பு, கட் இனிமையும் சுற்றத்திடை அதனின் மிக்குப் பொலிதலும் இவ்வாறு ஒத்த பண்பு வேறுபடுதலான் உவமைக்கு உவமை ஆகாமை அறிந்துகொள்க".

கொடைத்தன்மைக்குக் காரும், கற்பகமும் உவமையாக கூறப்பட்டுள்ளன. அவற்றைப் பேராசிரியர் "வேண்டாமைக் கொடுத்தலின் காரோடு ஒக்கும் வேண்டக் கொடுத்தலின அழகிய கற்பகத்தோடு ஒக்கும்" என்று விளக்கிக் காட்டுகின்றா (400).

இந்த உவமை விளக்கத்தை நச்சினார்க்கினியர் சீவ சிந்தாமணி உரையில் மேற்கொண்டுள்ளார்.

ஆராய்ச்சியும் விளக்கமும்

பேராசிரியர் சில பாடல்களுக்கு மிக நுட்பமாய் ஆழமாய்ப் பொருள் எழுதுகின்றார். "ஈசற்குயான்" என்ற பாடலுக்கும் (109) திரு என்ற சொல்லுக்கும் இவர்தரும் விளக்கூ மிக அருமையானவை. அவற்றைக் கீழே காண்போம்:

நோக்கு

ஈசற்கு யான்வைத்த அன்பின்

அகன்று அவன் வாங்கியஎன்

பாசத்தின் கார்என்று அவன்தில்லை

யின்னொளி போன்றுஅவன்தோள்

பூசத்திரு நீறுஎன வெளுத்து

ஆங்கவன் பூங்கழல்யாம்

பேசத்திரு வார்த்தை யின்பெரு

நீளம் பெருங்கண்களே. (109)

தில்லையின் ஒளிபோறல் தில்லையின் ஒளிபோலும் ஒளியை உடைத்தாதல், ஆகவே தில்லையே உவமையாம்.

பூசத் திருநீறு வெள்ளிதாய்த் தோன்றுமாறுபோல வெளுத்து என்றும், பேசத் திருவார்த்தை நெடிய ஆயினாற் போலப் பெரு நீளமாம் என்றும் வினை எச்சமாக்கிச் சில சொல் வருவித்து உரைப்பினும் அமையும்.

பெரு நீளமாம் என ஆக்கம் வருவித்துத் தொழிற்பட உரைக்க. கண்களால் பெரிதும் இடர்ப்பட்டான் ஆகலானும், தோழியைத் தனக்குக் காட்டின பேருதவியை உடையன ஆகலானும், முன்னர்க் கண்மலர்ச் செங்கழுநீர் என்றும் அமையாது, பின்னும் இவ்வாறு கூறினான்.

கண்ணிற்குப் பிறிதுவகையான் உவமம் கூறாது இங்ஙனம் அகலம் முதலியன கூறவேண்டியது எற்றிற்கு எனின், அவை கண்ணிற்கு இலக்கணமும் காட்டியவாறாம். என்னை இலக்கணம் ஆமாறு?

கண்ணிற்கு இயல்பு கசடறக் கிளப்பின்

வெண்மை கருமை செம்மை அகலம்

நீளம் ஒளியென நிகழ்த்துவர் புலவர்.

ஆயின், இதனுள் செம்மை கண்டிலேம் என்பார்க்குச் செம்மையும் கூறிற்று. அவன் தோளிற்

பூசத் திருநீறு என்றதனால் சிவப்பும் சொல்லியது ஆயிற்று. அது செம்மையால் தோன்றும் வரியென அறிக.

யான்பேசத் திருவார்த்தை என்னாது யாம் என்றது என்னை எனின், திருவார்த்தை பேசும் அன்பர் பலர் ஆகலான் யாம் என்று பலராகக் கூறினார்.

திரு

திரு என்பது கண்டாரால் விரும்பப்படும் தன்மை. நோக்கம் என்றது அழகு. இ.ஃது என் சொல்லியவாறோ எனின், யாவன் ஒருவன் யாதொரு பொருளைக் கண்டானோ அக் கண்டவற்கு அப் பொருள்மேல் சென்ற விருப்பத்தோடே கூடிய அழகு அதன்மேல் அவற்கு விருப்பம் சேறல் அதனிற் சிறந்த உருவும் நலனும் ஒளியும் எவ்வகையானும் பிறிது ஒன்றற்கு இல்லாமையால், திரு என்றது அழகுக்கே பெயராயிற்று.

அங்ஙனம் ஆயின் இது செய்யுளின் ஒழிய, வழக்கினும் வருவது உண்டோ எனின் உண்டு கோயிலைத் திருக்கோயில் என்றும் கோயில் வாயிலைத் திருவாயில் என்றும், அலகைத் திருவலகு என்றும், பாதுகையைத் திருவடிநிலை என்றும் வழங்கும் இ தொடக்கத்தன எல்லாம் திருமகளை நோக்கி எழுந்தன அல்ல. அது கண்டவனுடைய விரும்பத்தானே எழுந்தது. ஆதலானும் திரு என்பது அழகு என்றே அறிக. அதனால் திரு என்பது கண்டாரால் விருப்பப்படும் தன்மை நோக்கமே. அல்லதூஉம் தான் கண்ட வடிவின் பெருமையைப் பாராட்டுவான் ஆகலான், ஒருத்தி இருந்த தவிசை இவளுக்கு முகமாகக் கூறுதல் வழுவாம். ஆதலால் தான்கண்ட வடிவின் உயர்ச்சியையே கூறினான் எனக் கொள்க

மேற்கோள் நூல்கள்

பேராசிரியர் தம் உரையில் பல நூல்களை மேற்கோள் காட்டியுள்ளார். திருச்சதகம் (114), திவாகரம் (1), தொல்காப்பியம், இறையனார் களவியல், திருவாசகம் ஆகிய நூல்களிலிருந்து மேற்கோள் தருகின்றார்.

பெரிய புராணக் கருத்தும் ஓரிடத்தில் இடம்பெறுகின்றது. "தில்லையான ஏவலாவது, எல்லா உயிர்களையும் அரசன் காக்க என்னும் தருமநூல் விதி. காத்தலாவது தன் வினை செய்வாரானும், கள்வரானும், பகைவரானும் உயிர்கட்கு வரும் அச்சத்தை நீக்குதல்" (312)மூ. ("மாநிலம் காவல் ஆவான்" - பெரிய. திருநகரச்சிறப்பு 36.)

பேராசிரியர் பல இடங்களில் அணிநூல் கருத்தைக் குறிப்பிடுகின்றார். பரியாயம் (289), முயற்சி விலக்கு (234), தற்குறிப் பேற்றம் (185), ஒற்றுமைக் கொளுவுதல் (195) உயர்ச்சி வேற்றுமை (217) ஆகிய அணிகளை இவர் குறிப்பிடுகின்றார்.

அகத்திணை விளக்கம்

அகத்திணை இலக்கணத்தை இவர் நன்கு விளக்கிச் செல்லுகின்றார். சான்றுகள் சில காண்போம்:

குறிவழிக் காண்டல் என்பது குறிவழிச் சென்ற பாங்கன் தன்னை அவள் காணாமல், தான் அவளைக் காண்பதோர் அணிமைக்கண் நின்று, "அவன் சொன்ன இடமும் இதுவே,

இயலும் இவையே: இவளும் அவளே“ என்று ஐயமறத் தெளியக் காணா நிற்றல்.

பரத்தையிற் பிரிதல் - வைகலும் பாலே நுகர்வான் ஒருவன் இடையே புளியங்காடியும் அறிந்தாற்போல, அவள் நுகர்ச்சி இனிமை அஅறிதற்குப் புறப் பெண்டிர்மாட்டுப் பிரியா நிற்றல். அல்லதூஉம் பண்ணும் பாடலும் முதலாயின காட்டி, புறப்பெண்டிர் தன்னைக் காதலித்தால் தான் எல்லார்க்கும் தலைவன் ஆகலான் அவர்க்கும் இன்பம் செய்யப் பிரியா நிற்றல் என்றுமாம்.

உவமை கூறல்

பேராசிரியர் தம் கருத்தை விளக்க, ஏற்ற இனிய உவமைகள் பலவற்றைத் தம் உரைகளில் கூறியுள்ளார். அவற்றுள் சிலவற்றைக் காண்போம்:

ஓர் ஆவிற்கு இருகோடு தோன்றினாற் போல (ஐ).

ஓரிடத்து ஒரு கலியாணம் உண்டானால் எல்லாரிடத்தும் உண்டாகிய ஆபரணங்கள் எல்லாம் அவ்விடத்துக்கூடி, அக் கலியாணத்தைச் சிறப்பித்தாற்போல (ஐ),

புதல்வனது பிணிக்கு, தாய் மருந்துண்டாற்போல (118).

சொற்பொருள் கூறல்

அரிய சொற்களுக்குப் பேராசிரியர் தரும் விளக்கங்கள் அருமையானவை. சில விளக்கங்களைக் கீழே காண்போம்:

விதி - செயப்படும் வினையினது நியதி (7).

துறவு துறவி என நின்றாற்போல அளவு அளவி என நின்றது (8).

கண்ணன் என்பது, கரியோன் என்னும் பொருளதோர் பாகதச் சிதைவு (53).

இரதம் என்றது நாட்டியச் சுவையையன்று, கட்கு இனிமையை

நடம் என்றது நாட்டியத்தையன்று. கூத்து என்னும் பொதுமையை (57).

வஞ்சித்தல் - மறுமொழியை வெளிப்படையாகக் கொடாது பிறிதொன்றாகக் கூறுதல் (86).

குதலைமை விளங்காமை. மழலை இளஞ்சொல் (104).

சோத்தம் - இழிந்தார் செய்யுள் அஞ்சலி அது சோத்து எனக் கடை குறைந்து நின்றது (173).

போது - பேரரும்பு (174)“.(பரிமேலழகர் உரை.)

முரம்பு - கல் விரவி உயர்ந்திருக்கும் நிலம் (202)

இவை என்பது தன்முன் உள்ளவற்றை உவை என்பது முன் நின்றவற்றிற் சிறிது சேயவற்றை அவை என்பது அவற்றினும் சேயவற்றை (223)

சுத்தி - பிறர்க்குத் திருநீறு கொடுத்தற்கு இப்பி வடிவாகத் தலையோட்டான் அமைக்கப்படுவது ஒன்று.

கடங்கம் என்பது மழு: இது கட்டங்கம் என நின்றது (242

நாடுதல் மனத்தால் ஆராய்தல்.

பார்த்தல் கண்ணான் நோக்குதல் (253).

7. கம்பராமாயண உரைகள்

ஆங்கிலேயர்களின் முன்னால் இந்திய நாட்டுச் செல்வம் அனைத்தையும் ஒரு பக்கம் குவித்து வைத்து, மற்றொரு பக்கம் ‘க்ஸ்பியர் நாடகச் செல்வத்தை வைத்து, ”இவ்விரு செல்வங்களுள் எந்த ஒன்றினைப் பெற விரும்புகின்றீர்கள்?” என்று அவர்களை வினவினால், ‘க்ஸ்பியரின் நாடகச் செல்வத்தையே பெற விரும்புவதாய் அவர்கள் உரைப்பர் என்று கூறுவதுண்டு. இவ்வாறு கூறி, ஆங்கிலேயர்களின் இலக்கிய ஆர்வத்தையும், ‘க்ஸ்பியரின் சிறப்பையும் புகழ்வர்.

இதே போன்ற கருத்தை, கம்பரைப் பற்றிய தனிப்பாடல் ஒன்று கூறுகின்றது.

”இந்த உலகிலுள்ள எல்லாச் செல்வங்களையும் பெற்று அரசாளும் உரிமையுடன் வீற்றிருக்கும்போது ஏற்படுகின்ற

இன்பமும், மேல் உலகத்தில், தன் நிழலில் நிற்பவர் பெற நினைத்தவற்றை எல்லாம் உடனே தருகின்ற கற்பக மரத்தில் நிழலில் நின்றிருக்கும்போது தோன்றுகின்ற இன்பமும் கம்ப கவிதையைக் கற்கும்போது அடையும் களிப்புக்கு இணையாகா

இக் கருத்தைப் பின்வரும் பாடல் அறிவிக்கின்றது:

இம்பர் நாட்டின் செல்வமெல்லாம்

எய்தி அரசரோ(டு) இருந்தாலும்

உம்பர் நாட்டின் கற்பகக்கா

ஓங்கு நீழல் இருந்தாலும்

செம்பொன் மேரு அனையபுயத்

திறல்சேர் இராமன் திருக்கதையில்

கம்ப நாடன் கவிதையிற்போல்

கற்றோர்க்(கு) இதயம் களியாதே,

இந்தப் பாடல், கம்பரது கவிதையின்மீது தமிழ் மக்களுக்கு உள்ள ஆர்வத்தையும், கம்பரின் சிறப்பையும் போந்த் யுரைக்கின்றது.

கலைமகளைப் புலவர்கள் தாய் என்றும், தெய்வம் என்றும் போற்றுவர். ஆனால், கம்பர் மறைந்த நாளில் பெரிதும் துன்புறற புலவர் ஒருவர் பாடிய பாடல், கலைமகள் கம்பனுக்கு மனைவி என்றும், கணவனாகிய கம்பன் இறந்ததால் கலைமகள் மங்கல நாண் இழந்தாள் என்றும் கூறுகின்றது.

இன்றோநம் கம்பன் இறந்தநாள் இப்புவியில்

இன்றோநம் புன்கவிகட்கு ஏற்றநாள்

பூமடந்தை வாழப் புவிமடந்தை வீற்றிருப்ப

நாமடந்தை நூல்இழந்த நாள். இன்றோதான்

இந்தப் பாடலைப் படிக்கும்போது ஹோமரைப் பற்ர் ஐரோப்பியர் கூறும் புகழ் மொழி நினைவுக்கு வருகின்றது.

”நெடுநாள் மகப்பேறு இன்றி வருந்திய இயற்கையன்னை ஹோமரை ஈன்றெடுத்தபின், மகப்பேறு அற்று விட்டாள்!”

இத்தகைய புகழுரைகள் யாவும் கற்றோர் உலகம் புலவர்களை எவ்வளவு மதித்துப் போற்றி வருகின்றது என்பை விளக்குகின்றன.

தமிழச் சாதி அமரத்தன்மை வாய்ந்தது என்று எண்ணி பாரதியார் இறும்பூது எய்துவதற்கு உரிய காரணங்களை பின்வருமாறு கூறுகின்றார்.

சிலப்பதி காரச் செய்யுளைக் கருதியும்

திருக்குறள் உறுதியும் தெளிவும் பொருளின்

ஆழமும் விரிவும் அழகும் கருதியும்

எல்லைஒன்று இன்மை எனும்பொருள் அதனைக்

கம்பன் குறிகளால் காட்டிட முயலும்

முயற்சியைக் கருதியும் முன்புநான் தமிழச்

சாதியை அமரத் தன்மை வாய்ந்ததுஎன்று

உறுதி கொண்டு இருந்தேன்.

இவ்வாறு போற்றுவார் ஒருபுறம் இருப்பினும், கம்பருக்குக் காலந்தோறும் எதிர்ப்பு இருந்து வந்திருக்கிறது. கம்பர் வாழ்ந்த காலத்தில் ஒட்டக்கூத்தர் இவரை எதிர்த்தார் என்று வாய்மொழிக் கதை கூறுகின்றது. உரையாசிரியர்கள் சுஎன்று வாய்மொழிக் மேற்கோள் தராமல் ஒதுக்கிவிட்டனர். ஆனால்பாடல்களை பொதுமக்கள் கவிச்சக்கரவர்த்தி என்று போற்றினார் அவரது கவிதைகளைச் சுவைத்து மகிழ்ந்தனர் அவர் கூறும் இராமன் கதையில் திளைத்தனர். கதை சொல்லும் கலைஞர்கள் கம்பராமாயணத்தை மக்களிடையே பரப்பி வந்தனர். .

மக்கள் கவிஞராக விளங்கிய கம்பரின் இராமாயணத் திற்குப் பழங்காலத்தில் புலவர்கள் யாரும் உரை எழுதவில்லை. பத்தொன்பதாம் நூற்றாண்டில் அச்சு இயந்திரம் தோன்றிய பிறகுதான் உரை இயற்றிக் கம்பராமாயணத்தைப் புலவர்கள் சிவர் வெளியிட்டனர்.

திரிசிரபுரம் வி. கோவிந்தப்பிள்ளை (?-1890) சுந்தர காண்டத்திற்கு 1871-ஆம் ஆண்டில்

உரை இயற்றி வெளியிட்டார். பால காண்டத்திற்கு இராமசாமி நாயுடு இயற்றிய உரை 1887-ல் வெளிவந்தது. சுப்பராயச் செட்டியார் (?-1894) அயோத்தியா காண்டத்திற்கு உரை இயற்றினார். 1896-இல் திருமயிலை சண்முகம் பிள்ளை அயோத்தியா காண்டத்திற்கு விளக்கம் எழுதினார். உடுமலைப்பேட்டை மு. ரா. கந்தசாமிக் கவிராயர் (2-1948) ஆரணிய காண்டத்திற்கு 1903-இல் உரை இயற்றினார். இவர்களுக்குப் பின் வை.மு. கோபால கிருஷ்ணமாச்சாரியார் கம்பராமாயணம் முழுமைக்கும் சிறந்த விளக்கவுரை எழுதி வெளியிட்டுள்ளார்.

இன்கவித் திரட்டும் உரையும்

ஆழ்வார்குறிச்சி வெ.ப. சுப்பிரமணிய முதலியார் (1857-1964). கம்ப ராமாயண இன் கவித் திரட்டும் உரையும்" என்ற நூலை இயற்றியுள்ளார். இந்த நூல், தொடர் கட்டுரையாகச் செந்தமிழ் இதழில் வெளிவந்தது. கதைத் தொடர்ச்சியுடன் அமை பாடல்களை ஒன்று சேர்த்து அமைத்து இனிய விளக்கம் எழுதியுள்ளார்.

இந்த நூல் தோன்றுவதற்குப் பின் வரும் செய்யுள் காரணமாய் இருந்தது:

சுற்றத்தார் தேவரொடும் தொழநின்ற

கோசலையைத் தொழுது நோக்கி

வெற்றித்தார்க் குரிசில்இவர் ஆர்என்று

குகன்வினவ வேந்தர் வைகும்

முற்றத்தான் முதல்தேவி மூன்றுலகும்

ஈன்றானை முன்ஈன் றானைப்

பெற்றத்தால் பெருஞ்செல்வம் யான்பிறத்த

லால்துறந்த பெரியாள் என்றான்.

இச் செய்யுள் பொருளாழம் உடையது என்று முதலியாரின் நண்பர் சிலர் அடிக்கடி கூறிவந்தனர். அதனால், இச் செய்யுளின் பொருளை ஆழ்ந்து நோக்கினார். அதன் பயனாய்ப் பின்வரும் விளக்கத்தை எழுதினார்.

1. "சாமானியர் அல்லாத உயர்ந்த அரசரான சுற்றத்தாரே அன்றி, தேவரும் தொழுது கொண்டிருக்கும் ஒருவரைத் தெரிய விரும்புவோர். அவரைக் கைந் நீட்டிச் சுட்டிக் காட்டி, "இவர் யார்?" என்று கேட்டால், தகாத முறை என்று கூறாமல் கூறி, தக்க முறை இது என்று உணர்த்துவாராய்,

கோசலையைத் தொழுது நோக்கி..

...இவர் ஆர்என்று

குகன் வினவ

என்றார்.

2. மேலும் "இவர் ஆர்?" என்ற கேள்விக்குத் தசரதனுக்குத் தேவி, இராமனுக்குத் தாய் என்ற விடைகள் இயல்பான விடைகளாயிருப்ப, அவ்விடைகளை அவ்வாறு கூறாது. அவற்றைக் கூறும் முகத்தால் "வேந்தர் வைகும் முற்றத்தான்" எனத்த தசரதனைச் சிறப்பித்தும் "முதற்றேவி" எனக் கோசலையை மேம்படுத்தியும், "மூன்றுலகும் ஈன்றானை முன் ஈன்றான்" என இராமனை விதந்தும் கூறுவானேன் எனில், அக்கேள்வி கேட்ட சமயத்தில், கோசலா தேவியைச் சுற்றத்தாரும் தேவரும் தொழுத வண்ணமாய் இருந்தனர் ஆதலால், அத் தேவியைக் கைந் நீட்டிக் காட்டலாற் சுட்டாது, கைகூப்பி நோக்குதலாற் சுட்டின குகன், "சுற்றத்தார் தொழுவானேன்?" "தேவர் தொழுவானேன்?" என்று தெரிய விரும்பினான் என்பது ஊகித்துணர்தற்பாலது. இவ்வாறாகக் குகன் கேளாது கேட்ட கேள்விகளுக்கு விடைகளாகப் பரதன், "அரசர் வணங்கும் சக்கரவர்த்தியாகிய தரசதனது பட்ட மகிசி (பட்டத்து அரசி) ஆதலால் சுற்றத்தார் தொழுகின்றார்கள் மகா விட்டுணுவின் அவதாரமான

இராமனைப் பெற்றவள் ஆதலால், தேவர்கள் வந்தனை செய்கிறார்கள் என்று தெரிவிக்க அவ்வாறு விசேடித்துக் கூறினான் என்க.

3. இன்னும் "இவர் ஆர்?" என்ற வினாவுக்குச் சக்கர வர்த்தியாகிய தசரதனுக்கு முதல் மனைவி, திருமாலாகிய இராமனுக்கு மாதா என்று கூறியுள்ளதன்மேல், இராமனைப் ால் துறந்த பெற்றதால் பெறும் செல்வம், யான் பிறத்தலால் பெரியாள்" என்று பரதன் ஏன் கூறினான் எனில், அவன் மேற்கூறிய விடைகளை அளிக்கும்போது. கோசலா தேவி முன்னிருந்த ஆனந்த நிலையும் இப்போதுள்ள துக்க நிலையும் அவன் மனத்தில் இயல்பாகத் தோன்றி வருத்தம் செய்து, "ஐயோ நான் ஒரு பாவி பிறவாதிருந்தால், இவ் அன்னையாருடைய ஆனந்த நிலை மாறியிராதே!" என்ற எண்ணம் தோன்ற அதளை அவசனாய் வெளியிட்டுக் கூறினான் என்க.

4. இனி, பரதன் தான் பிறந்ததனால் கோசலாதேவி செல்வத்தை இழந்தாள் என்றது, தான் பிறக்கவில்லையானால், தனக்காகத் தன் தாய், தசரதன் இராமனுக்குக் கொடுத்த இராச்சியத்தைப் பிடுங்கிக் கொண்டு இராமனைக் காட்டுக்கு ஓட்டி இராள் என்றும், அவள் அவ்வாறு செய்யாதிருக்கவே கோசலாதேவி தசரதன் இறவாதிருக்கும் மாங்கலிய பாக்கியத்தையும், இராமன் முடி சூடி ஆளும் இராச்சியச் செல்வத்தையும் இழந்திராள் என்பதையும் குறிப்பித்தது".

இவ்வாறு ஒரு பாடல் தந்த விளக்கம், மற்றப்பாடல் களுக்கும் விளக்கம் காணத் தூண்டுதலாய் அமைந்துள்ளது. தேர்ந்தெடுத்துப் பல பாடல்களுக்கு உரையும் விளக்கமும் நயமும் இவர் எழுதினார்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சித் துறையிலிருந்து வெளி வந்திருக்கும் "கம்பராமாயண உரைகள் திருத்தமானவை கம்பரையும் வால்மீகரையும் ஒப்பிட்டு நோக்குபவை: விரிவான ஆராய்ச்சியும் நயமும் கூறுபவை கம்பனின் புலமைத் திறனைத் தமிழுலகிற்கு அறிவிக்கும் நோக்கத்துடன் எழுதப்பட்டவை. கம்பராமாயணத்தைத் தேவார திருவாசகங்களுடன் ஒப்பிட்டும், கம்பனின் சங்கநூற் புலமையை எடுத்துக்காட்டியும் செல்வது குறிப்பிடத் தக்கதாகும்.

வினாக்கள்

அலகு 3

இலக்கிய உரைகள்

1.நற்றிணைக்கு உரை எழுதியவர்

அ).பின்னத்தூர் நாராயணசாமி

ஆ).உ.வே.சா.

இ) .பேராசிரியர்

ஈ).நச்சினார்க்கினியர்

2.நாலடியாருக்கு முதல் முதலில் உரை கண்டவர்

அ).பதுமனார்

ஆ).தருமர்

இ).உ.வே.சா

ஈ).வேதகிரி முதலியார்

3.முல்லைப்பாட்டுக்கு ஆராய்ச்சி உரை எழுதியவர்

அ).மார்க்கபந்து சர்மா

ஆ).மறைமலை அடிகள்

இ).தமிழண்ணல்

ஈ).ரா.இராக ஐயங்கார்

4.காளிங்கர் சமயம் யாது ?

அ).சமணம்

ஆ).சைவம்

இ).பௌத்தம்

ஈ). வைணவம்

5.திருக்குறளுக்கு முதன் முதலில் உரை எழுதியவர்

அ).பரிமேலழகர்

ஆ).மணகுடவர்

இ).பரிபெருமாள்

ஈ).காளிங்கர்

6.சிலப்பதிகாரத்திற்கு முதன் முதலில் உரை எழுதியவர்

அ).ந.மு வெங்கடசாமி நாட்டார்

ஆ).அடியார்க்கு நல்லார்

இ).அரும்பத வுரையாசிரியர்

ஈ).புலியூர் கேசிகன்

7.6000 படி இயற்றியவர்

அ).நாதமுனி

ஆ).பிள்ளான்

இ).ராமானுசர்

ஈ).நஞ்சீயர்

8."ஈடு" என அழைக்கப்படுவது எது ?

அ).6000 படி

ஆ).9000 படி

இ).12000 படி

ஈ).36000 படி

9.திருமுறைகளைத் தொகுத்தவர்

அ).நாதமுனிகள்

ஆ).நம்பியாண்டார் நம்பி

இ).பெருந்தேவனார்

ஈ).தாயுமானவர்

10.சிவஞான பாடியம் பாடியவர்

அ).உமாபதி சிவாச்சாரியார்

ஆ).சிவஞான முனிவர்

இ).வாமன முனிவர்

ஈ). சிவவாக்கியர்

ஐந்து மதிப்பெண் வினாக்கள்

1.பதுமனார் உரையை விளக்கிக் கூறுக.

2.பரிமேலழகர் உரை நயத்தை ஆராய்க.

3.கம்பராமாயண உரைகளைத் தொகுத்து கூறுக .

4.அடியார்க்கு நல்லார் உரை நயத்தை எழுதுக.

5.36000 படி விளக்குக.

6.பெரியபுராண உரை - ஆராய்க.

7.சிவஞானச்சித்தியாருக்கு எழுந்த உரையை ஆராய்க.

8.பரபக்க சுபக்க - உரைப் பற்றி எழுதுக.

எட்டு மதிப்பெண் வினாக்கள்

1.சங்க இலக்கிய உரைகளைக் கட்டுரை வடிவில் எழுதுக.

2.நாலடியார்க்கு எழுதப்பட்ட உரைகள் பற்றி கட்டுரை வரைக.

3.திருவாய்மொழி க்கு எழுந்த உரைகள் பற்றித் தொகுத்து கூறுக.

4.காப்பியங்களுக்கு எழுதப்பட்ட உரைகளை ஆராய்க.

5.சிவஞான முனிவர் எழுதிய உரைகளைக் கட்டுரை வடிவில் தருக.

அலகு - IV

உரைநெறிகளும் உரைத்திறன்களும்

பாட நோக்கம்

உரையாசிரியர்களின் உரை நெறிகனைளும் உரைத்திறன்களையும் ஒப்பிட்டு அறியச்செய்தல். உரையாசிரியர்களின் பாடவேறுபாட்டுமுறையை உணர்த்துதல்.

பாட அறிமுகம்

பல்வேறு இலக்கண இலக்கிய உரையாசிரியர்களின் உரைப் போக்குகளை ஒப்பிட்டு நோக்கும் திறனை மாணாக்கர்களுக்குத் தெரிவித்தல்.

உரை நெறிகளும் உரைத் திறன்களும்

இயல் முன்னுரை தருதல், அதிகாரம் இயல் நூற்பா வைப்புமுறை கூறம், அவற்றின் இமைபு கூறல், தமிழ்மரபு பேணல், வடமொழிப்புலமை, ஆசிரியா கருத்தைப் போற்றல். மேற்கோள் தருதல், விளாவிடை முறை, பிறர் கருத்தை மறுத்தல், பல்துறைப் புலமை. இலக்கிய வரலாற்றுச் செய்தி தரல் தருக்கமுறைப் போக்கு. பாடவேறுபாடு தருதல், நூற்பா இயல் மாற்றம் செய்தல், அவாய் நிலை, விதப்புக்கிளவி.

இளம்பூரணரின் உரைக் கோட்பாடுகள்

இவர்தம் உரைக் கோட்பாடுகள் பொது இயல்பு. சிறப்பியல்பு என்ற இரு நிலைகளில் விளக்கப்படுகின்றன. முதலில் இளம்பூரணர் உரையின் பொது இயல்பு குறித்து ஆராயப்படுகின்றது.

பொது இயல்புகள்

இளம்பூரணர் உரைக் கோட்பாடுகளின் பொது இயல்புகளாகப் பின் வருவனவற்றைச் சுட்டலாம்.

1. நூலாசிரியர் கருத்தை வெளிப்படுத்தல்
2 தமிழ் மரபினைப் போற்றல்
3. பல்துறைப் புலமை
4. பாட வேறுபாடும் கருத்து வேறுபாடும்
5. மேற்கோள் காட்டுதல்
6. நாகரிகமும் பண்பாடும்
7. அடைமொழி
8. சொல் நயம்

9. பொருள் நயம்

11. எடுத்துக்காட்டு நயம்

12. பாலியல் அறிவு

13. கருதுகோள் வழிக் கருத்துப் புலப்படுத்தல்

14. வழக்காறு சுட்டித் தம் மதம் கூறல்

15. பிறன் உடன்பட்டது தான் உடன்படல்

16. மறுக்கும் முறை

17. தம் கால வழக்கு

18. மொழிப் பயன்படுத்தல்

மேற்கூறப்பெற்றவை இளம்பூரணர் உரையில் சிறக்குமாறு:

நூலாசிரியர் கருத்தை வெளிப்படுத்தல்

"நூலாசிரியரின் கருத்தை வெளிப்படுத்துவதே உரையின் ஒழுக்கம். தன் கருத்து எதுவாக இருந்தாலும் இன்னொருவன் எழுதிய நூலில் அதனை ஏற்றிக் கூறலாகாது. அப்படிச் செய்வது உரை வழுவாகும் "2

இளம்பூரணர் மூல நூலாசிரியரான தொல்காப்பியரிடத்துப் பெருமதிப்பு வைத்து உரை எழுதியுள்ளார் என்பதை அவருடைய உரை புலப்படுத்துகின்றது. தொல்காப்பியர் விதித்திருப்பதற்கு மாறாக ஆட்சிகள் வந்திருக்குமானால், அவற்றைச் சிறுவரவின என்று விதி விலக்காகக் காட்டுவார்.

"முன்னிலை தன்மை ஆயீரிடத் தொடும்
வியங்கோட் கிளவி மன்னா தாகும்"

என்ற நூற்பா உரையில் "முன்னிலை தன்மை இரண்டிடத்தும் செல்வனவாகிய வியங்கோள் வினைச்சொல் சிறு வரவின என்று குறிப்பிட்டுள்ளார். நீ செல்க, யான் செல்க என வரக்கூடாது என்பது ஆசிரியர் கருத்து. ஆனால் இளம்பூரணர் சொல்வது. அவன் செல்க என்பது பெருவரவு. நீ செல்க. யான் செல்க என்பது சிறுவரவு என்பதாகும்.

ஆசிரியருடைய கூற்றிலிருந்தே எடுத்துக்காட்டுகளைத் தந்து உரை எழுதுவதும், தம் காலத்து ஆட்சிக்கு வந்த சொற்கள் தொல் காப்பியர் கூற்றுக்கு முரண்படுமாயின், அவற்றுக்குத் தக்க காரணம் கூறி உரை எழுதுவதும் முறையே நூலாசிரியரின் கருத்தை வெளிப் படுத்தலுக்கும். போற்றுதலுக்கும் சான்றுகளாகின்றன.

தமிழ் மரபினைப் போற்றல்

தொல்காப்பிய மரபியல் நூற்பா ஒன்றின் உரையில், "மிகைப் படக் கூறலாவது, அதிகாரப் பொருளன்றிப் பிற பொருளுங் கூறுதல். அசூ.்.தாவது தமிழிலக்கணஞ் சொல்லுவானெடுத்துக் கொண்டான் வடமொழியிலக்கணமும் கூறல் "" என்று எழுதுவதால்

தமிழ் இலக்கணத்தைத் தமிழ் மொழியின் இயல்பைக் கொண்டே விளக்க வேண்டும் என்பது இளம்பூரணரின் உரைக்கொள்கை என்று அறிய முடிகின்றது. தொல்காப்பியச் சூத்திர விருத்திக்கு உரை செய்த சிவஞான முனிவர் இளம்பூரணரைத் தமிழ்நூல் ஒன்றே வல்ல உரையாசிரியர் என்று குறிப்பிட்டுள்ளார். இதனால் இளம்பூரணருக்கு வடமொழி அறிவு இல்லை என்று கருதுவது தவறு.

பல்துறைப் புலமை

"ஒரு நூல் இலக்கிய அறிவை மாத்திரம் தருவதில்லை. மக்கள் வழக்கின் பல்வேறு கூறுகளும் அமையப் படைப்பதுதான் இலக்கியம். அத்தகைய இலக்கியக் கலைக்குப் பொருள் காண வேண்டும் எனின், பொருள் காண்பார்க்குப் பல்துறையறிவு வேண்டும் என்பதுதானே விளங்கும்" என்ற வ.சுப. மாணிக்கனாரின் கூற்றிற்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர் இளம்பூரணர்.

"பூப்பின் பிறப்பாடு ஈராறு நாளும்.
நீத்தகன்று உறையார் என்மனார் புலவர்
பரத்தையர் பிரிந்த காலை யான""""

என்ற கற்பியல் நூற்பா தலைவனுக்கு உரியதோர் மரபினை உணர்த்து கின்றது. இந்நூற்பாவிற்கு உரை எழுதுகின்றபோது, பரத்தையர் சேரியானாயினும் பூத்தோன்றி மூன்று நாள் கழித்த பின்பு பன்னிரண்டு நாளும் நீங்குதல் அறமன்று என்றவாறு. இதனாற் பயன் என்னை யெனின் அது கருத்தோன்றும் காலம் என்க என்று குறிப்பிட்டுள்ளார். இதனால் இளம்பூரணருக்கு இருந்த பாலியல் அறிவை உணர முடிகின்றது.

"மறுவில் செய்தி மூவகைக் காலமும்
நெறியின் ஆற்றிய அறிவன்""""

எனவரும் வாகைத் திணைப் பற்றிய நூற்பா உரையில் "அறிவன் என்றது கணியனை. மூவகைக் காலமும் நெறியினால் ஆற்றுதலாவது. பகலும் இரவும் இடைவிடாமல் ஆகாயத்தைப் பார்த்து ஆண்டு நிகழும் வில்லும் மின்னும் ஊர்கோளுந் தூமமும் மீன் வீழ்வும் கோள்நிலையும் மழைநிலையும் பிறவும் பார்த்துப் பயன் கூறல் ஆதலான் மூவகைக் காலமும் நெறியின் ஆற்றிய அறிவன் என்றார் என இளம்பூரணர் குறிப்பிட்டிருப்பதன் மூலம் அவரது வானியல் அறிவு அறியப்படுகின்றது.

மேலும் நாட்டுப்புறவியல், கலையியல் போன்றவற்றிலும் இளம்பூரணருக்கு இருந்த புலமையை அவருடைய உரைப்பகுதிகள் உணர்த்துகின்றன.

பாட வேறுபாடும் கருத்து வேறுபாடும்

"இருவகைக் குறிபிழைப் பாகிய இடத்தும்"

எனத் - தொடங்கும் களவியல் நூற்பா" தலைவனுக்குரிய கூற்றுகளை உணர்த்துவதாகக் கொண்டு இளம்பூரணர் விளக்கம் தருகின்றார்.

ஆனால் நச்சினார்க்கினியரோ தலைவிக்கு உரிய கூற்றுகளை உணர்த்துவதாகக் கொண்டு

விளக்கம் தருகின்றார். ஆனால் இளம் பூரணர் கொண்ட பாடமே நூற்பாவின் பொருள் அமைப்பிற்கேற்பப் பொருத்தமாக உள்ளது.

““உள்ளுறுத்து இதனோடு ஒத்துப்பொருள் முடிகென
உள்ளுறுத்து உரைப்பதே உள்ளுறை உவமம் ”19

என்ற நூற்பாவில் “உள்ளுறுத்து உரைப்பதே“ என்று பாடம் கொள் கின்றார் இளம்பூரணர். ஆனால் நச்சினார்க்கினியர் ‘உள்ளுறுத்து இறுவதை எனப்பாடமாகக் கொண்டுள்ளார். இருவருடைய பாட வேறுபாட்டுள்ளும் இளம்பூரணரின் பாடமே இயல்பாக அமைந் துள்ளது. இந்நிலையில் இளம்பூரணரின் பாடவேறுபாடும் கருத்து வேறுபாடும் வெளிப்படுகின்றது.

மேற்கோள் காட்டுதல்

பத்துப்பாட்டு. எட்டுத்தொகை, திருக்குறள். நாலடியார். பழ மொழி. திரிகடுகம் களவழி நாற்பது. கார் நாற்பது. திணைமாலை நூற்றைம்பது, ஐந்திணை எழுபது, ஐந்திணை ஐம்பது, திணைமொழி ஐம்பது. கைந்நிலை முதலிய பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, சூளாமணி என்னும் காப்பியங்கள், புறப்பொருள் வெண்பாமாலை, இறையனார் களவியல். பிங்கல நிகண்டு, தமிழ்நெறி விளக்கம் முதலிய இலக்கண நூல்கள் அகத்தியம், செயிற்றியம், காக்கைப் பாடினியம், பரிமாணச் சூத்திரம். பன்னிரு படலம். போன்ற மறைந்துபோன தமிழ் நூல்கள். ஆசிரிய மாலை, குணநாற்பது. சிற்றெட்டகம், தகடூர் யாத்திரை, பாண்டிக் கோவை. பெரும்பொருள் விளக்கம், மார்க்கண்டேயனார் காஞ்சி. முத்தொள்ளாயிரம். விளக்கத்தனார்கூத்து போன்ற பிறநூல்களி லிருந்தும் இளம்பூரணர் மேற்கோள்களைக் குறிப்பிட்டுள்ளார்.

இளம்பூரணரின் பொருளதிகார உரைப்பகுதியிலிருந்து. “ஆயிரம் விரித்த அணங்குடை அருந்தலை“ எனத் தொடங்கும் பரிபாடலின் கடவுள் வாழ்த்துப் பாடல் முழுவதுமாக நமக்குக் கிடைத்துள்ளது. எட்டுத்தொகை நூல்கள் எல்லாவற்றிலிருந்தும்

மேற்கோள் காட்டியுள்ளார். திருமுருகாற்றுப்படையைப் “புலவராற்றுப் படை என்று வேறு பெயரிட்டுக் குறிப்பிட்டுள்ளார். ”சேரன் செங்குட்டுவனார் கண்ணகியைக் கடவுள் மங்கலம் செய்தற்குப் பிரிந்த பிரிவு சிலப்பதிகாரத்திற் கண்டுகொள்க ” எனவரும் உரைப் பகுதியின் மூலம் சிலப்பதிகார மேற்கோளை இளம்பூரணர் கையாண் டுள்ளமையைக் காண முடிகின்றது.

பல நூல்களிலிருந்தும் மேற்கோள் காட்டும் உரைக் கோட் பாட்டால் இளம்பூரணர் தமிழுக்கு ஆற்றியுள்ள பேருதவியும் அவருக்கு இருந்த பன்னூற் புலமையும் பெறப்படுகின்றன.

நாகரிகமும் பண்பாடும்

அக்காலத்தில் எட்டி காவிதி போன்ற பட்டம் பெற்றவர் களுக்குப் பூ அளித்தலும், நிலம் அளித்தலும் வழக்கமாய் இருந் துள்ளன. இதனை, ”எட்டிப்பூ. எட்டிப் புரவு, காவிதிப் பூ. காவிதிப் புரவு““ (தொல். எழுத்து. 155) என்ற இளம்பூரணர் எழுதியுள்ள உரை புலப்படுத்துகின்றது. அரசியல் அலுவலர் பற்றியும், தொழிலாளர் பற்றியும் இளம்பூரணர்

”எல்லாக் கொல்லரும் சேவகரும் தச்சரும்

புலவரும் எனவும், எல்லா நாயகரும் மணியகாரரும்
வணிகரும் அரசரும் எனவும் வரும்““

என்று தொல்காப்பிய எழுத்ததிகார 325ஆம் நூற்பாவின் உரைப்பகுதியில் குறிப்பிட்டுள்ளமை அறியமுடிகின்றது.

“ஏஎக் கொட்டில், சானலை துளைபுழை“ என்று இளம்பூரணர் தொல்காப்பிய எழுத்ததிகார (நூ. 277) உரைப்பகுதியில் குறிப்பிடு கின்றார். இதன் மூலம் அக்காலத்தில் அம்புகளை வைக்கக் கொட்டி லும் போர்க்காலத்தில் கோட்டையிலிருந்து பகைவர்மீது எய்ய அம்புப்புழை, துளை முதலியனவும் இருந்தன என்பதை அறிந்து கொள்ள முடிகின்றது. மேலும், வட்டம், சதுரம், கோணம் முதலிய வடிவங்கள் அமைக்கவும், கோணத்துள் கோணமும் கோணத்துள்வட்டமும் அமைக்கவும் அக்காலத்தவர் அறிந்திருந்தனர் என்பது வியப்பளிக்கும் செய்தியாகும். இதனை “வடிவாவது வட்டம் சதுரம் கோணம் முதலாயின (தொல். உவம.1) என்றும், “கோணா கோணம் கோணாவட்டம்“ (தொல். எழுத்து.312) என்றும் இளம்பூரணர் குறிப்பிட்டுள்ளார்.

கிராமங்களில் கோழிகளைச் சண்டையிடச் செய்து அவற்றின் வெற்றி தோல்விகளைக் கண்டு மக்கள் மகிழ்வது வழக்கம். இதனை, ”மேலைச் சேரிக்கோழி அலைத்தது எனக் கீழைச்சேரிக்கோழி அலைப்புண்டமை சொல்லாமையே முடிந்ததாம்”” என வரும் சொல்லதிகார உரைப் பகுதி விளக்குகின்றது. மேலும் எழுத்ததி காரத்தில் வெண்ணுக்கரை (வெண்ணாற்றங்கரை) எண்ணுப்பாறு (எள் ஏற்றிய தோணி) எண்ண நோலை (எள் உருண்டை) ஈமக்குடம் (பிணத்தை இடும் மிடா) முதலியவற்றை இளம்பூரணர் எடுத்துக்காட்டு களாகத் தருகின்றார். இதன்மூலம் இளம்பூரணர் அறிந்திருந்த அக்கால மக்களின் உணவு, பழக்க வழக்கம் ஆகியவற்றை அறிய முடிகின்றது.

மேற்கூறப்பட்ட செய்திகளின் மூலம் இளம்பூரணர் காலத்திய தமிழ்நாட்டு நாகரிகமும் பண்பாட்டுக் கூறுகளும் வெளிப்படுகின்றன.

அடைமொழி நயங்கள்

தொல்காப்பியர் பல நூற்பாக்களில் அடைமொழிகளைப் பயன்படுத்தியுள்ளார். அவ்வடைமொழிகளின் நயங்களை இளம் பூரணர் தம்முடைய உரைப் பகுதியுள் ஆங்காங்கே எடுத்துக்காட்டி யுள்ளமையைக் காணமுடிகின்றது.

”செங்கடு மொழியால் சிதைவுடைத் தாயினும்
என்புநெகப் பிரிந்தோள் வழிச்சென்றுகடைஇ
அன்புதலை அடுத்த வன்புறைக் கண்ணும்” 22

என்பது களவியல் நூற்பா. தோழியின் கூற்றுக்குச் செம்மை, கடுமை என்ற இரண்டு அடைமொழிகளையும் குறிப்பிடுகின்றார் தொல்காப் பியர். கொடுங்கடுமொழி என்றால் மனத்திலும் சொல்லிலும் இரண்டிடத்தும் வெறுப்பு என்றாகும். செங்கடுமொழி என்றதனால் செம்மை மனத்தகத்து அன்பையும்’ இனிமையையும் கடுமை வாயள வில் - சொல்லளவில் - கசப்பையும் கொடுமையையும் குறிக்கும் என நய உரை தருகின்றார் இளம்பூரணர்.

“செங்கடுமொழி என்றது கொடிய கடுமொழியேயன்றி மனத்தினான் இனியளாகக் கூறும் கடுமொழி என்பது இளம்பூரணருடைய உரை விளக்கமாகும்.

“எண்ணரும் பாசறைப் பெண்ணொடும் புணரார்“ (தொல். பொருள்.173) என்னும் கற்பியல் நூற்பா தலைமகட்குரியதோர் மரபினைக் கூறுகின்றது. இந்நூற்பாவில் வரும் எண்ணரும் பாசறை என்ற அடைமொழித் தொடருக்கு இளம்பூரணர் எழுதியுள்ள உரை மிகச் சிறப்பானது. “நினைத்தற்கரிய பாசறைக்கண் தலைமகளிரோடும் புணரார் தலைமக்கள் என்றவாறு. நினைத்தற்கருமை மாற்றாரை வெல்லுங் கருத்து மேற்கோடலிற் தலை மகளிரை நினைக்கலா காதாயிற்று என்று உரை எழுதியுள்ளார். மாற்றாரை வெல்லும் குறிக்கோள் கொண்ட தலைமகன் பாசறையில் இருக்கும்போது தலைமகளை நினைக்க மாட்டான் என்ற இளம்பூரணரின் கருத்து விளக்கம் நயம் பொருந்தியதாக உள்ளது.

சொல்நயம் - பொருள் நயம் - கருத்து நயம்

தொல்காப்பியப் புறத்திணை இயலில் உழிஞைத் திணை குறித்து “கொள்ளார் தேஎங் குறித்த கொற்றமும்“ (தொல். பொருள். 68) என நூற்பாவின் தொடக்கம் அமைகின்றது. “பகைவரது தேயத்தைக் கொள்ளக் குறித்த கொற்றமும் என்பது அவ்வடியின் பொருள். “கொள்ளார்“ என்ற சொல்லுக்குப் பொருள் “பகைவர் என்பதாகும். ஆனால் இளம்பூரணர் “கொள்ளார்“ என்ற சொல்லுக்கு.தன்னை இறையெனக் கொள்ளாரும் தன் ஆணையைக் கொள்ளாரும்“ என நயமாகப் பொருள் விளக்கம் தந்துள்ளார்.

““மரபுநிலை திரியா மாட்சிய வாகி
உரைபடு நூல்தாம் இருவகை நிலைய
முதலும் வழியும் என நுதலிய நெறியின”’

என்பது நூற்பா. முதல்நூல், வழிநூல் என்பன நூலின் இரு வகைகள் இளம்பூரணர் இவ்விரு பெயர்களைக் குறிப்பிடுவதோடு மேலும் இரு பெயர்களைக் குறிப்பிடுகின்றார். “சார்பு நூலென்பதும் ஒன்றுண்டாலெனின், அசூ.்.து இருவர் ஆசிரியர் கூறியதற்கு உடம்பட்டு வருதலின் அதுவும் வழிநூலென அடங்கும். எதிர்நூல் என்பதும் ஒன்றுண்டு. அதுவும் ஒரு முனைவனாற் செய்யப்படின் முதல்நூலாம்: பிறர் செய்யின் வழங்காது என்பது இளம்பூரணர் கருத்து.

ஒவ்வொரு இயலிலும் வரும் முதல் சூத்திரத்தைத் ‘தலைச் சூத்திரம்“ என்னும் நயமான சொல்லால் சுட்டுவது இளம்பூரணரின் தனிச் சிறப்பு. உரைநடை சிறப்புற அமைந்து, கருத்து விளக்கம் பெறுவதற்குக் காரணமாகத் திகழ்வது சொல்நயம். இத்தகைய உரைநடைப் போக்கு இளம்பூரணர் உரையில் அமைந்துள்ளது. சொற் களுக்கு நயப்பொருள் தரும் ஓர் அறிய கலை இளம்பூரணருக்குக் கைவந்த கலை என்பது மேற்கூறப்பெற்ற சான்றுகளான் பெறப்படும்.

தொல்காப்பியர் தலைமகன் தலைமகளைப் பார்த்து அணங்கு கொல்? ஆய்மயில் கொல்? கனங்குழை மாதர்கொல்? என ஐயம் கொள்ளுவதை,

“சிறந்துழி ஐயம் சிறந்தது என்ப
இழிந்துழி இழிபே சுட்டலான“

என்ற களவியல் நூற்பாவின் மூலம் குறிப்பிட்டுள்ளார். தலைவன். தலைவி இருவரிடையே ஐயமானது தலைமகனிடமே நிகழும்’ தலை மகளிடம் நிகழாது. இதற்கான காரணத்தை இளம்பூரணர் தம்முடைய உரையுள் மிக நுட்பமாக எடுத்துக் காட்டுகிறார். “ஐயப்படுவான் தலைமகன் என்று கொள்க. தலைமகள் ஐயப்படாதது என்னை யெனின். அவள் ஐயப்படுங்கால் தெய்வமோ வென்று ஐயுறல் வேண்டும். அவ்வாறு ஐயுற்றால் அச்சம் வரும். அசூ.ச்து ஏதுவாகக் காம நிகழ்ச்சி யுண்டாகாது“ என்பது இளம்பூரணரின் கருத்து, களவியலில் கூறிய இக்கருத்தினைப் பின்னால் பொருளியலிலும், “ஐயக் கிளவி ஆடூஉவிற்கு உரித்தே எனக் கூறுவர் தொல்காப்பியன் (அ) யின் இளம்பூரணர் களவியல் உரை விளக்கத்தில் கூறாத புதியதொரு பொருள் நயத்தினைக் கூறுகின்றார்.

“தலைவிமாட்டு ஐயக்கிளவியின் றென்றவாறாம். அதனாற் குற்றமென்னையெனின், தெய்வமென்று ஐயுறுங்கால் அதனை முன்பு கண்டறிவாளாதல் வேண்டும். காணாமையின் ஐயமிலள் என்க என்பது பொருளியல் உரை விளக்கத்தில் இளம்பூரணர் எழுதும் கருத்து.“தலைவன் தலைவியைத் தெய்வமோ என்று ஐயுறுகின்றானே. அங்கனமாயின் அவன் தெய்வத்தினை முன்பு கண்டறிந்தவனோ? என்று இளம்பூரணர் கருத்துக்கு மாற்றுக் கருத்துக் கூறலாம். ஆனால் ஒரு காரணத்தை - நயத்தைக் காட்டிய இளம்பூரணர் அத்துடன் இருந்துவிடாமல், பொருளியலில் மீண்டும் எண்ணிப் பார்த்து யாரும் இதுவரை கூறாத புதியதொரு காரணத்தைக் காட்ட முற்படுதல் சிறப்பாக அமைகின்றது.

தொல்காப்பியர் குறிப்பிடும் கருத்தினையொட்டி, இளம் பூரணர் குறிப்பிடும் சில கருத்துக்கள் நயம் நிறைந்தவையாக, பொருள் பொதிந்தவையாக உள்ளன.

“விருந்தே தானும் புதுவது புனைந்த யாப்பின் மேற்றே என்பது செய்யுளியல் நூற்பா. இந்நூற்பாவில் வரும் “புதுவது புனைதல் என்ற தொடருக்கு இளம்பூரணர் எழுதியுள்ள கருத்து விளக்கம் சிந்தனைக்குரியதாகும்.“புதியதாகப் புனைதலாவது. ஒருவன் சொன்ன நிழல் வழியின்றித் தானே தோற்றுவித்தல்“ என்பது அவரது உரைக் குறிப்பு. இன்றைய அறிவுலகம் “தற்படைப்பாற்றல் என்று போற்று வதனை இளம்பூரணர் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே “ஒருவன் சொன்ன நிழல்வழியின்றித் தானே தோற்றுவித்தல்“ என்னும் கருத்தின் வாயிலாகப் புலப்படுத்தியுள்ளார்.

அகத்திணையியல் கூறும் பிரிவு வகைகளில் ஓதற்பிரிவும் ஒன்று தலைவன் படிப்பதற்காக மேற்கொள்ளும் பிரிவு தமிழ்நாட்டிற் குள்ளேயே நிகழுமோ? அயல்நாட்டகத்தும் நிகழுமோ? இவ்வினாவுக்கு விடை தருகின்றார் இளம்பூரணர். “ஓதற்குப் பிரிதலாவது. நமது நாட்டகத்து வழங்காது பிற நாட்டகத்து வழங்கும் நூல் உளவன்றே, அவற்றினைக் கற்றல் வேண்டிப் பிரிதல்“ என்பது இளம் பூரணர் கருத்து. இக்கருத்து இந்நூற்றாண்டிற்கும் பொருந்துகின்றது. உயர்கல்வி கற்பதற்கும்: ஆய்வு செய்வதற்கும் அயல்நாடுகளுக்குச் செல்லும் பயணத்தை இந்தப் பிரிவு குறிக்கின்றது. தலைமகன் பிறமொழியில் வழங்கும் நூல்களைப் பயில வேற்றுநாட்டுக்குப் போதல் வேண்டும் என்னும் தொல்காப்பியரின் கருத்தினை இளம் பூரணர்

வெளியிட்டுள்ளார். நூற்கல்வியேயன்றிக் கையாற் பயிலும் தொழிற்கல்வியும், சிற்பக் கல்வியும், படைக்கலக் கல்வியும் வேண்டும் என்பது இளம்பூரணரின் குறிப்பாகும்.

எடுத்துக்காட்டு நயம்

ஒரு நூலுக்கு உரை எழுதுகின்றபோது எடுத்துக்காட்டுகளைத் தந்து கருத்தை விளக்குவது ஒரு சிறந்த முறையாகும். ஆனால் இலக்கண நூலில் எடுத்துக்காட்டுகள் தந்து கருத்து விளக்கம் செய்தல் மிகவும் கடினம். ஆனால் இளம்பூரணருக்கு அது எளிமையாகவே இருந்தது.

"துள்ளல் ஓசை கலியென மொழிப் என்ற செய்யுளியல் நூற்பா உரையில் "துள்ளலோசை கலிப்பாவிற்காம் என்றவாறு. துள்ளு தலாவது. ஒழுகு நடைத்தன்றி இடையிடையுயர்ந்து வருதல். கன்று துள்ளிற்றென்றார் போலக் கொள்க" என்ற உவமையைக் கூறி விளக்கியுள்ளமை சிறப்புக்குரியது.

"சந்தனக்கோல் குறுகினவிடத்துப் பிரப்பங்கோல் ஆகாது. அது போல், இகர உகரங்கள் குறுகின விடத்தும், அவை உயிர் ஆகற் பாலன என்று இளம்பூரணர் எழுத்ததிகாரத்தில் நயமான எடுத்துக் காட்டின் மூலம் இலக்கணக் கருத்தை விளக்கியுள்ளமை குறிப்பிடத் தக்கதொன்று.

இளம்பூரணர் பழமொழி போலத் தொடர்களையும் உவமை களையும் சுவைபட எடுத்தாள்கிறார். "ஊரெனப்படுவது உறையூர்: "நாடெனப்படுவது சோணாடு "எறும்பு முட்டை கொண்டு தெற்றி ஏறின் மழை பெய்யும், பசித்தான் பழஞ்சோறு தா என நின்றான். "கற்று வல்ல கணவர்க்குக் கற்புடையாள் போல, "திரு அமைந்த மாநகருக்கு உரு அமைந்த வாயின்மாடம் போல, "அணியிழை மகளிர்க்கு அவ்வணியிற் சிறந்த ஆடை போல", "விரல் நுனிகள் தலைப்பெய்தாற் போல "குறிச்சி புக்க மான் போல போன்றவற்றை எடுத்துக் காட்டுகளாக இங்குக் காணமுடிகின்றது.

""சொற்களுக்கு நேரான பொருளை எளிய முறையில் சுருக்க மாகச் சொல்லக் கூடியவர். பொருளை விளக்குவதற்குத் தேவையான அளவுக்கு மாத்திரம் விபரங்களையும் குறிப்பு களையும் எழுதிப் போவார். மேற்கோள்களை அதிகமாகக் கொட்ட மாட்டார். கூடுமான வரையிலும் பழைய தமிழ்ப் பண்பையும் மரபையும் தழுவியே சூத்திரங்களுக்கு உரை கூறுவார். அவர் சூத்திரங்களுக்கு எளிய முறையில் பொருள் கூறுவதையே முக்கியமாகக் கருதினார் 24 என்ற கூற்றிற்கு இளம்பூரணர் மிகப் பொருத்தமானவர் என்பதை மேற்கூறப் பெற்ற சான்றுகள் தெளிவுபடுத்துகின்றன.

பாலியல் அறிவு

ஒத்த தலைவனும், ஒத்த தலைவியும் ஒருவரை ஒருவர் காணுகின்ற போதெல்லாம் புணர்ச்சி வேட்கை தோன்றாது' விதியின் காரணமாகத்தான் அவ்வேட்கைத் தோன்றும் என்பதை.

“ஒன்றி உயர்ந்த பாலது ஆணையின்
ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப

என்ற களவியல் நூற்பா உரையில் “ஒருவரையொருவர் கண் டுழியெல்லாம் புணர்ச்சி வேட்கை தோற்றாமையிற் பாலதாணையான் ஒருவரையொருவர் புணர்தற்குறிப்பொடு காண்ப என்றவாறு என்று இளம்பூரணர் காதலின் தோற்றத்திற்கு அரிய விளக்கத்தினைத் தருகிறார்.

கணவனுக்கு மனைவியின் மீது இருக்கும் பேரன்பினை “வினைவயின் பிரிந்தோன் மீண்டு வருகாலை, இடைச்சுர மருங்கில் தவிர்தல் இல்லை என்ற கற்பியலின் இறுதி நூற்பா உரையில் இளம்பூரணர் எடுத்துக்காட்டியுள்ளார். “இடைச்சுர மருங்கிற் றவிர்தல் இல்லை“ என்பது வழியில் இடையிற் றங்காது இரவும் பகலுமாக வருமென்பது கருத்து. தங்குவானாயின் மனையாள் மாட்டு விருப்பமின்றாம் என்பது அவருடைய உரைப் பகுதி. துறவற நெறி சார்ந்த இளம்பூரண அடிகள் இல்லறத்தின் நல்லறத்தை எடுத்தி யம்பியுள்ளது கருதத் தக்கது.

”எல்லாவுயிர்க்கும் இன்பமென்பது தான் மனம் பொருந்தி வரு விருப்பத்தையுடைத்து என்றவாறு. எனவே மனம் பொருந்திய வழிப் பரத்தையர் மாட்டும் இன்பமுளதாகும் எனவும், பொருந்தாத வழி மனைவியர் மாட்டும் இன்ப மின்றாம் எனவும் கொள்க”

என்று இளம்பூரணர் எழுதியுள்ள உரைவிளக்கம் அவரது நுண்மாண் நுழைபுலத்தைக் காட்டுகின்றது. ‘பூப்பின் பிறப்பாடு“ எனத் தொடங்கும் நூற்பாவிற்கான பாலியல் அடிப்படையிலமைந்த விளக்கம் முன்னர் பல்துறைப் புலமை என்ற தலைப்பின்கீழ் கூறப்பட்டுள்ளது.

கருதுகோள் வழி கருத்துப் புலப்படுத்தல்

“இக்காடு போகிற் கூறை கோட்படின்
“எறும்பு முட்டை கொண்டு தெற்றியேறின்
மழை பெய்யும்

என்று வினையியலில் இளம்பூரணர் தரும் எடுத்துக் காட்டுகளில் கருதுகோள் கூறப்படுகிறது. மேலும் உலகத்துப் பொருளெல்லாம் இருவகைப்படும். இயற்கைப் பொருளும் செயற்கைப் பொருளும் என. இயற்கை உண்டெனில் செயற்கையும் உண்டு என்பது அனுமானமே. இக்கருத்தமைந்த உரைப்பகுதி கிளவியாக்கத்தில் இடம் பெற்றுள்ளது.

வழக்காறு சுட்டித் தம் மதம் கூறல்

சொல்லிய முறையால் சொல்லவும் படுமே என்ற நூற் பாவிற்கு விளக்கம் தருகின்றபோது, “உம்மை எதிர்மறையாகலான் இம்முறையன்றி பிற வாய்பாட்டால் சொல்லப்படும். காடு. நாடு, மலை. கடல் என்பதே பெருவழக்கு. காடுறை நிலம் என்னாது உலகம் எனக் கூறக் காரணம் ஐவகைப் பூதம் ஐந்திற்கும் உய்த்துணர வைத்தவாறு கண்டுகொள்க என்று வழக்காற்றினைச் சுட்டிக் கருத்தை நிறுவியுள்ளார்.

பிறன் உடன்பட்டது தான் உடன்படல்

உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே என்ற கிளவியாக்க நூற்பா உரையில் 'மக்களென்று சுட்டப்படும் பொருளை உயர்திணை என்று சொல்லுவர் ஆசிரியர் என்று பிறர் உடன்பட்டதைத் தான் உடன்பட்டுள்ளார். மேலும் "மெய்யுரை உள்ளோர் வாய்க் கேட்டு ணர்க என்று உரை எழுதும் போக்கும் இளம்பூரணருக்கு உண்டு. "தரும சூத்திரம் வல்லாரைக் கொண்டுணர்க", "மந்திரமாவது.. வல்லார் வாய்க் கேட்டுணர்க என்று பல இடங்களில் இவ்வாறு எழுதிச் செல்வதைக் காண முடிகின்றது.

இளம்பூரணர் தாம் கற்றுணர்ந்து உரை எழுதும் காரணத்தால் அவருக்குத் தயக்கம் இருந்திருக்கிறது. நூல் முழுமையிலும் இப்பண்பு காணப்படுகின்றது. பல இடங்களில் நன்கு தெளிவுபட இவர் சொல்லியிருப்பினும், சில இடங்களில் ஐயத்தோடு சொல்லுவார். இதற்குக் காரணம் இவருக்கு முன்னர் வழிகாட்டினோர் இல்லாமையே யாகும். "இதுவும் மெய்யுரை போலும் . "இதுபோலும் கருத்து என்று எழுதியுள்ளமை அவர்தம் உரைப்போக்கின் பண்பினைப் புலப் படுத்தும்.

மறுக்கும் முறை

பிறருடைய கருத்தை மறுத்து எழுதும் உரைமரபினை இளம்பூரணரிடம் காண முடியவில்லை. தொல்காப்பியம் முழுமைக் கும் உரை எழுதிய முதல்வர் ஆதலால் அப்போக்கு அவரிடம் இல்லை.

"இளம்பூரணர் பிறரது உரையையும் கூறிச் செல்கின்றாரே யன்றி. எங்குமே பிறரை மறுக்கும் வழக்கம் இல்லை. பின்வந்த உரையாசிரியர்களிடம் வந்த கண்டனம் இவரிடத்து இல்லை. இந்த முறையில் ஒரு நாகரிகமான உரை முறை யினையே இவர் வகுத்துத் தந்தார் என்று கூறலாம்"25 என்ற கருத்து இங்குக் குறிப்பிடத்தக்கது. இருப்பினும்,

"எனவே இந்நூலும் அவற்று வழிநூலும் எடுத்துக்காட்டுங் கால் தனக்கு முதல்வராயினாரை நாட்டி அவர் கருத்தே பற்றிப் பிறர் செய்தாரேனில்லது பிறர்மேல் தலைமை நிறீஇ அவர் கருத்துப் பற்றி இவர் செய்தானைக் கூறார். அங்ஙனங் கூறின் அவர் நூற்கே உரையெழுதுவானல்லனோ வென மறுக்க என்று மறுத்து எழுதும் உரைப்போக்கினைக் காண முடிகின்றது.

தம் கால வழக்கு

"எல்லா மொழிக்கும் உயிர்வரு வழியே
உடம்படு மெய்யின் உருபுகொளல் வரையார்"

என்ற நூற்பா உரை "உரையிற்கோடல் என்பதனால், உடம்படு மெய்யாவன யகரமும் வகரமும் எனக் கொள்க. இகர ஈறும் ஈகார ஈறும் ஐகார ஈறும், யகர உடம்படுமெய் கொள்வன எனத் தம் கால வழக்கினை ஒட்டி உரை எழுதியுள்ளார்.

அச்சுப் போலப் பூப்பூக்கும்! அமலே என்னக் காய் காய்க்கும் என்ற விடுகதை (பிசியையும் இளம்பூரணர் கூறியுள்ளார். இச்செய்திகளான் தம் கால வழக்குகளைக்

கையாண்டுள்ளார் என்பது புலனாகிறது.

மொழிப் பயன்படுத்தல்

இளம்பூரணர் இனிய எளிய மொழிநடையையே பயன்படுத்தி யுள்ளார். இப்பண்பினை அவருடைய உரை காட்டிச் செல்கின்றது.

"இளம்பூரணர் உரைநடை வினா-விடை என்ற போக்கி லேயே அமைந்துள்ளது. உரைநடைப் பண்புகளாகிய சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல், தெளிவாகக் கூறுதல். மிக நீண்ட வாக்கியங்களை விடுத்துச் சிறுசிறு வாக்கியங்கள் அமைத்தல் ஆகியவை இவர் உரைநடையில் காணக் கிடைக்கின்றன"2" என்ற கருத்தும்.

"எளிமையாகவும், தெளிவாகவும் ஆசிரியருடைய கருத்தை மட்டும் விளக்கிக் கொண்டு செல்வது இவர் உரையின் இயல்பு. தம்முடைய கல்விப்பெருக்கைக் காட்ட இவர் எண்ணவில்லை. விரிவாகவோ கேட்போர் வியக்கும்படியோ சொல்லும் நோக்கத்தைஇவர் கொள்ளவில்லை. பிறரை மதித்து எழுதுவதும் கருத்து வேறுபாடு வந்தபோது மறுப்புத் தெரிவிக்காமல் சொல்லிக்கொண்டு போவதும் இவருக்கு அமைந்த தன்மைகள். இவர் உரை சுருக்கமான உரை "6 என்ற கருத்தும் இளம்பூரணரின் மொழிப் பயன்படுத்தல் பற்றி அறிய உதவுகின்றன.

"இளம்பூரணர் நடை வினா-விடை அமைப்பில் அமைந்துள் ளது. களவியல் உரையினின்றும் சிறிது வேறுபட்டுள்ளது. தம் கூற்றாய் அமைந்த வாக்கியங்களை ஒன்றன் பின் ஒன்றாக அமைத்துச் செல்லுதலை இவரது உரைநடையில் காணலாம். இவரது நடை தெளிந்த நீரோடை போன்றது. மிகச்சுருக்கமாகக் கருத்தைத் தெளிவாக விளக்குவார். தமது கருத்தே சிறந்தது என எங்கும் வலி யுறுத்திக் கூறவில்லை. புலமை முதிர்ச்சியும் நடுநிலைமையும் உரையெங்கும் காணப்படுகின்றன" என்ற கருத்து இளம்பூரணரின் மொழிப் பயன்படுத்தத்திற்கு முத்தாய்ப்பாய் விளங்குகின்றது.

சிறப்பியல்புகள்

இளம்பூரணர் உரைக் கோட்பாடுகளின் சிறப்பியல்புகளாகப் பின்வருவன கொள்ளப்படுகின்றன.

1. முன்னுரை, பதப்பொருள், எடுத்துக்காட்டு,விளக்கம் என்ற உரைப்போக்கு
2 இயைபு நோக்கிய உரை
3. இரண்டு மூன்று நூற்பாக்கட்கு ஒன்றாக உரை எழுதுவது
4. ஒரு நெறியின்றி பல்வேறுபட்ட நெறியில் உரை எழுதும் போக்கு
5. தமிழ் மரபையே பின்பற்றும் உரை இயல்பு
6. சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல்
7 சிறு சிறு தொடர்களில் தெளிவாகக் கூறுதல்
8. நேரான பொருளை எளிய முறையில் சொல்லுதல்
9. தொடர்களை ஒன்றன்பின் ஒன்றாக வைத்துத் தம் கூற்றாய்ச் சொல்லுதல்
10. வினா-விடைப் போக்கு

முன்னுரை, பதப்பொருள், எடுத்துக்காட்டு, விளக்கம் என்ற உரைப்போக்கு

இளம்பூரணரின் உரைப்போக்கு முன்னுரை, பதப்பொருள். எடுத்துக்காட்டு, விளக்கம் என்ற நான்கு நிலைகளில் அமைந்துள்ளது. கருத்துப் புலப்படுத்தல் நெறிக்கு இளம்பூரணர் மேற்கொண்ட இவ்வுரைப்போக்கு அவருடைய சிறப்பியல்பாக அமைந்துள்ளது. "மூல நூலை விளக்க வந்தனவற்றைப் புலப்படுத்தும் நெறி எனவும் அங்ஙனம் விளக்கு முகத்தான் உரையாசிரியர் கையாளும் வெளியீட் டுத்திகளைப் புலப்பாட்டு நெறி எனவும் குறிப்பிடலாம்" என்ற கருத்தை இங்குக் குறிப்பிடுவது பொருத்தமாக அமையும்.

"இசைதிரிந் திசைப்பினும் இறையுமன் பொருளே
அசைதிரிந் திசையா என்மனார் புலவர்

என்ற பொருளியலின் முதல் நூற்பா உரைப்பகுதி இங்குக் காட்டற் குரியது.

"இவ்வோத்து என்ன பெயர்த்தோ எனின், பொருளியல் என்னும் பெயர்த்து: பொருளியல்பு உணர்த்தினமையாற் பெற்ற பெயர். என்னை பொருளியல்பு உணர்த்தியவாறு எனின், மேற்சொல்லப்பட்ட ஒத்துக்களினும் இனிச் சொல்லும் ஒத்துக்களினும் வரும் பொருளினது தன்மையுணர்த்துதலிற் பொருளியல் உணர்த்திற்றாம். இதனை "ஒழிபியல்" எனினும் இழுக்காகாது. அகப்பொருள், புறப்பொருள் என்பன இரண்டு பொருண்மையினும் எஞ்சி நின்றன கூறினமையின் என்று பொருளியலுக்கு முன்னுரையையும், "இதன் தலைச்சூத்திரம் என்னுதலிற்றோ எனின், தொடர்மொழிக்கட் பொருள் இயையுமாறு உணர்த்திற்று" என்று நூற்பாவிற்கு முன்னுரையையும் தந்துள்ளார்.

"இசை திரிந்து ஒலிப்பினும் பொருள் இயையும்' அவ்வழி அச்சொற்கு அங்கமாகிய அசை திரிந்தொலியா என்றவாறு என்றது சொல்லொடு சொல் தொடர்புபடும் வாய்பாட்டால் தொடராது பிறிதோர் வாய்பாட்டால் தொடுப்பினும் பொருட்டொடர்பு உண்டாயிற் பொருள் இயையும் வழி அசைச் சொற்கள் திரியாது நின்ற நிலையே பொருள் படுமாறாயிற்று என்று பதப்பொருள் குறிப்பிட்டுள்ளார்.

"கார்விரி கொன்றைப் பொன்னேர் புதுமலர்த்
தாரன் மாலையன் மலைந்த கண்ணியன்
.....
மூவா அமரது முனிவரும் பிறரும்
யாவரும் அறியாத் தொன்முறை மரபின்
வரிகிளர் வயமான் உரிவை தைஇய
யாழ்கெழு மணிமிடற் றந்தணன்
தாவில் தாள்நிழல் தவிர்ந்தன்றால் உலகே"

என்ற அகநானூற்றின் கடவுள் வாழ்த்துப் பாடலை எடுத்துக்காட்டாகக் காட்டியுள்ளார்.

"இதற்குக் கொன்றையாலமைந்த தாரினனாய் மாலையனாய்க் கண்ணியனாய் நுண்ஞாண் மார்பினனாய் இமையா நாட்டத்து நுதலினனாய்க் கணிச்சியு மழுவு வேலும் ஏந்திய கையினனாய் யாவர்க்குந் தோலாதோனுமாய் ஏற்றினையு மூர்ந்து உமையாளையுஞ்

சேர்ந்து செவ்வானன்ன மேனியையும் பிறை போன்ற எயிற்றி னையும் உடையனாய்ப் புலியதளையும் உடுத்த யாழ்கெழு மணிமிடற் றந்தணனது சிவானுபூதியிற் பேருலகந் தங்கிற்று எனப் பொருள் உரைக்குங் காலத்து. அதன்கண் இடைக்கிடந்த சொற்கள் முன்னொடு பின் வாய்பாட்டாற் போந்த பொருளுரைப்பச் சேர்ந்தவாறும் இசை திரிந்து இசைத்தவாறும் அவை தத்தம் நிலையிற் குலையாமை நின்று பொருள் பட்டவாறுங் கண்டு கொள்க என்று விரிவானதொரு விளக்கமும் தந்துள்ளார்.

இயைபு நோக்கிய உரை

பொருள் இயைபுபட எழுதுவது இன்றியமையாத தொன்று. ஒரு பத்திக்கும் மறு பத்திக்கும். ஒரு நூற்பாவிற்கும் அடுத்த நூற்பா விற்கும், ஒரு காதைக்கும் அடுத்த காதைக்கும். ஒரு படலத்துக்கும் அடுத்த படலத்துக்கும், ஓர் இயலுக்கும் அடுத்த இயலுக்கும் இயைபு வேண்டும். இத்தன்மையினை இளம்பூரணர் உரை வெளிப்படுத்திச் செல்கின்றது.

எழுத்ததிகார இயல்கட்குத் தரும் விளக்கங்கள் இங்கே குறிப்பிடற்குரியன. இவ்வோத்து என்னுதலிற்றோவெனின், அதுவும் இதன் பெயர் உரைப்பவே அடங்கும். இவ்வதிகாரத்தால் சொல்லப் படும் எழுத்திலக்கணத்தினை ஓராற்றால் தொகுத்து உணர்த்துதலின் நூன்மரபு என்னும் பெயர்த்து. இதனுட் கூறுகின்ற இலக்கணம் மொழி யிடை நின்ற எழுத்திற்கன்றித் தனிநின்ற எழுத்திற்கென உணர்க.

"இவ்வோத்து என்ன பெயர்த்தோவெனின், மொழிகளுக்கு எழுத்தான் வரும் மரபு உணர்த்தினமையின் மொழிமரபு எனப்பட்டது. இதனுள் கூறுகின்றது தனிநின்ற எழுத்திற்கு அன்றி மொழியிடை நின்ற எழுத்திற்கு எனவுணர்க!

"இவ்வோத்து என்ன பெயர்த்தோவெனின், எழுத்துக்களது பிறப்பு உணர்த்தினமையின் பிறப்பியல் என்னும் பெயர்த்து. இதனை நூன்மரபின் பின்னே வைக்கவெனின், சார்பிற்றோற்றத்து எழுத்தும் தனிமெய்யும் மொழி மரபிடை உணர்த்திப் பிறப்பு உணர்த்த வேண்டுதலின், மொழிமரபின் பின்னதாயிற்று.

"இவ்வோத்து என்ன பெயர்த்தோவெனின் மொழிகள் (மேற் செய்கையோத்துக்களுள்) புணர்தற்குரிய கருவியின் இயல்பு கூறின மையின் புணரியல் எனப்பட்டது. மேல் மொழிமரபிற் கூறிய மொழி கள் புணருமாறு உணர்த்தினமையின் மொழி மரபினோடு இயைபு டைத்தாயிற்று.

இவ்வாறு அனைத்து இயல்கட்கும் இயைபு காட்டும் முறை காணப்படுகின்றது.

இரண்டு மூன்று நூற்பாக்கட்கு ஒன்றாக உரை எழுதுவது

ஒவ்வொரு நூற்பாவிற்கும் தனித்தனியாக உரை எழுதுதல் மரபு. ஆயினும் பொருள் இயைபு நோக்கி இரண்டு மூன்று நூற்பாக்கட்கு ஒன்றாக உரை எழுதும் மரபினையும் இளம்பூரணரிடம் காண முடிகின்றது.

"ஆன்முன் வருஉம் ஈகார பகரந்
தான்மிகத் தோன்றிக் குறுகலும் உரித்தே"

“குறியதன் சினைகெட உகரம்
அறிய வருதல் செய்யுளுள் உரித்தே “

என்ற இரண்டு நூற்பாக்களும் உயிர்மயங்கியலில் அடுத்தடுத்து வரும் நூற்பாக்களாகும். “இவ்விரண்டு சூத்திரமும் உடன் எழுதப்பட்டது உரையியைபு நோக்கி“ என்று இரண்டு நூற்பாக்கட்கு ஒன்றாகவே உரை எழுதியுள்ளார்.

“மக்கள் தாமே ஆறறி வுயிரே. என்ற சூத்திரத்தின் பின் ”ஒருசார் விலங்கும் உளவென மொழிப் என்ற ஒரு சூத்திரம் சொல்லி, இதுவுமது, விலங்கினுள் ஒரு சாரனவும் ஆறறிவுயிராம் என்றவாறு. அவையாவன கீரியும், குரங்கும். யானையும் முதலியன என்று எழுதுகிறார். இப்படிப் புதிதாக ஒரு சூத்திரத்தைச் சொல்லிப் பொருள் கூறும் உரை மரபும் இளம்பூரணரிடம் அமைந்துள்ளது. “ஒருசார் விலங்கும் உளவென மொழிப் என்ற சூத்திரம் இளம்பூரணர் கூறும் புதிய சூத்திரமாகும்.

ஒரு நெறியின்றிப் பல்வேறுபட்ட நெறிகளில் உரை எழுதும் போக்கு

இளம்பூரணர் அதிகார விளக்கம். இயல் பற்றிய சுருக்கம். நூற்பா நுதலும் பொருள் தெளிவுரை, சொற்றொடர் விளக்கம், தமிழ்ச் செய்யுள் மேற்கோள் காட்டி விளக்கம் தருதல் முதலிய நெறி முறை களைப் பின்பற்றி உரை எழுதியுள்ளார். ஆயினும் இந்நெறி முறை யைத் தொல்காப்பியம் முழுமைக்கும் பின்பற்றியதாகத் தெரிய வில்லை. வேறுபிற நெறிமுறைகளையும் பின்பற்றி உரை எழுதி யுள்ளார்.

இளம்பூரணர் உரை கூறும் நெறிகளாக ”ஒன்றின முடித்தல் 177, 139, 141, 155, 326, 357), 2 (13, 178, 211, 324, 471), ஞாபகம் (125), தந்துபுணர்ந்துரைத்தல் (36), இரட்டுற மொழிதல் (68). ஒன்றென முடித்தல் (213), தன்னின முடித்தல் (17, 33, 50, 111, 211) ஆகிய உத்திகளைக் கையாள்கின்றார்” என்று பி. தெட்சினாமூர்த்தி குறிப்பிட்டுள்ளார்.

““பாயிரம் உரைத்தபின் இளம்பூரணர் விரிவாக அதிகாரம் பற்றிக் கூறி, முதல் இயலாகிய நூன்மரபியல் - இவ்வோத்து என்ன பெயர்த்தோ எனின் என்று தொடங்கி அதை விளக்கிய பின் இத்தலைச் சூத்திரம் என் நுதலிற்றோ எனின் என்று தொடங்கி அதற்குக் கருத்துரை முதலில் எழுதி, பின் உரை கூறி, தேவையான இடங்களில் பலவகை விளக்கமும் எழுதுகிறார். இந்த முறையை எல்லாச் சூத்திரங்களுக்கும் பின்பற்றுகிறார்.

ஆனால் சொல்லதிகாரத்தில் மட்டும் இந்த நெறியைக் கடைப் பிடிக்கவில்லை. சில சமயம் கருத்துரை எழுதினாலும், பல சமயம் எழுதுவதில்லை. கருத்து,சொற்பொருள். எடுத்துக்காட்டு, விளக்கம் ஆகியவற்றில் சில மட்டுமே கூறுகிறார். ஒவ்வொரு சூத்திரத்திற்கும் தனித்தனியே உரை எழுதுவது தான் இவரது இயல்பு. எனினும், சில சமயம் “இது சூத்திரத்தாற் பொருள் விளங்கும்“ என்றெழுதி வேறு பொருள் எழுதாமலே விடுவதும் உண்டு. இது அபூர்வம்” என்று மு. அருணாசலம். இளம்பூரணர் ஒரு நெறியின்றிப் பல்வேறுபட்ட நெறியில் உரை எழுதும் போக்கினைக் கூறியுள்ளார்.

““இவர்தம் உரை (இளம்பூரணர்) ஒரு நெறியில் இல்லாது பலவாறாக உள்ளது. என்னுதலிற்றோ எனின் என்று தொடங்கிப் பல நூற்பாக்களுக்கு உரை கூறுவர். சிலவற்றிற்கு

அந்நெறியைக் கைவிடுவர். பல நூற்பாக்களுக்குக் கருத்து. பதப்பொருள், காட்டு, விளக்கம் என முறையே விரித்துச் செல்வர். சில நூற்பாக்களுக்குக் கருத்து மட்டுமே கூறி விடுப்பதும் சில நூற்பாக்களுக்கு ஒரு பகுதி விளக்கந் தந்து ஒரு பகுதிக்கு விளக்கந் தராது வாளாவிடுப்பதும் உண்டு.

ஒவ்வொரு நூற்பாவிற்கும் தனித்தனியே உரை வகுத்துப் போதலே இவர்தம் இயல்பு. அங்களமின்றி ஒரோவழி உரை இயையு நோக்கி ஒன்றாக உரைக்கப்பட்டது என ஓரிரு நூற்பாக்களைக் கூட்டி உரை எழுதுதலும் உண்டு." என்ற கருத்தும் ஈண்டு நினைவுகொள்ளற்குரியது.

தமிழ் மரபையே பின்பற்றும் உரை இயல்பு

பண்டைக் காலத்தில் தமிழ் கற்றார் அனைவருமே வடமொழி யும் கற்றிருந்தனர். இளம்பூரணரும் வடமொழி கற்றவர் என்பது உண்மை. ஆனால் இவர் வடமொழிப் புலமையுடையவர் என்று கருது வதற்குச் சான்றுகள் இல்லை. சிவஞான முனிவர் தொல்காப்பியச் சூத்திர விருத்தியில் "தமிழ்நூல் ஒன்றே வல்ல உரையாசிரியர்" என்று இளம்பூரணரைக் குறிப்பிடுகின்றார். இக்கருத்து உண்மையானதே. ஏனெனில் இளம்பூரணரின் வடமொழிப் புலமைக்குச் சான்றுகள் போதியளவு காணப்பெறவில்லை.

தமிழ் இலக்கணத்தைத் தமிழ் இயல்பைக் கொண்டு மட்டுமே விளக்க வேண்டும் என்பது இளம்பூரணரின் கொள்கை.. "இதனை, மிகைப்படக் கூறலாவது அதிகாரப் பொருளன்றிப் பிறபொருளுங் கூறதல் அசூ.ர்தாவது தமிழிலக்கணஞ் சொல்லுவானெடுத்துக் கொண் டான் வடமொழியிலக்கணமும் கூறல்" என மரபியல் நூற்பா ஒன்றின் உரை விளக்கத்தில் குறிப்பிட்டுள்ளார். தமிழ் இலக்கண உரையில் வடமொழி இலக்கணக் கூறுகளை இணைத்து வடநூலை விட்டுத் தனியே தமிழ்நூல் நடவாது என்று கூறமாட்டார் என்பது கருதற்குரியது.

சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல்

இளம்பூரணரின் உரை இயல்புகளில் குறிப்பிடத்தக்கது சுருங்கச் சொல்லிவிளங்க வைத்தல் ஆகும். இவ்வியல்பை பல இடங்களில் உரைப்பகுதி விளக்கிச் செல்கின்றது. மெய்ப்பாட்டியலில் "சுவை" என்பதை விளக்குகின்றார். சுவை என்பது "காணப்படும் பொருளால் காண்போர் அகத்தில் வருவதோர் விகாரம்" என்று எழுதுவது சுவைக்குச் சுருக்கமான சிறந்த விளக்கமாகும். காணப் படும் பொருளே சுவையல்ல. அக்காட்சியால் உள்ளத்தில் எழும் உணர்வே சுவை என்று கூறியுள்ளமை கருதத்தக்கது.

"ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப

இச்சூத்திரம் பொருளதிகாரத்தில் இடம் பெற்றுள்ளது. இச்சூத்திர முகவுரையில் "பேதை முதலாகப் பேரிளம்பெண் ஈறாக வருவது என்று எழுதுகின்றார். இவர் சுருக்கமாகக் கூறியதை பின்வந்த நச்சினார்க்கினியர் விளக்கி எழுதுகின்றார். "தோற்றமும் என்றது அக்காமந் தேவரிடத்தும் மக்களிடத்தும் விளங்கும் விளக்கத்தன. அது பின்னுள்ளோர் ஏழு பருவமாகப் பகுத்துக் கலிவெண்பாட்டாகச் செய்கின்ற உலாச் செய்யுளாம்" என்பது நச்சரின் உரை.

பொருளை ஒருவனுக்கு எவ்வாறு உணர்த்துவது என்பது பற்றி இளம்பூரணர் விளக்கம் தருகிறார். "உறு என்ற பதம் மிகுதிப் பொருட்டு என்றக்கால் அம் மிகுதியையும் அதனாலே உணரலாம். உணருமாறு வல்லாற்குப் பிறசொற் கொணர்ந்து உரைத்தல் வேண்டா என்று எழுதிவிட்டு, உணர்ச்சி வாயில் உணர்வோர் வலித்தே என்பதற்கு யாம் சொல்லிய சொல்வாயிலே பற்றி உணர்த்துக. அத் துணையால் உணர்வார்க்கு அதுவே உணர்ச்சி வாயிலாம். அல்லாக் கால் அவ்வுணர்வோரை வலித்தாமாற்றால் உணர்த்துக என்பதாம். என்னை? "பரவும் பழிச்சும் வழுத்தின் பொருள என்பதனால் உணராத மடவோரை மற்றொரு வாய்பாட்டால் உணர்த்துக. அல்லாக்கால் மேல்நோக்கிச் சில மலர் கொடு தூவிக் காட்ட உணருமேல் அசூ.ச்தே உணர்ச்சி வாயிலாக அறிக என்பது " சொல்லால் உணர்த்த முடியாத வழிச் சைகையாலும் உணர்த்தலாம் என்று இளம்பூரணர் காட்டுகிறார்.

சிறு சிறு தொடர்களில் தெளிவாகக் கூறுதல்

சிறு சிறு தொடர்களில் பொருளைத் தெளிவாகக் கூறுதல் என்பது இளம்பூரணரின் தனிச்சிறப்பு. இதனை,

"இவ்வறுவகைப் பருவமும் அறுவகைப் பொழுதும் இவ் வைந்திணைக்கு உரியவாறு என்னை யெனின், சிறப்பு நோக்கி என்க. என்னை சிறந்தவாறு எனின்? முல்லையாகிய நிலனும், வேனிற்காலத்து வெப்பம் உழந்து மரனும் புதலும் கொடியும் கவினிழந்து கிடந்தன. புயல்கள் முழங்கக் கவின் பெறும் ஆகலின், அதற்கு அது சிறந்ததாம். மாலைப் பொழுது இந்நிலத்திற்கு இன்றியமையாத முல்லை மலருங் காலம் ஆதலானும், அந்நிலத்துக் கருப்பொருளாகிய ஆனிரை வருங்காலமாதலானும், ஆண்டுத் தனியிருப் போர்க்கு இவை கண்டுழி வருத்தம் மிகுதலின். அதுவும் சிறந்தது ஆயிற்று. குறிஞ்சிக்குப் பெரும்பான்மையும் களவிற் புணர்ச்சி பொருளாதலின். அப்புணர்ச்சிக்குத் தனி இடம் வேண்டுமன்றே. அது கூதிர்காலத்துப் பகலும் இரவும் நுண்துளி சிதறி இயங்குவார் இலராம் ஆதலான். ஆண்டுத் தனிப்படல் எளிதாகலின் அதற்கு அது சிறந்தது. மருதத்திற்கு நிலன் பழனஞ் சார்ந்த இடமாதலான், ஆண்டு உறைவார் மேன்மக்களாதலின், அவர் பரத்தையிற் பிரிவுழி அம்மனை யகத்து உறைந்தமை பிறர் அறியாமை மறைத்தல் வேண்டிய வைகறைக்கண் தம் மனையகத்துப் பெயரும் வழி, ஆண்டு மனைவி ஊடலுற்றுச் சார்கிலளாமாதலால், அவை அந்நிலத் திற்குச் சிறந்தன. நெய்தற்குப் பொரும்பான்மையும் இரக்கம் பொருளாதலின், தனிமையுற்று இரங்குவார்க்கு பகற் பொழு தினும் இராப்பொழுது மிகுமாதலின், அப்பொழுது வருதற் கேதுவாகிய எற்பாடு கண்டார். இனி வருவது மாலையென வருத்தமுறுதலின், அதற்கு அது சிறந்தது என்க" எனவரும் உரைப்பகுதி விளக்குகின்றது.

நேரான பொருளை எளிய முறையில் சொல்லுதல்

நூற்பாவிற்குரிய நேரான பொருளை எளிய முறையில் சொல்லுதலைச் செய்யுளியல் மற்றும் மரபியலில் காண முடிகின்றது.

"வேழக் குரித்தே விதந்துகளி றென்றல்"

களிறென்று விதந்து கூறுதல் யானைக்குரித்து என்றவாறு.

“கேழற் கண்ணுங் கடிவரை இன்றே“

பன்றியின் கண்ணும் கடியப்படாதென்றவாறு. ஆண்பாலைக் களிறென்றல்

“புல்வாய் புலிஉழை மரையே கவரி

சொல்லிய கராமோ டொருத்தல் ஒன்றும்“

புல்வாய் முதலாயின அறுவகையுயிரும் ஒருத்தலென்ன ஆண்பெயர் ஒன்றும் என்றவாறு.

“வார்கோட்டி யானையும் பன்றியும் அன்ன“

யானையும் பன்றியும் ஒருத்தலெனப்படு மென்றவாறு.

“ஏற்புடைத் தென்ப எருமைக் கண்ணும்“

எருமையினும் ஆணினை ஒருத்தலென்று கூறப்படும் என்றவாறு.

இவ்வாறு மரபியலில் அமைந்திருக்கும் நூற்பாக்களுக்கு நேரான பொருளை எளிய முறையில் இளம்பூரணர் தெளிவாகக் குறிப்பிட் டுள்ளார்.

தொடர்களை ஒன்றன் பின் ஒன்றாக வைத்துத் தம் கூற்றாய்ச் சொல்லுதல்

”களவு ஆதல் ஈண்டு உரைக்கின்றதனால் பயன் இன்றாம். களவென்பது அறம் அன்மையின் எனில், அற்றன்று’ களவு என்னும் சொற்கண்டுழியெல்லாம் அறப்பாற்படாதென்றல் அமையாது. களவா வது. பிறர்க்குரிய பொருளை மறையிற் கோடல் இன்னதன்றி ஒத்தார்க்கும் மிக்கார்க்கும் பொதுவாகிய கன்னியரைத் தமர் கொடுப்பக் கொள்ளாது. கன்னியர் தம் இச்சையினால் தமரை மறைத்துப் புணர்ந்து பின்னும் அறநிலை வழாமன்றால். இசூ.ூ.து அறமெனப்படும்.

“அறனும் பொருளுமின்பமும் என்னாது, இன்பமும் பொரு ளும் அறனும் என்றது என்னையெனின், பலவகை யுயிர்கட்கும் வரும் இன்பம் இருவகைப்படும். அவையாவன போகம் நுகர்தலும் வீடுபெறுதலும் என. அவற்றுள் வீடுபேறு துறவறத்தில் நின்றார்க் கல்லது எய்தல் அரிதாயிற்று போகம் நுகர்தல் மனையறத்தார்க் செய்துவது. அவரெய்தும் இன்பமும் அவ்வின்பத்திற்குக் காரண மாகிய பொருளும் அப்பொருட்குக் காரணமாகிய அறனும் எனக் காரிய காரணம் நோக்கிய வைத்தார் என்க. இதனாற் சொல்லியது ஈண்டுக் களவென்றோதப்படுகின்ற ஒழுக்கம் அறம் பயவாத புறநெறி யன்று’ வேத விதியாகிய தந்திரம் என விகறிபமாகிய நெறி கூறியவாறு

மேற்குறிப்பிட்டுள்ள உரைப்பகுதிகள் களவியலின் தொடக் கத்திலும் முதற் சூத்திரத்திலும் இடம்பெற்றுள்ளன. இப்பகுதியில் களவியலுக்கு இளம்பூரணர் தரும் விளக்கம் அவர் கூற்றாகவே அமைந்துள்ளது. இவ்வுரைப்போக்கு ஆங்காங்கு இளம்பூரணர் உரையில் காணப்படுகின்றது.

வினா - விடைப் போக்கு

உரையாசிரியர்களின் உரைக் கோட்பாடுகளில் ஒன்று வினா விடைப் பாங்கில் எழுதிச் செல்வது. கற்பவர்க்குத் தெளிவு செய்யும் நோக்குடன் அவர்கள் இடையிடையே வினாக்களைத் தொடுத்து. தகுந்த விடைகளையும் கூறியுள்ளனர். இப்போக்கு இளம்பூரணரி டமும் அமைந்துள்ளது.

”ஒரு பொருளை விளக்குமிடத்து முதலில் வினாவாக்கிய மொன்றை அமைத்து ஈற்றில் அதற்கு நேர் விடையுருவ வாக்கியம் அமைத்து, நடுவிலே வினா உருவமாகவும் விடை உருவமாகவும் அமையாதனவாய் விளக்குகின்ற சில வாக்கியங்களை அமைத்துக் கூறும் வகையினை நாம் இளம்பூரணரின் உரையிலே காண முடிகின்றது.” என்று சுந்தர, கலிவரதன் குறிப்பிட்டுள்ளார்.

அகத்திணை இயலில் பிரிவு பற்றித் தொல்காப்பியர் விரிவாகப் பேசுகின்றார். ஆனால் பரத்தையிற் பிரிவு குறித்துக் கூறவில்லை. அதற்கான காரணத்தை.

”இத்துணையும் பிரிவு ஆறுவகைப்படும் என்றவாராயிற்று. அசூ.்.தேல் பரத்தையிற் பிரிவு என்பதோ எனின், அது நிலம் பெயர்ந்து உறையாமையானும், இவைபோல் சிறக்காமை யானும் அது முறைமை செய்யப் பிரிதலும் பொருள் காரணமாகப் பிரிதலுமின்றிப் பிரிதலினாலும், கற்பியலுள் கூறப்படும் என்க”3 என்று வினா - விடைப் போக்கில் கூறியுள்ளார்.

அதிகாரத்தையும். இயலையும். தலைச் சூத்திரத்தையும் வினாவிடைப் பாங்கில் தொடங்கி விளக்கம் தருகின்றார்.

“இவ்வதிகாரம் என்ன பெயர்த்தோ எனின், பொருளதிகாரம் என்னும் பெயர்த்து. இது பொருள் உணர்த்தினமையாற் பெற்ற பெயர்:

“இவ்வோத்து என்ன பெயர்த்தோ வெனின், கற்பியல் என்னும் பெயர்த்து, கற்புக்கு இலக்கணம் உணர்த்தினமையாற் பெற்ற பெயர்.

“இவ்வோத்தினும் இத்தலைச் சூத்திரம் என்னுதலிற்றோ எனின் இளமைப் பெயராமாறு உணர்த்துதல் நுதலிற்று! முதலியன இங்குக் குறிக்கத் தக்கன.

மேற்கூறப்பட்ட கருத்துகளின் மூலம் இளம்பூரணரைப் பற்றிய ”உள்ளத் தெளிவு, அடக்கம், கட்டுரை வண்மை. சுருங்கச் சொல்லி விளங்க வைக்குந் திறன் என்னும் சிறந்த குணங் களை உடையவர் இளம்பூரண அடிகள் என்பதை அவர் உரை தெளிவாகக் காட்டி நிற்கின்றது. தாம் அறியாத தொன்றை அறிந்தது போலக் காட்டும் போலிப் பண்பு அவருரையிற் காண்டல் முடியாது. விரிக்க வேண்டும் இடத்திலே மிகைபடக் கூறாது வேண்டுமளவு விரித்தலும், சுருங்க வேண்டிய இடத்திலே மிகச் சுருக்காது கருத்து விளக்கம் பெறச் சுருக்குதலும் அவருக்குரிய இயல் பாகும்”4 என்னும் வி. செல்வ நாயகத்தின் ஆய்வுரை உண்மையுரையே என்பது விளங்கும்.

சேனாவரையரின் உரைக் கோட்பாடுகள்

சேனாவரையரின் உரைக் கோட்பாடுகளும் பொது இயல்பு. சிறப்பியல்பு என்ற இரண்டு நிலைகளில் பிரித்துரைக்கப் படுகின்றன.

1. ஆசிரியரிடம் மதிப்பும் மாறுபாடும்
2. வடமொழிப் பயிற்சி
3. பன்னூற் புலமை
4. தருக்க முறைப் போக்கு
5. ஆராய்ச்சி வன்மை
6. பேச்சு வழக்கும் உலகியல் வழக்கும்
7. நாகரிகமும் பண்பாடும்
8. இலக்கிய நயம் கூறல்
9. பாட வேறுபாடு சுட்டல்
10. பிறர் உரை மறுத்தல்
11. வினா விடைப் பாங்கு
12. உவமை கூறல்
13. இலக்கணத்தை இலக்கணத்தால் விளக்குதல்
14. முறை வைப்புக் கூறல்
15. சொல், சொற்றொடர் இன்றியமையாமை உணர்த்தல்
16. சொற்பொருள் விரித்தல்
17. இலக்கணக் குறிப்பு
18. இயைபு காட்டல்

இவை யாவும் சேனாவரையரின் உரைக் கோட்பாட்டுப் பொது இயல்பு களாகும்.

ஆசிரியரிடம் மதிப்பும் மாறுபாடும்

தொல்காப்பியரிடம் சேனாவரையர் கொண்டிருந்த நன்மதிப்பு அவருடைய உரைப் பகுதியில் பல இடங்களில் வெளிப்படுகின்றது.

”தூணின்கட் சார்ந்தான் எனக் கருமச் சார்ச்சிக்கண் ஏழாம் வேற்றுமை சென்றாற்படும் இழுக்கு என்னவென்றால் அத்தகைய வழக்கு இல்லாமையே அன்றி வேறு காரணம் இல்லை. இக்காலத்து அவ்வாறு வழங்குவரேயெனின். கருமமல்லாத சார்ச்சிக்கண் கொடுத்து இன்னவிடத்து இன்னவுருபு வரும் என்று இடந் தெரியாமல் வழங்குகின்றார் உலகத்தார்

என்றே கூற வேண்டும் என்று கூறிவிட்டு ஆசிரியர் கருமமல்லாச் சார்பென் கிளவியென விதந்து கூறினமை யானென்பது"" என்ற சேனாவரையர் உரைப்பகுதியால் ஆசிரியரிடம் கொண்டிருந்த மதிப்பு அறியப்படுகின்றது. மேலும்.

"மொழிப்பொருட் காரணம் விழிப்பத் தோன்றா" (தொல்.சொல்.394)

என்ற நூற்பாவிற்கு

""பொருளொடு சொற்கியைபு இயற்கையாகலான் அவ்வியற் கையாகிய இயைபாற் சொற்பொருளுணர்த்துமென்ப ஒரு சாரார். ஒரு சாரார் பிற காரணத்தாலுணர்த்து மென்ப அவற்றுள் மெய்மையாகிய காரணம் ஆசிரியர்க்குப் புலனா வதல்லது நம்மனோர்க்குப் புலனாகாமையின் "மொழிப் பொருட் காரணமில்லை யென்னாது "விழிப்பத் தோன்றா" வென்றார். அக்காரணம் பொதுவகையான் ஒன்றாயினுஞ் சொற்றொருமுண்மையிற் சிறப்பு வகையாற் பலவாம்: அதனான் விழிப்பத் தோன்றா " வெனப் பன்மையாற் கூறினார்! என்று விளக்கம் தந்துள்ளமையும் ஆசிரியரிடம் சேனாவரையர் கொண்டிருந்த மதிப்பினைக் காட்டுகின்றது.

உவம உருபு தொக்கி வருவதனைத் தொல்காப்பியர் உவமவியலில் "சுட்டிக்கூறா உவமம் என்று குறிப்பிட்டுள்ளார். இக்கருத்தில் சேனாவரையர் உடன்படாது மறுத்துக் கூறியுள்ளார். இசூ.ஃது

"இனி அதுபோல வென்பது தொகுக்கும் வழித் தொகுத்த லென்பதனாற் றொக்கதாயின். அதனைச் சுட்டிக்கூறாவும் மையென அணியியலுள் ஆசிரியர் ஒருவமை வேறுபாடாகக் கூறல் பொருந்தாது" என்ற உரைப்பகுதியால் உணரப் படும்.

வடமொழிப் பயிற்சி

"வடநூற் கடலை நிலைகண்டுணர்ந்த சேனாவரையர் என்று சிவஞான முனிவர் அவரைப் பாராட்டுவதின் மூலம் அவருக்கு இருந்த வடமொழிப் பயிற்சி வெளிப்படுகின்றது. சொல்லதிகார உரையில் பல இடங்களில் வடமொழிக் கருத்துகளை மேற்கோள் காட்டி கருத்தை விளக்கியுள்ளார்.

வடமொழியின் இலக்கணக் கோட்பாடுகளையும் விதிகளையும் சேனாவரையர் மிகத் தெளிவாக விளக்கிச் செல்கின்றார். "அதிகாரம்" என்னும் சொல்லிற்கு அவர் சொல்லும் பொருளுக்கு துணைச் சான்றாக வடமொழி இலக்கணத்தைக் கூறியுள்ளார்.

"அதிகாரம் என்னும் சொற்குப் பொருள் பல உளவேனும், ஈண்டு அதிகாரம் என்றது ஒரு பொருள் நுதலி வரும் பல ஒத்தினது தொகுதியை என்க.வடநூலாரும் ஓரிடத்து நின்ற சொல் பல சூத்திரங்களோடு சென்றியைதலையும், ஒன்றன திலக்கணம் பற்றி வரும் பல சூத்திரத் தொகுதியையும் அதிகாரம் என்ப என்பது சொல்லதிகார முதல் நூற்பாவின் உரைப் பகுதியாகும்.

"வினையின் தொகுதி காலத்தியலும் என்ற நூற்பாவிற்கு விளக்கம் கூற வந்த சேனாவரையர்.

"ஈண்டு வினை என்றது எவற்றையெனின் : வினைச் சொற்கும் வினைப் பெயர்க்கும்

முதனிலையாய் உண், திண். செல். கொல் என வினை மாத்திரம் உணர்த்தி நிற்பனவற்றை யென்பது. இவற்றை வடநூலார் "தாது" என்ப"என்று சொல்லதிகார 415 ஆம் நூற்பாவின் உரையில் கூறியுள்ளார். அசூ.ஃதாவது "கொல் யானை" என்புழிக் கொல் என்பது வினையின் வேர்ச்சொல் ஆகுமன்றோ ? அவ்வேர்ச் சொல்லும், வருமொழியில் வரும் பெயரும் சேர்ந்து ஒரு சொல் நீர்மை யுடையதாய் நின்று மூன்று காலமும் உணர்த்துகின்றது.

வண்ணத்தின் வடிவின் அளவின் சுவையினென்று

அன்ன பிறவும் அதன்குணம் நுதலி

இன்னது இதுவென வரூஉம் இயற்கை

என்ன கிளவியும் பண்பின் தொகையே (தொல். சொல்.416)

என்னும் பண்புத் தொகை பற்றிய நூற்பாவிற்கு, "அசூ.ஃதேல் கரிதாகிய குதிரை வட்டமாகிய பலகை என்ப அத்தொகையின் விரியாகலிற் பண்புத் தொகை பிரிக்கப்படா தென்றதென்னையெனின்: அற்றன்று' தொகைப் பொருளுணர்த்துதற்குப் பிறசொற் கொணர்ந்து விரித்தல்லது தன் சொல்லான் விரியாமையின் அவை விரியெனப்படாவென்க. வட நூலாரும் பிரியாத் தொகையும் பிற சொல்லான் விரிக்கப் படுமென்றார்"

இவ்வாறு சேனாவரையர் வடமொழி இலக்கண மரபுகளையும் நன்கு உணர்ந்து கருத்துகளைப் புலப்படுத்தியுள்ளார்.

""வடமொழியும் தமிழும் நன்கு பயின்றவர். இவ்விரு பெரிய மொழிகளும் இருவேறு தனிமொழிகள் என்பதை மறந்து வடநூல் முடிவுகளையும் கொள்கைகளையும் தமிழுக்குரிய இலக்கணங்களில் புகுத்தி அவற்றிற்கு அமைதி கூறியவர்37

என்று கூறும் சதாசிவப் பண்டாரத்தாரின் கருத்து ஈண்டுச் சிந்தனைக்குரியதாகத் திகழ்கின்றது.

பன்னூற் புலமை

ஐந்திரம், மலைபடுகடாம், குறுந்தொகை, அகநானூறு. நற்றிணை, மதுரைக் காஞ்சி, நெடுநல்வாடை, திருமுருகாற்றுப்படை. போன்றவற்றிலிருந்து மேற்கோள் காட்டி இலக்கணக் கருத்துக்களை விளக்கியுள்ளார். மேலும் திருக்குறள், நாலடியார், களவழி நாற்பது. திணைமாலை நூற்றைம்பது. நன்னூல் போன்றவற்றிலிருந்தும் மேற் கோள் காட்டியுள்ளார்

"ஐந்திர நூலார் விளி வேற்றுமையை எட்டாம் வேற்றுமையாக நேர்ந்தாரென்பது பெறப்படும்: இக்கருத்து விளக்கியவன்றே பாயிரத்துள் "ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன் " எனக் கூறிற்றென்க (தொல். சொல்.74) என்ற உரைப்பகுதியில் சேனாவரையர் ஐந்திர நூற் கருத்துகளை நன்கு அறிந்திருந்தார் என்பது அறியத் தக்கது.

"வானோக்கி வாழு முயிரெல்லாம் மன்னவன்

கோனோக்கி வாழுங் குடி"(5.542)

என்ற குறளினை மேற்கோள் காட்டி "வானை நோக்கி வாழும்: கோலை நோக்கி வாழும் என இரண்டாவது வருதலேயன்றி. வானானோக்கி வாழும், வானினோக்கி வாழும், கோலானோக்கி

வாழும் கோலினோக்கி வாழும் என மூன்றாவதும் ஐந்தாவதும் வந்தவாறு கண்டு கொள்க" (தொல். சொல்.93) என்ற உரைப்பகுதியில் எழுதியுள்ளார்.

மேலும். "நொசிவும் நுழைவும் நுணங்கும் நுண்மை" (தொல். சொல். 374) என்னும் உயிரியல் நூற்பாவிற்கு ""நொசிமட மருங்குதல் (கலி. 60) எனவும், நுழைநூற் கலிங்கம் (மலைபடு கடாம்) எனவும். நுணங்குதுகினுடக்கம் போல (நற்றிணை) எனவும் நொசிவு முதலாயனி நுண்மையாகிய பண்புணர்த்தும் " என்று கலித்தொகை, மலை படுகடாம். நற்றிணை முதலியவற்றிலிருந்து மேற்கோள் காட்டி உரை எழுதியுள்ளமையும் காண முடிகின்றது.

"உரைநடையில் அமையும் பல்வேறு அணிகளுள் இடையி டையே மேற்கோள் காட்டுவதும் ஒன்று. ஓர் உரைநடை ஆசிரியர் தம் கருத்துக்கு அரன் செய்யும் வகையிலும் மேலும் தெளிவு வேண்டும் நிலையிலும் மேற்கோள்களைக் கையாளுகின்றார். அவர் இன்றியமையாது தேவைப்படும் இடங்களில் மட்டும் வலியுறுத்தும் பொருட்டு மேற்கோள் களைப் பயன்படுத்தலாம்' வேண்டுமென்றே மிகுதியான மேற்கோள்களைக் காட்டி எழுதுவது கூடாது. சுருங்கக் கூறினால், உரைநடையில் மேற்கோள் ஆட்சி இல்லற வாழ்க்கையில் ஊடலைப் போல் -உணவில் உப்பைப் போல் அளவாக இருக்க வேண்டும்."38 என்ற கருத்து சேனாவரையரின் உரைக்குப் பொருத்தமாக உள்ளது.

தருக்க முறைப் போக்கு

தருக்க முறையில் கருத்துக்களை வெளிப்படுத்துதல் என்பது திறனாய்வாளர்களின் போக்கு இப்போக்கு சில நூற்றாண்டுகட்கு முன்பே சேனாவரையரிடம் அமைந்திருந்தது. இதனை அவருடைய உரைப்பகுதிகள் வெளிப்படுத்துகின்றன.

அவை மெய்ப்பொருள் குறிப்பனவும், பொய்ப்பொருள் குறிப்பனவுமென இருவகைப்படும். அவற்றுள் பொய்ப்பொருள் குறிப் பனவும் பொருளுணர்த்துவனவேயாம். அல்லாக்கால், இல்லோன் றலைவனாக வருந்தொடர்நிலைச் செய்யுள் பொருளுணர்த்தாமை யின் அவை புலவராற் கொள்ளப்படா வென்பது (தொல். சொல்.155).

அன்மையின் இன்மையின் உண்மையின் வன்மையின்

அன்ன பிறவுங் குறிப்பொடு கொள்ளும்

என்ன கிளவியுங் குறிப்பே காலம் (தொல். சொல்.214)

என்னும் வினையியல் நூற்பாவிற்கு

"பண்போடு இவற்றிடை வேற்றுமை யென்னையெனின் இன்மை பொருட்கு மறுதலையாகலின், பொருளின்கட் கிடக்கும் பண்பெனப் படாது. அன்மையும் உண்மையும் பண்பிற்கு மொத்தலிற் பண்பெனப்படா. என்னை? குணத் திற்குக் குணமின்மையின்" இவ்வாறு தருக்க முறையில் விளக்கங்களை எழுதிச் செல்லும் போக்கினைச் சேனா வரையரிடம் காண முடிகின்றது.

இது பற்றியே "சேனாவரையரது உரைநடை தருக் முறைப்படிப் பொருளைத் தெளிவுபடுத்திக் காட்டுதற்குரிய சிறந் கருவியாக அமைந்துள்ளது. எது சரி? எது பிழை? என்று ஆராய்ந்து தம் முடிவினை ஆதாரங்காட்டி நிறுவும் இடங்களில் அவர் நடை போக்கின் சிறப்பைக் காணலாம்"" என்று அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்

ஆராய்ச்சி வன்மை

"கறுப்பும் சிவப்பும் வெகுளிப் பொருள" (தொல். சொல்.372) என்னும் சூத்திரத்தின் கீழ் "கருமை. செம்மை என்னாது கறுப்பு. சிவப்பு என்றதனான் தொழிற்பட்டுழியல்லது அவை வெகுளி உணர்த் தாமை கொள்க" என்ற ஆராய்ச்சி வன்மையுடன் விளக்கியுள்ளார். மேலும் "கடிசொல் இல்லை காலத்துப்படினே (தொல். சொல். 452 என்ற சூத்திரத்தின் கீழ், சம்பு, சள்ளை, சட்டி. சமழ்ப்பு என்பவை பிற்காலத்தே தோன்றிய சொற்கள் என்று குறிப்பிடுகின்றார்.

சேனாவரையர் இலக்கணக் கருத்துகளை விளக்குகின்ற போது ஆராய்ந்து கருத்துத் தெளிவுபட விளக்குகின்றார். சொல்லாராய்ச்சி, சொற்றொடர் ஆராய்ச்சி, மொழி பற்றிய ஆராய்ச்சி முதலியனவற்றையும் சேனாவரையர் மேற்கொண்டுள்ளார்.

பேச்சு வழக்கும் உலகியல் வழக்கும்

வினைவேறு படூஉம் பலபொரு ளொருசொல்

வினைவேறு படாஅப் பலபொரு ளொருசொல்லென்று

ஆயிரு வகைய பலபொரு ளொருசொல் (தொல். சொல்.52)

இந்நூற்பாவிற்கு

""வினைவேறுபடும் பலபொருளொரு சொல்லும் வினைவேறு படாப் பலபொருளொரு சொல்லும் என இரண்டு வகைப்படும் பலபொருளொருசொல்.

இனமுஞ் சார்பும் உளவேனும் வேறுபடுத்தற்கண் வினை சிறப்புடைமையின், அதனாற் பெயர் கொடுத்தார்' ஆதீண்டு குற்றி யென்பது போல" என்று உரை எழுதியுள்ளார்.

இதன் மூலம் பண்டைக் காலத்தில் பசுக்கள் தினவெடுப்பின் உராய்வதற்கு ஆங்காங்கு மரக்கட்டைகளை நட்டிருப்பர். அவற்றில் பசுக்களேயன்றி ஏனைய விலங்குகளும் தினவெடுப்பின் உராய்ந்து தினவைப் போக்கிக் கொள்ளும். ஏனைய விலங்குகளும் அக்கட் டையைப் பயன்படுத்தினும் பசுக்கள் சிறப்புடைமையின். "ஆதீண்டு குற்றி என அப்பெயரால் கூறுவர் என்ற வழக்கினை அறிந்துகொள்ள முடிகின்றது.

வினையெச்சத்தின் பாகுபாடு கூறும் நூற்பா (228) உரையில்

"சோலை புக்கென வெப்ப நீங்கிற்று"

"மருந்து தின்றெனப் பிணி நீங்கிற்று"

"மெய்யுணரின் வீடெளிதாம்"

என்று எடுத்துக்காட்டுகள் கூறியிருப்பதன் மூலம் அக்கால வழக்கு வெளிப்படுகின்றது.

நாகரிகமும் பண்பாடும்

சேனாவரையர் அறிவுப் புலமையுடன் நாகரிகமும் பண் பாடும் பொருந்த உரை எழுதியுள்ளார். சாதிப் பிரிவுகள், இசைக் கருவி கள். அளவைப் பெயர்கள், ஊர்ப் பெயர்கள். மரபு முறைகள் என்பன வற்றைக் குறிப்பிட்டுத் தம்கால நாகரிகத்தையும் பண்பாட்டினையும் வெளிப்படுத்தியுள்ளார்.

அளவுப் பெயர்கள்

பதக்குத் தூணி, தொடி துலாம் (தொல். சொல்.116)

கலனே தூணிப்பதக்கு.

தொடியே கசூ.ஃசரை (தொல். சொல். 417

ஊர்ப் பெயர்கள்:

கருவூர், மருவூர், உறையூர். குழிப்பாடி

மரபு முறை

மாறோக்கத்தார் பெண்மகளை பெண்மகனென்று வழங்குதல் (தொல். சொல் 164)

இவை யாவும் நாகரிகத்தினையும், பண்பாட்டினையும் அறிந்து கொள்வதற்குச் சான்றுகளாகத் திகழ்கின்றன.

இலக்கிய நயம் கூறல்

சேனாவரையர் இலக்கண நூலுக்கு உரையெழுதும் வல்லமை யோடு இலக்கிய நயம்பட உரை வகுப்பதிலும் மிகச் சிறந்தவர் என்பதை அவருடைய உரைப்பகுதிகள் உணர்த்துகின்றன.

ஆக்கக் கிளவி காரண மின்றியும்

போக்கின் றென்ப வழக்கி னுள்ளே (தொல்.சொல்.22)

என்னும் நூற்பாவிற்கு. "காரணமுதற்றெனப்பட்ட ஆக்கச்சொல் கார ணமின்றி வரினுங் குற்றமின்று வழக்கினுள். வழிக்கினுட் காரண மின்றியும் வருமெனவே. செய்யுளுட் காரணம் பெற்றே வருமென் பதாம்" என்று பொருள் கூறியுள்ளார். மேலும்

""அரிய கானஞ் சென்றோர்க்

கெளிய வாகிய தடமென் றோளே"" (குறுந்.77)

எனவும்.

"நல்லவை யெல்லாஅந் தீயவாந் தீயவும்

நல்லவாஞ் செல்வஞ் செயற்கு" (5.305)

எனவும், செயற்கைப் பொருள் செய்யுளுள் காரணமின்றி வந்தனவா லெனின்: களவுக் காலத்

தரியன இக்காலத்து எளியவாயின என்பது கருத்தாகலான் இக்காலங் காரணமென்பது பெறப்படுதலானும், ஊழா லென்பது அதிகாரத்தான் வருமாகலானும், அவை காரணமின்றி வந்தன எனப்படாவென்பது" என்று நூற்பாவின் இறுதியில் எழுதி யுள்ள உரை விளக்கம் இலக்கிய நயத்துடன் விளங்குகின்றது.

""ஒல்லேங் குவளைப் புலாஅல் மகன் மார்பிற் புல்லெருக்கங் கண்ணி நறிது என்புழிக் குவளைப் புலால் நாறுதற்கும் எருக்கங் கண்ணி நறிதாதற்கும் காரணங் கூறாமையின் வழுவாம் பிறவெனின்: புதற்வற் பயந்த பூங்குழன் மடந்தை பரத்தையிற் பிரிந்து வந்த கிழவ னொடு புலந்துரைக்கின்றாளாகலின் குவளைப் புலால் நாறுதற்கு அவன் தவற்றோடு கூடிய அவள் காதல் காரணமென்பதூஉம். எருக் கங்கண்ணி நறிதாதற்கு மகிழ்நன் செய்த துனிகூர் வெய்மகிழ்நகை முகத்தால் தணிக்கும் புதல்வன்மேல் ஒருகாலைக் கொருகால் பெருகு மன்பு காரணமென்பதூஉம் பெறப்படுதலின், வழுவாகாதென்பது" என்ற பகுதியும் இலக்கியச் சுவையையும் நயத்தையும் தருவதாகத் திகழ்கின்றது.

பாட வேறுபாடு சுட்டல்

அதிகமாக பாட வேறுபாடுகளைச் சேனாவரையர் உரையில் காண முடியவில்லை. அதிர்வும் விதிர்ப்பும் நடுக்கஞ் செய்யும் (தொல். சொல். 316) என்ற நூற்பாவிற்கு உரை கூறிய பின் மற்றுமொரு பாடம் இருப்பதனை அவர் தெளிவுபடுத்துகின்றார்.

"அதிழ்வென்ற பாடமோதி. அதிழ்கண் முரசம் என்று உதாரணங் காட்டுவாருமுளர்" என்று சான்று காட்டியுள்ளார்.

"முன்னிலை வியங்கோள் வினையெஞ்சு கிளவி

இன்மை செப்பல் வேறென் கிளவி

செய்ம்மன செய்யுஞ் செய்த வென்னும்

அம்முறை நின்ற ஆயெண் கிளவியும்

திரிபுவேறு படுஉஞ் செய்திய வாகி

இருதிணைச் சொற்கு மோரன்ன உரிமைய"" (தொல். சொல்.222,

இந்தநூற்பாவில் இளம்பூரணரும், நச்சினார்க்கினியரும் "பிரிவு வேறு படுஉம் என்றும். தெய்வச் சிலையாரும் கல்லாடரும் "பிரிபு வேறுபடுஉம் என்றும் பாடங் கொள்ள, சேனாவரையர் மட்டும் "திரிபு வேறுபடுஉம் எனப் பாடங் கொண்டுள்ளார்.

தொல்காப்பியர் கூறிய விதிகளுக்கு விளக்கம் கூறிவரும் போது அவரே விதிகளில் சிலவற்றை மாற்றியமைத்து இங்ஙனம் இந்நூற்பாவை அமைத்திருக்கலாமே என்று குறிப்பிட்டுள்ளமையும் அறிய முடிகின்றது.

பிறர் உரை மறுத்தல்

"சேனாவரையர், தமக்கு முன் சொல்லதிகாரத்திற்கு உரை எழுதிச் சென்ற இளம்பூரணர் கொள்கைகளை ஐம்பதிற்கு மேற்பட்ட இடங்களில் மறுத்து வேறு உரை

கூறுகின்றார். அவரிடம் பெருமதிப்பும் அச்சமும் கொண்டவராய் நயமாகத் தம் கருத்தை உரைக்கின்றார்' இளம்பூரணர் உரைப் போக்கை நன்கு உணர்ந்துள்ளார். அதாவது கருத்தையும் கொள்கை யையும் கசடறத் தெளிந்துள்ளார்"40என்ற அரவிந்தனின் புகழுரை முற்றிலும் உண்மையுரையே.

சேனாவரையர் தம்முடைய உரையில் மிகுதியான இடங்களில் 'உரையாசிரியர்" என்று குறிப்பிடுகின்றார். இங்கு உரை யாசிரியர் என்பது இளம்பூரணரையே குறிக்கின்றது. இளம்பூரணரு டைய உரையைச் சேனாவரையர் பல இடங்களில் கடுமையாக மறுத்து உரைத்துள்ளார்.

"உரையாசிரியர் பிரிநிலை யென்றாராலெனின். பிரிநிலையாயின் ஆடூஉ வறிசொற்கு இலக்கணங் கூறதலன்றிப் பிரித்து அதன் சிறப்புணர்த்துதலே கருத்தாமாகலின் அவ்வுரை போலியுரை என்க"

""ஒன்றுவினை மருங்கி னொன்றித் தோன்றும் என ஒரு சூத்திரமாக உரையாசிரியர் பிரித்தாராலெனின், அங்ஙனம் பிரிப்பின் ஒன்றுவினை மருங்கினொன்றித் தோன்றுதலும் வினைவேறுபடூஉம் பலபொருளொரு சொற்கே இலக்கணமாய் மாறுகோடலானும் வினை வேறுபடுவன தாமே பொதுவினை கொண்ட வழி வினை வேறுபடாதனவாமென்பது அதனாற் பெறப்படாமையானும் அது போலியுரை என்க"2

"இருதிணைப் பிரிந்த வைம்பாற் கிளவிக்கும்

உரியவை உரிய பெயர்வயி னான" (தொல். சொல்.161)

என்னும் நூற்பா உரையில்.

"நஞ்சுண்டான் சாம் என்பது ஒருபாற்குரிய சொல்லாயினும் நஞ்சுண்டாள் சாம், நஞ்சுண்டார் சாவர், நஞ்சுண்டது சாம். நஞ்சுண்டன சாம்.என ஏனைப்பாற்கு முரித்தாம் அச்சொல் லென இப்பொருண்மை யுணர்த்துகின்றது. இச்சூத்திரமென்றா ரால் உரையாசிரியரெனின் : நஞ்சண்டல் சாதற்குக் காரண மென்பான் ஒருபால் மேல் வைத்து நஞ்சுண்டான் சாமென்ற தல்லது. ஆண்டுத் தோன்றும் ஆண்மையும் ஒருமையும் சாதற்குக் காரணமென்னுங் கருத்தினனல்லன், அதனாற் சொல்லுவான் கருத்தொடு கூடிய பொருளாற்றலாற் சாதல் ஏனைப்பாற்கும் ஒக்குமெனச் சேறல் சொல்லிலணக்கணத்திற் கூறப்படாமையான் ஆசிரியர்

ஒருபாற் கிளவி யேனைப்பாற் கண்ணும்

வருவன தானே வழக்கென மொழிப (பொருளியல்.28)

என, இப்பொருண்மை பொருளியலிற் கூறினாராகலின், இச்சூத்திரத் திற்கு அசூ.்துரையாதல் உரையாசிரியர் கருத்தன்றென்க. அல்லதூஉம் பார்ப்பான் கள்ளுண்ணான் என்றவழிக் கள்ளுண்ணாமை சாதி பற்றிச் செல்வதொன்றாகலின் பார்ப்பனிக்கும் பார்ப்பார்க்குமல்லது பிற சாதியார்க்கும் அசூ.்றிணைக்குஞ் செல்லாமையின், "ஐம்பாற் கிளவிக்கு முரிய வென்றல் பொருந்தாமையானும் அவர்க்கது கருத்தன்மை யறிக " என்று உரையாசிரியர் கருத்தினை மறுத்துரைத்துள்ளார்.

மேற்கூறப்பட்ட பகுதிகள் மறுப்புரைக்குச் சான்றுகளாகத் திகழ்கின்றன.

வினா- விடைப் பாங்கு

மாணவர்களுக்கு விளக்கம் கூறும் வகையில் வினாவிடைப் பாங்காக. சேனாவரையர் உரை அமைந்துள்ளது)

"அசூ.ஂதேல் மயக்கமாவது ஒரு வேற்றுமை பிறிதொன்றன் பொருட்கட் சேறலன்றே' ஏதுவின்கண் வரும் மூன்றாவதும் ஐந்தா வதும் தம் பொருளே பற்றி நிற்றலின் மயங்கின எனப்படாவெனின் : நன்று சொன்னாய். ஏதுப் பொருண்மை தனக்குரியவாற்றான் அவற்றிற்குத் தன் பொருளாயினவாறு போலப் பிறிதொன்றற்குரிய வாற்றாற் பிரிதொன்றன் பொருளாதலுமுடைமையின், அம்முகத்தான் மயங்கினவெனவே படுமென்பது"

அச்சக் கிளவிக் கைந்து மிரண்டும்

எச்ச மிலவே பொருள்வயி னான (தொல். சொல்.100)

என்னும் வேற்றுமை மயங்கியல் நூற்பாவிற்கு.

"அசூ.ஂதேல் ஒரு பொருட்கண் வரினன்றே மயக்கமாவது: இவை செயப்படுபொருளும் ஏதுவுமாகிய பொருள் வேறு பாடுடையனவாகலின் மயக்கமாமாறென்னையெனின் "அற் றன்று: ஈண்டேது வாதலே அஞ்சப்படுதலாய வேறன்றி நிற்ற லின், ஒரு பொருட்கண் வந்தனவேயாம்' அதனான் மயக்க மாமென்பது" என வினாவிடைப் பாங்கில் உரை எழுதியுள்ளார்.

மேற்கூறப்பட்ட உரைப்பகுதிகள் மாணவனுக்கும் ஆசிரிய நக்கும் இடையே நிகழும் வினா - விடைப் பாங்காக அமைந்துள்ளது. மேலும் ஆசிரியர் கூறவரும் கருத்து தெளிவுடன் விளங்குகிறது.

உவமை கூறல்

கருத்தினைத் தெளிவுபடுத்துவதற்காகவே உரையாசிரியர்கள் உவமைகளைக் கையாண்டுள்ளனர். உவமைகளைப் பொருத்தமாகக் கூறி இலக்கணக் கருத்துக்களை விளக்கியுள்ள பாங்கு சேனாவரை யரிடமும் காணமுடிகின்றது.

"நொய்யும் நுறுங்கும் களைந்து அரிசி அமைத்தாரை அரிசியாக்கினார் என்பவாகலின்

(தொல்.சொல்.1)

"திங்கள் கரிது என்பதுபோல பிறழ உணர்ந்தார் வழக்காய் ஆராயப்படா தென்க"

(தொல்.சொல்.19)

"ஈண்டிரட்டைக் கிளவி யென்றது. மக்களிரட்டை விலங்கி ரட்டை போல வேற்றுமை உடையனவற்றையன்றி" இலையி ரட்டையும் பூவிரட்டையும் போல ஒற்றுமையும் வேற்றுமை யும் உடையனவற்றையென்று உணர்க". (தொல்.சொல்.48)

"ஆதீண்டு குற்றிபோல (தொல்.சொல்.52)

"இவ்வாடையும் அந்நூலானியன்ற தென்றதுபோல (தொல்.சொல்.76)

மேற்கூறப்பட்ட உவமைகள் சேனாவரையருக்கு இருந்த அறிவுப்புல மையை அறிய உதவுகின்றன.

இலக்கணத்தை இலக்கணத்தால் விளக்குதல்

இலக்கணக் கருத்துகளை இலக்கணத்தால் விளக்குதல் எளி தன்று. அதற்குப் பிற இலக்கணங்களில் புலமை வேண்டும். சேனா வரையருக்கு அத்தகைய புலமை இருந்தது.

"நஞ்சுண்டான் சாம்" என்றால், நஞ்சுண்ணுதல் சாதற்குக் கார ணம் என்பதே கருத்து. உண்டான் என்பதிலுள்ள ஆண்பால் விகுதி யில் பொருள் நோக்கில்லை. ஆகவே நஞ்சுண்டல் சாதற்குக்காரணம் என்ற கருத்தில், ஒருபால் மேல் வைத்து ஒருவன் "நஞ்சுண்டான் சாம் என்பானேயன்றி, ஆண்டுத் தோன்றும் ஆண்மையும் ஒருமையும் சாதற்குக் காரணம் என்னும் கருத்தில் "நஞ்சுண்டான் சாம் எனக் கூறமாட்டான். அதனால் சொல்லுவான் கருத்தோடு கூடிய பொருளாற் றலால் சாதல் ஏனைப்பாற்குமுரியது எனச் சொல்லுதல் சொல்லிலக் கணத்திற் பெறப்பட்டமையான் ஆசிரியர்

"ஒருபாற் கிளவி யேனைப்பாற் கண்ணும்

வருவகை தானே வழக்கென மொழிப

எனப் பொருளியலிற் கூறினார்" (தொல்.சொல்.161).இப்பகுதியில் சொல்லியல் கருத்தினை விளக்க. பொருளியல் இலக்கணத்தைக் காட்டி விளக்கியுள்ளார்.

முறைவைப்புக் கூறல்

முன்னிலை வியங்கோள் வினையெஞ்சு கிளவி

இன்மை செப்பல் வேறென் கிளவி

செய்ம்மன செய்யும் செய்த என்னும்

அம்முறை நின்ற ஆயெண் கிளவியும்

திரிபுவேறு படுஉம் செய்திய வாகி

இருதிணைச் சொற்கு மோரன்ன உரிமைய

என்பது நூற்பா (தொல். சொல்.222), இதற்கு உரை கூறுமிடத்து. சேனா வரையர்.

""முற்றாதலும் பல வாய்பாட்டாற் பயின்று வருதலுமுடைமை யான் முன்னிலை வினையை முன் வைத்தார். ஏவற் பொருண்மை முன்னிலை வினைக்கண்ணும் உண்மையின் பொருள் இயைபுடைத்தாகலானும், இடங்குறித்து முற்றாய் வருதல் ஒப்புமையானும் அதன்பின் வியங்கோள் வைத்தார். அதன்பின் முற்றாதல் ஒப்புமையான் இன்மை செப்பல். வேறென் கிளவி, செய்ம்மன என்பனவற்றை வைத்தன் முறைமையாயினும் முற்றின்கண் வினையெச்ச முண்மை யானும் ஈற்றுப் பன்மையொடு பயின்று வருதலானும் வினை யெச்சம் வைத்தார். இன்மை பற்றி வரும் வினையெச்சமும் உண்மையான், அதனோடியைய இன்மை செப்பல் வைத்தார். வினைக்குறிப்பாதல் ஒப்புமையானும் செய்ம்மனவிற் பயிற்சி யுடைமையானும்

அதன்பின் வேறென் கிளவி வைத்தார். முற்றாதல் ஒப்புமையான் அதன் பின் செய்ம்மன வைத்தார். முற்றாம் நிலைமையுடைத்தாகலின் அதன் பின் செய்யு மென்பது வைத்தார். பெயரெச்சமாதல் ஒப்புமையான் அதன் பின் செய்தவென்பது வைத்தார். இவ்வாறியைபு பற்றி வைத்த மையான் அம்முறை நின்ற வென்றார்"

என்று முறைவைப்பு குறித்துக் கூறியுள்ளார். மேலும்

அவற்றுள்

முதனிலை மூன்றும் வினைமுதல் முடிபின (தொல்.சொல்.230)

என்ற நூற்பா உரையில்,

"இது முன்னர் "வினையெஞ்சு கிளவிக்கு வினையுங்குறிப்பும். நினையத் தோன்றிய முடிபாகும்மே (சொல்.432) எனப் பொது வகையான் முடிவனவற்றை எதிரது நோக்கி இவை மூன்றும் வினைமுதன் முடிபினவென நியமித்தவாறு. அசூ.ஃதேல் இதனையும் ஆண்டே கூறுகவெனின் : ஆண்டுச் செய்து செய்யூச் செய்பு என்னு மூன்றுமெனக் கிளந்தோதுவதல்லது முதனிலை மூன்றுமெனத் தொகுத்தோதலாகாமையானும், ஈண்டு இயைபுடைத்தாகலானும், ஆண்டுக் கூறாது ஈண்டுக் கூறினாரென்பது" என முறைவைப்புக்குக் காரணம் கூறியுள்ளமை அறியமுடிகின்றது. இவ்வாறு கருத்து முறைவைப்புக்கும் நூற்பா முறைவைப்புக் கும் காரணம் காட்டி உரையெழுதியுள்ளமையைச் சேனாவரையரிடம் காண முடிகின்றது.

சொல்,சொற்றொடர், இன்றியமையாமை உணர்த்தல்

உரை எழுதிச் செல்கின்றபோது சொல், சொற்றொடர்களின் இன்றியமையாமையை உணர்த்தியுள்ளமையைச் சேனாவரையரிடம் காண முடிகின்றது.

முற்று பிறிதோர் சொல்லோடியையாது தாமே தொட ராதற்கேற்கும் வினைச்சொல் முற்றாம்.

எச்சம் பிறிதோர் சொற்பற்றியல்லது நிற்றலாற்றா வினைச்சொல் எச்சமாம். (தொல். சொல்.235)

மேலும்,

"பெயரி னாகிய தொகையுமா ருளவே

அவ்வு முரிய அப்பா லான" (தொல்.சொல்.67)

என்னும் நூற்பாவில், "பெயரினாகிய தொகையுமென்னும் உம்மையாற் பெயரொடு பெயர் தொக்கனவேயன்றி, நிலங்கடந்தான், மாக் கொணர்ந்தான் எனப் பெயரோடு வினை வந்து தொக்க வினையாகிய தொகையுமுள எனபதாம்' ஆகவே பெயரோடு பெயரும் பெயரோடு வினையும் தொக்கன தொகையென்பது பெற்றாம்.

"அவ்வுமுரிய எனப் பொதுவகையாற் கூறினாரேனும், ஏற் புழிக் கோடல் என்பதனான் எழுவாய் வேற்றுமையாதற்கேற்புடைய பெயரினாகிய தொகையே கொள்ளப்படும்.

இருதொடர்ப்படச் சூத்திரித் திடர்ப்படுவ தென்னை? பெயரி னாகிய தொகையும் எழுவாய் வேற்றுமையாமென்றோத அமை யாதோ எனின் : அங்ஙனமோதின் பெயரொடு

பெயரும் வினையுந் தொக்கன தொகைச் சொல்லா மென்னுந் தொகையிலக்கணம் பெறப் படாதாம்' அவ்விலக்கண முணர்த்துதற்கு இவ்வாறு பிரித்தோதி னாரென்பது " எனப் "பெயரினாகிய தொகையு, "அவ்வுமுரிய" என்ற சொற்றொடர்களின் இன்றியமையாமை உணர்த்தியுள்ளதைக் காண முடிகின்றது

சொற்பொருள் விரித்தல்

சேனாவரையர் நூற்பாவிற்குப் பொருள் கூறி விளக்குவதுடன் சொற்களுக்குப் பொருள் கூறிச் செல்லும் பண்பினையும் காண முடிகின்றது.

1. சொல்லாவது எழுத்தொடு ஒருபுடையான் ஒற்றுமை யுடைத்தாய்ப் பொருள் குறித்து வருவது.

2 அதிகாரம் என்றது ஒரு பொருள் நுதலி வரும் பல ஒத்தினது தொகுதியை.

3. குறித்த பொருளை அதற்குரிய சொல்லாற் சொல்லுக என்றல் "வழுவற்க" என்றலாம்.

4 குறித்த பொருட்குரிய சொல்லன்றாயினும் "ஒருவாற் றான் அப்பொருள் விளக்குதலின் அமைக என்றல் வழுவமைத்தலாம்.

5. செய்பு என்பது வினாய பொருளை அறிவுறுப்பது.

6. வினாவாவது அறியலுறவினை வெளிப்படுத்துவது.

7. தகுதியென்பது அப்பொருட்குரிய சொல்லாற் சொல்லு தல் நீர்மையன்று என்று அது களைந்து தக்கதோர் வாய்பாட்டால் கூறுதல்.

8. வழக்கு என்பது காரணமின்றி வழங்கற்பாடே பற்றி வருவது.

9. இனஞ்சுட்டலாவது. இனத்தைச் சுட்டி அவற்றினின்றும் விசேடிக்கப்படுதல்.

10. இயல்பாவது பொருட்குப்பின் தோன்றாது நிகழுந்தன்மை. உடன்

11. ஐயப் பொருளாவது சிறப்பியல்பாற் தோன்றாது பொது வியல்பாற் றோன்றிய பொருள்.

என்பன சொற்பொருள் விரித்தலுக்குச் சான்றுகளாகத் திகழ்கின்றன.

இலக்கணக் குறிப்பு

நூற்பாவை விளக்கி உரை எழுதுகின்றபோது. இலக்கணக் குறிப்புத் தருதலையும் சேனாவரையர் பின்பற்றியுள்ளார்.

இனைத்தென அறிந்த சினைமுதற் கிளவிக்கு

வினைப்படு தொகையின் உம்மை வேண்டும் (தொல். சொல்.33)

என்னும் நூற்பாவின் உரை விளக்கத்தில்.

"இருதோள் -தோழர் பற்ற எனவும். "ஒண்குழை யொன்று ஒல்கி யெருத்தலைப்ப எனவும் உம்மையின்றி வந்தனவாலெனின் : ஆண்டும்மை செய்யுள் விகாரத்தால் தொக்கு நின்றன வென்பது"" என்றவாறு இலக்கணக் குறிப்புரைத்துள்ளார்.

சொல்லதிகார முதல் நூற்பாவின் உரையில்

”என்மனார் என்பது செய்யுள் முடிபெய்து நின்றதோர் ஆர் ஈற்று எதிர்கால முற்றுச்சொல். என்றிசினோர். கண்டிசினோர் என்பன முதலாயின அவ்வாறு வந்த இறந்தகால முற்றுச் சொல்

“ஆயிரு திணையிலும்“ என்னும் உம்மை விகார வகையால் தொக்கு நின்றது. “இசைக்கும்“ என்பது செய்யும் என்னும் முற்றுச்சொல். “மன்“ என்னும் இடைச்சொல் “மன“ என ஈறு திரிந்து நின்றது” என்று என்மனார். என்றிசினோர். கண்டிசினோர் முதலிய சொற் களுக்கு இலக்கணக் குறிப்புத் தந்துள்ளமையும் காணமுடிகின்றது.

”ஊட்டி யன்ன வொண்டளிர்ச் செயலை (அகம்.68) என்புழி இன்னதனை யென்று தெரித்து மொழியாமையின் வழுவாம் பிறவெனின் : உம்மை யென்னும் அலங்காரமாயினன்றே இன்னதொன்றனையெனல் வேண்டுவது. செயலையந் தளிரினது செய்யாத நிறத்தைச் செய்தது போலக் கூறுங் கருத்தினராகலிற் பிறிதோரலங்காரமாம்.” (தற்குறிப்பேற்றம்) என்று அணியிலக்கணம் கூறி சேனாவரையர் தம்முடைய இலக்கணப் புலமையை வெளிப்படுத்தியுள்ளார்.

இயைபு காட்டல்

ஓர் இயலுக்கும் அடுத்த இயலுக்கும், ஒரு நூற்பாவிற்கும் அடுத்த நூற்பாவிற்கும் இயைபு சுட்டிப் போகும் பண்பும் சேனா வரையர் உரையில் அமைந்துள்ளது.

”நான்கு சொற்கும் பொதுவிலக்கணம் உணர்த்தினார். அதற் கிடையீடின்றி அவற்றது சிறப்பிலக்கணம் உணர்த்துதல் முறைமையாயினும் வேற்றுமையிலக்கணம் உணர்த்துதற்கு வேறிடமின்மையானும், பொது இலக்கணமாதல் ஒப்புமையானும், உருபேற்றல் பெயர்க் கிலக்கணமாகலின் வேற்றுமை யுணர்த்திப் பெயருணர்த்தல் முறையாகலானும், கிளவியாக்கத் திற்கும் பெயரியற்குமிடை வேற்றுமை உணர்த்திய எடுத்துக் கொண்டார்“ இலக்கணம் என்று வேற்றுமையியலின் தொடக்கத்தில் இயைபு காட்டியுள்ளார். மேலும்,

நான்கு சொல்லும் பொதுவகையானுணர்த்தி, பொது இலக் கணமாதலொப்புமையானும், வேற்றுமை பெயரோடியைபுடை மையானும் பெயரிலக்கணத்திற்கும் பொது இலக்கணத்திற்கு மிடை வேற்றுமை இலக்கணத்தை உணர்த்தி, இனிச் சிறப்பு வகையான் நான்கு சொல்லும் உணர்த்துவான் எடுத்துக் கொண்டு. இவ்வோத்தான் அவற்றின் முதற்கண்ணதாகிய பெயரிலக்கணம் உணர்த்துகின்றார்” என்று பெயரியலின் தொடக்கத்திலும் இயைபு காட்டியுள்ளார்.

சேனாவரையரின் உரைக் கோட்பாட்டுப் பொது இயல்பு களாகச் சுட்டப்பெற்றவை அவர் உரையில் வெளிப்பட்டுள்ள மையினை மேற்கூறப்பெற்ற செய்திகளான் தெற்றென அறிய முடிகின்றது.

சிறப்பியல்புகள்

சேனாவரையரின் உரைக் கோட்பாட்டுச் சிறப்பியல்புகளாகப் பின்வருவன குறிக்கப்படுகின்றன. அவை:

1. உரைத் திட்பமும் நுட்பமும்
2. கருத்துத் தெளிவும் ஆராய்ச்சி வன்மையும்
3. உரிய இடங்களில் உரிய சொற்களைப் பயன்படுத்துதல்
4. தடைவிடை மூலம் கருத்தை நிலைநிறுத்தல்
5. கட்டுரைச் சுவைபயக்கும் உரைநடை
6. மேலும் மேலும் விளக்கம் தரும் முயற்சி
7. காரண காரியம் காட்டல்
8. இலக்கியப் பட்டறிவு உணர்வை விளைவித்தல்
9. வெளிப்பாட்டுத் திறன்

என்பனவாகும்.

உரைத் திட்பமும் நுட்பமும்

”சேனாவரையர் உரை திட்பமும் நுட்பமும் வாய்ந்தது. சேனா வரையரின் கருத்துத் தெளிவையும் ஆராய்ச்சி வன்மையையும் உரை முழுவதும் காணலாம். சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் இயல்பையும் உரிய இடங்களில் உரிய சொற்களைப் பெய்து எழுதும் நடையையும் காணலாம். தருக்க நூல்படி தடைவிடைகளை எழுப்பித் தமது கருத்தை நிலைநிறுத்தும் இயல்பையும் இவரது நடையில் காணலாம். சேனாவரையர் சொல்லதிகாரம் ஒன்றிற்கே உரை கண்டி ருப்பினும், தொல்காப்பியம் பற்றி முழுநோக்கு உடையவர் என்று கூறலாம்.””

இக்கருத்து சேனாவரையரின் உரைச் சிறப்பினை அறிய உதவுகின்றது.

வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது

நினையுங் காலை காலமொடு தோன்றும் (தொல். சொல்.198)

என்ற நூற்பாவிற்கு “வேற்றுமை கொள்ளாது என்னாது, காலமொடு தோன்றும் எனின், தொழில்நிலையொட்டும் தொழிற் பெயரும் வினைச் சொல்லாவான் செல்லும் ஆகலானும் காலமொடு தோன்றும் என்னாது வேற்றுமை கொள்ளாது எனின், இடைச்சொல்லும் உரிச் சொல்லும், வினைச்சொல் எனப்படும் ஆகலானும் அவ்விரு திறமும் நீக்குதற்கு வேற்றுமை கொள்ளாது. காலமொடு தோன்றும் என்றார். வினைச் சொல்லுள், வெளிப்படக் காலம் விளங்காதனவும் உள’ அவையும் ஆராயுங்கால் காலம் உடைய என்றற்கு “நினையுங் காலை என்றார்” என்று எழுதியுள்ள உரைவிளக்கம் திட்ப நுட்பத்துடன் நிகழ்கின்றது.

கருத்துத் தெளிவும் ஆராய்ச்சி வன்மையும்

"எல்லே இலக்கம்" என்ற இடையியல் நூற்பாவில் (தொல். சொல்.269) "எல் என்பது உரிச்சொல் என்று சேனாவரையர் கருது கின்றார். ஆனால் தொல்காப்பியர் அதனை இடைச்சொல்லாகக் குறிப்பிட்டுள்ளார். ""எல் என்பது உரிச்சொல் நீர்மைத்து ஆயினும் ஆசிரியர் இடைச்சொல்லாக ஓதினமையின் இடைச்சொல் என்று கோடும்"" என்று எழுதித் தன்னுடைய கருத்தைக் கூறித் தொல் காப்பியர் கருத்தை மறுத்திருக்கின்றார். இப்பகுதியில் சேனாவரையர் தன்னுடைய கருத்தைச் சொல்லாராய்ச்சி செய்து, தெளிவு பட விளக்கி யுள்ளார்.

செங்கால் நாரை, பெருந்தலைச்சாத்தன் என வண்ணச் சினைச் சொல் அடை சினை முதல் என மயங்காது வருதல் வேண்டும். ""கால்செந்நாரை. தலைபெருஞ்சாத்தான்" என முறை மயங்கி வரின், மரபு வழுவாமென்க. வழக்கினுள் மயங்காது வருமெனவே

கவிசெந் தாழிக் குவிபுறத் திருந்த

செவிசெஞ் சேவலும் பொகுவலும் வெருவர

வாய்வன் காக்கையுங் கூகையுங் கூடி (4.238)

எனச் செய்யுளுள் மயங்கியும் வரப்பெறும் என்றவாறாம். செவிசெஞ் சேவல், வாய்வன் காக்கை என்பன. செஞ்செவிச் சேவல், வல்லாய்க் காக்கை என்னும் பொருள்பட நின்றமையின் வண்ணச் சினைச்சொல் மயக்கமாயின அசூ.்தேல், சினையடையாகிய செம்மையும் வன்மையும் முதலடை ஆயினவாறு என்னையெனின் : சினையொடு முதற்கு ஒற்றுமையுண்மையான் அவை முதலொடும் இயைபுடையவென்பது" (தொல். சொல். 26) என்னும் உரைப்பகுதி கருத்துத் தெளிவும் ஆராய்ச்சி வன்மையும் கொண்டு விளங்குகின்றது.

உரிய இடங்களில் உரிய சொற்களைப் பயன்படுத்துதல்

கருத்துத் தெளிவிற்குச் சொல்லாட்சி இன்றியமையாத ஒன்று சேனாவரையரிடம் சொல்லாட்சித் திறன் திறம்பட அமைந் துள்ளமையை அறிய முடிகின்றது.

"சோறும் கறியும் அயின்றார். யாழுங் குழலும் இயம்பினார் எனவரும், சோறுங்கறியும் தின்றார் யாழுங் குழலும் ஊதினார் எனின் வழுவாம். அசூ.்தேல் ஊன்துவை கறிசோறுண்டு வருந்து தொழில் அல்லது" என்புழி உண்டென்பது ஒன்றற்கே உரிய வினையாகலின் வழுவாம் பிறவெனின் : உண்ட லென்பது உண்பன தின்பன எனப் பிரித்துக் கூறும் வழிச் சிறப்பு வினையாம். பசிப்பிணி தீர நுகரப் படும் பொருளெல் லாம் உணவெனப்படுமாகலின் பொதுவினையுமாம். அதனா னது வழுவன்றென்பது. கறியொழித்து ஏனையவற்றிற் கெல்லாம் உண்டற்றொழில் உரித்தாகலின் பன்மை பற்றிக் கூறினார் எனினும் அமையும்" 45 என்ற உரைப்பகுதி சேனாவரையரின் சொல் ஆளுமைத் திறனை வெளிப்படுத்தும். இவ்வாறு தடை விடைகளின் மூலம் கருத்தை விளக்கும் பாங்கும் சேனாவரையரிடம் காண முடிகின்றது.

கட்டுரைச் சுவை பயக்கும் உரைநடை

““சேனாவரையரது உரை உயர்ந்த நடையில் இயன்றது.சில இடங்களில் செய்யுள் நடை போன்று திகழ்வது நுட்பமும், ஆழமும் உடையது. சொற்செட்டுடன் விளங்குவது. முன்னைய உரைமேல் நல்ல பயிற்சி இல்லார் இதனைப் படித் தறிந்து கொள்ளுதற்கு அருமையாக உள்ளது”46 என்ற கருத்து சேனாவரையரின் உரைநடைச் சிறப்பினை அறிவிக்கின்றது. மேலும்,

”சேனாவரையரது தருக்க முறைப்படி பொருளைத் தெளிவு படுத்திக் காட்டுதற்குரிய சிறந்த கருவியாக அமைந்துள்ளது. எது சரி. எது பிழையென ஆராய்ந்து தம் முடிபினை ஆதாரங்காட்டி நிறுவும் இடங்களிலே அவர் நடைப் போக்கின் சிறப்பைக் காணலாம்”எ

என்ற திறனாய்வு உரைக்கேற்பவும் அவர் உரை விளங்குகின்றது. எடுத்துக்காட்டாக,

““அகரம் மூன்றுகாலமும் பற்றி வரும். ஆகாரம் எதிர்மறை வினையாய் மூன்று காலத்திற்கும் உரித்தாயினும், எதிர் காலத்துப் பயின்று வரும். அகரம், இறந்த காலம் பற்றி வருங் கால். கடதறவென்ற நான்கன்முன் அன் பெற்றும், பெறாதும் வரும். ஏனையெழுத்தின் முன் ரகார ழகார மொழித்து இன் பெற்று வரும். யகாரத்தின் முன் சிறுபான்மை இன்னேயன்றி அன் பெற்றும் பெறாதும் வரும். எதிர்காலத்தின்கண் பகர வகரத்தோடு அன் பெற்றும் பெறாதும் வரும்”46

என்ற பகுதி அமைகின்றது. சேனாவரையர் கருத்தினைக் கருத்திற் கொண்டு சின்னஞ்சிறு தொடர்களை அமைத்து விளக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

”இம்மகள் கண் நல்லவோ கயல் நல்லவோ என வழக்கின் கண்ணும் மயங்கி வருமாலெனின் : உண்மை உணர்வதற்கு வினாயதன்றி ஐய உவமை வாய்பாட்டாற் கண்ணைப் புனைந் துரைத்தல் கருத்தாகலின், அன்னவையெல்லாம் உரை என் னுஞ் செய்யுளாம் என்பது. இந்நங்கை முலையின் இந்நங்கை கண் நல்ல எனுந் தொடக்கத்தன மயக்கம் இன்மையின் இலக்கண வழக்கம் பிறவெனின் : அற்றன்று ’ ஒத்த பண்பு பற்றியன்றே பொருவுவது: கண்ணோடு முலைக்கு ஒத்த பண்பின்மையால் பொருவுவது யாண்டையது! ஒத்த பண்பு பற்றிய பொருவுதற் கண்ணது இவ்வாராய்ச்சி என்பது“’

என்னும் பகுதி கட்டுரைச் சுவைபட அமைந்து பொருள் விளங்கச் செய்கின்றது.

மேலும் மேலும் விளக்கம் தரும் முயற்சி

கருத்துகள் விளக்கம் பெறுகின்றபோது தெளிவு பெறு கின்றன. மேலும் மேலும் விளக்கம் தருகின்றபோது சிறப்படை கின்றன. இதனைச் சேனாவரையர் நன்கு உணர்ந்திருந்தமையினை நடைய உரைப்பகுதிகள் புலப்படுத்துகின்றன. அவருடைய

”இறப்பாவது தொழிலது கழிவு நிகழ்வாவது தொழில் தொடங்கப்பட்டு முற்றுப்பெறாத நிலைமை எதிர்வாவது தொழில் பிறவாமை. தொழிலாவது பொருளினது புடைப் பெயர்ச்சியாகலின், அசூ.ந்து ஒரு கணம் நிற்பது அல்லது இரண்டு கணம் நில்லாமையின், நிகழ்ச்சி என்பது ஒன்று அதற்கு இல்லையாயினும், உண்டல், தின்றல் எனப் பல் தொழில்

தொகுதியை ஒரு தொழிலாகக் கோடலின், உண்ணா நின்றான். வாரா நின்றான். என நிகழ்ச்சியும் உடைத்தாயிற்று என்பது" 49

என்னும் உரைப்பகுதி முக்காலத்தைப் பற்றி விளக்கம் தருவதாக அமைகின்றது. சேனாவரையர் தந்துள்ள விளக்கத்தினால் மூன்று காலத்தைப் பற்றியும் தெளிவாகத் தெரிந்துகொள்ள முடிகின்றது.

சேனாவரையர் இயல்களுக்கு அளித்துள்ள விளக்கமும், ஒன்றற்கு ஒன்று இயைபு காட்டி விளக்கம் தருதலும் சிறப்பாக அமைந்துள்ளன.

காரண காரியம் காட்டல்

காரண் காரியம் காட்டி கருத்தை விளக்குதலுக்கு நுண்ணறிவு இன்றியமையாதது. இவ்வாற்றல் சேனாவரையரிடம் இருந்தமைக்குக் கீழ்க்காணும் பகுதி சான்றாகின்றது.

""ஒடுவும் ஆனும் இரண்டு வேற்றுமை யாகற்பாலவெனின் : அற்றன்று : வேற்றுமை மயக்கமாவது ஒரு வேற்றுமையது ஒரு பொருட்கண்ணாக. சில பொருட்கண்ணாக ஏனை வேற்றுமையுஞ் சேறலன்றே: அவ்வாறன்றிச் சிறிதொழித்து எல்லாப் பொருட் கண்ணும் இரண்டுருபுஞ் சேரலானும் வட நூலுள் பொருள்வேற்றுமை யல்லது உருபு வேற்றுமையான் ஒரு வேற்றுமையாக வோதப் பட்டமையானும், ஈண்டெல்லா வாசிரியரும் ஒரு வேற்றுமையாகவே வோதினாரென்க. வடநூலொடு மாறுகொள்ளாமைக் கூறல் ஆசிரியர்க்கு மேற்கோளாயின், விளிவேற்றுமையை எழுவாய் வேற்றுமைக்கண் அடக்கற்பாலராவர், அவ்வாறடக்கவில ரெனின் : அற்றன்று : விளிவேற்றுமையை எழுவாய் வேற்று மைக்கண் அடக்கல் ஆண்டு எல்லார்க்கும் ஒப்ப முடிந்த தன்று. ஆசிரியர் அவர் மதம் பற்றிக் கூறினராகலின் அதனொடு மாறுகொள்ளாதென்பது""

என்று காரணகாரியம் காட்டி உரை எழுதியுள்ளமையைக் காண முடிகின்றது. மேற்கூறப்பட்ட சேனாவரையார் கருத்தினை இன்றைய ஆய்வாளர் மறுத்துரைப்பதும் அறியத்தக்கது.

இலக்கியப் பட்டறிவு உணர்வை விளைவித்தல்

இலக்கியப் பட்டறிவினை உண்டாக்கும் பாங்கில், சேனாவரை யரது உரை அமைந்துள்ளது. "தொன்னெறி மொழியின் ஆகுநவும் (தொல். சொல்,449) என்பதனை விளக்குமிடத்து. "முதுசொல்லாகிய செய்யுள் வேறுபாட்டின்கண் இயைபில்லன இயைந்தனவாய் வருவன வும் என்றவாறு. அவை யாற்றுட் செத்த வெருமை யீர்தலூர்க் குயவர்க்குக் கடன் என்பது முதலாயின" என்று குறிப்பிட்டுள்ளார்.

"வணிகன் ஒருவன் பல எருமைகளுடன் ஒரு காட்டாற்றி னைக் கடக்க முற்பட்டான். அப்போது ஆற்றில் வெள்ளம் வந்தது. அவ்வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்ட எருமைகள் யாவும் ஓர் ஊர்ப்புறத்தே இறந்துபோன நிலையில் ஒதுங்கியிருந்தன. இதனை அறிந்த அவ்வூரார் அவற்றை அகற்றுமாறு பலரை வேண்டியும் ஒருவரும் உடன்படவில்லை. இதனை உணர்ந்த பெரியவர் ஒருவர். இத்தகைய செயல் நேரிடின் இதனை யார் செய்வது என்பது பற்றி நம் ஊர் அடங்கலில் இருக்கும். இதனைக் கணக்கனை அழைத்துக் கேட்க வேண்டும்.

என்று கூறினார். அவ்வாறே கணக்கனை அழைத்துக் கேட்க, அவர்களிடம் அடங்கலைக் கொண்டு வருவதாக அவன் கூறிச் சென்று, தனக்கு ஆண்டுதோறும் கையூட்டாகக் கொடுக்கும் பொருளை இவ்வாண்டில் கொடாத அவ்வூர்க் குயவரை ஒறுத்தற்குச் சமயம் இதுவே எனக் கருதி. "காட்டெரு முட்டை பொறுக்கி மட்கஞ் சுட்ட புகையான் மேற்கே மேகந் தோன்றி மின்னியிடித்து மழை பொழிந்து யாற்றில் நீத்தம் பெருகி அடித்தும் கொல்லும் எருமைகளை ஈர்த்துக் கொணர்ந்து கரையேற்றல் இவ்வூர்க் குயவர்க் கென்றுங் கடனே என்று ஒரு பழைய ஓலையில் வரைந்து அடங்கலோடு சேர்த்துக் கட்டி அவ்வூரவரிடம் கொண்டுவந்து காட்டினான். ஊராரும் இவ்வோலையில் உள்ளவாறே அவ்வூர்க் குயவர்களுக்கு அவற்றைக் கரையேற்றுமாறு பணித்தனர்"""" இக்கதையினையே சேனாவரையர் மிகச் சுருக்கமாகக் கூறியுள்ளார்.

இவ்வாறு இலக்கியப் பட்டறிவு உணர்வை விளைவிக்கக் கூடிய வகையில் அவரது உரைப்பகுதிகள் காணப்படுகின்றன. உரையாசிரியர்களிடையே கருத்து வெளிப்பாட்டுத் திறன் பல கோணங்களில் அமைந்துள்ளது. இத்திறன் சேனாவரையரிடம் சற்றுச் சிறப்பாகவே அமைந்துள்ளது. இது மேற்கூறப்பட்டுள்ள சான்றுகளான் விளங்கும்.

சேனாவரையரது உரை "செறிவும். சுருங்கச் சொல்லி உய்த்துணர வைக்கும் இயல்பும் உடையது' ஆற்றல் வாய்ந்த சொற் களை ஆராய்ந்து எடுத்து, ஆழமான பொருளைத் திணித்து, ஆழ்ந்து பலமுறை கற்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. தருக்க நூல்முறை வழுவாமல் தடைவிடைகள் பல எழுப்பி, பிற உரையினை மறுத்துத் தன் கருத்தை நிலைநாட்டுகின்றது. இவ்வுரையைக் கற்கும்போது, சிங்க நோக்காக நூலின் முன்னும் பின்னும் நோக்கி, அவற்றை நன்கு நினைவில் கொண்டு கற்க வேண்டிய பகுதிகள் பல இருப்பதை உணரலாம். தூய தமிழ்நடை, பீடு குன்றாமலும் பொருள் தெளிவுடனும் இனிய கருத்தோட்டத்துடனும் நூல் முழுவதும் அமைந்துள்ளது." என்ற அரவிந்தனின் கருத்து முற்றிலும் பொருத்தமானது.

பேராசிரியரின் உரைக் கோட்பாடுகள்

இவரது உரைக் கோட்பாடுகளும் பொது இயல்பு. சிறப்பியல்பு என்ற இரு நிலைகளில் அமைந்துள்ளன.

பொது இயல்புகள்

1. நூலாசிரியரைப் போற்றுதல்
2. பல்துறை அறிவு
3. பிற நூலார் கருத்தை மறுத்தல்
4. இலக்கிய வரலாற்றுச் செய்திகள்
5. ஆய்வுப் பாங்கு
6. மனனம்

7. சொற்பொருள் கூறல்

8. மேற்கோள் கூறல்

9. வினாவிடை நெறி

10. அடைமொழி நயம்

11. தொடர் நயம்

12. பொருள்நயம

13. எடுத்துக்காட்டு நயம்

14. இலக்கண நயம்

15. கருத்து நயம்

16. இலக்கணக் குறிப்பு

17. உவமை கூறல்

18. முன்னிலைப்படுத்திக் கூறுதல்

19.மறுப்புக் கூறுதல்

இவையாவும் பேராசிரியர் உரைக் கோட்பாடுகளின் பொது இயல்பு களாகச் சுட்டப்பெறுகின்றன.

நூலாசிரியரைப் போற்றுதல்

““எவரும் திறனாய்வுக்கு உட்பட்டவர் என்பது பொது விதி. எனினும் இதற்கு ஓர் விலக்குண்டு எனத் தமிழ் நூல்கள் புலப்படுத்துகின்றன. மூல நூலாசிரியரை அந்நூலுக்கு உரை செய்யும் உரையாசிரியர்கள் நேர்திறம் செய்வார்களேயன்றி எதிர்திறம் செய்யார்கள். மூல நூலாசிரியன் கருத்தை விளக்கிக் காட்டுவதும், அது தகாதது போல் ஒருகால் தமக்குப் பட்டாலும் அங்ஙனம் கூற முனையாது தக்கதாக இசைத்துப் போற்றுவதும் உரையாசிரியர்களின் பண்பு களாம்“53என்று வ.சுப மாணிக்கம் குறிப்பிட்டுள்ளார். இப்பண்பு பேராசிரி யரிடம் மிகச் சிறப்பான முறையில் புலப்படுகிறது.

நண்டிற்கு மூக்கு உண்டா அல்லது இல்லையா என்று பேராசிரியருக்கத் தெரியாது.

““நண்டிற்கு மூக்குண்டோவெனின் அசூ.ர்து ஆசிரியன் கூறலான் உண்டென்பது பெற்றாம்”

(தொல். பொருள். 586)

என்று பேராசிரியர் எழுதியுள்ளார். தொல்காப்பியர் நண்டிற்கு மூக்கு உண்டு என்று கூறியிருப்பதால் அவரும் நண்டிற்கு மூக்கு உண்டு என்று குறிப்பிட்டுள்ளார். இதன் மூலம் தொல்காப்பியரிடம் எந்த அளவுக்கு மதிப்பு இருக்க வேண்டும் என்பது தெரிகிறது.பேராசிரியர் “வினையின் நீங்கி விளங்கிய அறிவன் தொல்காப்பியரை மதித்துள்ளார். முனைவனாகத்

பல்துறை அறிவு

உரையாசிரியருக்கு இலக்கணம், இலக்கியம் வரலாறு. வடமொழி இவற்றில் போதுமான அளவுக்குப் புலமை இருத்தல் வேண்டும். மேலும் சமூகவியல், பொருளியல், மருந்தியல், உளவியல். பாலியல் போன்றவற்றிலும் புலலை இபற்றிருக்க வேண்டும். இத்தகைய தகுதி பெற்றவரே உரையாசிரியராகத் திகழ முடியும். இக் கருத்திற்கேற்ப, "உரையெழுதும் பணி மிகச் சிக்கலானது, அதற்குப் பலநூற் கல்வி இன்றியமையாதது"" என்று அறிஞர் குறிப்பிடுவதும் இங்குக் கருதத்தக்கது.

பேராசிரியர் முத்தமிழிலும் வல்லவராக, பன்னூற் புலமையும் பெற்றவராக இருந்துள்ளமையை அவருடைய உரை தெளிவுறுத்து கின்றது. முத்தமிழிலும் வல்லவர் என்பதை.

""வழக்கியலும் வழக்கியலாற் செய்யப்பட்ட செய்யுளின்றி அமையாத இசையிலக்கணம் இசைத் தமிழெனப் பெய ரெய்தி அவ்வியற்றமிழ்ப் பின்னர் வைக்கப்பட்டதெனப் படும்: இவ்விரண்டன் வழிநிகழ்த்துங் கூத்திலக்கணங் கூறிய நாடகத் தமிழ் அவற்றுப் பின்னர்த் தாமென முறைமை கூறுதலும் என்ற உரைப்பகுதி காட்டுகின்றது.

"ஒருவனும் ஒருத்தியும் எதிர்ப்பட்ட வழிக் கரந்தொழுகும் உள்ள நிகழ்ச்சி பெண்பாலதாகலாற் பெரும்பான்மையும் அவள் கண்ணே ஈண்டுக் கூறுகின்ற மெய்ப்பாடு (புகுமுகம் புரிதல் முதலா னவை) சிறந்த தென்பது" (தொல். பொருள்.261)

என்று கூறும் உரைப்பகுதி பேராசிரியரின் பாலியலறிவைக் காட்டும்.

வடமொழிப் பயிற்சியும், தமிழ்ப்பற்றும் உடையவர் என்பதை

"எல்லாவற்றானும் முற்ற உணர்ந்தோர் செய்த நூலண்மை யின் அவை தேறப்படா அல்லதூ உம் அவை தமிழ் நூலன் மையின் ஈண்டு ஆராய்ச்சியிலவென்பது" (தொல். பொருள்.649)

என்னும் பகுதி எடுத்தியும்புகின்றது.

"தொகுத்தல் விரித்தல் தொகைவிரி மொழிபெயர்த்

ததர்ப்பட யாத்தலோ டனைமர பினவே (தொல்.பொருள்.652)

என்ற நூற்பா உரையில், மொழிபெயர்ப்பு நெறிமுறைகளாக

"மொழிபெயர்த்தென்பது பிறபாடையாற் செய்யப்பட்ட பொருளினைத் தமிழ் நூலாகச் செய்வது. அதுவுந்தமிழ் நூலுள் வழிநூற்கு மரபாமென்றவாறு . அதர்ப்படவென்பது. நெறிப்பட வென்றவாறு' நெறிப்படுதலென்பது அவ்வாறு மொழிப்பெயர்த்துச் செய்யுங்கால் அது கிடந்தவாற்றானே செய்யப்படும்' தொகுத்தும் விரித்துந் தொகைவிரியாகவுஞ் செய்ததனாற் பயமில்லைத் தமிழர்க்கும் ஆரியர்க்குமென்பது. மொழிபெயர்த்தெனவே, பொருள் பிறழாமை பெற்றாம். வழக்கு நூலுள்ளும் மொழிபெயர்த்து யாக்கப்படுவன உளவே வெனின், அற்றன்று' அது வேண்டுமே? வேதப் பொருண்மையும் ஆகமப் பொருண்மையும் நியாய நூற்

பொருண்மையும் பற்றித் தமிழ்ப்படுக்குங்கால் அவற்றிற்கும் இதுவே இலக்கணமென்றற்கு மொழிபெயர்த்தலையும் இவற்றுக்கட் கூறினானென்பது.

என்று கூறியிருப்பதும் பேராசிரியரின் பல்துறை அறிவுக்குச் சான்று.

பிற நூலார் கருத்தை மறுத்தல்

கருத்து மறுப்பும் மாறுபாடும் கொண்டு ஒருவரையொருவர் தாக்கிக் கொள்ள உரையாசிரியர்கள் தயங்குவதில்லை. பேராசிரியர் இவ்வகையில் தமக்கு முன்னர் எழுதிய ஆசிரியர்களின் கருத்துக்களை மறுத்துப் பல இடங்களில் எழுதியுள்ளார்.

"ஈண்டுத் தனிச்சொல் வேண்டுமென்று பிற்காலத்து நூல் செய்தாரும் உளர் அது சான்றோர் செய்யுள் எல்லா வற்றோடும் பொருந்தாமையானும், பிற்காலத்தில் செய்த நூல் பற்றி முற்காலத்துச் செய்யுட்கெல்லாம் இலக்கணம் சேர்த்து தல் பயமின்றாதலானும் அசூ.ர்தமையாதென்பது" (தொல். பொருள். 383) மேலும்,

மண்டிலங் குட்ட மென்றிவை யிரண்டுஞ்

செந்தூக்கியல வென்மனார் புலவர் (தொல்.பொருள்.429)

என்ற செய்யுளியல் நூற்பா உரையில் குட்டமென்பது வழக்குச் சொல் லாற் செய்த செய்யுள் என்பதனைப் பேராசிரியர் மறுத்துள்ளமை யினை.

"குட்டமென்பது வழக்குச் சொல்லாற் செய்த செய்யுளென் பாருமுளர். நாற் சொல்லாலுமன்றிச் செய்யுள் செய்யப்படா மையின் அது குட்டமென்றல் நிரம்பாது. ஒத்தாழிசை யென்பது எல்லாச் செய்யுண் மேலுஞ் செல்லுமெனவும் உரைப்ப பாவும் இனமுமெனப் பகுத்துரைப்பார்க்காம் அது பொருளாவதென மறுக்க : அல்லதூஉம் ஒரோவொன்றே வருவது ஒத்தாழிசையெனப்படாவென்பது. செந்தூக்கென்பது ஆசிரியப்பாவென்றவாறு. பாவினைத் தூக்கெனவுஞ் சொல்லுப. "இயல" வென்பது அப்பாவானே நடக்குமென்ற வாறு. இதுவும் இன்ன செய்யுட்கு உரித்தெனப் பாவினை வரையறுத்தேயாம்"" போன்ற உரைப்பகுதிகள் பிற நூலார் கருத்தை மறுத்தலுக்குச் சான்று களாகத் திகழ்கின்றன.

இலக்கிய வரலாற்றுச் செய்திகள்

பேராசிரியர் உரையில் இலக்கிய வரலாற்றுச் செய்திகள் பயின்று வந்துள்ளன.

"படர்ந்துபட்ட பொருண்மையவாகிய மாபுராணம், பூத புராணம் என்பன சில்வாழ்நாட் சிற்றறிவின் மாக்கட்கு உபகாரப் படாமையின், தொகுத்துச் செய்யப்பட்டு வழக்கு நூலாகிய தொல்காப்பியம் இடைச்சங்கம் முதலாக இதுகாறும் உளதாயிற்று" (தொல்.பொருள்.652)

இப்பகுதியான் தொல்காப்பியத்தின் நிலை பேற்றுத்தன்மைக்குக் கூறியுள்ள காரணம் தெளிவாகின்றது.

"பன்னிருபடலம் முதனூலாக ஐயனாரிதனார். வெண்பா மாலை என்னும் வழிநூல் செய்தார்"

(தொல். பொருள்.649)

உரையின்றிச் சூத்திரத்தானே பொருள் நிகழ்ந்த காலமும் உண்டு (தொல்.பொருள்.653)

என்று வரக்கூடிய பகுதிகளும் இவை போல்வன பிறவும் பேராசிரியர் உரையால் அறியலாகும் இலக்கிய வரலாற்றுச் செய்திகளாகும்.

ஆய்வுப்பாங்கு

உவமைகள் வினை, பயன், மெய், உரு என்ற நான்கின் அடிப்படையில் பிறக்கும் என்பது தொல்காப்பியர் கருத்து. உருவும் நிறமும் பண்பில் அடங்கும் எனினும் தனித்தனியாகத் தொல்காப்பியர் கூறியதற்குத் தனி விளக்கம் தருகிறார் பேராசிரியர். இவ்விளக்கம் அவரது ஆய்வுப் பாங்கினைப் புலப்படுத்தும். இரவுக்குறிக்கண் கூற்று நிகழ்த்தும் தலைவன் நிறம் பற்றி எங்ஙனம் அறிவான்? தொட்டு உணரக்கூடிய உருவம் பற்றியே கூறமுடியும். பகல் குறியில் சந்தித் தால் நிறம் பற்றிய உவமை கூறுவது இயல்பு என்பதை உணர்ந்தே தொல்காப்பியர் மெய், உரு ஆகியவற்றைப் பண்பு என்ற ஒன்றினுள் அடக்கவில்லை எனப் பேராசிரியர் விரித்துரைப்பது அவரது ஆய்வுப் பாங்கினைக் காட்டுகின்றது.

மனனம்

பேராசிரியருடைய உரையைப் புரிந்துகொள்ள மனன ஆற்றலும் தேவை. பொருளொடு புணர்ந்த நகைமொழிக்கு விளக்கம் தந்தவர் "இவ்வுரைப் பகுதி பிறிதும் ஒன்றுண்டு. அது மரபியலிலும் பகுத்துச் சொல்லுதும்" என்று கூறியுள்ளார். உரை மனனம் இருந்தால்தான் நினைவுபடுத்திக் காண இயலும். இவ்வாற்றல் பேராசிரியருக்கு இருந்தமையை இது உணர்த்துகின்றது.

சொற்பொருள் கூறல்

உரை மரபுகளுள் ஒன்று சொற்பொருள் உரைத்தல். சொற் களுக்கு வெறும் அகராதிப் பொருளை மட்டும் தராமல் நயப் பொருளையும் நுண்பொருளையும் தருவது உரையாசிரியர்களின் இயல்பாகும்.

""வறுமை என்பது போகந் துய்க்கப்பெறாத பற்றுள்ளம்" (தொல். பொருள்.253)

"கொடை யென்பது உயிரும் உடம்பும் உறுப்பும் முதலாகிய எல்லா ப் பொருளுங் கொடுத்தல்" (தொல்.பொருள்.257)

"உவமம் என்பது ஒரு பொருளோடு ஒரு பொருளினை ஒப்புமை கூறுதல்" (தொல். பொருள்.276)

"மெய்ப்பாடென்பது கண்கூடாதல்" சொற்கேட்டார்க்குப் (தொல். பொருள்.313) பொருள்

என்று வறுமை, கொடை, உவமம், மெய்ப்பாடு போன்ற சொற்களுக்குச் சொற்பொருள் தந்துள்ளமையைப் பேராசிரியர் உரை புலப்படுத்து கின்றது.

மேற்கோள் காட்டல்

பத்துப்பாட்டு. எட்டுத்தொகை, திருக்குறள், நாலடியார். ஐந்தினை ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது. கார் நாற்பது, களவழி நாற்பது. பழமொழி நானூறு, சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங் கதை, முத்தொள்ளாயிரம் போன்ற இலக்கியங்களில் இருந்து மேற்கோள்களைப் பேராசிரியர் காட்டியுள்ளார்.

இறையனார் களவியல், புறப்பொருள் வெண்பாமாலை. நன்னூல், போன்ற இலக்கண நூல்களில் இருந்து மேற்கோள் காட்டி யும், காக்கைப் பாடினியம், பன்னிரு படலம், செயிற்றியம். அவிநயம். அகத்தியம் போன்ற இலக்கண நூல்களின் பெயர்களைச் சுட்டியும் சென்றுள்ளார்.

சிறுகுரீஇயுரை, தந்திர வாக்கியம், பருப்பதம், தகடூர் யாத்திரை. பாவைப்பாட்டு, அம்மனைப் பாட்டு, வஞ்சிப்பாட்டு. மோதிரப்பாட்டு. கடகண்டு, விளக்கத்தனார் கூத்து. சிற்றட்டகம். பரணிச்செய்யுள், கலம்பகம். பாரதம். பூதபுராணம் மாபுராணம் முதலான நூல்களின் பெயர்களைப் பேராசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

““மூப்பே பிணியே வருத்தம் மென்மையொடு

யாப்புற வந்த இளிவரல் நான்கே ““ (தொல்.பொருள். 254)

இந்நூற்பா உரையில் இரண்டு இலக்கியங்களிலிருந்து மேற்கோள் காட்டியுள்ளார்.

”தொடித்தலை விழுத்தண்டு ஊன்றி நடுக்குற்று

இருமிடை மிடைந்த சிலசொல்

பெருமூ தாளரேம் ஆகிய எமக்கே““ (4. 243)

என்பது தன்கட் டோன்றிய மூப்புப் பொருளாக இளிவரல் பிறந்தது’ என்னை? இளமைக் காலத்துச் செய்தன செய்யமாட்டாது இளிவந்தனம் இக்காலத்து என்றமையின்.

”இமயமும் துளக்கும் பண்பினை

துளையிலர் அளியர் பெண்டிர் இசூ.ं.து எவனோ“ (. 158)

என்பது தன்கட்டோன்றிய பிணிபற்றி இளிவரவு பிறந்தது’ என்னை? மலையைத் துளக்கும் ஆற்றலையுடையாய் காமப்பிணி கூர்ந்தோரை அலைப்பது நினக்குத் தகுவதன்றென இளிவந்து வாடைக்குக் கூறினமையின்” என்பன இரு மேற்கோள் பகுதியாக அமைந்துள்ள உரைப்பகுதியாகும்.

வினா - விடை நெறி

பேராசிரியர் உரைநடை வினாவும் விடையுமாகச் சிறுசிறு தொடர்களைக் கொண்டு விளங்குகின்றது. இனிக் கூறுதும், என்னை, என்னையெனின், எனின், என்ன பெயர்த்தோவெனின், முன்னர்ச் சொல்லுதும், காட்டும், அற்றன்று, யாங்ஙனம் போன்ற வினா விடைப்பாங்கில் அமைந்துள்ள சொற்களைக் கையாண்டுள்ளார்.

““கிழவோற்கு ஆயின் இடம் வரைவின்றே என்ற நூற்பா உரையில் (தொல். பொருள். 305) தலைமகற்கு இடவரையறை இல்லை. வரையறையில்லவற்றுக்கு வரையறை கூறாமென முடியாவோவெனின், அங்ஙனமாயினுங் கிழத்திக்கும் தோழிக்கும் இடம் வரை யறுத்ததனைக் கண்ட மாணாக்கன் இவ்வாறே தலைமகற்கும் இடம் வரையறை உண்டு கொலென்று கருதிற் கருதற்க வென்றற்கு இது கூறினா னென்பது

எனத் தெளிவு பட வினா - விடைப் பாங்கில் எழுதியுள்ளார். மேலும்

”சொல்லிய தொடையொடு வேறுபட் டியலிற்

சொல்லியற் புலவரது செந்தொடை யென்ப” (தொல்.பொருள். 412)

என்ற செய்யுளியல் நூற்பாவிற்கு,

”இயலின் என்றதனான் இரண்டடியால் தொடை பெற்று நின்று இரண்டடி யெதுகை யாகியவை தம்முன் தொடுக் குங்காற் செல்வன் தொடுப்பினும் அதனைச் செந்தொடை என்னாது இரண்டடி யெதுகை யென்றும், இனி ஓரடி இடையிட்டுத் தொடுத்த வழியுந் தொடர்ந்து அடி இரண்டுஞ் செந்தொடையாமாயினும் மூன்றாமடி எதுகைபடத் தொடுத் தன் மாத்திரையானே அதனை இடையிட்டெதுகையென்றுங் கொள்ளப்படும். என்னை? அவ்வெதுகை ஆண்டுச் சிறந்த மையினென்பது. அவை முன்னர்க் காட்டுதும்” என்று வினா விடை முறையில் உரை எழுதி நூற்பாவின் பொருளை விளக்கியுள்ளமையைக் காணமுடிகின்றது.

அடைமொழி - நயம்

மெய்ப்பாட்டியலின்கண் தொல்காப்பியர் எண்வகை மெய்ப் பாடுகளை விளக்குகின்றபோது “உள்ளப்பட்ட நகை ,‘விளிவில் கொள்கை அழுகை, “யாப்புற வந்த இளிவரல், “மதிமை சாலா மருட்கை ’ “பிணங்கல் சாலா அச்சம்: “சொல்லப்பட்ட பெருமிதம் “வெறுப்பின் வந்த வெகுளி, “அல்லல் நீத்த உவகை என்று அடைமொழி கொடுத்து இயம்பியுள்ளார். ”உள்ளப்பட்ட நகை நான்கு என்றதனான் உள்ளத்தோடு பிறவாத நகையுமுள, அவை “வறிதகத் தெழுந்த வாயண் முறுவலள் (அகம்.5) என்றாற் போல வருவனவெனக் கொள்க” என்று அவ்வடைமொழி ஒவ்வொன் றிற்கும் நயஉரையினைப் பேராசிரியர் எழுதியுள்ளார். மேலும்,

“சேவற் பெயர்க்கொடை சிறகொடு சிவணும்

மாயிருந் தூவி மயிலலங் கடையே“ (தொல்.பொருள். 603)

என்பது மரபியல் நூற்பா. பறப்பனவற்றுள் ஆண்பாற்கெல்லாம் சேவல் என்னும் பெயர் உரியது. அவற்றுள் மயிலுக்கு ஆயின் அசூ.்.து ஆகாது என்பது இந்நூற்பாவின் பொருள். இதில் இடம் பெற்றுள்ள மாயிருந்தூவி மயில்“ என்னும் அடைமொழிக்கு ”மாயிருந்தூவி மயில்” என்றதனான் அவை தோகையுடையவாகிப் பெண்பால் போலுஞ் சாயலவாகலான் ஆண்பாற்றன்மை இலவென்பது கொள்கை. எனவே, செவ்வேள் ஊர்ந்த மயிற்காயின் அதுவும் நேரவும் படுமென்பது ” என்று நயம்பட எழுதியுள்ள உரைவிளக்கம் போற்றற் குரியது.

தொடர் நயம்

இலக்கணச் சொற்கள் சிலவற்றிக்குப் பேராசிரியர் தந்துள்ள விளக்கங்கள் மிகச் சிறப்பானவை.

““புகுமுகம் புரிதல்“ என்பது ஒருவனும் ஒருத்தியும் எதிர்ப்பட்ட வழித் தன்னை அவன் நோக்குதற்கண் விரும்பும் உள்ள நிகழ்ச்சி. அதாவது, தலைமகன் காண்டலைத் தலை மகள் வேட்டல் என்றவாறாம்' மற்றிது தலைமகற்கு உரித்தன் றோவெனின் அவன்தான் காண்பினல்லது தற்காண்டலை நயவான். அது தலைமையன்றாகலின்” (தொல்.பொருள். 261)

”பாராட்டெடுத்தல் புணர்ச்சி நிகழ்ந்த பின்னர்த் தலை மகனை இயற்பட நினையுங் குறிப்பும்: இது பாராட்டென்னாது எடுத்தலென்றதனால் அதனை உள்ளமெடுத்தல் மேற் கொள்க. இது தலைமகற்கும் ஒக்கும். (தொல்.பொருள். 264)

இத்தகைய விளக்கங்கள் நயமுடன் அமைந்து பேராசிரியரின் நுண்மான் நுழைபுலத்தைக் காட்டுகின்றன:

பொருள் நயம்

மக்கள் தாமே ஆறறி வுயிரே

பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே (தொல்.பொருள். 588)

இந்நூற்பாவிற்கு,

”மக்களெனப் படுவோர் ஐம்பொறியுணர்வேயன்றி மன மென்பதோர் அறிவும் உடையர். அக்கிளைப் பிறப்பு வேறும் உள. முப்பத்திரண்டு அவயவத்தான் அளவிற்பட்டு அறிவொடு புணர்ந்த ஆடூஉ. மகடூஉ மக்களெனப்படும். அவ்வாறு உணர்விலுங் குறைவு பட்டாரைக் குறைந்த வகை அறிந்து முற்கூறிய சூத்திரங்களானே அவ்வப் பிறப்பினும் சேர்த்திக் கொள்ள வைத்தானென்பது. அவை, “ஊமுஞ் செவி டும் குருடும் போல்வன. கிளையெனப்படுவார் தேவருந்தானவரும் முதலாயினார். பிறப்பென்பதனாற் குரங்கு முதலா கிய விலங்கினுள் அறிவுடையனவெனப்படும் மனவுணர்பு டையன உளவாயின் அவையும் ஈண்டு ஆறறிவுயிராயடங்கு மென்பது.“தாமே“ யெனப் பிரித்துக் கூறினமையான் நல்லறிவு டையாரென்றதற்குச் சிறந்தாரென்பதுங் கொள்க“ என்று இலக்கணத்திற்கு இலக்கிய நயத்தோடு பேராசிரியர் பொருள் கூறியுள்ளார்.

எடுத்துக்காட்டு நயம்

”எவ்வகை இலக்கணமும் பலருக்கு எளிதாக விளங்க வேண்டுமெனின் உதாரணங்கள் பலர் அறிந்த வழக்காக இருத்தல் வேண்டும். மக்களின் நடைமுறைப் பேச்சுக்களினின்றும் வழக்க வொழுக்கங்களினின்றும் இந்த எடுத்துக்காட்டுகள் அமைய வேண்டும்” என்று உ.வே. சாமிநாத ஐயர் குறிப்பிடுவதற்கேற்பப் பேராசிரியர் எடுத்துக்காட்டுகள் பலவற்றைத் தந்துள்ளார்.

“கலங்கி மொழிதல் (தொல். பொருள். 266) என்னும் மெய்ப் பாட்டிற்கு விளக்கம் எழுதுகின்றபோது, “கையொடுபட்ட கள்வரைப் போலச் சொல்லுவனவற்றைத் தடுமாற்றந்

தோன்றச் சொல்லுதல் எனப் பேச்சு வழக்கில் உள்ளவற்றை எடுத்துக்காட்டியுள்ளார். மேலும், "கூழை விரித்தல்" என்ற மெய்ப்பாட்டிற்கு.

""கூழை விரித்தலென்பது. மெய்யு மெய்யுந் தீண்டியவழி மெல்லியன் மகளிர்க்கு வரும் வேறுபாடு நான்கனுண் முதற் கண்ண தெனப்படும் ' என்னை? தன்னுளள்ளத்தில் நிகழ்ந்த வேறுபாட்டினை அக்காலத்துத் தலைமகள் நிறையுடையளா கலாற் கரந்தொழுகுதற் பாலளல்லளே. அங்ஙனங் கரங்குங் கால் தன்வயத்தாகிய உடம்பு பற்றி வரும் வேறுபாட்டினைத் தாங்கும்' அங்ஙனந் தாங்குங்கால் உடம்பொடு தொடர்பு டையவாகி வேறுபட்ட தலைமயிரினது முடி உள்ள

நெகிழ்ச்சியானே தன் வயத்ததன்றி ஞெகிழும்: ஆகலின் இது முற்கூறப்பட்டது. பிற சுவை பற்றியும் உலகினுண் மயிர்க்கு வந்த வேறுபாட்டினைக் கூறுப: என்னன? ஒன்றன் மதுரச் சுவைக்கு அதிசயங் கூறுவார் மயிரினைச் செவ்வனின்றன வென்பதுபோலக் கொள்க""என்னும் பேராசிரியரது உரைவிளக்கம் எடுத்துக்காட்டு நயத்துடன் அமைந்துள்ளது.

இலக்கண நயமும் கருத்து நயமும்

"சொற்களுக்கு உண்மைப் பொருள் கண்டு கூறுதல், பொரு ளைத் தெளிவாக அறிந்து கொள்ளுவதற்கு இன்றியமையாத இலக்கணக் குறிப்புகளை விடாமற் சுட்டிச் செல்லுதல் முதலிய பண்புகள் பேராசிரியர் நடையைச் சிறப்பித்து நிற்கின்றன"7 என்று வி. செல்வநாயகம் குறிப்பிட்டுள்ளார்.

"சிறிது வருந்தி முயன்று நல்ல தமிழறிவு பெற வேண்டும் என்று கற்பார்க்குத் தொல்காப்பியவுரைகள் அமுதசுரபி களாகும் " என்று வ.சுப. மாணிக்கம் குறிப்பிட்டுள்ளார். இவ்விருவருடைய கூற்று களின் உண்மை பேராசிரியர் உரையில் புலப்பட்டு நிற்கின்றது.

"வழிபடு தெய்வம் நிற்புறங் காப்பட்." (தொல். பொருள். 422 என்ற நூற்பாவிற்கு "நிற்புறங் காப்பவென ஒருமை கூறிப் பொலிமின் எனப் பண்மை கூறியதென்னையெனின். வழிபடு தெய்வ நிற் புறங்காப்ப வென்றமையிற் புதல்வரோடுங் கூட்டிப் பாட அமையு மென்றற்கு அவ்வாறு கூறினாரென்பது" என்று இலக்கண நயம்பட உரை எழுதியுள்ளமையைக் காண முடிகின்றது. மேலும்,

"வாயுறை வாழ்த்தே யவையடக் கியலே

செவியறி வுறூ உவென வவையு மன்ன" (தொல். பொருள். 423)

இந்நூற்பா உரையில்.

""வாய் - வாய்மொழி' உறை - மருந்து' வாயுறை யென்பது சொன்மருந்தெனப் பண்புத்தொகையாம்' இனி வாய்க்கட் டோன்றிய மருந்தென வேற்றுமைத் தொகையுமாம்' மருந்து போறலின் மருந்தாயிற்று. அவன் சிறப்புக் கூறி வழுத்தி ஒரு சாத்தற்குப் பயன்படச் சொல்லினமையின் வாயுறை வாழ்த் தெனப்படுமென்பது.மற்று. "நிற்புறங் காப்ப" வெனப் புறநிலை வாழ்த்திற்கு இடம் நியமித்தாங்கு இதற்கும் இடநியமங் கூறாரோவெனின், அது மாட்டேற்றானே அடங்குமென்பது. அவையடக்கியல் - அவையை வாழ்த்துதல், அவையடக்குத

லென்பது இரண்டாம் வேற்றுமைத்தொகை' அடக்கிய லென்பது. வினைத்தொகை' தானடங்குதலாயின் அடக்கிய லெனல் வேண்டும். அசூ.ர்.தாவது அவையத்தாரடங்கு மாற்றால் இனியவாகச் சொல்லி அவரைப் புகழ்தல்"

என்று இலக்கண நயம்படப் பேராசிரியர் பொருள் விளக்கியுள்ளார்.

மெய்ப்பாட்டியல் உரையில் நகைச்சுவை பற்றிக் கூறியுள்ள கருத்துகள் எக்காலத்திற்கும் பொருந்தி வருவனவாகும். "நகைச் சுவைக்குப் பொருளாவன ஆரியர் கூறுந் தமிழுங், குருடரும் முடவருஞ் செல்லுஞ் செலவும், பித்தருங் களியருஞ் சுற்றத்தாரை இகழ்ந்தாருங் குழவி கூறும் மழலையும் போல்வன எனக் கூறி யுள்ளமை உணரத்தக்கது.

"மரபே தானும்

நாற்சொல் லியலான் யாப்புவழிப் பட்டன" (தொல்.பொருள்.392)

என்ற செய்யுளியல் நூற்பா உரையில் செய்யுள் செய்வோர் பின்பற்ற வேண்டிய மரபினை.

"ஒரு காலத்து வழங்கப்பட்ட சொல் ஒரு காலத்து இலவாக லும் பொருள் வேறுபடுதலும் உடைய அதோளி இதோளி, உதோளி (கலி. 116) எனவும் குயின் எனவும் நின்ற இவை ஒரு காலத்துளவாகி இக்காலத்திலவாயின. இவை முற்காலத்துள் வென்பதே கொண்டு வீழ்ந்த காலத்துஞ் செய்யுள் செய்யப்படா. அவை ஆசிரியர் நூல் செய்த காலத்துள வாயினுங் கடைச்சங்கத்தார் காலத்து வீழ்ந்தமையிற் பாட்டினுந் தொகையினும் அவற்றை நாட்டிக் கொண்டு செய்யுள் செய்திலர்: அவற்றுக்கு இது மரபிலக்கணமா கலினென்பது. இனிப், பாட்டினுந் தொகையினும் உள்ள சொல்லே மீட்டொரு காலத்துக்கு உரித்தன்றிப் போயின் முற்காலத்துளவென்பதே கொண்டு பிற்காலத்து நாட்டிச் செய்யுள் செய்யப்பெறா என்பது. இனிப்பு பொருளும் இவ்வாறே காலத்தானும் இடத்தானும் வேறுபடுதலுடைய. ஒரு காலத்து அணியுங் கோலமும் ஒரு காலத்து வழங்காத னவுள். ஓரிடத்து நிகழும் பொருண் மற்றோரிடத்து நிகழாதன வுமுள அவ்வக்காலமும் இடனும் பற்றி ஏற்றவாற்றாற் செய்யுள் செய்யவேண்டுமென்பது"" என்று கருத்து நயம்பட எழுதியுள்ளமை பேராசிரியருடைய அறிவுப் புலமையை வெளிப்படுத்துகின்றது.

இலக்கணக் குறிப்பு

"செய்யுட் டாமே னிரண்டென மொழிப (தொல். பொருள்.339)

என்ற நூற்பாவை வாய்த்துள்விக்குள் என்றாற்போலச் செய்யுள் என்பது தொழிற்பெயர் என்று உவமை கூறி இலக்கணக் குறிப்புத் தந்து விளக்கியுள்ளார்.

உவமை கூறல்

கொச்சகம், ஒப்பினாகிய பெயர். ஓர் ஆடையுள் ஒருவழி அடுக்கியது கொச்சகம் எனப்படும்' அதுபோல ஒரு செய்யுளுள் பல குறள் அடுக்கப்படுவது கொச்சகம் எனப்பட்டது என்று உவமை கூறி செய்யுளியலில் விளக்கம் தந்துள்ளார்.

"மயிற் றோகை போலுங் கூந்தல்"

"காக்கைச் சிறகன்ன கருமயிர்"

போன்ற உவமைகளை "உவமையும் பொருளும் ஒத்தல் வேண்டும் (தொல், பொருள். 283) என்ற நூற்பா உரையுள் குறிப்பிட்டுள்ளார்.

முன்னிலைப் படுத்திக் கூறல்

"அங்கதந் தானே அரில்தபத் தெரியிற்

செம்பொருள் கரப்பென இருவகைத்தே (தொல். பொருள். 436)

என்ற நூற்பா உரையில் படிப்பவரை முன்னிலைப் படுத்துகிறார். அங்கதம் என்பது வசை. அதனை இருவாற்றாற் கூறுகவென்பான் இது கூறினான். அவையாமாறு முன்னர்ச் சொல்லுவதும். "அரிற்ப வென் றதென்னையெனின் அவை புகழ் போன்று விசையாதலும் பட்டுத் தோன்றும் மயக்கமுடையவாதலின் மயக்கமற்ற தெரியின்னென்றவாறு எடுத்துக்காட்டுத் தந்து விளக்குகிறார்.

மறுப்புக் கூறல்

"தெரிந்தனர் விரிப்பின் வரம்பில் பல்கும்" (தொல். பொருள். 414)

இது தொடைக்குப் புறநடை இனி ஐந்து தொடை பலவற் றொடுங் கூட்டியும் பிறவாற்றான் விரிப்பும் வரம்பிலவாமென்பா ருமுளர். அவை எவ்வாறு விரிப்பினும் வரம்பிலவல்லவென மறுக்க என்று மறுப்புக் கூறியுள்ளார்.

சிறப்பியல்புகள்

பேராசிரியர் உரைக் கோட்பாடுகளின் சிறப்பியல்புகளாவன:

1. ஒவ்வொரு இயலிலும் முதல் நூற்பாவைத் தொடர்ந்து முன்னைய இயலுடன் அதன் இணைவு, இயலில் சொல்லிச் செல்லும் பொருள் முதலியவை குறித்து விளக்கங் கூறல்.

2 தெளிவுபட மறுத்துரைக்கும் தன்மை

3. மிகுதியான விளக்கங்களைக் கையாளுதல்

4. சொல்லும் முறையில் எழுத்து வன்மை

5. ஆராய்ச்சித் திறம்படக் கருத்து விளக்குதல்

6. பிறர் கொள்கையைக் கடுமையாக மறுத்தல்

என்பனவாகும்.

"உரை, நூலின் சிறப்பையும் உரையாசிரியரின் தனித்தன்மை யையும் விளக்குகின்ற இலக்கியமாகும். இவ்விரண்டையும் வெளிப்படுத்துவன உரை எழுத ஆசிரியன் வகுத்துக் கொள்ளும் முறைகள், கொள்கைகளே ஆகும்.

1. முன்னோர் கருத்தை ஏற்றல்

2. பிறர் கொள்கை மறுத்தல்

3. உவமை வாயிலாக விளக்குதல்

4. கேள்வி கேட்டு விடையளித்தல்

5. விளக்கங் கூறல்

6. சொற்பொருள் உரைத்தல்

முதலியன பேராசிரியரின் உரைக் கொள்கைகளாக அமைகின்றன "9 என்ற கருத்தும்:

""பேராசிரியர் பழைய மரபையும், பழைய நூற்கொள்கைகளை யும் பெரிதும் போற்றுகின்றார். புதிய நூல் வழக்கையும் தொகைகளையும் அவை சான்றோர் செய்யுள் அல்ல என மறுக்க என்றும் அங்ஙனம் வந்தது பிற்காலத்துச் செய்யுள் என்ப என்றும் கூறி அவற்றை ஒதுக்குகின்றார். இவ்வாறு இவர் உரை எழுதும் முறை, சொல்லும் வகை, சொற்பொருள் உரைக்கும் திறன், உரைநடைப் போக்கு ஆகிய அனைத்தி லும் சிறந்து விளங்குகின்றார்."60 என்ற வி. கணபதியின் கருத்தும் இங்குக் குறிப்பிடத்தக்கன.

தெளிவுபட மறுத்துரைக்கும் தன்மை

"இனிப், பரிபாடலுங் கலிப்பாவினுள் அடங்குமென்பாரும் உளர். கலியும் பரிபாடலுமென எட்டுத் தொகையுள் இரண்டு தொகை தம்மின் வேறாதலின் அவ்வாறு கூறுவார் செய்யுள் அறியாதாரென்பது: அல்லதூஉம்.அராகவுறுப்பில்லாத முடு கிய லடியுங் கொச்சகக் கலியல்லாத கலிப்பாவினுள் உண்டா வதாகலுங் கொச்சகக் கலியுறழ்ந்து வருதலும் உடையவாம். அவ்வாறு கூறினால் என மறுக்க"" (தொல். பொருள். 442)

"மற்றிதனை (செய்யுளியல்) யாப்பதிகாரமென வேறோரதிகார மாக்கி உரைப்பாருமுளர்' அங்ஙனங் கூறின் வழக்கதிகார மெனவும் வேறு வேண்டுமென மறுக்க, அல்லதூஉம் எழுத்துஞ் சொல்லும் பொருளுமென மூன்றற்கும் மூன்ற திகாரமாக்கி அதிகாரமொன்றற்கு ஒன்பதோத்தாகத் தந்திரஞ் செய்ததனோடு மாறுகொளலாம். இதனை வேறதிகார மென் பார்க்கென்பது " (தொல்.பொருள்.313)

""ஆசிரியம் வெண்பாக் கலி வஞ்சியெனச் சிறப்பு முறையாற் கூறாத தென்னையெனின் அது முந்துமொழிந்தன்றலை தடுமாற்றே என்பாருமுளர். வஞ்சிப்பா முதற் கூறாமையின் அற்றன்றென்பது மற்றென்னை கருதியதெனின் ஆசிரியம் வெண்பாவென்று ஓதினவை வழக்கிற்குஞ் செய்யுட்கும் உரிமையின் அவையே போறலுஞ் சிறப்புடையவென்று - கொள்வானாயினும், அற்றன்று இவை செய்யுளிலக் கணமாகலான் - அவை நான்கும் ஒத்த இலக்கணத்த செய்யுளென்றற்கு இம்முறைதான் ஓதினானென்பது. இனி ஒரு சாரார் இந்நான்கினையும் ஒன்று மூன்றாக விகற்பித்துக் கூறுப' என்னை? ஏந்திசை தூங்கிசை ஒழுகிசை என்றாற் போல, அற்றன்று' ஓரெழுத்து முதல் ஐயெழுத்துச் சீரளவும் உயர்ந்த சீரான் வரும் செய்யுட்கு ஒன்று ஒன்றனின் வேறுபட்டொலிக்கும்' அவ்வேறுபாடுதோறும் பா வேறுபடா: என்னை?

“எழுத்தள வெஞ்சினுஞ் சீர்நிலை தானே

குன்றலு மிகுதலு மில்லென மொழிப (தொல். செய்.43)

என்றமையினென மறுக்க: அல்லதூஉம் அங்ஙனம் வேறுபாடு கொள்ளின் ஒரோவொன்று ஐந்தாகலுந் தூங்கலோசை ஆறும் ஏழுமாகலுமுடைய வென்பது” (தொல். பொருள். 417)

இத்தகைய சான்றுகளான் பிறருடைய கருத்தைத் தெளிவுபட மறுத்துரைக்கும் தன்மை வெளிப்படுகின்றது. மேலும் மறுத்து எழுதும்போது பெயர் சுட்டாமல் எழுதிச் செல்வதும் பேராசிரி யருடைய தனிச்சிறப்பாகும்.

மிகுதியான விளக்கங்களைக் கையாளுதல்

”சிதைவு எனப்படுபவை வசையற நாடின்“ எனத் தொடங்கும் மரபியல் நூற்பாலிற்கு உரை எழுதுகின்றபோது,

”இவ்வாசிரியர் எஞ்ஞான்றும் குற்றத்திற்கு இலக்கணங் கூறா ராகலான் இலக்கணத்தோடு கூறுந்துணைப் பயன்படுதலும் ஒருவாற்றாற் சிறப்பெனவே படுமென்பது.. “வசையற நாடின்“ என்றதனான் இங்ஙனக் குற்றமென்று வரையப்பட்டன வற்றைக் கொண்டு புகுந்து மற்றொரு பொருள் கொள்ளின் அவை வசையற்றனவாமென்பது”

எனத் தொல்காப்பியர் இயல்பினைத் தெளிவுபடுத்தி, மேலும்

”இவ்வாசிரியர் யாண்டும் இலக்கணமே கூறி இவ்விலக்கணத் திற் பிறழ வருதலைக் குற்றமென்று கொள்ள வைப்பினன்றி இல்லாத குற்றங்கட்கு இலக்கணங் கூறாதார் இது கூறினார். எதிர் மறுத்து உணரின் திறத்தவும் அவையே (தொல். பொருள். 664) என வருகின்ற சூத்திரத்தான் இவையும் இலக்கணத்திற்கு உபகாரப் படுதலினென்பது..இது,மேற் குற்றம் பத்துங்கூறி இனிக் குணமும் பத்துளவென்கிறது. மேலெல்லாம் இவ்வாசிரியரின் இலக்கண வழக்கினையே விதந்தோதி அதனிற் பிறழ்ந்து குற்றமென்று கொள்ள வைத்தான்’ இவ்வோத்தினுன் “ஈரைங் குற்றமு மென்பன சில குற்றங் கூறினான். இது மாறுகொளக் கூறலாங்கொல்லோ வெனின் அற்றன்று: இவையும் இலக்கணமே கூறினா னென்பான். இவற்றை யெதிர் மறுத்துக் கொள்ள வென்றா னென்பது. இதனது பயன் உள்ளது சொல்லுதலேயன்றி இல்லது சொல்லுதலும் நூலிலக்கணமென்றறிவித்தலாயிற்று” என விளக்கமாக எழுதி. நூற்பாவினுள் ஆழ்ந்திருக்கும் ஆசிரியரின் கருத்தை உணர்த்துகின்றார்.

நூலாசிரியரின் உள்ளக் கருத்தை நுணுகி ஆராய்ந்து வெளிப் படுத்தும் உண்மை உரையாசிரியராகப் பேராசிரியர் திகழ்வதைக் காண முடிகின்றது. மேலும் சொல்லும் முறையில் எழுத்து வன்மை அமைந்துள்ளமையையும் அறிய முடிகின்றது.

ஆராய்ச்சித் திறம்படக் கருத்து விளக்குதல்

“அன்பென்பது, அருட்கு முதலாகி மனத்தினிகழு நேயம்: அசூ.்.துடையார்க்குப் பிறர்கட்டுன்பங் கண்டவழிக் கண்ணீர் விழுமாகலின் அவ்வருளானே அன்புடைமை விளங்குமென்புத (தொல்.பொருள்.260)

“வனப்பென்பது, பெரும்பான்மையும் பல உறுப்புத் திரண்ட வழிப் பெறுவதோர் அழகாகலின் அவ்வாறு கோடும்“ (தொல்.பொருள்.547

“பா“ என்பது, சேட்புலத்திருந்த காலத்தும் ஒருவள் எழுத்துஞ் சொல்லும் தெரியாமற் பாடமோதுங்கால், அவன் சொல்லுகின்ற செய்யுளை விகற்பித்து இன்ன செய்யுளென்று உணர்வதற்கேதுவாகிப் பரந்துப்பட்டுச் செல்வதோர் ஓசை“ (தொல்.பொருள்.313) என்று அன்பு, வனப்பு, பா என்பனவற்றிற்கு ஆராய்ச்சித் திறம்படக் கருத்து விளக்கும் பாங்கினைக் காணமுடிகின்றது.

பிறர் கொள்கையைக் கடுமையாக மறுத்தல்

ஒருவருடைய கருத்தை ஒருவர் மறுத்துரைத்தல் என்பது உரை யாசிரியர்களின் இயற்பண்பாகும். எனினும் பேராசிரியர் பிறருடைய கருத்தைத் தகுந்த காரணங்களுடன் கடுமையாக மறுத்துரைத்துள்ளார். “அவ்வாறு கூறுவார் செய்யுள் அறியாதாரென்பது“ என்பன போன்ற தொடர்களைக் கையாண்டுள்ளமையும் காண முடிகின்றது. இத்தகைய மறுப்புரைகள் அவருடைய உரையில் வெளிப்படுகின்றன.

”இலக்கண நூற்பாக்களை விளக்குதல் நோக்கமாகத் தொடங்கி வழங்கி வரப்பட்ட உரைநடை இலக்கியங்களை எடுத்துக் கூறும் கருவியாகவும் பேராசிரியர் காலத்திற் கையாளப்படத் தொடங் கிற்று. செய்யுட்களில் ஆங்காங்குக் காணப்படும் நயங்களையும் பிறவற்றையும் பேராசிரியர் எடுத்துக்கூறும் இடங்களிலே வாக்கியங் கள் வினாக்களும் விடைகளும் இன்றி அமைந்திருத்தலைக் காண லாம். களவியலுரையில் மிக நீண்டு சென்ற வாக்கியம் இளம்பூரணர் உரையில் குறுகியும் பேராசிரியர் உரையில் அதனிற் குறுகியும் காணப்படுவதிலிருந்து தமிழ் உரைநடை வளர்ந்தவாற்றை நாம் ஓரளவிற்குக் காணக்கிடக்கின்றது””

““பிறர்தம் உரைநெறிகளிலும் இவர்தம் உரைநெறி சாலச் சிறந்தது. இவர் தொல்காப்பியம் முழுமைக்கும் உரை வகுத்திருப் பரேல் அவ்வுரையே திருக்குறளுக்குப் பரிமேலழகர் உரைபோல் தலைமை பெற்றிருக்கும்”

போன்ற புகழுரைகள் பேராசிரியர்க்குப் பொருத்தமானதே என்பது இதுகாறும் கண்டறிந்த உண்மைகளான் தெற்றென விளங்கும்.

நச்சினியார்க்கினியர் உரைக்கோட்பாடுகள்

முதன்மை தரல்

பழந்தமிழ் இலக்கியங்களாகிய எட்டுத்தொகை, பத்துப் பாட்டு ஆகியவற்றிற்குத் தொல்காப்பியமே இலக்கணம் என்பதை இவர் பல இடங்களில் வற்புறுத்தித் தொல்காப்பியத்திற்கு முதன்மை தருகின்றார்.

புறத்திணை இயலில், “கொடுப்போர் ஏத்தி,(35) என்னும் சூத்திரத்தின் உரையில் தத்தம் புதுநூல் வழிகளால் புறநானூற்றிற் குத் துறை கூறினாரேனும் அகத்தியமும்

தொல்காப்பியமுமே தொகைகளுக்கு நூலாகலின் அவர் சூத்திரப் பொருளாகத் துறை கூற வேண்டும் என்று உணர்க்" என உரைக்கின்றார்.

மதுரைக் காஞ்சி உரையில், "இப் பாட்டிற்கு மாங்குடி மருதனார் மதுரைக் காஞ்சி என்று துறைப் பெயரான் அன்றி திணைப்பெயரால் பெயர் கூறினார். இத் திணைப்பெயர், பன்னிரு படலம் முதலிய நூல்களாற் கூறிய திணைப்பெயரன்று. தொல்காப்பியனார் கூறிய திணைப்பெயர்ப் பொருளே இப்பாட்டிற்குப் பொருளாகக் கோடலின்" என்று கூறித் தொல் காப்பியத்திற்கு முதன்மை தருகின்றார்.

மலைபடுகடாம் பாடலில் "தீயின் அன்ன" (145) என்னும் அடிக்கு உரை எழுதும்போது அதில் ஆனந்தக் குற்றம் உண்டு என்பார் கருத்தை மறுத்து, "தொல்காப்பியனாரும் இக் குற்றம் கூறாமையின் சான்றோர் செய்யுட்கு இக் குற்றம் உண்டாயினும் கொள்ளார் என மறுக்க" என்று கூறுகின்றார்.

முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு ஆகிய பாடல்களுக்குப் பொருள் எழுதும்போது பல இடங்களில் - தொல்காப்பிய நூற்பாக்களை நினைவூட்டி எழுதுகின்றார்.

கலித்தொகைப் பாடல்களின் திணை, துறை,மெய்ப்பாடு ஆகியவற்றை விளக்கத் தொல்காப்பியத்தின் துணையையே நாடுகின்றார்.

சில சொற்களை விளக்கிப் பொருள் உரைக்கும்போதும், தொல்காப்பியத்தையே பயன்படுத்துகின்றார்.

நாண் (மதுரை - 558, குறிஞ்சி -168) என்பதற்கு "உயிரினும் சிறந்த நாண்" என்று பொருள் எழுதுகின்றார். "உயிரினும் சிறந்தன்று நாணே" (பொருள்-113) என்பது தொல்காப்பியம்.

மதுரைக் காஞ்சியில் "வரைந்து நீ பெற்ற நல்லூழி (782) என்பதற்கு, "பால்வரை தெய்வத்தாலே வரையப்பட்டு நீ அறுதியாகப்பெற்ற நாள்" என்று எழுதுகின்றார். "பால்வரை தெய்வம்" என்பது தொல்காப்பியத்தில் உள்ள தொடர் (சொல். -58).

இவை யாவும் நச்சினார்க்கினியர் தொல்காப்பியத்திற்கு முதன்மை தருபவர் என்பதற்கு உரிய சான்றுகளாகும்.

முழுநோக்கு

தொல்காப்பியம், எழுத்து சொல் பொருள் என்னும் முப் பெரும்பகுதிகளை உடைய பெருநூல் என்பதையும், அதில் உள்ள ஒருபகுதியை -ஓர் இயலை-ஒரு நூற்பாவை ஆராயும்போது, முழு நூலையும் சிங்க நோக்காக முன்னும் பின்னும் நோக்குதல் வேண்டும் என்பதையும் நச்சினார்க்கினியர் எவ்விடத்தும் விடவில்லை. எழுத்ததிகாரத்தில் செய்யுளியலை நினை கிறார். எழுத்ததிகாரத்தின் முற்பகுதியைப் பிற்பகுதியுடம் தொடர்புபடுத்துகின்றார். சொல்லதிகாரத்தில் கிளவிய தையும் எச்சவியலையும் இணைத்துக் காட்டுகின்றார்.ம செய்யுளியல் மெய்ப்பாட்டியல் மூன்றையும் ஊடுருவி நோ ஒப்புமை காண்கின்றார். இறைச்சி உள்ளுறை உவமம் ஆகியவை பற்றிய கருத்துகள் வேறு வேறு இடங்க இருப்பினும் அவற்றைத் தொகுத்து ஆராய்கின்றார்.

இவையேயன்றி, பிற்காலத்து இலக்கண நெறிகலளயம் கொள்கைகளையும் பல இடங்களில் ஆராய்கின்றார். பிற யாப்பு நூலாரைப் போல, தொல்காப்பியர் தளையைச் செய்யும் உறுப்பாகக் கொள்ளாமைக்கு உரிய காரணத்தை. செய்யுளிய தொடக்கத்தில் ஆராய்கின்றார். அவ்வியலின் இறுதிய சித்திரகவிக்கு இலக்கணம் கூறாமையைச் சுட்டுகின்றார்.

முழு நோக்குடன் தொல்காப்பியத்திற்கு உரை கண்என் நச்சினார்க்கினியர், எல்லா உரைநெறிகளையும் போற்றியுள்ள ஆ

நூற்பா அமைப்பை ஆய்தல்

நல்ல பாடம் காணுதல்

நூற்பாவுக்கு வினைமுடிபு காட்டுதல்.

வைப்பு முறை ஆய்தல்

கருத்துகளைக் கணக்கிட்டு மொழிதல்

சொற்களின் வடிவமும் பொருளும் ஆய்தல்

நுண்பொருளை வெளிப்படுத்துதல்

நயவுரை கூறுதல்

தக்க மேற்கோள் காட்டுதல்

ஆகிய பலவகையான உரைநெறிகளை இவர் மேற்கொள் டுள்ளார்.

நூற்பா அமைப்பை ஆய்தல்

நூன் மரபில் (3)

அவற்றுள்,

அ இ உ எ ஒ என்னும்

அப்பால் ஐந்தும்

ஓரள பிசைக்கும் குற்றெழுத் தென்ப

என்னும் நூற்பா உரையில், "அவற்றுள், அ இ உ சொற்சீரடி" என்று இவர் கூறுவதால் அந்நூற்பாவை,

அவற்றுள்,

அஇஉ

எ ஒ என்னும் அப்பா லைந்தும்

ஓரள பிசைக்கும் குற்றெழுத் தென்ப

என்று அமைப்பது இவர் கருத்து என்பது புலனாகிறது.

இளம்பூரணர்,

ஆஈஊஏஐஓ ஔ என்னும்
அப்பால் ஏழும்
ஈரள பிசைக்கும் நெட்டெழுத் தென்ப (எழுத்-4)

என்று அமைந்திருப்பதை நச்சினார்க்கினியர்

ஆஈஊ
ஏ ஐ
ஓ ஔ என்னும் அப்பா லேழும்
ஈரள பிசைக்கும் நெட்டெழுத் தென்ப்

என்று மாற்றி அமைக்க வேண்டும் என்னும் கருத்துடையவர். "ஆ ஈ ஊ, ஏ ஐ-என்பனவற்றைச் சொற்சீர் அடியாக்குக" ஆகலின், "ஆ ஈ என்று கூறுகின்றார்.

இளம்பூரணர் அகத்திணை இயலில் (6,7),

காரும் மாலையும் முல்லை.
குறிஞ்சி,
கூதிர் யாமம் என்மனார் புலவர்

என்று இறு நூற்பாக்களாகக் கொண்டவற்றை நச்சினார்க்கினியர்,

காரும் மாலையும் முல்லை குறிஞ்சி
கூதிர் யாமம் என்மனார் புலவர்

என்று ஒன்றாக்கியுள்ளார்.

இவ்வாறே எழுத்ததிகாரத்தில், எழுத்துகளின் பிறப்புக்குப் புறனடை கூறும் "எல்லா எழுத்தும்" (எழுத்-102) என்னும் நூற்பாவை நச்சினார்க்கினியர் ஒன்றாக்கினார் இளம்பூரணர் இரண்டாக்கினார். நச்சினார்க்கினியர் தம் உரையில்,

"இதனை இரண்டு சூத்திரமாக்கியும் உரைப்ப" என்று குறிப் பிடுகின்றார்.

இவற்றால், இவர் நூற்பா அமைப்பினை நன்கு ஆரய்ந் துள்ளார் என்பது விளங்கும்.

நல்ல பாடம் காணுதல்: சொல்லதிகாத்தில் (24), "உருபென மொழியினும்" என்பதில் உள்ள "உருபு" என்பதற்கு ஈடாக "உருவு'

என்று வேறு பாடம் கொண்டு. அந்தப் பாடத்தின் பொரு தத்தைப் பின்வருமாறு ஆராய்கின்றார்:

”உருபு எனப் பகர உகரமாகப் பாடம் ஓதில், அது வேற்றுமை உருபிற்கும் உவம உருபிற்கும் பெயராய் வடிவை உணர்த்தாது என்று உணர்க. அதுவென் உருபு கெட எனவும். உருபினும் பொருளினும் மெய்தடுமாறி எனவும் உருபு தொடர்ந்து அடுக்கிய எனவும் உருபு தொக வருதலும் எனவும், மெய்யுருபு தொகா எனவும் யாதன் உருபின் எனவும் பிறாண்டும். வேற்றுமைக்கு உருபு என்றே சூத்திரம் செய்தவாறு காண்க. உலம உருபு என்றல் அவ் ஒத்தினுள் கூறிய உரைகளான் உணர்க”

வினை முடிபு காட்டுதல்: கற்பியலில் (9), “பெறற்கரும் பெரும் பொருள்“ என்னும் நூற்பாவிற்கு உரை எழுதியபின்,

”இச் சூத்திரத்துக் கண், ஏழன் உருபும் அவ்வுருபு தொக்கு நின்று விரிந்தனவும் செயின் என்னும் வினை யெச்சமும் உரிய என்னும் குறிப்புவினை கொண்டன. அவற்றை, இன்னவிடத்தும் இன்னது செய்யினும் உரிய என்று ஏற்பித்து முடிக்க” என்று முடித்துக் காட்டுகின்றார்.

வைப்புமுறை ஆய்தல்

செய்யுளியலில் (190) “பாணன் கூத்தன் விறலி“ என்னும் நூற்பா விளக்கத்தில்,

”இசைப் பின்னரது நாடகம் ஆதலின், பாணன் பின் கூத்தனும் பெண்பால் ஆதலின் விறல்பட ஆடும் விறலி அவர் பின்னும் அவ்வினத்துப் பரத்தை அவர் பின்னும் அகப் பொருட்குச் சிறவாமையின், அறம் பொருள் கூறும் அறிவர் அவர் பின்னும் ஏதிலாராகிய கண்டோர் அவர் பின்னும் வைத்தார்.” என்று உரைக்கின்றார்.

கணக்கிட்டு மொழிதல்: இலக்கணக் கருத்துக்களைக் கணக்கிட்டு இத்தனை என்று கூறுவது இவர்க்கு இயல்பு. எழுத்ததிகாரத்தில் (68), ”மொழிக்கு முதலாம் எழுத்து, தொண்ணூற்று நான்கு என்று உணர்க” என்றும் ”மொழிக்கு ஈறாக உள்ள எழுத்து, நூற்று அறுபத்து ஒன்று“ (எழுத்-77) என்றும் கூறுகின்றார். தொகை மரபில் (13), ‘அ.ஃறிணை விரவுப் பெயர் இயல்பு மாருளவே. என்னும் நூற்பா உரையில், ”ஆண்டு, நாற்பத்து எட்டுச் சூத்திரங்களான் முடிவதனை ஈண்டுத் தொகுத்தார்” என்று நூற்பாக்களை எண்ணி உரைக்கின்றார்.

சொல்லும் பொருளும்

அரிய சொற்கள் சிலவற்றிற்குப் பொருள் எழுதியும் சில சொற்களுக்கு நுண்பொருள் வரைந்தும். சில சொற்களை ஆராய்ந்து கூறியும் நச்சினார்க்கினியர் உரை எழுதுவது வழக்கம். அவற்றுள் சிலவற்றை இங்கே காண்பாம்.

எழுத்ததிகாரம்

ஞமலி-என்பது திசைச் சொல் (எழுத்-64)

ஒழியிற்று என்றாற் போல்வன இழி வழக்கு (64)

உதி-இ.ஃது இக்காலத்து ஒதி என மருவிற்று (243)

ஈம்- என்பது சுடுகாடு (328)

கம்- தொழில் (328)

அழக்குடம்-என்பது பிணக்குடத்தை (353)

ஓ-என்பது மதகுநீர் தாங்கும் பலகை (180)

சொல்லதிகாரம்

உடைமை: உடைமைத் தன்மையும் உடைமைப் பொருளும் என இருவகைப்படும். உடைமைத் தன்மையாவது தன் செல்வத்தை நினைத்து இன்புறுவதற்கு ஏதுவாகிய பற்றுள்ளம். உடைமைப் பொருளர்வது ஒன்றற்கு ஒன்றை உரிமை செய்து (215).

பண்பு: ஒருபொருள் தோன்றும் காலத்து உடன் தோன்றி அது கெடும் துணையும் நிற்பது (216).

பிற மொழிச் சொற்கள்: சிங்களம் அந்தோ என்பது.

கருநாடகம் கரைய சிக்க, குளிர என்பன. வடுகு செப்பு என்பது. தெலுங்கு எருத்தைப் பாண்டில் என்பது. துளு மாமரத்தைக் கொக்கு என்பது.

பெண்மை: கட்புலனாயதோர், அமைதித் தன்மை (57)

சாயல்: மெய், வாய், கண், மூக்குச் செவி என்னும் ஐம்பொறியான் நுகரும் மென்மை (325).

பொருளதிகாரம்

கயந்தலை-யானைக்கன்று போலும் புதல்வன் (கற்-6). நெடுமொழி - மீக்கூற்றுச்சொல் (புறத்-8). அரும்பாசறை-அரிய பாசறை. இரவும் பகலும் போர்த்தொழில் மாறாமை தோன்ற அரும் பாசறை என்றார் (கற் - 34).

நாற்பெயர் எல்லை அகத்தவர் மலைமண்டலம் சோழ

மண்டலம் பாண்டிய மண்டலம் தொண்டை மண்டலம் என்னும் நான்கு பெயருடைய தமிழ் நாட்டார் (செய்-79).

கூத்தர் நாடக சாலையர் தொன்றுபட்ட நன்றும் ம் கற்றறிந்தவற்றை அவைக்கண், எல்லாம் அறியக் காட்டுதற்கு கூத்தர் உரியர் (கற்-17) எண்வகைச் சுவையும் மனத்தின்கண்பட்ட குறிப்பு களும் புறத்துப் போந்து புலப்பட ஆடுவார் (புறத்-90).

இசை: சொல் எழுத்தினான் ஆக்கப்பட்டுப் பொருளறி வறுக்கும் ஓசை ஆதலின் அதனை இசை என்றார். இ.ந்து ஆகுபெயர்.

கந்தழி-ஒரு பற்றுக்கோடு இன்றி அருவாகித் தானே நிற்கும் தத்துவம் கடந்த பொருள் (புறத்-33).

கூற்று: வாழ் நாள் இடையறாது செல்லும் காலத்தினைப் பொருள் வகையான் கூறுபடுத்தும் கடவுள் (புறத் -24).

எடுத்துக் காட்டுகள்

நச்சினார்க்கினியர் பல இடங்களில் தமக்கு முன் இருந்த உரையாசிரியர்கள் காட்டிய உதாரணங்களைப் பயன்படுத்தி இருப்பினும், சில உதாரணங்கள் இவரால் படைக்கப்பட்டவை இவரது புலமைமாண்பை வெளிப்படுத்துபவை இவர் காலத்து நாகரிகத்தை நினைவூட்டுபவை.

பாம்பினிற் கடிது தேள் (எழுத்-131) என்ற உதாரணம் நம் நெஞ்சத்தில் நன்கு பதிகின்றது.

பொன்னகல் நெய்யகல் (எழுத்-160) என்ற தொடர்கள் இவர் காலத்து நாகரிகத்தை உணர்த்துகின்றன.

அவ்வூர்ப் பூசையும் புலால் தின்னாது (சொல்-257) என்ற எடுத்துக்காட்டு, பண்பாட்டின் சிறப்பைக் காட்டுகின்றது.

பாட்டும் கோட்டியும் அறியாப் பயமில் தேக்கு மரம் போல் நீடிய ஒருவன் (சொல்-293) என்ற உதாரணம், கல்லாதவரிடத்து இவர்க்குள்ள வெறுப்பைக் காட்டுகிறது.

இவர் காலத் தமிழகம் (விசய நகரப் பேரரசுக்குட்பட்ட) நாயக்கமன்னர்கள் ஆட்சியின் கீழ் இருந்தது. இருப்பினும் தமிழ் மூவேந்தர் மீது பற்றுடையவராய்ப் பின்வரும் உதாரணங்களைக் காட்டுகின்றார்:

தமிழ் நாட்டு மூவேந்தரும் வந்தார் (சொல்-33).

வடுகரசரும் வந்தார் இனித் தமிழ் நாட்டு

மூவேந்தரும் வரினும்வருவர் (சொல்-285)

அறுவகைத் தொகையும் ஒருங்கு வந்த தொடருக்கு உதாரணமாக, "துடியிடை நெடுங்கண் துணைமுலைப் பொற்றொடி என்பதைக் காட்டுகின்றார் (சொல்-421).

தம் காவத்தில் வழங்கிவந்த "கரணம் பிழைக்கிய் மரணம்" மறை பழமொழியைத் தருகின்றகர் (கற்பியல்

உள்ளுறை உவமம் ஏனை உவமம் ஆகிய இரண்டையும் சிறந்த உதாரணங்கள் கூறி விளக்குகின்றர் :

"பவளம் போலும் வாய் என்ற வழி, பவளமே கூறி வாய் தராவிடின் உள்ளுறை உவமமாம் அவ்வாறு இன்றி, உவமிக்கப் படும் பொருளாகிய வாயினையும் புலப்படக் கூறலின் ஏனை உலமம் ஆயிற்று" (அகத்-49).

உவமைச் சிறப்பு

நச்சினார்க்கினியர் பிறர் கூறிய உவமைகளின் பொருத் தத்தைத் தம் உரையில் விளக்குகின்றார். பாயிர உரையில் கற்கப் படாதோர் (கல்வி கற்பிக்கத் தகுதியில்லா ஆசிரியர்) யாவர் என்பதைப் பின்வருமாறு விளக்குகின்றார்:

”இனிக் கற்கப்படாதோரும் நான்கு திறத்தார்:

கழற்பெய் குடமே மடற்பனை முடத்தெங்கு

குண்டிகைப் பருத்தியோடு இவைஎன மொழிப

இதனுள் கழற்பெய் குடமாவது, கொள்வோன் உணர்வு சிறிதாயினும் தான் கற்றதெல்லாம் ஒருங்கு உரைத்தல்.

மடற்பனை என்பது, பிறராற் கிட்டுதற்கு அரிதாகி இனி தாகிய பயன்களைக் கொண்டிருத்தல்.

முடத்தெங்கு என்பது, ஒருவர் நீர்வார்க்கப் பிறர்க்குப் பயன் படுவதுபோல ஒருவர் வழிபடப் பிறர்க்கு உரைத்தல்.

குண்டிகைப் பருத்தி என்பது, சொரியினும் வீழாது சிறிது சிறிதாக வாங்கக் கொடுக்கும் அதுபோலக் கொள்வோன் உணர்வு பெரிதாயினும் சிறிது சிறிதாகக் கூறுதல்.”

நச்சினார்க்கினியர் தாமே சிறந்த உவமைகளைக் கூறிக் கருத்தை விளக்குகின்றார். அவர் கூறும் உவமைகள் சிலவற்றைக் காண்போம்:

“நூறு காணங் கொணர்ந்தான் என்றால், அவை பொதிந்த கூறையுமை அவையென அடங்குமாறு போல.

நூல் என்றது நூல் போறலின் ஒப்பினாயதோர் ஆகு பெயராம். அவ்வொப்பு ஆயவாறு என்னை எனின், குற்றங் களைந்து எ.்கிய பன்னுனைப் பஞ்சிகளை எல்லாம் கைவன் மகடூ உத் தூய்மையும் உடையவாக ஓரிழைப்படுத்தினாற் போல .

“கோட்டு நூறும் மஞ்சளும் கூடிய வழிப் பிறந்த செவ் வண்ணம் போல“.

“எள்ளாட்டிய வழியல்லது எண்ணெய் புலப்படாதவாது போல“.

“நீர் தனித்து அளந்துழியும் நாழியாய், அரைநாழி உப்பி கலந்துழியும் கூடி ஒன்றரை நாழியாய் மிகாதவாறு போல்வதோர் பொருட்பற்றி”.

“மாத்திரை கொள்ளுங்கால் உப்பும் நீரும்போல ஒன்றேயாய் நிற்றலும், வேறுபடுத்துங்கால் விரலும் விரலும் சேர நின்றார் போல வேறாய் நிற்றலும் பெற்றாம்“.

ஆராய்ச்சியும் விளக்கமும்

“எழுத்து“ என்பதனைப் பின்வருமாறு விளக்குகின்றார்:

”எழுத்து என்றது யாதனை எனின், கட்புலனாகா உருவும் கட்புலனாகிய வடிவும் உடைத்தாக வேறுவேறு வகுத்துக் கொண்டு, தன்னையே உணர்த்தியும் சொற்கு இயைந்து நிற்கும். ஓசையையாம். கடல் ஒலி, சங்கொலி முதலிய ஓசைகள் பொருளுணர்த்தாமையானும் முற்கு வீளை இலதை முதலியன பொருள் உணர்த்தினவேனும் எழுத்தாகாமை யானும் அவை ஈண்டுக் கொள்ளார் ஆயினர்”.

இவ்வாறே எழுத்தை “உரு“ என்று கொள்ளவேண்டும் என்பதற்கும், இவர் கூறும் காரணங்கள் படித்து இன்புறத் தக்கவை (எழுத்-ஐ).

எழுத்துக்களின் வைப்புமுறையும், இன் வற்று முதலிய சாரியைகளின் வைப்புமுறையும் இவரால் நான்கு ஆராய்ந்து கூறப்பட்டுள்ளன.

சொல்லதிகாரத்தில் (1), சொற்களைத் தனி மொழி, தொடர் மொழி என இருவகைப் படுத்தி விளக்குகின்றார்:

”சொல்தான், தனிமொழியும் தொடர்மொழியும் என இருவகைப்படும். தொடர்மொழி, இருமொழித் தொடரும் பன்மொழித் தொடரும் என இருவகைப்படும். அவை தொடருங்கால் பயனிலை வகையானும் தொகைநிலை வகையானும் எண்ணுநிலை வகையானும் தொடரும்.““

சொல் தனிமொழி தொடர்மொழி இருமொழித் தொடர் பன்மொழித் தொடர்

பயனிலைவகை தொகைநிலை வகை எண்ணுநிலை வகை பன்மொழித் தொடர்

1.சாத்தன், உண்டான், மன், நனி என்பன தனி மொழி.

2.சாத்தன் வந்தான் இது பயனிலைத் தொடர். யானைக்கோடு இது தொகை நிலைத் தொடர். நிலம் நீர் இ.ங்து எண்ணு நிலைத் தொடர். இவை இருமொழித் தொடர்

3. அறம் வேண்டி அரசன் உலகம் புரக்கும் என்பன பன்மொழித் தொடர்

இலக்கியநெஞ்சம்

நச்சினார்க்கினியர் உள்ளத்தில், இலக்கணத்திற்கு உரை எழுதும்போது இலக்கிய நினைவும், இலக்கியத்திற்கு உரை எழுதும் போது இலக்கணச் சிந்தனையும் எழுகின்றன. தொல் காப்பிய உரையை இவர் இலக்கியக் களஞ்சியம் ஆக்கியுள்ளார். எழில் மிகுந்த சொற்றொடர், உள்ளங்கவரும் உவமை, இனிய ஓசை கெழுமிய வாக்கியம், என்றும் நெஞ்சத்தில் நின்று நிலவும் எடுத்துக் காட்டு, இலக்கியச் சுவை முதிர்ந்த கவிதை மேற்கோள் ஆகியவற்றை இவர் உரையில் காணலாம். இவர் இலக்கியப் பூங்காவில் நுழைந்து தமிழ்த் தேன் திரட்டி வந்து தொகுத்துத் தருகின்றார்.

பாயிர உரையில் உள்ள “சின்னாட்பல்பிணிச் சிற்றறி வினோர்“ என்ற இனிய தொடர், உள்ளத்தைக் கவர்கின்றது.

பின் வரும் பகுதியில் கவிதைச் சுவை ததும்பி வழிகின்றது.

“பாயிரந்தான் தலையமைந்த யானைக்கு வினையமைந்த பாகன் போலவும் அளப்பரிய ஆகாயத்திற்கு விளக்கமாகிய திங்களும் ஞாயிறும் போலவும் நூற்கு இன்றியமையாச் சிறப்பிற்றாய் இருத்தலின், அது கேளாக்கால் குன்று முட்டிய குரீஇப் போலவும், குறிச்சி புக்க மான் போலவும் மாணாக்கன் இடர்ப்படும் என்க.

மூலத்தில் உவமை இல்லை எனினும், விளக்கத்திற்காக, இவரே உவமையைப் படைத்து எழுதுவதுண்டு. “வளியிசை அண்ணம் கண்ணுற்று அடைய“ (எழுத்-99) என்பதை, ஓசை அண்ணத்தை அணைந்து உரலாணி இட்டாற் போலச் செறிய“ என்று ஓர்

உவமையைக் கூறி விளக்குகின்றார்.

வினைத்தொகைக்கு இவர் தரும் உதாரணமும் விளக்கமும் இவரது கற்பனைத் திறனைக் காட்டுகின்றன.

”கொல்யானை என்பது, அக்காலத்து அ.ஃது உதிரக் கோட்டோடு வந்ததேல் இறப்பும் அதன் தொழிலைக் கண்டு நின்றுழி நிகழ்வும்: அது கொல்ல ஓடுவதைக் கண்டுழி எதிர்வும் விரியும்

முன்னோர் மொழி

முன்னோர் மொழிந்த பொருளையும், சொல்லையும் பொன்னேபோல் போற்றும் இயல்பினர் இவர். அகத்திணை யியலுள், “ஒன்றாத் தமரினும்“ என்னும் நூற்பாவில் (41) உள் “புகழும் மானமும் எடுத்து வற்புறுத்தலும்“ என்ற அடிக்கு -போகம் வேண்டிப் பொதுச்சொற் பொறுத்தல் அரசியல் அன்று என்று விளக்கும் இடத்தில், புறநானூற்றுப் பாடல் (8) ஒன்றில் அடி இடம் பெற்றுள்ளது.

கண்டுள்ளார். சொல்லதிகாரத்தில் குறுந்தொகைப் பாடல்கள் பலவற்றை மேற்கோள் காட்டும் இவர், சிலவற்றிற்கு நயவுரை வினையெச்சங்களை விளக்கும்போது, ”கணவன் இனித உண்டலின், காதலி முகம் மலர்ந்தது” என்று காட்டும் உதாரணம் “முளிதயிர் பிசைந்த“ என்னும் குறுந்தொகைப் பாடலை நினைவூட்டுகிறது. எச்சவியலில் (45) “ஒருமை சுட்டிய“ என்னும் நூற்பா உரையில் “தினைத்தாளன்ன சிறு பசுங்கால“ என்னும் பாடல் சிறந்த விளக்கம் பெறுகின்றது. செய்யுளியலில் (206) “செங்களம்பட“ என்ற முதற்பாடலுக்குரிய இருவேறு எச்சப் பொருளைக் குறிப்பிடுகின்றார்.

கலித்தொகை, இவரைக் கவர்ந்த நூல்களில் ஒன்று செய்யுளியலில் கலிப்பா வகைகளுக்கு அந் நூலிலிருந்து பல உதாரணம் காட்டுகின்றார். கற்பியலில் “கரணத்தின் அமைந்த“ (5 என்னும் நூற்பாவில் உள்ள “மடம்பட வந்த“ என்னும் தொடரை விளக்கும்போது, கலித்தொகைப் பாடல் (7) ஒன்றின் அடிகளை உரைநடையாக்கி எழுதுகின்றார். அப்பகுதி பின்வருமாறு:

”உடன்கொண்டு போதல் முறையன்று என்று அறியாமற் கூறலின், மடம்பட என்றார். செய்கையாவன் தலைவன் கைபுனை வல்வில் நாண் உளர்ந்தவழி, இவள் மையில் வாண்முகம் பசப்பூர்தலும் அவன் புனைமாண் மரீஇய அம்பு தெரிந்தவழி, இவள் இனைநோக்கு உண் கண்ணீர் நில்லாமையும் பிறவுமாம்

இப் பகுதியில் கலித்தொகைப்பாடலின் (7) பல அடிகள் இடம் பெற்றுள்ளன்

நீயே,

செய்வினை மருங்கிற் செலவயர்ந் தியாழநின்

கைபுனை வல்வில் ஞாணுளர் தீயே

இவட்கே,

செய்வறு மண்டிலம் மையாப் பதுபோல்

மையில் வாண்முகம் பசப்பூ ரும்மே

நீயே,

வினைமாண் காழகம் வீங்கக் கட்டி,

புனைமாண் மரீஇய அம்பு தெரிதியே

இவட்கே,

சுனைமாண் நீலம் கார்எதிர் பவைபோல்

இனைநோக்கு உண்கண் ணீர்நில் லாவே

இவ்வாறே கற்பியலில் "துன்புறு பொழுதினும்" (43) என்னும் நூற்பா விளக்கவுரையில் பாலைக்கலிப்பாடலின் (கலி-4) சில அடிகளைத் (9-14) தந்துள்ளார்.

அகத்திணை இயலில் (44) "நிகழ்ந்தது கூறி நிலையலும் திணையே" என்னும் நூற்பாவை விளக்கும்போது, "அரும் பொருள் வேட்கையின்" என்னும் பாலைக்கலிப்பாடலை (கலி-18)க்காட்டி அதில், "நாளது சின்மையும்" (அகத்திணை-41) முதலிய இலக்கணக் கருத்துக்களைப் பொருத்திக் காட்டுகின்றார்.

அகத்திணையியல் (37) "ஏமப்பேரூர்" என்பதற்குப் "பதியெழு வறியாப் பேரூர்" என்று விளக்கும் இடத்தில் இளங்கோ அடிகளின் குரல் எதிரொலிக்கின்றது.

முற்போக்குச் சிந்தனை

நச்சினார்க்கினியரிடம் சிறந்த முற்போக்குச் சிந்தனை உள்ளது. புதுமையை நாடும் திறனாய்வாளர்கள் இவரது முற் போக்குச் சிந்தனையை நயந்து போற்றுவர். அத்தகைய இடங்களில் சிலவற்றைக் காண்போம்:

இளங்கோவடிகள், மங்கல வாழ்த்துப் பாடலின் தொடக்கத்தில், திங்கள் ஞாயிறு மாமழை பூம்புகார் ஆகிய வற்றைப் போற்றுவது குறித்துப் பலவகையான புதுவிளக்கங் களைத் திறனாய்வாளர்கள் கூறி வருகின்றனர்.

நச்சினார்க்கினியர் ஒரு கருத்தைக் கூறி நம் சிந்தனையைத் தூண்டுகின்றார். புறத்திணையியலில் 36-ஆம் நூற்பாவில் வரும்,

நடைமிகுத்து எத்திய குடைநிழல் மரபும்

என்ற அடிக்கு விளக்கம் எழுதும் போது,

"மரபு என்றதனால் செங்கோலும் திகிரியும் போல்வன வற்றைப் புனைந்துரையாக்கலும் கொள்க" என்று கூறி,

திங்களைப் போற்றுதும் ... அளித்தலான்

எனவும்,

ஞாயிறு போற்றுதும் திரிதலான்

எனவும் இவை குடையையும் செங்கோலையும் திகிரியையும் புனைந்தன" என்று விளக்குகின்றார். எனவே, இளங்கோ வடிகள் தம் காப்பியத்தில் சோழ மன்னனின் குடை திகிரி முதலிய வற்றைப் போற்றியதாகக் கருதுவது பொருந்தும்.

புறத்திணையியலில் (28), "காமப்பகுதி கடவுளும் வரையார் என்பதை விளக்கும்போது,

"காமப் பகுதி கடவுளாரைக் கூறுங்கால் பெண் தெய்வத் தோடு இயல்புடையாரைக் கூறின்அன்றி, எண்வகை வசுக்கள் போல்வாரையும் புத்தர் சமணர் முதலியோரையும் கூறப்படாது" என்று கூறுகின்றார்.

"ஊரோடு தோற்றமும் பரத்தையர்க்கு அன்றி, குல மகளிர்க்குக் கூறப்படாது" (புறத்-30) என்றும் உரைக்கின்றார்.

இவை, முற்போக்குச் சிந்தனையாளரைப் பெரிதும் மகிழ் விக்கின்றன.

தொல்காப்பியர், வேற்றுமைகளின் இலக்கணத்தைச் சொல்லதிகாரத்தில் வேற்றுமையியல் வேற்றுமை மயங்கியல் விளிமரபு ஆகிய மூன்று பகுதிகளில் விளக்கிக்கூறியுள்ளார்.

சில ஆய்வாளர்கள், "இம் மூன்று இயல்களையும் தொகுத்து, வேற்றுமைகளைப் பற்றிய கருத்துக்களை எல்லாம் ஒரே இயலில் கூறி இருக்கலாமே" என்று கருதுகின்றனர். நச்சினார்க்கினியரும் இவ்வாறு கருதியுள்ளார். செய்யுளியலில் (170), "நேரினமணியை" என்னும் சூத்திர உரையில், "நேரினமணி எனவே ஒரு சாதியினும் தம்மின் ஒத்தனவே கூறல் வேண்டும். வேற்றுமை ஒத்தும். வேற்றுமை மயங்கியலும், விளிமரபும் என மூன்றன் பொருளையும் ஒன்றாக வேற்றுமை" என்னாது, வேறுவேறு வைத் தமை காண்க" என்று தம் ஆய்ச்சித் திறனை வெளிப் படுத்து கின்றார்.

இத்தகைய இடங்களில் எல்லாம், நச்சினார்க்கினியர் சிந்தனையாளர் அரங்கத்திற்குத் தலைமை தாங்கும் தகுதி பெற்றுச் சிறந்து விளங்குகின்றார்.

முன்னோர் அடிச்சுவட்டில்

இவர், பல இடங்களில் முன்னோர் அடிச்சுவட்டைப் பின் பற்றி நடக்கின்றார். இளம்பூரணர் சுருக்கமாய்க் கூறிய கருத்தை இவர், அழகான நடையில்-எதுகை மோனை அமைந்த சொற் களால் விரித்துக் கூறுகின்றார். முதல், கரு, உரி இவற்றை விளக்கிய பின் காலம் அதற்குப் பொருந்தும் வகையினைக் கூறும் முறையை இளம்பூரணரிடமிருந்தே பெற்று அழகுபட விரித்து உரைக் ன்றார் அகத்திணைக்கு மறுதலையாய் அமையும் புறத்திணை பொருத்தம் பற்றிய விளக்கமும் இளம்பூரணர் கருத்தின் அடிப்படையிலேயே அமைக்கப்பட்டுள்ளது.

புறத்திணையியலில் "முழுமுதல் அரணம்" (8), என்பதற்கு அரணிற்குக் கூறுகின்ற இலக்கணம் பலவும் உடைத்தாதல்" என்று சருக்கமாக இளம்பூரணர் கூறிச் சென்ற கருத்தினை நச்சினார்க் தினியர் மிக விரிக்கின்றார். சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி போன்ற இலக்கியங்களிலிருந்து பல கருத்துகளை மேற்கொண்டு ரண் இலக்கணத்தை விரிக்கின்றார்.

சொல்லதிகாரத்தில் சேனாவரையர் இளம்பூரணர் ஆகியோர் கருத்தைத் தழுவி, விளக்கி எழுதும் இடங்கள் பல உள்ளன. எழுத்ததிகாரத்தில் எழுத்திற்கு உருவம் உண்டு என்ற கருத்தும், பாயிரத்தில் கூறும் கருத்தும் இளம் பூரணா கூறியவையேயாகும். பல உதாரணங்களையும் நச்சினார்க்கினியர் தம் முன்னோரிடமிருந்து மேற்கொள்ளுகின்றார்.

செய்யுள் இயலுக்குப் பேராசிரியர் எழுதியுள்ள உரையையும் இவரது உரையையும் ஒப்பிடும்போது எத்தனையோ ஒப்புமைகளைக் காணலாம். நோக்கு என்ற உறுப்பினை விளக்கும் போது பேராசிரியர் காட்டிய "முல்லை வைந்நுனி" என்ற (அகம்-4) பாட்டையே இவரும் மேற்கோள் காட்டி, பேராசிரியரைப் பின் பற்றியே விளக்கம் எழுதுகின்றார்.

முன்னோரை மறுத்தல்

நச்சினார்க்கினியர் முன்னோரை மறுத்து வேறுரை காணும் இடங்களும் உண்டு. எழுத்ததிகாரத்தில் சில இடங்களில் இளம் பூரணர் கருத்தை மறுக்கின்றார். சொல்லதிகாரத்தில் இளம் பூரணரை மறுப்பதோடு சேனாவரையரையும் மறுக்கின்றார். டத்தில், "சேனாவரையர், ஆசிரியர் கருத்தும் சான்றோர் செய்யுள் வழக்கமும் உணராமல் கூறினார்" (சொல்-414) என்று சிறிது வன்மையாகவே தாக்குகின்றார்.

பொருளதிகாரத்தில் இளம்பூரணரை மறுத்து, வேறுரை காணும் இடங்கள் பல உண்டு. பொருளியல் என்பது அகம் புறம் என்ற இரண்டின் ஒழிபுகூறும் பகுதி என்பது இளம்பூரணர் மருந்து, நச்சினார்க்கினியர், "புறத்திணை இயலுள் புறத்திணை வழுக்கூறி, அகப்பொருட்கு உரிய வழுவே ஈண்டுக் கூறுகின்றது என்று உணர்க" என்று கூறுகின்றார்.

திணைப்பெயர்கள் யாவும் நிலத்திற்குரிய முல்லை முத பூக்களால் பெற்ற பெயர் என்பர் இளம்பூரணர் (அகத்-5) கருத்தினை நச்சினார்க்கினியர் மறுத்துக் கூறுகின்றார்.

"இனி இவ்வாறன்றி முல்லை முதலிய பூவாற் பெ பெற்றன இவ் ஒழுக்கங்கள் எனின், அவ்வந் நிலங்கட்கு ஏணை பூக்களும் உரியவாகலின் அவற்றால் பெயர் கூறலும் உரிய என கடாவுவார்க்கு விடைஇன்மை உணர்க" என்பது நச்சினார் கினியரின் மறுப்புரை.

இறையனார் களவியல் உரையாசிரியரையும் இவர் மறுக்கும் இடங்கள் உண்டு (அகத் 3, 53).

செய்யுளியலில் பேராசிரியரைச் சில இடங்களில் மறு கின்றார். செய்யுளுக்குரிய தொடை பற்றிய கணக்கை (செய்-ஆ இவர் வேறுவகையாய் விளக்கி நான்கு வேறு கருத்தினைக் கற் "இவற்றுள் நல்லது உய்த்து உணர்ந்து கொள்க" என்று கூறுகின்றார்.

பிறர்க்கு விரித்த வலையில்

தமக்கு முன் இருந்த உரைகளை மறுத்து, புதுஉரை காண முயலும் நச்சினார்க்கினியர், சில புதிய கொள்கைகளை உருவாக்கிக் கொண்டு புதுவழி வகுக்கின்றார்.

ஆனால், தாயே அக் கொள்கைகளை மறந்து தாம் வகுத்த புதுவழியை விட்டு விலகிச் செல்கின்றார். அத்தகைய இடங்களில் இவர் உரையோ இவர்க்கு மறுப்பாக அமைந்து விடுகின்றது.

எழுத்ததிகாரத்தில், ஓரெழுத்து ஒருமொழி (45) என்னும் நூற்பா உரையில்,

”ஒற்றும் குற்றியலுகரமும் சொல்லில் இடம்பெறும் போது அவற்றைக் கணக்கிடக்கூடாது ஏனெனில் செய்யுளியலில் கூறியுள்ளார்” தொல்காப்பியர் அவ்வாறு என்று உரைத்து,வரகு கொற்றன் ஆகியவற்றை ஈரெழுத்து ஒரு மொழிக்கு உதாரணம் காட்டுகின்றார். ஆனால், இவ்வாறு கூறிப் பிறரை மறுத்ததை மறந்து, மெல்லெழுத்து இயற்கை (எழுத்-145 என்னும் நூற்பா விளக்கத்தில், ”ஈரெழுத்து ஒருமொழிக்கண் மெய்ஞ்ஞானம் நூல் மறந்தார் எனவரும்” என்று மாறு படக் கூறுகின்றார். மெய் நூல் ஆகிய சொற்களை ஈரெழுத்துச் சொற்களாகவே கொண்டு உதாரணம் காட்டுகின்றார்.

குற்றியலுகரம் ஒலிக்கின்ற முறையைக் கூறுகின்ற,

அல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணும்

எல்லா இறுதியும் உகரம் நிறையும் (எழுத்-405)

என்னும் நூற்பாவில் உகரம் நிறையும்“ என்ற பாடத்தை மாற்றி “உகரம் நிலையும்“ என்று வேறு பாடம் கொண்டுள்ளார். தாம் கொண்ட பாடமே சரியானது என்றும் விளக்குகின்றார். ஆனால் செய்யுனியல் உரையில் சீர்கள் நிற்கும் நிலையைப் பற்றிக் கூறும் போது “உகரம் நிறையும்“ என்ற பாடத்தையே கொண்டுள்ளார்.

கிளவியாக்கத்தில் (57), காலம் உலகம் என்ற நூற்பாவின் விளக்கத்தில் சேனாவரையர் “உலகம் என்பது வடசொல்“ என்று றியுள்ளதை இவர் உடன்படாமல்,

”காலம் உலகம் என்பன வடசொல் அன்று, ஆசிரியர் வடசொற்களை எடுத்தோதி இலக்கணம் கூறார் ஆதலின்”

என்று கூறி மறுக்கிறார்.ஆனால்,

பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்

ஐயர் யாத்தனர் கரணம் என்ப (6-4)

என்னும் நூற்பாவிற்கு விளக்கம் கூறும் போது,

ஈண்டு என்ப என்றது, முதல் நூல்

ஆசிரியரை அன்று வடநூலோரைக் கருதியது

என்று உரைக்கின்றார்.

இத்தகைய இடங்களில் நச்சினார்க்கினியர், பிறரைச் சிக்க 3 வைப்பதற்காக விரித்த வலையில் தாமே சிக்கிக் கொண்டு இடர்ப் படுகின்றார்.

அடி சறுக்கிய யானை

இவர் உரையில் சில இடங்களில் முன்னுக்குப் பின் முரண் பாடான கருத்துக்கள் உள்ளன.

களவியலில் (ஐ), "கந்தருவர்க்குக் கற்பின்றி அமையவும் பெறும். ஈண்டுக் கற்பின்றிக் களவே அமையாது என்றற்கு, துறையமை என்றார்" என்று கூறிய இவர் புறத்திணையியலில் (2), களவு நிகழ்கின்ற குறிஞ்சிப் பொருளாகிய கந்தருவமணம் வேத விதியாலே இல்லறம் ஆனாற் போல" என்று கூறுகின்றார். கந்தருவமும் களவும் ஒன்றே என்று வேறுபாடு எதுவும் இல்லாதது போல் எழுதிவிடுகின்றார்.

தொல்காப்பியர் குறிப்பிடும் அதோளி இதோளி என்னும் சொற்கள், சங்க காலத்தில் வழக்கிழந்து விட்டன என்னும் கருத்தினராய்ச் செய்யுளியலில் (80),

அதோளி இதோளி உதோளி குயின் என்றாற்

போல்வன இடைச்சங்கத்திற்கு ஆகா ஆயின

என்று கூறுகின்றார்.

ஆனால் இவ்வாறு தாம் கூறி இருப்பதை மறந்து கலித் தொகை 117-ஆம் பாடலின் உரையில், அப்பாடலில் உள்ள ஈதோளி என்னும் சொல்லின் வடிவத்தை ஆராயும் போது,

"இதோளி-ஈதோளி எனச் சுட்டு நீண்டு நின்றது"

என்று விளக்குகின்றார்.

இவர் தம் காலத்தில் நிலவி வந்த பிற்போக்கான சமூகக கட்டுப்பாடுகளை உரையில் புகுத்திவிட்ட இடமும் உள்ளது. உண்ணும்போது பிறர் பார்க்கக்கூடாது அந்த நேரத்தில் மற்றவர் வீட்டினுள்ளே வரக்கூடாது என்னும் பிற்காலச் சமுதாய வழக்கத்தைக் களவியல் (15) உரைப்பகுதியில் கூறுகின்றார்."

புகாஅக் காலைப் புக்குஎதிர்ப் பட்டும்

பகாஅ விருந்தின் பகுதிக் கண்ணும்

என்பதற்கு, "உண்டிக் காலத்துத் தலைவி இல்லத்துத் தலைவன் புக்கு" என்று எழுதியபின், "சுடர்த்தொடீஇ கேளாய்" என்னும் கலிப்பாடலை மேற்கோள் காட்டுகின்றார். அந்தப் பாடல் இவர் கருத்திற்கு அரண் செய்யவில்லை. அதில்,

மேலோர் நாள்

அன்னையும் யானும் இருந்தேமா, இல்லிரே

உண்ணுநீர் வேட்டேன் என வந்தாற்கு

என்னும் பகுதியில் உண்டிக்காலம் என்ற குறிப்பு இல்லை.

இவரே களவியலில் (40) "மனையகம் புகாஅக் காலை" என்பதற்கு,

உள் மனையிற் சென்று கூடுதற்கு

உரித்து அல்லாத முற்காலத்து உண்டான இரவுக்குறி

என்று எழுதுகின்றார். இக் கருத்து, முன் கூறியதற்கு மாறாக உள்ளது. இங்கே கூறிய கருத்தே பொருத்தமாய் உள்ளது.

இத்தகைய இடங்கள், "ஆனைக்கும் அடிசறுக்கும் ஆராய்ச்சியாளர்க்கும் நினைவு தடுமாறும்!" என்பதைச் சொல்லாமல் சொல்லுகின்றன!

மறதியா? புறக்கணிப்பா?

தொல்காப்பியத்திற்குப் பின், காலந்தோறும் தோன்றி வளர்ந்துள்ள சொல்வடிவம் இலக்கியக்கொள்கை இலக்கணக் கருத்து ஆகியவற்றைத் தம் உரையில் ஆங்காங்கே விளக்கிக் கூறுகின்ற இயல்புடையவர் நச்சினார்க்கினியர். ஆனால் சில இடங்களில், பிற்கால இலக்கண இலக்கிய வழக்குகளைச் சிறிதும் நினைவுபடுத்தாமலும் குறிப்பிடாமலும் செல்கின்றார்.

களவியலில் (3) "சிறந்துழி ஐயம்" என்னும் நூற்பா உரையில், தலைவியைக் காணும் தலைவனுக்கே ஐயம் நிகழும் என்றும் தலைவனைக் காணும் தலைவிக்கு ஐயம் நிகழாது என்றும் கூறுகின்றார். இதற்குக் காரணம் கூறும்போது, "தலைவிக்கு, முருகனோ இயக்கனோ மகனோ என ஐயம் நிகழின் அதனை தீக்கி உணர்தற்குக் கருவி இலள் ஆகலானும் இங்ஙனம் கூறினார். தலைவிக்கு ஐயம் நிகழின் அச்சமேயன்றி, காமக்குறிப்பு நிகழாதாம்" என்று உரைக்கின்றார்.

ஆனால் இவரது கருத்திற்கு மாறாக இலக்கண இலக்கிய வழக்குகள் உள்ளன. அவை இவர்க்கு முற்பட்டவை. எனினும் அவற்றை நினைவுபடுத்தவில்லை!

1. இறையனார் களவியலுரை,

"இவளும் இவனை ஐயப்படும். "கடம்பக் கடவுள் கொல்லோ ! இயக்கன் கொல்லோ ! அன்றி மக்களுள்ளான் கொல்லோ!" என்று இங்ஙனம் ஐயப்படும்"

என்று தலைவனைக் காணும் தலைவிக்கும் ஐயம் நிகழும் என்று கூறுகின்றது.

2. சீவக சிந்தாமணியில், பதுமை சீவகனை நோக்கிய போது, வணங்கு நோன்சிலை வார்கணைக் காமனோ ! மணங்கொள் பூமிசை மைவரை மைந்தனோ ! (- 1311)

என்று ஐயுற்றதாய்த் திருத்தக்க தேவர் பாடுகின்றார்.

3. பெரிய புராணத்தில் சுந்தரரைக் கண்ட பரவை யார்,

"முன்னே வந்து எதிர் தோன்றும்

முருகனோ ! பெரு கொளியால்

தன்னேரில் மாரனோ!

தார்மார்பின் விஞ்சையனோ

மின்னேர்செஞ் சடையண்ணல்

மெய்யருள்பெற் றுடையவனோ!

என்னே! என் மனம் திரித்த

இவன்யாரோ!“ என நினைந்தார் (5 - 144)

என்று ஐயுற்றதாய்ச் சேக்கிழார் பாடுகின்றார்.

4. கம்பராமாயணத்தில், இராமனைக் கண்ட சீதைக்கு ஐயம் ஏற்பட்டதையும், பின் ஐயம் நீங்கித் தெளிந்ததையும் கம்பர் பின் வருமாறு பாடுகின்றார்:

நெருக்கியுட் புகுந்தரு நிறையும் பெண்மையும்

உருக்கி,என் உயிரொடும் உண்டு போனவன்

பொருப்புறழ் தோள்புணர் புண்ணி யத்தனு,

கருப்புவில் அன்றுஅவன் காமன் அல்லனே ! (லெ - 54)

உரைசெயின் தேவர்தம் உலகுளா னவன்

விரைசெறி தாமரை இமைக்கும் மெய்ம்மையான்

வரிசிலைத் தடக்கையன், மார்பின் நூலினன்,

அரசிளங் குமரனே ஆகல் வேண்டுமால். (லெ – 58)

மேலே காட்டியுள்ள இலக்கண இலக்கியங்கள் நச்சினார்க கினியர்க்கு முற்பட்டவை செல்வாக்குடன் இலக்கிய உலகில் நிலவி வந்தவை. சிந்தாமணிக்கு இவரே உரை கண்டுள்ளார். ஆதலின் இத்தகைய இடங்களை இவர் மறந்துவிட்டார் என்பதா? புறக் கணிக்கின்றார் என்பதா?

பிற்கால இலக்கிய வழக்கை மறந்தோ புறக்கணித்தோ இவர் உரை எழுதுகின்ற இடம், மற்றொன்றும் உள்ளது.

சொல்லதிகாரத்தில் (452),

கடிசொல் இல்லைக் காலத்துப் படினே

என்னும் நூற்பா விளக்கத்தில்,

”புதியன தோன்றினாற் போல, பழையன கெடுவனவும் உள. அவை அழன் புழன் முதலியனவும், எழுத்திற் புணர்ந்த சொற்கள் இக் காலத்து வழங்காதனவும் ஆம்”

“என்று எழுதுகின்றார்.

ஆனால், மணிமேகலையில் அழன் புழன் என்ற சொற்கள் வழங்கியுள்ளன. ஆராய்ச்சி அறிஞர் மு. இராகவ ஐயங்கார். ஆராய்ச்சித் தொகுதியில் (பக் - 107), ”மணிமேகலைச்

சக்கரவாளக் கோட்ட முரைத்த காதையில் (92),

அழற்பெய் குழிசியும் புழற்பெய் மண்டையும்

என வரும் தொடர், அழன் புழன் என்ற வழக்குகளைக் குறிப்பது போலும்" என்று குறிப்பிடுகின்றார்.

மேலே காட்டியுள்ள அடிக்குப் பொருள் கொள்வதில் சிக்கல் உள்ளது. நச்சினார்க்கினியர் எழுத்ததிகார உரையில் (எழுத். 354), அழன் என்பதற்குப் பிணம் என்று பொருள் கூறுகின்றார். ஆனால் இவர் புழன் என்பதை விளக்கவில்லை.

மணிமேகலைக்கு உரை எழுதிய ந.மு. வேங்கடசாமி நாட்டார், அழல் புழல் என்று கொண்டு, மேலே காட்டிய அடிக்கு,

"தீப்பெய்த பானையும் புழல் என்னும் பண்ணியம் இட்ட கலனும்"

என்று பொருள் கூறியுள்ளார்.

" மணிமேகலையில் இது மேலும் ஆராய வேண்டிய இடமாகும்.

வினாக்கள்

அலகு – 4

உரை நெறிகளும் உரை திறன்களும்

ஒரு மதிப்பெண் வினாக்கள்

1.உரையாசிரியர்கள் கொண்ட சூத்திர அமைப்பை மாற்றியவர்

அ).இளம்பூரணர் ஆ).சேனாவரையர்

இ).பேராசிரியர் **ஈ).தெய்வசிலையார்**

2.ஆழமான தெளிந்த நீரோடை போன்ற உரை யாருடையது ?

அ).இளம்பூரணர் ஆ).பேராசிரியர்

இ).கல்லாடர் ஈ).சேனாவரையர்

3."வடநூற்கடலை நிலைகண்டு உணர்ந்த சேனாவரையர்" என்று புகழ்ந்தவர்

அ).உ.வே.சா

ஆ).சிவஞானமுனிவர்

இ).மயிலைநாதர்

ஈ).ச.வே.சு

4.பேராசிரியரின் அடிச்சுவடுகளைப் பெரிதும் பின்பற்றியவர்

அ).மயிலைநாதர்

ஆ).தெய்வச்சிலையார்

இ).நச்சினார்க்கினியர்

ஈ).கல்லாடர்

5.மாணவன் ஒருவன் வினா எழுப்ப அதற்கு ஆசிரியர் விடைகூறுவதுபோல உரை எழுதியவர்

அ).பரிதி ஆ).பரிமேலழகர்

இ).காலிங்கர் ஈ).நச்சர்

6.இளம்பூரணர் கொள்கைகளை ஐம்பதிற்கும் மேற்பட்ட இடங்களில் மறுத்து உரை எழுதியவர்

அ).சேனாவரையர் ஆ).தெய்வசிலையார்

இ).நச்சினார்க்கினியர் ஈ).கல்லாடர்

7.வடமொழியில் உள்ள காமநூலையும் அரசியல் நூலையும் பயின்ற உரையாசிரியர்

அ).பரிமேலழகர் ஆ).காளிங்கர்

இ).பரிதி **ஈ).பரிப்பெருமாள்**

8.தண்டியலங்கார உரையில் கூறிப்பிடப்படும் மன்னன்

அ).சேரன் **ஆ).சோழன்**

இ).பாண்டியன் ஈ).பல்லவன்

9.அதிகாரம் என்ற பெயரோடு,ஒத்து என்ற பெயரும் அதிகாரங்களுக்கு வழங்கியதிற்கு சான்று கூறும் உரையாசிரியர்

அ).இளம்பூரணர்

ஆ).சேனாவரையர்

இ).பேராசிரியர்

ஈ).நச்சினார்க்கினியர்

10.மாணவர்களுக்கு பாடம் கூறும் வகையில் வினா விடையாக திருக்கோவையாருக்கு உரை எழுதியவர் யார்?

அ).பேராசிரியர் ஆ).தெய்வச் சிலையார்

இ).இளம்பூரணர் ஈ).கல்லாடர்

ஐந்து மதிப்பெண் வினாக்கள்

1.நூற்பா சூத்திரம் வைப்பு முறை பற்றி எழுதுக.

2.வினா விடை முறையில் அமைந்த உரைகள் பற்றி விளக்கம் தருக.

3.இலக்கிய வரலாற்றுச் செய்தித் தரல் முறையில் அமைந்த உரை பற்றி ஆராய்க.

4.பாட வேறுபாடு என்றால் என்ன ?விளக்கம் தருக.

5.தமிழ் மரபு பேணல் முறையை உரையாசிரியர்கள் எங்கனம் கையாண்டுள்ளனர் ஆராய்க.

எட்டு மதிப்பெண் வினாக்கள்

1.உரையாசிரியர்களின் வடமொழிப் புலமை பற்றி கட்டுரை வரைக.

2.பிறர் கருத்தை மறுத்து உரைத்த உரையாசிரியர்களின் உரை மாண்பு பற்றி விளக்குக.

3.உரையாசிரியர்களின் மேற்கோள் தரும் முறையை விளக்குக.

4.மு.வை. அரவிந்தன் கூறும் தருக்க முறை போக்கு பற்றி கட்டுரை வரைக.

அலகு - V

உரையாசிரியர் அடியார்க்கு நல்லார்

பாட நோக்கம்

பலவேறு உரையாசிரியர்களின் உரைகளுள் குறிப்பிட்ட ஒருவரின் உரை நெறியை விரிவாக அறியச்செய்தல் எனும் நோக்கில் அடியார்க்கு நல்லாரின் உரை குறித்துத் தெளிவுபெறச்செய்தல்.

பாட அறிமுகம்

இலக்கண இலக்கிய உரையாசிரியர்களின் உரைத்திறன்களும் பல்துறைப் புலமையும் வெளிப்படுத்துதல்.

உரையாசிரியர் - அடியார்க்கு நல்லார்

அடியார்க்கு நல்லார் - வரலாறு உரையின் இயல்பு மறைந்த பகுதி -காலம் கடந்த குரல் -திறனாய்வுக்கலைஞர் கதைநிகழ்ச்சியும் கட்டுக்கோப்பும் நிகழ்ச்சியை இணைத்தல் நிகழ்ச்சியும் காலமும் நிகழ்ச்சியும் இடமும் காப்பிய உறுப்பினர் பண்பு பிறர் உரைச்சுட்டல் உரைநடைச் சிறப்பு - பருந்தும் நிழலும் நயமும் விளக்கமும் பலபொருள் கூறுதல் சொல்லும் பொருளும் மாறுபட்டக் கருத்து - வெண்பாக்களும் உரையும் மேற்கோள் நூல்கள் பல்கலை புலமை

காப்பிய உரைகள்

தமிழகத்திற்குத் திருவேங்கடம் போன்ற மலைகளால் ஏற்படும் சிறப்பைவிட-காவிரி போன்ற ஆறுகளால் உண்டாகும் ஒபருமையைவிட-தஞ்சைப் பெரிய கோயில் போன்ற கலைச் செல்வங்களால் தோன்றும் மாண்பைவிட -சிறந்த கவிஞர் பெரு மக்கள் இயற்றிய பெருங்காப்பியங்களால் ஏற்படுகின்ற புகழ் மேலானது.

பாரதியார், காப்பியத்தைத் தீஞ்சுவைக் காவியம் என்று பாராட்டுகின்றார். காப்பியம் கள்ளைப் போல் மயக்கும் தீயைப் போல சுடும் காற்றைப் போல் இனிமை தரும் வானவெளியைப் போல் பரந்து கிடக்கும். காப்பியம் பல இயற்றியுள்ள சான்றோர்களைத் தெள்ளு தமிழ்ப் புலவர்கள் என்று பாரதியார் போற்றிப் பாடுகின்றார்:

கள்ளையும் தீயையும் சேர்த்து-நல்ல

காற்றையும் வானவெளியையும் சேர்த்து

தெள்ளு தமிழ்ப்புல வோர்கள் - பல

தீஞ்சுவைக் காவியம் செய்து கொடுத்தார்.

தமிழிலுள்ள காப்பியங்களை ஐம்பெருங் காப்பியங்கள் என்றும் ஐஞ்சிறு காப்பியங்கள் என்றும் இருவகையாகப் பிரித்துள்ளனர். இந்தப் பிரிப்புமுறை, வடமொழியை நோக்கி அமைக்கப்பட்ட தாகும்.

சிலப்பதிகாரம் மணிமேகலை ஆகிய இரட்டைக் காப்பி யங்களை அடுத்துத் தோன்றிய பெருங்கதை, மேலே கூறிய பாகுபாட்டில் இடம்பெறவில்லை. பெருங்காப்பியத்திற்கு உரிய தகுதிகள் யாவும் அதற்கு இருந்தும், அது காப்பிய வரிசையில் வைத்து எண்ணப்படவில்லை.

சிலப்பதிகாரம் மணிமேகலை சீவக சிந்தாமணி வளையாபதி குண்டலேகேசி ஆகியவை ஐம்பெருங்காப்பியங் களாகும். இவை தமிழன்னை பொலியச் சூடிய புலமை அணிகளாய் விளங்குகின்றன. சுத்தானந்த பாரதியார்.

காதொளிரும் குண்டலமும் கைக்குவளை

யாபதியும் கருணை மார்பின்

மீதொளிச்சித் தாமணியும் மெல்லிடையில்

மேலையும் சிலம்பார் இன்ப

போதொளிரும் திருவடியும் பொன்முடிரு

ளாமணியும் பொலியர் குடி

நீதியொளிர் செங்கோலாய்த் திருக்குறளைத்

தாங்குதமிழ் நீடு வாழ்க

என்று தமிழ்ன்னைக்குக் காப்பிய அணிகளைச் குட்டி

ஐம்பெருங்காப்பியத்தை அடுத்துத் தோன்றியலை, நீலகேசி சுநிசவ. குளாமணி உதயணன்கதை யசோதர காவியம் நாக்கும காவியம் என்பன இவற்றை ஐஞ்சிறு காப்பியங்கள் என்பர்

ஐம்பெருங்காப்பியங்களுள், வளையாபதி குண்ட ஆகிய இரண்டும் மறைந்துபோயின். இவற்றுள் சில பாடல்களே ரிருத்திரட்டின் வாலாக கிடைத்துள்ளன.

குண்டலகேசிக்கு மறுப்பாக எழுந்த நீலகேசி உரை குண்டலகேசி காப்பியக் கதையைச் சுருக்கமாய் கூறி விளக்கு

ஐஞ்சிறு காப்பியங்களுள், நாக்குமார காவியம் மறைந்து விட்டது.

காப்பியங்களுள். சிலப்பதிகாரம் சீவக சிந்தாமணி மணிமேகலை ஆகிய மூன்றிற்கு மட்டுமே முற்காலத்தில் உரைகள் தோன்றின.

1. அரும்பதவுரையாசிரியர்

ஊர் பேர் தெரியாத பண்டைய உரையாசிரியரைப் பழை உரையாசிரியர் என்று குறிப்பிடுவது, பிற்கால உரையாசிரியர் களின் வழக்கமாகும். சிலப்பதிகாரத்திற்கு உரை

எழுதியுள்ள் அடியார்க்கு நல்லார் காலத்திலேயே இத்தகைய வழை இருந்திருக்கிறது அடியார்க்கு நல்லாருக்கு முன்னர்ச் சிலப்பதி காரத்திற்கு ஊர் பேர் தெரியாத பழையவுரையாசிரியா ஒருவள் இருந்தார் அப் பழையவுரையாசிரியரின ஞரவ தெரியாததாலும், அவர் இயற்றிய உரை, பெரும்பாலும் அரிய சொற்களுக்கும் பொருள் கூறுவதாய் இருப்பதாலும் அடியார்க்கு பார்க்க, பிற்சேர்க்கை - 2

நல்வார்.அவரை அரும்பதவுரையாசிரியர் என்று வழங்கினார். சிலப்பதிகாரத்தில் அடியார்க்கு நல்லார் இந்திர விழவூரெடுத்த காரை உசையில்(137),அவைக்கனத்தார் ஐந்து எனக காட்டுவர் அரும்பதவுரை யாசிரியா" எவறு கூறுகிவதார்

"கருணாமிர்த சாகரம்" என்ற நூலை இயற்றிய மு. அபிரகாம் பண்டிதா தழ் தாவில் அரும்பதவுரையாசிரியரின் கருத்துககாம். கூறி அவற்றைக் கூறியவர் செயங்கொண்டார் என்று குறிப்பிடு நின்றார். அரும்பதவுரையாசிரியருக்கு அப பெரியவா செயங்கொண்டார் என்று பெயரிடக் காரணம் என்ன என்பது விளங்கவில்லை.

காலமும் சமயமும்

அடியார்க்கு நல்லார்ககே அரும்பதவுரையாசிரியரின் பெயர் முதலிய வரலாறு தெரியவில்லை எனின், அவரது காலம் பழமை நன்கு விளங்கும். உரையின் தொடக்கத்தில் அரும்பத் வுரையாசிரியா விநாயக வணக்கம் கூறுகிறார்.

கரும்பும் இளநீரும் கட்டிக் கணியும்

விரும்பும் விநாய்களை வேண்டி- அரும்பமிழ்நார்ச்

சேரமான் செய்த சிலப்பதிகா ரக்கதையைச்

சாரமாய் நாவே தரி

என்ற வெண்பா இவரது உரையின் தொடக்கத்தில் உள்ளது. விநாயகரை வணங்கும் இவர் சைவா என்பது உறுதி.

தமிழகத்தில் விநாயகர் வழிபாடு தோன்றியது ஏழாம். நூற்றாண்டின் இறுதியிவாகும். கி.பி. 642-இல் சிறுத்தொண்டர் மேலைச்சாளுக்கியரை வென்று அவர்களின் தலைநகரான வாதாபியிலிருந்து விநாயகரைத் தமிழகத்திற்குக் கொண்டு வந்தார் இதன் பின்னரே விநாயகா வணக்கம் தமிழகத்தில் பரவியது. விநாயக வணக்கம் நூலின் தொடக்கத்தில் கூறும் வழக்கம் எட்டு அல்லது ஒன்பதாம் நூற்றாண்டிற்குப் பினனரே ஏற்பட்டது.(**இலக்கிய ஆராய்ச்சியும் கல்லெட்டுக்களும் (ஈ.பி. சதாசிவப் பண்டாரத்தால்) பகி - 89-100. 2.29.)**

எனவே, அரும்பதவுரையாசிரியரின் காலம் ஒன்பதாம் நூற்றாண்டிறகுப்பின் என்பது தெளிவாகின்றது.

அரும்பதவுரையாசிரியர்க்கு முன்னரும் சில உரைகள் சிலப்பதிகாரத்திற்கு இருந்தன என்பது இவர் உரையால் விளங்குகின்றது பிரஆங்காங்கே குறிப்பிட்டுச்செல்கின்றார் இவர்.

உரையின் இயல்பு

அரும்பதவுரையாசிரியர்ராய்ச்சித தெளிவும், அடிந்த புலமையும் அமைதியான உள்ளமும்,பன்பட்டநல்லியல்பும். அரியஉழைப்பும் கொண்டவர்என்பதை இவரது உரை உணாத் துகின்றது. உலகியல்அறிவு மிக்கவர் என்றும் அறிவிக்கின்றது

இவரது உளர், நூல் முழுமைக்கும் உள்ளது. எல்லா இடல் சுளிலும் அருஞ்சொற்பொருள் கூறுகின்றார். தேவையான இடங்களில் இலக்கணம் காட்டுகின்றார். மிகச் சில இடங்களில் வினைமுடிபு காட்டுகின்தார். தொடர்களுக்குப் பொழிப்புர்ை கூதுகின்றார்.

"அடியார்க்கு நல்லார் உரையில் காணப்படாத பல அரிய கருத்துகள் இவ்வுரையால் விளங்குகின்றன. இவ்வுரையில் உள்ள முடிபுகளும் பொருளும் இல்லையாயின், அடியார்க்கு நல்லா குடைய உரை இல்லாத பாகங்களுக்குப் பொருள் காண்பது அரிறு" என்பார் டாக்டர் உலே. சாமிநாத ஐயர்.

அரும்பதவுரையாசிரியர் மங்கல வாழ்த்துப் பாடலில் (28.9) கண்ணகியை முதலில் அறிமுகப்படுத்துவதற்குக் காரணம் அறுகில்றார். "இவனை (கண்ணகியை) முன்கூறியது கதைக்கு தாயகியாதலின்" என்று உரைக்கின்றார்.

அரங்கேற்று காதை உரை மிக விரிவானது. அரிய விளக்கம் பல கொண்டது

வழக்குரை காதையில் (80) கணவனை இழந்தோர்க்குக் காட்டுவது இல்" என்ற அடிக்கு விளக்கம் எழுதும் போது "தந்தை தாய் முதலாயி னோரை இழந்தார்க்கு அம்முறை சொல்லிய பிறரைக் காட்டலாம். இ.ந்து அவ்வாறு வாக்கானும் சொல்லல் ஆகாமையின், காட்டுவதுஇல் என்றான்" என்று உரைக்கின்றார்.

அடியார்க்கு தல்லாரும் அரும்பதவுரையாசிரியரும்

அரும்பதவுரையாசிரியர் அமைத்துத் தந்த பாதையிலே அடியார்க்கு நல்லார் செல்லுகின்றார். அரும்பதவுரையாசிரியா அமைத்த கடைக் காலின் மீதுநாள் அடியார்க்கு நல்லார் கட்டிடம் எழுப்புகின்றார். அரும்பதவுரையாசிரியா கூறும் விளக்கங்களை அடியார்க்குநல்லார் விளக்காமல் விட்டுச்செல்லுதலும் உண்டு.

வேனிற் காதையில்

அகநிலை மருதமும் புறதிலை மருதமும்

அருகியம் மருதமும் பெருகியல் மருதமும்

நால்வகைச் சாதியும் (39-41)

என்ற வரிகளில் அமைந்துள்ள இசைக் குறிப்புக்கான அரும்பத வகைகிரியா மிகநன்றாக விளக்கி எழுதுநிலறார். அடியார்க்குநல்லார் இவ் வரிகளுக்கு விளக்கம் அதுவும் எழுதாமல் செல்கின்றார் அரும்பதவுரை இன்றேல் மேலே கண்ட வசிப்மரின் இசைக்குறிப்புகள் விளங்காமல் போய் இருக்கும்.

அரும்பதவுரையாசிரியரிடமிருந்து அடியார்க்கு நல்வார் சில இடங்களில் வேறுபடுகின்றார். வேறு பாடம் கொள்ளு நின்றார் மிகச சில இடங்களில் அரும்பதவுரையாசிரியரை மறுக் இன்றார் ஆனால், "இருவரும் மாதுபட எழுதியிருக்கும் உளரகளை ஆராய்வுழிச் சில இடங்களில் அரும்பதவுரையே பொருத்த முடையதாகக காணப்படுகிறது" என்பா தமு வேங்கடசாமி நாட்டார்.

சில இடங்களிய அடியார்க்கு நல்லார் மாறுபட்ட போதிலும் இசை நாட்சுப் பகுதிகளில் அரும்பதவுரையையே ஆதாரமாகக் கொண்டு விளக்குகினறார். அரும்பதவுரை விளக்காத கலையபகுதியை அடியார்க்குநல்லார் விளக்காமல் விட்டுவிடுகின்றார்.

"அரங்கேற்று காதையில் குழவாசிரியன் அமைதியும் வாழாசிரியன் அமைதியும் கூறுவதற்கு எழுத்த இன்றியமையாத இசையிலக்கரப் பகுதிகளில் அரும்பதவுரையில் உள்ளவற்றினும் வேராக ஒரு சொலதானும் எழுதப்படாமை அறியற்பாலது. அடியார்க்கு நல்லார் இவ்விடங்களில் அரும்பதவுரையைப் பட்டாங்கு பெயர்த்தெழுதி, சொல் முடிபு தானும் காட்டாது விட்டிருப்பது வியப்பிற்குரியதே இவ்வாற்றால் அரும்பதவுரையாசிரியா விரியாதுவிடுத்த விலக்குறுப்பு முதலியவற்றை அடியார்க்கு நல்லார் பிறநூல் மேற்கோள கொண்டு விரித்துக்காட்டி இருப்பினும், நுட்பமாகிய இசை நாடகப் பகுதிகளை விளகுதற்கு முயன்ற வகையால அரும்பத வுரையாசிரியருக்கே அனைவரும் கடமைப்பாடு உடையவர் ஆவா" என்று கூறுகின்றார் நமு. வேங்கடசாமி நாட்டார்.

எந்தச் சிலம்பு?

பாண்டியன் அவையில் வழக்குரைத்து, தன கணவன் களவன அல்லன் என்று மெய்ப்பிக்க, கண்ணகி உடைத்த

சிலம்புகள் எத்தனை? ஒன்றார் இரண்டா? மூன்றா? தே ஆயில் உடைக்கப்பட்டது எந்தச் சிலம்பு!

இக்காலத்தில் இந்த வினாக்களுக்குப் பல விடைகள் தோன்றியுள்ளன.

இந்த வினாக்களுக்குத் தகுத்த விடை, அரும்பத உரையில் உள்ளது.

கோவலனிடமிருந்து பொற்கொல்லன் வாங்கி, காவர் களிடம் தந்த கண்ணகி சிலம்பே பாண்டியன் அவையில் கண்ணகியால் உடைக்கப்பட்டது.

அரும்பதவுரையாசிரியர் இதனை, "தட்டான் கன்னப்பா செய்வார் கையிற் கொடுத்த பொற்சிலம்பு என்று கூறுகின்றார்.

இங்கே மற்றொரு வினா எழுவது இயற்கையே கண்மால் பாண்டியனைக் காண ஆயர்சேரியிலிருந்து சென்றபோது, கையில் எடுத்துச்சென்ற சிலம்பு என்ன ஆயிற்று?

இதற்கும் உரை, விடையளிக்கிறது

"இராசா துஞ்சின பின்பு, கண்லாகி தள கைச் சிலம்பை, தேவி முன்னே எறிந்தாள்"

இச் செய்தி உண்மை என்பதை இளங்கோ அடிகளின் வாக்கினால் அறியலாம்

செஞ்சிலம்பு எறிந்து தேவி முன்னர்

வஞ்சினம் சாற்றிய மாபெரும் பத்தினி, (காட்சி73,74)

அரும்பதவுரை இத்தகைய நுட்பான செய்திகள் பலவற்றை விளக்கிக் கூறுகின்றது.

உரைநடை

அரும்பதவுரையாசிரியரின் உசைநடைச் சிறப்புகுப் பின வரும் பகுதி நல்ல சான்றாக உள்ளது.

வஞ்சி மூதூர் மணி மண்டபத்திடைத் தந்தையோடு இருந்துழி, அரசு வீற்றிருக்கும் திருப்பொறி உண்டென்று ஒரு நிமித்திகள் சொல்ல, முன்னோவாகிய செங்குட்டுவன் இருப்ப இவ்வாறு முறை பிறழக் கூறியது பொறாது குணவாயிற் கோட்டத்துக் கடவுனர் முன்னர்த் துறந்திருந்த இளங்கோவடி களுக்கு, கண்ணகி வாளவர் போற்றத் தன் கணவனோடு கூடியது கண்டு செங்குட்டுவனுக்கு உரைத்த குறவர் வந்து, "எல்லாம் அறிந்தோய் இதனை அறிந்தருள்" எனக்கூறிப் போக, பின்பு

செங்குட்டுவனைக் கண்டு அடிகளுழ வந்த சாத்தன, அது பட்டவாது எல்லாம் கூற, அது கேட்டு அரசியல் பிழைத்தோர்ககு அறம் கூற்று என்பதும், பத்தினி மகளிர் வந்து ஊட்டும் என்பதூஉம் இக கதையகத்து உண்மையின், அதனை யாம் ஒரு செய்யுளாகச் செய்வோம்" என்று சாத்தன் சொல்ல, இம் முப்பது வகைத்தாய இளங்கோவடிகா அருள், கூல வாணிகள் சாத்தன் கேட்டனன்

இப்பகுதி, ஒரே வாக்கியமாய் அமைந்து, பொருள் தெளிவுடன் சொல்லோவியமாய் விளங்குகின்றது.

தமிழறிஞர் ரூ வெள்ளைவாரணனார் இவரது உரைத் திரளைப் பின் வருமாறு போற்றுகின்றார்:

"இதனை எழுதிய ஆசிரியா, அருளுசொற்களுக்குப் பொருள உரைக்கும் நிலையிற் பதவுரையாகவும், இலக்காக குறிப்பும் மேற்கோளும் தந்து நூலின் பொருளை விரித்துரைக்கும் நிலையில் அகல் வரையாகவும், காப்பியத்தின் சொற்பொருள் தயங்களைச் சுருங்கச் சொல்லி விளக்கு திறத்தில் நுட்பவுரை யாகவும் நூலாசிரியரது உளக்கருத்தினை உயத்துணாந்து நூலகத்து எஞ்சியுள்ள சொல்லையும் குறிப்பையும் வருவித்து உழைக்கும் திறத்தில் எச்ச வுரையாகவும் உள்ளது"

2. அடியார்க்குநல்லார்

அடியார்க்குநல்லார் என்ற இனிய பெயரையுடையவர். சிலப்பதிகாரத்திற்கு உரை இயற்றிய சான்றோர். இவா அரும்பத் வுரையாசிரியாகுப் பின்னர், உரை இயற்றியவர். இவருக்கு முன்னும் சிலர் சிலப்பதிகாரத்திற்கு உரை இயற்றி இருக்கலாம் என்று கருத இடமுண்டு. பிறா கொண்ட பாடங்களையும் உரை களையும் இவர் ஆங்காங்கே சுட்டிச்

செய்கின்றார்.

இவரைப்பற்றி அறிய, சிறப்புப்பாயிரச் செய்யுள்கள உதவு கின்றன. இவரைக் “காரும் தருவும் அளையான“ என்றும், “திரம்பையர் காவலன்“ என்றும் ஒருபாடல் கூறுகின்றது. இவர் புலமைச் செல்வராயும் கொடைவள்ளலாயும் விளங்கி இருக்க வேண்டும். “திரமபையா காவலன்“ என்பதனால் அவ்வூர்க்கு உரிமையுடையவராக இவா இருந்திருக்கலாம்.

”இவருக்கு நிரம்பையர் காவலன் என்னும் பெயர் ஊரால் வந்தது என்றும், நிரம்பை என்னும் ஊர் கொங்கு மண்டலத்தில் குறும்பு நாட்டில், பெருங்கதையின் ஆசிரியராகிய கொங்குவேளிர்

பிறந்த விசய மங்கலத்தில் பக்கத்தில் உள்ளதென்றும் செந்தஆமண்டல சதகம் தெரிவிக்கின்றது” என்பர் டாக்டர் வே. சாமிநாத ஐயர், திரம்பை என்னும் ஊர் இன்று, கோயம்புத்தூர் மாவட்டத்தில் பெருந்துறையை அடுத்து உள்ளது.

ஆ.முத்துத்தம்பி பிள் ளைன்பவர், ”அடியார்க்கு நல்லார். குணபூ‘ண சிங்கை ஆரியச் சக்கரவர்த்தி என்னும் ஈழ நாட்டரசர்க்கு அமைச்சர் என்று கூறியுள்ளார் (செந்தமிழ்-12

தமிழ்கத்தில் பல்குன்றக் கோட்டத்துச் சிவதும் பொருத வளநாட்டு, தேலூரில் இவர் பிறந்தவர் என்றும், இதற்கு ஆதாரமாகக் காஞ்சிபுரக் கல்வெட்டு ஒன்று உள்ளது என்றும் அறுகின்றனர் (செங்குந்தர் பிரபந்தத் திரட்டு-முகவுரை -38,39

அடியார்க்குநல்லாரை ஆதரித்த வள்ளல் “பொப்பண்ண காங்கெயர் கோன்” என்று சிறப்புப்பாயிரச் செய்யுள் ஒன்று கூறு கின்றது. அவ்வள்ளல் “காலமெலும் கூறத் தவிர்த்தருள் பொப்பண்ண காங்கெயர் கோல்“ என்று புகழப்படுகின்றான். அடியார்க்கு நல்லார்க்குப் பொப்பண்ணன் ”அளித்த சோற் செருக்கல்லவோ தமிழ் மூன்றுரை சொல்லித்ததே” என்று இலக்கியச் சுவை தோன்ற அவ் வள்ளலின் உதவி புகழ்ப்படு கின்றது. “சோற்றுச் செருக்கு“ என்ற சொற்றொடர் நினைக்க நினைக்கப் பெரிதும் சுவையூட்டுகின்றது. சோற்றுச் செருக்கு, தமிழ் மூன்றினுக்கும் உரை சொல்லித்ததாய்க் கூறியிருப்பதுமிக்க தயமாய் உள்ளது.

இராமானுசர், போசன வி‘ணுவர்த்தன மகாராசர் என்ற மன்னனை வைணவ சமயத்தில் சேர்த்தார். அம்மன்னனின் அமைச்சனும் படைத்தலைவலுமாக இருந்தவுள் பொப்பண்ண காங்கேயன். அவன் சமண சமயத்தவன். அவன் காலம் 12ஆம் நூற்றாண்டு. அடியார்க்கு நல்லார் அக் காலத்தவரே என்பா அடியார்க்கு நல்லார் பதிகத்தின் உரையில் காட்டப்பெறும் ”மக்கள் இழந்த இடும்பையானும்” என்ற (இராமாயண) உத்தர காண்டப் பாடல் இக் காலத்திற்கு முன் தோன்றியது என்றும் கூறுவர். இவர் கலிங்கத்துப் பரணியிலிருந்து சில செய்யுட்களை மேற்கோள் காட்டுவதால் இவர் சயங்கொண்டார் காலத்திற்கும் பின் வாழ்ந்தவர் எனவாம்.

திருஞானசம்பந்தர் தம் தேவாரப் பாடலில், ”கண்ணுளார் கருவூருளானநிலை அண்ணலார் அடியார்க்கு நல்லரே” என்று சிவபெருமானை “அடியார்க்கு நல்லார்“ என்ற பெயரால் அழைக் கின்றார். அப்பெயரைத் தாங்கிய இவ்வுரையாசிரியா சைவ

சமயத்தவர் என்பர். பிறவா யாக்கைப் பெரியோன் என்ற அடிக்கு "என்றும் பிறவாத யாக்கையுடைய இறைவன் என்று இவா எழுதுகின்றார். சிவன் என்று குறிக்க வேண்டிய இடத்தில் "இறைவன்" என்று பொதுப்பெயரைக் குறித்திருப்பதால் சிவபெருமானையே இறைவனாகக் கொண்டவர் இவர் என்பர்.

உரையின் இயல்பு

முத்தமிழ்க காப்பியம் என்று போற்றப்பெறும் சிலப்பதி காரத்திற்கு உரை இயற்றிய இவரை

ஒரும் தமிழொரு மூன்றும் உலகின் புறவருத்தும்

சேரன் தெரித்த சிலப்பதி காரத்திற் சேர்ந்தபொருள்

ஆரும் தெரிய விரித்துரைத்தான்

என்று கூறுகின்றது. சிறப்புப்பாயிரச் செய்யுள் ஒன்று."பருத்தும் நிழலும் எனப் பாவும் உரையும் பொருந்த எல்லாப் பொருளும் தெரிந்து நல்லமிர்தம் பாலித்தான் என்று மற்றொரு செய்யுள் இவரைப் போற்றுகின்றது.

பருந்தும் நிழலும்எனப் பாவும் உரையும்

பொருத்துநெறி எல்லாப் பொருளும்-தெரிந்துஇப்

படியார்க்கு நல்அமிர்தம் பாலித்தான் நன்னுல்

அடியார்க்கு நல்லான்என் பான்"

என்ற செய்யுள், சிலப்பதிகாரத்திற்கு இவர் உரை இயற்றியதை உலக மக்களுக்கு நல்லமிரதம் பாலித்ததாயப் போற்றுகின்றது.

அடியார்க்கு நல்லார் அவையடக்கமாக,

எழுத்தின் திறன் அறிந்தோ இன்சொற் பொருளின்
அழுத்தம் தனியஒன்று அறிந்தோ - முழுந்தும்
பழுதற்ற முத்தமிழன் பாடற்கு உரைஇன்று
எழுதத் துணிவதே யான்

என்று கூறுவதாய் உள்ளது. ஆனால், இவா எழுததின திறன். அறிந்தவர்: இனசொற் பொருளின் அழுத்தம் அறித்தவர் பழுதற்ற முத்தமிழன் பாடறஞ்ச செல்விய உரை கண்டவா என்பதை இவரது உரையே நன்கு உணர்த்தும்.

சிலப்பதிகாரத்தின் அருமை பெருமைகளை எல்லாம் இவரது உரையால்தான் தமிழகம் நன்கு அறிந்தது. இவரது உரை இல்லாமல் போய் இருந்தால் எத்தனையோ அரிய செய்திகள் வெளிப்படாமல் மறைந்து இருக்கும். முத்தமிழ் வித்தகராகிய இயா பண்டைத் தமிழ் இலக்கண இலக்கியங்களில் ஊறித் திளைத்தவர் சிறப்பாக உரை இயற்றும் திறன் வாயத்தவர் இவரது உரையின் வாயிலாக பழந்தமிழரின் பல திறப்பட்ட கலை

வளங்களைப்பற்றி எத்தனையோ அரிய கருத்துகள் வெளி பட்டன் இவர் தரும் ஒளியில் தான் பழந்தமிழ்நகு தெரிகின்றன.

இவருடைய நடை எதுகை மோனைகள் நிரம்பி ஓசையுடன் கவிதைபோல் அமைந்துள்ளது. காதையிலும் முன்பின் நிகழ்ச்சிகளைச் சுட்டி விளக்குவது இவரது இயல்பு மூலத்தில் திசைச்சொல் வந்தால் அதனை ஆராய்ந்து கூறுகின்றார. பழமொழிகள் இடம்பெறின் அவற்றை விளக்குகின்றார். உரைப்பாயிரம், பதிகத்தின் உரை ஆகியவற்றில் காப்பியம்பற்றி ஆராய்ந்து கூறும் கருத்துகள் போற்றத்தக்கவை. ஒவ்வொரு காதையின் ஒவ்வொரு பகுதிக்கும் பொழிப்புரை தந்து அதன் கீழே அருஞ்சொற்பொருள், விளக்கம், நயம், மேற்கோள் இலக்கணம் ஆகியவற்றை தருகின்றார். அணிகளையும் மெய்ப்பாடுகளையும் மற்றக கலைகளையும் வெளிப்படுத்துகின்றார். ஒவ்வொரு காதையின் முடிவிலும் இது இன்ன செய்யுள் என்று ஆராய்ந்து எழுதுகின்றார். வினைமுடிபுகளை மறவாமல் முடித்துக் காட்டுகின்றார். மேற்கோள் தரும் நூலைத் தெளிவாகக குறிப்பிடுகின்றார்.

டாக்டர் சவே சுப்பிரமணியனார், அடியார்க்கு நல்லார் உரைத்திறன்“ என்னும் சிறந்த ஆராய்ச்சி நூலில் மிக விரிவாக, இவரது உரை நலன்களை எல்லாம் நிறனாய்வு முறையில் வெளிப் படுத்தியுள்ளார்.

மறைந்த பகுதி

அடியார்க்குநல்லார் உரை, “ஊர்சூழ்வரி“ என்ற பகுதி வரையில்தான் உள்ளது நடுவே கானல்வரிக்கு உரை இல்லை. இவர் மதுரைக் காண்டம் முழுமைக்கும் உரை கண்டுள்ளார் என்பதற்குச் சான்றுகள் உள்ளன.

அரங்கேற்று காதையில் (3:13, 266 இரண்டு இடங்களில், ”கானல் வரியில் கூறுதும்“ என்கின்றார். அக் காதையில் (3:107) ஓரிடத்தில் ”அழற்படு காதைக் கண்னோ விரித்துக் கூறுகும் என்கிறார். வேனிற் காதையில் (38-9), கட்டுரை காதையுன் விரியக் கூறுவாம்” என்று உரைக்கின்றார். எனவே, இவர் மதுரைக் காண்டம் வரை உரை இயற்றினார் என்பது விளங்கும். வஞ்சிசு காண்டத்திற்கும் உரை இயற்றி இருக்க வேண்டும். அவை இன்று கிடைக்கவில்லை.

காலம் கடந்த குரல்

தமிழிலக்கிய உலகில், இசை நாடகங்களைப்பற்றி வேறு எவரும் அடியார்க்கு நல்லாரைப்போல் அரிய பெரிய விளக்கங்கள் எழுதவில்லை நூல்களைக் கற்றுத் தெளிந்து இவர் தமிழ்க் கலைகளை விளக்குகின்றார்

முத்தமிழக காப்பியமாகிய சிலப்பதிகாரம் இசை நாடகம் லப்பறி கூறும் கருத்துகள் மிகவும் அருமையானனை பிர தமிழ் அல்களில் இல்லாதலை அவற்றிற் அடியார்க்குநல்லார் எழுதியுள்ள உரையும் விளக்கமும் சாட்டியுள்ள மேற்கோளும் மூலத்தைவிட அரியவை, விளசுகமானவை.

இவர், தமிழ்க்கலைகளின் மாண்ப்பை போந்தி விளக்கி உரைத்த குரல் காலங்கடத்து

வந்து தெளிவாக ஒலிக்கின்றது. இருபதாம் நூற்றாண்டில் தமிழிசை மனுமலாச்சிக்கு இவா உரையே பெரிதும் உதவியது தமிழ்க் கலைகனைப் பன் நூற்றாண்டுகளாகக காத்து வழங்கிய பெருமை இவ்வுரைக்கு

அபிரகாம் பண்டிதர் இயற்றிய கருணாமிர்த சாஏமும் விபுலானந்தா இயற்றிய யாழ்நூலும் அவத்திற்குப்பின தமிழிசை பற்றி எழுத்த பல நூல்களும் அடியார்க்குநல்லார் உரையிலிருந்து நினைத்தவையே, தமிழர்க்கு என்று தனியாக இசை உண்டு என்று பெருமைப்படவும், அதன் பழமையை எடுத்துக்கூறவும், தமிழிசை உணர்ச்சி பெற்றுப்பரப்பவும், விரிவான ஆராய்ச்சியில் ஈடுபடவும் இவர் உரையே உஅதுணை புரிந்துவருகின்றது.

திறனாய்வுக் கலைஞர்

மேலைநாட்டுத் திறனாய்வாளரைப்போல, இவா சிவப்படு காரத்தைப் பலவேறு கோணங்களில் ஆராயந்துள்ளார் காப்பிய அமைப்பு, கதையின் கட்டுக்கோப்பு, நிகழ்ச்சி ஒருமைப்பாடு. காப்பிய மாந்தரின் பண்புகள், நூலாசிரியரின் ஆழத்திருக்கும் கவியுனம், செயல் நிகழும் கால எல்லை, இடம் ஆகியவற்றை எல்லாம் அடியார்க்கு நல்லார் நுணுகி நோக்கி ஆராய்தது திறம் படக் கூறுகின்றார்.

காப்பியம். தொடாநிலைச் செய்யுள் என்ற இரு சொற்களின் பொருத்தத்தை உரைப் பாயிரத்தில் ஆய்ந்து கூறு கின்றார்.

”முத்து நூல்களில் காப்பியம் என்னும் வடமொழிப் பெயர் இன்றேனும். நாடகக் காப்பிய நன்னூல் நுனிப்போர் (19:80) என மணிமேகலையுள்ளும் பிறவற்றுள்ளும் கூறிமையானும், சொற்றொடர் நிலை பொருட்டொடர் நிலை என்னும் தொடர்நிலைச் செய்யுடகும் காப்பியம் என்று பெயர் கூறுதலும் யர் கருத்தென வுணர்க.

சிலப்பதிகாரம். பெண்ணின் பெருமையை உலகிற்கு உணர்த்த எழுத்த பெருங்காப்பியம் நூலின்தொடக்கம் முதல் இறுதி வரை அசி காப்பியத்தில் கண்ணகியின் பெருமையே பேசப் படுகின்றது மங்கல வாழ்த்துப் பாடலிலும் முதன் முதலில் சிறப்புக் கூறப்படுகின்றது. அடியார்க்கு நல்லார் காப்பியத்தின உட்கருத்தை நன்றாக உணர்ந்து மங்கல வாழ்த்துப் பாடலில் கண்ணகியை முற்கூறினார். பத்தினியை ஏந்துதல் உட் கோளாகலான்” என்று கூறுகின்றார்.

தமிழகத்தை முழுமையாக நோக்கி மூவேந்தர் நாடடையும் ஆட்சிலையும் உயர்வு தாழ்வின்று ஒப்பக்கருதி, தம் காப்பியத்தில் நெஞ்சத்தை மிக நன்றாக உணாந்த அடியார்க்கு நல்லார் ஆய்ச்சியர் குரவையுள் (31) உள்வரிக் கூத்தினுள் முதலில் பாண்டியனையும் பிள்னர்ச் சோழனையும் அதன்பின் சேரனையும் வாழ்ந்துவதை (29.30 எண்ணுகின்றார் ”இவற்றுள் சேரனை முற்கூறாது பாண்டியனை முற்கூறியது என்னை எனின இது மதுரைக் காண்டம் ஆதலானும், இக் காப்பியம் செய்தவா விழைவு வெறுப்பு அற்ற சேரமுனி ஆதலானும், முடிகெழு வேந்தர் மூவர்க்கும் உரியறு (பதிகம்-65 எனச சாத்தர் கூறினமையானும் எனக்” என்று இளங்கோவடிகளின் உள்ளத்தை அறிந்து போற்றி உரைக்கின்றார்.

கதை நிகழ்ச்சியும் கட்டுக் கோப்பும்

சிலப்பதிகாரத்தில் கலை நிகழ்ச்சியில் சில இடங்கள் சிக்கலாக உள்ளன மேம்போக்காகப் பார்க்கும்போது கட்டுக் கோப்பு இல்லாமல் இருப்பதுபோலத் தோன்றுகிறது. அவ்விடங் கனில் அடியார்க்குநல்லார் தம் ஆராய்ச்சித திறனை வெளிப் படுத்தி உரை கண்டுள்ளார்.

ஊர்காண் காதையில், கோவலன் மதுரையினுள் சென்று அந் நகரிலுள்ள வணிகரைக்கண்டு அவர்களிடம் உதவிபெறும் நோக்கத்துடன் கவுந்தியடிகளிடம் விடை பெறுகின்றான்.

தொன்னகர் மருங்கின் மன்னர் பின்னோர்க்கு

என்னிலை உணர்த்தி யான்வருங் காறும்

பாதக் காப்பினள் பைந்தொடி

என்ற அடிகளில் மிகத்தெளிவாக இளங்கோவடிகள் உணர்த்து கின்றார். மேலும், கவுந்தியடிகள் கண்ணகியை மாதரியிடம் அடைக்கலமாகத் தரும்போது,

மாதரி கேள்டும் மடந்தைதன் கணவன்

தாதையைக் கேட்கில் தன்குல வாணர்

அரும்பொருள் பெறுநரின் விருந்தெதிர் கொண்டு

கருந்தடங் கண்ணியொடு கடிமனைப் படுத்துவர்

உடைப்பெருஞ் செல்வர் மனைப்புகும் அளவும்

இடைக்குல மடந்தைக்கு அடைக்கலம் தந்தேன்

என்று கூறுகின்றார்.

ஆனால், மதுரை நகரினுள் சென்ற கோவலன அறி நகரத்து வணிகர்களைச் சந்திக்கவில்லை அங்கே தங்க எவ்லித் ஏற்பாடும் செய்யவில்லை நகரத்தின் பலவேறு நெடுந்தெருக்களைச் சுற்றிப் பார்த்துவிட்டுத் திரும்பிவிடுகிறான். இவ்வாறு செய்ததற்கும் காரணம் எதுவும் கூறப்படவில்லை. இந்த முரண்பாட்டை அடியார்க்கு நல்லார் நினைத்துப் பார்க்கின்றார். முன் பின் உள்ள நிகழ்ச்சிகளை இணைத்து நோக்குகின்றார். கோவலன் மதுரையில் தங்க எத்தகைய ஏற்பாடும் செய்யாமல் வந்ததை ஆராய்கின்றார். ஊா காண காதையின் இறுதியில், ”இவறறின பத்தர் நிழலிலே திரிந்து, காவலளது பெரிய நகரினைக் கண்டு மகிழ்ச்சி எய்தலாயே பொருந்தழி யறிதலை மறந்து போந்தான் எனக்” என்று எழுதுகின்றார் இளங்கோ அடிகள்,

காவலன் பேரூர் கண்டு மகிழ்வெய்திக்

கோவலன் பெயர்ந்தனன் கொடிமதிற் புறத்தென்

என்றே கூறுகின்றார். ”பொருந்துழி பறிதலை மறந்து” என்று அடியார்க்குநல்லார் தாமே விளக்கம் சோததுக கொள்ளு கின்றனர் இவ்வாறு கூறாவிடின், கதை நிகழ்ச்சிகள்

முரணபடும்.

கோவலன் ஊமையா?: சிலப்பதிகாரக் கதை நிகழ்ச்சியில் மற்றோர் இடத்தில் புதியதோர் சிக்கல் ஏற்படுகின்றது.

கொலைக்களக் காதையில், பொற்கொல்லன் பாண்டிய மன்னள் ஏவிய காவலாளாகளைத் தன்னுடன் அழைத்துக் கொண்டு கோவவன் இருக்கும் இடத்திற்கு வருகின்றான். கோவலனிடம்,

வலம்படு தானை மன்னன் ஏவ

சிலம்பு காணிய வந்தோர் இவர் (158, 59)

எனக் கூறுகிறான் கோவலளிடம் இருந்த சிலம்பைத் நுடன் வந்தவர்க்குக் காட்டுகிறான் கோவலணையும் வெம்பையும் கண்ட "அருந்திறன் மாக்கல்"

இலக்கண முறைமையின் இருந்தோன் இங்கிவன்

கொலைப்படு மகள் அலன்

திறனைப் பலவாறு கூறிக் கதை ஒன்றையும் சுட்டி, நெடுநேரம் பேசுயு காவர்களின் மனத்தை மாற்றுறொன (156-211). பொற்கொல்லபேச்சை ஏறத்தாழ் நாற்பத்தைந்து அடிகளில் இளங்கோ அடிகள் கூறுகின்றார்.

இத்தகைய பேச்சும் நிகழ்ச்சியும் நிகழ்ந்தபோது கோவலன் ஊமையாய் இருந்தான்! மன்னிடம் இருந்து சிலம்பு கரண வித்தவரிடம் தன்னைக கள்வனென்று பொற்கொல்லன் பேசும் பொய்யுளர்களையும் கேட்டுக் கோவலன் வாளா இருந்ததேன்? கோவலன் இங்கே பேசியிருந்தால் என்ன? காவலர்களிடமும் பொற்கொல்லனிடமும், "நானா களவன்? இதுவா திருட்டுச் வெம்பு! வாருங்கள் மன்னனிடமே போகவாம்! அங்கே விளங்கும் உண்மை" என்று வீறு கொண்டு நின்று பேசி இருந்தால் என்ன? அவ்வாறெல்லாம் அவனால் பேச முடியாதா? இளங்கோ அடிகள் இவ்விடத்தில் கோவலனை ஏன் பேசாத ஊமையாய்ப் படைத்துவிட்டார்?

இப்படிப்பட்ட வினாக்கள் அடியார்க்கு தல்வார் உள்ளத்திலும் எழுத்துள்ளன. அதனால்தான்.

செய்வினைச் சிலம்பின் செய்தி எல்லாம்

பொய்வினைக் கொல்லன் புரிந்துடன் காட்ட (16:160-61)

என்ற அடிகளுக்கு, "சிலம்பின் அருமை எல்லாம் கூறுவால போலப் பொய்மையைத் தொழிலாக உடைய கொல்லன் அவரை வேறாக ழைத்துக் கோயிலில் (அரண்மனையில்) இருக்கின்ற தனிச் சிலம்போடே பொருந்தச் சொல்லிக்காட்ட" என்று பொருளும், "புரிந்து எனவே அவளின் (கோவலனிடமிருந்து) நீங்கி என்பதும், உடன் காட்ட எனவே அச் சிலம்போடு ஒரு தன்மையாக ஒப்புக கூறி என்பதும் கொள்ளப்பட்டன" என்று விளக்கம் தருகின்றார்.

இவ்வாறு அடியார்க்கு நல்லார் உரை விளக்கம் கூறி இளங்கோ அடிகள் கூறாத

செய்தியை எடுத்துரைத்துக் கதை டுவிக்கின்றார்.

நிகழ்ச்சியை இணைத்தல்

கதை நிகழ்ச்சியை உற்றுநோக்கி உண்மை உணர்ந்து முன்னும் பின்னும் இணைத்து பார்த்தல் அடியார்க்குநல்லாகின்

புறஞ்சேரி இறுத்த காதையில்,

தென்ற லொடு

பால்நிலா வெண்கதிர் பாவைமேற் சொசிய

வேனில் திங்களும் வேண்டுதி என்றே

பார்மகள் அபாஉயிர்த்து அடங்கிய பின்னர் (25-29)

என்ற அடிகளுக்கு விளக்கம் எழுதும்போது, "இத்துணையும் இவள் (கண்ணகி) புணர்ச்சியின்பம் பெறாமைநோக்கி, பார்மகள் இரங்கிக கூறினான எனைப் புணர்ச்சியில்லாதவாறு எனின், மாதவியோடு புவந்து போதலானும், மதுரைக்குச் சேற்ற்கு ஒருப் பட்ட நெஞ்சின்னை ஆதலானும், மேற கவுந்தியடிகளுடன் வழிச் சேறலானும் யாண்டும் மெய்யுறல் மாத்திரமல்லது புணர்ச்சி இல்லென உனார்க" என்று உரைக்கின்றார்.

துபைமாலையுள், "செங்கா சிவப்ப அழுதாள" (32) என்பதற்கு விளக்கம் கூறுகையில், "ஆண்டு (இந்திர-237 மூகண்ணல் கருங்கணும்") கண்ணகி கருங்கண என்றவர் ஈண்டு செங்கண என்றார், காலையில் தலையளியால் பிறந்த செவ்வி தோன்ற" என்கின்றார்.

இவ்விரு பகுதிகளும் ஒப்பிட்டு நோக்கத்தக்கவை.

நிகழ்ச்சியும் காலமும்

சிலப்பதிகாரக்கதை நிகழ்ச்சிக்குரிய காலத்தை ஆங்காங்கே தம் உரையில் அடியார்க்குநல்லார் சுட்டிச் செல்லுகின்றார். ஆண்டு, இங்கள், நாள் இவற்றைக் கணக்கிட்டுக் கூறுகின்றார்

மனையறம்படுத்த காதை "யாண்டு சில கழிந்தன கண்ணகி தனக்கு" (89,90) என்று முடிகின்றது. அடியார்க்கு நல்லார், "கண்ணகிக்குச் சிலயாண்டு கழிந்தன. எனவே, மாதலிக்குப் பலயாண்டு கழிதலும் கொள்ளப் பட்டது" என்றும், "தாலீராண்டு நடந்ததற் பின்னர் (30:85) என்பதனை இருவர்க்கும் ஆக்கி மாதலிக்கு எட்டின் இறந்த பலயாண்டு சேறலின் கண்ணகிக்குச் சிலயாண்டு கழிந்தன எனப் பொருள் கூறலும் ஒன்று" என்று விளக்குகின்றார்.

பூம்புகார் நகரில் சித்திரை மாதத்தில் இந்திரவிழா நிகழ்தல் (இந்திர-64), மாதவியைப் பிரிந்து கோவலன் கண்ணகியிடம் வருதல், புகாருக்கும் மதுரைக்கும் உள்ள முப்பது காத

தொலைவை (நாடுகாண் 42 ஆறைங்காதம் என்று கோவலன் கூறுதல் நாடுகாண் காதையில்

152 – 155

ஊரிடை இட்ட நாடுடன் கண்டு

காவதம் அல்லது கடயார் ஆகி,

பன்னாள் தங்கிச் செல்நாள்

என்று இளங்கோ அடிகள் கூறுதல், கட்டுரை காதையில்,

ஆடித் திங்கள் பேரிருள் பக்கத்து

அழல்சேர் குட்டத்து அட்டமி ஞான்று

வெள்ளி வாரத்து ஒள்ளெரி யுண்ண

உரைசால் மதுரையோடு அரைசு கேடுறும்

என்று மதுராபடு அறுதல் ஆகிய குறிப்புகளை நுணுகி ஆராய்ந்து அடியார்க்குநல்லார். கதை நிகழ்ச்சிகளைக் காலத்துடன் சேர்த்துக் காணுகின்றார்.

நாடுகாண் காதையில்,

வான்கண் விழியா வைகறை யாமத்து

மீன்திகழ் விசும்பின் வெண்மதி நீங்கக்

காரிருள் நின்ற கடைநாள் கங்குல் (1-3)

என்ற அடிகளுக்குப் பொழிப்புரை எழுதியபின் விரிவாகக் கால ஆராய்ச்சியில் ஈடுபடுகின்றார்.

”வைகறை என்னும் யாமத் திடத்து, வெண்மதியானது விசும்பினின்றும் நீங்கிற்றாகக் கரிய இருள் கடைக்கண நின்ற கங்குற் பொழுது” என்று உரை கூறி, என்பது அந்தச் சித்திரைத் திங்கள் பகுதி நாள்-சோதி. திதி-மூன்றாம் பக்கம், வாரம் ஞாயிறு இத் திங்கள் இருபத்தெட்டில் சித்திரையும் பூரணையும் கூடிய சனிவாரத்தில் கொடியேற்றி “தாவேழ் நாளினும்“ (மணி 18 என்பதனான இருபத்தெட்டு நாளும் விழா நடந்து கொடியிறக்கி வைகாசி இருபத்தெட்டினிற் பூருவ பக்கத்தின் பதின் மூன்றாம் பக்கமும் சோமவாரமும் பெற்ற அனுடத்தில் நாட்கடலாடி ஊடுதலின் வைகாசி இருபத்தொன்பதில் செவ்வாய்க்கிழமையும் கேட்டையையும் பெற்ற நாசயோகத்து நிறைமதிப் பதினாலாம் பக்கத்து வைகறைப் பொழுதிளிடத்து நிலவுபட்ட அந்தரத்து இருளிலே என்றவாறு. அது பூர்வ பக்கமென்பது தோன்ற, ”காரிருள் நின்ற கடை நாள் கங்குல் என்றார்” என்று காலத்தை ஆராய்ந்து முடிவு செய்கின்றார்.

காடுகாண் காதையில் (9) “அன்று, அவர் உறைவிடத்து அல்கினர்“ என்பதற்கு விளக்கம் கூறுகையில், “இங்ஙனம் கூறியது. ஆறைங் காதம் (19:42) என்றமையானும்,

“காவதம் அல்லது கடவார் ஆகி, பன்னான் தங்கிச் செய்நாள் ஒருநாள் (10:1:5- என்றமையானும், சண்டும் “அன்று அவர் உறைவிடத்து அலகினா அடங்ள் என்றம்வானும் சிவநாள சென்ற வழிச் செல்வு ஒழிந்து ஒழிந்து ஆண்டு இந்து ஆறிச்சென்றமை உணர்த்தற்கு எனக கொள்க” என்று உரைக்கின்றார்.

ஆடித்திங்களில் வெள்ளிக்கிழமையன்று ச எரிந்தது என்ற குறிப்பை மனத்தில் கொண்டு, இவர் அதற்கேற்ப மு நிகழ்ச்சிகளுக்குக் காலம் கூறுகின்றார்

புறஞ்சேரி இருந்த காதையில்,

வேனில் வீற்றிருந்த வேய்கரி கானத்து(36)

என்ற அடியின் உரைவிளக்கமாக ”ஆனித்திங்க கடை நாள ஆகலின் “வீற்றிருந்த“ என்றார்” என்று உரைக்கின்றார். ஊர் காண் காதையில்

குடகாற்று எறிந்து கொடிதுடங்கு மறுகில்

என்ற அடி உரையின் கீழ, ”ஆடித் திங்கள் என்பது தோன்றக் குடகாற்றுக் கூறினார்” என்கிறார்.

மாதங்களையேயன்றிக் கதை நிகழ்ச்சிக்குரிய நாட்களையும் இவர் குறிப்பிடுகின்றார். கொலைக்களக் காதையில், கண்லாகி உணவு சமைக்க ஏற்பாடு செய்யப்படுவதைக் குறிப்பிடுகையில் (18.20 ”இந்துணையும் கூறியது இவாகள் சென்ற அன்றிரவு செய்தனவும் மேற் செய்வனவும் என்றும், ”இனி மற்றை நாளைச் செய்தி கூறுகின்றார்” என்றும் கூறுகின்றார்.

நிகழ்ச்சியும் இடமும்

கதைநிகழ்ச்சிக்குரிய இடங்களைப்பற்றியும் இவா சிந்தித துள்ளார் இந்திரவிழவூரெடுத்த காதையில் ”வச்சிர நாடு” என்பதற்குச் (99) ”சோணைக கரை” என்று பொருள் கூறுகின்றார் சோணை என்னும் ஆற்றங்கரையில் இருந்த நாடு வச்சிர நாடாகும். காடுகாண் காதையில்,

கந்தன் பள்ளிக் கடவுளர்க் கெல்லாம்

அந்தில் அரங்கத்து அகன்பொழில் (6-7)

என்ற அடிகளில் குறிப்பிடும் அரங்கம் என்பது “திருவாங்கம்“ என்று எழுதுகின்றார்.

காப்பிய உறுப்பினர் பண்பு

காப்பிய மாந்தர்களின் பண்பையும் அடியார்க்குநல்லார் குறிப்பிடுகின்றார்.

பொருள்தேடச் செல்லும் தலைமகன் தன்னுடன் மனைவியை அழைத்துச் செல்லும் வழக்கம் இல்லை. கோவலன மனைவியை அழைத்துச் செல்லும் அவ்வழக்கத்திற்கு மாறாக கண்ணகியுடன் மதுரை செல்கின்றான். சிறந்த குடியில் பிறந்தவர் இவ்வாறு செய்யார் என்று கோவலன உணர்ந்து வருந்துவதாய் அடியார்க்குநல்லார் குறிப்பிடுகினறார். ஊர் காண்கதையில் (17) கோவலன் கவுந்தியை வணங்கி நெறியின் நீங்கியோர் நீர்மையேன் ஆகி

சிறுமையுற்றேன் என்று வருந்துகின்றான். இந்த அடிக்கு விளக்கம் கூறும்போது ஒழுக்கமுடைய விழுக்குடிப் பிறந்தோர் நாணுமகளிரோடு நீணெறிச் செல்லார் என்பதுகருதி நெறியின் நீங்கியோர் நீர்மையேனாகி என்றான் என உணர்க என்று உரைக்கின்றார்.

கவுந்தியடிகளுகுச் சாபம் இடும் தவலியை இருந்ததே தவிர மக்களுக்கு எதிர்காலத்தில் வர இருக்கும் துன்பத்தை முன்னரே உணர்த்துகூறும் ஆற்றல் இல்லை என்பதை அடியார்க்கு நல்லார் உணர்த்துகின்றார். நாடு காண் காதையில், அங்கு ஒழிக என ஒழியில் என்ற அடிக்கு விளக்கமாக, ஒழிக என ஒழியிர் என்பதற்கு இவர்க்கு எதிர்வது அறிந்து கூறினார் மனின் ஒரு பொழுதிற்கு இத்துணை ஓம்படை எல்லாம் கறிவேண்டா ஆகலானும் இவர்க்குத் தவப்பயனாலே சமித்தவனர் காலணாச்சி இன்மை உணர்க்" என்று சிறப்பாக உரைக்கின்றார். மேலும், கவந்தியடிகள், மனைவியை அழைத்துக் கொண்டு கணவன் பொருளதேடச் செல்லுதலை விரும்பாதவர் என்றும் பண்டைய வழக்கத்தைப் புறக்கணிக்க விரும்பாதவர் என்றும் இவர் கருதுகின்றார். நாடுகாண் காதையில் (35, உரியது அன்று ஈங்கு ஒழிக என ஒழியீர்" என்று கவுந்தியடிகள் கோவலனுக்குக் கூறும் அறிவுரைக்கு அடியார்க்கு நல்லார், "குடி பிறப்பிற்கும் இவனை (கண்ணகியை) ஒருங்குகொண்டு சேறல் ஏலாது ஆதலின் இனிச் செவலை ஒழிமின் என்று யாம் ஒழிப்பவும் ஒழ்க்கின்ற்யிர்" என்று பொருள் உரைக்கின்றார்.

கோவலன் கொலைக்குக் காரணமாக இருந்த பாண்டியன் கொடுங்கோலன் அல்ல என்பதை அடியார்க்கு நல்லார் "என் கோதைதன் காற்சிலம்பு அடிபட்ட கள்வன் கையதாயின் கொன்று கொணர்க எனினும் தன்கண் (பாண்டிய மன்னனிடம்) கொடுங்கோன்மை இன்மை உணர்க" (கொலைக்-153) என்று கூறுகின்றார்.

கனாத்திறமுரைத்த காதையிரல் சிலம்புள கொண்ம் என்பதற்கு விளக்கமாகப் பின்வருமாறு கூறிக் கண்ணகியின் உயர்பண்பை வெளிப்படுத்துகின்றார். சிலம்புள என்றாள். இவை ஒழிந்த கலன் எல்லாம் தொலைதலால், இவை அணியாதிருத்தலின் அவனறியாளாகக் கருதினும் அவன் தளர்ச்சி கூறுதலால், இவையுண்மை நினைந்து கூறினான் என்க. புலந்து கூறினாள் எனில் கற்பின் தன்மை அன்றாம்.

பிறர்உரை கட்டல்

அடியார்க்குநல்லார் தமக்குமுன் இருந்த உரைகளையும் கருத்துகளையும் தேவையான இடங்களில் கட்டுகின்றார். இந்திரவிழவூரெடுத்த காதையில் (157), ழூஇனி "அவைக

கணந்தார் ஐந்து (157-அரும்பதவுரை) எனக்காட்டுவா அரும்பதவுரையாசிரியா" என்று குறிப்பிடுகின்றார். துபை மாலையுன் (2-7) "முதுமகள் போயினாளுடைய சாயலான அரவங் கேட்டு வந்து அவ்விடத்து நின்றாள் உள்ள என ஐயை மேல் ஏற்று வாருமுளர்" என்கிறார். இன்னும் வேறு சில இடங்களில் பிறா கொண்ட பாடத்தையும் பொருளையும் சுட்டிச் செல்கின்றார்.

உரைநடைச் சிறப்பு

அடியார்க்குநல்லார் உரை, பல இடங்களில் ஓசை இன்பம் பயக்கும் சிறந்த கவிதைபோல உள்ளது. பதிகத்தின் உரையில் இனங்கோ அடிகள் துறவுபூண்ட வரலாற்றினைக் கவிதைச் சுவை சொட்டச் சொட்ட எழுதுகின்றார். அத்தகைய இடங்கள் இன்னும் பல இவர் உரையில் உள்ளன. சான்றுக்கு ஓரிடத்தைக் காண்போம்.

ஒழுக்கம் உடைய விழுக்குடிப் பிறந்தோர் நாணுடை மகளிரொடு நீணெறிச் செல்லார்" (ஊர்காண்-17) என்று ஓசை நயம் தோன்ற எழுதுகின்றார். அவ்வுரைப் பகுதியை,

ஒழுக்கம் உடைய விழுக்குடிப் பிறந்தோர்

நாணுடை மகளிரொடு நீணெறிச் செல்லார்

என அகவாற்பாவின் ஈரடியாக அமைக்கலாம். இத்தகைய சிறப்பு வாய்ந்த உரைப்பகுதி பல இடங்களில் உள்ளன.

பருந்தும் நிழலும்

அடியார்க்குநல்லார், பருந்தும் நிழலும் எனப் பாவும் உரையும் பொருந்த அமைத்தவர். மூலத்தோடு உரை நன்கு பொருத்தி வருவதைக் கீழே வரும் பகுதிகள் உணர்த்தும்.

நீல மேகம் நெடும்பொற் குன்றத்துப்

பால்விரிந்து அகலாது படிந்தது போல

ஆயிரம் விரித்தெழு தலையுடை அருந்திறற்

பாயற் பள்ளிப் பலர்தொழுது ஏத்த

விரிதிரைக் காவிரி வியன்பெரும் துருத்தித்

திருஅஆளி மார்பன் கிடந்த வண்ணமும் (காடுகாண் 35-40

லகேல் பொபக்கங்க விரிந்து மிகாமல் படித்ததண் அதனையொப்ப தனது படம் விரித்து எழுந்த ஆயிரம் தலையையும் கிட்டுதற்கரிய திறலையும் உடைய பாம்பணைப் பள்ளிமீதே தேவர்கள் பலரும் தொழுது ஏத்தத் திரை விரியும் காவிரியாற் றிடைக்குறையிலே திருமகள் பொருத்தித் திருமயையுடையோன் கிடந்த கோலம்.

பொங்கி எழுந்தாள் விழுந்தாள் பொழிகதிர்த்

திங்கள் முகிலோடும் சேண்நிலம் கொண்டெனச்

செங்கண் சிவப்ப அழுதான்தன் கேள்வனை

எங்கணாஅ என்னா இனைத்தேங்கி மாழ்குவாள் (துன்பமாலை-30-33)

தனது ஆத்தாமவசமிழந்து நிலத்தினின்றும் எழுந்து மதிக்கும்முந்து நிட்க்கின்றவன் எங்களம் வீழந்து இடந்தான் எனலேஅதிரையுடைய நீங்கள் பொழிய கால்கொண்டு வீழ்த்த புயலோடு பெரிய நிலத்தில் வீழ்தலைக் கொண்டதென விடிந்தான் விடிக்காதன்முன்னர்

வருகெண்ட் பொருந்துதலாக செல்வரிபாய்ந்தசிலக்கும்படி தன் கொழுதல்லா எவ்விடத்தாய்தான் என்னா வகுத்திப் பொரும் மயங்கி யாவும் தோன்றா என்று அழுதாள்"

நயமும் விளக்கமும்

அடியார்க்குநலவார் சிவ அடிகளுக்குப் பொருள் விளக்கம் கூறி நயம் கூறுகின்றார்.

.....என் காற்சிலம்பு

கொள்ளும் விலைப்பொருட்டால் கொன்றாரே ஈதொன்று

என்பதற்கு, "என் காற்சிலம்பு என்றாள்-தான் அரசன்: யான ஒரு வணிகள் மனைவி, என் காவணியின் ஒன்று பெற்ற விலை தாராமைக் கன்வன் என்று பெயரிட்டுக் கொன்றார்களே என்று. இந்தோர் அதியாயம் இருந்தபடி என்ன என்று தெளிந்து கூறினான கொன்றாரே எனப் பன்மை கூறினாள் அரசனோடு அமைச்சரையும் கருதி" என்று நயம் கூறுகின்றார்.

துன்பமாலையில் நெடுமால் (4) என்ற சொல்லுக்கு "அந்தர் வானத்து எம்பெருமான்" என்று பொருள் உரைக்கின்றார்.

ஆய்ச்சியர் குரவையில் முந்நீர் (31) என்பதற்குத் தரும் விளக்கம் போற்றத்தக்கதாய் உள்ளது:

"முந்நீர்-சுடன், அருபெயா, ஆற்று நீர், ஊற்று நீர், மேவ தீர் இவ்விரண்டும் இவ்வழி ஊற்றுநீரும் இன்றாம் ஆகலானும் இவற்றை முத்தீர் என்றல் பொருத்திய தன்று

"முதியநீர் எனின், நெடுங்கடலும் தன்னீர்மை குன்றும்

ஆனால், முந்நீர்க்குப் பொருளயாதோ எனின், ச்செய்கை யுடைய நீர் முத்திர் என்பது முச்செய்கையாவன் மண்ணைப் படைத்தலும் மண்ணை அழிநதலும் மண்ணைக காத்தலும் ஆம்"

கொலைக்களக் காதையில் வரும் குமரி வாழை" என்ற சொல்லுக்கு விளக்கம் எழுதுகையில், "குமரி வாழை-இது பெயரின் வந்த சமாதி என்னும் அலங்காரம்" என்கிறார். சமாதி சபதைத் தண்டியலங்காரம்.

உரிய பொருளன்றி ஒப்புடைப் பொருள்மேல்

தரும்விளை புணர்ப்பது சுயாதி யாகும் (தண்டி-25)

என்று கூறி வினைபற்றி வருவது என்று உரைக்கின்றது. பெயர் பற்றியும் வரும் எனகிறார் அடியார்க்குநல்லார்.

கனாத்திறம் உரைத்த காதையில் வரும் "இடுதேன் இடுதல் என்பதற்கு, "தேளிடப் படுபவர் காணாமே தேளல்லாதது ஒன்றை மறையக கொடுவந்து மேலே இட்டு அவரைக் கலங்கப் பண்ணுதல், பாய்சசுத் தேன் என்பாரும் உளர்" என்று விளக்கம் உரைக்கின்றார்

வேனிற் காதையில் "கடல்விளையாட்டினுள் கோவலன ஊட" (14, 15) என்பதற்கு, "விளையாட்டினுள் என்றது விளையாட்டுப் பூசல் வினையாயிற்று என்னும் வழக்குப் பற்றி" என்று பழமொழி ஒன்றினை நினைவூட்டுகின்றார்.

புறஞ்சேரி இறுத்த காதையில், "இடிதரும் உளியம்" (32) என்பதற்கு ""கரடி இடிக்கும்" என்று பொருள் உரைத்து "இடிப்பு- அதிர்ப்பு: உற் டட்ட டட்டெனப் பற்பறை கொட்டல்" என்று கரடியின் ஒலியைக் கூறுகின்றார்.

பலபொருள் கூறுதல்

சில வரிகளுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்களையும் அடியார்க்குநல்லார் தருகின்றார். சிவேடையாக அமைந்த வற்றையும் தெளிவுபடுத்துகின்றார்.

வேட்டுவ வரியில்

இட்டுத் தலைணண்னும் எயினர் அல்லது

கட்டுத்தலை போகாத் தொல்குடி (20-21)

என்ற இரு அடிகளுக்கு மூன்றுவகையாகப்பொருள் கூறியுள்ளார்.

1 " தாம் சுட்டி ஞர் தலைத்ை தாமே அறுத்திட்டு எண்ணுவது அல்லது கைஞர் சுட்டி எண்ணுதல் அவரிடதது முடிவு போகாமைக்குக் காரணமாகிய எயினர் தொலகுடி

2. தலைக அரிந்துகைப் பிறர் எண்ணப் படுவது அல்சமத்தில் சுடப்பட்டு அவம் போகாக்குடி
3. அரசன் சுட்டிய மாற்றரசர் தலையைப் பிறரிடத்துப் போகவிடாக்குடி

ஊர்காண் காதையில்

நுதல்விழி நாட்டத்து இறையோன்

என்ற அடிக்கும் பின்வருமாறு மூன்று பொருள் உரைக்கின் றார்:

1. இறைவி கண் புதைத்தபொழுது நெற்றியில் புறப்ப விட்ட கண்ணையுடைய இறைவன்.

2.நுதலின் இமையா நாட்டம்.

3.காமனை விழித்த நாட்டம்

புறஞ்சேரி இறுத்த காதையில்,

கருநெடுங் குவளையும் ஆம்பலும் கமலமும்,
தையலும் கணவனும் தனித்துறு துயரம்
ஐய மின்றி அறிந்தன போலப்
பண்ணீர் வண்டு ண்டு பரித்தினைந்து ஏங்கி,
கண்ணீர் கொண்டு காலும நடுங்க (184-188)

என்ற பகுதியில் கண்ணீர் கொண்டு, காலுற நடுங்க என்ற சொற்கள் இருபொருள்படும்படி

அமைந்துள்ளன. அடியார்க்கு தல்லார் இரு பொருளும் தருகின்றார். ”கண்ணீரைக் கொண்டு, காலுர நடுங்கா நிற்க” என்றும் ”கண்ணீர்-கள்ளாகிய நீர் எனவுமாம். காலுற-காலிவே உற எனவும், காற்று உறுதலால் எனவும் ஆம்” என்றும் இருவேறு பொருளைத் தருகின்றார்.

சொல்லும் பொருளும்

அடியார்க்கு நல்லார். சொற்களுக்குச் சிறந்த பொருள் உரைக்கின்றார் அவற்றுள் சிலவற்றைக் கீழே காண்போம்.

வாளைப் பகுவாய் வணக்குறு மோதிரம்

வாளை மீனினது அங்லாத்தவ வாக்குத்திழவிக்கும் நெளி(கடலாடு - 94)

பட்டினி நோன்பிகள்- இரண்டு உவாவும் அட்டமியும் முட்டுப்பாடும் பட்டினி விட்டுண்ணும் விரதிகள் சிறு குரங்கு -மெலிந்த குரங்கு கடைதான்-மரணம் அடைக்கல 163.90

கோளிப்பாக வெளிப்படை கோளி-பூலாது காய்க்கும் மரம் பாசுல்- பலர் (கொலைகைகள்-24)

”வறுமொழியாளர்-பயனில் கூறுவோர் வமப்பு பரத்தா புதிய காம நுகர்ச்சியை விரும்பும் பும் காமுகர் பரத்தையை நுக வானும் பரத்தன், குறுமொழி-சிறுசொல் ஆவது பிறரை இகழ்ந்து கூறுதல், நெடுதகை புக்கு- வெடிச் சிரிப்புக்கு உடபட்டு கொலைக்கன-63-70.˙.

சுடு நோக்கு-சுடுவது போலவும் நோக்கு என்றது கொள்ளிக் கண்” இந்திர-ர

மாறுபட்ட கருத்து

அடியார்க்கு நல்வார் சிகண்டி என்பவரை அகத்திய முனிவரின் மாணவர் உரைப்பாயிரத்தில் குறிப்பிடுகின்றார் “குறு முனிபால் கேட்ட மாணாக்கர் பன்னிரு வருள் சிகண்டி என்னும் அருந்தவமுளி“ என்று கூறுகிறார் சிலா சிகண்டியை அகத்தியா மாணவராகக் கொள்ளவில்லை தொல் காப்பியன், அதங்கோட்டாசான், துராலிங்கள், செம்பூட்சேய், வையாபிகள், வாய்ப்பியன், பனம்பாரனார், கழாரம்பா. அலிதயன், காக்கை பாடினியார், நற்றத்தன், வாமனன் ஆகிய பன்னிருவரை அகத்தியர் மாணவர் என்பா

“போற்றி“ என்ற சொல்லுக்குப் பலர் பலவிதமாய் இலக்கணம் கூறுகின்றனர். அடியார்க்குநல்லார் இச்ராற்று வியங் கோளாகக் கொண்டு “போற்றுவாயாக“ என்று பொருள் கூறுகின்றார்.

தனிவெண்பாக்களும் உரையும்

சிலப்பதிகாரத்தில் உள்ள சில காதைகளின் கீழே தனி வெண்பாக்கள் (ஒன்றோ இரண்டோ) இடம் பெற்றுள்ளன. இவற்றை இயற்றியவர் இளங்கோ அடிகளே என்று சிலரும், பின்னால் சிலப்பதிகாரத்தைக் கற்றவர்கள் எழுதிச் சேர்த்தவை என்று சிலரும் கூறுவர்.

சிலப்பதிகார் வெண்பாக்கள் சிலவற்றிற்கு அரும்பத வுரையும் அடியார்க்கு நல்லார் உரையும் இருப்பதால் அவை அ வுரையாசிரியர்களுக்கு முன்னதே தோன்தியவை என்பது கண்டு தோன்றியவை என்னலாம் அவற்றை இங்கே விரிவாக

கொலைக்களக் காதையில் கீழ்.

நண்ணும் இருவினையும் தண்ணுமின்கள் நல்லறமே

கண்ணகி தன்கேளவன் காரணத்தால்- மண்ணில்

வளையாத செங்கோல் வனைந்ததே பண்டை

விளைவாகி வந்த வினை

என்ற வெண்பா கள்ளது இதற்கு அரும்பதவுரையாசிரியா "நண்ணும் கண்ணகி தன் கேள்வன் காரணமாக வனைந்தது. இது பண்டை வினை இருவினையும் தண்ணும் ஆதலால் உலகத்திர் அறஞ்செய்மின் என்று இளங்கோ அடிகள் அருளிச் செய்தது என்றும் அடியார்க்கு நல்லார் உலகத்தீர்! நவ்வினையே செய்யுமின்கள் என்று அகள் கூறினார் என்க" என்றும் கூறியுள்ளார். இரு பெரும் உரையாசிரியர்களும் மேலே காட்டிய வெண்பாவை இயற்றியவர் இளங்கோ அடிகள் என்றே கூறியுள்ளனர்.

மதுரைக் காண்டத்தின் இறுதியாகிய கட்டுரைக் காதையின் கீழே

தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுவாளைத்

தெய்வந் தொழும்தகைமை திண்ணிதால்-தெய்வமாய்

மண்ணக மாதர்க் கணியாய கண்ணகி

விண்ணகமா தர்க்கு விருந்து

என்ற வெண்பா உள்ளது இவ்வெண்பாவினை இயற்றியவா இளங்கோ அடிகள் என்றே அடியார்க்கு நல்லார் கருதுகின்றார் ஊர்சூழ்வரியில் (24), பெருந்தெய்வம்-தெயவத்திலும் பெரியது. கற்புடைத் தெய்வம் என்னை? தெய்வந் தொழாஅள் கொழுத்து றொழுவாளை, தெய்வந் தொழும் தகைமை திண்ணமாய் எணவும் கூறினமையின்" என்று விளக்கம் தரும்போது மேலே கண்ட வெண்பாவைக் காட்டுகின்றார்.

அந்திமாலைச் சிறப்புச்செய் காதையின் இறுதியில் "கூடினார் பால் நிழலாய்" என்ற வெண்பாவும், கடலாடுகாதைக்கு அடியார்க்கு நல்லார் உரைக்குப்பின் "வேலை மடற்றாழை" என்ற வெண்பாவும் உள்ளன. இவ்விரண்டு வெண்பாக்களுக்கும் அடியார் நல்லார் உரையின்மையால் பின்னர்த் தோனறியவை என்னலாம்.

வேனிற்காதையின்கீழே செந்தாமரை விரிய" எதை வென்பாவும், ாடினீர் எய்லாம் என்ற வெண்பாவும் காணப் படுனெறன. அவற்றுள் இரண்டாவதாக உள்ள "ாடினீர் என்ற வெண்பாவுக்கே அடியார்க்குநல்லார் உரை உள்ளது. ஆதலின அப் பாடல் அவருக்கு முன்னும், "செந்தாமரை விரிய என்ற பாடல அவருக்குப் பின்னும் தோன்றி இருக்கவேண்டும்.

கனாத்திறம் உரைத்த காதையின் கீழ உள்ள காதலி கண்ட என்ற வெண்பாவிற்கும் அடியார்க்குநல்லார் உரை உள்ளது.

மேற்கோள் நூல்கள்

நச்சினரானியா தாம் கூறும் மேற்கோள் எந்த நூலில் உள்ளது என்று கூறுவதில்லை என்றார் பிறரும், என்பவை போல. எனவும் கூறுவண காண்க என்று கூறி மேற்கோள் காட்டுவார். ஆனால், அடியார்க்குநல்லார் தாய் கூறும் மேற்கோன எந்த தூவைச் சோந்தது என்று பெயர் கூறியே விளக்குவார். மிகச சில இடங்களில் மட்டுமே மேற்கோள எந்த நூலில் உள்ளது என்று குறிப்பிடாமல் செல்வார் மேற்கோள் கூறும தூல அவற்றின் உட்பகுதி, பாடல் ஆகியவற்றையும் இவர் குறிப்பிடுகிறார். ஆய்ச்சியா குரவையுள், கொல்லையஞ்சாரல் என்ற பாட்டு (20) உரையில், "கலியுன் முல்லைத் திணையினகண ஆறாம் பாட்டினுள், "கழுவொடு, வியன்புலத்தார்" (கலி 106:1-5) எனக் கருவி கூறினமையானும்" என்று மிகத் தெளிவாக மேற்கோளை இடம் சுட்டிக் காட்டுகின்றார் ஏனைய உரையாசிரியர்களிடம் இல்லாத பண்பு இது

உரைப்பாயிரத்துள், "இவ்வியலிசை நாடகப் பொருள் தொடாநிலைச் செய்யுளை அடிகள செய்கின்ற காலத்து இயற்றமிழ்நூல் தொலகாப்பியம் ஆதலானும் பிறர் கூறிய நூல்கள் திரம்பா இயக்காத்தன ஆதலானும் அத்தூவின் முடிபே இதற்கு முடிபு என்று உணாக" என்கிறார் இவா

பதிகத்தின் உரையில் இவா, "பொருளாராய்ச்சி எண் வகைர் அவை திணை, பால், செய்யுள், நிலம், காலம், வழு, வழககு, இடம் என்பன" வு கூறி அவற்றுள் ஒவ்வொன்றினையும் விளக்குகின்றார் அவற்றிற்கு மேற்கோள சிலப்பதிகாரச் செய்யுள்களிலிருந்து தருகின்றார் சிலப்பதிகாரம் முழுமையும் இவா நெஞ்சிற்குள் நுழைந்து ஏற்ற மேற்கோள்களாக வெளிவருகின்றது, அடியார்க்கு நல்லாரின் அண்ணிய புலமைத் திறனும், நினைவாற்றலும் நம்மை வியக்கச் செய்கின்றன.

திருக்குறளை மேற்கோளாக காட்டும் இடங்களும் உரை தடைப்படுத்தும் இடங்களும் உள்ளன. மங்கல வாழ்த்துப் பாடலில் மணதேய்த்த"என்ற அடிக்கு பொருள் எழுதிய பின், மண்தேய்த்த என்றார். புறழ்வரைப் பூமி சிறுகலான் இடத்திற் சிந்து என்றார் வள்ளுவனாரும்" என்று கூறுகின்றார இல்விடத்தில் இவர் குறிப்பிடும் குரன் இனைதென்று டாக்டர் உவே சாமிநாதையர் குறிப்பிடவில்லை ராய்சிறிஞர் மு இராகம் ஐயங்கார், இங்கே குறிப்பிடப்படும் குறள்,

ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்

பொன்றாது நிற்பது ஒன்றில்

என்பதாகும் என்று கூறியதால் ஒரு கருத்து வழங்குகின்றது.

நாடுகாண் காதையில் கவுத்தி வம்பப்பரத்தைக்கும் வறுமொழியாளனுக்கும் சாப விடை தரும் பகுதிக்கு (241-2 எழுதிய விளக்கத்தில் "மக்கட் பிறப்பை ஒரு வார்த்தையின் இழந்து இழிபிறப்புற்றார் என்றவாறு எனவே யாகாவராயினும் நாகத்தல் வேண்டும் என்பதாயிற்று" என்று திருக்குறளை, உர தடைப்படுத்துகின்றார்

மனையறம்படுத்த காதையில் கோவலன் கண்ணகியை,

மாசறு பொன்னே வலம்புரி முத்தே

காசறு விரையே கரும்பே தேனே (73-4)

என்று பலவாறு பாராட்டுகின்றான். இவ்வரிகளுக்கு கட் இனிமையான மாசறவோடிய பொன்னை ஒப்பாய் ஊற்தின் இன்பத்தான் முததை ஒப்பாய் சுவையின் இனிமையாற் கரும்பை ஒப்பாய் இனிய மொழியை யுடைமையால தேனை ஒப்பாம் என்று கூறி இவற்றால் சொல்லியது, ஒளியும் ஊறும் நாற்றமும் சுவையும் ஓசையும் ஆகலின்,

கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்

ஒண்டொடி கண்ணே உள (1101)

என நலம் பாராட்டப்பட்டன" என்று விளக்கம் உரைக்கின்றார்.

மனையறம்படுத்த காதையில்,

விரைமலர் வாளியொடு வேளில்வீற் றிருக்கும்

நிரைநிலை மாடத்து அரமியம் ஏறி

என்பதன் உரையின் கீழ் இ.ந்து உதாரம் என்னும் அவங்காரம் என்னை!

உதாரம் என்ப தோதிய செய்யுளிற்

குறிப்பின் ஒருபொருள் நெறிப்படத் தோன்றல்

என்பது அணியியலாகலின் என்று உரைக்கின்றார். இங்கே அணியியல் என்று இவர் குறிப்பிடும் குத்திரம் தண்டியலங் காரத்தில் (பொது20 உஇவர்காலத்தில் தண்டியலங்காரத் திற்கு அணியியல் என்று வேறு பெயர் வழங்கிற்று என்பதா? அணியியல் என்ற ஒரு நூல இருந்து அறிலுள்ள சூத்திரங்களைத் தண்டியலங்காரம் எடுத்துக் கொண்டது என்பதா? இவ் வினாக களுக்குத் தக்க விடை காண இயலவில்லை.

இந்திரவிழவூர் எடுத்த காதையில் (8) பல இடங்களில் கலிங்கத்துப் பரணிச் செய்யுள்களை இவர் மேற்கோள் காட்டு ன்றார் நீண்ட பலிபீடத்தில் என்றதாழிசையைகோயில் மேற்கோள் காட்டி "என்றாற் போல் வரும் விருத்தச் செய்யுள்" எனகினறார்.

மோடி முன்றலையை யைப்பரே

முடிகுலைந்த குஞ்சியை முடிப்பரே

ஆடிநின்றுகுரு திப்பு துத்திலதம்

அம்முகத்தில் அமைப்பரே

என்பது கவிச்சக்கர விருத்தி என்று கூறுகின்றார். இ. செய்யுள் கலிங்கத்துப் பரணியில் இல்லை கவிச்சக்கரவிருத்திச் செய்யுள் என்று கலிங்கத்துப் பரணிச் செய்யுளை இவர் கூறுவதேன்? மேலே கண்ட செய்யுள் கவிச்சக்கரவிருத்தியைச் சேர்ந்ததா? இத்தகைய

கேள்விகளுக்கு வருங்காலம் விடை கூறும்.

"அடிக்கமுத்தின" என்ற கலிங்கத்துப் பரணிச் செய்யுளையும் (கனிங் கோயில் மேற்கோள் காட்டுகின்றார்.

கலிங்கத்துப் பரணி மேற்கோள் பாடல்கள் அடியார்க்கு நல்லார் காலத்தை அறியத் துணைபுரிகின்றன.

வேனிற் காதையின் தொடக்கத்தில் மூன்று தமிழ்ச் சங்கத்தின் வரலாறு, கடய கொண்ட தொடக்கத்தில் இருந்த நாடுகளின் பெயா ஆகியவற்றை மிக விரிவாகக் கூறுகின்றார். மேலும், அதனைத் தொடர்ந்து, இந்து என்னைப் பெறுமாறு எலின், கணக்காயனார் உரையாசிரியராகிய இளம்பூரண அடிகள் முகவுரையானும் பிறவாற்றானும் பெறுதும் உரைக்கின்றார்.

இவ்வுரைப் பகுதியால் உரையாசிரியர் என்பவர் இளம் பூரணரே என்ற உண்மையும் அவர் ஒரு துறவி (அடிகள) என்ற செய்தியும் வெளிப்படுகின்றன. இளம்பூரணர் எந்த நூலின் முகவுரையில் இவ்வாறு கூறினார் என்பது புலனாகவில்லை. இன்று அச்சாகியுள்ள தொல்காப்பியம் இளம்பூரணர் உரையின் முகவுரையில் முச்சங்க வரலாறோ, தென்னாடு கடல்கொண்ட செய்தியோ கூறப்படவில்லை அடியார்க்குநல்லார் கூறும் செய்டு மேலும் ஆராய்தற்குரியது.

அடைக்கல காதையில் கூறப்படும் கீரியைக் கொன்ற பார்ப்பனத்தி கதையில்அவள் கணவன் தந்த "வடமொழி வாசகம் செய்த தல்லேடு கூறும் செய்தியாக பஞ்ச தந்திரம் எனர் வடமொழி நூலிலிருந்து சுலோகத்தை எடுத்துக் காட்டுகின்றார்.**(பஞ்சதந்திரம்: 1512 ஸ்லோகம்)**

வடமொழியில் உள்ளஞ்ச தத்திரம் கூறும்யைக கொன்ற பார்ப்பனத்தி கதையும் சிலப்பதிகாரம் கூறும் கதையும் ஒன்றே என்பது அடியார்க்குநல்லார் கருத்துப் போலும்! கருத்திய வையாபின்னை பஞ்ச தந்திரத்திற்கு பின்னால் தோன்றியது சிவப்பதிகாரம் என்பர். அடைக்கல காதையில் நூலையும் (9.5.கொல கனக் காதையில் களவு நூலையும் குறிப்பிடுகின்றார். கொன்றையன் என்ற திருக்கோவையார் பாடலையும் இவர் மேற்கோள் காட்டுகின்றார். (கொலை,118-33

சங்க நூல்களிலிருந்தும், மணிமேகலை, சித்தாமணி, வளையாபதி பெருங்கதை முதலிய காப்பியங்களிலிருந்தும் புறப் பொருள் வெண்பாமாலை போன்ற இலக்கணங்களிலிருந்தும் இவர் பல மேற்கோள் தருகின்றார்

பல்கலைப் புலமை

இளங்கோ அடிகள் பல கலைகளை அணுபிக கற்ற கல்ல செய்வர் சிலப்பதிகாரத்தில் தொட்ட இடமெல்லாம் கலைமணம் கமழும் இளங்கோ அடிகள் முத்தமிழ் கற்றுத் துறைபோகிய வித்தகர் அவர் நூலுக்கு உரை இயற்றிய அடியார்க்குநல்லார், அவரது புலமைப் பரப்பைக் கண்டு வியந்தவர். அவர் கூறும் கலைவிளங்கிக் கொண்டவர்

அடியார்க்குநல்லார் அரங்கேற்று காதைக்கு எழுதியுள்ள விளக்கம்

துண்கலைக்களஞ்சியம் அது அருங்கலைகளின் உறைவிடம் அக் காதையின் உரையில் கூத்தி, ஆடலாசிரியா, இசையாசிரியர், கவிஞர், தண்ணுமையோன், யாழாசிரியன், ஆகியோருடைய அமைதியும், அரங்கில இலக்கணம், தலைக்கோல் அளமதி அரங்கிற புகுந்து ஆடுகின்ற இயல்பு ஆகியலையும் மிகச் சிறப்பாக விளக்கமான மேற்கோள்களுடன்

இந்திரவிழவூர் எடுத்த காதையில் ஆடை அணிமணிகளின் வகைகள் கூறப்படுகின்றன.

கடலாடு காதையில் ஒப்பனை வகைகளை விரித்துரைக்கின்றார். ஆடல்பாடல்களின் இலக்கணமும் இசைகளின் அமைப்பும் கூறுகின்றார்

வேனிற்காதை உரையில் ஆடற் கலைகளுக்கு விளக்கங் கூறுகின்றார். ஊர்காண் காதையில் தவமணிகளைப் பற்றிய இலக்கணங்களை உரைக்கின்றார்.

ஆய்ச்சியா குரவை உரையில் குரவைக் கூத்திற்கு நல்ல விளக்கம் தருகின்றார்.

சமண சமயக்கொள்கை இடம் பெறும் இடங்களில் அச் சமய நூல்களை நன்கு அறிந்து உரை எழுதுகின்றார் "பட்டினி நோன்பிகள் என்பதற்கு இவர் கூறும் விளக்கம் இதற்கு ஒரு "தமது தரிசறது (சாத்திர நூல்களில்) கடியப்பட்ட வாத்தால் தேனுண்டலைப் பரிவரிக்க என்றதாம். எனவே, ஊனையும் உட கூறிற்றாம். மேலும், இவ்வாறு வருவன் கொள்க" என்று உரைக்கின்றார்.

வினாக்கள்

அலகு – 5

உரையாசிரியர் அடியார்க்கு நல்லார்

ஒரு மதிப்பெண் வினாக்கள்

1.நிரம்பையர் காவலன் என்று அழைக்கப்படக் கூடியவர் ?.

அ).அரும்பதவுரையாசிரியர் **ஆ).அடியார்க்கு நல்லார்** இ).தெய்வச் சிலையார் ஈ).இளம்பூரணர்

2.அடியார்க்கு நல்லாரை ஆதரித்த வள்ளல் ?

அ).சடையப்ப வள்ளல் ஆ).சீதக்காதி

இ).பொப்பண்ண காங்கெயர் கோன் ஈ).பால்வண்ண வில்வதரையன்

3.அடியார்க்கு நல்லார் சமயம்?

அ).வைணவம் ஆ).சமணம் **இ).சைவம்** ஈ).பௌத்தம்

4.அடியார்க்கு நல்லார் உரைத்திறன் என்னும் ஆராய்ச்சி நூல் எழுதியவர் ?.

அ).உ.வே.சா. ஆ).வ.சுப.மாணிக்கம் **இ).ச.வே.சு** ஈ).மு.வ

5."காரும் தருவும் அனையான்" என்று கூறப்படுபவர் யார் ?

அ).பேராசிரியர் ஆ). ஒட்டக்கூத்தர் இ).கபிலர் **ஈ).அடியார்க்கு நல்லார்**

6.அடியார்க்கு நல்லார் உரை எதுவரைக் கிடைத்துள்ளது ?

அ).கானல்வரி **ஆ).ஊர்சூழ்வரி** இ).குன்றக்குறவை ஈ).வழக்குரை காதை

7.ஊர்காண் காதையில் எவற்றின் இலக்கணங்களை அடியார்க்கு நல்லார் உரைக்கின்றார் ?

அ).ஆடைஅணிகலன்கள் ஆ).ஆடற்கலைகள் **இ).நவமணிகள்** ஈ).இசைக்கருவிகள்

8.அருப்பதவுரைக்குப் பிறகு சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதியவர் ?

அ).அடியார்க்கு நல்லார் ஆ).ந.மு.வேங்கடசாமி நாட்டார் இ).புலியூர் கேசிகன் ஈ).உ.வே.சா.

9.பாகல் என்பதற்கு அடியார்க்கு நல்லார் கூறும் பொருள் ?

அ).பாகற்காய் **ஆ).பலா** இ).வாழை ஈ).தென்னை

10.வச்சிர நாடு என்பதற்கு நல்லார் கூறும் பொருள் ?

அ).அக்கரை**ஆ).சோணைக்கரை** இ).சேனைக்கரை ஈ).இக்கரை

ஐந்து மதிப்பெண் வினாக்கள்

1.அடியார்க்கு நல்லார் - குறிப்பு வரைக.

2.அடியார்க்கு நல்லார் உரையில் மறைந்த பகுதி பற்றி எழுதுக.

3.அடியார்க்கு நல்லார் உரையில் மாறுபட்ட பகுதிகளை விளக்குக.

4.அடியார்க்கு நல்லார் பல்கலைப்புலமை - ஆராய்க.

5).அடியார்க்கு நல்லார் கூறும் சொல்லும் பொருளும் விளக்குக.

எட்டு மதிப்பெண் வினாக்கள்

1.அடியார்க்கு நல்லார் சிலப்பதிகாரத்திற்கு எழுதிய உரையைக் கட்டுரை வடிவில் தருக.

2.அடியார்க்கு நல்லார் - திறனாய்வுக்கலைஞர் என்பதைப் பகுப்பாய்வுச் செய்க.

3.அடியார்க்கு நல்லார் பயன்படுத்திய மேற்கோள் நூல்கள் பற்றி தொகுத்து எழுதுக.

முடிவுரை

உரைகள் மூலங்களுக்கு உரைகளே என்ற எண்ணத்தைப் போக்கிப் பேரிலக்கியங்கள் என்று கருதப்படும் அளவிற்குத் திகழ்கின்றன. உரைகளின் வரலாறு தமிழிலக்கிய வரலாற்றில் விரிவாக இடம்பெற வேண்டியதாக விளங்குகின்றது. தொல்காப்பியம் போன்ற பழந்தமிழ் நூல்களிலும் உரைகள் பற்றிய சிந்தனை இடம் பெற்றுள்ளது.

உரை எழுதும் பணி ஓர் இயக்கமாகவே அமைந்து செயலாக்கப்பட்டுள்ளது. தமிழ் இலக்கியங்களின் தனிச்சிறப்பினை அறிந்து கொள்ள உரைகளின் பயன் இன்யிமையாததாக விளங்குகின்றது.

தமிழ் இலக்கண, இலக்கியங்களின் உண்மையினை உணர்த்தியவர்களே உரையாசிரியர்கள். கி.பி. பத்தாம் நூற்றாண்டு முதல் பதினான்காம் நூற்றாண்டு வரை உரையாசிரியர்கள் வாழ்ந்த காலம் ஆகும். நூல் நுவலும் பொருள் அடிப்படையில் உரையாசிரியர் களை நான்கு வகையாகப் பாகுபடுத்திக் முடிகின்றது.

இளம்பூரணர், சேனாவரையர், பேராசிரியர் ஆகியோரு டைய வாழ்க்கை வரலாற்று உண்மைகளை உணர்ந்து கொள்ள முடிகின்றது. இலக்கணம், இலக்கியம். சமயம் தத்துவம் என்று பொருள் அடிப்படையில் உரையாசிரியர்களுடைய உரைக்கோட்பாடுகளும் அமைந்துள்ளன. நூலாசிரியரைப் போற்றுதல், அவர் கருத்தை வெளிப்படுத்தல், பல்துறைப் புலமை, சொற்பொருள் நயங்கள் முதலியன இலக்கண உரையாசிரியர்களின் உரைக்கோட்பாட்டுப் பொது இயல்புகளாகின்றன.

இயைபுப் படுத்தல், தமிழ் மரபு, சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல், பொருள் தெளிவு. எளிய மொழி நடை என்பன இளம்பூரணரின் உரைக்கோட்பாட்டுச் சிறப்பியல்புகளாகும். ஆராய்ச்சிப் போக்கு, தடைவிடை, மேலும் மேலும் விளக்கம் தருதல், கருத்துத் தெளிவு, சுவை பயக்கும் உரைநடை, வெளிப்பாட்டுத்திறன் என்பன சேனாவரை யரின் உரைக் கோட்பாட்டுச் சிறப்பியல்புகளாகும்.

விளக்கம் கூறல். ஆய்வுப் போக்கில் கருத்தைக் கூறுதல், தெளிவுபட மறுத்தல், சொல்லும் முறையில் எழுத்து வன்மை என்பன பேராசிரியரின் உரைக் கோட்பாட்டுச் சிறப்பியல்புகளாகும். சான்றுப் பதிவு செய்தல்,உவமை கூறல், கலைச்சொல் விளக்கம். கருத்து நுட்பம். புதியன கூறல். இக்கோட்பாடுகள் யாவும் இலக்கண உரையாசிரியர் களிடம் சிறந்துள்ளன.

பார்வை நூல்கள்

Reference Book(s)

1. உரையாசிரியர்கள், 1995, மு.வை அரவிந்தன், மணிவாசகர் பதிப்பகம், சென்னை,
2. சங்கரநமச்சிவாயர், 2003 அ. தாமோதரன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
3. தமிழண்ணல் உரைவிளக்கு, 1985., மீனாட்சி புத்தகநிலையம்,மதுரை,
4. இரா. மோகன், ந. சொக்கலிங்கம், உரைமரபுகள், 2003. மெய்யப்பன் பதிப்பகம், சென்னை.
5. க. வெ. சுப்பிரமணியன், அடியார்க்குநல்லார் உரைத்திறன், 1976. உலகத் சென்னை தமிழாராய்ச்சி நிறுவனம்.
6. சோம. இளவரசு,இலக்கணவரலாறு, 1963. தொல்காப்பியர் பதிப்பகம், சிதம்பரம்.
7. இரா. இளங்குமரன்,இலக்கணவரலாறு, 1999. மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
8. மு.அருணாசலம். இளம்பூரணா சொர்ணம்மாள் நினைவுச் சொற்பொழிவுகள், 1981. அண்ணாமலைப்பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர்.
9. உரையாசிரியர்கள் கண்ட சொற்பொருள் நுண்மை விளக்கம். (ஆண்டில்லை). திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.
10. கி. ஆதிநாராயணன், உரையாசிரியரும் திறனாய்வுக் கோட்பாடுகளும், 1999, சித்தரா நிலையம், சென்னை
11. ப. கொழந்தசாமி திருக்குறள் உரைகள் காட்டும் பொருள்நெறி. 2002. பாரதி புத்தகாலயம், சென்னை.
12. சோ. ந. கந்தசாமி, தெய்வச்சிலையார் உரைத்திறம் 1986, மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்.
13. கி.ஆதிநாராயணன், உரையாசிரியாகளும் திறனாய்வுக் கோட்பாடுகளும், 2002, சென்னை.

Web Sources

Tamil Heritage Foundation-www.tamilheritage.org <http://www.tamilheritage.org>

Tamil virtual University Library-www.tamilvu.org/library

http://www.virtualvu.org/library

Project Madurai-www.projectmadurai.org.

Chennai Library-www.chennailibrary.com <http://www.chennailibrary.com>.

Tamil Universal Digital Library- www.ulib.prg <http://www.ulib.prg>.

Tamil E-Books Downloads- tamilebooksdownloads> blogspot.com

Tamil Books on line-books.tamil cube.com

Catalogue of the Tamil books in the Library of British Congress archive.org

Tamil novels on line books.tamilcube.com

1. நா.செயராமன், அரங்கேறிய ஆய்வுகள், ப.229.

2. தொல்காப்பியம், பொருளதிகாரம், (பேரா. உரை), நூ.653.

3. மேற்படி,நூ.656.

4. இ.சுந்தரமூர்த்தி, பரிமேலழகர் திருக்குறள் உரைத்திறன், ப.21.

5. நன்னூல், (மயிரைநாதர் உரை), நூ.20.

6. மு.சண்முகம்பிள்ளை, அறிமுகவுரை, நுண்பொருள்மாலை,ப.??

7. உ.வே. சாமிநாத ஐயர், திருவள்ளுவரும் திருக்குறளும், பக்.7, 8.

8. மு.வை. அரவிந்தன், "தமிழில் - உரைகளின் தோற்றமும் வளர்ச்சியும்", ஐந்தாம் உலகத்தமிழ் மாநாடு - கருத்தரங்கு ஆய்வுக் கட்டுரைகள், தொகுதி மூன்று, ப.207.

9. இரா.மோகன், ந. சொக்கலிங்கம், உரை மரபுகள், பக்.20,21.

10. மு.வை. அரவிந்தன், உரையாசிரியர்கள், ப. 22.

11. தொல்காப்பியம், பொருளதிகாரம்,நூ.649.

12. தொல்காப்பியம்,பொருளதிகாரம்,நூ.650.

13. மேற்படி,நூ.647.

14. மேற்படி,நூ.648.

15. மு.வை.அரவிந்தன், உரையாசிரியர்கள், ப. 45.

16. நா.செயராமன்,அரங்கேறிய ஆய்வுகள், பக்.110-113.

17. இரா.மோகன்,ந.சொக்கலிங்கம், உரை மரபுகள், ப. 44.

18. நன்னூல், பொதுப்பாயிரம், நூ.21.

19. மேற்படி,நூ.22.

20. மேற்படி,நூ.23.

21. இரா.மோகன், ந.சொக்கலிங்கம், உரைமரபுகள், பக்.47, 48.

22. மேற்படி,ப. 48.

23. நாலடியார், அவையறிதல்,பா.9.

24. சு.சக்திவேல், நூறாண்டுத் தமிழ் உரைநடை, பக். 9, 10.

25. இராம. பெரிய கருப்பன்,சு. குழந்தைநாதன் (பதிப்.), உலகத் தமிழ், ப.68.

26. ச.வே.சுப்பிரமணியன், தா.வே.வீராசாமி, (பதிப்.), தமிழ் இலக்கியக் கொள்கை தொகுதி 1, ப.378.

27. மு. கதிரேசச் செட்டியார், உரைநடைக் கோவை இரண்டாம் பாகம், ப.18, 19.

28. ஏ.வி.சுப்பிரமணிய அய்யர், தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சி, ப.238.

29. மேற்படி,ப.322.

30. ஆ.தசரதன், இலக்கிய உரையாசிரியர்களின் தொடரியல் கோட்பாடுகள், ப.1.

31. மு.இராகவையங்கார், ஆராய்ச்சித் தொகுதி, ப.399.

32. மு.இராகவையங்கார், சாசனத் தமிழ்க்கவி சரிதம், ப.117.

33. மு.வை. அரவிந்தன், உரையாசிரியர்கள்,ப.115.

34. சி. பாலசுப்பிரமணியன், இலக்கிய அணிகள், ப.241.

35. ஏ.வி. சுப்பிரமணிய அய்யர், தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சி, ப.298.

36. வ.சுப. மாணிக்கம், சிந்தனைக் களங்கள், ப.313.

37. தொல்காப்பியம்,நூ.221.

38. தொல்காப்பியம், பொருளதிகாரம், நூ.654 இன் உரை.

39. வ.சுப. மாணிக்கம், சிந்தனைக் களங்கள், பக்.313, 314.

40. தொல்காப்பியம், பொருளதிகாரம்,நூ.185.

41. மேற்படி, நூ.74. 122

42. மேற்படி, தூ.105.

43. மேற்படி தூ.51.

44. மேற்படி நூ.30 இன் உரை.

45. தொல்காப்பியம்,சொல்லதிகாரம், நூ.61 இன் உரை.

46. தொல்காப்பியம், பொருளதிகாரம், நூ.112.

23. மேற்படி, தூ.639.

47. ஏ.வி.சுப்பிரமணிய அய்யர், தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சி,ப.296.

48. தொல்காப்பியம் பொருளதிகாரம், நூ.219 இன் உரை.

49. ச.வே.சுப்பிரமணியன், அன்னிதாமசு (பதிப்.), தமிழ் இலக்கியக் கொள்கை, தொகுதி ஐந்து, ப.94.

50. தொல்காப்பியம், நூ.659 இன் உரை.

51. இரா.தண்டாயுதம், தற்காலத் தமிழ் இலக்கியம், பக்.16, 17.

52. மு. அருணாசலம், இளம்பூரணர், ப.62.

53. சு.சக்திவேல், நூறாண்டுத் தமிழ் உரைநடை, ப.75

54. தமிழண்ணல், உரைவிளக்கு, ப.17.

55. பி.தெட்சிணாமூர்த்தி, ஆய்வுமாலை, ப.93

56. மு. அருணாசலம், இளம்பூரணர், பக்.52,53.

57. தொல்காப்பியம், சொல்லதிகாரம், ப.16.

58. மேற்படி,நூ. 386, 387இன் உரை.

59. தொல்காப்பியம், பொருளதிகாரம்,நூ.12 இன் உரை.

60. சுந்தர கலிவரதன், உரைநடைத் தமிழ், ப.18.

61. தொல்காப்பியம், பொருளதிகாரம், நூ.30 இன் உரை.

62 .வி.செல்வநாயகம், தமிழ் உரைநடை வரலாறு, ப.55.

63. தொல்காப்பியம், சொல்லதிகாரம், நூ.84 இன் உரை.

64. மேற்படி, நூ.400 இன் உரை.

65. தி.வை. சதாசிவ பண்டாரத்தார், தமிழ் இலக்கிய வரலாறு, (13,14,15 ஆம் நூற்றாண்டுகள்), ப.41.

66. இரா.மோகன், பண்டித மணியின் நடைநயம்,ப. 44.

67. சுந்தர. கலிவரதன், உரைநடைத் தமிழ், ப.70.

68. மு.வை. அரவிந்தன், உரையாசிரியர்கள்,ப.186. 123

41. தொல்காப்பியம், சொல்லதிகாரம், நூ.5 இன் உரை.

69. மேற்படி, நூ.54 இன் உரை.

70. மேற்படி, நூ.92 இன் உரை.

71. சு.சக்திவேல், நூறாண்டுத் தமிழ் உரைநடை, ப.76.

72. தொல்காப்பியம், சொல்லதிகாரம், நூ.47 இன் உரை.

73. வி. கணபதி, தமிழ் இலக்கண இலக்கிய அறிமுகம் ப.137.

74. மேற்படி,ப.114.

75. தொல்காப்பியம், சொல்லதிகாரம், நூ.216 இன் உரை.

76. மேற்படி, நூ.200 இன் உரை .

77. மேற்படி நூ.74 இன் உரை.

78. இரா. மோகன், ந . சொக்கலிங்கம், உரைமரபுகள், ப.172.

79. மு.வை. அரவிந்தன், உரையாசிரியர்கள்,ப.178.

80. வ.சுப.மாணிக்கம், தொல்காப்பியத் திறன், பக்.22,23

81. இரா. குமரவேலன், இலக்கிய உரையாசிரியர்கள், தமிழ் இலக்கியக் கொள்கை -ஓர் அறிமுகம் தொகுதி 1, ப.370.

82. தொல்காப்பியம், பொருளதிகாரம், நூ.665 இன் உரை.

83. உ. வே. சாமிநாத அய்யர், சங்கத்தமிழும் பிறகாலத்தமிழும், பக்.158,159.

84. வி. செல்வநாயகம், தமிழ் உரைநடை வரலாறு.ப. 58.

85. வ.சுப. மாணிக்கம், ஒப்பியல் நோக்கு, ப.117.

86. ச.வே.சுப்பிரமணியன், அன்னிதாமசு, (பதிப்.), தமிழ் இலக்கியக் கொள்கை, தொகுதி ஐந்து, பக்.130-134.

87. வி. கணபதி, தமிழ் இலக்கண இலக்கிய அறிமுகம், ப.129.

88. சுந்தர. கலிவரதன், உரைநடைத் தமிழ், ப.69.

89. வ.சுப. மாணிக்கம், தொல்காப்பியத் திறன். பக்.22, 23